167/11

79



கழக வெளியீடு

# சைவசித்தாந்தம்

## ஓர்

## அறிமுகம்

முனைவர் ந.சுப்புரெட்டியார்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( **CC**0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# சைவசித்தாந்தம்
## ஓர் அறிமுகம்

‘அருங்கலைக்கோன்’ ‘ஸ்ரீசடகோபன் பொன்னடி’
‘தமிழ்ச்செம்மல்’ ‘கலைமாமணி’
பேராசிரியர் டாக்டர் ந.சுப்புரெட்டியார்
எம்.ஏ., பி.எஸ்.சி., எல்.டி., வித்துவான் பி.எச்.டி., டி.லிட்.,

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்
522, டி.டி.கே. சாலை, சென்னை—600 018.
தொலைபேசி : 044—4355299
மி-முகவரி : kazhagam@hotmail.com

# நூல் விவர அட்டவணை


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம் |
| பொருள் | : | தத்துவம் - சைவசித்தாந்தம் |
| ஆசிரியர் பெயர் | : | பேரா. டாக்டர். ந. சுப்புரெட்டியார் |
| வெளியீட்டெண் | | 2077 |
| பதிப்பாண்டு | | முதல் பதிப்பு 2001 |
| நூலகக் குறியீட்டெண் | : | R673 P01 |
| பதிப்பாளர் | : | சைவ சித்தாந்தக் கழகம்<br>சென்னை-18. |
| உரிமை | : | ஆசிரியர் |
| மொழி | : | தமிழ் |
| நூலின் அளவு | : | கிரௌன் |
| தாள் | : | 11.6 |
| கட்டமைப்பு | : | அட்டைக்கட்டு |
| அச்செழுத்து | : | 11pt |
| மொத்த பக்கங்கள் | : | [illegible] |
| விலை | | ரூ. 95.00 |
| அச்சிட்டோர் | | "அப்பர் அச்சகம்" |
| கணிப்பொறி அச்சு | | சிவா கிராபிக்ஸ், சென்னை-26. |



மெய்கண்ட தேவர்

'புனிதம் எனும் அத்வைத
மெய்கண்ட நாதன்'
மெய்கண்ட தேவனின்
பொன்னடிகட்கு

**பக்திப் படையல்**

சாத்திர நெறியைத் தூவெனத் தள்ளித்
தன்முனைப்பு எனும்மது மாந்திப்
பூத்திரள் காவில் துழைமது கரம்போல்
புல்லிய பொறிவழி யோடி
மீத்திகழ் கின்ற மூவகைப் பசுக்கள்
வெறியெலாம் ஒடுங்கமுந் நான்கு
சூத்திரம் தன்னால் யாத்தமெய் கண்டார்
துணையடிக்கு உரியதுஇந் நூலே.

# பதிப்புரை

எந்நாட்டவர்க்கும் இறைவனானவன் தென்னாட்டில் சிவன் எனப் போற்றப்பெற்றான். சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு திகழும் சைவ சமயம் சங்க காலத்தில் தமிழ்நாட்டில் கால்கொண்டு திகழ்ந்தது. அச்சமயத்தின் தத்துவக் கருத்துகளை விளக்குமுகத்தான் எழுந்ததே சைவசித்தாந்தம் என்னும் துறையாகும்.

இந்திய நாட்டில் எத்தனையோ மெய்ப்பொருள் தத்துவங்கள் தோன்றியிருப்பினும் 'அகம் பிரம்மாஸ்மி' என்னும் நானே கடவுள் என்கிற வேத தத்துவம் தமிழகம் தவிர இந்திய நாட்டின் பிற பகுதிகள் முழுவதும் பரவியுள்ளது.

சைவ சமயம் தமிழகத்தில் பரவியுள்ளது போல் கர்நாடக மாநிலத்திலும் காசுமீர நாட்டிலும் பரவியிருந்தாலும் அங்கே அது வீரசைவமாகவே நிலவி வருகின்றது.

சைவசித்தாந்தம் அடிப்படையில் இறைவன் (பதி), உயிர் (பசு), தளை (பாசம்) என்ற முப்பொருள் உண்மையின் அடிப்படையில் எழுந்தது. உலகில் உள்ள எல்லாச் சமயங்களும் உயிர்களை இறைவன் படைத்தான் எனக் கூறும். ஆனால் சைவசித்தாந்தம் மட்டும் இறைவன் எவ்வளவு பழமையானவனோ அவ்வளவு உயிர்களும் பழமையானவை. அதுபோலவே தளைகளும் பழமையானவை. பதி, பசு, பாசம் அனாதி இம் முப்பொருள் கொள்கையை விளக்க எழுந்த நூல்களே 'பதினான்கு சாத்திரம்' என்று சைவப் பெருமக்களால் வழங்கப்படுகிறது.

சைவசித்தாந்தத்தைப் பற்றிய விரிவான நூல் எழுதித் தர வேண்டுமென்று அருங்கலைக்கோன், கலைமாமணி, பேராசிரியர் டாக்டர் ந.சுப்புரெட்டியார் அவர்களைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க இவ்விரிவான நூலை அவர் எழுதித் தந்துள்ளார். வைணவம், சைவம் ஆகிய இரு சமயக் கருத்துகளையும் நன்கு கற்றுத் துறைபோனவர். இரண்டிலும் ஆழங்கால்பட்டவர். இத்துறையில் இதுபோல் விரிவான நூல் இதுவரை வந்ததில்லை என்று கூறுமளவிற்கு இதனைச் சிறப்பாக எழுதியுள்ளார். அரை நூற்றாண்டுக் காலமாகச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்துடன் தொடர்பு கொண்டவர். கவிதை ஆய்வு, சிறுவர் இலக்கியம், அறிவியல் துறை போன்ற துறைகளில் பல நூல்களைக் கழகத்திற்கு எழுதித் தந்தவர். "வைணவமும் தமிழும்" எழுதியவர். "சைவமும் தமிழும்" எழுதிக் கொண்டிருப்பவர். இடையில் இந்நூலை எழுதித் தந்தமைக்காக கழகம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

சைவ சித்தாந்தத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்று இன்று இளையோரும் முதியோரும் பெரிதும் அவாவுகின்றனர். அவர்கள் இந்நூலைப் படித்துப் பெரிதும் பயன்பெறுவர் என்று உறுதியாக நம்புகிறோம்.

—சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்

# அணிந்துரை

## பேராசிரியர் டாக்டர் பெ.கிருஷ்ணன்

**தமிழர்** வாழ்வில் சைவமும் தமிழும் இணைந்தே வளர்ந்து வந்துள்ளன என்பது வரலாற்று உண்மை. பழந்தமிழ் நூற்களில் **'சிவன்'** என்ற சொல் எழுத்தாளப் படவில்லை. எனினும் சிவனின் பண்புப் பெயர்கள் பல காணப்படுகின்றன. 'செம்மை' என்ற தமிழ்ச் சொல்லை அடிப்படையாகக் கொண்டே **'சிவன்'** என்ற சொல் வந்தது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். 'சிறந்தது பயிற்றல்', **'சிறப்பெனும் செம்பொருள்'** போன்ற தொடர்கள் ஆதாரங் களாக அமைகின்றன. தமிழர் நாகரிகம் சிந்துச் சமவெளி நாகரிகத்தின் தொடர்ச்சி என்பதை ஏற்றால், சைவ சமயம் வேத நாகரிகத்திற்கும் முற்பட்டது எனக் கொள்ள வேண்டும்.

சங்க காலத்திற்குப் பின் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் பௌத்தமும் சமணமும் செல்வாக்குப் பெற்று விளங்கின. சைவம் வலிகுன்றிய நிலையில் இருந்தது. பிராகிருதம், பாலி மொழிகள் சிறப்புற்று விளங்கின. எனினும், சமணம் தன்னை நிலை நிறுத்திக் கொள்ளவும் வளர்ச்சி அடையவும் வேண்டுமானால் தமிழில் கொள்கைகள் விளக்கப்பட வேண்டும் என்பதைச் சமணர்கள் உணர்ந்தனர். உயர்ந்த சமண சமய அறநெறிக் கருத்துக்களைக் கொண்ட **'பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்'** களப்பிரர் ஆட்சிக்காலத்தில் தோன்றின.

---

பேராசிரியர் - துறைத்தலைவர் சைவ சித்தாந்தத் துறை, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை 600 005.

பல்லவர் ஆட்சிக்காலத்தில் தமிழொடு சைவமும் மிக உன்னத நிலையினை அடைந்தது. தமிழகம் செய்த தவப்பயனால் அவதரித்த தமிழ்ஞானசம்பந்தர் அவர்களால் திருநெறிய தமிழில் **'பதிகப் பெருவழி'** தோற்றுவிக்கப் பட்டது. அவரது அடியொற்றி வந்த அருளாளர்களின் தொண்டினால் தமிழும் சைவமும் செழித்தோங்கி வளர்ந்தன. சோழர், பாண்டியர் காலம் சைவ சமய வரலாற்றின் பொற்கா.லம் எனலாம்.

**'பன்னிரு திருமுறைகள்'** தமிழ் சைவ சமயத்தின் அடிப்படை நூல்களாக அமைந்தன. மூவர் முதலிகளையும் மாணிக்க வாசகரையும் சமயத் தலைவர்களாகவும், சிவனை முழுமுதற் பொருளாகவும், மாறா இறையன்பு ஒன்றே வீடுபேற்றிற்கு வழி என்பதும், சாதி மத வேறுபாடின்றி ஆணும் பெண்ணும் இறையின்பத்தைத் துய்த்து வாழலாம் என்பதும், சமய வாழ்வு இவ்வுலக வாழ்க்கைக்கு எதிரானதல்ல என்ற கொள்கையும் சைவர்களால் ஏற்கப் பட்டன. இந்தக் கொள்கைகள் சமண சமயத்தின் கடினமான அறிவுக் கொள்கைக்கும், கடவுள் மறுப்புக் கொள்கைக்கும் உலக மறுப்புக்கும் மாற்றாக அமைந்தது மட்டுமல்லாமல் சமண சமயத்தின் நலிவுக்கும் காரணங்களாக அமைந்தன. சைவ சமயம் நாயன்மார்களை முன்னிருத்தி ஒரு மக்கள் இயக்கமாகவே உருப்பெற்று வளர்ந்தோங்கியது.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றிய மெய்கண்டார் ஆக்கிய ;**சிவஞானபோதம்** சைவ சமயத்தின் தத்துவக் கொள்கைகளை விளக்கும் முதல் அடிப்படை நூலாகும். அந்நூல் மொழிபெயர்ப்பு நூலல்ல என்பதற்கு அறிஞர்கள் போதுமான .ஆதாரங்களைத் தந்துள்ளனர். சிவஞானபோதம் உட்பட சைவ சித்தாந்த சாத்திரங்கள் மொத்தம் பதினான்கு. சிவஞான போதத்திற்குப் பல உரைகள் இருப்பினும் சிவஞான முனிவரின் **சிவஞானபோத**

**மாபாடியம்** சிறந்த உரையாக சைவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமேல் வளர் வரலாற்றைப் பெற்றுள்ள சைவம், பல்வேறு காலகட்டங்களில் வைதிக சமயம், ஆகமம், அறுவகைத் தரிசனங்கள், சமணம் பௌத்தம், சாருவாகம் ஆகியவற்றின் கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டு தமிழகத்துக்கே உரிய சைவ சித்தாந்தமாக செம்மை பெற்று விளங்கி வருகின்றது. இன்றளவும் சைவத் திருமடங்களால் பேணப்பட்டும் வளர்க்கப்பட்டும் வருகின்றது.

ஏனைய இந்தியத் தத்துவங்களைப் போலவே சைவ சித்தாந்தமும் அறிவாராய்ச்சி இயல், மெய்ப் பொருளியல், அறவியல் எனும் முப்பெரும் பிரிவுகளை உடையது. பதி, பசு, பாசம் (இறை, உயிர், தளை) என்பன சைவ சித்தாந்தம் நுவலும் உண்மைப் பொருள்கள். இறைவன் தன் பொருட்டன்மையால் உயிர், உலகுக்கு **வேறாயும்**, வியாபகத் தன்மையால் **ஒன்றாயும்**, உயிருக்கு உயிராம் தன்மையால் **உடனாயும்** இருக்கின்றான். இறைவனின் இவ்வுறவை '**அத்வைதம்**' என்று சித்தாந்திகள் விளக்குவர். சங்கரர், இராமானுசர், மத்துவர் போன்றோர் கொள்வதைப் போல '**அத்வைதம்**' என்ற சொல் பொருட்களின் எண்ணிக்கை பற்றியது அல்ல என்றும், அது அன்மைப் பொருளில் இரு பொருள்களுக்கிடையிலான உறவு (வியாபக வியாப்பிய சம்பந்தம்) பற்றியது என்றும் விளக்குவது சித்தாந்தத்தின் தனிச் சிறப்பாகும்.

உயிரின் ஆணவமலம் நீக்கத்தின் பொருட்டு ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தொழில்களை இறைவன் செய்கிறான். ஐந்தொழில் புரிவது அவனின் சிறப்பிலக்கணமேயன்றி பொதுவிலக்கணமல்ல என்பது சிவஞான முனிவரின் கொள்கை.

பந்தம், வீடுபேறு ஆகிய இருநிலைகளிலும் அறிபவன் உயிர்; அறியப்படுபொருள்கள் இறைவனும் உலகுமாகும். இறைவனே அறிபவன் எனக் கொண்டால் அது சங்கரர் கூறும் அத்வைதத்தில் முடிவுறும். எனவே அறிபவன் இறைவனே எனும் சித்தாந்திகள் சிலரின் (சிவாக்கிரயோகி) கொள்கையை சிவஞான முனிவர் மறுக்கிறார்.

இறை உயிர் போலவே, ஆணவம், கன்மம், மாயை ஆகிய பொருள்களும் சற்காரியவாதப்படி நித்தியமான உள்பொருள்களாகக் கொள்ள வேண்டும். உள்பொருளோ அன்றி இல்பொருளோ என நிச்சயிக்க முடியாத இயல்புடைய பொருள்கள் அல்ல அவை

உயிர் தனது சமய வாழ்வின் மூலம் 'மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதோடு' செல்கதிக்கும் குறைவிலா நிலையினை அடையும். மற்ற இந்திய தரிசனங்கள் ஏதாவது ஒரு வகையில் பிறவியைத் துன்ப மயமானது என்றும் அது வெறுத்து ஒதுக்கப்பட வேண்டியது என்றும் அது அறியாமையின் விளைவு என்றும் கொள்ளும். ஆனால் சைவ சமயம் பிறவி இறைவனால் அளிக்கப்பட்ட அருட்கொடை என்றும், அறியாமையைப் போக்கிக் கொள்ளவே அஃது அமைந்தது என்றும் கொள்வது தனிச் சிறப்பாகும்.

**சைவசித்தாந்தம்: ஓர் அறிமுகம்'** என்று தலைப்பிட்ட இந்நூல் தொல்காப்பியம் முதல் மெய்கண்ட சாத்திரங்கள் ஈறாக உள்ள பல நூற்களில் காணப்படும் சைவ சித்தாந்தக் கருத்துகளைத் தொகுத்து ஆய்வு நோக்கில் எழுதப்பட்ட நூலாகும். சைவ சமய வரலாற்றைத் தெரிவிக்கும் நூல்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் பல உள்ளன. ஆனால் சைவ சமயக் கருத்துகளை மையப்படுத்தி தமிழ் நூல்களை மட்டுமே ஆதாரங்களாகக் கொண்டு வரலாற்று நோக்கில்

எழுத்தப்பட்ட **'முதல் ஆய்வு நூல்'** இது என்றால் அது மிகையாகாது. எளியநடையில் இலக்கிய நயத்தோடு எழுதப்பட்ட சுவையான நூல் இது. ஆங்காங்கே சைவக் கருத்துகளுக்கு இணையான வைணவக் கருத்துகளையும் ஒப்புநோக்காகச் சுவைபட எடுத்துக் கூறி சமயப் பொறையின் இன்றியமையாமையை வலியுறுத்திச் செல்வது பாராட்டுக்குரியது.

தமிழகக் கலைமாமணி பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியாரவர்கள் இந்நூலின் ஆசிரியர். சைவம், வைணவம் ஆகிய இரண்டையும் தம் இரு கண்களாகப் போற்றி வாழ்ந்து வருபவர். சமயம், தத்துவம், இலக்கியம், சமூகவியல், அறிவியல் போன்ற துறைகளில் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதித் தமிழக எழுத்துலகில் மிகப்பெரும் சாதனை படைத்தவர். பிறர் குறை காணாது நிறை மட்டுமே காணும் பண்பாளர். என் போன்ற எளியோரை அன்பால் நெறிப்படுத்தும் குணக்குன்று. அனைத்துச் சமயங்களுக்கும் அடிப்படை **'சமயங்கடந்த மெய்ப்பொருளே'** என்பதை வலியுறுத்தும் அருட்செல்வர். அன்னாரின் நீண்ட நெடிய அநுபவமும், நுண்ணறிவும் இந்த நூலில் விரவி மிளிர்வன படித்து இன்புறத் தக்கவை. பொதுமக்கள், மாணாக்கர்கள், ஆய்வாளர்கள் அனைவருக்கும் அரும்பெரும் கருத்துக் கருவூலமாகவும், விருந்தாகவும் இந்நூல் அமைந்துள்ளது என்பது வெள்ளிடை மலை.

சென்னை – 5 **பெ. கிருஷ்ணன்**
7 – 6 – 2001

# நூல் முகம்

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போது உணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணிய னே.[1]

*—நாவுக்கரசர்*

'வைணவமும் தமிழும்' எழுதி முடித்தபின் என் உள்ளிருந்து இயக்கும் கந்தவேள் **'சைவமும் தமிழும்'** எழுதுமாறு பணிக்க அந்த ஆணை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக அதிபர் திரு இரா.முத்துக்குமாரசுவாமியின் மூலம் என்னை வந்தடைந்தது. அவனருள் இருந்தமையால் அத்தெய்வப்பணி யாதொரு இடையூறுமின்றி இனிதே நிறைவெய்தியது. சைவசித்தாந்தம் - ஓர் அறிமுகம் என்ற பெயரில் நூல் அமைந்து வெளிவருகிறது.

பக்தி இயக்க காலத்திற்கு முற்பட்டே காரைக்கால் அம்மையார் தொடங்கி, பக்தி இயக்க காலத்தில் பெருகி வளர்ந்த திருமுறை நூல்களின் பரப்பு மிக விரிந்தது; அவற்றையொட்டித் தோன்றிய சித்தாந்த சாத்திர நூல்களும் மிக விரிந்து பெருகின: கால வெள்ளத்தில் இன்று அதன்

---

1. அப். தே. 6.99:1

வளர்ச்சியில் தளிர் விட்டுக் கொண்டிருப்பதைக் காணலாம். சைவ இலக்கியமும் சாத்திரமும், வைணவ இலக்கியம், சாத்திரம் ஆகியவற்றை விடப் பன்மடங்கு விரிந்து பெருகியுள்ளமையால் அவற்றையெல்லாம் உள்ளடக்கி எழுத வேண்டிய இன்றியமையாமையால் இந்த நூலின் அளவும் பெருகி வளர்ந்து விட்டது. தென்னாட்டில் வைணவப் பெருமக்களின் தொகையை விட சைவப்பெரு மக்களின் தொகையும் பன்மடங்கு மிக்கிருப்பதும் கண்கூடு.

இந்த நூலுக்கு அணிந்துரை நல்கியவர் என் அரிய நண்பர் பேராசிரியர் டாக்டர் பெ.கிருஷ்ணன் அவர்கள் சமய இலக்கியங்களிலும், சாத்திர நூல்களிலும் ஆழ்ந்த புலமையோடு மிக்க ஈடுபாடும் உடையவர். சைவ சித்தாந்தத்துறைத் தலைவராகப் பொறுப்பேற்ற நாள் முதல் துறையைக் கண்ணெனப் போற்றி வளர்ப்பவர். பயிலும், ஆய்வு செய்யும் மாணாக்கர்பால் பேரன்பு கொண்டு நன்மாணாக்கர்களை உருவாக்குவதில் கண்ணும் கருத்துமாகக் கவனம் செலுத்துபவர். பலதுறைப் பேராசிரியர்களிடமும், ஆய்வு மாணவர்களிடமும், பொதுமக்களிடமும் மிக்க அன்பாகக் கலந்து பழகும் பண்பாடு மிக்கவர். இத்தகைய என் நண்பர் அன்பர் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிச் சிறப்பித்தமைக்கு என் இதயம் கலந்த நன்றி என்றும் உரியது.

பிற சமயக்காழ்ப்பின்றி எல்லாச சமயங்களையும் சமமாகப் பாவிக்கும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் இந்த நூலை அன்புடன் ஏற்று வெளியிட்டமைக்குக் கழகத்திற்கு என் அன்பு கலந்த நன்றி என்றும் உரியது. இந்த நூலை அச்சிடுங்கால் பார்வைப்படிவங்களைக் கைப்படியுடன் ஒப்பிட்டுச் சரிபார்த்த என் அருமைப் புத்திரி டாக்டர் M.B.சியாமளா தேவிக்கு என் உளங்கனிந்த நன்றியும், ஆசியும் உரியவை

இந்த நூல் சைவ சமயத்தைச் சார்ந்த மக்களுக்கும் சைவ சமயத்தைச் சாராத பிறருக்கும், கல்லூரி மாணவர்கட்கும் பயன்படக் கூடியது. சைவ சித்தாந்தத்தை அறிந்து கொள்ள விழையும் ஆர்வலர்கட்குப் பெரிதும் பயன்படக் கூடியது.

சிவனருள் இருந்தமையால் இந்நூல் என்னைக் கருவியாகக் கொண்டு எழுதப்பெற்றது. எழுதுங்கால் என்னுளே என் இதயத்தில் நிரந்தரமாக எழுந்தருளியிருக்கும் அரி–அரன் (ஹரிஹரன்) எனக்கு நல்ல உடல் நலத்தையும் மன வளத்தையும் அருளி என்னை ஊக்குவித்தான். அத்தகைய இறைவனின் திருவடிகளை நினைந்து, வழுத்தி வணங்கி அமைகின்றேன்.

> வேண்டத் தக்க தறிவோய் நீ
> வேண்ட முழுதும் தருவோய்நீ
> வேண்டும் அயன்மாற்கு அரியோய்நீ
> வேண்டி என்னைப் பணிகொண்டாய்
> வேண்டி நீயாது அருள்செய்தாய்
> யானும் அதுவே வேண்டினல்லால்
> வேண்டும் பரிசொன்று உண்டென்னில்
> அதுவும் உன்றன் விருப்பன்றே.[2]

*மாணிக்கவாசகர்*

'வேங்கடம்'
AD-13, அண்ணாநகர்,
சென்னை – 600 040.

இங்ஙனம் அடியேன்
ந.சுப்புரெட்டியார்
(மெய்கண்டார் அடியன்)

2. திருவா. குழைத்தபத்து - 9

# உள்ளுறை


| | |
|---|---|
| பக்திப்படையல் | v |
| அணிந்துரை | viii |
| நூல்முகம் | xiii |
| 1. சித்தாந்த சாத்திரங்கள் | 1 |
| 2. சந்தானாசாரியார்கள் | 15 |
| 3. தத்துவங்கள்-1 (பதி) | 32 |
| 4. தத்துவங்கள்-2 (பசு) | 121 |
| 5. தத்துவங்கள்-3 (பாசம்) | 163 |
| 6. வீடுபேற்றுக்கு வழிகள் | 273 |
| 7. வீடுபேறு | 316 |
| 8. வழிபாட்டு முறைகள் | 366 |
| பின்னிணைப்பு | |
| பயன்பட்ட நூல்கள் | 402 |

# 1. சித்தாந்த சாத்திரங்கள்

உந்தி களிறே
    உயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை
    பிரகாசம் வந்த அருள்
பண்புவினா போற்றிகொடி
    பாசமிலா நெஞ்சுவடு
உண்மைநெறி சங்கற்பம்
    உற்று.[1]

இவை மெய்கண்ட நூல்கள் எனப்படும். இவை பதினான்கு.

1. பழைய வெண்பா

# 1. சித்தாந்த சாத்திரங்கள்

**இந்திய** தரிசனங்களில் மேனாட்டு தரிசனங்களில் இருப்பது போன்று சமயம் வேறு, தத்துவம் வேறு என்று பிரித்துப் பேசும் மரபு இல்லை. சைவ சித்தாந்தமாயினும் சரி, விசிட்டாத் வைதமாயினும் சரி சமயமும் தத்துவமும் இணைந்தே (Integrated) இருக்கும் மரபுதான் உண்டு. இந்த நோக்கத்தின் அடிப்படையில் இந்நூலை அணுக வேண்டும்.

"சைவ சமயம், சாத்திரங்கள் – வளத்தால் செழித்தது; வைணவ சமயம், உரை வளத்தால் செழித்தது." என்று மக்களிடையே வழங்கும் மரபு ஒன்று உண்டு. ஊன்றி நோக்கினால் வைணவத்திலும் சாத்திரங்களுக்குக் குறைவில்லை. **'அஷ்டா தச இரகசியங்கள்**, **'தேசிகப் பிரபந்தம்'** (தமிழ்க் கவிதைகளாலானது) அவர்தம் **'இரகசியத் திரய சாரம்'**[2] (திரயம்–மூன்று) என்றனவும் உள்ளன. ஆனால் **திருவாய்மொழிக்கு** அமைந்துள்ள, மணிப்பிரவாள நடையிலமைந்த 'உரைவளம் போல்' தேவார திருவாசகங்கட்கும், பிற திருமுறைகட்கும் அமையவில்லை என்று சொல்லி வைக்கலாம். நிற்க.

சைவ சித்தாந்த சாத்திரங்கள் **பதினான்கு** அவை:

1. திருவுந்தியார்
2. திருக்களிற்றுப்படியார்
3. சிவஞான போதம்

8. திருவருட்பயன்
9. வினா வெண்பா
10. போற்றிப் பஃறொடை வெண்பா.

---

2. இது மணிப்பிரவாள நடையில் அமைந்தது.

4. சிவஞான சித்தியார்
5. இருபா இருபஃது
6. உண்மை விளக்கம்
7. சிவப்பிரகாசம்
11. கொடிக்கவி
12. நெஞ்சு விடுதூது
13. உண்மை நெறி விளக்கம்
14. சங்கற்ப நிராகரணம்

என்பவையாகும். இவற்றை

> உந்தி களிறே உயர்போதம் சித்தியார்
> பிந்திருபா உண்மை பிரகாசம்—வந்தஅருள்
> பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
> உண்மைநெறி சங்கற்பம் உற்று[3]

என்ற வெண்பா பட்டியலிட்டுக் காட்டும். இவை பற்றிச் சிறிது விளக்குவோம்.

(1) **திருவுந்தியார்:** இந்த நூலை அருளிச்செய்தவர் **திருவியலூர் உய்ய வந்த தேவநாயனார்** என்பார். இது நாற்பத்தைந்து கலித்தாழிசையால் ஆனது. சில தாழிசைகள் திருமந்திரம் போலவும், பொருள்களைப் **பிசி** செய்யுள் போல் மறைத்துக் கூறுவனவாயும் அமைந்துள்ளன.

(2) **திருக்களிற்றுப்படியார்:** இதனை இயற்றி அருளினவர் **திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார்.** இவர் திருவியலூர் உய்ய வந்த தேவநாயனாரின் மாணாக்கராகிய திருவியலூர் ஆளுடைய தேவநாயனாரின் மாணாக்கர். இது திருவுந்தியாரின் பொருளை விளக்கும் இனிய வழி நூலாக அமைந்துள்ளது.

இந்தநூல் நூறு வெண்பாக்களைக் கொண்டது. முதல் நூலின் ஒவ்வொரு தாழிசையின் பொருளையும் சில வெண்பாக்களாலேயே விளக்குவனவாய் அமைந்துள்ளன. இந்த வெண்பாக்கள் யாவும் இனிய தெளிவான நடையில் செல்லுகின்றன.

---

3. ஒரு பழம் பாடல்

மேலும் உந்தியும் களிறும் 'திருவியலூர் உய்ய வந்த சந்தானத்தில்' தோன்றியவை. இந்த இருதிறத்து நூல்களும் நுவலும் பொருளால் ஒன்றுபட்டவை. ஆயினும் அவற்றைத் தெரிவிக்கும் முறையில் சிறிது வேறுபாடு உடையவை. இவ்விரண்டு நூல்களும் சித்தாந்தப் பொருள்களை உபதேச முறையால் கூறுகின்றன. இங்குப் **பரபக்கப்** பார்வைக்கே இடம் இல்லை. இவை அநுபவத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. அதனால் இவை அறுபான் மும்மை நாயன்மார் முதலிய திருத்தொண்டர்களின் உண்மை வரலாறுகள், திருக்குறள், தேவாரம் முதலிய திருமுறைகள் போன்ற தமிழ் நூல்கள் ஆகியவற்றை முதன்மை மேற்கோள் களாகக் காட்டுகின்றன. 'பிரமாணம், இலக்கணம், சாதனம், பயன்' என்னும் நான்கனுள் பின்னைய இரண்டுமே இந்நூல் களில் கூறப்பெற்றுள்ளன.

இவ்விடத்தில், உளங் கொள்ளத்தக்க இன்னொரு முக்கிய செய்தியும் உண்டு. திருஞானசம்பந்தர், திருநாவுக்கர சர், சுந்தரமூர்த்தி, மணிவாசகப்பெருமான் என்ற சமயகுரவர் நால்வருக்குப் பின் சைவ சமயத்தைத் தழைத்தோங்கச் செய் வதற்குத் தமிழ் நாட்டில் பல '**ஞானசந்தானங்கள்**' தோன்றின. பழமையாகவே '**திருமூலர் மரபு**' என்ற ஒரு சந்தானம் பேசப் பெறுகின்றது. தாயுமான அடிகளும் தமது குருநாதராகிய மௌன குருவை '**மூலன் மரபில் வருபவராகவே**' கொண் டிருத்தல் ஈண்டு நினைக்கத்தக்கது.[4] இதுபோல் 'திருவியலூர் உய்ய வந்த சந்தானம்' என்பதாக ஒரு சந்தானம் இருந்ததை '**உந்தியும் களிறும்**' என்பவற்றால் அறிய முடிகின்றது.

**(3) சிவஞான போதம்:** இந்த நூலை அருளிச் செய்த வர் திருப்பெண்ணாகடத்தில் தோன்றித் திருவெண்ணெய்

4. தாயுமானஅடிகள் - மௌனகுரு வணக்கம் காண்க.

நல்லூரில் எழுந்தருளியிருந்த **மெய்கண்ட தேவநாயனார்** என்பவர். **மெய்கண்டார்** என்பது தீட்சையால் பெற்ற பெயர். இவரது பிள்ளைத்திருநாமம **'சுவேதவனப் பெருமாள்'** என்பது. இவரது சந்தானமே **'திருக்கயிலாய பரம்பரை'** என்று வழங்கப் பெறுகின்றது. இஃது இருகிளைகளாய் **திரு வாவடுதுறையில்** ஒன்றும், **தருமபுரத்தில்** ஒன்றுமாக இரண்டு ஞான பீடங்களைக் கொண்டு இலங்குகின்றது.

இந்த நூல் சித்தாந்தத்தின் **தலைமணி நூல்** என்பதை உளங்கொள்ள வேண்டும். **பன்னிரண்டே** நூற்பாக்களில் (சூத்திரங்களில்) எல்லா மெய்நூல்களின் கருத்துகளையும் அடக்கி அளவை நெறி கொண்டு (தருக்க முறையைப் பின்பற்றி) மிகத்திட்பமும், நுட்பமும் அமையச் சித்தாந்தக் கருத்துகளைத்தெளிவாக முழுமையாக விளக்கும் **முதல் நூல் இது.** முதற்கண் தற்சிறப்புப் பாயிரமாக அமைந்த **'மங்கல வாழ்த்து, அவையடக்கம்'** ஆகிய இரு செய்யுட் களும் பல பொருள்களை தம்மிடத்தே கொண்டு செறிந்துள் ளன. இதன் நூற்பாக்களைப் பல கூறுகளாகப் (அதிகரணங் களாகப்) பிரித்து நூலாசிரியரே சுருக்கமான பொழிப்புரை (வார்த்திகம்) கூறியுள்ளார். இந்த உரை 'மேற்கோள், ஏது, எடுத்துக்காட்டு' என்னும் உறுப்புகளைக் கொண்டது. எடுத்துக் காட்டுகள் வெண்பாக்களால் ஆகியவை. **'சூசிப்பது சூத்தி ரம்'** என்பதற்கு இந்நூல் சிறந்ததோர் எடுத்துக்காட்டு இலக்கிய மாகும்.

இத்தகைய ஒப்புயர்வற்ற முதல் நூலைச் செய்தருளின வர் **மெய்கண்டார்;** இந்நூலாலும், பிறவற்றாலும் **அருணந்தி தேவர்** முதலிய மாணாக்கர்கட்குச் சித்தாந்தத்தினைத் தெளிவாக உணர்த்தியருளினார். இந்த மாணாக்கர்களும்

தங்கள் நூல்களாலும், உபதேசங்களாலும் எங்கும் சித்தாந்தத்தினை விளங்கச் செய்தனர். இவ்வாறு '**மெய்கண்டார் சந்தானம்**' அன்று தொட்டு இன்றுவரை தமிழ்நாட்டில் சிறந்தோங்கி நிற்கின்றது. இக்காரணங்களால் மெய்கண்டதேவரைச் சித்தாந்தத்தின் முதல் ஆசிரியராகக் கருதுவர் சிலர். இங்ஙனம் கருதுவதற்குரிய பெருமையுடையவர் இப்பெருந்தகை என்பதில் எள்ளளவேனும் ஐயம் இல்லை. ஆயினும் சித்தாந்தத்தினை இவரே படைத்தார் என்று கருதுவது சரியன்று. மெய்கண்டாருக்கு முன்னரே **திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார்** என்ற இரண்டு சித்தாந்த நூல்கள் உள்ளன; மற்றும் **ஞானாமிர்தம்** முதலியனவும், **சித்தாந்த சாராவளி, அட்டப் பிரகரணம்** முதலிய வடநூல்களும் இருந்தமை அறியக் கிடக்கின்றது. ஆகவே பரந்து கிடந்த சித்தாந்தப் பொருள்களை ஒரு கோவைப்பட அளவை முறையால் நூல் முறைப்படிச் செய்தருளினவர் மெய்கண்டார்[5] என்பதை நாம் ஒப்புக் கொண்டேயாக வேண்டும். இதனால் இது '**சித்தாந்த முதல் நூல்**' என்று போற்றப் பெறுகின்றது. இதன் பெருமையைத் 'திருக்குறள் ஆகிய வேதம் பசு; திருமூலர் திருமந்திரம் ஆகிய ஆகமம் அந்தப் பசுவின்பால்; அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நால்வரின் பாடல்களாகிய திருமுறைகள் அப் பாலின் நறுநெய்; மெய்கண்டார் இயற்றிய **சிவஞானபோதம்** அந்நெய்யின் இனிய சுவையாகும்'[6] என்று பெரியோர்கள் பாராட்டியுள்ளனர்.

---

5. இராமாநுசர் வைணவ நெறியை முறைப்படுத்தினமை ஈண்டு நினைத்தல் தகும்.
6. கீதையில் தியான சுலோகங்களின் கருத்தையொட்டி இக்கருத்தையுடைய வெண்பா அமைந்துள்ளதாகக் கருத இடம் உண்டு.

இந்த அரிய நூலுக்கு **மாதவச் சிவஞான யோகிகள்** '**சிற்றுரை, பேருரை**' என இரண்டு உரைகள் செய்துள்ளனர். பேருரை (பாடியம்)[7] என வழங்கப்பெறுகின்றது. இவ்வுரை களின்றி இந்நூற்பொருளை உணர்தல் இயலாது. மாபாடியத்துள் சித்தாந்தப் பொருள் பலவற்றையும் நுணுக்கமாக விளக்கி யிருக்கும் அருமைப்பாட்டைக் காணலாம். இவற்றைத் தெளி வாக உணர்வதற்குச் சிறந்த தமிழறிவும், ஓரளவு வடமொழி யறிவும், அளவை நூல் பயிற்சியும் இன்றியமையாதவை.

**(4) சிவஞான சித்தியார்:** இதனை அருளிச் செய்தவர் மெய்கண்டாரின் மாணாக்கர் **அருணந்திதேவநாயனார்** என்பவர். மெய்கண்டாரின் 49 மாணாக்கர்களுள் இவரே முதல்வராகத் திகழ்ந்தவர். '**அருள்நந்தி**' என்பது தீட்சாத் திருநாமம். இதற்கு முன் இவர் '**சகலாகம பண்டிதர்**' எனப் பெயர் பெற்றிருந்தவர். மெய்கண்ட தேவரைச் சிவபெருமானுட னும், இவரை நந்தி தேவருடனும் ஒப்பிட்டுப் போற்றுவர் சைவப் பெருமக்கள்.

இந்நூல் சிவஞான போதத்தை மிக விரித்துச் செய்யப் பெற்ற **வழி நூலாகும்.** சித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் இதுவே மிகப் பெரிய நூலாகும். இது '**பரபக்கம், சுபக்கம்**' என்னும் இரண்டு பெரும் பிரிவுகளைக் கொண்டது. இரண்டையும் 'இருவேறு நூல்கள்' என்று கருதும் அளவுக்கு மிகப் பெரிய நூல். '**பரபக்கம்**' **301** திருவிருத்தங்களையும், '**சுபக்கம்**' **323** திருவிருத்தங்களையும் கொண்டவை. எனவே இதனைச் சிவஞான போதத்திற்குச் செய்யுளால் அமைந்த **மாபாடியம்** என்று கருதலாம். இதன் 'பரபக்கம்' பிற

7. இராமாநுசர் பாதராயரின் பிரம்ம சூத்திரத்திற்கு வகுத்துள்ள ஸ்ரீ பாஷ்யம் ஈண்டு நினைத்தல் தகும்.

இந்த அரிய நூலுக்கு **மாதவச் சிவஞான யோகிகள்** **'சிற்றுரை, பேருரை'** என இரண்டு உரைகள் செய்துள்ளனர். பேருரை (பாடியம்)[7] என வழங்கப்பெறுகின்றது. இவ்வுரை களின்றி இந்நூற்பொருளை உணர்தல் இயலாது. மாபாடியத்துள் சித்தாந்தப் பொருள் பலவற்றையும் நுணுக்கமாக விளக்கி யிருக்கும் அருமைப்பாட்டைக் காணலாம். இவற்றைத் தெளி வாக உணர்வதற்குச் சிறந்த தமிழறிவும், ஓரளவு வடமொழி யறிவும், அளவை நூல் பயிற்சியும் இன்றியமையாதவை.

**(4) சிவஞான சித்தியார்:** இதனை அருளிச் செய்தவர் மெய்கண்டாரின் மாணாக்கர் **அருணந்திதேவநாயனார்** என்பவர். மெய்கண்டாரின் 49 மாணாக்கர்களுள் இவரே முதல்வராகத் திகழ்ந்தவர். **'அருள்நந்தி'** என்பது தீட்சாத் திருநாமம். இதற்கு முன் இவர் **'சகலாகம பண்டிதர்'** எனப் பெயர் பெற்றிருந்தவர். மெய்கண்ட தேவரைச் சிவபெருமானுட னும், இவரை நந்தி தேவருடனும் ஒப்பிட்டுப் போற்றுவர் சைவப் பெருமக்கள்.

இந்நூல் சிவஞான போதத்தை மிக விரித்துச் செய்யப் பெற்ற **வழி நூலாகும்.** சித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் இதுவே மிகப் பெரிய நூலாகும். இது **'பரபக்கம், சுபக்கம்'** என்னும் இரண்டு பெரும் பிரிவுகளைக் கொண்டது. இரண்டையும் 'இருவேறு நூல்கள்' என்று கருதும் அளவுக்கு மிகப் பெரிய நூல். **'பரபக்கம்' 301** திருவிருத்தங்களையும், **'சுபக்கம்' 323** திருவிருத்தங்களையும் கொண்டவை. எனவே இதனைச் சிவஞான போத்தத்திற்குச் செய்யுளால் அமைந்த **மாபாடியம்** என்று கருதலாம். இதன் 'பரபக்கம்' பிற

7. இராமாநுசர் பாதராயரின் பிரம்ம சூத்திரத்திற்கு வகுத்துள்ள ஸ்ரீ பாஷ்யம் ஈண்டு நினைத்தல் தகும்.

மேலும், சித்தியார் அனைவரும் சித்தாந்தப் பொருளை உணருமாறு எளிமையாகவும், விரிவாகவும், சைவாகமப் பொருள்களை ஆங்காங்குத் தந்துரைத்து அவற்றிற்கு விளக்க மாகவும் அமைந்துள்ளது. இக்காரணங்களால் இதுவே சித்தாந்தப் பெருநூலாகத் திகழ்கின்றது. இதுபற்றியே "சிவத்திற்கு மேல் தெய்வம் இல்லை சித்திக்கு மேல் நூலும் இல்லை" என்ற ஒரு பழமொழியும் எழுந்தது போலும். தமிழ் நூல்கள் பலவற்றுள்ளும் சிறந்தவையாகச் சிலவற்றைக் கூறும்,

வள்ளுவர்நூல் அன்பர்மொழி வாசகம்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகன் செய்தஉரை—ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாந் தரம்.

என்ற வெண்பா சிவஞான சித்தியாரையே சாத்திரத்திற்குச் சிறந்ததாகக் காட்டுவதைக் காணலாம். "ஆகமங்கெல்லாம் உரையாணி" என்ற புகழ் மாலையையும் சூட்டியிருப்பதாகக் கண்டு தெளியலாம். சித்தாந்தத்தைத் தெளிவாக அறிய விழை வோர், இந்த நூலை, குறிப்பாகச் சுபக்கத்தினை, ஓத வேண்டி யது மிகவும் இன்றியமையாதது.

**(5) இருபா இருபஃது:** இதனை அருளியவரும் அருள் நந்தி தேவரேயாவார். இந்த நூலில் தாம் சிவஞான போதத்தால் உணர்ந்த சித்தாந்தப் பொருளினும் மிக நுண்ணிய பொருள் களைத் தம் குருநாதராகிய மெய்கண்ட தேவரை வினவி யறிந்தவற்றை விளக்கி உரைக்கின்றார். இந்த வினாக்களை 20 பாடல்களில் வெளிப்படையாகக் கூறி விடைகளைக் குறிப்பால்தான், பெற வைத்துள்ளார். இவற்றைச் சிந்தித்து அறிதல் வாசகர்களின் பொறுப்பு.

**(6) உண்மைவிளக்கம்:** இப்பனுவலை அருளிச் செய் தவர் **திருவதிகை மனவாசகம் கடந்தார்** என்பவர். இவரும்

மெய்கண்டதேவரின் மாணாக்கர்களுள் ஒருவராவார். இந் நூலைத் தவிர இவரைப்பற்றிய வேறு குறிப்பு ஒன்றும் தெரிந்திலது.

இவர் தம் நூலில் தத்துவங்களைச் சுருக்கமாகவே உரைக்கின்றார். இதில் தம் குருநாதரை நூலாசிரியர் வினவு கின்றார்; குருநாதர் சீடருக்கு விளக்கம் தருகின்றார். இங்ஙனம் வினா–விடையாக அமைந்த இப்பனுவல் சித்தாந்தம் பயில விரும்புவார்க்கு முதற்கண் பயில வேண்டிய நூலாக அமை கின்றது. இதில் ஆன்ம தத்துவம், வித்தியா தத்துவம், சுத்த சத்துவம், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்கள், உயிரியல்பு, பதியியல்பு, ஐந்தெழுத்து, நடராச தத்துவம், அத்துவித முத்தி, குருலிங்க சங்கம வழிபாடு என்பவை விளக்கப்பெறுகின்றன. பக்தியுடன் பயின்றால் மெய்கண்டாரே நேரில் உபதேசம் செய்யும் உணர்வு பெறலாம். காப்பு, சிறப்புப் பாயிரம் உட்பட 55 வெண்பாக்களால் அமைந்துள்ளது இப்பனுவல்.

**(7) சிவப்பிரகாசம்:** இந்நூலையும் ஏனைய ஏழு நூல்களையும்[10] அருளிச்செய்தவர் கொற்றவன்குடி **உமாபதி தேவநாயனார்.** இவரைச் சுருக்கமாக **உமாபதி சிவம்** என்றும் வழங்குவர். இவர் அருள்நந்திதேவரின் மாணாக்கராகிய மறைஞான சம்பந்தரின்[11] மாணாக்கராவர். இவர் தில்லை வாழ் அந்தணர்களுள் ஒருவர். இவர் அதி தீவிர பக்குவத்தால் மறைஞானசம்பந்தரை அடைந்து உபதேசம் பெற்று அவர் வழி

10. இந்த எட்டும் '**சித்தாந்த அட்டகம்**' என்ற பெயராலும் வழங்கப் பெறும். இவற்றுள் 'உண்மை நெறி விளக்கம்' என்பதைச் சீகாழித் தத்துவராயர் என்பார் செய்ததாகச் சொல்லுவதும் உண்டு.

11. இவர் வைதிகப் பார்ப்பன மரபினர். யாதொரு நூலும் செய்திலர்.

நின்றமையால் ஏனைத் தில்லை வாழ் அந்தணர்கள் விலக்கி விட்டனர். இதனால் இவர் தில்லைக்கு அருகிலுள்ள கொற்ற வன்குடியில்[12] மடம் அமைத்துக் கொண்டு தங்கியிருந்த காலத்தில் தில்லைவாழ் அந்தணர்களும் பிறரும் வியக்கும் வண்ணம் பல அற்புதங்களை நிகழ்த்தினார்.

மெய்கண்ட சந்தானத்தில் உள்ள மெய்கண்டார், அருள் நந்திதேவர், மறைஞானசம்பந்தர், உமாபதிதேவர் எனப் போற்றும் நால்வரும் '**சந்தான குரவர்**' எனப் போற்றப் பெறுவர். இவர்களுடைய வரலாறுகள் விரிவானவை. இவற்றைச் '**சந்தானாச்சாரியார் புராண சங்கிரகம்**' என்ற நூலில் காணலாம்.

**சிவப்பிரகாசம்** சிவஞான போதத்தின் சார்பு நூலாகும். இது சிவஞான சித்தியார் போலச் சிவஞான போதத்தை அடியொற்றிச் செல்லுவதாக அமையவில்லை. போதத்தின் கருத்தை மட்டிலும் உளங்கொண்டு, '**பொது, உண்மை**' என்னும் இரு பிரிவினதாய் நடைபெறுகின்றது. முன்னைய முதல் வழிநூல்களில் விளக்கப்பெறாத பல நுண்ணிய கருத்துகள் ஈண்டு விளக்கம் அடைகின்றன. இதனால் அவ்விரு நூல்களிலும் நுவலப் பெறாத சில மூல ஆகம, உப ஆகமக் கருத்துகளும் இதில் சொல்லப் பெற்றுள்ளதாக நூலாசிரியரே தெளிவாக்குகின்றார். இவற்றால் முன்னைய நூற்பொருள்களைச் சுருங்க உணர்வதற்கு இந்நூல் ஒருவாறு துணையாக இருக்கும். ஆகவே, அந்நூல்களைப் பயில்வதற்கு முன்னதாக இந்நூல்களைப் பயிலலாம். இந்நூல் **நூறு** விருத்தப்பாக்களால் அமைந்தது.

12. அண்ணாமலைப் பல்கலைக் கழக வளாகத்தில் உள்ளது. 'கொற்றவன்குடிக் குடியிருப்பு" என்ற பெயருடன் வழங்கும் இதில் இப்போது பல்கலைக் கழக ஆசிரியர்கள் வசிக்கின்றனர்.

(8) **திருவருட்பயன்:** இந்த நூல் சித்தாந்தப் பொருள் களை அடைவுபடத் தொகுத்துக் குறள் வெண்பாக்களால் கூறுகின்றது. 10 குறள்கள் வீதம் **10 இயல்களில் 100** குறள் வெண்பாக்கள் அடங்கியுள்ளன. தொடக்கத்தில் காப்பாக முதற்கண் தனிக் குறள் வெண்பா உள்ளது. உலகியல் திருக் குறள், வீட்டினை அறத்துப் பாலில் அடக்கிக் கூறுகின்றது. இந்நூலில் வீடு பற்றிய கருத்து தனியாக எடுத்துக் கூறப்பெறு கின்றது. இதனால் இதனை மெய்ந்நெறித் திருக்குறளாகக் கொண்டு ஓதி உணர்ந்து வீடாகிய முடிந்த பயனைப் பெற வேண்டும் என்பது ஆசிரியரின் கருத்தாக இருத்தல் வேண்டும். சைவப் பெருமக்கள் இதனை உண்மை விளக்கத் திற்கு அடுத்ததாகக் கற்று அதன் பிறகு சிவப்பிரகாசத்தைக் கற்றலை ஒரு மரபாகக் கொண்டுள்ளனர்.

(9) **வினாவெண்பா:** இந்நூல் இருபா இருபஃது போன்றது. அஃதாவது, இதன் ஆசிரியர் தம் ஆசிரியராகிய மறைஞானசம்பந்தரிடம் வினவி அறிந்த நுண் பொருள்களை வினா வடிவிலேயே உணர்த்துகின்றார். இந்நூல் 13 வெண்பாக் களால் நடைபெறுகின்றது.

(10) **போற்றிப் பஃறொடை வெண்பா:** இறைவன் உயிர் கட்குத் தன் பெருங்கருணையால் கைம்மாறு கருதாத பேருத வியைச் செய்து வருகின்றான். இதனைத் தத்துவ நெறியால் உணர்ந்து அவனைப் போற்றி உரைப்பதாகச் செய்யப் பெற்றது இந்நூல். ஆகவே இதில் பல தத்துவக் கருத்துகள் தாமாகவே அமைந்து விளங்குவனவாயின. இது **95** கண்ணி களையுடைய கலிவெண்பாவால் அமைந்தது.

(11) **கொடிக்கவி:** இந்நூல் **ஐந்து** திருப்பாடல்களால் ஆனது. இதன் ஆசிரியர் **உமாபதி சிவம்** தில்லைவாழ் அந்தணர்களுள் ஒருவர் என்பதை நாம் அறிவோம்.

தில்லைவாழ் அந்தணர்கள் இவருடன் கருத்து மாறுபட்டு இவரை வெறுத்தொதுக்கியிருந்தனர். இதன் காரணமாக ஒரு சமயம் கொடி ஏறாமலிருந்தது. பின்னர் அசரீரி சொல்லியபடி இதன் ஆசிரியரை அழைத்து வந்து கொடி ஏற்றுமாறு வேண்டினர். ஆசிரியர் அக்கொடி தானே ஏறும்படி ஐந்து திருப்பாடல்களைப் பாடியருளினார். முதற் பாடல் கட்டளைக் கலித்துறை; ஏனைய நான்கும் வெண்பாக்கள். இந்நூலில் சித்தாந்தத்தின் நுண்ணிய பொருள்களும் திருவைந்தெழுத்தின் மறை பொருள்களும் நுவலப் பெற்றுள்ளன.

**(12) நெஞ்சு விடுதூது:** இந்நூலில் ஆசிரியர் தம்மைத் தலைவியாகவும், தம் குருநாதர் மறைஞானசம்பந்தரைத் தலைவனாகவும் வைத்துப் பாடியுள்ளார். ஆசிரியர் தம் குருநாதரைக் காமுற்று வருந்தி அவர்பால் சென்று அவரது கொன்றை மாலையை வாங்கி வருமாறு தம் நெஞ்சைத் தூதாக விட்டது போல் செய்யப்பெற்ற **தூதுப் பிரபந்தமாகும்.** இதில் தத்துவங்கள், உபதேசங்கள், புறச் சமய மறுப்புகள் முதலியன அமைந்துள்ளன. சிறப்பாகத் தசாங்கங்கள் பேசப் பெற்றிருப் பது குறிப்பிடத்தக்கது. 129 கண்ணிகளைக் கொண்ட கலி வெண்பாவால் ஆனது இந்நூல்.

**(13) உண்மை நெறி விளக்கம்:** இதன் ஆசிரியர் **உமாபதி சிவம்** தம் ஞானாசிரியரிடம் உபதேசம் பெற்ற பின்னர் அதைச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடும் செயலில் உள்ள பத்து நிலைகளாகிய **தசகாரியங்களை** மிகச் சுருக்க மாகக் கூறுவது இந்நூல். இஃது **ஆறு** திருவிருத்தங்களால் ஆனது. இதனைத் **தத்துவநாதர்** என்ற வேறோர் ஆசிரியர் இயற்றியதாக வெண்பா ஒன்று உண்டு. எனினும், உமாபதி சிவம் செய்ததாகவே பெரும்பாலோர் கொள்வர். இதனைத் துகளறு போதத்தின் சுருக்கமாகக் கொள்வதும் உண்டு.

**(14) சங்கற்ப நிராகரணம்:** இது பதினான்கனுள் இறுதி நூலாகும். இது சிவஞான சித்தியாரின் பரபக்கம் போன்றது.

தில்லைவாழ் அந்தணர்கள் இவருடன் கருத்து மாறுபட்டு இவரை வெறுத்தொதுக்கியிருந்தனர். இதன் காரணமாக ஒரு சமயம் கொடி ஏறாமலிருந்தது. பின்னர் அசரீரி சொல்லியபடி இதன் ஆசிரியரை அழைத்து வந்து கொடி ஏற்றுமாறு வேண்டினர். ஆசிரியர் அக்கொடி தானே ஏறும்படி ஐந்து திருப்பாடல்களைப் பாடியருளினார். முதற் பாடல் கட்டளைக் கலித்துறை; ஏனைய நான்கும் வெண்பாக்கள். இந்நூலில் சித்தாந்தத்தின் நுண்ணிய பொருள்களும் திருவைந்தெழுத்தின் மறை பொருள்களும் நுவலப் பெற்றுள்ளன.

**(12) நெஞ்சு விடுதூது:** இந்நூலில் ஆசிரியர் தம்மைத் தலைவியாகவும், தம் குருநாதர் மறைஞானசம்பந்தரைத் தலைவனாகவும் வைத்துப் பாடியுள்ளார். ஆசிரியர் தம் குருநாதரைக் காமுற்று வருந்தி அவர்பால் சென்று அவரது கொன்றை மாலையை வாங்கி வருமாறு தம் நெஞ்சைத் தூதாக விட்டது போல் செய்யப்பெற்ற **தூதுப் பிரபந்தமாகும்.** இதில் தத்துவங்கள், உபதேசங்கள், புறச் சமய மறுப்புகள் முதலியன அமைந்துள்ளன. சிறப்பாகத் தசாங்கங்கள் பேசப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. 129 கண்ணிகளைக் கொண்ட கலி வெண்பாவால் ஆனது இந்நூல்.

**(13) உண்மை நெறி விளக்கம்:** இதன் ஆசிரியர் **உமாபதி சிவம்** தம் ஞானாசிரியரிடம் உபதேசம் பெற்ற பின்னர் அதைச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடும் செயலில் உள்ள பத்து நிலைகளாகிய **தசகாரியங்களை** மிகச் சுருக்கமாகக் கூறுவது இந்நூல். இஃது **ஆறு** திருவிருத்தங்களால் ஆனது. இதனைத் **தத்துவநாதர்** என்ற வேறோர் ஆசிரியர் இயற்றியதாக வெண்பா ஒன்று உண்டு. எனினும், உமாபதி சிவம் செய்ததாகவே பெரும்பாலோர் கொள்வர். இதனைத் துகளறு போதத்தின் சுருக்கமாகக் கொள்வதும் உண்டு.

**(14) சங்கற்ப நிராகரணம்:** இது பதினான்கனுள் இறுதி நூலாகும். இது சிவஞான சித்தியாரின் பரபக்கம் போன்றது.

**விருத்தி** முதலிய வடநூல்களும், சித்தாந்தத்தை விளக்குபவை யாகும். இவற்றையும் அறிந்து கொண்டால் சித்தாந்தத்தில் மேலும் தெளிவு பிறக்கும். இதனால் நம் நாட்டுச் சமய அறிஞர் கள் மனிதனின் அகவுலகத்தை எவ்வெவ்வாறெல்லாம் சிந்தித்துள்ளனர் என்பது தெளிவாகும்.

# 2. சந்தானாசாரியர்கள்

இவர்கள் மெய்கண்ட நூலாசிரியர் கள் என வழங்கப் பெறுவர். இவர்களைச் 'சந்தானாசாரியர்கள்' என்று வழங்குவது பெருவழக்கு. 'சந்தான குரவர்கள்' என்றும் ...வர்களை வழங்குவர். இவர்கள் எழுவர்.

# 2. சந்தானாசாரியர்கள்

**இவர்கள்** மெய்கண்ட நூலாசிரியர்கள் என வழங்கப் பெறுவர். இவர்களைச் 'சந்தானாசாரியர்கள்' என்று வழங்குவது பெரு வழக்கு. இவர்கள் **எழுவர்.** அவர்கள் வருமாறு:

(1) **திருவியலூர் உய்யவந்ததேவனார்:** இவர் **திருவுந்தியார்** என்ற நூலை அருளிச்செய்தார். இதற்கு மேல் இந்த ஆசிரியரைப்பற்றி வேறு குறிப்பு ஒன்றும் தெரிய வில்லை.

(3) **திருக்கடவூர் உய்யவந்ததேவநாயனார்:** திருவியலூர் உய்ய வந்த தேவனாரின் மாணாக்கர் திருவியலூர் ஆளுடைய தேவநாயனார். இவருடைய மாணாக்கர் திருக் கடவூர் உய்ய வந்த தேவநாயனார். இவரே **திருக்களிற்றுப் படியார்** என்ற நூலை அருளிச் செய்தார். இது திருவுந்தி யாரின் பொருளை இனிது விளக்கும் வழிநூலாக அமை கின்றது. இந்த நூலைப் பற்றிய ஒரு வரலாறு உண்டு.

நூலாசிரியர் ஆட்டு வாணிகக் குலத்தில் தோன்றியவர். இக்காரணம்பற்றி இவர்தம் மெய்யுணர்வு நூலை ஏற்றுக் கொள்ளச் சிலர் ஐயுற்றனர். சிவதீக்கை பெற்ற பின்னர், ஒருவரை உலகியல் குலம் பற்றி உளங் கொண்டு வேறுபாடு கருதுதல் உண்மைச் சிவநெறிக்கு ஒரு சிறிதும் ஒவ்வாது என்ற

உண்மையை அறியாதவர்கள் இவர்கள். இதன் பெருமையை அறியும் பொருட்டு இந்நூல் திருச்சிற்றம்பலத்தின்கண் அம்மை–அம்பலவாணர் திருமுன்னர் காணப்பெறும் '**திருக்களிற்றுப்படியார்**' என்னும் திருப்படியில் வைக்கட் பெற்றது. அம்பலவாணரின் திருவருளால் அப்படியொடு பொருந்திய கல்லாலமைந்த '**களிற்றுக்கை**' எனப்படும் தூம் புடைக்கை தூக்கி அம்பலவாணர் திருவடியில்வைத்தது இக்காட்சியைக் கண்டோர் வியப்பெய்தினர். நூலினைத் தலை மேற்கொண்டு போற்றினர். இம்முறையால் இந்நூலுக்குத் '**திருக்களிற்றுப் படியார்**' என்னும் திருப்பெயர் வழங்கச லாயிற்று.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் சுந்தரமூர்த்தி மணிவாசகர் என்ற '**சமய குரவர்**' நால்வருக்குப் பின் சைவ சமயத்தைத் தழைத்தோங்கச் செய்வதற்குத் தமிழ் நாட்டில் பல '**ஞானசந்தானங்கள்**' தோன்றின. பழமையாகவே 'திருமூலர் மரபு' என்ற ஒரு சந்தானம் பேசப்பெறுகின்றது. தாயுமான அடிகளும் தமது குருநாதராகிய மௌன குருவை 'மூலன் மரபில் வருபவராகவே' கொண்டிருத்தல், ஈண்டு நினைக்கத் தக்கது.[1] 'திருவியலூர் உய்ய வந்த சந்தானம்' என்பதாக ஒரு சந்தானம் இருந்ததை மேற்கூறப் பெற்ற இரண்டு நூல்களால் அறிய முடிகின்றது.

**(3) மெய்கண்ட தேவர்:** 'திருமுனைப்பாடி' என்ற நடு நாட்டில் **திருப்பெண்ணாகடம்** என்னும் ஊரில் சைவ வேளாளர் குலத்தில் **அச்சுதகளப்பாளர்** என்பாருக்குத் தவப் புதல்வராகத் தோன்றியவர் **மெய்கண்டதேவர்.** நாயனாரது தந்தை அச்சுதகளப்பாளருக்கு மக்கட்பேறு இல்லாக்குறை ஏற்பட்டிருந்தது. ஆதலால் அவர் தம் குல குருவாகிய

1. தா.பா. மௌனகுரு வணக்கம் காண்க.

திருத்துறையூர் அருணந்திசிவாச்சாரியாரிடம் சென்று தம்குறையைத் தீர்க்கும் வழியைக் காட்டுமாறு வேண்டினார். அப்போது ஆசிரியர் திருமுறையைப் பூசித்துக் கயிறு சாத்திப் பார்த்தனர்.

பேயடையா பிரிவெய்தும்
    பிள்ளையினோடு உள்ளநினை
வாயினவே வரம்பெறுவர்
    ஐயுறவேண் டாவொன்றும்
வேயனதோள் உமைபங்கன்
    வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத்
    தோயாவாம் தீவினையே.[2]

என்ற திருப்பாட்டு கிடைத்தது. அப்பாடலுள் திருவெண்காட்டிலுள்ள முக்குளநீரில் நீராடுபவர்களுக்கு, பிள்ளையினோடு எண்ணியவை யாவும் கைவரும் என்று அறுதியிட்டுக் கூறியிருத்தலின், ஆசிரியர் அச்சுதகளப்பாளரைத் திருவெண் காட்டிற்குச் சென்று முக்குளநீரில் மூழ்கி அங்குத் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் பெருமானையும் அம்மையையும் வழிபட்டு வரும்படி பணித்தார்.

அச்சுதகளப்பாளரும் ஆசிரியர் இட்ட கட்டளைப் படியே தம் துணைவியாருடன் திருவெண்காட்டையடைந்து முக்குள நீரில் மூழ்கி அறங்கள் பலவும் செய்து வந்தனர். ஓராண்டு உருண்டோடியது. ஒருநாள் அவருக்குக் கனவில் சிவபெருமான் தோன்றி 'அன்பனே, இப்பிறவியில் மகப்பேறு எய்தும் பான்மை நினக்கு இல்லை' என்று உரைத்தனர். அது கேட்ட அச்சுதகளப்பாளர் 'ஞானசம்பந்தப் பெருமானது திருவருட்பாடலை நம்பி ஈண்டுத் தவங்கிடந்ததன் பெரும்

2. சம். தே. 2.48:2

பயனாக, இம்மையிலேயே நற்புத்திரனை நீவிர் அடி அருளுதல் வேண்டும்' என்று விண்ணப்பம் செய்து பல பணிந்தார்.

அப்போது அம்மையப்பராகிய சிவபெருமான் க கூர்ந்து, 'ஞானசம்பந்தன் நம்மைத் துதித்த பாட்டின்கண் வைத்து நம்மை வழிபட்டமையால் அன்னவன் போல வினை நீவிரும் பெற்று வாழ்திர்' என்று திருவாய் மலர் னார். அதனைச் செவிமடுத்த அச்சுதகளப்பாளர் அ மகிழ்ச்சியுற்று நனவெய்திய பின் முன்போலவே சி மானை வழிபட்டு அறநெறியில் ஒழுகுவாராயினர்.

சின்னாட்களில் அச்சுதகளப்பாளரது துணை வயிறு வாய்க்கப் பெற்றார். கணவரும் பத்துத் திங்க செய்யற்பாலனவாய சடங்குகளனைத்தையும் உவகை செய்து குறைவற முடித்தனர். சைவசித்தாந்த இளஞ் ஞாயிறாகிய **மெய்கண்டதேவர்** நல்ல வேளையில் நில உய்யத் தோன்றியருளினார். அக்காலத்துச் செய்ய வே சடங்குகளையெல்லாம் குறைவற முடித்துக் செ திருவெண்காட்டப்பரிடம் விடைபெற்றுக் கொண்டு உ சுற்றத்தார் புடைசூழ பிள்ளையோடும், துணைவியா அச்சுதகளப்பாளர் திருப்பெண்ணாகடம் திரும்பித் திருமாளிகையில் வதியலானார்.

திருப்பெண்ணாகடத்து மக்களெல்லோரும் பிள பேறெய்திய நற்செய்தி கேட்டுக் களிப்பெய்தினர். அ குழந்தைக்கு முதலில் **சுவேதவனப்பெருமாள்** என் வெண்காட்டடிகளின் திருப்பெயர் இடப் பெற்றது. சி சென்றபின்னர் திருவெண்ணெய் நல்லூரிலுள்ள தன் ம குழந்தையை எடுத்துத் தமது இல்லத்துக்குக் கொண்டு

வளர்த்து வந்தனர்.[3] அங்ஙனம் வளர்ந்து வரும் நாளில் சுவேத வனப்பெருமாள் முற்பிறவியிலேயே சரியை, கிரியை, யோகம் முதலியன முடித்துச் சிவஞானம் அடைதற்குரிய பெருந்தவத் தினராதலின் இரண்டு அகவையிலேயே **'அடிசேர் ஞானம்'** அடைதற்குரிய சாமு சித்தி நிலையை எய்தினார். முற்பிறவி யில் உறுதியாகப் பயின்ற கல்வி இப்பிறவியில் இளமையில் எளிதாகத் தழைத்தோங்கி ஒளிர்வதை இயற்கையிலேயே கணித நூல் உண்மை பெரிதும் படைத்திலங்கும் சில பிள்ளை களிடம் கண்கூடாகக் காண்கின்றோம்.

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து (குறள் – 398)

என்ற திருவள்ளுவர் திருவாக்கையும் ஈண்டு நினைத்தல் தகும்.

சைவ சமயத்திற்கு முதல் தலைவராகிய திருஞான சம்பந்தரும், சித்தாந்த ஞான பரம்பரைக்கு முதல் தலைவராகிய மெய்கண்ட தேவரும் உலகம் உய்யவே தோன்றியருளினார் என்பது, அவர்கள் குழவிப் பருவத்திலேயே உலக நெறி செல்லாது கடவுளது அருள் ஞான நெறியிலேயே நிற்கும் உயர் நிலை எய்தினமையால் தெளிவாகும்.

சுவேதவனப்பெருமாள் திருவெண்ணெய் நல்லூரில் இருந்த பொழுது சனற்குமார முனிவரது ஞானப் புதல்வராகிய சத்திய ஞான தரிசனிகளிடம் உபதேசம் பெற்ற **பரஞ்சோதி முனிவர்** என்பார் ஆகமத் தலைவராகிய ஐம்முனிவருள் தலை சிறந்த அகத்திய முனிவர் வீற்றிருக்கும் பொதிய

3. வைணவத்தில் இராமாநுசர் அவதரித்ததும் அவர் தாய் மாமன் திருமலை நம்பி தம் தங்கை மகன் இலக்குமண னைப் போல் சேவை புரிய வேண்டும் என்று கருதி 'இளை யாழ்வார்' என்று திருநாமம் சூட்டியதை நினைவுகூரலாம்.

மலையை நோக்கிச் செல்லும் காலத்தில் அவரது ஒளி விமானம் திருவெண்ணெய் நல்லூருக்கு நேராக வந்தவுடன் நின்றுவிட்டது. அதன் குறிப்பையுணர்ந்த **பரஞ்சோதியார்** சுவேதவனப்பெருமாளைக் கண்டு அவருக்கு மெய்யுணர் வளித்து **மெய்கண்டார்** என்ற தமது ஞானத் தந்தையின் திருநாமத்தைச் சூட்டியருளினார்.

சிவபெருமான் தக்க பக்குவமடைந்தார்க்குக் குருவாய் வந்துணர்த்துவது பெரும்பான்மையும் தமது பேரன்பை நிலைக்களமாகக் கொண்டேயாகும். பரஞ்சோதி முனிவர் மெய்கண்ட தேவர்க்கு மெய்யுணர்வு அளித்த காலை அவர் கடவுளோடு இரண்டறக் கலந்து நிற்கும் நிலையினின்று அருள் செய்தாராகலின் சிவபெருமானே நமது மெய்கண்டாருக்கு உண்மைப் பொருள் உணர்த்தியதாகக் கொள்ள வேண்டுமே யொழிய பரஞ்சோதி முனிவர் தாமே அவ்வாறு உணர்த்தினர் என்று கொள்ளுதல் பொருந்துவதன்று. இவ்வாறே உப மன்னியர் கண்ணனுக்கு உபதேசம் செய்ததாகவும், கண்ணன் பார்த்தனுக்கு அறிவுறுத்தியதாகவும் கூறுவதுண்டு.

மெய்கண்டார் கலைஞானம் அனைத்தையும் திருவெண் ணெய் நல்லூரில் எழுந்தருளிய பொல்லாப் பிள்ளையாரிடம் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்தனர். பின்பு அவர் தான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறவேண்டுமென திருவுள்ளக் கருத்தால்[4] **சிவஞானபோதம்** என்னும் சைவ சித்தாந்த தலைமணி ஞான நூலினை இயற்றியருளினார். அச்சிவஞான போத நுண்பொருளை அவர்பால் கேட்டுத் தெளிந்தோர் நாற்பத்தொன்பது மாணவர்களாவர். மெய்கண்டாரது சந்தானமே **'திருக்கயிலாய பரம்பரை'** என்று வழங்கப் பெறுகின்றது.

4. நம்பியாண்டார் நம்பி திருநாரையூர் பொல்லாப் பிள்ளையாரி டம் கேட்டுத் தெளிந்தனர் என்பதனோடு ஒப்பு நோக்கலாம்.

இவரது மாணவரது பரம்பரை வாயிலாகவே இத்தமிழ் நாடெங்கும் சித்தாந்த அறிவுச் சுடர் கொளுத்தும் ஒளி நிலையங்களாகிய திருமடங்கள் ஏற்பட்டன. முதல் மாணவர் பரம்பரையில் வந்த **நமச்சிவாய தேசிகரால்** நிலைபேறெய்திய மடம் **திருவாவடுதுறை ஆதீனம்** ஆகும். அதே பரம்பரையில் வந்த **ஞானசம்பந்த தேசிகரால் தருமபுர ஆதீனம்** ஏற்படுத்தப்பெற்றது. மெய்கண்டதேவரது மாணவருள் முதல் நின்றவர் அவரது தந்தையாருக்குக் குலகுருவாகிய **அருணந்தி சிவாச்சாரியார்** என்பது நாம் அறிந்தது. பதினான்கு சித்தாந்த நூல்களுள் ஒன்றாகிய **உண்மை விளக்கம்** நூலாசிரியராகிய **மனவாசகம் கடந்தவரும்** அவருள் ஒருவர். **சிற்றம்பலநாடிகளும்** அவருள் ஒருவர் என்ற கருத்தும் உண்டு. மெய்கண்டதேவர் தமது மாணவருக்கு உண்மைப் பொருள் உணர்த்திய பின்னர் நனவிலேயே அதீதத்தைப் புரிபவராய் இடையறாது **சமாதி** நிலையிலிருந்து **ஐப்பசித்** திங்களில் **சுவாதி** நாளில் சிவபெருமானோடு இரண்டறக் கலத்தலாகிய பரமுத்தியை அடைந்தார்.

**(4) அருணந்தி தேவர்:** இவர் ஆதி சைவ மரபினர். நடுநாட்டிலேயுள்ள **திருத்துறையூரில்** வாழ்ந்தவர். மெய்கண்டதேவருடைய தந்தையாருக்குக் குலகுரு. மெய்கண்டதேவர் அவதரிப்பதற்குக் காரணமாயிருந்தவர். இவர் சிவாகமங்களனைத்தையும் கற்றுத் துறை போகிய வித்தகராதலால் **'சகலாகம பண்டிதர்'** என்ற உயர்ந்த பட்டம் பெற்றிருந்தார். இவர் வடமொழியில் வேதம் முதலிய கலைகள் யாவற்றையும் கற்றவர். பன்னிரு திருமுறைகளையும் மிக்க பக்தியுடன் கற்றுப்போற்றியவர்.

இவர் தம் நாட்டிலுள்ள சைவர்கள் பலருக்கும் குலகுருவாக இருந்து ஐந்தெழுத்து ஓதுவித்தும், தமது பெரும்

போதனையால் சைவ நெறி நிலைநாட்டியும் சைவ சித்தாந்தத் திற்கோர் தலைவராகத் திகழ்ந்தார். அவரிடம் ஞான நூல்க ளைப் பாடங்கேட்டவர்கள் எண்ணற்றவர். எவ்விடத்திற்குச் சென்றாலும் தமது மாணவர்க்கு நல்லது போதித்தற் பொருட் டும், சித்தாந்த உண்மைகளை நிலை நாட்டுதற் பொருட்டும், சிவாகமங்களைத் தனி வண்டியில் ஏற்றிக் கொண்டு போவதாக அவர் வரலாறு கூறும். இவர் சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நான்கு பாதங்களையும் கூறும் மூலாகமங்களையும் உபாகமங்களையும் பாதுகாத்தது போல அவர்க்குப் பின், வந்தோர் பாதுகாவாமையால் பல மறைந்து சில மட்டிலும் அருகியே காணப் பெறுகின்றன.

ஆசிரியர் மெய்கண்டார் குழவிப் பருவத்தினராயிருந் தும் மாணவர் பலர்க்கும் **ஞானநூல்** கற்பிக்கின்றார் என்பதைக் கேள்வியுற்ற அருணந்திதேவர் வியப்பு கொண்டு தூதர் சிலரை முன் விடுத்துத் திருவெண்ணெய் நல்லூருக்குத் தமது பரிவாரங்களோடும், விருதுகளோடும் புறப்பட்டார். அப்பகுதியி லுள்ள சைவ வேளாளர்கள் யாவரும் தெருக்களெங்கும் வாழை, கமுகு, தெங்கு என்றவற்றால் தோரணம் நாட்டி, வீடு தோறும் பூரண கும்பமெடுத்து, மங்கள வாத்தியங்களோடு தங்கள் குருவை எதிர்கொண்டு வணங்கினர்.

மெய்கண்டதேவர் மட்டிலும் அருள்நந்திதேவரின் வரவை எதிர் கொள்ளாது தமது இருக்கையில் வீற்றிருந்தனர். அதனைக் கண்ட அருணந்திதேவர் மெய்கண்டதேவர்பால் நேரே சென்று அவர் தமது மாணவர்க்கு **ஆணவமலத்தின்** இயல்பினை எடுத்து மொழிவதைக் கேட்டு அவ்வருள் ஞானச் செம்மலை நோக்கிச் செருக்கும் சீற்றமும் உடையராய் ஆணவ சொரூபமான தென்னை என அதிர்ச்சியோடு வினவினவுடனே **மெய்கண்டார்** இன்முகத்தோடு அருள் நந்தியார் நேர்

நோக்கித் தமது விரலால் சுட்டிக்காட்டி அவர்தான் நின்ற நிலையில் ஆணவ வடிவத்தை விளக்கினர் என்பதைக் குறிப்பித்தருளினர்.

அந்தச் சிவஞானக் கதிரவனது அருள் நோக்கால் மலவிருள் அகலப் பெற்றவராய் உண்மையுணர்ந்து அச்சைவ நாதரது திருவடியில் தாழ்ந்திறைஞ்சித் தமக்கு ஞானம் நல்க வேண்டுமென்று குறையிரந்தார். அவ்வாதி சைவ முதல்வருக்கு நமது **ஞானக் கன்று** உடனே திருநீறு அளித்து மெய்யுணர்வு அருளி **சிவஞான போதப் பொருள்** தெரித்துத் தமது நாற்பத் தொன்பது மாணவருள் முதல் மாணவராகும் பெற்றி நல்கினார். மெய்கண்டார் தமக்குச் செய்த பெரு நன்றியை அருணந்தி சிவம் தாம் சிவஞான போதத்திற்கு வழி நூலாக இயற்றிய **சிவஞான சித்தியார்** பாயிரத்துள்ளும் (2), **இருபா இருபஃது** என்னும் சித்தாந்த நூலினுள்ளும் மிகவும் அழகு பெற வியந்து துதித்துள்ளார்.

சிலகாலங்கழித்து அருணந்திசிவம் தமது மாணவர் களுள் சிறந்தவராகிய மறைஞான சம்பந்தருக்கு ஞானோப தேசம் செய்தபின் பரசிவோக பாவனையால் அகண்ட பரி பூரணமான நிலையை எய்தனர். மெய்கண்ட தேவரைச் சிவபெருமானுடனும், இவரை நந்தி தேவருடனும் ஒப்பிட்டுப் போற்றுவர் சைவப் பெருமக்கள்.

**(5) மறைஞான சம்பந்தர்:** இவர் **திருப்பெண்ணாகடத் தில் பராசர முனிவர்** பரம்பரையில் தோன்றியவர். மறைகள் அனைத்தையும் கற்றுத் தெளிந்தமையால் **மறைஞான சம்பந்தர்** எனப் பெயர் பெற்றவர். தில்லைவாழ் அந்தணருள் ஒருவர். இவர் **அருணந்திதேவரிடம்** சென்று 'அடிசேர் ஞானம்' பெற்றவர். இவர் தில்லையில் ஞான பூசை இயற்றி யிருக்கும் நாளில் உமாபதி சிவாச்சாரியாரது பக்குவநிலை

கண்டு, அவருக்குச் **சித்தாந்த ஞானம்** உணர்த்தியவர். பின்னர் தில்லைக்கு வடமேற்கிலுள்ள **திருக்களஞ்சேரியில்** தங்கியிருந்து சிவபெருமானோடு இரண்டறக் கலந்தனர். இவர் ஞானநூல் போதித்தலேயன்றித் தாமாக அத்தகைய நூலொன்றும் இயற்றியதாகத் தெரியவில்லை.

**(6) மனவாசகம் கடந்தார்:** இவர் மெய்கண்டதேவரின் மாணாக்கருள் ஒருவர். இவர் **உண்மை விளக்கம்** என்ற நூலை அருளிச் செய்தவர். இதனைத் தவிர இவரைப் பற்றி வேறு குறிப்பு ஒன்றும் தெரியவில்லை.

**(7) உமாபதி தேவ நாயனார்:** தில்லைப் பதியில் வாழ்ந்த திருவுடை அந்தணர் மரபினில் பிறந்து வளர்ந்து பொன்னம்பலருக்குப் பூசனை புரியும் பேறு பெற்றவர் உமாபதி தேவர். தில்லை மூவாயிரவருள் சிறப்பாக இவர் ஒருவரே சித்தாந்த ஞானத்தை உலகிற்கு விளக்கினவர் ஆவர். தில்லை நாவலந்தீவிற்குச் சுழுமுனை நாடி போன்றது. அதன்பிங்கலநாடி இமயம் நோக்கிச் செல்லும். இடைகலநாடி இலங்கைக்கு நேரே போகும். சுழுமுனை நாடியே நாடிகள் மூன்றினும் சிறந்து, ஐந்தெழுத்தும் நிலைபெறும் ஆதாரங்களை ஒருமைப் படுத்தி நிற்கும் சிறப்பு வாய்ந்தது. ஐந்தொழிலும் இயற்றுவதற்கு ஏதுவாகிய திரு நடனம் செய்யப்பெறும் ஒளி நிலையமாகத் தில்லை விளங்குவதால் அதனை எல்லாத் தலங்களிலும் உயர்ந்ததாகச் சைவ நூல்கள் கூறும். இறைவன் தனது சக்தியையே நிலைக்களமாகக் கொண்டு ஐந்தொழில் நடாத்துதலாலே தில்லை சிவபெருமான் நடஞ்செய்யும் ஞானாகாசமாகத் துதிக்கப்பெறும் இத்தில்லையின்கண் புலிக்கால் முனிவருக்கும் (வியாக்கிரபாதருக்கும்), பதஞ்சலி முனிவருக்கும், தனது துணைவி சிவகாமி அம்மைக்கும் சிவபெருமான் நடனக் காட்சி நல்கி வருவதாக ஐதிகம்.

இத்தகு பெருமை வாய்ந்த தில்லையில் **உமாபதி சிவம்** சிவாகமங்களையெல்லாம் இனிது கற்றுத் தவநெறியொழுகி இறைவனது ஒப்பற்ற திருவருள் பதிதற்குரிய பருவம் வாய்த்திருந்தார். ஒருநாள் அவர் கூத்தப் பெருமானுக்கு வழிபாடு முடித்துத் தமது இல்லத்திற்கு வழக்கமாக அமைந்த விருதுகளோடு சிவிகை மேல் செல்லலாயினர். அங்ஙனம் செல்லுங்கால் வீதியிலே ஒரு தெருத்திண்ணையில் **மறை ஞான சம்பந்தர்** தமது மாணவரோடு வீற்றிருந்தனர். அவர் தமது சீடர்களை நோக்கி "பட்ட கட்டையில் பகல் குருடு ஏகுவது பாரீர்"[5] என்று கூறினார். இச்சொற்களைக் கேட்ட உமா பதிசிவம், சிவிகையினின்று விரைவில் இழிந்து மறைஞான சம்பந்தரின் திருவடியைப் பேரன்போடு தொழுது, அவர் சொன்ன கூற்றுக்குப் பொருள் வினவினார். சம்பந்தரும் விளக்கினார். அதன் பொருள் தெரிந்த பின்பு அவர்தம் திருவடித் தொண்டு பூண்டு உமாபதிசிவம் ஒழுகலாயினர்.

உமாபதிசிவம் சிவஞானப் போதொன்றனையே விரும்பிச் சாதிகுலப் பிறப்பென்னும் தடஞ்சுழியைக் கடந்து நினறார். ஒரு நாள் சீடரின் பக்குவம் அறிதற் பொருட்டு மறை ஞானசம்பந்தர் கைக்கோளர் தெருவிற் சென்று பாவில் செலுத்திய கூழின் மிச்சத்தை விடாய் தணித்தற் பொருட்டு வாங்கி உண்டார். அப்போது அவர்தம் புறங்கையில் ஒழுகிய மிச்சத்தை உமாபதி சிவம் ஏந்திப் பருகினார். உடனே மறைஞான சம்பந்தர் அவருக்கு **ஞானோபதேசம்** செய்து சிவஞான போதப்பொருள் உணர்த்தினர். இவர் இங்ஙனம் மரபு கடந்து ஞானம் பெற்றதன் சிறப்பை உணராது ஏனைத் தில்லை வாழ் அந்தணர்கள் இவரைக் குல முறை பிறழ்ந்தவராகக் கொண்டு

5. பட்ட கட்டை-சிவிகை; பகற்குருடு-பகலில் உபசாரவிருதாக விளக்கெடுத்து சென்றதன் காரணமாக வந்தது. இதனால் உணர்த்தப் பெற்றது நிலையாமை என்பது.

நடேசப் பெருமானுக்குப் பூசை புரியத் தகுதியற்றவர் என்று இகழ்ந்தனர். ஆதலால் அவர் தில்லைக்குக் கீழ்த் திசையி லுள்ள கொற்றவன்குடி[6] என்னும் ஊருக்குச் சென்று அங்கே மடம் ஒன்று அமைத்து அதில் தம் அடியார்கள் சூழச் சிவபெருமானை விதிப்படி வழிபட்டிருந்தார்.

உமாபதி சிவம் பொன்னம்பலவருக்குப் பூசை செய்யும் வாய்ப்பின்றி கொற்றவன்குடி மடத்தில் தளர்வுற்றிருந்தார். ஏனைய தில்லைவாழ் அந்தணர்கள் திருமன்றிற் சென்று அழகிய சிற்றம்பலமுடையாரது பேடகத்தைத் திறந்து பார்க்க வும் அங்கே திருவடிவத்தைக் காணாமையால் அச்சமுற்றுப் பெருங்கவலையுற்றனர். அப்போது யாவரும் கேட்க விசும்பில் ஒலித்த மொழி: "நம்மைப் பூசையாற்றும் தகுதியுடையவன் உமாபதியாதலால் அவன்பால் அமர்ந்தோம்" என்பது. இதனைச் செவிமடுத்த யாவரும் ஒருங்குகூடித் தாயிடம் செல்லும் கன்றுகள் போல உமாபதி சிவத்தின் திருமடத்திற்கு ஓடிச் சென்று, அவரிடம் தங்கள் குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும் என்றும், அவர் தில்லைப் பெருமானைப் பூசை செய்தல் வேண்டும் என்றும் குறையிரந்து நின்றனர். அவரும் அவ்வாறே அம்பலம் சென்று கடவுட் பூசை முடித்துத் தம் திருமடத்திற்கு மீண்டனர்.

உமாபதிசிவம் தமது சீடர் பலருள்ளும் புலையர் (திருக்குலத்தார்) குலத்திலுதித்த '**பெற்றான் சாம்பான்**' என்பார்க்கு முத்தி கொடுத்த வரலாறு மிகவும் அதிசயமானது. பெற்றான் சாம்பான் என்பவர் முற்பிறவியிலேயே பெருந்தவம் ஆற்றியும், சிறிது வழுவினதால் தாழ்குலத்தில் உதித்தனர்.

6. அண்ணாமலைப் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ளது. 'கொற்றவன் குடிக் குடியிருப்பு' என்ற பெயருடன் வழங்கும் இதில் இப்போது பல்கலைக் கழகப், பேராசிரியர்கள் வாழ்கின்றனர்.

அவர் ஆடல் அரசரிடம் அன்புடையராய்த் திருக்கோயிலுக்கு விறகு வெட்டிக் கொண்டு வந்து சேர்ப்பதையே தமது பணிவிடையாகக் கொண்டார். அவருக்குக் கனவில் நடேசப் பெருமான் தோன்றித் தன்பால் பேரன்புடைய உமாபதி சிவத்துக்கும் பணிவிடை செய்யும்படி கட்டளையிட்டார். அவர் அவ்வாறே சென்று உமாபதி திருமடத்திற்கும் விறகு கொடுத்து வந்தார். ஒருநாள் பெருமாரியினால் அவர் கொண்டு வரத் தாமதித்தமையினால் மடத்தில் அமுது சமைக்கக் காலம் தாழ்ந்தது. அப்போது அதற்குக் காரணம் என்னவென்று சுவாமிகள் தமது சீடர்களை வினவ, சாம்பனாரது விறகு வராமையினால் தடையேற்பட்டது என்று அவர்கள் மறுமொழி கூறினர். மறுநாள் அவர் வந்தவுடன் தமக்குத் தெரிவிக்க வேண்டுமென்று உமாபதிசிவம் அவர்கட்குக் கட்டளை யிட்டார்.

மறுநாள் சாம்பனார் மடத்திற்கு விறகு கொண்டு வருவதற்கு முன் கடவுள் ஒரு பெரியவர் வடிவம் போல் அவருக்குத் தோன்றி ஒரு சீட்டு கொடுத்து அதனை உமா பதியாரிடம் அளித்திடுமாறு பணித்தார். மறுநாள் திருமடத்திற்கு இரட்டைப் பங்கு விறகு கொண்டு வந்தவுடன் அங்குள்ள மாணவர்கள் உமாபதி சிவத்திற்கு அவர் வரவை அறிவித்த னர். அப்போது உமாபதி சிவம் அவர் யாரென்று வினவ, அவர் பெரியவர் கொடுத்த சீட்டை அவரிடம் கொடுத்தனர். அந்தத் திருமுகத்தைப் பார்த்துக் கண்களில் ஒற்றிக் கொண்டு உடலெங்கும் புளகாங்கிதம் கொண்டு கூத்தப் பெருமானின் திருவருளை வியந்தனர். அந்தச் சீட்டில் வரைந்திருந்த பாடல்:

அடியாற் கெளியன் சிற்றம்பலவன் கொற்றங்
குடியாற் கெழுதியகைச் சீட்டுப்—படியின்மிசைப்
பெற்றான் சாம்பனுக்குப் பேதமறத் தீக்கை செய்து
முத்தி கொடுக்க முறை.

என்பது. இத்திருப்பாட்டின் கருத்தின்படி பெற்றான் சாம்பனாருக்கு ஞானத் தீட்சை தொடங்கவும், அப்போதே அவர் வீடு பேறு எய்துவதற்குரிய பக்குவமுடையவராக இருந்தமையால் அதற்குத்தக்க முறையாக சுவாமிகள் அருள் செய்தவுடன் அவர் முக்தி அடைந்தார்.

இதன் உண்மை உணராத சாம்பனாரது சுற்றத்தினரும், துணைவியரும் மனங்கலங்கி மன்னரிடம் சென்று அவரைச் சுவாமிகள் தீயால் எரித்து விட்டதாகக் குறை கூறித் துயருழந்தனர். அப்போது அரசன் சுவாமிகள்பால் சென்று அதைப் பற்றி உசாவிய பொழுது சுவாமிகள் தீக்கையின் மேன்மையை எடுத்து விளக்கினார்கள். அரசன், அங்ஙனமாயின் மற்றொரு தீக்கை அவ்வாறு செய்ய வேண்டுமென்று வேண்டிக் கொண்டான். அப்போது சுவாமிகள் தமது அடியார்கள் குழாத்தை நோக்கி அவருள் சத்திநிபாதம் பெற்றவர் இலராகவே சூழ்ந்து பார்த்துச் சிவபெருமான் திருமஞ்சன நீராலே வளர்ந்ததாய்க் கோமுகையின் பக்கத்திலே இருந்த முள்ளிச் செடியைத் தக்கது என்று கண்டார். தமது அருட் பார்வையால் அம்முள்ளிச் செடியை நோக்கியவுடன் அஃது ஒளிமயமாகி ஒரு பிழம்பாக விசும்பில் எழுந்து மறைந்து சிவனோடு கலந்தது. அப்போது அதனைக் கண்ணுற்ற அரசன் எல்லையற்ற வியப்பும் மகிழ்ச்சியுமடைந்து சுவாமிகளுடைய திருவடிகளை வணங்கி அவருக்குப் பொன்னாடை, மலர் மாலை முதலியன சாத்தித் தன் பிழைபொறுக்கும்படி வேண்டிக் கொண்டு தன் அரண்மனைக்கேகினன்.

பின்னர் ஒருநாள் தில்லையில் திருவிழாவிற்குக் கொடியேற்ற அங்குள்ள அந்தணர்கள் முயன்ற போது கொடி

விசும்பில் எழுந்தது. உடனே சுவாமிகளிடம் எல்லோரும் போய் வணங்கிச் செய்தியைத் தெரிவித்தனர். சுவாமிகளும், அப்படியே விரைவில் தில்லைக்கேகி **கொடிக்கவி** என்னும் அழகிய சிறு நூலிலுள்ள முதற்பாட்டைப் பாடியவுடன் கொடி தானாக ஏறிற்று.

சுவாமிகள் '**சிவப்பிரகாசம்**' என்னும் சிவஞான போதச் சார்பு நூலொன்றும், '**உண்மை நெறி விளக்கம்**', '**நெஞ்சு விடுதூது**', '**வினா வெண்பா**', '**திருவருட்பயன்**', '**சங்கற்ப நிராகரணம்**', '**போற்றிப் பஃறொடை**' என்னும் பிற ஏழு நூல்களும் இயற்றியருளினார்கள். **கோவிற்புராணம், சேக்கிழார் புராணம், திருத்தொண்டர் புராண சாரம், திருப்பதிக்கோவை** முதலியனவும் இவரால் இயற்றப் பெற்றனவாகக் கருதுவோரும் உண்டு. வடமொழியில் **பௌடகம்** என்னும் உபாகமத்திற்கு இவர் இயற்றிய விரிவுரை ஒன்று உண்டு. சீடர்கட்கு ஞானநூல் கற்பித்தலும், பதி நூல் இயற்றுதலும், தக்கவர்க்கு முத்திப் பேறு உதவுதலும் ஆகிய பேருபகாரங்களைச் செய்தலையே தமது கடமையாகக் கொண்டிருந்து, பின் **சமாதி** நிலையில் நின்று **சித்திரை அத்த** நாளில் சிவபெருமானோடு இரண்டறக் கலந்தனர்.

# 3. தத்துவங்கள்-1 (பதி)

பல்கலைஆ கமவேதம் யாவையினும் கருத்துப்
பதிபசுபா சம்தெளிதல் பதிபரமே அதுதான்
நிலவும்அரு உருவின்றிக் குணம்குறிக ளின்றி
நின்மலமாய ஏகமாய் நித்த மாகி
அல்கிலுயிர்க் குணர்வாகி அசல மாகி
அகண்டிதமாய் ஆனந்த உருவா யன்றிச்
செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த்
திகழ்வதுதற் சிவமென்பர் தெரிந்து ளோமே[1]

அறிவானுந் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே—அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பார் ஆகாசம்
அப்பொருளுந் தானே அவன்[2]

அம்மையப்ப ரேஉலகுக் கம்மையப்பர் என்றறிக
அம்மையப்பர் அப்பரிசே அந்தளிப்பர்
அம்மையப்பர்
எல்லா உலகுக்கும் அப்புறத்தார், இப்புறத்தும்
அல்லார்போல் நிற்பார் அவர்.[3]

---

1. சிவப்பிரகாசம்-13
2. அற்புதத் திருவந்தாதி-20
3. களிறு-1

# 3. தத்துவங்கள்–1 (பதி)

## (1) சித்தாந்தத்தில் இறைவன்

**சைவ** சித்தாந்தத்தில் 'முடிந்த முடிபாக'க் கொள்ளப் படும் பொருள்கள் **பதி, பசு, பாசம்** என்பவனவாகும். இவை என்றும் உள்ள பொருள்கள். இவற்றை,

பதிபசு பாசம் எனப்பகர் மூன்றின்
பதியினைப் போற்பசு பாசம் அநாதி[4]

என்று தெளிவு படுத்துபவர் **திருமூலர்.** 'பதியாகிய பொருள் (கடவுள்) என்று உண்டோ, அன்றே பசுவாகிய உயிர்கள் உண்டு. அன்றே அவ்வுயிர்களைப் பிணித்துள்ள பாசமும் உண்டு'என்பது சைவசித்தாந்தத்தின் முடிந்த முடிபாகும். இங்குப் பதியைப் பற்றிய சித்தாந்தக் கருத்துகள் விளக்கப் பெறும்.

(1) **பதி உண்டு என்பது,** வைதிக சமயங்கள் யாவும் 'கடவுள் உண்டு' என்ற கொள்கையை உடையன. 'கடவுள்' என்ற தனித் தமிழ்ச் சொல்லின் பொருளிலேயே சைவசித்தாந்தக் கருத்து பெரிதும் அடங்கியுள்ளது என்று அறிஞர் காட்டுவர். பதி உண்மையை சித்தாந்திகள் 'சற்காரிய வாதம்'[5] என்ற

4. திருமந்திரம்-உபதேசம்-3

5. 'காரியங்கள் பலவும், தோற்றத்திற்கு முன்னும் தத்தம் காரணங்களில் உள்ளனவே' -என்பது **சற்காரியவாதம்.** சத்-உள்ளது; சற்காரியம்-உளதாகிய காரியம். 'இல்லது தோன்றும்' என்பவர் 'அசற்காரியவாதிகள்' ஆவர்.

கொள்கையின் அடிப்படையில் மெய்ப்பிப்பர். ஒவ்வொரு காரியத்திற்கும் காரணம் இருந்தேயாக வேண்டும் என்பதை இதற்கு மேலும் ஒரு படி சென்று காரண நிலையிலும் ஒரு காரியம் உண்டு என்பதை மெய்ப்பிக்கலாம். காரியம் எங்கிருந்தோ திடீரென்ற புதிதாகத் தோன்றுவது அல்ல. அஃது உற்பத்திற்கு முன்னரும் உள்ளது. இதுவே '**சற்காரியவாதம்**'. இதனைத் தெளிவாக்கலாம். காணப்பட்ட இதனையே உலகம் இதற்குமுன் ஒடுங்கிய நிலையில்—காணப்படாத நுண்ணிய (சூக்கும்) நிலையில்—இருந்தது. பின்னர் காணப்படும் பரு (தூல) நிலையை அடைந்துள்ளது. இனி, முன் போலவே ஒடுங்கி நுண்ணிலையை அடையும். ஆகவே 'உலகம் என்றும் யாதேனும் ஒரு நிலையில் உள்ளதேயன்றி, இல்லாது ஒழிவதில்லை' என்பது தெளியப்படும்.

**மேலும் விளக்கம்:** காணப்படாத நுண்ணிலையில் இருந்த உலகம் காணப்படும் பருநிலையை அடையும் பொழுதுதான் பயன் உண்டு. ஆதலால் நுண்ணிலையில் உள்ளதாகிய உலகம் பருநிலையில் தோன்ற வேண்டுவது இன்றியமையாததாயிற்று. இங்ஙனமே, நுண்ணிலையில் இருந்த உலகத்தைப் பருநிலைக்குக் கொணர்ந்தவன் இறைவன், ஆதலின் '**இவ்வுலகத்தைப் படைத்தவன் ஒருவன் உளன்**' என்பது பொருந்துவதாகின்றது. இதனால் நாம் தெளியும் பொருள் இது: '**தோற்றம்**' என்பது 'காணப்படாத நுண்ணிலையின் நீங்கிக் காணப்படும் பருநிலையை அடைவது'; '**நிலை**' என்பது 'காணப்படும் நிலையில் இருத்தல்' ஆகும்; '**அழிவு**' என்பது 'காணப்பட்ட பருநிலையின் நீங்கி முன்போல காணப்படாத நுண்ணிலையை அடைதல்' ஆகும். இதனைச் சுருக்கமாக '**இல்லது தோன்றாது; உள்ளது அழியாது**' என்றும் கூறலாம். இதுவே சற்காரியவாதத்தின் சுருக்கம் ஆகும்.

**வேதியியல் உண்மை:** சற்காரியவாதத்தைச் சார்ந்து 'உள்ளது என்றும் அழிவதில்லை' என்பதும் சொல்லப்படும். 'ஒரு மெழுகுவத்தி எரிவதால் இழப்பு ஒன்றும் இல்லை' (Nothing is lost when a candle is burnt) என்ற வேதியியல் உண்மையும் இதனை யொத்ததாகும் என்பதையும் சிந்திக்கலாம். இதனையும் தெளிவாக்கலாம். உள்ளது எக்காலத்திலும் உள்ளதே; அஃது என்றும் இலதாதல் இல்லை. இங்ஙனமே இல்லது எக்காலத்தும் இல்லதே; அஃது என்றும் உளதாதல் இல்லை. ஆகவே '**தோற்றம்**' என்பதும், '**அழிவு**' என்பதும் அவற்றையுடைய பொருள்களின் நிலைமாற்றங்களேயன்றி வேறல்ல என்பது தெளிவு. தோன்றி அழியும்நிலை '**காரிய நிலை**' என்றும் தோற்றத்திற்கு முன்னும் அழிவிற்குப் பின்னும் உள்ள நிலை '**காரண நிலை**' என்றும் வழங்கப் பெறும். இதனால், தோன்றுதல் என்பது காரணநிலையிலிருந்து காரியநிலையை அடைவதாகும்; அழிதலாவது, காரிய நிலையிலிருந்து மீண்டும் காரணநிலையை அடைவதாகும். இதனைக் கருத்தில் இருத்துதல் இன்றியமையாதது.

**எடுத்துக்காட்டு:** இதனை ஓர் எடுத்துக்காட்டால் விளக்கலாம். '**குடம் தோன்றிற்று**' என்பதில் '**மண்**' என்னும் நிலையிலிருந்து '**குடம்**' என்னும் நிலையை அடைந்தது என்பதே பொருள். '**குடம் அழிந்தது**' என்பதில் '**குடம்**' என்னும் நிலையிலிருந்து முன்போல் '**மண்**' என்னும் நிலையை அடைந்தது என்பதுவே பொருளாகும். இவ்வாறு பொருள் நிலையில் வேறுபடினும் இரு நிலைகளிலும் பொருளின் தன்மை மாறாமல் ஒன்று போலவே இருக்கும். அதாவது '**மட்குடம்**' மண்ணின் தன்மையையும் '**பொற்குடம்**' பொன்னின் தன்மையையும் கொண்டிருத்தலால் இதனைத் தெளியலாம். இதனால் **பயன்வேறுபாடு**பற்றிக் காரணப் பொருளையும், காரியப் பொருளையும் '**மண்**'

என்றும், '**குடம்**' என்றும் '**பொன்**' என்றும் '**ஆபரணம்**' என்றும் வேறுவேறு பொருள்போல வழங்கினாலும், பொருள் தன்மையால் அவை ஒன்றேயாதல் ஈண்டுத் தெளியப்படும்.

**இன்னொருவித விளக்கம்:** தோற்றமும் அழிவும் பொருள்களின் நிலைமாற்றங்கள் என்பது எப்படி? முன் சூக்குமமாய்— நுட்பமாய்— விளங்காது உள்ள பொருளே பின் தூலமாய்— பருமையாய்— விளங்கி நிற்கும் என்பதே இதன் விளக்கமாகும் என்பது ஈண்டு அறியப்படும். இரண்டு எடுத்துக்காட்டுகளால் இதனைத் தெளியலாம்.

(அ) **எள்ளைப்** பிழிந்தால் **எண்ணெய்** தோன்றும்; **மணலைப்** பிழிந்தால் எண்ணெய் தோன்றுமா? தோன்றாது. ஏன் தோன்றாது? எள்ளில் எண்ணெய் சூக்குமமாய் உள்ளது; மணலில் எண்ணெய் எவ்வகையிலும் இல்லை. அதனால் எள்ளைப் பிழிந்தால் எண்ணெய் தோன்றுகிறது; மணலை அவ்வாறு செய்தால் எண்ணெய் தோன்றுவதில்லை.

(ஆ) **முயற்குட்டி, பசுங்கன்று, யானைக்கன்று** — இவற்றின் தலையில் தொடக்கத்தில் கொம்பு இல்லை; நாளடைவில் பசுங்கன்றின் தலையில் கொம்பு தோன்றுகின்றது. இது போலவே யானைக் கன்றின் வாயிலிருந்தும் தந்தம் தோன்றுகின்றது. என்? பசுங்கன்றின் தலையில் கொம்பு சூக்குமமாய் உள்ளது. அதனால் அது பின்பு தூலமாய்த் தோன்றுகின்றது. யானைக் கன்றின் வாயிலும் தந்தம் சூக்கும மாய் உள்ளது. அதனால், அது பின்பு தூலமாய்த் தோன்று கின்றது. முயல் குட்டியின் தலையில் கொம்பு எவ்வகையிலும் இல்லை. அதனால் அஃது எக்காலத்திலும் தோன்றுவதில்லை. இவற்றால் இல்லாதது எக்காலத்தும் இல்லாததே என்பது தெளிவு. அதனால் உள்ளதுதான் தோன்றும்; இல்லது தோன் றாது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். ஆகவே

தூலமாய்த் தோன்றும் பொருள்கள் யாவும் அவ்வாறு தோன்றுவதற்கு முன்னர் சூக்குமமாய் உள்ள பொருள்களே என்பது தெளிவாகின்றதல்லவா? இங்ஙனம் கூறும் சற்காரியத்தையே உமாபதி சிவாச்சாரியாரும் '**மருவு சற்காரி யத்தாய்**'[6] என்று தமது சிவப்பிரகாச நூலில் கூறியருளினார் என்பதும் ஈண்டு உளங்கொள்ளத் தக்கது.

**மேலும் விளக்கம்:** 'இல்லாமல் பிறவாது', 'சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும்' என்பன போன்ற முது மொழிகள் பலவும் சற்காரிய வாதத்தையே விளக்குவனவாகக் கொள்வதில் தவறில்லை. இந்த வாதமுறை இல்லையாயின் மண்ணிலிருந்து ஆடையும், நூலிலிருந்து குடமும், நெல்லி லிருந்து கமுகும் தோன்றுகின்ற வரையறை இல்லா தொழியும். நிலத்தை அகழ்ந்தால் நீர் தோன்றுகின்றது; சில இடங்களில் பொன் முதலிய விலையுயர்ந்த பொருள்கள் கிடைக்கின்றன. இவற்றுக்குக் காரணம் அப்பொருள்கள் ஆங்காங்கு இருப்ப தேயாகும் என்பது தெளிவு; அதனால் 'உள்ளதே தோன்றும்' என்னும் சற்காரியவாதம் எளிதில் உடன்படக் கூடியது என்பதும் தெளிவாகின்றதல்லவா! இன்னோர் உண்மையையும் ஈண்டுச் சிந்திக்கலாம். நிலத்தினுள் நீர் முதலியன பருநிலையில் உள்ளனவாதலால் அவற்றது உண்மை எளிதில் புலனாகின்றது. ஆனால் மண் முதலியவற்றில் குடம் முதலியவை நுண்ணிலையில் இருப்பதால் அவற்றது உண்மையை அரிதில் தான் உணர வேண்டும்; சிந்தித்துதான் தெளிதல் வேண்டும்.

**முப்பொருள்கள் விளக்கம்:** மேற்கூறிய விளக்கத்தின் அடிப்படையில் பதி, பசு, பாசங்களை நோக்குவோம். இந்த மூன்று பொருள்களின் தன்மைகளும் மாறுபட்டுக் காணப்

6. சிவப்பிரகாசம்+1

பெறுகின்றன. ஆகவே, இந்த முப்பொருள்களுள் ஒன்றை மற்றொன்றின் காரியம் என்னாது மூன்றும் தனித் தனிப் பொருள்களே என்று கொள்ளுதலே பொருந்துவதாகின்றது என்பது தெளிவு.

இனி (i) '**இல்லது தோன்றாது, உள்ளது அழியாது**' என்ற சற்காரியக் கொள்கையின்படி மாறுபட்ட மூன்று தன்மைகளால் வேறுவேறாகத் தோன்றும் மூன்று பொருள் களையும் யாதொன்றினையும் 'ஒரு காலத்தில் தோன்றிற்று' என்றோ 'ஒரு காலத்தில் அழியும்' என்றோ கூறுதல் கூடாது. ஆகலின் இந்த முப்பொருள்களும் அநாதி நித்தியப் பொருள்களாகக் கொள்ள வேண்டியதன் இன்றியமையாமை தெளிவாக்குகின்றது. இன்னும் (ii) '**மாறுபட்ட பலதன்மை ஒரு பொருளின்கண் இருத்தல் இயலாது**' என்பதும் ஒரு சித்தாந்த உண்மையாகும். அதாவது தட்பமும் வெப்பமும் போன்ற தன்மைகளும் உண்மையும் இன்மையும் போன்ற மாறுபட்ட தன்மைகளும் ஒரு பொருளிடத்தே இருத்தல் இயலாது. இவண் குறிப்பிட்ட இரு முடிவுகளின் அடிப்படை யில் 'பதி, பசு, பாசம்' என்ற முப்பொருள்களும் உள்ளன என்பதும் 'அவை மூன்றம் அநாதி நித்தியப் பொருள்கள்' என்பதும் நிலை பெற்ற உண்மை முடிவுகளாகும் என்பது இனிது தெளியப்படும்.

**படைத்தல், அழித்தல் பற்றி:** இவை பற்றிய விளக்க மும் தேவை. '**உலகம்**' என்பது '**காரணப் பிரபஞ்சம்**', '**காரி யப் பிரபஞ்சம்**' என இருவகைப்படும். காரணப்பிரபஞ்சம் 'மண்' 'பொன்' போல்வது; 'காரியப் பிரபஞ்சம்' 'குடம்' 'அணி' போல்வது. குயவன் மண்ணிலிருந்து குடத்தையும், பொற் கொல்லன் பொன்னிலிருந்து அணியையும் தோற்றுவித்தலன்றி அவர்கள் மண்ணையோ பொன்னையோ தோற்றுவித்தல் இல்லை. ஆகவே, இறைவன் 'படைக்கிறான், அழிக்கிறான்'

என்றால் அவ்வாறு செய்வது 'காரியப் பிரபஞ்சத்தைத்'தான் எனவும், 'காரணப் பிரபஞ்சம்' 'அநாதி நித்தியம்' எனவும் பகுத்துணர்ந்து தெளிவு பெறுதல் வேண்டும். 'காரியப் பிரபஞ்சம்' தோற்ற ஒடுக்கங்களை உடையதாயினும்,'காரணப் பிரபஞ்சத்திற்கு' அவை இல்லாமையால் அஃது **'அநாதி நித்திய மேயாம்'** என்பது தெளிவு.

## (2) உலகத் தோற்றத்திற்குக் கருத்தா ஒருவன் உளன்

'உலகம்' தானே தோன்றிற்று எனக் கொள்ளலாகாது. ஏனெனில், உலகத்தை இல்பொருள்' எனக்கொள்ளாது 'உள்பொருள்' எனக் கொண்டது எதனால்? இல்லது தோன்றாமையை அறிந்த கருதலளவை பற்றியன்றோ?

'உலகம் உள்பொருள்' என்றற்கும், உலகத்திற்குக் கருத்தா ஒருவன் உண்டு என்பதற்கும் முற்றிலும் தொடர்பு உண்டு. 'இல்லது தோன்றாது' என்பது போல், 'உள்ளது, அதனைத் தோற்றுவிக்கின்ற முதல்வன் ஒருவன் இல்லாமல் தோன்றாது' என்பதும் ஒரு பேருண்மையாகும். இவ்வுண்மை காட்சியளவையிலேயே எளிதில் விளங்கும்.

**எடுத்துக்காட்டு விளக்கம்:** குடம், ஆடை, அணிகலன், முதலியன காரியப் பொருள்கள் என்பதை நாம் அறிவோம். இவற்றின் காரணப் பொருள்கள் இன்னவை என்பதும் நமக்குத் தெரியும். அதாவது, குடம் **'மண்'** என்னும் காரணப் பொருளிலிருந்து தோன்றியது; ஆடை **'நூல்'** என்னும் காரணப் பொருளிலிருந்து உண்டானது; அணிகலன், **'பொன், வெள்ளி'** போன்ற உலோகங்களிலிருந்து புதிய உருவம் கொண்டது. இவற்றைச் சற்காரியவாதப்படி நோக்கினால், தோற்றத்திற்கு முன்னும் அவை முறையே மேற்குறிப்பிட்ட காரணப் பொருள்

களில் இருந்தவையேயாகும். ஆயினும், காரணங்களில் நுண்ணிய நிலையில் புலனாகாமல் இருந்த அவை பருநிலையில் **தாமாகவே** தோன்றா. குயவனும், நெசவாளனும் பொற்கொல்லனும் ஆகிய செய்வோர்களால் தோன்றினமை கண்கூடாகும். இனி, குடம் ஆடை அணிகலன் அல்லது பிறகாரியப் பொருள்கள் செய்வோர் இன்றித் தோன்றாமை காட்சியளவையால் நாம் காணும் உண்மையாகும். ஆகவே, 'உள்ளனவாய் நின்று தோன்றும் பொருள்கள் யாவும் செய்வோனைக் காரணமாக உடையன' என்பது வெள்ளிடை விலங்கலாகும். இதனால் சற்காரியமுறைப்படி தோன்றுவதாகிய உலகத்திற்கு அதனைத் தோற்றுவித்தற்குக் கருத்தா ஒருவன் இன்றியமையாதவன் என்பது வலியுறுதல் தெளிவாகின்றது.

**இன்னொரு விளக்கம்:** ஒருகாரியத்திற்கு 'முதற்காரணம், துணைக்காரணம், நிமித்த காரணம்' என்னும் மூன்று காரணங்கள் இன்றியமையாதவை என்பதை நாம் அறிவோம். (எ–டு) குடமாகிய காரியத்திற்கு **மண்** முதற்காரணம்; **தண்ட சக்கரம்** துணைக் காரணம்; **குயவன்** நிமித்த காரணம். அதுபோல உலகமாகிய காரியத்திற்கு **மாயை** முதற்காரணம்; **கடவுளது ஆற்றல்** துணைக்காரணம்; **கடவுள்** நிமித்த காரணம். இவற்றால்,

(i) **காரியம் பொருள்கட்குக் கருத்தா இன்றியமையாமை என்பது தெளிவு.**

**இன்னோர் உண்மை** சற்காரிய வாதம் அறிவும் அறிவில்லாததும் வேறு வேறு என்று வகைப்படுத்திக் காட்டுகின்றது. உள்ளது தோன்றுமேயன்றி இல்லது தோன்றாமையின், 'அறிவில்லாத பொருளில் அறிவு என்றும் தோன்றுவதில்லை' என்றும் தெரிவிக்கின்றது. மேலும் 'அறிவில்லாத பொருள் தானாகவும் செயல்படுவதில்லை' என்பதும் அறியத்

தக்கது. எனவே, உலகம் செயற்படுவதென்றால், அஃது அறிவுடைய ஒரு கருத்தாவினாலேயே நடைபெறும் என்பதையும் உளங்கொள்ள வேண்டும். உலகம் மிகப் பெரிய பொருளாகலின் அதனை இயக்கும் கருத்தா எல்லையற்ற பேரறிவும் பேராற்றலும் உடையவனாக இருத்தல் வேண்டும்.

காந்தம் இரும்பை ஈர்ப்பதையும், நஞ்சு பற்றின் இடமேயன்றி பல இடங்களில் அது பரவுவதையும் எடுத்துக் காட்டி அறிவில்லாத பொருள்களும் செயற்படும் என்றும் கூறுவர் சிலர். இது தவறு; பெருந்தவறு; பொருத்தமற்ற எடுத்துக்காட்டுகள். காந்தம் இரும்பை ஈர்ப்பது அவ்விரண்டையும் ஒருவன் நேர்முகமாகக் கொணரும்பொழுதுதான்; நஞ்சு பரவுவதும் உயிருள்ள உடம்பில்தான். இதனால் அறிவுடைய பொருள்களன்றி அறிவில்லாத பொருள்கள் செயற்படா என்பது தெளியப்படும். ஆகவே,

(ii) **பேரறிவுப் பொருளாகிய இறைவனே உலகத் தோற்றத்திற்கு இன்றியமையாது வேண்டப்படும் கருத்தா ஆவன் என்பது தெளிவு.**

பிரிதோர் உண்மையையும் ஈண்டுக் கருதலாம்:

(iii) **உலகம் முத்தொழில்களையுடையது** என்பதுவே அது. அஃதாவது **தோன்றல், நிற்றல், அழிதல்** என்ற மூன்று நிலைகளையுடையது. இதனை விளக்க மெய் **கண்டார்** மூன்று ஏதுக்களைக் கூறுவார். அவை:

(அ) **அவயவப் பகுப்பு:** இது பிரிக்கப்படும் தன்மையாகும். குடம் உடைக்கப்படும்; ஆடை கிழிக்கப்படும். அதனால் அவை அவையவப்பகுப்புடையவை என்பது தெளிவு. அவை போலவே, உலகமும் 'நிலம், நீர்' என்பன முதலாகப் பிரிக்கப்படும்; நிலமும் தோண்டப்படும்; நீரும்

முகக்கப்படும். பிறவும் பிரிக்கப்படுவனவாகும். '**எல்லாப் பொருள்களும் அணுக்களாகப் பிரிக்கப்படும்**' என்பது ஓர் அறிவியல் உண்மை. இதனால் 'உலகம் அவயவப் பகுப்புடையது' என்பது தெளிவாகிறது. இவ்வாறு பிரிக்கப்படும் தன்மை ஆக்க அழிவுகட்குக் காரணமாதலை அனைவரும் அறிவர்.

(ஆ) **சடமாயும் பலவாயும் இருத்தல்:** சடம்—அறிவில்லாதது. அறிவில்லாத பொருள் ஒன்றாய்ப் பலவாய் இருப்பின் அவை தோன்றி அழிவனவாகும். இதனை மண், பொன், வெள்ளி முதலிய உலோகங்களால் ஆக்கப்படும் பொருள்களும் பிற ஆக்கப்படும் பொருள்களும் ஒன்றாய் இல்லாது பலவாய் இருத்தலை அறியலாம்.

(இ) **சுட்டியுணர்தல்:** கண் முதலிய பொருள்களுக்கு உட்படுமாறு, 'இஃது இன்ன தன்மையுடையது' என்று வரையறுத்து உணர்வதாகும். இவ்வாறு கருவி கரணங்களால் அளந்தறியப்படும் பொருள்களனைத்தும் தோன்றி அழியக் கூடியன என்பது தெளிவு.

இம்மூன்று கருத்துகளையே மெய்கண்டார் '**அவன், அவள் அது எனும் அவை**'[7] என்றும், வார்த்திகத்தில் "**ஒருவன் ஒருத்தி ஒன்று என்று சுட்டப்பட்ட பிரபஞ்சம்**"[8] என்றும் கூறியிருப்பது நோக்கத்தக்கது.

இவற்றால் '**உலகம் முத்தொழில்களை உடைமையால் உள்பொருளே**' என்பதும், உளதாய்த் தொழிற்படுத்தும் '**உலகத்தை அவ்வாறு தொழிற்படுத்தும் கருத்தா ஒருவன் உளன்**' என்பதும் ஐயமின்றிப் பெறப்பட்டதை ஓர்ந்து அறியலாம்.

---

7. சி.ஞா.போ.சூத்-1

8. மேலது முதலதிகரணம்.வார்த்திகம்-3(i)

உலகத்தைச் செயற்படுத்துவதில் பல கடவுளர் (நான்முகன், திருமால், உருத்திரன்) இருப்பினும், அவர்கள் அனைவரும் ஒருவன் வழி நின்று அவன் திருவுளத்தின்படி தத்தம் தொழில்களைப் புரிவர். எல்லோரும் முதற்கடவுள் ஆகார். ஆகவே,

(iv) **உலகிற்கு முதல்வன் ஒருவனேயற்றிப் பலர் இல்லை என்பது தெளிவு.**

## (3) சங்காரகாரகனே முதற்கடவுள்

(அ) வேதத்தில் பல கடவுளர் சொல்லப்பெறினும் முடிவு கூறுமிடத்தில் **'கடவுள் ஒருவனே'** என்று கூறுவதைக் காணலாம்.

(ஆ) (i) ஒவ்வொரு தொழிலையன்றி எல்லாத் தொழில்களையும் செய்யவல்லவனாய் எல்லா முதன்மையும் உடையவனே முதற்கடவுள்; அவ்வாறில்லாமல் ஒவ்வொரு தொழிலை மட்டிலும் செய்யவல்லவராய், அத்தொழிலில் முதன்மை பெற்று, அவ்வத் தொழில்கட்கு மட்டிலும் உரியவராயிருப்பவர்கள் முதற்கடவுளின் அருள்வழி நிற்கும் தொழில் கடவுளர் ஆவார்.

(ii)படைத்தற் கடவுளும் காத்தற் கடவுளும் தாம் தாம் ஏனைய இருவரையும் படைத்தலும் காத்தலும் செய்வர் எனக் கூறின் பொருந்துவதாகும். ஆயினும் ஏனைய இருவரையும் அழிப்பர் எனக் கூறின் அது பொருந்தாத கூற்றாகும். ஏனெனில், படைப்பவனுக்கும் காப்பவனுக்கும் அழிப்பது தொழிலோடு எவ்வாற்றானும் இல்லை. இனி, அழித்தல் கடவுளுக்கு அவ்வாறின்றி, 'அழிப்புக் காலத்தில் எல்லாப் பொருள்களோடுங் கூட, ஏனைய இருவரையும் கூட அழிப்பன்' என்றே கூறுதல் வேண்டும். ஏனெனில், அழிப்பின்

இன்றியமையாமை கருதி எல்லோரையும் அழிக்கும் பொழுது 'ஒருவர் இருவரை அழியாது நிறுத்தி வைப்பன்' என்றற்கு ஒரு காரணமும் இல்லையன்றோ? எனவே, அழிய வேண்டிய காலத்தில் அழித்து. அழிந்த உலகம் மீளத்தோன்ற வேண்டிய காலத்தில் தோன்றுமாறு அனைத்தையும் தோற்றுவிப்பவன் அழித்தற் கடவுளேயன்றிப் பிறர் இல்லை என்பது அறியப் படும். இதனையே மெய்கண்ட தேவநாயனார் **"ஒடுங்கிய சங்காரத்தின் அல்லது உற்பத்தி இன்மையின்"**[9] என்று உரைத் தருளினமையையும் நோக்கலாம்.

**மேலும் விளக்கம்:** சற்காரியவாதத்தை விளக்கும் போது **'அழித்தல்'** என்பது தூல நிலையில் உள்ளவற்றைச் சூக்கும நிலையில் படுத்து ஒடுக்குதலாகும்; " 'படைத்தல்' என்பது சூக்குமநிலையில் உள்ளவற்றைத் தூலநிலைக்குக் கொணர்தலாகும்; 'காத்தல்' என்பது அங்ஙனம் கால நிலைக் குக் கொணர்ந்தவற்றை அந்நிலையிலேயே நிறுத்துதலாகும்" என்று விளக்கியதை ஈண்டு நினைவு கூரலாம். மெய்கண்ட தேவரும் சங்காரகத்தை **'ஒடுங்கின சங்காரம்'**[10] என்று குறித்தது இது பற்றியேயாகும் என்பதையும் தெளியலாம். 'சூக்குமநிலை' என்பது காரணமும், முன்னே உள்ளதும், பெரியதும், நிலைபேறுடையதுமாகும்; 'தூலநிலை' என்பது காரியமும், பின்னே தோன்றுவதும், சிறியதும், நிலையில்லாதது மாகும். இந்நிலையில் 'அழித்தல்' சூக்குமத் தொழிலாதலின் அத்தொழிற்குத் தலைவன் காரணமும், முன்னே உள்ளவனும், பெரியோனும், நிலை பேறுடையவனுமாவன்; தூலத்தொழிற்குத் தலைவர் காரியரும், பின்னே தோன்றுவோரும் சிறியோரும் நிலையில்லாதவரும் ஆவர் என்பது நுண்ணுணர்வினோருக் குப் புலனாகாமற் போகாது. ஆகவே காரணனாகிய அழித்தற்

9. சி.ஞா.போ. சூத். 1. அதிகர-2. வார்த்தி.4.
10. மேலது

கடவுள் தொழிற்படுத்தும் தலைவனும் காரியராகிய ஏனையோர் அவனால் தொழிற்படுத்தப் பெற்று அவன் ஏவல் வழி நிற்போரும் ஆதல் வெள்ளிடை விலங்கலெனத் தெள்ளிதிற் புலனாகின்றதன்றோ? இவற்றையெல்லாம் கருதியே **மெய் கண்ட தேவர் "சங்காரகாரணனாயுள்ள முதலையே முத லாக உடைத்து இவ்வுலகம்"**[11] என்று கூறினார். இக்காரணங் களால் முதற்கடவுளைச் சங்காரத் தொழில் புரிபவனாகவும், முதுகாட்டில் உறைதல், சுடலைப் பொடிபூசல், என்பு மாலை யையும் அணிதல் முதலிய கோலங்களையும் **'உருத்திரன்'**[12] என்ற திருப்பெயரையும் உடையவனாகக் கூறுதல் ஆன்றோர் வழக்காயிற்று என்பது உணரப்படும். மூலபல வதைப் படலத் தில் அனைவரையும் கொன்றொழித்து இராமன் தனியே போர்க்களத்தில் நின்ற காட்சியைக் கம்பன்,

தீமொய்த்த அனைய செங்கண்
அரக்கரை முழுதும் சிந்திப்
பூமொய்த்த கரத்த ராகி
விண்ணவர் போற்ற நின்றான்
பேய்மொய்த்து நரிகள் ஈண்டிப்
பெரும்பிணம் பிறங்கித் தோன்றும்
ஈமத்துள் தமியன் நின்ற
கறைமிடற்று இறைவன் ஒத்தான்[13]

என்ற பாடலால் காட்டுவான். இராமனை 'ஈமத்துள் தமியன் நின்ற கறைமிடற்று இறைவனுடன்' ஒப்புமைப் படுத்திக் காட்டியுள்ளதைக் காண்கின்றோம்.

'அழித்தற் கடவுளே முதற்கடவுள்' என்ற உண்மையை உணர்ந்த பின்னர், அவனை ஒரு தொழிற்கு மட்டிலும்

11. சி.ஞா.போ. சூத்.1. வார்த்தி.1.
12. உருத்திரன்- 'துக்கத்தை நீக்குவோன்' என்பது பொருள்
13. கம்பரா. யுத்த. மூலபல வதை-231

உரியவன் என நினையாது முத்தொழிற்கும் முதல்வனாக உணர்தல் வேண்டும். ஆகவே '**சங்கார காரணன்**' என்ற திருப்பெயர் உருத்திரனைக் குறியாது மூவரினும் மேம்பட்டவனான சிவபெருமானையே குறிப்பதாகும் என்பது உணரப் படும். இக்கருத்தினை **மெய்கண்டாரும்,**

> நோக்காது நோக்கி நொடித்தன்றே காலத்தில்
> தாக்காது நின்றுளத்தில் கண்டிறைவன்—ஆக்காதே
> கண்ட நனவுணர்விற் கண்ட கனவுரைக்
> கண்டவரில் இற்றிட்டாய் கட்டு.[14]
>
> (நொடித்தல்—அழித்தல்)

என்ற வெண்பாவில் விளங்கக் கூறியிருத்தலால் தெளியலாம்.

## (4) பதியின் இருநிலைகள்

பதியின் சிறப்பியல்பை '**சொரூப இலக்கணம்**' என்றும் பொது இயல்பை '**தடத்த இலக்கணம்**' என்றும் சித்தாந்தம் பேசும்[15] முப்பொருள்களில் பதி ஏனையவற்றைவிடப் பேராற்றல் வாய்ந்தது; சுதந்திரம் உடையது; எந்தப் பொருளின் சார்பினாலும் மாறுபடாமல், என்றும் ஒரே பெற்றியதாய் இருப்பது. இதுபற்றியே பதியை வடமொழியில் '**சித்**' என்றும் அருந்தமிழில் '**மெய்ப்பொருள்**', '**செம்பொருள்**' என்றும் வழங்குவர். 'சத்' என்பதை '**உள்ளது**' என்று மொழி பெயர்த்துப் பேசுவர் சித்தாந்திகள். 'உள்ளது' என்பதை 'என்றும் ஒரு பெற்றியதாய் உள்ளது' என்று கொள்ளல் வேண்டும். ஆகவே, பிறிதொரு பொருளின் சார்பினால் மாறுபடாத தன்னையே தான் நோக்கி நிற்கும் நிலையில் காணப்பெறும் இயல்புகளே

14. சி.ஞா. போ. சூத்1. அதிகர. 2. உதாரணம் 4 வெண்பா.
15. சொரூபம் - தன் இயல்பு; தடத்தம் - அயலிலுள்ள பொருட்கண் இருப்பது.

பதியின் சொரூப இலக்கணமாகும். பதி உலகத்தை நோக்கி நிற்கும் நிலையில் காணப்பெறும் இயல்புகள் தடத்த இலக்கண மாகும். உயிர்களும் '**உலகம்**' என்பதனுள் அடங்கும்.

**பதியின் சொரூப இலக்கணம்:** இது குணம் குறி களைக் கடந்த நிலை. பதி ஒன்றே; அதாவது அஃது ஏகமாய் இருக்கும். எல்லாவற்றிற்கும் மேலானது; அது காணப்படும் உருவமற்றது; காலம் இடம் இவற்றால் அளவுபடுத்தப் பெறா தது; குணங்களும் இல்லை; மலமற்றது; என்றும் அழியாதிருப் பது; ஆன்மாக்களுக்கு அறிவாய் நிற்பது; சலிப்பற்றது; அளவு படாததால் போக்குவரவாகிய அசைவு இல்லாதது. காட்சிக்கும் கருத்துக்கும் அப்பாற் பட்டது.[16]

குணம்இ லான்குணம் குறிஇலான்
குறைவிலான் கொடிதாம்
புலம்இ லான்தனக் கென்னஓர்
பற்றிலான் பொருந்தும்
இனம்இ லான்மைந்தர் மனைவிஇல்
லான்எவன்? அவன்சஞ்
சலாம்இ லான்,முத்தி தரும்பர
சிவன்எனத் தகுமே[17]

என்று **தாயுமான அடிகள்** 'சிவன் எனத் தகுவோன்' எனக் கூறும் பாடல்களில் பதியின் சொரூப இலக்கணம் அமைந் திருப்பதாகக் கருதலாம்.

சைவாகமங்கள் அளவை முறையில் எடுத்துக் காட்டும் சிறப்பியல்புகள் **எண்குணங்களாகும்**. அவை: தன்வயம், தூய உடம்பு, இயற்கை உணர்வு, முற்றுணர்வு, இயல்பாகவே

16. வைதிக சமயங்கள் பதிக்குக் கூறும் '**சத்து சித்து ஆனந்தம்**' என்ற இயல்புகள் ஒருவகையில் பொது இயல்புகள் ஆகின்றன.

17. தா.பா. ஆசைபெறும் - 30.

பாசநீக்கம், முடிவில் ஆற்றல், பேரருள் உடைமை, வரம்பிலின்பம் உடைமை[18] இவையே வடமொழியில் சுதந்திரம், விசுத்த தேகம் அனாதி போதம் சர்வஞ்ஞதை, நிராமயம், அனந்த சத்தி, அலுத்த சக்தி, திருப்தி என்று நுவலப்பெறும். இக்கூறிய எட்டில் தூயஉடம்பு, பாசங்களின் நீக்கம் இவையின்றியாயினும் இயற்கை உணர்வை முற்றும் உணர்தலாலும், துய உடம்பைப் பாசங்களின் நீங்குதலிலும் அடக்கியாயினும் **ஆறாகக்** கூறும் மரபும் உண்டு. இன்ன சிறப்பியல்புகள் சொல்லப்படும் இடத்தில் சிவம் '**பரசிவம்**' என்று வழங்கப்பெறும். தாயுமான அடிகளின் '**பரசிவ வணக்கம்**' முதற்பாடலில்[19] 'சிவத்தின் சொரூப இயல்பு' நுவலப் பெற்றிருப்பதைக் கண்டு தெளியலாம்.

**பதியின் தடத்த இலக்கணம்:** இது குணம் குறிகளோடு கூடிய நிலை. தன்னையே நோக்கி நிற்கும் 'பரசிவம்' அந்நிலையினின்றும் நீங்கி உலகத்தை நோக்குங்கால் தனது சிறப்பியல்புகளில் ஒன்றாகிய பெருங்கருணை காரணமாக உயிர்களின் பொருட்டுத் தானே தனது விருப்பத்தால் தனது ஆற்றலை (சக்தியை)க் கொண்டு பல்வேறு நிலைகளை உடையதாக இருக்கும். இந்த நிலைகளே பதியின் தடத்த நிலைகளாகும். இவை யாவும் பதியின் அனந்த சக்தியாகிய அளவில்லாத ஆற்றலால் வருவனவாதலின், பதியின் தடத்த நிலைகள் யாவும் அதன் சக்தியினால் ஆவனவாகும். இதனால் சொரூபநிலையில் பதி '**சிவம்**' என்றும், தடத்த நிலையில் '**சக்தி**' என்றும் பேசப்படும். சொரூப நிலையில் சக்தி செயற் படாது அடங்கியிருத்தலால் பதி 'சிவம்' என ஒன்றேயாக இருக்கும். சக்தி செயற்படும் தடத்த நிலையில் சிவம்

18. குறள் - 9இல் 'எண்குணத்தான்' என்பதற்கு இவற்றையே காட்டுவர் பரிமேலழகர்.
19. 'அங்கிங்கெனாதபடி' - (1)

அதனோடு அச்செயலையெல்லாம் உடன் இயைந்து இயற்றி நிற்றலால் சிவமும் சக்தியும்' இரண்டாய்— அம்மை அப்பனாய் —மாதொருபாகனாய் —இரண்டாய்த் தோற்றம் அளிக்கும். இந்நிலையை **ஆளுடைய பிள்ளையார்.**

ஓர்உரு ஆயினை; மானாங் காரத்து
ஈர் இயல்பாய்[20]

என்று தமது திருஎழுகூற்றிருக்கையில் அருளிச் செய்திருத் தலை ஈண்டுக் கருதலாம். அடுத்து,

**பெண்ணுரு ஒருதிறன் ஆகின்று, அவ்வுருத்**
**தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்[21]**

என்று புறநானூற்றுக் கடவுள் வாழ்த்துப் பகுதியும் இத்தடத்த நிலையையே குறிக்கிறது என்பதையும் எண்ணலாம்.

தடத்த நிலையில் பதி சக்தியினால் பல நிலைகளை யுடையது. இந்த நிலையில் அதற்கு உருவம் உண்டு; தொழில் உண்டு; அவற்றிற்கு ஏற்ற பலப்பல பெயர்களும் உண்டு. ஆயினும், இவையனைத்தும் இறைவனின் அருள் காரணமாக உண்மையாற் கொண்டனவேயாகும். சொரூப இலக்கணம் எப்படி உண்மையோ அப்படியே தடத்த இலக்கணமும் உண்மையாகும்.

தடத்த நிலையில் சிலவற்றை ஈண்டு விளக்குதல் பொருத்தமுடையதாகும். சொரூப நிலையில் பதி **'பரசிவம்'** என நிற்குங்கால் அதன் சக்தி **பராசக்தி** என வழங்கப்பெறும். அஃது உயிர்களின் அறிவை விளக்கி நிற்கும் அறிவு வடிவமானது. அந்த அறிவே சக்தியின் சொரூபம், பாரதி யாரின் சக்தி வழிபாடெல்லாம் இந்த சக்தியை நோக்கியே யாகும் என்று கருதலாம்.

20. சம். தேவா 1.128; அடி 1-2.
21. புறம் - 1

தன்னை மறந்து சகல உலகினையும்
மன்ன நிதங்காக்கும் மகாசக்தி—அன்னை
அவளே துணையென்று அனவரதம் நெஞ்சம்
துவளா திருத்தல் சுகம்.

எண்ணிற் கடங்காமல் எங்கும் பரந்தனவாய்
விண்ணிற் சுடர்கின்ற மீனையெல்லாம்—பண்ணியதோர்
சக்தியே நம்மைச் சமைத்தது காண் நூறாண்டு
பக்தியுடன் வாழும் படிக்கு.[22]

என்ற பாடல்களை நோக்கி இதனை அறியலாம். மற்றும்,

சித்தத்தி லேநின்று சேர்வ துணரும்
  சிவசக்தி தன்புகழ் செப்பு கின்றோம்,
இத்தரை மீதினில் இன்பங்கள் யாவும்
  எமக்குத் தெரிந்திடல் வேண்டு மென்றே[23]

என்ற தாழிசையிலும் இதனைக் கண்டு தெளியலாம்.

பதி உலகத்தை நோக்குங்கால் மேற்குறிப்பிட்ட பராசக்தியில் ஒரு சிறுகூறு உலகத்தைத் தொழிற்பட முற்படும்; அதனை '**ஆதிசக்தி**' என வழங்குவர். இது, சிவம் தோன்றாது உலகமே தோன்றுமாறு பிறப்பு இறப்புகளில் செலுத்தி நிற்றலால் '**திரோதான சக்தி**' என்ற திருப்பெயரையும் உடையது. திரோதானம் – மறைப்பது. இந்தச் சக்தியையே பாரதியார்,

பரிதியென்னும், பொருளிடை யேய்ந்தனை;
  பரவும் வெய்ய கதிரெனக் காய்ந்தனை;
கரிய மேகத் திரளெனச் செல்லுவை.
  காலு மின்னென வந்துயிர் கொல்லுவை;
சொரியும் நீரெனப் பல்லுயிர் போற்றுவை;
  சூழும் வெள்ள மெனவுயிர் மாற்றுவை;

22. தோ.பா. மகாசக்தி வெண்பா - 1, 4
23. மேலது வையமுழுதும் - 5

விரியும் நீள்கட லென்ன நிறைந்தனை
வெல்க காளி யெனதம்மை வெல்கவே[24]

என்ற பாடலால் விளக்குவர். அடுத்து வரும் பாடல்களெல் லாம் இந்தச் சக்தியையே குறித்தனவாகும் என்று கருதலாம்.

**சக்தி வகைகள்:** திரோதான சக்தி உலகத்தைத் தொழிற்படுத்த வேண்டும் என இச்சித்தலால் அஃது '**இச்சா சக்தி**' எனப்பெயர் பெறுகின்றது. அதற்குரிய வழிகளை அறிதலால் '**ஞானசக்தி**' என்ற திருநாமத்தையும் ஏற்கின்றது. அவ்வழியே தொழிற்படுத்த நிற்றலால் '**கிரியா சக்தி**' என்ற திருப்பெயரையும் கொள்கின்றது. எனவே, '**பராசக்தி, ஆதி சக்தி, இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி**' என்று இவை '**பஞ்ச சக்திகள்**' என்று தொகை நிலை பெற்றுத் திகழ்வதை யும் தெரிந்து கொள்ளலாம்.

இச்சா சக்தி எப்பொழுதும் செயற்பாட்டுக்குத் துணை யாய் நிற்கும். மற்றைய இரண்டும் ஒவ்வொன்றும் தனித்தனி யாகவும், இணைந்தும், ஏறியும், குறைந்தும் செயற்படும். இதனால் தடத்த நிலைகள் பெரும்பான்மையாக **ஐந்து** வகைப்பட்டு நிற்கும். ஞானசக்தி மாத்திரம் தொழிற்படும் நிலையில் பதி '**சிவம்**' என நிற்கும்; கிரியா சக்தி மாத்திரம் தொழிற்படும் நிலையில் பதி '**சக்தி**' என நிற்கும்; இரண்டும ஒப்பத் தொழிற்படும் நிலையில் பதி '**சதாசிவம்**' என நிற்கும். ஞான சக்தி குறைந்து நிற்க, கிரியா சக்தி மிக்குத் தொழிற்படும் நிலையில் பதி '**மகேசுவரன்**' என நிற்கும். கிரியா சக்தி குறைந்து நிற்க, ஞானசக்தி மிக்குத் தொழிற்படும் நிலையில் பதி '**வித்தை**' என நிற்கும்.

இக்கூறியவற்றால் சொரூப நிலையில் இறைவன் தனக்கென்று ஓர் உருவும், தொழிலும் பெயரும் இல்லாத

24. மேலது. மகாசக்தி வாழ்த்து - 3

வனாயினும், தடத்த நிலையில் உயிர்களின் பொருட்டுப் பலப்பல உருவும் தொழிலும் பெயரும் உடையவனாகின்றான் என்பதை அறிய முடிகின்றது. இதனை அநுபூதிநிலையில் தெளிந்த **மணிவாசகப் பெருமான்,**

ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமிலார்க் காயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ?[25]

என்று அருளிச் செய்து உள்ளதை ஈண்டு நினைத்தல் தகும். இவை தடத்த நிலையே யன்றி கற்பனை யன்று என்பது தெளியப்படும்.

## (5) படைத்தல் காத்தல் அழித்தல்—விளக்கம்

இறைவன் இந்த முத்தொழில்களைச் செய்வது எதன் பொருட்டு, என்பதைக் காண்போம்.

**கம்பன்** போன்ற கவிஞர்கள் இறைவன் இவ்வாறு செய்வதை **'அலகிலா விளையாட்டு'**[26] என்கின்றனர். **மணி வாசகப் பெருமானின்,**

காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி[27]

(விளையாடி—விளையாடுபவனே)

என்ற அருள் மொழியாலும் இதனை அறியலாம். இஃது இறை வனுடைய வரம்பிலாற்றலுடைமையால் நிறைவேறுகின்றது. உயிர்கள் இம்மை மறுமை, வீடு, என்னும் நலன்களைப் பெறுதலே முதல்வனது தொழிலின் பயனாகும் என்பது ஈண்டு உளங் கொள்ளத் தக்கது. இஃது இறைவனுடைய வரம்பிலாற்ற

25. திருவாச. திருத்தெள்ளேணம் - 1
26. கம்பரா. காப்பு - 1
27. திருவா. திருவெம். 12 அடி - 4. ஐந்தொழில் ஆற்றுதல் இறைவனுக்கு விளையாட்டு போன்றது.

லுடைமையால் நிறைவேறுகின்றது. உயிர்கள் இம்மை மறுமை, வீடு என்றும் நலன்களைப் பெறுதலே முதல்வனது தொழிலின் பயனாகும் என்பது ஈண்டு உளங்கொள்ளத் தக்கது.

> ஐயாநீ யாட்கொண் டருளும் விளையாட்டில்
> உற்றவர்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்[28]

என்ற **வாதவூரடிகளின்** திருமொழி இதற்குச் சான்றாகும். இதனால் கைம்மாறு கருதாத கருணையே முதல்வன் தொழில் செய்வதற்குக் காரணம் என்பது தெளிவு. '**கருணாநிதி**', '**கருணாகரன்**'—என்பனபோன்ற' திருப்பெயர்களைக் கருதலாம்.

**படைத்தல்:** உலகம் சடம்; அறிவில்லாதது. உயிர், சித்து, அறிவுடையது. உலகில் நேரிடும் நன்மை தீமைகள் அறிவுடைய பொருளுக்கன்றி அறிவில்லாத பொருளுக்கில்லை. ஆகவே, அறிவில்லாத உலகினை அறிவுடைய ஆருயிர்கட்குத் துணையாகும் வகையில் அமைத்து இரண்டினையும் ஒன்றுபடப் பிணைத்து வைப்பதே '**படைத்தல்**' என்ற தொழிலாகும்.

'உயிர்கட்குத் துணையாகும் வகை' என்பது, அவை விரும்பும் விருப்பம். இவ்விருப்பம் எண்ணிறந்தவையாயினும் அவை 'இம்மை, மறுமை, வீடு' என்ற மூன்றில் அடங்கும். சில உயிர்கள் இம்மையிலேயே மூழ்கிக் கிடக்கும்; சில மறுமையில் நாட்டம் கொள்ளும்; சில வீட்டின்பத்தில் அவாவுடையனவாயிருக்கும். இவற்றையெல்லாம் உயிர்கள் உடம்பின்றி அடைதல் இயலாது. ஆகவே உயிர்களின் விருப்பத்திற்கேற்ப, உடம்பு முதலியவற்றை உயிருக்கு அமைத்துக் கொடுத்தலே 'படைப்பு' என்பதாகின்றது என்பது தெளிவு. **அப்பர் அடிகளும்**

28. திருவா. திருவெம். 11 அடி - 1 தொழில் ஆற்றுதல் இறைவனுக்கு விளையாட்டு போன்றது.

வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்[29]

என்று அருளிச் செய்துள்ளமையையும் காணலாம். '**உலகம்**' காரியப்பொருள் என்பதையும் அதற்கு '**மாயை**' காரணம் என்பதையும் நாம் நன்கு அறிவோம். மாயையினின்று உலகைத் தோற்றுவித்து உயிர்கட்குக் கூட்டுவிப்பதே '**படைத்தல்**' ஆகும் என்பதைத் தெளியலாம்.

மாயையாகிய சடப்பொருளிலிருந்து தோற்றவிக்கப் பெறும் உலகம் '**தனு, கரணம், புவனம், போகம்**' என நான்கு வகைப்படும். தனு என்பது உடம்பு; கரணம் என்பது மனம் முதலிய உட்கருவிகள் (அந்தக் கரணங்கள்); புவனம் என்பது உலாவும் இடம்; போகம் என்பது நுகர்ச்சிப் பொருள். இறைவன் உயிர்களை ஒரே வகையாகப் படைக்காமல் பலவகையான வேற்றுமைகள் அமையப் படைத்தற்குக் காரணம் அவ்வவற்றின் வினைகளே என்று சமயவாதிகள் முழங்குவதை நாம் அறிவோம். இந்த வினையே மேலே குறிப்பிட்ட விருப்பமாகும். விருப்பத்திற்கு ஏற்பப் படைத்த லால் வினை நீங்குவதற்குரிய வழியை அடைவிப்பது **படைத் தலின் பயனாகின்றது.**

**காத்தல்:** இறைவன் அருளிய தனு கரண புவன போகங்களை அழியாமல் நிறுத்திப் பயன்படச் செய்வதே '**காத்தல்**' ஆகும். ஆகவே, உயிர்கள் தம் விருப்பத்தை நிறைவேற்றுவதற்குரிய வழியில் நின்று அதனை அங்ஙனமே நிறைவித்துக் கொள்ளத் துணைபுரிவதே '**காத்தல்**' என்பது தெளிவாகின்றது. வினை நீக்கத்திற்கு உரித்தாகிய வழியில் நின்று வினை நீக்கப் பெறுதலே **காத்தலின் பயனாகின்றது.**

**அழித்தல்:** இக்கூறியவாறு இம்மை மறுமை உலகங்க ளில் இன்பங்களை நுகர்வதற்குரிய உடம்புகளை எடுத்துப்

29. அப். தேவா. 6.23:1

பிறந்து, பின் இறந்து உழலும் நிலையினின்றும் நீங்கிச் செயலற்றிருக்குமாறு தனு கரண புவன போகங்களைப் பிரித்து விடுதலே '**அழித்தல்**' ஆகும். ஆகவே பிறப்பு இறப்புகளில் உழலுகின்ற இளைப்பு நீங்குதலே **அழித்தலின் பயனாகின்றது.** இங்ஙனம் இறைவனது முத்தொழில்களும் உயிருக்குப் பயன்படுவதை அறிந்து தெளியலாம்.

**ஐந்தொழில்கள்:** இக்கூறிய முத்தொழில்களைத் தவிர '**மறைத்தல், அருளல்**' என்ற வேறு இரண்டு தொழில்களையும் சைவ சித்தாந்தம் பேசும். உயிர்களின் அறிவை மறைப்பது ஆணவ மலம்'[30] இதன் மறைக்கும் ஆற்றலைத் தூண்டி, மாயை கன்மங்களால் உலக இன்பத்தைத் தோற்றுவித்து, இறைவன் உயிர்கட்குத் தன்னைக் காட்டாது உலகத்தையே நோக்கியிருக்கச் செய்தலே '**மறைத்தல்**' ஆகும். இச் செயலால் ஆணவமலத்தின் ஆற்றல் நாளடைவில் குறைந்து ஒடுங்கி விடும். இதுவே **மறைத்தலின் பயனாகின்றது.** ஆணவமலத்தின் ஆற்றல் ஒடுங்கியவுடன் உயிர்கட்கு இறைவனை நாடும் விருப்பம் நிகழும். அப்பொழுது இறைவன் தன்னைக் காட்டி உயிர்களை மலங்களினின்றும் நீக்கித் தன்னை அடைவித்தலே '**அருளல்**' ஆகும். ஆகவே, இறைவன் திருவடி இன்பமாகிய பேரின்பத்தைப் பெறுதலே **அருளல் தொழிலின் பயனாகின்றது.**

இக்கூறியவற்றாலும் மேலே கூறிய மூன்றாலும் இறைவனது தொழில்கள் **படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்** என ஐந்தாகின்றன. இவை ஐந்தும் ஆருயிர்களின் பொருட்டு இறைவன் செய்யும் '**ஐந்து அருட்டொழில்கள்**' என்பது தெளியப்படும்.

30. இதன் இயல்புபற்றிய விரிவான விளக்கம் தத்துவங்கள்-3 என்ற தலைப்பின்கீழ் தரப்பெற்றுள்ளன.

**இன்னும் ஓர் உண்மை:** வீட்டின்பத்தை அடைந்த பின்னர் உயிர்கட்குத் தனு கரணம் முதலியவை வேண்டா; ஆயினும் அவ்வீட்டின்பத்தை எய்தும் நெறியில் செல்வதற்குத் தனுகரணம் முதலியவை இன்றியமையாதனவாகும். ஆகவே, வீட்டின்பத்தை நாடுவோருக்கும் அதனை அடைதற் பொருட்டு இறைவன் தனு கரணம் முதலியவற்றைக் கொடுத் தருள்கின்றனன் என்பதையும் அறிந்து மனத்தில் இருத்துதல் வேண்டும்.

## (6) இறைவனுக்கு உலகத்தோடுள்ள தொடர்பு

மெய்கண்டார் இத்தொடர்பை '**அத்துவிதம்**' என்று விளக்குவார். அத்துவிதமானது இரண்டல்லாமை (அதாவது பிரிவின்மை) என்பது அவர் தரும் விளக்கம். '**அத்துவிதம்**' என்ற சொல்லே அந்நிய நாத்தியை (பிரிப்பின்மையை) உணர்த்துமாயிற்று''[31] என்று உரைத்தருளினமை காணத்தக்கது. 'பிரிவின்மை' எனவே, 'பொருள் இரண்டு' என்பதும், 'இரண்டாயினும் வேறு வேறாய் நில்லாது' ஒன்றியே நிற்கும் என்பதும் பெறப்படும். அத்துவிதத் தொடர்பில் '**அபேதம், பேதம், பேதாபேதம்**' என்ற மூன்று தன்மையும் ஒருங்கு காணப்பெறுகின்றது. இம்மூன்றற்கும் பொதுவாய் நிற்றலையே வேதம் '**அத்விதீயம்**' (அத்துவிதம்) என்று கூறுகின்றது. இதன் உண்மைப் பொருள் சித்தாந்தத்தில்தான் விளங்கு கின்றது. "இறைவன் உயிர்களோடு கலப்பினால் **ஒன்றாயும்**, பொருள் தன்மையால் **வேறாயும்**, உயிர்க்கு உயிராதல் தன்மை யால் **உடனாயும்** நின்று உலகத்தைச் செயற்படுத்துகின்றான்'' என்பது சிந்தாந்தம் தரும் விளக்கம்.

---

31. சி.ஞா.போ. 3ஆம் சூத்திரம். முதல் அதிகரணம் - வார்த்திகம் (7 - 8) - சிற்றுரை காண்க.

**விரி–விளக்கம்:** இறைவனும் உலகமும் ஒன்றி நிற்கும் கலப்பினை நோக்குங்கால் இரண்டும் ஒன்றே எனக் கூறுமாறு **அபேதமாய்** நிற்கின்றான். பொருள் தன்மையை நோக்குங் கால் 'இறைவன் தன்மை வேறு, உலகின் தன்மை வேறு' என்று காணப்படுவதால் **பேதமாய்** நிற்பது தெரிகிறது. உலகத்தை இறைவன் தொழில்படுத்தலேயன்றி, அதன்பொருட்டுத் தானும் உடன் தொழிற்பட்டு நின்றும், உலகம் போலத் தான் விகாரம் அடையாது நிற்றலை நோக்குங்கால் அபேதமாய்இருந்தே பேதமாகின்ற **பேதாபேதம்** என்ற நிலையைக் காணமுடி கின்றது. அவ்வாறு **அபேதம், பேதம், பேதாபேதம்** என மூன்றற்கும் பொதுவாய் நிற்கும் அத்துவித நிலையை மெய்கண்டார் '**அவையே தானேயாய்**'[32] என்ற ஒரு சிறு தொடரால் மின் கை விளக்கொளியைக் காட்டுவார்.

**மாணாக்கரின் விளக்கம்:** மெய்கண்டாரின் '**மின் கை விளக்கொளியை**' அவர்தம் மாணாக்கர்கள் விரித்து விளக்கியுள்ளனர். **அருணந்தி சிவாச்சாரியார்** "உலகெலா மாகி வேறாய் உடனுமாகி"[33] என்று விளக்கினார். **உமாபதி சிவமோ** "பொற்பணிபோல் அபேதப் பிறப்பிலதாய் இருள்ஒளிபோல் பேதமும் இன்றி... உடல்–உயிர், கண்– அருக்கன், அறிவு–ஒளிபோல் பிரிவரும் அத்துவிதமாகும் சிறப்பினதாய்" எனப் பிறமதங்களையும் எடுத்துக்காட்டி மறுத்தும் சித்தாந்தத்தை உவமை முகத்தால் இனிது விளக் கினார். இவர்களுள் அருணந்தி வாக்கினால் மெய்கண்டாரது "**அவையே தானேயாய்**" என்ற தொடர் "**அவையேயாய் தானேயாய், அவையே தானேயாய்**" என இரட்டுறமொழி தலாய் நின்று "முதல்வன் கலப்பினால் உலகத்தோடு **ஒன்றே** யாயும் பொருள் தன்மையால் **வேறேயாயும்**, உயிர்க்கு

32. சி.ஞா.போ. சூத் - 2
33. சித்தியார் - 2.1

உயிராதல் தன்மையால் **உலகத்தோடு உடனாயும்** நிற்பன்'' என்ற பேரொளியைப் பெற்று விளக்கம் அடைகின்றது. உமாபதி சிவத்தின் வாக்கினால் ''முதல்வன் உலகத்தோடு பொன்னும் மணியும்போல் **அபேதமும்** ஆகாமல், இருளும் ஒளியும் போலப் **பேதமும்** ஆகாமல், சொல்லும் பொருளும் போலப் **பேதா பேதமும்** ஆகாமல் கலப்பினால் உடலின் உயிர்போல **ஒன்றாயும்,** பொருள் தன்மையால் கண்ணில் அருக்கன் (சூரியன்) போல **வேறாயும்,** உயிர்க்கு உயிராதல் தன்மையால் கண்ணொளியும் ஆன்ம போதமும் போல **உடனாயும்** நிற்பன் என்று விளக்கம் பெறுகின்றது. இவ்வாறு **அபேதம், பேதம், பேதாபேதம்** என்ற மூன்றற்கும் பொது வாய் நிற்கும் நிலையே அத்துவிதமாகும் என்பது தெளிவா கின்றதல்லவா? இவற்றையெல்லாம் இவ்வாறே கண்டு சிவ ஞானபோத மாபாடிய ஆசிரியர் தம் பேருரையில் ஆங்காங்கு இனிது விளக்கியுள்ளார்.

**'அத்துவிதம்'–சொற்பொருள் விளக்கம்.'**[34] 'அத்து விதம்' என்ற சொல் அ+துவிதம் என்று பிரியும் இதில் 'அ' என்னும் நகாரம் அன்மை, இன்மை, மறுதலை என்னும் மூன்று பொருள்களைத் தரும். 'அப்பிராமணன்' என்பதில் நகாரம் அன்மைப்பொருள் தந்தது; பிராமணனாய் இருந்தும் பிராம ணன் அல்லனாயினான் எனப் பொருள் தருவது. 'அப்பிரகா சம்' என்பதில் நகாரம் இன்மைப் பொருள் தந்தது. இங்குப் 'பிரகாசம் இல்லை' எனப் பொருள் தருவது. 'அதர்மம்' என்ற சொல்லில் நகாரம் மறுதலைப் பொருள் தந்தது; தருமத்தான் மறுதலையாய் 'பாவம்' எனப் பொருள் தருவது. இம்மூன்று பொருள்களில் 'அத்துவிதம்' என்ற நகாரத்திற்கு இன்மைப் பொருளும் மறுதலைப் பொருளும் கொண்டு 'ஒன்று' எனப்

---

34. சி.ஞா.போ. 2ஆம் சூத். அதிகரணம் வார்த்திகம் 7(b) (சிற்றுரை)

பிறரெல்லாம் பொருள் கூறுவர். ஆயினும் எண்ணுப் பெயர் மேல் வரும் நகாரம் அன்மைப் பொருளையன்றி வேறு பொருள் தராது.[35] இது 'அநேகம்' என்ற சொல்லால் தெளிவாகும். 'அநேகம்' என்பது ஒன்றல்ல எனப் பொருள் தருகின்றது. அதனால் 'துவிதம்' என்னும் எண்ணுப் பெயர்மேல் வந்த நகாரமும் 'அத்துவிதம்' என்பது 'இரண்டாய் இருந்தே இரண்டல்லவாய் நிற்கும்' எனப் பொருள் தரும்" –இந்த விளக்கத்தைச் சிந்தித்துத் தெளிவு பெறலாம்.

இங்ஙனம் '**அத்துவிதம்**' என்ற சொல்லுக்கு உண்மைப் பொருள் கண்டவர் **மெய்கண்டார்.** இங்ஙனம் சுத்தாத்துவத்தின், மெய்யைக் கண்டு இனிது விளக்கினமைபற்றியே மெய்கண்டார் '**மெய்கண்டார்**' ஆனார் என்பதைத் **தாயுமான அடிகள்,**

பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவிதம்
மெய்கண்ட நாதன் மேவுநாள் எந்நாளோ?[36]

---

35. இவ்விடத்தில் இன்மைக்கும் அன்மைக்கும் உள்ள வேறுபாட்டை அறிதல் வேண்டும். இன்மை முற்றிலும் மறுப்பது; அன்மை சிறிது மறுத்துச் சிறிது உடன்படுவது; எ-டு: 'சாத்தன் இல்லை என்றால் 'அங்கு அவனோடு ஒத்த வேறொருவன் உளன்' என்னும் பொருள் எவ்வாற்றானும் தோன்றாது. ஆனால், 'சாத்தன் அல்லன்' என்றால் 'அவனோடு ஒருவாற்றான் ஒத்த வேறொருவன் உளன்' என்ற பொருள் தோன்றும். அது போலவே 'இரண்டும் இல்லை' என்றால் அங்கு 'இரண்டு என்பதற்கு ஒத்த பொருள் உண்டு' என்பது எவ்வாற்றானும் பெறப்படாது. ஆனால் 'இரண்டு அல்ல' என்றால் அங்கு 'ஒருவாற்றான் இரண்டு என்பதற்கு ஒத்த பொருள் உண்டு' என்பது பெறப்படும். இதுவே இன்மைக்கும் அன்மைக்கும் உள்ள வேறுபாடாகும் என்பது அறிந்து தெளியப்படும்.
36. தா.பா. எந்நாட்கண்ணி - 4 (குருமரபின் வணக்கம்) இங்கு 'புனிதமெனும் அத்துவிதம்' என்பது 'சுத்தாத்துவிதம்' ஆகும்.

என்று கூறியிருத்தலால் தெளியலாம். தாயுமானவரின் கொள்கையும் 'சுத்தாத்துவிதம்' என்பதனை,

அத்துவிதம் பெறும்பேரென்று அறியாமல்
யான்எனும்பேய் அகந்தை யோடு
மத்தமதி யினர்போல மனங்கிடப்ப
இன்னம்இன்னம் வருந்து வேனோ?[37]

என்ற அவர் வாக்காலேயே அறியலாம்.

**மூன்று உவமைகள்:** சுத்தாத்துவிதக் கொள்கையை விளக்க 'மூன்று உவமைகள்' கூறப்பெறும். அவற்றை ஈண்டு விளக்குவோம்.

(அ) இறைவன் உயிர்களோடு கலப்பினால் ஒன்றாய் நிற்றற்கு 'உடலும் உயிரும்போல்' என்று உவமை கூறுவது வழக்கம். உடலில் உயிர், அது எனத் தான் என வேற்றுமை யின்றி அதுவேயாய்க் கலந்து நிற்றலை மெய்கண்டார் உடலுக்கு இட்ட பெயரை, அதாவது 'சாத்தன், கொற்றன் முதலிய பெயர்களைச் சொல்லி அழைக்கும்போது 'உயிர்' தன்னையே அழைத்ததாகக் கொண்டு 'ஏன்?' என்று கேட்பதை எடுத்துக்காட்டி விளக்குவார். இங்கு உயிர் உடம்பெனத் தானென வேற்றுமையின்றி அபேதமாய் நிற்றல் கண்டுதெளிய லாம். இதனை மேலும் விளக்கலாம். இங்கு உயிர், உடலோடு ஒட்டி நிற்கும்போது உயிர் உயிரே; உடம்பு உடம்பே; உடம்பு உயிர் ஆகாது; உடம்பும் உயிர் ஆக மாட்டாது. அவ்வாறா யினும் உயிர் உடம்பாயும் அதனின் வேறாயும் நிற்கும்; உடம்பு அங்ஙனம் நில்லாது. அதுபோல முதல்வன் முதல்வனே; உயிர் உயிரே; முதல்வன் உயிராக மாட்டான்; உயிர் முதல்வனாக

37. மேலது - ஆசையெனும் - 2.

மாட்டாது அவ்வாறாயினும் முதல்வன் உயிராகவும் அதன் வேறாயும் நிற்பன்; உயிர் அங்ஙனம் நில்லாது.[38]

(ஆ) இறைவன் பொருட்டன்மையால் வேறாதற்குக் **'கண்–அருக்கன்போல்'** (கண்ணொளியும் கதிரவன் ஒளியும் போல) என்று உவமை கூறப்பெறும். கண்ணொளியும் கதிரவன் ஒளியும் இருளும் ஒளியும் போலத் தொடர்பே இல்லாத வேறு வேறு பொருளாகாது; இரண்டும் கலந்து நின்றே பொருள் தன்மையால் வேறாகின்றது. கண்ணொளியால் பொருளைக் காண்கின்றோம்; கதிரவன் ஒளி பொருளைக் காட்டுகின்றது. இவையே இவற்றின் வேறுபட்ட தன்மைகள், உடலினின்றும் உயிர் வேறு காணப்படாமையின் வேறாதற்கு– இவ்வுவமை கூறி விளக்கப் பெறுகின்றது.

(இ) உயிர்க்கு உயிராதல் தன்மையால் உடனாதற்கு 'கண்ணொளியும் ஆன்மபோதமும் (உயிரும் அறிவும்) போல' என்ற உவமை கூறப் பெறுகின்றது. கண்ணொளியும் ஆன்ம போதமும் சொல்லும் பொருளும்போல அன்றி, கண் ஒரு பொருளைக் காணும்பொழுது ஆன்ம போதமும் உடன் சென்றே கண்டு அப்பொருளை இன்னதென அறிகின்றது. இதனால் உடனாதற்கு இவ்வுவமை சொல்லப்பட்டது.[39]

---

38. சி.ஞா.போ. 2ஆம் சூத்திரம் அதிகரணம் 1. 'சுட்டுமுறுப்பும்' என்ற வெண்பாவையும், அதன் உரையையும் காண்க (சிற்றுரை)

39. இக்கூறிய மூன்று தன்மைகளில் ஒவ்வொன்றை மாத்திரமே கூறும் ஒவ்வொரு சாரார் உள்ளனர்.

(i) இறைவனும் உயிர்களும் ஒன்றே என்பவர் 'பொன்னும் மணியும்போல்' என்ற உவமை கூறுபவர் இவர்கள் அபேதவாதம் கூறுவோர். இவர்கள் தம் கொள்கை நிலை பெறுவதற்கு 'பிரம்மம் கேவலம், அத்துவிதம்' என, அத்துவிதம் எனபதனோடு 'கேவலம்' என்ற ஒரு சொல்லைச் சேர்த்துப் பொருள் கொள்வர். இதனால் இவரது கொள்கை

**அருளாசிரியர்களின் குறிப்புகள்:** இவ்வாறு இறைவன் உலகத்தோடு ஒன்றாயும், வேறாயும், உடனாயும் இருத்தலை மெய்கண்டாருக்குப் பல நூற்றாண்டுகட்கு முன்பிருந்த ஞானசம்பந்தப் பெருமான் தமது திருவீழிமிழலைத் திருப்பதிகத்துள் கூறியுள்ளமை ஈண்டு உளங்கொள்ளத் தக்கது.

> ஈறாய்முதல் ஒன்றாய்இரு பெண்ஆண்குணம் மூன்றாய்
> மாறாமறை நான்காய்வரு பூதம்அவை ஐந்தாய்
> ஆறாய்சுவை ஏழோசையொடு எட்டுத்திசை தானாய்
> வேறாய்உடன் ஆனான்இடம் வீழிம்மிழ லையே[40]

**'கேவலாத்துவிதம்'** எனப்படும். இறைவனும் உயிர்களும் வேறே என்பவர் 'ஒளியும் இருளும் போல்' என்று உவமை கூறுவர். இவர்கள் துவிதிகள்; இவர்கள் பேதவாதிகள்; இவர்தம் கொள்கை பேதவாதம். இவர்களது சமயம் 'துவைதம்' என்பது. 'இறைவனும் உயிரும் ஒன்றும் வேறும்' என்பவர் சொல்லும் பொருளும் போல்' என்று உவமை கூறுவர் இவர்கள் பேதவாதிகள். இவர்தம் கொள்கை 'பேதாபேதம்' என்பது; இது 'பேதம், அபேதம்' என்ற இரண்டையும் கொண்டு நிற்றல். 'சொல்லும்' அதன் 'பொருளும்' வேறு வேறாயிருப்பினும் சொல்லைச் சொன்னவுடன் அதன் பொருள் உடன் தோன்றுதலால், ஒன்றாகவும் உள்ளன என்பது இவர்தம் கருத்து. இவர்கள் தம் கொள்கை நிலைபெறுவதற்கு 'பிரம்மம் விசிட்டத்தினால் அத்துவிதம்' என, 'அத்துவிதம்' என்பதனோடு 'விசிட்டம்' என்ற ஒரு சொல்லைச் சேர்த்துப் பொருள் கொள்வர். இதனால் இவர்தம் கொள்கை 'விசிட்டாத்துவிதம்' என்று சொல்லப்பெறும். மெய்கண்டார் தம் கொள்கையின் பொருட்டு 'அத்துவிதம்' என்பதனோடு யாதொரு சொல்லையும் சேர்க்காமல் அப்படியே வைத்துப் பொருள் கொள்வதால் அவரது கொள்கை **'சுத்தாத்துவிதம்'** என்று வழங்குகின்றது.

40. சம்ப. தேவாரம் 1.11:2

என்ற திருப்பாடலால் அறிந்து தெளியலாம். இதனை மெய் கண்டாருக்கு முன்பிருந்த **திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார்** என்பவர் தனது **திருக்களிற்றுப் படியார்** என்ற நூலில்,

> **ஈறாகி அங்கே முதல்ஒன்றாய் ஈங்கிரண்டாய்**
> **மாறாத எண்வகையாய் மற்றவற்றின்–வேறாய்**
> **உடனாய் இருக்கும் உருவுடைமை என்றும்**
> **கடனாய் இருக்கின்றான் காண்**[41]

என்று கூறியிருத்தலையும் கண்டு தெளியலாம்.

**மெய்கண்டாரின் விளக்கம்:** இவற்றால் சைவசமயம் 'இறைவன் உலகத்தோடு ஒன்றாய் வேறாய், உடனாய் இருக்கின்றான்' என்று தொன்றுதொட்டுக் கூறிவருதல் தெள்ளி தின் விளங்கும். முதல்வனாகிய ஒரு பொருளிடத்து இம்மூன்று தன்மைகளும் ஒருங்கு கூடியிருத்தலை– அத்துவிதமாய் இருத்தலை– மெய்கண்டார் அருமையாகத் தெளிவாக்குவார்.[42]

அரக்கை உருக்கி அதனோடு கற்பொடி சேர்த்துச் சாணை செய்யப்படுதலை நாம் அறிவோம். இச்சாணையில் கல் அரக்கொடு உடன் விரவிக்கிடக்கின்றது. இவ்விரண்டும் தன்தன் தன்மையில் குறைவுபடவில்லை. சேர்த்துப் பிடிக்கும் தன்மையாகிய அரக்கின் தன்மையும் கத்தியினைக் கூர்மை படுத்தும் தன்மையாகிய கல்லின் தன்மையுமாகிய இரண்டு தன்மைகளும் சாணையில் காணப்படுகின்றன. இச்சாணையில் கல் தன் சுயவடிவத்துடன் காணப்படாது அரக்கொடு அரக் காய்க் காணப்படுகின்றது. எனவே, சாணை என்னும் ஒரு பொருளில் மூவேறு தன்மைகள் ஒருங்கு கூடியிருக்கக் காண்கின்றோம். அது போலவே,முதல்வன்பாலும் இறத்தல்

41. களிறு - 86
42. சி.ஞா.போ. சூத்.2 அதிகரணம் -1

பிறத்தல் புரியும் உயிர்களோடு ஒன்றாந்தன்மை, வேறாந் தன்மை, உடனாந்தன்மை ஆகிய மூன்று தன்மைகளும் ஒருங்கிருத்தல் கூடும். இம்மூன்று தன்மைகளின் சேர்க்கையே **'அத்துவிதத்தன்மை'** எனப்படும். இத்தன்மையோடு கூடி நின்றே இறைவன் அவ்வுயிர்கள் இறத்தல் பிறத்தல் புரிதற் பொருட்டு உபகரிக்கின்றான் என்பதைத் தெளியலாம். இத்தன்மையை உணர்த்தவே முதல்வன் **'அவையேயாய், தானேயாய், அவையே தானேயாய்'** நிற்கும் என்று கூறினார் **மெய்கண்டார்**. இந்தச் சுத்தாத்துவிதத் தன்மையையே **திருமுறைகளும்** பேசுகின்றன.

இங்ஙனம் முத்தொழில்களையும் சித்தாய், அதிலும் சூக்கும சித்தாய் நிற்கும் இறைவனே ஏனைய எல்லாப் பொருட்கும் பரம ஆதாரமாய் நிற்றலன்றி, அவனுக்கு ஓர் ஆதாரம் வேண்டாமையும் பெறப்படும். இதனால் 'குயவன்' என்ற உபமானம் பற்றி 'குயவனுக்கு ஆதாரம் இருத்தல் போல, இறைவனுக்கும் ஓர் ஆதாரம் உண்டோ?' என்னும் ஐயத்திற்கு இடம் இல்லை. இதனை **அருணந்தி சிவம்**,

ஞாலம் எழிசையும் தந்து
  நிறுத்திப்பின் நாசம் பண்ணும்
காலமே போலக் கொள்நீ
  நிலைசெயல் கடவுட் கண்ணே[43]

என்று விளக்குவர். அஃதாவது, ''எல்லாப் பொருள்களையும், ஆக்கியும், வளர்த்தும், அழித்தும் நிற்கும் கால தத்துவம், தனக்கு ஓர் ஆதாரம் இன்றி நின்றே அவற்றைச் செய்தல் போல, இறைவனும் ஆதாரம் இன்றி நின்றே தன் செயலைச் செய்வன்'' என்பதாகும். இதனால் "குடம் முதலிய செயப்படு பொருள்கட்குக் கர்த்தாவாகிய குயவன் அவற்றின் வேறாய்

43.

நிற்றல் போல, உலகமாகிய செயப்படு பொருளுக்குக் கருத் தாவாகிய இறைவன் அதனின் வேறாய் நிற்காது அத்துவித மாய் நின்றே தொழில் நடத்துவன்" என்பதும் தெளியப்படும்.

இன்னும் "படைத்துக் காத்து அழிக்கப்படும் உலகத்தில் பயன் பெறுவன உயிர்களே; இதனால் அவை குயவன் செய்யும் குடம் முதலியவற்றைப் பெற்றுப் பயன் அடையும் மக்கள் போல்வனவாகும். குயவன் அம்மக்களின் வேறாய் இருத்தல்போல, இறைவன் உயிர்களின் வேறாய் நில்லாது அவற்றோடு **அத்துவிதமாய்** நின்றே அவற்றின் பொருட்டுத் தனது தொழிலைச் செய்வன்'' என்பதும் இதனாலே விளங்கும்.

## (7) இறைவன் உலகத்தைச் செயற்படுத்தும் முறை

பேரறிவும் பேராற்றலுமுடைய இறைவன் தன் தனிப் பெருங்கருணையால் 'ஆருயிர்கட்கு நலம் செய்தல் வேண் டும்' என்னும் கருத்தோடு படைத்தல் முதலியவற்றைச் செய்யும் முறையில் சேதநப் பிரபஞ்சத்தையும் அசேதநப் பிரபஞ்சத்தையும் ஒருபடித்தாய்ப் படைக்காமல் வெவ்வேறு விதமாகப் படைத்துள்ளான்.

**சேதநப் பிரபஞ்சத்தில்** 'மக்கள், பறவை, விலங்கு, தாவரம்' என்னும் பல்வேறு இனங்கள்; இங்ஙனம் படைக்கப் பெறும் ஓர் இனத்துள்ளும் உயர்ந்தோர்–தாழ்ந்தோர் நிறை உறுப்பினர்–குறை உறுப்பினர். செல்வர்–வறிஞர், கருடன்–ஊர்க்குருவி, புலி–மான், பசு–எருமை, புல்–மரம் என்ற எத்துணையோ வேறுபாடுகள் காணப்பெறுகின்றன. இவற்றால் உறவும்–பகையும், வாழ்வும்–தாழ்வும் இன்பமும்–துன்பமும், சிறிதுகாலம் வாழ்வனவும்–நெடுங்காலம் வாழ்வனவும், வாழ்வதற்குரிய காலம் முழுதும் வாழாது இடையிலே

அழிவனவுமாய்—இங்ஙனம் பல்வேறு விதமாக, பல படியாகக் காணப் பெறுகின்றன.

**அசேதநப் பிரபஞ்சத்தில்** மண்ணுலகம்—பொன்னுலகம், ஒளியுலகம்—இருள் உலகம், காடு—நாடு, மலை—மடு என்று இங்ஙனம் பலதிறப்பட்டனவாகவே காணப்படுகின்றன. ஆகவே, இவற்றையெல்லாம் ஆக்கியும் அளித்தும் அழித்தும் நடத்துகின்ற இறைவன் எந்த ஒழுங்கில் எந்த நியதிப்படி செய்கின்றன? இதனால் யாருக்கு என்ன பயன். உயிர்கள் பயன் அடைந்தால், அவை எவ்வாறு பயன் அடைகின்றன? —இவற்றை விளக்க வேண்டும்.

**படைத்தலின் நோக்கம்:** இறைவன் இக்கூறியவாறு படைத்தல் தன் கருத்துப்படி அன்று; உயிர்களின் கருத்துப்படியேயாகும். அது மண்ணிலிருந்து பாண்டங்களைச் செய்யும் குலாலன் அவற்றைத் தன் கருத்துப்படி குடம், சால், பானை, கரகம், முதலாகவும், அவற்றைச் சிறியனவும் பெரியனவுமாகவும் பலபடச் செய்தல் போதலாகும் என்று சொல்லி வைக்கலாம். இவ்வாறு செய்யும் ஒழுங்கு முறையை **வினை** அல்லது **கன்மம்** என்று விளக்குவர் சித்தாந்திகள் அவரவர் வினைக்கேற்றவாறு படைத்தல் இறைவனின் நடுவுநிலையேயன்றி நடுவுநிலை பிறழ்ந்த நிலையாகாது. வேண்டுவார் வேண்டுவதை முன்னின்று கொடுத்தல் கருணையேயன்றி வன்கண்மை ஆகாது.

வேண்டத் தக்கது அறிவோய்நீ
வேண்ட முழுதும் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய்நீ
வேண்டி என்னைப் பணி கொண்டாய்[44]

என்று **மணிவாசகப் பெருமான்** கூறுவது இந்த நியதியைத்

44. திருவா. குழைத்த பத்து - 6

தான் என்று கருதலாம். இவ்வாறு இறைவன் தனது செயல்களை வினைவழியே செய்வது வினையின் ஆற்றலைக் கடந்து தன் விருப்பின் வழி நடக்கமாட்டாமையால் அன்று. பல்லுயிர்களின் பயன்கருதியேயாகும். செங்கோல் நடத்தும் அரசர்கள் தங்கள் செயல்களை அரசியல் முறைப்படி நடத்துதல் போலாகும் இறைவன் வினைவழியே தன் செயலை நடத்துவதும் என்று இதனை ஒருவாறு விளக்கலாம். வினையையும் அரசியல் நெறியையும் ஒப்பிட்டு அறியின் இது தெளிவாகும்.

**ஐயமும் விளக்கமும்:** உயிர்கள் உடம்பைக் கொண்டு தானே வினையைச் செய்தல் கூடும். உடம்பு இல்லாதபோது வினை ஏது? வினை இல்லாதபோது உடம்புகள் எங்ஙனம் அமையும்? இந்த ஐயம் எல்லோருக்கும் ஏற்படுவது தான். இதனை விளக்குவோம். இது 'விதை முதலா? மரம் முதலா?' என்ற ஐயத்தைப் போன்றது. மரத்திற்குக் காரணம் விதை; விதைக்குக் காரணம் மரம். இவ்விரண்டில் ஒன்று இல்லாத போது மற்றொன்று இல்லை என்பது தெளிவு. ஆனால் 'இவை முதன்முதலில் எப்படி உண்டாயின!' என்ற வினாவிற்கு ஒருவராலும் விடை அறியக்கூடியதாக இல்லை. 'இரண்டில் இன்னது தான் முதல்' என்று உறுதிப்படுத்துவதற்குத் தக்க சான்றுகள் இல்லையாயினும் 'விதையினால் மரமும் மரத்தினால் விதையும் உண்டாகின்றன' என்ற உண்மையை மறுக்க முடியாது. இதுபோலவே 'வினையும் உடம்பும்' ஆகிய இரண்டில் 'இன்னது முதல்' என்பதை உறுதிப்படுத்த இயலாவிடினும், 'இரண்டில் ஒன்று எவ்வகையிலோ முதலில் தோன்றியிருக்க வேண்டும்; அதன்பின்னர் அவர் காரண காரியத் தொடர்பால் ஒன்றால் மற்றொன்று தோன்றித் தொடர்ந்து வருகின்றன' என்றுதான் நாம் முடிவு செய்தல் வேண்டும்.

**உயிர்களின் இயல்பு:** உயிர்கள் இன்பத்தை விரும்புவ தன்றி துன்பத்தை விரும்புவதில்லை; அங்ஙனமே, அறிவும் ஆற்றலும், உடல் உறுப்பும் அழகும், செல்வமும் வாழ்நாளும் குறைந்து நிற்றலையும் விரும்புவதில்லைதான். ஆயினும் அக்குறைபாடுகளைத் தரும் காரணத்தை விரும்புகின்றன. பிறப்பே துன்பம் உடையது; அதனைத் தருவது இறைவனின் விருப்பமன்று. ஆயினும், உயிர்கள் இவ்வுலகத்தில் ஏதோ இன்பம் இருப்பதாக நினைத்து அதனை நுகர்தற்குப் பிறப்பை எடுக்க விரும்புகின்றன. அவ்வின்பமும் பலவகைப்படுவதாக அமைகின்றது. ஆயின், உலக இன்பமோ முட்செடியில் உள்ள மலர் போன்றுள்ளது. அதாவது, பெருந் துன்பத்தின் பயனாகச் சிறிது இன்பம் விளைகின்றது. முட்கள் பலவற்றால் கீறப்பட்ட பின்பே முட்செடியில் உள்ள ஒரு மலரைப் பறிக்க முடிவது போல, உலகத்தில் துன்பங்கள் பலவற்றை அநு பவித்த பின்பே சிறிது இன்பத்தைப் பெற முடியும் என்ற நிலை அமைகின்றது. ஆகவே, உலக இன்பத்தை விரும்புவதே துன்பத்தை விரும்புவதாய் அமைகின்றது. இன்னும் உயர் பிறப்பை எடுத்த உயிர்கள் தாழ்பிறப்பை விரும்புவதில்லை. எனினும் தாழ்பிறப்பை எடுத்த உயிர்கள் உயர்பிறப்பை விரும்புகின்றன. ஆயினும், எந்தப் பிறப்பிலும் துன்பம் இல்லாமல் இல்லை.

**தீங்குபயவாதிருத்தல்:** ஓர் உயிர் துன்பத்தை விரும் பாமல், இன்பத்தை விரும்புவது போலவே , பிற உயிர்களும் துன்பத்தை விரும்பாது இன்பத்தையே விரும்புகின்றன என்பதை உணர்ந்து பிற உயிர்கட்குத் தீங்கு செய்யாதிருத்தல் வேண்டும். அப்படித் தீங்கு செய்தால் தீங்கு செய்த உயிர் களை ஒறுப்பது இறைவனின் கடமையாகின்றது. தீங்கிற்குரிய ஒறுத்தலே இழிபிறப்பும் உடற்குறையும், வறுமையும் ஆக இறைவன் தருகின்றான். ஆயினும், இவையனைத்தையும்

அவன் விரும்பிச் செய்வதுமில்லை. ஆருயிர்களின் பிறப்பை நீக்கித் தன்னை அடையச் செய்வதே அவனது விருப்பம். ஆயினும் இக்கூறிய பலவகைக் காரணங்களால் படைப்பு முதலிய தொழில்களைப் பலபடச் செய்கின்றான். இவை யனைத்தும் உயிர்களின் பக்குவ வேறுபாடுகளை நோக்கிச் செய்வதல்லது தன் தன்மையால் செய்வதில்லை. அனைத்தும் ஆருயிர்களின் வினையின் காரணமாகவே நடைபெறு கின்றன.

**வினை தோன்றுவதற்குக் காரணம்:** சைவ சித்தாந்தம் இதனைத் தெளிவாக விளக்குகிறது. இந்த விளக்கத்தை ஈண்டுக் காணலாம். செம்பு இயற்கையிலேயே **'களிம்பு'** என்ற குற்றத்தை உடையதாய் இருத்தல் போல ஆன்மா இயற்கை யிலேயே 'ஆணவம்' என்ற ஒரு குற்றத்தை உடையதாய் உள்ளது. அக்குற்றம் காரணமாகவே **'வினை, மாயை'** என்றும் குற்றங்கள் அதனை வந்து பற்றுகின்றன. உயிர்கள் உலகப் பொருள்களால் வரும் இன்ப துன்பங்களில் அழுந்துதல் அவற்றின் மேலுள்ள விருப்பு வெறுப்புகளே காரணமாகும். இவ்விருப்பு வெறுப்புகள் ஆணவமலத்தின் செயல்களாகும். உயிர்களால் விரும்பவும் வெறுக்கவும்படுகின்ற இன்பதுன்பங் களை விளைவிப்பது வினையாகிய கன்ம மலமாகும். ஆத லின் ஆணவ மலத்தால் விருப்பு வெறுப்புகளை உடையதாய் நிற்கும் உயிர் அவ்விருப்பு வெறுப்புகளுக்கு விடயமாகிய இன்பதுன்பங்களைத் தருகின்ற கன்ம மலத்தோடுதான் முதற்கண் தொடர்வதாகின்றது. இதனால் கன்மமே முதலில் ஆன்மாவைப் பற்றுகின்றது என்பது தெளிவு. இதனால் ஆணவத்தின் காரியம் கன்மமும், கன்மத்தின் காரியம் மாயையும் ஆதல் விளங்கும். 'கன்மம் ஆணவத்தின் காரியமேயன்றி மாயையின் காரியமன்று' என்பதைத்

திருவள்ளுவரும் '**இருள் சேர் இருவினை**'[45] என்று குறிப்பிடு வதையும் காணலாம். பரிமேலழகரும் "இன்னதன்மைத்தென ஒருவராலும் கூறப்படாமையின் அவிச்சையை '**இருள்**' என்றும், நல்வினையும் பிறத்தற்கேதுவாகலான் இருவினையும் சேராவென்றும் கூறினார்" என்றும் குறிப்பிடுவதனாலும் அறியலாம்.

**மேலும் விளக்கம்:** இன்பதுன்பங்களுக்கு விதை போல்வது **கன்மமலம்.** அவ்விதை முளைத்து வேரூன்றி வளர்ந்து, மற்றும் பல விதைகளைத் தருதற்குச் சார்பாய் உள்ள நிலத்தின் ஆற்றல் போல்வது **ஆணவமலம்.** அவ்வாற்றலை யுடைய நிலம் போல்வது **ஆன்மா.** விதையை முளைப்பித்து, நிலத்தின் ஆற்றலையும் வெளிப்படுத்தி முளையை நிலத் தோடு விளைவிக்கும் நீர் போல்வது **மாயா மலம்.** முதலில் நிலமும் பின்னர் அதன் ஆற்றலும் வேண்டப்படும். அதன் பின் வேண்டப்படுவது விதை. இவையெல்லாம் அமைந்தபின் வேண்டப்பெறுவதே நீர். இவை போலவே "ஆன்மா, ஆணவம், கன்மம், மாயை" என்பவற்றையும் பொருத்திப் பார்த்து உண்மையைக் கண்டு தெளியலாம். இப்படித் தெளிந் தாலும், இவற்றின் செயற்பாடுகளுக்கு முன்பின் கூறுதல் அரி தாகும். இதனால்தான் சைவசித்தாந்தம் இவையனைத்தையும் '**அநாதி**' என்று கூறுகின்றது.

உயிர்கள் தோறும் ஆணவமலப் பிணைப்பும் ஒரு வகையாய் இராது அது பலவகையாயிருத்தலின் அவற்றின் விருப்பு வெறுப்புகளும் பலவகையாக இருக்கும் என்பது தெளிவு. ஆகவே, அவற்றிற்கேற்ப வரும் வினை வகைகளும் பல திறத்தனவாக இருக்கும். அவ்வகைகளுக்கேற்பவே உடம்புகளும் பலவகையாய் அமையும். இவையனைத்தையும்

---

45. குறள் - 5

அறிந்து இறைவன் அவ்வவற்றிற் கேற்றவாறு கூட்டுவிக்கின்றான் என்பது அறிந்து தெளியப்படும். இவ்வாறு இறைவன் இருவகைப் பிரபஞ்சங்களையும் செயற்படுத்துகின்றான் என்பது ஓர்ந்து அறியப்படும்.

## (8) இறைவனின் உருவங்கள்:

இறைவன் உலகத்தைச் செயற்படுத்துங்கால் உருவத்தையுடையவனாய் நின்றுதான் செயற்படுத்துகின்றான். உருவம் இல்லாத உயிர் உடலை இயக்கச் செயற்படுத்துவது போல், உலகிற்கு உயிராய் நிற்கும் இறைவன் உருவம் இன்றியே செயற்படுத்தக் கூடுமாயினும், உலகத்தின் செயற்பாடு உயிர்கட்குப் பயன்படுதற் பொருட்டே இறைவன் உருவமுடையவன் ஆகின்றான். சில எடுத்துக்காட்டுகள் இதனைத் தெளிவுபடுத்தும்.

**எடுத்துக்காட்டுகள்:** ஆனைமுகக் கடவுள், முருகக் கடவுள் போன்றாரை இறைவன் உருவமின்றியே தருதல் கூடுமாயினும் அவர்கள் இறைவனின் திருக்குமாரர்கள் என நின்று அவர்தம் அறக்கருணைக்கும் மறக்கருணைக்கும் உரியராயினார் என்பதை உணர்ந்து அப்பயனைப் பெறுதல் கூடாமையின் அன்னோரை இறைவன் உருவங் கொள்ளச் செய்துள்ளான். கொடிய பன்றியைக் கொன்று அர்ச்சுனனைக் காத்துப் பாசுபதம் கொடுத்து உருவத்துடன் நின்றுதான் செய்தான். உருவமின்றிச் செய்யின் பார்த்தன் அதனைத் தெளிந்து பயன் கொள்ளுதல் இயலாது. கல்லாலின் கீழிருந்து சனகாதி முனிவர் நால்வர்க்கும் மெய்யுணர்வைத் தரும்போது உருவம் இன்றியமையாதது என்பதைச் சொல்ல வேண்டா. வாதவூரடிகட்குக் குருவடிவமாக இருந்து உபதேசித்ததும் ஈண்டு நினைத்தல் தகும். ஆகவே, பயன்பெறுதற்கு உரியார்

பயன் பெறுதற் பொருட்டே இறைவன் உருவங்கொண்டு செய்வான் என்பது தெளிவாகின்றதன்றோ?

**இன்னோர் உண்மை:** பிறவிக் கடலில் வீழாத பெருமை யுடையவனாகிய இறைவன் பிறவிக் கடலில் வீழ்ந்த உயிர்கட் கெல்லாம் உடம்புகளைத் தருபவனாதலின், அவன் தனக்கு வேண்டும் உடம்பினைத் தானே தன் இச்சையால் கொள்வன் என்பதை அறிய வேண்டும்.[46] மேலும் மலமுடைய உயிர்கள் கொள்ளும் உருவத்திற்கு உரிய குற்றங்கள் யாவும் இறைவன் கொள்ளும் உருவத்திற்கு இல்லை. இறைவன் மல மற்றவனாதலின், மனத்தின் தொடர்பு அவனுக்கு உண்டாதல் இல்லை. அவனுக்கு அவனது சக்தியாகிய அருளே உருவமாய் அமைதலால் அவன் கொள்ளும் திருமேனிகள் யாவும் அருட்டிருமேனிகளாகும் என்பதைத் தெளியலாம். அன்றியும், அவன் உருவத்துடன் நின்று ஐந்தொழில்களை ஆற்றும்போது நம்மைப்போல் கருவிகரணங்களைக் கொண்டு செய்யாமல் சங்கற்ப(நினைவு)மாத்திரத்தால் செய்தலால், நமக்கு வரும் இளைப்பு, களைப்பு, விருப்பு, வெறுப்பு, இன்பம், துன்பம் வேறுபாடுகள் அவனை அடைய மாட்டா. இதனை மெய்கண்டார்,

> **நோக்காது நோக்கி நொடித்தன்றே காலத்தில்**
> **தாக்காது நின்றுளத்தில் கண்டிறைவன்— ஆக்காதே**
> **கண்ட நனவுணர்விற் கண்ட கனவுணரக்**
> **கண்டவனில் இற்றிட்டான் கட்கு[47]**

(தாக்காது—விகாரப்படாது; ஆக்குதல்—படைத்தல்; காண்

---

46. வைணவத்தில் திருமால் அவதாரங்கள் எடுப்பதும் தன் இச்சைப்படியேயாகும். இங்கும் ஆருயிர்களைக் காப்பதுவே குறிக்கோளாகும்.

47. சி.ஞா.போ.சூத்1 அதி 2. பாட்டு 4 (சிற்றுரை)

டல்—படைத்தல்; நொடித்தல்—அழித்தல் (நொடித்தான் மலை—தேவா. 7—100 காண்க)

என்று விளக்குவர்.

இறைவனுக்கு '**உருவம் உண்டு**' என்போரும் 'உருவம் இல்லை' என்போரும் உளர். 'இறைவனுக்கு உருவம் இல்லை' என்று கூறுவது அவனது சொரூப நிலையை நோக்கியே யாகும். அவனுக்குப் பலவகையான உருவங்கள் உண்டு' என்று நூல்களில் நுவலப் பெறுவது அவனது தடத்த நிலையை நோக்கியே யாகும்.

**ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமிலார்க் காயிரம்**
**திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ?**[48]

என்ற **மணிவாசகப் பெருமானின்** திருவாக்கில் முற்பாதி சொரூப நிலையையும் பிற்பாதி தடத்த நிலையையும் குறிப்பிட்டிருப்பதை நுனித்து அறிந்து தெளியலாம். தடத்த நிலையில் இவைவன் 'வேண்டிய வடிவத்தை வேண்டியவாறு கொள்வான்'. இங்ஙனம் கொள்வது அவனது சக்தியாலே என்பது அறியத்தக்கது.

**நாயகன் எல்லா ஞானத்**
**தொழில்முதல் நண்ண லாலே**
**காயமோ மாயை யன்று;**
**காண்பது சக்தி தன்னால்**[49]

என்பது சிவஞான சித்தியார். சக்தி என்பது இறைவனது திருவருள். ஆகவே, இறைவனது திருமேனியும், அவற்றில் அமைந்த படைக்கலம், ஆடை, அணிகலம் முதலியனவும், அவன் எழுந்தருளியிருக்கும் இடமும், அவற்றைக் கொண்டு

48. திருவா. திருத்தெள்ளேணம் -1
49. சித்தியார் 1.4

ஆற்றுகின்ற செயல்களும் அவனது அருளாலன்றி வேறில்லை. இவற்றை,

> உருவருள்; குணங்க ளோடும்
> உணர்வருள் உருவில் தோன்றும்
> கருமமும் அருள்;அ ரன்றன்
> கரசர ணாதி சாங்கம்
> தரும்அருள்; உபாங்க மெல்லாம்
> தான்அருள்; தனக்கொன் றின்றி
> அருள்உரு உயிருக் கென்றே
> ஆக்கினை அசிந்தன் அன்றே[50]

என்பது **அருணந்தியின்** திருவாக்கு. இத்திருப்பாடலில் 'இறைவன் உருவங்கொள்ளுதல் தன்பொருட்டன்றி உயிர் களின் பொருட்டேயாகும்' என்று நுவலப் பெற்றிருத்தலைக் காணலாம். அஃதாவது, 'எச்செயலையும் அவன் உருவம் இன்றியே செய்யவல்லவனாயினும், உருவம் கொள்ளாவிடில் உயிர்கள் அவனை அறியமாட்டா என்பது பற்றியே இறைவன் உருவங் கொள்ளுகின்றான்' என்ற விளக்கமும் இதில் குறிப்பாகப் புலப்படுத்தியிருப்பதைக் கண்டு தெளியலாம்.

**உருவம் இன்றியமையாமை:** தியானத்திற்கு உருவம் மிகவும் இன்றியமையாதது. உருவம் இல்லாத பொருளை உயிர்கள் மனத்தால் நினைக்கவும் இயலாது. ஆதலின் அவை தன்னை நினைந்து வாழ்த்தியும் வணங்கியும் உய்தல் வேண்டும் என்னும் பெருங் கருணையால் இறைவன் பலவகைத் திருமேனிகளைக் கொள்ளுகின்றான் என்பது அறியப்படும்.'[51] உருவமின்றி இவற்றைச் செய்தல் இயலாது. அவ்வாறு செய்ய முயலுங்கால் இறைவனையன்றி வேறொன் றையே நினைக்க வேண்டி வரும். அதாவது 'கடவுள்' என்ற

50. சித்தியார் 1.47

51. வைணவத்திலும் உருவம்பற்றியும் இதே கருத்து உண்டு.

சொல்லையோ அல்லது கடவுளைப் பற்றிய பாடலின் வடிவங்களையோ, பாடலைப் பாடிய அல்லது இறைவனைப்பற்றி உபதேசித்த ஆசிரியரையோ நினைக்க வேண்டி வருமேயன்றி இறைவனை நினைத்தல் இயலாது. இதனால் இறைவனுக்கு உருவம் இன்றியமையாததாகின்றது.

**உருவ வகைகள்:** வடிவம் என்பன யாவும் '**அருவம், உருவம், அருவுருவம்**' என்னும் மூவகையினுள் அடங்கும். அருவம் என்பது காட்சியளவையால் அறியப்பெறாது கருதலளவையால் அறியப்பெறுவது. (எ-டு.) ஆகாயம் முதலியவை. அருவுருவம் என்பது, ஒருகால் காட்சியால் அறியப்பட்டும், பிறிதொருகால் காட்சியால் அறியப் பெறாமலும் இருப்பது. (எ-டு) தீ முதலியவை. காற்று கண்ணுக்குப் புலனாகாவிடினும் ஊற்றுணர்வினுக்குப் புலனாவதால் உருவமுடையதாகக் கொள்ளப்படும். கண்ணுக்குப் புலனாகாமைபற்றி 'அருவம்' எனக் கொள்ளலும் உண்டு.

இறைவனுடைய திருமேனிகளை மூன்று வகையாகப் பிரித்துப் பேசும் சைவ சித்தாந்தம். இறைவன் தன்பொருட்டு யாதொரு வடிவத்தையும் வேண்டாதவன்; ஆருயிர்களின் பயன் கருதியே இந்த மூவகை வடிவங்களையும் மேற்கொள்ளுகின்றான்.

(அ) **அருவநிலை:** இறைவன் உலகை நோக்காது தன் நிலையில் நிற்கும் பொழுது '**சிவன்**' என வழங்கப் பெறுவான். இதுவே சொரூப நிலை எனப்படும் உண்மை நிலையாகும். இந்நிலையில் அவன் **பரமசிவன், சொரூப சிவன், சுத்தசிவன்** என்றெல்லாம் பேசப்பெறுவன். இந்நிலையில் அவனது சக்தி **பராசக்தி** எனப் பெயர் பெறுகின்றது இந்த நிலையில் இறைவனுக்கு யாதொரு வடிவமும் இல்லை. இதுவே இவனது அருவநிலை.

(ஆ) **உருவநிலை:** இறைவன் இந்நிலையினின்றும் நீங்கி உலகத்தை நோக்கி ஐந்தொழில் புரியப் புகுமிடத்து **தடத்த சிவன்** என்ற பெயரைப் பெறுகின்றான். விண் வெளியில் ஒளிரும் கதிரவன் மண் வெளியில் தன் ஒளிக் கிரணங்களால் வியாபித்து நிற்பதைப் போலவே, மேலிடத்தில் உள்ளோனாகிய இறைவன் தனக்குக் கீழுள்ள உலகத்தில் தன் சக்தியினால் வியாபித்து நிற்கின்றான். இதுபற்றியே இந்நிலை யைச் **சக்தி** என்றே வழங்குகின்றனர் சித்தாந்திகள்.

ஒரு சக்தியே செயலால் பலவகையாகப் (சுடும் சக்தி, அடும் சக்தி, ஒளிறும் சக்தி முதலியவை) புலப்படுவது போலவே, இறைவனது சக்தியும் பலவகைகளில் புலப்பட்டுப் பல்வேறு பெயர்களைப் பெறுகின்றது. இறைவனது மேலான பராசக்தி உலகத்தை நோக்கும்போது **ஆதிசக்தி** என்ற பெயரைப் பெறுகின்றது. இதன் பரிணாம வடிவங்கள் முன்னரே விளக்கப் பெற்றுள்ளன.[52] இதனைச் சிவஞான சித்தியார்,

ஒன்றாய், இச்சா ஞானக்
  கிரியை யொன் றொருமூன் றாகி
நின்றிடும் சக்தி; இச்சை
  உயிர்க்கருள் நேச மாகும்;
நன்றெல்லாம் ஞான சக்தி
  யால்நயந் தறிவன் நாதன்;
அன்றருட் கிரியை தன்னால்'
  ஆக்குவன் அகில மெல்லாம்.[53]

என்று பேசும்.

இங்ஙனம் மேற்கூறிய சக்திகளைக் கொண்டே இறைவன் தன் தொழில்கள் அனைத்தையும் செய்கின்றான். இதனை,

52. இந்நூல் - பக். 48
53. சித்தியார் - 1.63

நங்கையினால் நாம்அனைத்தும்
செய்தாற்போல் நாடனைத்தும்
நங்கையினால் செய்தளிக்கும்
நாயகனும்[54]

என்று மிக அழகாகக் கூறும் திருக்களிற்றுப்பாடியார். குணமும் குணியும் வேறல்லவாயினும் செலுத்துவது குணி; செலுத்தப் படுவது குணம். எனவே, குணி செலுத்தியபடியே குணம் செல்வதல்லது வேறாகச் செல்லாது. அதனால் 'சக்தி' **மனைவி** என்றும், 'சிவம்' **கணவன்** என்றும் கொள்ளப்படுகின்றன. இது பற்றித்தான், மேற்குறித்த களிற்றின் பாடலில் சக்தி 'நங்கை' என்றும், 'சிவன்' **நாயகன்** என்றும் கூறப்பட்டன என் பதைத் தெளியலாம். 'சிவபெருமான் தனது ஒருபாதி ஆணு ருவமாகவும், மற்றொரு பாதி பெண் உருவமாகவும் உள்ளான்' என்று சொல்லுவதும் முதல்வன் ஒருவனே சிவமும் சக்தியும் என இருதிறப்பட்டு இயைந்து நிற்றலையே குறிப்பதாகும். மற்றும் சிவமூர்த்தங்கள் பலவும் அம்மை உடனாகக் காணப் படுவதும் இவ்வுண்மையை விளக்குவதாகும் என்பதையும் தெளியலாம்.

**ஐந்தொழில்கள்-அருள்தொழில்கள்** என்பதை நாம் அறிவோம். இதனை மேலும் விளக்குவோம். குணம் குணி வழியே செயற்படுமாதலால் சக்தி சிவத்தின் வழியே நிற்பதாகும் என்பதை நாம் அறிவோம். இறைவன் **அயனாய்** நின்று படைத்தல் தொழிலைச் செய்ய நினையுங்கால் அவனது சக்தி **வாணி** என நிற்கும். இறைவன் **அரியாய்** நின்று காத்தல் தொழிலைச் செய்ய நினையுங்கால் அவனது சக்தி **திருமக ளாய்** நிற்கும். இறைவன் **அரனாய்** நின்று அழித்தல் தொழிலைச் செய்ய நினையுங்கால் அவனது சக்தி **உமையாய்** நிற்கும். மறைத்தலை இறைவன் மகேசுவரனாய் நின்று

54. களிறு - 78

செய்யும்போது அவனது சக்தி **மகேசுவரியாய்** நிற்கும். இறைவன் கொள்ளுகின்ற உருவத்திருமேனிகள் யாவும் இந்த மகேசுவர நிலையின் வேறுபாடுகளே. 'ஏகபாதர், அர்த்தநாரீசுவரர், உமாசகாயர்,சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், நடராசர்' முதலான மகேசுவர மூர்த்தங்கள் **இருபத்தைந்து** எனக் கணக்கிடப் பெற்றுள்ளன.

இவைதவிர, அடியார்கட்கு ஆங்காங்குத் தோன்றியருளிய வடிவங்களும், பலவாகும். தேவர்கள் பொருட்டும், ஏனைய உலகத்தார் பொருட்டும், திரிபுரத்தை எரித்தது முதலியனவும் சனகாதி முனிவர்கட்கு தட்சிணாமூர்த்தியாய் இருந்து ஞானத்தை அருளியது முதலியனவும் இம்மகேசுவர மூர்த்தமாதல் அறிந்து தெளியப்படும்.

(இ) **அருவுருவம்:** இறைவன் அருளலைச் சதாசிவனாய் நின்று செய்யும்பொழுது அவனது சக்தி மனோன்மணியாய் நிற்கும். இறுதியில் குறிப்பிட்ட நிலை செயலில் புகும் நிலையேயல்லது செயல் ஆற்றும் நிலையன்று. அதனால் இது பொதுவாய் நின்ற **அருவமும்** ஆகாமல், பின்பு சிறப்பாய் வரும் உருவமும் ஆகாமல், **அருவுருவத் திருமேனியாய்** அமையும். இவ்வடிவமே ஒளிப்பிழம்பான **சிவலிங்கத் திருமேனியாகும்.**

ஐந்தொழில் '**பஞ்சகிருத்தியம்**' என்று பேசப்பெறும். இவற்றுள் 'படைத்தல், காத்தல், அழித்தல்' என்னும் மூன்றும் அசேதநப் பிரபஞ்சமாகிய சட உலகத்தின்மீதும், 'மறைத்தல், அருளல்' ஆகிய இரண்டும் சேதநப்பிரபஞ்சமாகிய உயிர்களின்மீதும் செய்யப்பெறுவனவாகும் என்பதைப் பிரித்து நோக்கித் தெளிவு பெறலாம்.

இந்த ஐந்தொழில்களும் ஒருவகையில் அருள்தொழில்களேயாகும். யாங்ஙனம் என்பதைக் காண்போம். உலகத்தை

இறைவன் படைத்தல் உயிர்களின் வினை தீர்த்தற்பொருட்டு; காத்தல் வினையை நுகர்வித்தல் பொருட்டு; அழித்தல் இளைப்பு நீங்குதற் பொருட்டு; மறைத்தல் மலபரிபாகம் அடைதற் பொருட்டு; அருளல் பேரின்பத்தை அடைதற் பொருட்டு. இந்த விளக்கமும் உளங்கொள்ளத் தக்கது.

**இன்னும் ஒரு கருத்து:** மறைத்தல் உயிர்கட்குப் பந்தத்தை (கட்டினை)ச் செய்வது; அருளால் உயிர்கட்கு வீட்டினை (விடுதலையை)த் தருவது. ஆகவே ஐந்தொழில் களையும் '**பந்தம்—வீடு**' என்று இருதொழில்களாகவே பேசப்பெறும் மரபும் உண்டு. படைத்தல் முதலிய மூன்றும் ஒரு வகையில் மறைத்தலேயாகும்.

'பந்தம் வீடவையாய பராபரன்'[55]

என்பது **நாவுக்கரசரின்** நன்மொழி.

பந்தமும் வீடும் படைப்போன் காண்க[56]

என்பது **மணிவாசகரின்** மணிமொழி.

பந்தம் வீடுதரும் பயன்[57]

என்பது **சேக்கிழார் பெருமான்** அநுபூதி நிலையில் அருளியது 'பந்தம்,வீடு' என்ற கருத்து திருமுறைகளுள் பலவிடத்தும் வருதலைக் காணலாம்.

இறைவன் செய்யும் ஐந்தொழில் மூவகைப்படும். அவை தூல ஐந்தொழில், சூக்கும ஐந்தொழில், அதிசூக்கும ஐந்தொழில் என்பனவாகும். உலகத்தைப் படைத்துக் காத்து அழித்து மறைத்து அருளுவது **தூலஐந்தொழிலாகும்.** உலக

55. திருநாவு. தேவா. 5.7:12
56. திருவா. திருவண்டப்பகுதி - அடி. 52
57. பெ.புரா. தடுத்தாட்கொண்ட புராணம் - 154

முழுவதையும் அழித்தபின்னர் மீளவும் தோற்றுவித்தற்கு ஆவனசெய்தல் **சூக்கும ஐந்தொழிலாகும்.** உயிர்கள் தம் உடம்பைக் கொண்டு பொருள்களை அறிந்து அநுபவிக்குங் கால் அவற்றின் அறிவுக்கு அறிவாய் நின்று அவற்றை அநுபவித்து நிற்றல் **அதிசூக்கும ஐந்தொழிலாகும்.** இறுதி யில் குறிப்பிட்ட அதிசூக்கும ஐந்தொழிலை **மெய்கண்டார் சிவஞானபோதம் ஆறாம் சூத்திரத்தில்** கூறியுள்ளார். அதில் கூறியவாறு இறைவன் அறிவியாதொழியின் உயிர்கள் எதையும் அறியமாட்டா.

## (9) இறைவனின் திருமேனிபற்றி மேலும் சில கருத்துகள்:

இறைவனுடைய உருவத்திருமேனி **போகவடிவம், யோகவடிவம், வேகவடிவம்'** என்று மூவகைப்படும். போக வடிவம், உலக இன்பத்தைத் தருதற்பொருட்டு மணக்கோலம் கொள்ளுதல் போன்றவை. யோகவடிவம் ஞானத்தைத் தருதற்பொருட்டுக் குருமூர்த்தியாய் எழுந்தருளியிருத்தல் போன்றவை. வேகவடிவம் உலகத்தார்க்கு உண்டாகும். துன்பத்தைப் போக்கப் போர்க்கோலம் கொள்ளுதல் போன்றவையாகும்.

இறைவன் **போகவடிவம்** கொண்டாலல்லது உயிர்கட் குப் போகம் அமையாது; **யோகவடிவம்** கொண்டாலல்லது உயிர்கட்கு ஞானம் உதியாது; **வேகவடிவம்** கொண்டாலல்லது உலகிற்குவரும் துன்பம் நீங்காது. இறைவன் சனகாதி முனிவர் பொருட்டு யோகியாய் இருந்த காலத்தில் யோகியாய் இருந்தது போன்றவை. இறைவன் சனகாதி முனிவர் பொருட்டு யோகியாய் இருந்த காலத்தில் உயிர்கட்குப் போக முதலியவை

இறைவன் திருப்பெருந்துறையில் தம்மையாட்கொண்ட அருமைப்பாட்டினை **மணிவாசகப் பெருமான்.**

'கோகழியாண்ட குருமணி'[58]

'ஈர்த்து எனையாட் கொண்ட எந்தை பெருமான்'[59]

'குருந்தின்கீழ் அன்றிருந்த கொள்கையும்.[60]

என்று பேசுவர். **தாயுமான அடிகளும்** இறைவன் குருவாய் வந்தமையைப் **'புத்தமிர்த போகமும்'**[61] என்ற பாடலாலும் குருஉபதேசம் செய்ததை **'வந்தேன் உடல் பொருள் ஆவி'**[62] என்ற பாடலாலும் குறிப்பிடுவர்.

இறைவன் ஐந்தொழில் செய்யுமிடத்து உயிர்களின் மேலுள்ள கருணையாகிய இச்சாசக்தி இறைவனுக்கு எஞ் ஞான்றும் ஒரு தன்மையதாகவே இருக்கும். ஏனைய ஞான சக்தியும் கிரியாசக்தியும் அடங்குதல், மிகுதல், குறைதல் என்னும் தன்மைகளை அடையும். இந்நிலைகள் பற்றி இறைவனும் பல நிலைகளையுடையனாய் இருப்பான். இந்நிலைகள் ஒருவகையில் ஐந்தாகவும்[63] மற்றொரு வகையில் ஒன்பதாகவும் கூறப்பெறும். ஒன்பதாகக் கூறப்பெறுவதை ஈண்டுக் காட்டுவேன்.

**நவந்தருபேதம்:** ஞானமும் கிரியையும் தனித்தனியாகத் தொழிற்படும் நிலையில் பொதுவாகத் தொழிற்படுதல், சிறப்பாகத் தொழிற்படுதல் என இரண்டாகி நிற்கும். ஞானம்

58. திருவா. சிவபு. அடி - 3. கோகழி - திருப்பெருந்துறை
59. மேலது. அடி 74
60. மேலது. கீர்த்தித் திருவகவல் - அடி 6
61. தா.பா. தேசோமயானந்தம் - 11
62. மேலது - ஆகார புவனம் - 18
63. ஐந்தாகக் கூறப்பெறுவதை இந்நூல் பக்.72-ல் காண்க.

பொதுவாகத் தொழிற்படும் நிலையில் '**சிவம்**' என்றும், கிரியை பொதுவாகத் தொழிற்படும் நிலையில் '**சக்தி**' என்றும், பெயர்களைப் பெறுகின்றன. அவை சிறப்பாகத் தொழிற்படும் நிலையில் **நாதம், விந்து** இரு நிலைகள் உளவாகும். வித்தியேசுவரனாய் நிற்கும் ஒரு நிலையில் இறைவன் ஒருவனாய் நில்லாது 'உருத்திரன், திருமால், அயன்' முதலிய பலவகை நிலைகளை அடைவான். எனினும் இம்மூன்று நிலைகளே சிறப்பாக எடுத்துக் கொள்ளப்பெறும். அதனால் 'வித்தியேசுவரன்' எனத் தனியே கூறாது 'உருத்திரன், திருமால், அயன்' என மூன்றாக வைத்துச் சொல்லப் பெறும். இவற்றை மேற்கூறியவற்றோடு கூட்டச் '**சிவம், சக்தி, நாதம், விந்து, சதாசிவன், மகேசுவரன், உருத்திரன், திருமால், அயன்**' என ஒன்பதாகும். இவை '**நவந்தருபேதம்**' என வழங்கப் பெறும். ஆகவே, ஒருவனாகிய இறைவனே உலகத்தைச் செயற்படுத்த வேண்டி நவந்தருபேதங்களாய் நிற்பன் என்று அறிந்து தெளிய வேண்டும்.

இக்கூறியவற்றுள் முதலில் உள்ள 'சிவன், சக்தி, நாதம் விந்து' என நான்கும் **அருவத்திருமேனிகள்.** இறுதியில் உள்ள 'மகேசுவரன், உருத்திரன், திருமால், அயன், என்ற நான்கும் **உருவத்திருமேனிகள்.** இடையிலுள்ள சதாசிவன் மட்டிலும் **அருவுருத்திருமேனி.**

உருவம் கண்ணுக்குப் புலனாவது. அருவம் அங்ஙனம் புலனாகாதது; எனினும் வரம்புபட்டு நிற்பது. அருவுருவம் கண்ணுக்குப் புலனாயினும் ஒளிப்பிழம்பாய் நிற்பதன்றிக் கை, கால் முதலியன இல்லாதது.[64] இலிங்கஉருவமே அறிவுருவத் திருமேனி என்பது அறியப்படும். இவண்கூறிய உருவத்திரு

---

64. வள்ளல் பெருமான் இவ்வடிவத்தையே அருட்பெருஞ்சோதி என்று குறிப்பிடுவர்.

மேனிகள் நான்கும் **அதிகாரம்** (தலைமைப்பாடு) எனவும் அருவுருவத்திருமேனி **போகம்** எனவும், அருவத்திருமேனி நான்கும் **'இலயம்'** எனவும் வழங்கப்படும். அதனால் இந்நிலைகளில் நிற்கும் பொழுது இறைவனும் **அதிகாரசிவன், போகசிவன், இலயசிவன்** என்று சொல்லப்பெறுவான் (இலயம்–ஒடுக்கம்). ஆகவே இறைவனின் தடத்த நிலையை நோக்குமிடத்து யோகம் அதிகாரம்' நிலையை நோக்குமிடத்து 'இலயம், யோகம்' அதிகாரம்' என மூன்றாய் அடங்கும் என்பதை உணர்ந்து தெளிதல் வேண்டும்.

**வித்தியேசுவரனாய்** நின்று இறைவன் புரியும் செயல் களைச் சற்று விரிவாக விளக்குதல் வேண்டும். இறைவன் உயிர்கட்குப் போகம் முதலியவற்றைச் செய்யுங்கால் தானேயாயும் செய்வன்; பிறரைக் கொண்டும் செய்விப்பன்; அவற்றுள் தானே செய்யுங்கால் மகேசுவரனாய் நின்று செய்வன். பிறரைக் கொண்டு செய்விக்குங்கால், அவற்றை அவ்வாற்றால், நோக்குதல் பெரிதாகவும் கருதுதல் சிறிதாகவும் நிகழ 'வித்தியேசுவரன்' என்னும் நிலையில் நின்று செய்விப் பன். இந்நிலையில் செய்விப்பது பொதுப்பட ஒன்றாயினும், சிறப்பினால் பலவாய் நிற்கும். அரசன் (மக்களாட்சியில் முத லமைச்சன்) ஆணையைப் பெற்று ஆட்சிமுறைக் கடமை களில் சிலவற்றைச் செய்யும் அமைச்சர்கள் போல; இறைவன் ஆணையைப் பெற்று உலகத்தைச் சிலவகைகளில் தொழிற் படுத்தும் சிறந்த தலைவர் சில உளர். அவர்கள் 'அனந்த தேவர், சீகண்டருத்திரர், திருமால், அயன்' என்போர். மற்றும் இந்திரன், வருணன், வாயு, அக்கினி சூரியன், சந்திரன், நாள், கோள் முதலான எண்ணற்ற தலைவர்களும் உளர். இவர்கள் பெற்றுள்ள வடிவும் பெயரும் அவரவர்கள் ஆற்றும் தொழிலுக்கேற்ப அமைந்தனவாகும். இவற்றை இவர்கள் தம்புண்ணிய விசேடத்தால் பெற்றவர்கள். இவர்கள் இவ்வாற்

றால் இயக்குவதற்கு அமைந்த நிலையே '**வித்தியேசுவர நிலை**'யாகும். எனவே, இந்நிலையில் நோக்கப் பெறுவோரது நிலைபற்றி இறைவனும் பல்வேறு நிலையினனாய், அவ்வப் பெயரைப் பெற்று நிற்பன் என்பது விளங்கும். இவன் போகியாய் நில்லாதவழி போகமும், யோகியாய் நில்லாதவழி யோகமும் உயிர்கட்கு அமையாது என்பது நாம் அறிவோம். அங்ஙனமே இறைவன் அனந்தர் முதலிய நிலையினனாய் நில்லாதவழி அவ்வத்தலைவருக்கு அவை அமையா. ஆதலின், அவர்பொருட்டு இறைவன் அப்பல்வேறு நிலையி னனாய் நிற்பன் என்பது அறிந்து தெளியப்படும்.

'அனந்தர், உருத்திரர், மால், அயன்' என்னும் பெயர்கள் முழுமுதற் கடவுளாகிய இறைவனையும், அவ்வத்தொழில் மட்டிற்கும் முதல்வராய் நிற்கும் தலைவர்களையும் குறிப்பன வாக வரும். இப்பெயர்கட்குரிய இறைவனது நிலைகள் 'சம்பு பட்சம்' (சம்பு–சிவன், இறைவன்) என்றும் இப்பெயர்களுடைய தலைவர்களின் நிலைகள் 'அணுபட்சம்' (அணு–உயிர்கள்; பட்சம்–பகுதி) என்றும் வழங்கப்பெறும்.

**இவர்களை இனங்காணல்:** திருமுறை இலக்கியங் களில் 'உருத்திரன் மால், அயன்' முதலான பெயர்கள் வருமிடத்து இவை சம்புபட்சமாகிய சிவபிரானது நிலையையும் அணுபட்சமாகிய பிறதேவர்களின் நிலையையும் குறிக்கின்றன என்பதை அறிதல் எவ்வாறு? பாடல்களில் முன்னும் பின்னும் வருகின்ற சொற்குறிப்புகளால் அவற்றை உணர்ந்து கொள்ள லாம். அதாவது சிவபிரானாயினும் ஏனைய தேவர்களாயினும் அவரவர்க்குரிய சிறப்பியல்கள் உள்ளன. அச்சிறப்பியல்பு களை முதன்மையாகவும் ஏனையவற்றைப் பொதுவாகவும் கூறும் முறையால் அவ்வேறுபாடு தெளிவாகும். எடுத்துக்காட்டு ஒன்றினால் இது தெளிவாகும்.

நாரணன்காண் நான்முகன்காண் நால்வே தன்காண்
ஞானப் பெருங்கடற்கோர்நாவாய் அன்ன
பூரணன்காண் புண்ணியன்காண் புராணன் தான்காண்
புரிசடைமேல் புனலேற்ற புனிதன் தான்காண்[65]

என்ற **நாவுக்கரசரின்** திருத்தாண்டகப் பகுதியில் நாரணன், நான்முகன், நால்வேதன் என்பன அருளிச் செய்யுமிடத்து 'புரிசடைமேல் புனல் ஏற்ற புனிதன்தான் காண்' என்று அருளினமையின் அச்சிறப்புபற்றி முன்னர்வந்த 'நாரணன், நான்முகன்' என்பன சம்புபட்சத்தைக் குறிக்கின்றன என்பதை அறிந்து தெளியலாம். இன்னும்,

சுருதிவா னவனாம் திருநெடு மாலாம்
சுந்தர விசும்பில்இந் திரனாம்
பருதிவா னவனாம் படர்சடை முக்கட்
பகவனாம் அகவுயிர்க் கமுதாம்
எருதுவா கனனாம் எயில்கள்மூன் றெரித்த
ஏறுசே வகனுமாம் பின்னும்
கருதுவார் கருதும் உருவமாம் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே[66]

என்ற **கருவூர்த் தேவர்** திருப்பாடலில் அயன், மால், இந்திரன் முதலிய பெயர்கள் 'எருதுவாகனனாம் எயில்கள் மூன்றெரித்த ஏறுசேவகனுமாம்' என்று அருளிச் செய்துள்ளமையின் சம்புபட்சத்தையே குறிக்கின்றமையைத் தெளியலாம். 'கருதுவார் கருதும் உருவமாம்' என்றதனால் 'யாவராயினும் யாதானும் ஓராற்றால்' யாதானும் ஒரு தெய்வத்தை நினைந்து வழிபடினும் அத்தெய்வ வடிவமாயும் சிவபெருமான் நிற்பன்' என்று உணர்த்தப் பெற்றமையையும் சிந்தித்து நன்கு உணரலாம். இதனை,

65. அப். தேவா 6.8:3
66. திருவிசைப்பா 3: 5

ஆருருவ உள்குவார் உள்ளத் துள்ளே
அவ்வுருவாய் நின்கின்ற அருளும் தோன்றும்.[67]

என்று **அப்பர் பெருமானின்** திருத்தாண்டகப் பகுதியும் அரண் செய்வதைக் காணலாம். இவையெல்லாம் எண்ணற்ற தேவர்களின் நிலைகளும் சம்பு பட்சத்திலும் உள்ளன என்பதனையே விளக்கி நிற்பனவாக அமைந்துள்ளது.

இவ்வாறின்றி அணுபட்சத்தையே குறிப்பனவற்றையும் காண்போம்.

நூறுகோடி பிரமர்கள் நொந்தினார்
ஆறுகோடி நாராயணர் அங்ஙனே
ஏறு கங்கை மணல்எண்ணில் இந்திரர்
ஈறு இலாதவன் ஈசன் ஒருவனே[68]

என்ற **அப்பர் பெருமானின்** திருவாக்கில் அயன்மால், இந்திரன் ஆகிய மூவரே சுட்டப் பெற்று சிவபிரானின் குறிப்பு இல்லாமையால் அணுபட்சத்தையே குறிப்பனவாக இருத்தல் தெளிவாகின்றதன்றோ? **வாதவூரடிகளின்,**

வான்வந்த தேவர்களும் மாலயனோ டிந்திரனும்
கானின்று வற்றியும் புற்றெழுந்தும் காண்பரிய
தான்.[69]

என்ற திருவாக்கினாலும் இவ்வுண்மையைத் தெளியலாம்.

## (10) சம்புபட்ச அணுபட்ச விளக்கங்கள்[70]

புண்ணிய விசேடத்தால் உலகத்தைத் தொழிற்படுத்தும் தலைமைப்பாட்டினை எய்தும் அணுக்களும்—அஃதாவது

67. அப். தேவா 6.18:11
68. மேலது 5.100:3
69. திருவா. திருவம். 4
70. இப்பகுதியில் மிகவும் ஆழங்கால்பட்டுக் கருத்துகள் மனத்தில் இருத்தப்பெறல் வேண்டியவை.

உயிர்களும்—சம்புபட்சம் போலவே நவபேதங்களை அடை யுமோ என்ற ஐயம் எழலாம். அணுக்களாகிய உயிரினத்தவர் தம் புண்ணிய விசேடத்தால் 'அயன் மால்' என்ற நிலைக்கு மேல் செல்லுதல் இல்லை என்பர். 'அயன், மால்' என்பவ ரோடு 'உயிரினத்தவராகவும்' ஆதல் உண்டு என்பவர் வேறு சிலர். நவந்தரு பேதங்களிலும் உயிர்கள் நிற்றல் உண்டு என்பவர் இன்னும் சிலர். இவர்கட்கு இடையில் ஒரு சாரார் 'நவந்தரு பேதங்கள் என்று சொல்லப்படுகின்ற அவை அனைத்தும் அணுபட்சமேயன்றி ஒன்றேனும் சம்புபட்சம் அன்று' என்பர். இறைவனது தடத்த நிலையும் அது பற்றி வரும் மூவகைத் திருமேனிகள் முதலியனவும் உளவென்றல் கூடாததாய் முடியுமாகலின் இவர்கள் கூற்றுகள் எவ்வகையி லும் பொருந்துமாறில்லை.

**முக்கியமான கருத்து:** உயிர்கள் தம்முடைய தாழ்நிலை யினின்றும் படிமுறையால் உயர்நிலை அடைந்து முடிவில் சிவ மேயாய் நிற்கும் என்பது சைவ சித்தாந்திகள் எல்லோர்க்கும் உடன்பாடாகும். எல்லாவற்றிற்கும் மேலான பரசிவ நிலையை அடைதற்குரிய உயிர் அச்சிவத்தின் தடத்த நிலைகளாகிய நவந்தரு பேதங்களிலும் நிற்கும் என்பதனால் வரும் குற்றம் ஒன்றும் இல்லை. ஆகவே நவம்தரும் பேதங்கள் சம்புபட்சத் திலும் உண்டு; அணுபட்சத்திலும் உண்டு என்பது உண்மையே யாகும். ஆயினும் தடத்த நிலையில் அதிகாரம் அல்லது தலைமைப்பாடு என்பது— அஃதாவது உலகத்தைச் செயற்படுத் தும் நிலை— மகேசுரனுக்குமேல் இல்லாமையால் அணுபட்ச பேதங்கள் **மகேசுரனுக்குமேல்** இல்லை என்று சொல்லப் படும். இந்த நுணுக்கத்தை உளங்கொள்ளல் வேண்டும்.

மேலும், இறைவன் உயிர்களோடு உடனாய் நின்று எல்லாவகையிலும் உதவுதல் அவனது தடத்த நிலையாதலால் **மகேசுவரனுக்குக்கீழ்** சம்புபட்சம் இல்லை என்றலும் கூடாத

ததே ஆகும். ஆயினும், உலகத்தைத் தோற்றுவித்தல் நிலை நிறுத்தல் ஆகிய இரண்டு செயல்களும் ஒடுங்குதல் தொழிலுள் அகப்பட்டு நிற்றலால் இவற்றுக்குரிய அயன் மால்களின் வடிவம் முதலியன அணுபட்சத்திற்கே உரியன எனவும் ஒடுக்கம் முதலிய தொழில்கட்குரிய மகேசுரன் முதலியோரது வடிவம் முதலிய சம்புபட்சத்திற்கே உரியன எனவும் பாகுபாடு செய்யப்பட்டமையின் 'மகேசுரனுக்குக்கீழ் சம்பு பட்சம் இல்லை' எனவும் கூறப்படும் என்பதை அறிந்து தெளியலாம். எனவே, மகேசுரனுக்கு மேல் செல்லும் உயிர்கள் இந்நிலை யில் உண்டாகும் இன்பங்களை மகிழ்ந்து நுகருமேயன்றி உலகத்தைச் செயற்படுத்தல் இல்லை; மகேசுரனுக்குக் கீழ்வரும் சம்பு பட்சங்களது உண்மை தத்துவ உணர்வு கைவரப்பெற்றோருக்கு அன்றி ஏனையோரால் உணர்தல் இயலாது. இந்நுண்ணிய கருத்தே மேற்குறிப்பிட்ட கூற்றிற்குப் பொருளாகும் என்பதைச் சிந்தித்து உணரலாகும்.

இவ்வாறாக, இறைவன் உலகத்தைச் செயற்படுத்துதல் தானே செய்தல், பிறர் வாயிலாகச் செய்வித்தல் என்ற இரு வகையில் நடைபெறும் என்பதும், இவற்றுள் தானே செய்தல் எவ்விடத்தும் உளது என்பதும், பிறர்வாயிலாகச் செய்வித்தல் அதை அவன் விரும்பிய வழி மகேசுவரனுக்குக் கீழ் அனந்தர் உருத்திரர் முதலியவரிடத்தே நிகழும் என்பதும் அறிந் தவையே. இச் 'செய்வித்தல், 'சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி' என்ற மூன்று நிலைகளில் 'வைகரி, மத்திமை' என்ற வாக்குகளிலும் 'காலம், கலை முதலிய முப்பத்தொரு தத்துவங் களிலும் நடைபெறுவதாகும்; 'செய்தல்' என்பது அதீதம் முதலிய ஐந்து நிலைகள், சூக்குமை முதலிய நான்கு வகை வாக்குகள் சிவதத்துவம் முதலிய முப்பத்தாறு தத்துவங்கள் ஆகிய அனைத்திலும் திகழ்வதாகும். இவை யாவும் தத்துவங்

களின் இயல்பை விரித்துக் கூறுமிடத்து இனிது விளக்கம் எய்தும்.

சிவபெருமானுக்குக்கீழ் செயலாற்றும் 'அயன், அரி, அரன்' என்னும் காரணக் கடவுளர்க்கெல்லாம் வடிவம் தொழிலுமாக ஆகமங்கள் புராணங்கள், இதிகாசங்கள் இவற்றில் கூறப்பெற்றுள்ளன; இவர்களுக்குள்ளே அமைந்த வேறுபாடுகளையும் ஆங்குக் காணலாம். மாசுடை உலகில் நிற்பினும் மக்கள் போலன்றி பொதுச் சிவபுண்ணியத்தால்[71] ஏதோ ஒரோ வழித்தூய உலகில் அரிதிற் சென்று இறைவனின் உண்மைத் திருமேனியை அரிதிற் கண்டு திரும்பக் கூடுபவர் கள் தேவர்கள்; இவர்களுள்ளும் மேற்கூறியவற்றைச் சிறிது எளிதிற் பெறக் கூடியவர்கள் இந்திரன் முதலிய இறையவர் கள். இவ்விருவகைத் தேவர்கள் போலன்றி தமது உண்மைச் சிவபுண்ணியத்தால் தூய உலகத்தைப் பெற்று இறைவனை உண்மைத் திருமேனியில் எளிதிற் கண்டு வாழ்வோர் உருத்திரர்களாவர்.

மற்றும் தேவரும் திசைக்காவலரும், 'அயன், மால்' என்னும் காரணக் கடவுளரும் இறைவனை ஏதோ ஒருகால் காணப்பெற்றாராயினும், தம் உடம்பு, தாம் இருக்கும் உலகு, முதலியவற்றின் சார்பால் பலகாறும் அவனை மறப்பர். தம் தொழிலுக்குத் தம்மையே முதல்வராகவும் கருதி மயங்குவர்; அம்மயக்கம் காரணமாக அத்தொழில் நிகழுங்கால் சிலசமயம் மகிழ்ச்சியும் சிலசமயம் வாட்டமும் உற்றுத் தொடங்குவர். தம்தம் பதவிகளின் உயர்வு தாழ்வுகளில் விருப்பு வெறுப்பு களில் பொருந்துதலும் உடையர். உருத்திரர் நிலையோ

71. மனம் மொழி மெய்களால் சிவபிரானை நோக்கிச் செய்யப் பெறும் நற்செயல்கள் யாவும் சிவபுண்ணியங்களாகும். இவை 'பதிபுண்ணியங்கள்' எனவும் வழங்கப்பெறும்.

முற்றிலும் வேறு. இவர்தம் உடம்பு, இவர்கள் வாழும் உலகு முதலியவற்றின் சார்பால் இறைவனை யாண்டும் மறவாதும், தம்தம் தொழில் நிகழ்ச்சிகளில் தொடக்குறாதும் நிற்பர். எனினும், தம்தம் பதவியது உயர்வு தாழ்வுகளில் விருப்பு வெறுப்புகளை முற்றும் நீங்குவாரல்லர். தேவரின் மேம்பட்ட இந்திரன் முதலிய இறையவர்போல், இவ்வுருத்திரரின் மேம்பட்டோர்' அனந்தர் முதலிய வித்தியேசுவரர் என்பது ஈண்டு அறிந்து துணியப்பெறும்.

தேவர்கள் மூலப்பகுதிக்குமேல் செல்லமாட்டாதவர்கள். இறைவனின் ஆணை உள்ளபொழுது சிறிது காலம் சுத்த வித்தையில் சென்று கடிதின் தம்மிடத்திற்கு மீளுதல் உடைய வர். உருத்திரரோ அவ்வாறின்றிச் சுத்தவித்தையிலே வாழ் பவர்கள். ஆயினும், இவர்கள் அதற்குமேல் செல்லமாட்டாத வர்கள். இறைவனின் ஆணை உள்ள பொழுது ஈசுர தத்துவத் திற்குச் சென்று மீண்டும் சுத்தவித்தையை அடைவர். வித்தி யேசுவரர் ஈசுரதத்துவத்திலேயே வாழ்பவர்கள். மேன்மேல் உள்ளவர்கள் யாவருமே கீழ்கீழ் உலகுகளில் சென்று மீளும் உரிமை பெற்றவர்கள். கீழ்கீழ் உள்ளவர்கள் அவ்வாறின்றி மேலுள்ளவர் ஆணையின்றித் தாமே மேற்செல்லும் உரிமை உடையவரல்லர். இந்த விவரங்கள் தெளிவாக அறியப்பெறுதல் வேண்டும்.

**ஒரு முக்கிய செய்தி**: ஈசுரதத்துவத்தில் மகேசுரனாய் நின்று அனந்தர் முதலியோரைச் சுத்தவித்தையில் செலுத்தி ஆள்கின்ற இறைவனும், சுத்தவித்தையில் உருத்திரனாய் நின்று உருத்திரர்கட்கு எளிதிலும், மால் அயன் முதலியோ ருக்கு அரிதிலும் காட்சியளித்து அவர்கட்கு வேண்டுவன

அவனது வடிவும் பெயரும் வேறுபட்டு நிற்கும் என்பதை உளங்கொள்ளுதல் வேண்டும். **கறைமிடறு உடைமையும் அஃது இன்மையுமே உருத்திரவடிவத்திற்கும் மகேசுர வடிவத்திற்கும் உள்ள வேறுபாடாகும்.** கறைமிடறு நஞ்சுடைமையை உணர்த்துவது; அது மாசுடை உலகத்தார்க்கு அம்மாசு நீக்கி ஆளுதலுடைமையைக் குறிக்கும் சிறப்படையாளமாகும். ஆகையால் உருத்திரனாய் நிற்கும் இறைவன் **சீகண்டபரம சிவன்** என வழங்கப்பெறுகின்றான் என்பது அறியப்படும்.

சீகண்ட பரமசிவனை யோகத்தால் வழிபட்டோர் அவனது உருவத்தையும் பெயரையும் பெறுவர்; இவர்கள் **சீகண்டருத்திரர்** என வழங்கப்பெறுவர். ஆயினும் அவர்கட்குப் **பரமசிவன்** என்ற பெயர் வழங்குதல் இல்லை. ஆகவே பரமசிவனாகிய சீகண்டருத்திரன் இறைவன் ஆகின்றான். சாரூபநிலையினால்[72] அவனது உருவும் பெற்ற சீகண்டருத்திரர்கள் உயிரினத்தவர்கள் ஆகின்றனர். ஆகவே, மாசுடை உலகத்தில் முக்தி அடையும் நிலையிலிருப்போர்க்கு யாண்டும் முக்தியை அருளுபவன் சீகண்ட பரமசிவனே யாவான். ஏனைய பயன்களை அடைய விரும்புவோர்க்கு சீகண்ட பரமசிவனேயாதல், சீண்ட ருத்திரர்களேயாதல் ஏற்றபெற்றியான் முன்னின்று அருளுபவர் என்பது அறிந்து தெளியப்பெறும். சீகண்டருத்திரர் அந்நிலையின் நீங்கி மேல் நிலையை அடைதலும் உண்டு என்பதை நாம் அறிவோமாதலின் அவர்கள் என்றும் ஒருவரே ஆகார் என்பதும் உணரப்படும்.

எல்லையின்றிப் பெரிதாய் நிற்கும் தூய உலகத்தின் ஒருபகுதியே மாசுடை உலகம் என்பதை நாம் அறிவோம்.

---

72. சாரூபம் - நெருங்கி அளவளாவும் உரிமையைப் பெற்றிருக்கும் நிலை

மாசுடை உலகத்திலும் தூய உலகம் உண்டு என்பதையும் தூய உலகத்தில் மாசுடை உலகம் இல்லை என்பதையும் நாம் தெளிந்துள்ளோம். ஆகவே, மாசுடை உலகிலும் இறைவன் சுத்த தத்துவத்தில் தனது சக்தியால் திருமேனி கொண்டு நிற்பான். ஆதலின் மாசுடை உலகில் அவனைக் காண்டலும் அவனை அணுகி நிற்றலும் கூடா என்பதில்லை. இதனால் அறுபான் மூன்று நாயன்மார்கட்கும் ஆளுடைய அடிகள், நம்பியாரூரர்க்கும் வெளிநின்றருளியவன் பரமசிவனேயன்றி உருத்திரர் அல்லர் என்பதையும் அறிய முடிகின்றது. அவர் கள் யாவரும் பெற்றது தூய உலகப்பேறேயன்றி மாசுடை உலகப் பேறன்று என்பதையும் உணர்ந்து தெளியலாம். மேலும், இதனாலேயே இறைவன் உலகப் பெருநலத்தின்பொருட்டு நிகழ்த்திய 'வேகம், போகம், யோகம்' என்ற முத்திறத்து நிகழ்ச்சிகளாகத் திருவிளையாடற்புராணம், பெரியபுராணம் போன்ற புராணங்கள் நுவலும் நிகழ்ச்சிகள் அனைத்தும் பரமசிவனுடையனவேயன்றி உருத்திரனுடையன அல்ல என்பதையும் அறிகின்றோம். மற்று, ஒரோ ஓரிடத்து ஒரோ வொரு காலத்து ஒரோ ஒருவர் பொருட்டு நிகழ்ந்த நிகழ்ச்சி களே உருத்திரனுடையன என்பதையும் தெரிந்து உணர்ந்து கொள்ள வேண்டும். திருமுறைகளிலும் சிவாகமப் பொருள் களை வடித்தெடுத்துக் காட்டும் சிவஞானசித்தியாரிலும் இவை தெரிவிக்கப் பெற்றுள்ளன என்பதையும் சிந்தித்து உணர்தல் வேண்டும்.

## (11) சிவக்குமாரர்கள்—சிவகணங்கள்:

இவர்களைப் பற்றியும் சிறிது விளக்கம் காண்போம். உலகில் ஒருவருக்கு யாதொரு தலைமைப் பதவி வருவது இறைவனது திருவருளால்தான் என்பதை நாம் உணர்தல் வேண்டும். தலைமையைத் தரும் திருவருள் '**அதிகார சக்தி**'

எனப்படும். தலைமைகள் பலவிதப் ப(
சக்தியும் பலவாறாகக் கூறப்பெறும். அவ
வரிடத்தும் ஒவ்வோர் அதிகார சக்தி பதிந்து
தலைமையை நடத்துகின்றது. இவ்வுண்மை
உணர்ந்து அத்தலைமையில் பற்றின்றி நி
அவர்கட்கு அத்தலைமைப் பதவி கிடைத்
நின்ற பிராரத்த கன்மம் (நுகர்வினை) உள்
உடலூழாய்க் கழியும். அதனால் அவர்க
பின்னர் இறைவனோடு இரண்டறக் கல
அடைவர். அவர்கள் அப்பதவியைத்
பெற்றதாகக் கருதி அதில் அழுந்துவோர் டெ
பிராரத்தம் நீங்கியவுடன் பிறிதொரு பிற
இவ்வகையில் மால், அயன், இந்திரன் (
பலரும் பெத்த நிலையில் உள்ளவர்களே
தெளியப்படும். உருத்திரரும், வித்தியேசுர
இருப்பவர்கள். இவர்கட்கு மேல்—அஃதா
மேல்—அணு சதாசிவர் முதலாகச் '**சிவர்**' எ
உளர். அவர் அனைவரும் **முத்தர், அ**
இக்கூறிய முத்திறத்தவர்களுள் **சிவக்**
வழங்கப்பெறுபவர்கள் **சிவர்** என்றே
எனினும், இவரை உருத்திரருட் சிறந்தோரா
உளர். இதுவே தேவர் முதலியோரிடையே
கும். இன்னோர் உண்மையும் உண்டு. அ

**இன்னோர் உண்மை—விளக்கம்:** 'பெத்தநிலையில் உள்ளோர்க்குப் பிறப்பு நீங்காது; முத்திநிலையில் உள்ளோர்க் குப் பிறப்பு இல்லை'—என்பதை நாம் அறிவோம். இதனால் மால், அயன், இந்திரன் முதலிய தேவர்கட்குப் பிறப்பு நீங்கிற்றிலது என்பது அனைவர்க்கும் உடன்பாடு[73] என்பது அறியப்படும். இடைநிலையில் உள்ள உருத்திரருக்குப் பிறவிசிறுபான்மை நிகழினும் நிகழும். எடுத்துக்காட்டாக ஆலால சுந்தரருக்கும், அநிந்திதை, கமலினி என்பார்க்கும் பிறப்பு நிகழ்ந்தமையைக் கூறலாம்.[74] முருகக் கடவுள் உருத்திர சன்மராய் வந்தமை கூறும் ஒரு வரலாறு பற்றியே அக்கட வுளை உருத்திரராகக் கருதுவோரும் உளர். அங்ஙனமே ஆனைமுகத்தோனையும் உருத்திரராகக் கருதுவோரும் உண்டு. ஆயினும் அவர்கள் பிறப்பெய்தினமைக்கு நூல்களில் ஆதாரம் இல்லை. ஆகவே அவர்களைச் '**சிவர்—அபரமுத் தர்**' என்றலே பொருந்தும் என்பதை ஈண்டு அறிந்து தெளிய வேண்டும்.

---

73. வைணவர்க்கு இஃது உடன்பாடல்ல. அவர்கள் திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொள்பவர்கள். இன்றுள்ள பெரும்பாலான வைணவர் சைவர்கட்குச் சமயப் பொறை இல்லை. அவரவர்கள் தத்தம் சமயத்தைப் பற்றியும் சமயக் கடவுளர் களைப் பேசுவதுடன் நிறுத்திக் கொள்ள வேண்டும். பிற சமயக் கடவுளரை எதற்கும் இழுத்துக் கொண்டு பேசலா காது. இளைஞர் சமுதாயம் இதனை மேற்கொண்டால் சமயப் பொறை பெருவழக்காக அமைந்து விடும். எல்லாச் சமய உண்மைகளையும் விருப்பு வெறுப்பின்றிக் கற்க வேண்டும் என்ற உந்தல் இருப்பின் காழ்ப்புணர்வே ஏற்பட வழி இல்லை.

74. நம்பியாரூரர் வரலாற்றை நோக்கி இதன் விவரத்தை அறியலாம். '**தம்பிரான் தோழர்**' என்ற எனது நூல் ஓரளவு துணையாக இருக்கும்.

திருஞான சம்பந்தரை 'முருகக் கடவுளே' என்று கருதுவோரும் உளர். இங்ஙனம் கருதினால் அவர் உருத்திரரா கின்றார். முருகக் கடவுளைச் **'சிவர்'** என்று கருதினால் ஞானசம்பந்தர் உருத்திரர்களுள் ஒருவரது அவதாரத்தினர் ஆகின்றார். இங்ஙனம் இருதிறக் கொள்கைகள் சித்தாந்தத்தில் இருத்தல் பற்றியே **சேக்கிழார் பெருமான்,**

> பண்டுதிரு வடிமறவாப்
> பான்மையோர் தமைப்பரமர்
> பண்டுதவ மறைக்குலத்தோர்
> வழிபாட்டின் அளித்தருள[75]

என்று ஞானசம்பந்தப் பெருமானைப் பொதுப்பட அருளிச் செய்திருத்தல் சிந்தித்தற்குரியது.

**இன்னொரு கருத்து:** உருத்திரசன்மராயும் ஞான சம்பந்தராயும் பிறந்தவர்கள் பிறப்பிறப்பற்ற முழுமுதற் கடவுளாகிய முருகப்பெருமானை வழிபட்டு அவரது உலகினை அடைந்த அமரசுப்பிரமணியர்கள் ஆயினர் என்று கருதுவோரும் உளர். இம்முருகக் கடவுள் சம்புபட்சமாகிய முருகக் கடவுள் அன்றி வேறொருவர் அல்லர். அவரைச் சிவ பெருமானுக்கு வேறாகக் கருதினால் அவர் அபரமுத்தராகிய சிவராகின்றார். ஆகவே, முருகப் பெருமானைச் சிவபெருமா னுக்கு வேறல்லாதவராகக் கருதியும், அவரை வேறானவராகக் கருதியும் வழிபட்டு அமரசுப்பிரமணியராவோர் பிறப்பற்ற நிலையை அடையின் அவர் அபரமுத்தராகிய சிவர் ஆகின் றார். பிறவியுறும் நிலையில் இருப்பின் அவர் இடைநிலையில் இருக்கும் உருத்திரராகின்றார். இக்கருத்தினையும் உளங்கொள் ளல் வேண்டும். இங்ஙனமே வைரவர், வீரபத்திரர் முதலியோ ரின் நிலைகளும் அமையும் என்பதும் தெரிந்து தெளியப்படும்.

---

75. பெ. புரா. திருஞான. 55

இதுகாறும் கூறியவற்றால் பதியாகிய இறைவனையும் பசுக்களாகிய உயிர்களையும் அவர்களின் தன்னியல்பு (சொரூப இலக்கணம்) பற்றிப் பிரித்தறிந்து கொள்ளலாமேயன்றி அவர்தம் பொது இயல்பு (தடத்த இலக்கணம்) பற்றி அறிந்து கொள்ளுதல் அரிதாகும். பதிபசு இவற்றின் தன்னியல்புகளுள் (Essential nature) எல்லாராலும் எளிதில் அறியத்தக்கனவாக உள்ளவை இவை; பதி இயல்பாகவே பாசத்துட்படாது தூய்மை யாக நிற்கும். பசு இயல்பாகவே பாசத்துட்பட்டு மாசுபட்டு நிற்கும். 'பாசம் இல்லையேல் பிறப்பு இல்லை; பாசம் உண்டேல் பிறப்பு உண்டு' என்பதை நாம் அறிவோம். ஆகவே எங்காயினும் எவ்வாறாயினும் 'பிறப்பினை உறுவது உயிர்' என்றும், 'பிறப்பில்லாதது கடவுள்' என்றும் 'நாம் உணர்ந்து தெளிதல் வேண்டும். அங்ஙனம் நாம் உணர்ந்தால் 'சிவபெருமான் ஒருவனே கடவுள்' என்பதையும், 'ஏனைய எல்லோரும் உயிரினத்தவர்' என்பதையும் நாம் தெளிகின் றோம். ஆதலின் 'சிவபெருமானே முதற்கடவுள்: ஏனையோர் முதற்கடவுள் அல்லர்' என்று வரையறுத்துக் கூறுவோர் பதியின் பிறப்பின்மையையுமாகிய அவர்களின் தன்னியல்பு பற்றிக் கூறுகின்றனரேயன்றி, சிவன், மால், அயன், இந்திரன் இவர்தம் பெயர்கள், வடிவு, தொழில் ஆகிய பொது இயல்பு பற்றிக் கூறுகின்றார் அல்லர் என்பதை அறிகின்றோம். எனவே, பலகோடியினராகிய தேவர்கள், உருத்திரர்கள், சிவர் கள் முதலிய அனைவர்தம் இயல்புகளை யாவர்க்கும் முன்னோனும் முதல்வனுமாகிய பரமசிவனது இயல்பினையும் ஐயம் திரிபின்றித் தெளியலாம். சிவக் கூறுபற்றிக் கூறிவந்த இவையெல்லாம் சக்திக் கூறாய் நிற்கும் தேவியர் அனைவர்க்கும் பொருந்துதலையும் சிந்தித்து உணரலாம்.

## (12) சிவன்—சக்தி ஒன்றா? வேறா? விளக்கம்.

சம்பு பட்ச அணுபட்ச விளக்கங்களாலும் பிறவற்றாலும் இறைவன் தனது செயல்களைத் தனது சக்தியினாலேயே நடத்துகின்றான் என்பதை உணர்ந்தோம். எனினும் இறைவனும் அவன் சக்தியும் ஒன்றா? அல்லது வேறா? என்று எழுகின்ற ஐயத்தையும் தெளிவிப்போம்.

முதல்வனும் அவனது சக்தியும் வேறல்ல; ஒன்றே. 'பொருள்' என்ற சொல் இரண்டு பொருள்களைத் தரும். சொல்லால் குறிக்கப்பெறுவன எல்லாம் பொருள் என்பது ஒன்று. இதுவே '**பொருள்**' என்ற சொல்லின் நேர்பொருளாகும். 'பல பெற்றிகளுக்குச் (தன்மைகளுக்குச்) சார்பாய் நிற்கும் பொருள்' என்பது மற்றொன்று. இதுபலவற்றிற்கும் பொதுவாக நிற்கும் ஒருபெயரை, அவற்றுள் தலைமையுடைய ஒன்றனை மட்டும் குறிப்பதாகக் கொள்ளப்படும் முறையில் வரும் பொருளாகும். பல பெற்றிகட்குச் சார்பாய் நிற்கும் பொருள், குணத்தை நோக்கிக் '**குணி**' என்றும், அவயவத்தை நோக்கி '**அவயவி**' என்றும், உடைமையை நோக்கி '**உடையது**' என்றும் இங்ஙனம் பலவாறாகக் கூறப்படும். இதற்கு அமைந்த நேர் சொல் 'முதல்' என்பது. எனினும், 'பொருள்' என்பது முதல் என்னும் கருத்திலேயே பெரும்பாலும் வழக்கின்கண் உள்ளது. ஏனையவை குணம் அல்லது பண்பு, அவயவம் அல்லது சினை—உறுப்பு, உடைமை முதலிய சொற்களால் வழங்கப் பெறுகின்றன. முதல் என்பதனை வடநூலார் 'திரவியம்' என்று வழங்குவர். 'திரவியமோ' தமிழில் 'பொருள்' என்றே வழங்குகின்றது. தமிழில் 'பெயர்' என்பது 'முதல்' என்பதனையே குறித்து பின்பு அது முதலினைக் குறிக்கும் சொல்லுக்கு ஆயிற்று. பின்பு இலக்கணத்தில் பெயரோடு ஒப்ப வேற்றுமையை ஏற்பன எல்லாம் 'பெயர்'

எனப்பட்டன. இதனை, '**பெயரிற் றோன்றும் பாலறி கிளவி யும்**'[76] என்னும் தொடராலும் அதன் உரைகளாலும் அறிய லாகும்.

இம்முறையில் நோக்கினால் சிவமும் சக்தியும் வேறு வேறு பொருள்களல்ல; அஃதாவது இரண்டும் இரண்டு முதல்கள் அல்ல; சக்தி குணமும், சிவன் அதனையுடைய குணியுமாகும். எனவே, சிவம் முதலாகின்றது; சக்தி அதன் தன்மையாகின்றது; இதனால் முதல் இன்றி அதன் பெற்றி இல்லை; பெற்றி இன்றி முதல் இல்லை என்பது தெளிவாகின் றது. ஆகவே சிவமும் சக்தியும் ஒருவாற்றான் இரண்டாகப் புலப்பட்டாலும் உண்மையில் அவை இரண்டும் ஒன்றே யாகும்.

சிவம் இன்றிச் சக்தி இல்லை: சக்தியின்றிச் சிவமும் இல்லை; சிவமேசக்தி; சக்தியே சிவம். சிவஞான சித்தியாரும்,

அருளது சக்தியாகும்
அரன்றனக் கருளை யின்றித்
தெருள்சிவம் இல்லை; அந்தச்
சிவம்அன்றிச் சக்தி இல்லை[77]

என்று இதனைத் தெளிவாக்குவதைக் காணலாம். இக்கால அறிவியல் மேதை **ஐன்ஸ்டைன்** என்பார். தந்துள்ள,

$$E = mc^2$$

என்னும் மந்திரமும் (E–ஆற்றல்; m–பொருண்மை; c–ஒளி வேகம்) அம்மையப்பர் நிலையிலுள்ள இரகசியத்தை – அணுவின் அற்புத அமைப்பை – விளக்குகின்றது. 'சடமே சக்தி' (Mass is Energy) என்று அம்மந்திரம் கூறுகின்றது.

76. தொல். சொல். கிளவியாக்கம் - 11
77. சித்தியார் - 5.9

பொருண்மையே ஆற்றலாக மாறுகின்றது என்பது ஐன்ஸ் டைன் உணர்த்திய உண்மை. இவ்வாறு முதலுக்கும் அதன் பெற்றிக்கும் உள்ள பான்மை இயல்பைத் தமிழில் **தற்கிழமை** என்றும் வடமொழியில் **சமவயம், தாதான்மியம்** என்றும் வழங்கப் பெறுகின்றன. சிவன் ஒன்றேயாக அதன் சக்தி பலவாகச் செயற்படுகின்றது என்பது முன்னரும் விளக்கப் பெற்றுள்ளது.[78] ஒருவனாகிய இறைவன் பலவாய்ப் பரந்த எல்லா உலகு உயிர்களோடும் கலந்து நிற்கின்றான் என்பதை,

நிலம்நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்
உலகே ழெனத்திசை பத்தெனத்தான் ஒருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ![79]

என்று **மணிவாசகப் பெருமானும்** விளக்கியுள்ளதைக் கண்டு தெளியலாம். இதுதான் அவனது வியத்தகு சக்தி. சாதாரண மக்கட்கு விளங்காப் புதிர். ஒருவனாய் இருக்கும் இறைவன், பலபொருள்களிலும் நிறைந்து நிற்றற்குக் கதிரவன் – கதிர், விளக்கு – ஒளி என்ற எடுத்துக்காட்டுகளால் விளக்கின மையை ஈண்டு நினைவு கூரலாம்.

பல்பொருள் சக்திகளைத் தொகுத்துக் கூறி விளக்கினால் மேலும் தெளிவு பிறக்கும். இனி 'பொருள்' என்று சொல்லப் பெறுவன யாவும் தத்தம் அளவிற்குச் சக்திகளையுடையவை. நியூட்டனின் விதிகளாலும் இதனை அறிந்து தெளியலாம். ஐம்பெரும் பூதங்களுள் ஆகாயமே பெரியது; ஏனைய பூதங்களின் சக்தியைவிட இதன் சக்தி பெரியது. ஏனையவை யாவும் இதனுள் அடங்கி நிற்கின்றன. 'ஏனைய பூதங்கள் உள்ள இடங்களில் ஆகாயம் உள்ளது; ஆகாயம் உள்ள

78. இந்நூல் - பக் 49-51

79. திருவா. திருத்தோணோக்கம் - 5

இடங்களிலெல்லாம் ஏனைய பூதங்கள் இல்லை' – என்பதைச் சிந்திக்க வேண்டும். எல்லாவற்றிலும் மிகப் பெரிய பொருளாகிய (பிரம்மம் என்ற வடசொல்லின் பொருளும் இது தான்) இறைவனது சக்தியை ஆகாயத்தோடு ஒப்புமைப்படுத்தி வழங்குவர் நம் நாட்டு ஞானச் செல்வர்கள். **"தன்னருள் வெளிக்குளே, அகிலாண்ட கோடியெல்லாம் தங்கும் படிக்கு இச்சை வைத்து"**[80] என்று **தாயுமான அடிகளும்** சிவத்தின் சொரூப இலக்கணத்தைக் கூறுவதனால் இது தெளிவாகின்றது. ஆகாரபுவனத்தை **'அருள் வெளி'** என்று அடிகள் கூறியுள்ள நுட்பத்தை உணர்ந்து மகிழலாம். மேலும் அந்த ஞானச் செல்வர் பதியையே **'சுகாரம்பப் பெருவெளி', 'சித்தாந்தப் பேரொளி', 'தீதில் பொருள்', 'பூரண ஆனந்தப் பொருள்', 'பெரிய பொருள்'** ('பிரம்மம்' என்பதன் தமிழாக்கம்) என்றெல்லாம் குறிப்பிட்டிருப்பதையும் காணலாம்.[81] 'பொருள் வணக்கம்' என்ற பகுதியில் உள்ள 12 திருப்பாடல் களும் இறைவனின் **'சொரூபநிலையைப்'** பளிங்கெனப் பகர்ந்து விளக்கியிருப்பதை உணர்ந்து தெளியலாம்.

பூதம் முதலிய தத்துவங்களும் அவற்றின் காரியங்களா கிய உலகங்களும் **'மாயை'** என்ற ஒரு பொருளாகும். இதனால் 'மாயை' மிகப் பெரிய சக்தி என்பது தெளிவாகும். **'கன்மம்'** என்பது இவ்வுலகங்களில் எங்கும் நடைபெறும் எல்லாச் செயல்களிலும் உண்டாகி எங்குச் செல்லினும் அங்கு வந்து பயன் கொடுக்கக் கூடியதாக இருப்பதால் மாயையின் சக்தியளவிற்குக் கன்மத்தின் சக்தியும் நிறைந்து நிற்றல் விளங்கும் **'ஆணவம்'** என்ற மூல மலத்தின் சக்தி அளவில் வாதனவாகிய அனைத்து உயிர்களையும் மறைத்து நிற்பதால்

80. தா.பா. பரசிவ வணக்கம் -1

81. மேலது - பொருள் வணக்கம் - 1

உயிரின் (சித்தின்) ஆற்றலளவிற்கு ஆணவத்தின் சக்தியும் நிறைந்துள்ளமை புலனாகும்.

'ஆணவம், கன்மம், மாயை' என்னும் பாசங்களின் சக்தியாவும் சடசக்திகளாகும். இறைவனுடைய சக்தி சிற்சக்தி; அறிவு வடிவமாய்த் திகழும் சக்தி. **தாயுமான அடிகளும் 'சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே'**[82] என்று இதனைக் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.

'பதி பசு பாசம்' என்ற மூன்று பொருள்களில் சக்திகளின் பாசத்தின் சக்தி சடசக்தி; அறிவற்ற சக்தி, பதி, பசு ஆகிய வற்றின் சக்திகளிலும் பசுவின் சக்தி தூல சக்தி; இதனைச் '**சிற்றறிவு**' என வழங்கலாம். அதாவது பசுவின் அறிவு அஃது அடையும் பொருளின் தன்மையால் மாறிவிடும் தன்மையை யும் உடையது. இதனைச் சித்தாந்தம் '**சார்ந்ததன் வண்ண மாதல்**' என்று பேசும்.

"நிலத்தியல்பால் நீர்திரிந்தற்றாகும்"

என்ற உவமையால் வள்ளுவரும் விளக்கிப் போந்தார். இச்சிற் றறிவு–பசுவின் அறிவு–பாசத்தால் மறைக்கக் கூடியதாகின்றது.

**பதியின் அறிவு** இதற்கு நேர்மாறானது; அது தன்னை அடைந்த பொருள்களையெல்லாம் தன் வண்ணமாகச் செய்து விடும் தன்மையது. இது தன்னை அறிவிப்பதற்கும் பிறிதொரு பொருளை வேண்டாதது; தானே அறிவதன்றியும் பிறிதொன் றினை அறிவிக்கவும் வல்லது. இதுபற்றியே இது '**சூக்கும சித்து**' என்றும் '**பேரறிவு**' என்றும் வழங்கப் பெறுகின்றது. இத்தன்மைகளால் பதியின் அறிவு பாசத்தால் மறைக்கப் பெறும் தன்மையற்றதாகி விடுகின்றது. இத்தகைய நுண்ணிய பேரறிவாகிய சிற்சக்தியினால்தான் இறைவன் "**பார்க்குமிடம்**

82. மேலது. தேசோமயானந்தம் - பாடல்களைக் காண்க.

எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தமாகித்"[83] திகழ்கின்றான். ஏனைய பொருள்கள் ஒவ்வோர் அளவில் நிற்பினும் அவை முழுநிறைவை–பரிபூரணத் தன்மையை– பெற்றவை அல்ல. இறைவனாகிய முதற் பொருள் ஒன்றே பரிபூரணத்துவம் பெற்றுள்ளான் என்பது அறிந்து தெளியப்படும். பாரதியாரும்,

'பரிபூரணனுக் கேஅடிமை செய்து வாழ்வோம்'.[84]

என்று **'சுதந்திரப் பள்ளுவை'** முடிக்கும் இறுதியடியிலுள்ள **'பரிபூரணன்'** என்ற சொல் இறைவன் ஒருவனையே முழுநிறைவுப் பொருள் என்று குறிப்பிடுவதாகக் கருதலாம்.

**'பரிபூரணத்துவம்'** என்பதுபற்றிச் சில சொற்கள். 'பூரணத்துவம்' என்பது பிறபொருளின் இன்மையன்று; பிறபொருள்களும் இருக்க, அவற்றின் சக்தியிலே தனது சக்தி உடலில் உயிர்போலக் கலந்து நிற்பதே 'பூரணத்துவம்' ஆகும். இவ்வாறு எல்லாப் பொருள்களிலும் இறைவன் இரண்டறக் கலந்து நிற்கும் நிலையையே.

பண்ணின் ஓசை; பழத்தின் இன்சுவை'[85]

என்று பேசுவர் **'ஆளுடைய அடிகள்'**. மெய்கண்டாரும்,

**பண்ணையும் ஓசையும் போலப் பழமதுவும்**
**எண்ணும் சுவையும்போல் எங்குமாம் அண்ணல்தான்**[86]

என்று கூறுவர். இதுவே 'அத்துவிதம்' ஆகும் என்பதையும் அறிந்து தெளியலாம். எனவே சக்தியும் சிவமும் ஒன்றென்பது உறுதிபபடுகின்றது.

---

83. தா.பா. பரிபூரணானந்தம் - பாடல்கள் தோறும் இச்சொற்றொடரைக் காணலாம்.
84. தே.கீ. சுதந்திரப் பள்ளு - 5
85. அப். தேவா. 5.47:8
86. சி.ஞா.போ. சூத். 2 அதிகர - 1

இது காறும் (1) முதல் (12) தலைப்புகளில் இறைவனது பொதுஇயல்புகளைக் (தடத்த இலக்கணம்) கண்டோம். இனி அவனது உண்மை இயல்பு (சொரூப இலக்கணம்)களைக் காண்போம்.

## (13) பதியை அறியும் முறை

இறைவன் ஐந்தொழில்களைப் புரியாமல் வாளா இருக்கும்போது வடிவு பெயர் முதலியன ஒன்றும் இன்றி எல்லையற்ற பொருளாக நிற்பன். இதுவே அவனது சொரூப நிலை; உண்மை இயல்பு.

இறைவன் உயிர்களால் அறியப்படுபவனும் அல்லன்; அறியப்படாதவனும் அல்லன்; இவ்விரண்டு பண்புகளும் அவனிடம் பொருந்தியுள்ளன. 'உயிர்களால் அறியப்படாதவன் இறைவன்' என்பதற்கு 'ஏனைய பசு பாசங்களை அறியும் முறையில் அறியப்படாதவன்' என்பது பொருளாகும். 'அறியப் படுபவன்' என்பதற்கு 'வேறு முறையில் அறியப்படுபவன்' என்பது பொருளாகும். 'அருவம், உருவம், அருவுருவம்' என்று மூவகையாகக் கூறிய பொருள்கள் யாவும் பாசப் பொருள்கள். இவற்றை உயிர் கண் முதலிய புறக் கருவி களையும் மனம் முதலிய அகக் கருவிகளையும் வாயிலாகக் கொண்டு அறியும். அங்ஙனம் அறியுமிடத்து உயிர் தன் உண்மைநிலையை அறியாமல், தனக்கு வேறாய அப்பொருள் களே தான் என்று மயங்கி அறியும் இவ்வறிவு 'பாச அறிவு' அல்லது **'பாச ஞானம்'** என்று வழங்கப் பெறும். **'சுட்டறிவு'** எனப்படுவதும் இதுவேயாகும். அறிதற் கருவிகளாகிய பொறிகளும், அவற்றால் அறியப்படும் பொருள்களாகிய புலன்களும் ஆகிய அனைத்தும் பாசமேயாதலின், 'பாசத்தைப்

பற்றி நின்று, 'பாசத்தை அறியும் அறிவு பாச அறிவாகும்' என்பது உளங்கொள்ளத் தகும்.

இங்ஙனம் பாசங்களையே தானாக மயங்கி அறிந்து வரும் உயிர் அறிவு முதிர முதிர கருவியும் பொருளுமாகிய அனைத்தும் சடப்பொருள் (அறிவில்லாத பொருள்) ஆகும் என்பதன்றிச் சித்துப் பொருள் (அறிவுடைப் பொருள்) ஆகாமையையும் அறியும். மேலும், தான் சித்துப் பொருள் என்பதையும் அறிந்து தன்னை அனைத்திலும் வேறாகவும் காணும். இங்ஙனம் காணுங்கால் கருவிகரணங்களுக்குத் தான் முதல்வனாதலை உணரும். இவ்வுணர்வு தன்னையே பதிப் பொருளாக மயங்கி அறியச் செய்யும். இந்த அறிவுதான் '**பசு அறிவு**' அல்லது '**பசுஞானம்**' என்று வழங்கப்பெறும். உயிர் பாசத்துக்குட்பட்ட பசுவாதலால், 'பசுவிற்கு மேல் உள்ள பதிப்பொருளை அறியமாட்டாது, பசுவையே பதியாக அறிந்து நிற்கும் அறிவு 'பசு அறிவாம்' என்பது கருத்தில் இருத்தத் தகும்.

இதை இரண்டு கருத்துகளையும் **நாவுக்கரசரின்** திரு மொழியையும் துணையாகக் கொண்டு விளக்கலாம்.

மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி
    மயானத்தான் வார்சடையான் என்னின் அல்லான்;
ஒப்புடையன் அல்லன்; ஒருவன் அல்லன்;
    ஓர்ஊரன் அல்லன்; ஓர்உருவம் இல்லி;
அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்
    அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்,
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
    இவன்இறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே.[87]

இறைவனின் சொரூப நிலையை விளக்கும் இத்திருத்தாண்ட

87. நாவுக். தேவா. 6.97:10

கம் நல்லதோர் எடுத்துக்காட்டு. இதிலுள்ள '**இப்படியன்... காட்டொணாதே**' என்ற பகுதி 'இறைவன் பாசஞான பசு ஞானங்கட்கு அகப்படாதவன்' என்பதே கருத்தாதலைக் கண்டு தெளியலாம்.

மேலும், உயிர்கள் பெரும்பான்மையும் அறிவது பாசங் களையே. அப்பாசங்கள் 'அருவம், உருவம், அருவுருவம்' என்னும் மூன்று கூறுகளையுடையன. இக்கூறுகளில் ஒன்றிலும் இறைவனது தன்மை அகப்படாது. இதனை வியந்தே,

'எந்தை யாரவர் எவ்வகை யார்கொலோ'[88]

என்ற ஞானசம்பந்தப் பெருமானின் திருமொழியும் எழுந்தது. இவ்வெடுத்துக்காட்டுகளால் இறைவனைச் 'சொல்லொணாத பொருள்' என்றோ, 'ஐயத்திற்குரிய பொருள்' என்றோ கருதி மயங்குதல் கூடாது என்பதையும் அறிந்து தெளியலாம்.

இறைவன் 'மனவாக்குகளைக் கடந்தவன்' என்று கூறுவதிலும் உண்மைப் பொருள் உண்டு. 'மனம்' என்பது பசு ஞானத்தையும் 'வாக்கு' என்பது பாசஞானத்தையும் குறிக்கும் என்பது உணரப்படும்.

இந்த இரண்டுவித ஞானங்களாலும் இறைவனது சொரூப நிலையை அறிய இயலாது. ஆகவே, இறைவன் இவ்வகை யில் அறியக் கூடாதவனாகின்றான். இங்ஙனம் எவ்வகையிலும் எவரும் எப்பொழுதும் அறியாத பொருள் ஒன்று உள்ளது என்று கூறினால் அஃது உள்ளது எனக் கோடலே ஐயப் பாடாய் விடும். அதனால் பயன் விளைதலும் இயலாது. எடுத்துக் காட்டாக ஆமை மயிராலான கம்பளியும், ஆகாயப் பூவாலான மாலையும் உள்ளன எனக் கூறின், அவற்றை யாவரே அறியவல்லார்? அறிந்து பயன் கொள்வோர் யாவர்?

88. சம்ப. தேவா. 3.54:3

உணராத பொருள்சத் தென்னின்
　　ஒருபயன் இல்லை; தானும்
புணராது; நாமும் சென்று
　　பொருந்துவ தின்றாம் என்றும்;
தணவாத கருமம் ஒன்றும்
　　தருவதும் இல்லை; வானத்
திணரார்பூந் தொடையும் யாமைக்
　　கெழுமயிர்க் கயிறும் போலும்[89]

என்பது சிவஞான சித்தியாரின் திருமொழி. இங்ஙனமே இறைவன் ஒரு காலத்தும் ஒருவராலும் அகப்படான் என்றிருக்குமாயின் அவன் உளன் என்பதும், அவனால் பயன் பெறுதலும் இல்லையாய் முடியும். ஆகவே, அவன் ஒருவகையில் அறியப்படுபவனேயாவன். அஃதாவது இறைவனது அருளையே தம் அறிவுக்குப் பற்றுக்கோடாகக் கொண்டு அறிதலாகும். இதுவே **பதிஞானம்** எனப்படும்.

**பதிஞானம்—விளக்கம்:** உயிர் தான் அறிவுடைய பொருள் என்பதை அறிந்தவுடன், தானே அறிவாய் இல்லாது, அறிவிப்பதொரு பொருளால் அறியும் அறிவாய் இருத்தலை உணரும். அவ்வகையில் உயிர் கண் முதலிய புறக்கருவிகளும், மனம் முதலிய அகக் கருவிகளும் முடவனுக்குக் கோல்போல் நின்று உதவுவதனால் அறிந்து வருதல் கண்கூடு. ஆனால், அக்கருவிகள் தாம் அல்ல என்று அவற்றினின்றும் நீங்கிய பின்னர் உயிர் தன்னைத்தான் அறிகின்ற நிலை உண்டாகின்றது. இந்நிலையில் கருவிகள் இல்லையாய் நீங்குகின்றன. இந்நிலையில் உயிருக்கு ஓர் அறிவு உண்டாகின்றது. இஃது எங்ஙனம் என ஊன்றி நோக்கினால் தன் அறிவுக்கு அறிவாய் நிற்கும் பதிப் பொருளினது அறிவு புலனாவதாகும். இதுவே **பதிஞானம்** என வழங்கப்படுவது. ஒருவாறு

89. சித்தியார் 6.4

புலப்பட்ட அப்பதி ஞானத்தை விடாது பற்றி நின்று, முன் கண்டு கழித்த பாச ஞானத்தில் செல்லாது நின்றால், அப்பதி ஞானத்திற்குப் பதிப்பொருள் இனிது விளங்குவதாகும். பதிஞானத்தால் இறைவனை அறிவதையே சைவசமயாசாரி யார்கள். '**அருட்கண்ணால் காணுதல்**' என்ற கூறுவார்கள். மேலே குறிப்பிட்ட அப்பரடிகளின் திருத்தாண்டகத்தில் (6.97:10) '**காட்டொணாதே**' என்று கூறப்பட்டதாயினும், '**அவன் அருளே கண்ணாகக் காணின் அல்லால்**'' என்ற தொடர் காணப்படுகின்ற தன்றோ? இதனால் 'அருளே கண் ணாகக் காணின் காணலாகும்; அக்கண் இல்லாதார்க்கு எவ் வகையிலும் காட்டொணாது' என்பது தெளிவாகின்றதன்றோ? பிறிதோர் இடத்திலும் இப்பெருமான்,

> நின் அருட்கண்ணால் நோக்காதார் அல்லாதாரே[90]

என்று கூறுவதையும் காணலாம்.

> அவனரு ளாலே அவன்தாள் வணங்கி[91]

என்று **மணிவாசகப் பெருமானின்** அநுபூதி வாக்கினையும் காணலாம். இதனையே, ஊனக்கண் பாசம் உணராப் பதியை

> ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி[92]

என்று **மெய்கண்டாரும்,**

> பாச ஞானத்தாலும் பசுஞா னத்தாலும்
> பார்ப்பரிய பராபரனைப் பதிஞா னத்தாலே
> நேசமொடும் உள்ளத்தே நாடி[93]

என்று **அருணந்தி தேவநாயனாரும்** தெளிவுறுத்துகின்றனர்.

---
90. அப். தேவா
91. திருவா. சிவ 4. அடி. 14
92. சி.ஞா.போ. சூத். 9
93. சித்தியார் - 9.1

ஆகவே, 'இறைவனது உண்மை நிலை அருவத்தையும் கடந்தது' என்பதும் அந்த நிலை பாசஞானம் பசு ஞானம் இவற்றால் அறியப்படாது பதிஞானத்தால் மட்டிலுமே அறியப்படும்' என்பதும் தெளிவாகின்றதன்றோ? பதியாவான் சிவனே யாதலின் '**பதிஞானம்**' என்பது **சிவஞானம்** என்பதை யும் அறிந்து தெளியலாம்.

மேலும் 'இறைவன் பதிஞானத்தால்தான் அறியப் படுபவன்' என்பதை இறைவனை அறிந்து அநுபவித்தோரின் திருவாக்குகளாலும் தெளியலாம்.

தோடுடைய செவியன் விடையேறியோர்
  தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப் பொடிபூசிஎன்
  உள்ளம் கவர்களவன்[94]

என்று அருளுவர் **ஞானசம்பந்தப் பெருமான்.**

'தேடிக் கண்டு கொண்டேன்—திரு
  மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணா தேவனை—என்னுளே
  தேடிக் கண்டு கொண்டேன்[95]

என்று கூறுவர் **நாவுக்கரசர்** தம் திருஅங்கமாலையில். இப்பெருமானே பிறிதோர் இடத்தில்,

என், புந்திவட் டத்திடைப் புக்குநின்
  றானையும் பொய்யென்பெனோ[96]

என்று மொழிவதையும் காணலாம்.

---

94. சம்பந். தேவா 1.1:1
95. அப். தேவா 4.9:12
96. மேலது 4.98:1

எத்தான்மற வாதேநினைக்
  கின்றேன் மனத்துன்னை
வைத்தாய்[97]

என்று நம்பியாரூரரும் நவின்றுள்ளதைக் காணலாம். வாதவூரடிகளும்,

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
  தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்[98]

என்று திருவாய் மலர்ந்துள்ளமையும் கண்டு தெளியலாம். இங்ஙனம் அநுபூதிமான்களின் அநுபவ உரைகள் அளவில வாய்த் தோன்றி நின்று ஆண்டவன் அநுபவப் பொருளாய் நிற்றலை அரண் செய்கின்றன. இவை யாவும் பதிஞானத்தால் விளைந்த அநுபவங்களேயாகும் என்பதையும் உணர்ந்து தெளியப்படும். இந்த உணர்வைச் சிந்தாந்திகள் **'பாரிசேடப் பிரமாணம்'**[99] (ஒழிபு அளவை) என்று பகர்வர்.

பாசத்திற் கட்டுப்பட்ட உயிர்களின் அறிவும் அவற்றின் கருவிகரணங்களுமே **பசு ஞானம்** என்றும், **பசுகரணம்** என்றும் பெரியோர்கள் பணிப்பர். அன்றியும், பாசத்தினின்றும் விடுபட்ட சீவன் முத்தர்களாகிய பெரியோர்களின் அறிவும் கருவிகரணங்களும் சிவபோகமாயும் சிவகரணமாயும் நிற்கும் என்றும் அவர்கள் பகர்வர். இதனை விளக்க வேண்டும். பழுக்கக் காய்ச்சிய இரும்பு ஒளிவீசுகின்றதை நாம் அறிவோம். இங்ஙனம் ஒளிவீசுவது எது? இரும்பா? நெருப்பா? இதனை ஊன்றி நோக்கின் ஒளி வீசுவது நெருப்பு என்பது தெளிவாகும்.

97. சுந்தரர் தேவா. 7.1:1
98. திருவா. கோயில் திருப்பதிகம் - 7
99. மூவர் உள்ள இடத்தில் ஒரு பொருள் களவு செய்யப்படின், இருவர் கள்வர் அல்லர் என்பது தெளியப்பெற்றால், மற்றொருவனே கள்வன் எனத் துணிதல் போல்வது.

அதுபோல, சிவத்தைச் சார்ந்த உயிரும் அதன் கருவிகரணங் களும் இறைவனை அறிகின்றன என்று நுவலும்போது அந்த அறிவு இறைவனது அறிவு என்பது விளங்கும். ஆகவே, இறைவன் தன்னாலேதான் அறியப்படுபவன் அல்லது பிறவற்றால் அறியப்படுதல் எக்காலத்தும் இல்லை என்பது அறியப்படும்.

மேலும், சிவம் ஒரு தன்மையுடையதன்றி, கதிரவனும் கதிரும் போல, தானும் தன் சக்தியும் என இருதன்மையுடைய தாய் நிற்கும் என்பதை முன்னர் பல இடங்களில் விளக்கியதை நினைவுகூரவேண்டும். கண் கதிரவனை நோக்க வேண்டு மாயின் அவனது ஒளியாகிய கதிர்களின் வழியேதான் நோக்க வேண்டும். அதுபோலவே, உயிர் சிவத்தை அடைய வேண்டுமாயின் அஃது அவனது சக்தி வழியேதான் அடைய வேண்டும் அந்தச் சக்திதான் அருள்; அதனால்தான் சக்தி வழி அவனை அடைதலையே முன்னோர்கள் '**அவன் அருளே கண்ணாகக் காணுதல்**' என்றும், '**அவனருளாலே அவன் தாள் வணங்கி**' என்றும் அருளிச் செய்துள்ளனர் என்பதும் அறிந்து தெளிப்படும்.

## (14) பதி சச்சிதானந்தம்—விளக்கம்

இறைவனது உண்மை இயல்பை, சொரூப இலக்க ணத்தை– உபநிடதங்கள் 'சத்து, சித்து, ஆனந்தம்' என்று மூன்று தன்மைகளாக அடக்கிப் பேசும். இவற்றுள் '**சத்து**' என்பதற்கு '**உண்மை**' என்பது பொருள். உண்மை என்பது 'உளவாந்தன்மை' என்றும், எல்லாம் பொருள்களும் உள்ளன வன்றி இல்லாதது ஒன்றும் இல்லையாதலின்– அஃதாவது 'இல்லது வாராது; உள்ளது போகாது' என்ற சற்காரிய வாதத்தை அடிப்படையாகக் கொண்ட சைவசித்தாந்தமாதலின்–

'பொருள்' எனப்படுவன யாவும் சத்தேயாகும். ஆகவே பதியின் உண்மை இயல்பாகச் சொல்லப்படும் **'சத்து'** என்பதற்கு **'நிலைபேறு'** அஃதாவது, 'என்றும் ஒருபடித்தாய் இருத்தல்', என்றே பொருள் கொள்வார் பேரருட்செல்வராகிய **மெய்கண்டார்.** அவர் கருத்துப்படி **'சத்து'** என்பதை **'மெய்'** என்றுதான் கூறவேண்டும். மெய்ம்மையாவது, என்றும் மாற்ற மேயின்றி ஒரு படித்தாய் நிலைத்து நிற்கும் தன்மையாகும். திருவள்ளுவப் பெருந்தகையும் முதற்பொருளை **'மெய்ப் பொருள்'**[100] என்றும், அதனை உணர்தலை **'மெய்யுணர் தல்'**[101] என்றும் கூறுவதை நினைவுகூரலாம். **'செம்பொருள்'**[102] என்று அவர் குறிப்பிடுவதும் இப்பொருளில்தான் என்பதையும் சிந்தித்து அறியலாம். எனினும், உபநிடதங்களின் வழக்குபற்றி முதற் பொருளை 'உள்ளது' எனவும் கூறுகின்றார். மெய்ப் பொருள், செம்பொருள் என அவ்வறிஞர் பெருமான் கூறு வதை நோக்கி 'உள்ளது' என்பதற்கு **மெய்கண்டார்** கூறிய வாறு 'என்றும் ஒரு படித்தாய் உள்ளது' என்பதே பொருளாகும் என்பது அவர்க்கும் கருத்தாகும் என்று தெளியலாம்.

**'சத்து'** என்பது என்றும் ஒருபடித்தாய் உள்ளது' என்பதைத் தெளிந்தபின் மாறுதலடையும் பொருள்கள்

100. குறள் - 155 'மெய்ப் பொருள் காண்பது அறிவு'

101. மேலது - அதி. 16 'அதாவது பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் விபரீத ஐயங்களாலன்றி உண்மையான் உணர்தல்' (பரிமேலழகர் உரை) இதனை வடநூலார் 'தத்துவ ஞானம்' என்பர்.

102. மேலது - 358. 'சிறப்பென்னும் செம்பொருள் காண்பது அறிவு'. 'தோற்றக் கேடுகளின்மையின நித்தமாய், நோன்மை யான் தன்னையொன்றும் கலத்தலின்மையின் தூயதாய்த்தான் எல்லாவற்றையும் கலந்து நிற்கின்ற முதற்பொருள் விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மைத்தாதல்பற்றி அதனைச் **'செம்பொருள்'** என்றார். (பரிமேலழகர் உரை)

'**அசத்து**' என்பது தானே விளங்கும். இதில் 'அசத்து' என்பதற்கு 'நிலையாமை' என்பது பொருளாகின்றது. ஆகவே, வள்ளுவப் பெருந்தகையும் **நிலையாமை**[103] என்னும் அதிகாரத்தில் உலகம் அசத்தாதலையே விளக்கினார் என்பது அறியப்படும்.

> நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
> புல்லறி வாண்மை கடை.[104]

என்னும் குறளில் 'அசத்தைச் சத்து என்று கருதி மயங்கும் மயக்கமே அஞ்ஞானம்' என்று கூறப்பெற்றதை உய்த்துணர லாம். '**சத்து**' என்ற சொல் '**உள்ளது**' என்றே பொருட்பட்டு வேறு பொருள்படாமையின், எல்லாப் பொருளையும் உள் பொருளாகக் கொள்வார்க்கு 'அசத்து' என்பதே இல்லாததாய் முடியும் என்பாரை நோக்கி,

> உண்டுபோல் இல்லாப் பண்பின்
> உலகினை அசத்தும் என்பர்[105]

என்று **அருணந்தி சிவாச்சாரியார்** கூறுவதையும் அறியலாம். அஃதாவது 'எல்லாப் பொருளும் உள்ளனவே யாயினும், சில பொருள்கள் முன் உள்ளன போல் காணப்பட்டுப் பின் இல்லனவாய் ஒழிதல்பற்றி அவற்றை அசத்து என்றும் கூறுவர் உயர்ந்தோர்' என்பது இதன் கருத்தாதல் அறியப்படும். 'அசத் தானது நிலையில்லாதது' என்பதால் 'சத்தானது நிலை பேறுடை யது' என்பது தானே விளக்க மாகின்றது. 'மெய்யானது நிலை பேறுடையது' என்று மேலே கூறியதனாலேயே 'பொய்யாவது நிலையில்லாதது' என்பதும் இனிது விளங்குகின்றதன்றோ?

103. அதி. 34
104. குறள் - 331
105. சித்தியார்

எனவே, சத்தென்பது மெய்ம்மை, அஃதாவது 'என்றும் ஒரு படித்தாயிருக்கும் **பதி** ஒன்றே சத்து' என்பது முடிவாகின்றது.

**சித்து—விளக்கம்:** 'சித்து என்பது அறிவு. அஃதாவது எல்லாவற்றையும், எப்பொழுதும், தானே அறியும் அறிவாகும். இது சிற்றறிவினைக் குறியாமல் பேரறிவினையே குறிக்கும் என்பதை அறிதல் வேண்டும். ஏனெனில், ஒன்றை அறியுங் கால் மற்றொன்றை அறியாது ஒவ்வொன்றாய் அறிதலும், ஒருகால் அறிந்து மற்றொருகால் அறியாது நிற்றலும், தானே அறியாது பிறர் அறிவித்தபின் அறிதலும் அறிவு எனப்படாது. ஆதலின், இக்குறைபாடுகள் எல்லாம் உயிர்கட்கு உண்டு. அதனால்,

> பொறியின்றி ஒன்றும் புணராத புத்திக்கு
> அறிவு என்ற பேர்நன்று அது[106]

என்று கூறுவார் **உமாபதிதேவநாயனார்**. இதனை ஈண்டுச் சிந்திக்க வேண்டும். இதனால் இறைவன் இக்குறைபாடுகள் ஒன்றும் இல்லாத பேரறிவினையுடையவன் ஆகின்றான் என்பது தெளிவாகின்றது. இவனே '**சித்துப்பொருள்**' ஆகின்றான்.

**ஆனந்தம்—விளக்கம்:** 'ஆனந்தம்' என்பது இன்பம். அஃதாவது எல்லையற்ற இன்பத்துக்கு எல்லையான நிலையாமையும் துன்பமும் ஆகும். இவ்விரண்டும் இல்லாத இன்பமே இவண் குறிப்பிடுவது. இதுவே '**பேரின்பம்**' என்றும் '**நிரதிசயானந்தம்**' என்றும் குறிக்கப்பெறும். இதனை '**மெய்யறிவின்பம்**' என்றும் கூறலாம். ஆகவே சத்தாயும் சித்தாயும் ஆனந்தமாயும் நிற்றலே பதியினது உண்மை இயல்பாகின்றது. உண்மையியல்புகளாக வேறுபல கூறப்பெறினும் அவையெல்லாம் இவற்றுள் அடங்குவனவாகும். இம்

106.திருவருட்பயன் - 2.5

மூன்று சொற்களும் (சத்து+சித்து+ஆனந்தம்) ஒன்றாகச் சேரும் பொழுது **'சச்சிதானந்தம்'** ஆகின்றன. இதனால் இறைவனும் **'சச்சிதானந்தம்'** என்றும் வழங்கப் பெறுகின்றான் என்பது அறிந்து தெளியப்படும்.

உபநிடதங்களில் சத்து, சித்து, ஆனந்தம் என மூன்றாகச் 'சுருங்கக்' கூறுவதை சைவ ஆகமங்கள் ஆறாகவும் எட்டாகவும் விரித்துக் கூறும்.

**ஆறாகக் கூறப்பெறுவன**[10]: தன்வயம், முற்றும் உணர்தல், இயற்கை உணர்வு, பேரருள், முடிவிலாற்றல், வரம்பில் இன்பம் என்பன. இவற்றுள் தன்வயம் சத்தென்பதைக் கூறுவதாகும். வரம்பிலின்பம் என்பது ஆனந்தத்தைக் கூறுவதாகும். ஏனைய நான்கும் சித்து என்பதை விரித்துக் கூறுவனவாகும். **'ஆறு குணங்களையுடையவன்'** (ஷாட்குண்யன்) என்று கூறப்பெறுவதையும் தெளியலாம்.

இனி, **எட்டு எனப்படுவன:** மேற்கூறியவற்றுடன் தூய்மை, இயல்பாகவே பாசங்கள் இன்மை என்னும் இரண்டும் கூட்டிச் சொல்லப்படுவனவாம். இவை இரண்டும் சத்து என்பதன் விரிவாகும். பாசத்தால் பற்றப்படாது தூயதாய் நிற்றல் நிலைபேறுடைய தன்மையினால் ஆவதாதலின் அவை **'சத்து'** என்பதனுள் அடங்குவனவாயின என்பது அறியப் படும். இங்ஙனம் எண்குணங்களும் **மூன்றில்** அடங்குதல் தெளியப்படும்.

**திருவள்ளுவரும்** இறைவன் எட்டு குணங்களை யுடையவன் என்பதை,

> கோளில் பொறியிற் குணம்இலவே எண்குணத்தான்
> தாளை வணங்காத் தலை[107]

107. குறள் - 9

என்ற குறளில் குறித்துள்ளார். திருமுறைகளிலும் இறைவன் எட்டுக்குணங்களையுடையவனாகப் பேசப் பெறுகின்றான்.

எட்டுவான் குணத்தீசன் எம்மான் தன்னை[108]

எட்டுக் கொலாம்அவர் ஈறில் பெருங்குணத்தான்[109]

என்று **நாவுக்கரசரும்,**

இரும்புயர்த்த மூவிலைய சூலத்தினானை
இறையவனை மறையவனை எண்குணத்தினானை[110]

என்று **நம்பியாரூரரும்** கூறுவதால் இதனை அறியலாம். இன்னும் பதியினது தன்னியல்பை இந்தப் பகுதியின் தொடக்கத்தில் குறிப்பிட்ட "**பல்கலை ஆகமவேதம்**" (சிவப் பிரகாசம்—6) என்ற திருப்பாடலில் கூறுவன பலவும் **மூன்று, ஆறு, எட்டு** என்பவற்றின் விரிவேயாதல் என்பது அறிந்து தெளியப்படும்.

## (15) பதியினது அருட்குணங்கள்—விளக்கம்

இங்கு இறைவனது அருட்குணங்களின் இன்றியமை யாத இயல்புகளை விளக்குவோம். இந்த அருட்குணங்கள் **தன்வயம், தூயஉடம்பு, இயற்கை உணர்வு, முற்றுணர்வு, இயல்பாகவே பாசமின்மை, பேரருள், முடிவிலாற்றல், வரம்பிலின்பம்** என்ற **எட்டு** ஆகும். இவை '**எண் குணங்கள்**' என்று வழங்கப்பெறும்.

**தன்வயம் உடைமை:** இது வடமொழியில் **சுதந்திரத்து வம்** (சுவதந்திரதை) என்று வழங்கப்பெறும். எவ்விடத்தும் தலைவராய் இருப்போர் அவர் பிறர் வழிபட்டு நடத்தற்குரிய

108. அப். தேவா. 5.89:8

109. மேலது 4.18:8

110. சுந்தரர் தேவா. 7.40:3

தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் அவர் தாம் விரும்பும் செயல்களை விரும்பியவாறே செய்தல் கூடும். இத்தன்மையை அப்பர் பெருமான்,

'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்'[111]

என்று அருளிச் செய்துள்ளார். சிவபெருமானின் அற்புதச் செயல்கள் பலவும் இத்தலைமைத் தன்மையை விளக்குவன வாகும். காமனை எரித்தது, நஞ்சை உண்டது, தாருகவனத்து முனிவர்களின் கொடுஞ்செயலால் தாக்குண்ணாது நின்றது போன்ற வரலாறுகள் பலவும் அவர் பிறர் வயப்படாமையை எடுத்துக்காட்டும். காலனைக் காய்ந்தது, நான்முகனின் சிரம் கொய்தது, சிவபெருமானை விடுத்து அமுதம் பெறச் சென்ற தேவர்கட்கு ஆலகாலவிடம் கிடைத்தது போன்ற வரலாறுகள் பலவும் அவரது இச்சைப்படியே யாவும் நிகழ்தலாகிய தன்வயம் உடைமையை எடுத்துக் காட்டுவனவாகும். காலனும் திசைக்காவலனும் தேவர் பலரும் தம் வயம் உடையராகா மையை இவ்வரலாறுகள் தெரிவிப்பன. இன்னும் காமனை எரித்த காலத்தில் திருமால் முதலிய பலரும் அங்ஙனம் காக்க மாட்டாது ஒழிந்தமையையும் அவர்களது தன்வயம் இன்மை யைக் காட்டுவதாகும். இங்ஙனம் எவ்விடத்தும் யாவர்க்கும் அடிமைப்படாது எங்கும் தானே யாவரையும் அடிமை கொண்டு தன் இச்சைப்படி எல்லாவற்றையும் நிகழ்த்துபவனே யாவர்க்கும் மேலான தனிப்பெருந் தலைவனாகின்றான். இதுபற்றியே சிவபெருமானை '**மகாதேவன்**' என்றும், '**பெரியோன்**' என்றும் தமிழ் நூல்கள் குறிக்கின்றன என்பதை உளங்கொள்ள வேண்டும். இதனால் பதிப்பொருளுக்கு முதலாவதாக இன்றியமையாது வேண்டப்படும் குணம் தன் வயமுடைமையாதல் என்பது தெளிவாகின்றதன்றோ?

---

111. அப். தேவா. 6.98:1

**தூயஉடம்புடைமை:** இடது வடமொழியில் **'விசுத்த தேகம்'** என்று வழங்கப்பெறும். இறைவன் தன் வயத்தால் செய்யும் செயல்கள் யாவற்றையும் உடம்பின்றியே செய்யக் கூடுமாயினும், பிறர் பொருட்டுச் சிலவற்றை உடம்பொடு செய்ய வேண்டியவனாகின்றான். எனவே, தூய உடம்புடையவ னாதல் அடுத்து வேண்டப்படுவதாகின்றது. உடம்புடையவ னாக நிற்பது பொதுவியல்பாயினும், அந்த உடம்பு உயிர்களின் உடம்பின் வேறாதல் போல் அவனின் வேறாதலின்றி ஒன்றே யாகும் என்பது கருத்தாதலின் உண்மை இயல்பாயிற்று.

**இயற்கை உணர்வினனாதல்:** இதனை வடமொழி யாளர் **'அநாதி போதம்'** என வழங்குவர். தன் வயத்தனாயும் தூய உடம்பினனாயும் நிற்கும் இறைவனுக்கு பிறபொருளால் வரும் அறிவு செயற்கையாதல் சிறிதும் பொருந்தாது. அரசர் முதலிய தலைவர்கட்கு ஐம்பொறிகள், மனம் முதலிய அந்தக் காரணங்களாலும், தாய் தந்தையர், ஆசிரியர் முதலாயினோ ராலும் அறிவு செயற்கையாக நிகழ்தல் கண்கூடு. இதனால் அவரெல்லாம் உண்மைத் தலைவராகாராயினர். இறைவனது அறிவு அவ்வாறின்றித் தானே விளங்குதலால் அவன் ஒருவனே உண்மைத் தலைவனாகின்றான் என்பதைத் தெளியலாம். இந்த இயற்கையறிவு **'சுயம்பிரகாசம்'** எனவும் வழங்கப்படும். பிறபொருள் விளக்க விளங்கும் அறிவு **பரப்பிரகாசமாகும்;** அது சுதந்திரத்திற்கு இழுக்கும் ஆகும். இதனால் அரசர்கள் **'சூழ்வார் கண்ணாக'** (குறள் 455) ஒழுக வேண்டியுள்ளது. இறைவனோ அனைத்தையும் தன் சங்கற்பத் தினாலேயே செய்கின்றான். ஆகவே, இயற்கை உணர்வின னாக இறைவன் செயற்படுகின்றான் என்பதை உளங்கொள் ளல் வேண்டும்.

**முற்றும் உணர்தல்:** வடமொழியாளர் இதனைச் **'சர்வஞ்ஞதை'** என்பர். எனவே இது **'சர்வஞ்ஞத்துவம்'**

ஆகும். அறிவு செயற்கையாக நிகழலாமல் இயற்கையாகவே விளங்கினும் அஃது ஒரு காலத்து ஒன்றையே அறியும் சிற்றறிவாய் விடின் பயனின்றாதலின், அனைத்தையும் எஞ் ஞான்றும் தன் இச்சை வழி நடத்த ஒருங்குணர்தலாகிய இஃது அடுத்து வேண்டப்படுவதாகின்றது. இம்முற்றுணர்வு இல்லாத காரணத்தாலேயே வேந்தர்கள் ஒற்றர்களையும் உரைசான்ற நூல்களையும் கண்ணாகக் (குறள் 381) கொள்ள வேண்டியவர் களாகின்றனர். இறைவனோ அனைத்தையும் எக்காலத்திலும் தானாகவே உணர்கின்றான்.

**இயல்பாகவே பாசங்களின்மை:** இது வடமொழியில் '**நிராமயம்**' என்று வழங்கப்பெறும், ஆமயம்–நோய். அது பாசமாகும். நிராமயம் இயல்பாகவே பாசமின்மையாகின்றது. இயற்கையாக விளங்குவதும், எல்லாவற்றையும் ஒருங்குணர் வதுமான இறைவனது அறிவு, பாசத்திற்கு மறுதலையாய துண்ணியதன்மையை உடையதென்பதைக் குறிக்கும். இறைவ னது அறிவைப் பாசம் எவ்வாற்றானும் மறைக்கும் ஆற்றலைப் பெற்றிலது என்பது உணரப்பெறும்.

**பேரருளுடைமை:** இது வடமொழியில் '**அலுப்தசக்தி**' 'ன வழங்கப்பெறும். '**குறைவில்லாத ஆற்றல்**' என்பது )தன் சொற்பொருள். ஈண்டு ஆற்றல் என்பது அருளையே ;றிக்கும்; செயல் அடுத்து (ஏழாவதாக)க் கூறப்படுதலின் )ங்ஙனம் கொள்ளப்பெற்றது.

**அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின் நோய்**
**தன்நோய்போல் போற்றாக் கடை**[112]

'ன்றபடி பேரறிவுடைமையால், எல்லா உயிர்களிடத்தும் 'ஞ்ஞான்றும் குறையாத கைம்மாறற்ற பெருங் கருணை அவனிடம் உண்டு என்பது தெளியப்படும். "**பால் நினைந்**

112. குறள் - 315

**தூட்டும் தாயினும் சாலப்பரிந்து''**[113] என்ற **மணிவாசகப் பெருமானின்** திருவாக்கும் பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுத்தது போன்ற (திருவிளையாடற் புராணம்) திருவிளை யாடல்களும் இறைவனிடம் அஃது அமைந்துள்ளதை அரண் செய்கின்றன.

**முடிவிலாற்றலுடைமை: 'அனந்த சக்தி'** என்பது இதன் வடமொழிப் பெயர். ஈண்டு **'சக்தி'** என்பது செயலாற்ற லைக் குறிக்கின்றது. அருளுடைமை பயன் தருவது, செய லாற்றல் வன்மையுடையதாக இருக்கும்பொழுதுதான் என்பது உண்மையாதலின் பேரருளுமையின் பின் அமைந்துள்ளது. இஃது இறைவன் திரிபுரத்தை நகைத்தெரித்தது, கைலாயத் தைத் தூக்கிய இராவணனைத் தன் கால்விரலால் அடர்த்தது போன்ற வரலாறுகளால் தெளியப்படும்.

**வரம்பிலாற்றலுடைமை:** இது வடமொழியில் **'திருப்தி'** எனப்படும். இஃது இறைவன் எவ்வாற்றாலும் யாதொரு குறையும் இல்லாதவன் என்பதை உணர்த்தும். யாதானும் குறையுடையவனாயின் மேற்குறிப்பிட்ட குணங்கள் பலவும் இல்லாதொழியும். ஆகவே, இஃது இறுதியாக அமைந்த குணமாயிற்று. 'இங்ஙனம் எண்குணங்களையுடைவன் இறைவ னாதலால் அவனே எல்லாப் பொருளினும் பெரும்பொரு ளாதல் தெளியப்படுகின்றது. பெரும்பொருள் என்பதனையே உபநிடதங்கள் **'பரப்பிரம்மம்'** எனக்கூறுகின்றன. பெரும் பொருள் எனவே, அகண்டிதப் பொருள் என்பது போதரு கின்றது; **தாயுமான அடிகளும்,**

113. திருவா. பிடித்த பத்து - 9

பார்க்கும்இடம் எங்கும்தரு
நீக்கமற நிறைகின்ற
பரிபூரணானந்தம்[114]

என்றும்,

பெருவெளியாய் ஐம்பூதப் பிறப்பிடமாய்,
பேசாத பெரிய மோனம்
வரும்இடமாய், மனமாதிக் கெட்டாத
பேரின்ப மயமாய்[115]

என்றும் இன்னும் பலவிதமாகவும் கூறியுள்ளவற்றை அறிந்து தெளியலாம். இப்பொருளே **சிவன்** என்பது உளங்கொள்ளப் படும்.

114. தா.பா. பரிபூரணானந்தம்

115. மேலது பொருள் வணக்கம் - 3

# 4. தத்துவங்கள்-2 (பசு)

அசித்தரு வியாப கம்போல்
வியாபகம் அருவம் இன்றாய்
வசித்திட வரும்வி யாபி
யெனும்வழக் குடைய னாகி
நசித்திடா ஞானச் செய்தி
அநாதியே மறைத்து நிற்கும்
பசுத்துவம் உடைய னாகிப்
பசுவென நிற்கும் ஆன்மா[1]

எண்ணரிதாய் நித்தமாய் இருள்மலத்தின் அழுந்தி
இருவினையின் தன்மைகளுக் கீடான யாக்கை
அண்ணலரு ளால்நண்ணி அவைஅவரா யதனால்
அலகில்நிகழ் போகங்கள் அருந்தும் ஆற்றால்
புண்ணியபா வம்புரிந்து போக்குவர வுடைத்தாய்ப்
புணரும்இருள் மலபாகம் பொருந்தியக்கால் அருளால்
உள்நிலவும் ஒளியதனால் இருளகற்றிப் பாதம்
உற்றிடும்நற் பசுவருக்கம் எனஉரைப்பர் உணர்ந்தோர்[2]

---

1. சித்தியார் 4.40
2. சிவப்பிரகாசம் - 19

# 4. தத்துவங்கள்-2 (பசு)

'பதி பசு பாசம்' என்னும் முப்பொருள்களில் **பதி யாகிய** கடவுளைப்பற்றி முன்னர் விரிவாக விளக்கப் பெற்றது. இங்கு **பசுபற்றிய** கொள்கைகளைக் காண்போம்.

**பசு:** உயிரைச் சித்தாந்தம் 'பசு' என்று பேசும். உயிரை நாம் கண்ணால் காணமுடியாவிடினும் கருத்துக்குப் புலனாவ தாக ஏற்றுக் கொள்ளுகின்றோம். 'உயிர் என்பது அறிவுடை யது; ஆயினும் இறைவனது உயிர் போன்ற பேரறிவுடைய தாகாது; அது சிற்றறிவுடையதாய் உள்ள பொருள்' –இதுவே சைவ சித்தாந்தம் கூறும் உயிரைப் பற்றிச் சுருக்கமான கொள்கையாகும்.

பிறசமயிகளும் அறிவைத்தான் உயிர் என்கின்றனர். ஆயினும் அவர்கள் அறிவுபற்றி பலவிதமாகக் கூறுகின்றனர். அவர்கள் கூறும் கருத்துகளைச் சைவ சித்தாந்தம் பொறுமை யுடன் கேட்டு, உரிய மதிப்பு தந்து, நன்கு சிந்தித்துப்பார்த்து ஆராய்ந்து பொருந்தாதவற்றைக் காரணம் காட்டி விலக்கு கின்றது. பிறகு இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்ட சிறந்த புதிய பொருத்தமான கொள்கையின் அறிவு நெறிக்கு இணங்க ஆராய்ந்து காட்டி நிறுவுகின்றது. இதுவே **மெய்கண்ட நூல் கள்** நுவலும் **சைவசித்தாந்தம்** என்னும் தனிப் பெருங் கொள்கையாகும். இத்தத்துவம் "**ஆன்ம இலக்கணம்** பற்றிப்

பலர் கூறும் கருத்துகளை எங்ஙனம் ஆய்ந்து விலக்குகின்றது என்பதைக் காண்போம்.

## (1) உயிர்பற்றிப் பிறர் கூறும் கருத்துகள் —விலக்குதல்

இவற்றை ஒவ்வொன்றாகக் காண்போம்.

(அ) **உயிர் சூனியம் ஆகாமை:** பௌத்தர்கள் "அறிவு என்பது ஒன்று இருப்பது போலத் தோன்றினாலும் அஃது எங்கே உள்ளது என்று துருவிக் காணும்பொழுது இல்லாத தாகவே ஆய்விடுகின்றது; ஆகையால் சூனியமாக உள்ள ஒன்றே உயிரெனப்படுகின்றது' என்கின்றனர். '**சூனியம்**' என்பதற்கு அவர்கள் கொண்டுள்ள பொருள் '**இல்லது மன்றி உள்ளது மன்றி இருப்பது**' என்பதாகும்.

உயிர் சூன்யம் ஆயின் 'உயிர் சூனியமே' என்று உணர்வதும், உணர்ந்து 'சூனியம் தான் உயிர் எனப்படுகின்றது' என்று பிறர்க்கு உணர்த்துவதும் ஆகிய அந்த அறிவு உள்ளதோ? இல்லதோ? 'இல்லை' எனின் தான் உணர்ந்தும், தான் உணர்ந்ததைப் பிறர்க்கு உணர்த்தியும் நிற்கும் அறிவை 'இல்லை' என்பது, தன்னைப் பெற்ற தாயை ஒருவன் '**என் தாய் மலடி**' என்பது போல, மாறுகோளுரையாய் முடியும். ஆதலின் அவ்வறிவு உள்ளதேயாம். அதனால் அந்த அறிவுதான் உயிர் என்று இனிது நிறுவப்படும்.

இனி உண்மைக்கு மறுதலை இன்மை என்றும், இன் மைக்கு மறுதலை உண்மையென்றும் கூறப்படுகின்றனவன்றி இவ்விரண்டுக்கும் வேறாக மூன்றாவது ஒன்றைச் '**சூனியம்**' என்பதற்குப் பொருள் எனக் கூறுதல், அங்ஙனம் கூறுவார் உள்ளத்திற்கு உடன்பாடாகுமன்றிப் பிறர் ஒருவருக்கும் உடன்

பாடாகாது. ஆகவே 'சூனியம்' என்பதும் இன்மையேயாம். இதனை 'இல்லதும் உள்ளதும் அல்லாத ஒரு பொருள் இருக்கின்றதோ?'' என்று வினவினால் 'இருக்கின்றது' என்று விடைகூற வேண்டும். 'இருக்கின்றது' என்றால், அஃது உள்ள பொருள்தானே? அதனை உள்ளதற்கு வேறானது என்று எங்ஙனம் கூற முடியும்? முடியாது. ஆகவே, 'உள்ளதும் இல்லதும் அல்லாத ஒன்று' என்பது பொருளற்ற பேச்சாகும். ஆதலின், உயிரை அத்தன்மையதாக– அதாவது சூனியம் தான் உயிர் எனப்படுகின்றது என்பதாக– கூறுதல் சிறிதும் பொருந்தாததன்றோ? இவ்வாற்றால் 'உயிர் சூனியப் பொரு ளன்று; உள்ள பொருளே' என்பது பெறப்படுகின்றது.

(ஆ) **உடம்பு உயிராகாமை:** மக்கள் முதல் தாவரம் ஈறாகக் காணப்படுகின்ற பிறவிகள் பலவற்றிலும் அவற்றினது அறிவு கண்ணிற்குப் புலனாகும் பரு உடம்பிற்கு (தூல தேகத்திற்கு) வேறாகக் காணப்படாமையால் பரு உடம்பே உயிர் என்பர் **தேகான்மவாதிகள்.** மேலும், அவர்கள் உடம்பு பூதங்களின் காரியமேயாதலானும் பூதங்கள் யாவும் சடமேயாதலானும் சடப்பொருளிலிருந்து அறிவு தோன்றாது என்பதில்லை. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு என்ற மூன்று பொருள்கள் ஒன்றிலும் சிவப்பு நிறம் இல்லை. ஆயினும் இம்மூன்றும் ஒன்றுபடுங்காலத்தில் முன்பு இல்லாத நிறம் தோன்றுகின்றது.[3] அது போலவே, பூதங்கள் தனித்தனியாய் இருக்கும்பொழுது சடமாய் இருப்பினும் அவை ஒன்று கூடும் பொழுது முன்பு இல்லாத ஓர் அறிவு தோன்றும் என அவர்கள் வாதிப்பர். ஆனால் சற்காரியவாதம், காரணகாரிய இயைபு முதலிய வழிகளில் அவர்கட்கு உண்மையை விளக்குதல் அரிது என்னும் கருத்தால் வேறு ஓர் எளிய முறையில் அவர்களது கொள்கையை மறுப்பர் **மெய்கண்டார்.**

3. இஃது அறிவுக்குப் பொருத்தமான உவமை இல்லை.

அப்பெருமான் கூறுவது: ஒவ்வொருவனும் தனது ஊர், தனது வீடு, என்று கூறுதல் போலவே தனது உடம்பையும் 'எனது உடம்பு' என்று தனக்கு வேறாகக் கூறுதல் உள்ளது. 'யான் உடம்பு' என்று உடம்பையே தானாகக் கூறுதல் இல்லை. இதனால் ஒவ்வொருவனும் தனது உடம்பிற்கு வேறாகத் தான் இருப்பது புலனாதலால் 'தான் அல்லது யான்' எனப்படும் உயிர் காணப்படுகின்ற பருஉடம்பின் வேறேயாகும் என்று தெளிவிப்பர்.

இதற்கும் ஒருதடையை நிகழ்த்துவர் **தேகான்மவாதிகள்.** 'எனது உடம்பு' என்பதை 'எனது உயிர்' 'எனது அறிவு' என்பனபோல ஒற்றுமைக் கிழமைப் பொருளாகக் கொள்ள வேண்டுமேயன்றி, 'எனது ஊர்', 'எனது வீடு என்பனபோல் வேற்றுமைக் கிழமைப் பொருளாகக் கொள்ளலாகாது; மேலும், 'யான் பருத்தேன்; நீ இளைத்தாய்; 'அவன் கறுப்பன்; இவன் சிவப்பன்' என்றாற் போலக் கூறுவனவற்றில் 'யான், நீ, அவன்' முதலியவை உடம்பைக் குறித்து நிற்றல் வெளிப்படையன்றோ? என்பதே அத்தடை. அதற்கும் **மெய்கண்டார்** விடை கூறுவார். அவர் கூறுவது: 'எனது உயிர்', எனது அறிவு' என்பன சிறுபான்மை அவ்வாறு வழங்குவதாகும். 'எனது கை, எனது கால், எனது தலை' என்றாற் போல்வன, "எனது ஊர், எனது வீடு, எனது மாடு" என்றார் போலப் பெரும்பான்மையாக வரும் வேற்றுமைக் கிழமைப் பொருள்களேயாகும். தனக்கு வேறாகவுள்ள பொருள்களையும் அவற்றின்மீதுள்ள பற்றுக் காரணமாகத் தானாக மதித்தல் உண்டு என்பதை, ஒருவன் தனது ஆடை அணிகலன் முதலியவற்றையும், மனைவி மக்கள் முதலியோரையும் அவ்வாறு மதித்து அப்பொருளை உயிராக நினைக்குமாற்றால் அறியலாம்; 'யான் பருத்தேன்', 'யான் இளைத்தேன்' என்றாற் போலக் கூறுவனவும் அங்ஙனம் மயங்கிக் கூறுவனவேயாகும்.

இதற்குமேல் சில விளக்கங்களைக் கூறுவர் **அருணந்தி சிவாச்சாரியார்.** அவர் கூறுவது: 'உடம்பே அறிவுடைய உயிர் எனின், உடம்பு பிணமாகி விட்டபொழுது, அதில் அறிவு காணப்படாததற்குக் காரணம் என்ன? பிணமான உடம்பில் பூதங்களின் ஒன்றாகிய காற்றுப்போல் ஆகிவிடுமாதலால் அறிவு இல்லை என்று சமாதானம் கூறினும் கூறலாம். ஆனால் உறக்கத்தில் காற்று இருக்கவும் அறிவு செயற்படவில்லை. ஆகவே, பரு உடம்பு உயிரன்று; உயிர் பரு உடம்பிற்கு வேறானதாகும்' என்பது .

(இ) **ஐம்பொறிகள் உயிர் ஆகாமை:** 'மெய், வாய், கண், செவி, மூக்கு' என்னும் ஐம்பொறிகளும் 'ஊறு, சுவை, ஒளி, ஓசை, நாற்றம்' என்னும் ஐம்புலன்களையும் அறிவன வாதலாலும், அவற்றை அறிபவை ஐம்பொறிகளேயன்றி வேறில்லையாதலாலும் ஐம்பொறிகளே உயிர் என்பர் **இந்திரியவாதிகள்.** இக்கருத்தினை மறுத்து **மெய்கண்டார்** கூறுவது. 'ஐம்பொறிகளே உயிர் எனின், ஒவ்வொரு பொறி ஒவ்வொரு புலனை அறிவதன்றி, மற்றைய புலன்களை அறிவதில்லை. ஒரு பொறி அறிவதனை மற்றொரு பொறி அறிய முடிவதில்லை. அன்றியும், ஐம்பொறிகள் பிற பொருள்களை அறியுமேயன்றித் தம்மையே தாம் அறிய மாட்டா. அதாவது கண் உருவத்தை அறியும்; யான் 'கண்' உருவத்தை அறியும்; யான் 'கண்' என்றும், 'யான் உருவத் தைக் காண்கின்றேன்' என்றும் அறியமாட்டாது; அதனால் 'இது கண்' என்றும், 'இஃது உருவத்தைக் காண்கின்றது' என்றும் அறிய முடிகின்றதில்லை. எனவே, ஐம்பொறிகளையும் தனித் தனியே இயக்கி அவ்வைம் பொறிகளாலும் ஐம்புலன்களை அறிந்து பயன்கொள்வதாகிய **ஆன்மா** இவற்றின் வேறு ஆகும். ஆயின், இவர்தம் கருத்தும் ஏற்புடைத்தன்று' என்பதாகும்.

(ஈ) **நுண்ணுடம்பு உயிராகாமை:** 'மனம் முதலிய உட்கருவிகளையுடைய நுண்ணுடம்பே (அக உடம்பே) ஐம் பொறிகள் வாயிலாகப் புலன்களை அறிவதால் அதுவே ஆன்மாவாகும்' என்பர் **சூக்கும தேகான்மவாதிகள்.** 'நுண்ணுடம்பு கனவு நிலையில் செயற்பட்டு நிற்பது' என்பது அனைவர்க்கும் உடன்பாடு. ஆனால் 'நுண்ணுடம்பே உயிர்' என்பதை மெய்கண்டார் மறுக்கின்றார். அவர் கூறுவது: "நுண்ணுடம்பே உயிராயின் நாம் காண்கின்ற கனவுகள் யாவும் விழித்த பின் முன்பு கண்டது போலவே தெளிவாக அறிந்து சொல்லுதல் வேண்டும். ஏனெனில், கனவு கண்டதும், விழித்தவின் பருவுடம்பு வழியாகப் பிறவற்றை அறிவதும் ஒரு பொருளேயாதலின் அவ்விடத்து மாறுதல் உண்டாதற்குக் காரணம் இல்லை. அஃதாவது இல்லத்தில் உணவு உண்ட ஒருவன் உடனே வெளியே வருவானாயின், உண்ட உணவின் தன்மைகள் பலவற்றையும் அவன் தெளிவாக அறிந்து சொல்ல முடிகின்றது. அது போலவே முதல் நாள் நடைபெற்ற நிகழ்ச்சிகளை மறுநாள் மறதியின்றித் தெளிவாகச் சொல்ல முடிகின்றது. இங்ஙனமே இரவில் கண்ட கனவை மறுநாள் காலையில் மறவாது நினைத்திருந்து சொல்லுதல் அநுபவத்தில் இல்லை. கனவு கண்டு கொண்டே இருப்பவன் உடனே கண்விழித்துக் கொண்டாலும், அந்தக் கனவு அவனுக்குத் தெளிவாக விளங்காமல் போகின்றது. கனவு கண்டதையே அடியோடு மறந்தும் விடுகின்றான். இதற்குக் காரணம் புறவுடம் பில் நின்று நனவுநிலையில் நிகழ்வனவற்றை அறிவதும், அக வுடம்பில் நின்று கனவுநிலையில் நிகழ்வனவற்றை அறிவதும் ஆகிய பொருள் இவ்விரண்டு உடம்பிற்கும் வேறாய் இருப்பதேயாகும். அஃது அங்ஙனம் சூக்கும உடம்பிற்கு வேறாய் இருப்பதால் அதனை விட்டு நனவுநிலையில் புறவுடம்பில் வந்த காலத்தில் முன் வேறு உடம்பில் நின்று

அறிந்தமை மறப்பதாகின்றது; அல்லது தெளிவின்றி ஒருவாறு நினைப்பதாகின்றது. ஆகவே '**நுண்ணுடம்பு ஆன்மாவன்று; அது நுண்ணுடம்பின் வேறு**' என்பது.

**(உ) அந்தக் கரணங்கள்**[4] **உயிர் ஆகாமை:** மனம், புத்தி சித்தம், அகங்காரம் என்னும் நான்கையும் ஆன்மா என்பர் **அந்தக்கரணவாதிகள்.** இக்கொள்கையையும் மறுப்பர் **மெய்கண்டார்.** அவர் கூறுவது: "ஐம்பொறிகள் அறிந்த புலனைச் சித்தம் சிந்தித்து அறியும். மனம் அதைப் பற்றிச் சங்கற்பம் விகற்பம் செய்யும். ஆங்காரம் ஒருப்பட்டு எழும். புத்தி நிச்சயிக்கும். இங்கும் 'ஒன்று செய்யும் செயலை மற்றொன்று செய்ய அறியாது' என்னும் மறுப்பே போதிய தாகும். ஆகவே அந்தக் கரணங்கள் ஆன்மா அல்ல; ஆன்மா அவற்றின் வேறு" என்பது.

**(ஊ) பிராணன் (பிராணவாயு)**[5] **உயிர் ஆகாமை:** பிராணவாயுவையே ஆன்மா என்று கூறுவர் **பிராணான்ம வாதிகள்.** இதற்கும் மறுப்பு உண்டு. ''உறக்கம்; விழிப்பு என்ற இருதிற நிலைகளிலும் பிராணவாயு ஒரு தன்மையாகவே இயங்கிக் கொண்டு நிற்கின்றது; ஆயினும் உடம்புக்கு விழிப்பு நிலையில் மட்டுமே இன்பதுன்ப உணர்ச்சி உள்ளது. உறக்க நிலையில் அவை இல்லை. ஒரு தன்மையதாக இயங்கிக் கொண்டிருக்கும் பிராணவாயு இவ்வேறுபாட்டுக்குக் காரணமாதல் அமையாது. மேலும் காற்று அறிவில்லாத சடப் பொருள் என்பது எல்லோர்க்கும் உடன்பாடாக உள்ளது. சடப்பொருளை அறிவுடைமையது எனக் கூறுதல் முருட்டு வாதமாகும். ஆகவே சுகமாகத் தூங்கினேன்' என்று சொல்லத் தக்க அநுபவமும் பிராணவாயு அல்லாத வேறொன்றினுடை

4. அந்தக்கரணம் - உட்கருவி
5. பிராணவாயு - மூச்சுக்காற்று

யது. அதுவே ஆன்மா என்ற வேறொரு பொருளாகும்'' என்பது.

**(எ) கருவிக் கூட்டங்கள் உயிராகாமை:** ஐம்பொறிகள் முதலாகக் காட்சிப் பொருளாய் விளங்கும் கருவிகளும், மனம் முதலாகிய கருத்துப் பொருளாய் விளங்கும் கருவிகளும் அனைத்தும் கூடிய தொகுதியே உயிர் என்பர் **சமுதாய ஆன்மவாதிகள்.** "இங்ஙனம் திரண்டு நிற்கும் பொழுது உடம்பு என்ற பெயரால் வழங்கப்படுவதன்றி உயிர் என்று வழங்கப் பெறுதல் இல்லை. 'உடம்பு' 'உயிர்' என்னும் சொற்கள் வேறுவேறு பொருளைக் குறிக்க அமைந்த சொற்கள். உடம்பு என்ற சொல்லால் குறிக்கப் பெறும் பொருளை 'உயிர்' என்னும் சொல்லால் குறிக்கப்பெறும் பொருளாகக் கொள்ளுதல் எவ்வாற்றானும் பொருந்தாது. சடப்பொருள்களினின்றும் எவ்வாறேனும் சித்துப் பொருள் தோன்றமாட்டாது. ஆகவே அனைத்துக் கருவிகளும் ஒருங்கு கூடிநிற்பினும் அவற்றினின்றும் அறிவு தோன்றுமாறில்லை. அத்தொகுதிக ளிடமாக நிகழும் அறிவு அவை அனைத்திற்கும் வேறானதேயன்றி அவற்றின் உள்ளதன்று. அதனால் அறிவுப் பொருளாகிய உயிர் அத்தொகுதியின் வேறானது. ஆகவே, நன்கு நோக்கினால் ஒளிமறைந்த கண்ணுக்கு உருவத்தை அறிய உதவும் கண்ணாடி போல, அறிவை இழந்த உயிருக்குப் பொருள்களை அறிய முடிய உதவுகின்ற கருவியே உடம்பாவ தன்றி, உடம்பு எவ்வகையிலும் உயிராகாது" என்பது **மெய்கண்டாரின்** மறுப்பாகும்.

**(ஏ) பரப்பிரம்மம் உயிராகாமை:** "பரப்பிரம்மம் ஒன்றே உள்ளது; இரண்டாவது பொருள் இல்லை" என்னும் கொள்கையுடையவர்கள் **ஏகான்மவாதிகள்.**[6] ஆகையால்

6. இவர்களை **'அத்வைதிகள்'** என்றும் கூறுவர். இவர்கள் ஆதிசங்கரர் மதத்தைத் தழுவியவர்கள்

அவர்கள் "அறிவு வடிவாய் உள்ளது பரப்பிரம்மமே; அது வானத்திலுள்ள ஒரு சந்திரன் பூமியிலுள்ள பல நீர் நிலைகளில் பல சந்திரர்களாய்ப் பிரதிபலிப்பதைப்போல, மாயையின் காரணமாகிய பல உடம்புகளில் பல சீவன்மாக்களாகப் பிரதிபிம்பிக்கின்றது. ஆகவே, உயிர் பரப்பிரம்மமேயன்றி வேறில்லை" எனக் கூறுவர். இவர்கள் கூற்றின் பொருந்தாமை யையும் மெய்கண்டார் தெளிவாக விளக்குவார்.

அவர் கூறுவது; (i) "பரப்பிரம்மம் அறிவே வடிவானது' என்பதை ஒப்புக் கொண்டால், 'அதற்கு அறியாமையும் உண்டு' என்று கூறுதல் மாறுகோள் உரையாகும். ஏனெனில், 'சூரியன் ஒளியே வடிவானவன்' என்று சொல்லிவிட்டு, அதே சமயத்தில் 'அவனிடத்தில் இருளும் உண்டு' என்பது எப்படிப் பொருந்தும்? இது போலத்தான், 'அறிவே வடிவமான பரப்பிரம்மம் அறியாமையையும் உடையதாகும்' என்று கூறுதலும் பொருந்தாது. உலகில் உடம்புதோறும் காணப்படு கின்ற உயிர்கள் பரு உடம்பாயும் நுண்உடம்பாயும் நிற்கும் கருவிகள் முழுவதும் செயலற்றிருக்கும் பேருறக்கத்தில் ஒன்றும் அறியாது பேர் அறியாமையில் அழுந்தியும், அக்கருவிகள் எந்த அளவிற்குச் செயற்படுகின்றனவோ அந்த அளவிற்கு அறிவைப் பெற்றும் நிற்கின்றன. உயிர்களை ஓர் அறிவுயிர், ஈரறிவுயிர் முதலாக ஆரறிவுயிர் வரையிலும் பகுத்துக் கூறுதல் அவற்றின் உடம்பு பற்றியேயாகும். ஆகவே, உயிர் இயற்கையில் அறியாமையை உடையதாய், பலவகை உடம்புகள் அவ்வறியாமையைச் சிறிது சிறிது நீக்கி அறிவை உண்டாக்கிய பின்னரே அறியும் தன்மையை உடையனவாதல் தெளிவு. ஆகவே, 'பரப்பிரம்மமே இவ்வாறு இயற்கையில் அறியாமையை உடையதாய் நின்று, பின் கருவிகள் வந்து அறிவைத் தர, அதனைப் பெறும்' என்று கூறின், அது 'சூரியன் ஒளியைப் பெற்று விளங்குதல், உலகில்

ஏற்றப்படும் சிறிய விளக்குகளினாலேயாம்' என்று கூறுவதனோடொக்கும். சந்திரன் சூரியன் பூமியிலுள்ள நீர்நிலைகளில் பிரதிபலிக்குமாயின், அவ்விடத்திலும் அவை ஒளியுடையதாய் இருளை ஓட்டுவதல்லது இருளில் மூழ்குவதில்லை. அது போல, பரம்பிரம்மமே மாயையில் பிரதிபலிக்குமாயின், அவ்விடத்திலும் அது மாயையை ஒழிக்குமேயன்றி அதனால் மயங்கி விடாது, ஆகவே, மாயையில் அகப்பட்டு மயங்கி நிற்கின்ற உயிரை, 'அறிவே சொரூபமான பரப்பிரம்மத்தின் பிரதிபிம்பம்' எனக் கூறுதல் அறிவுடைமை ஆகாது; அஃது அறியாமை நிறைந்த கூற்றாகும்."

(ii) மேலும, "இரவயோ மதியோ நீரில் பிரதிபலித்து நிற்குமாயின், அவ்விடங்களிலும் அது பரப்பிரம்மமாய் நிற்குமேயன்றி, சீவான்மாக்களாய் நில்லாது. ஆகவே, சீவான் மாக்கள், பரமான்வாகிய பரப்பிரம்மத்தின் பிரதிபிம்பமாகக் கூறுதல் எவ்விதம் பொருந்தும்?"

(iii) இன்னும், ''உடம்பு தோறும் காணப்படுகின்ற சீவான் மாக்கள், அவ்வுடற் கருவிகள் செயற்படும் பொழுது அறிவைப் பெறுகின்றன. அப்பொழுது பிற பொருள்களை அவ்வாறு அறிவனவன்றித் தன் சொரூபத்தைத் தாம் அறிவதில்லை. தம் சொரூபத்தை ஓர் ஆசிரியர் வந்து அறிவிக்கவே அறிகின் றன. தம் சொரூபத்தை அறியாது பிறபொருள்களை அறியும் பொழுதும் எல்லாப் பொருள்களையும் ஒருங்கே அறிவ தில்லை. ஒவ்வொன்றாகவே அறிகின்றன. அஃதாவது, ஒரு பொருளை ஒரு கணத்திலும், மற்றொரு பொருளை அடுத்த கணத்திலுமாக அறிகின்றன. இவ்வாறு ஒவ்வொன்றாக அறியும் பொழுதும் இடைவிடாது அறிதலின்றி விட்டுவிட்டே அறியும். அப்பொழுது நினைப்பையும் மறைப்பையும் மாறி மாறிப்

பெற்று நிற்கும். அறிந்தவற்றை மறக்கும் தன்மையும் உயிர் களுக்கு இருப்பது தெளிவு. இத்துணைக் குறைபாடுகளை யுடைய சிற்றறிவாகிய உயிரைப் பேரறிவாகிய பரப்பிரம்மத் தின் பிரதிபிம்பம் எனக்கூறின் அது பொருள்களின் பெற்றியை நன்கு உணராது கூறும் கூற்றேயாகும். அதனால் ஏகான்மவாதிகள் (பிரம்மான்மவாதிகள்) 'சீவான்மாவும் பரமான்மாவே யன்றி வேறில்லை' எனக் கொண்டு 'நானே பிரம்மம்' எனக் கூறிக் கொள்ளுதல் மயங்கிக் கூறிக் கொள்ளு தலாகும்.''

(iv) மற்றும், 'பரப்பிரம்மத்தின் அறிவு எஞ்ஞான்றும் தனக்குப் பிறிதொரு துணைவேண்டாது தானே விளக்கி நிற்பதாகலின், அது '**சுயம்பிரகாசம்**' என்பதாகும். உயிரின் அறிவு அவ்வாறின்றி எஞ்ஞான்றும் யாராயினும் ஒரு துணை யைக் கொண்டே விளங்குவதாகலின் அது '**வியஞ்சகப் பிரகாசம்**' என்பதாகும், அதனால் வியஞ்சகப் பிரகாச அறிவாகிய உயிர் எவ்வாற்றாலும் சுயம்பிரகாச அறிவாகிய பரப்பிரம்மம் ஆமாறு இல்லை.''

(v) பின்னும், ''பரப்பிரம்மத்தின் அறிவு பிரிதொன்றால் திரிபெய்தாது, எஞ்ஞான்றும் தன்தன்மையிலேயே நிற்பது, அதனால் அது சுதந்திரமான அறிவாகும். உயிரின் அறிவு அவ்வாறின்றி 'அடுத்தது காட்டும் பளிங்குபோல்', அறியப் பட்ட பொருளின் தன்மையே தன் தன்மையாகத் திரிந்து நிற்கும் இயல்புடையது. அதனால் அது பரதந்திரமான அறிவு ஆகும். இதனை நன்குணர்ந்தால் பரதந்திர அறிவான உயிர் எவ்வாற்றானும் சுதந்திர அறிவான பரப்பிரம்மம் ஆமாறு இல்லை'' என்பது தெளியப்படும்.

இவ்வாறு 'பரம்பிரம்மமே உயிர்' என்பாரது கூற்றும் சிறிதும் பொருந்தாமையைத் தெளிவுறுத்துவர் **மெய்கண்டார்.**

இவ்வாறு உயிர் பற்றிய பல்லோர் கூற்றையும் 'அன்று, அன்று' என மறுத்து உயிர்பற்றிய தம் கொள்கையைக் கூறுகின்றார்.

## (2) உயிர்பற்றிய மெய்கண்டாரது கொள்கைகள்:

ஒரு பொருளை 'அஃது உண்டோ? இல்லையோ?' என்று ஆராய்வதற்கு முன்னர் அதன் இயல்பு இன்னது என்பதை ஒரு சிறிதேனும் உணர்தல் வேண்டும். 'அறியும் தன்மையுடையது உயிர்' என்பது முன்பு பல இடங்களிலும் விளக்கப்பெற்றுள்ளது. இது பொதுவாக யாவராலும் கொள்ளப் படுவது, இனி "உயிர் அறிவித்தால் அறியக் கூடியது; அறியு மிடத்து ஒவ்வொன்றாக அறிவது; அறிவதையும் விட்டு விட்டே அறிவது; அங்ஙனம் அறியுங்கால் அறியப்பட்ட பொருளில் அழுந்தி அதுவேயாய் நின்று அறிவது ஆகிய இயல்பினையுடைய அறிவுப் பொருளே உயிர் அல்லது ஆன்மா" என்பதே மெய்கண்டார் கூறுவது.

அன்றன் றெனநின் றனைத்தும் விட் டஞ்செழுத்தாய்
நின்றொன் றுளததுவேநீ; யனைத்தும் – நின்றின்று
தர்ப்பணம்போல் காட்டலால் சார்மாயை நீயல்லை
தற்பரமும் அல்லை தனி.

(தர்ப்பணம்–கண்ணாடி)

அறிந்தும் அறிவதே யாயும் அறியாது
அறிந்ததையும் விட்டங் கடங்கி–அறிந்தது
எது?அறிவும் அன்றாகும்; மெய்கண்டான் ஒன்றின்
அதுஅது தான்என்னும் அகம்.[7]

என்ற வெண்பாக்களால் இது தெளிவாகும்.

7. சி.ஞா.போ - சூத். 3. அதிகரணம் 6

இவற்றால் உயிர் என்பது தானே அறிந்தும் அறிவித்தும் நிற்பதாகிய பதியும் அன்று; அறிவித்தாலும் அறிய மாட்டாத பாசமும் அன்று; அறிவித்தால் அறியும் அறிவுடைய ஓர் இடைப்பட்ட பொருள் என்பது மேலும் தெளிவாகும். அறிவே வடிவாகிய பதிப்பொருள் **'சித்து'** என்று சொல்லப்படுவதை யும், அறிவே இல்லாத சடப் பொருள்களாகிய பாசங்கள் **'அசித்து'** என்று வழங்கப் பெறுவதையும் நாம் அறிவோம். ஆதலால் அவ்விரண்டிற்கும் இடைப்பட்டதாக பசு **'சிதசித்து'** என்று மொழியப்படும். சித்தாகிய பதி ஒரு பெற்றியதாய் இருத்தல் பற்றி **'சத்து'** என்றும், அசித்தாகிய பாசங்கள் நிலை மாற்றங்கள் அடைதல் பற்றி **'அசத்து'** என்றும் சொல்லப் பெறுவதால், இடைப்பட்ட பொருளாகிய பசு **'சதசத்து'** என்றும் சொல்லப்படும்; இவற்றால் பதி, சித்து; பாசம், அசித்து; பசு. சிதசித்து என்பதும் தெளியப்படும். மேலும் பதி, சத்து; பாசம், அசத்து; பசு-சதசத்து என்பதும் பெறப்படும். **தாயுமான அடிகளின்,**

> அறியாமை சாரின் அதுவாய், அறிவாம்
> நெறியான போததுவாய் நிற்கும்–குறியால்
> சதசத் தருள்உணர்த்தத் தான்உணரா நின்ற
> விதமுற் றறிவெனும்பேர் மெய் ![8]

என்ற திருப்பாடலும் இக்கருத்திற்கு அரணாக அமைந்து விளங்குவதைக் கண்டு தெளியலாம்.

ஈண்டு இரண்டு மாறுபட்ட தன்மைகள் ஒரு பொருளின் கண் இருப்பதுபோல் தோன்றும். ஆனால் உண்மையில் அங்ஙனம் அன்று. **'சிதசித்து'** என்பதற்கு **'சித்துத்தன்மை' 'அசித்துத்தன்மை'** என்ற இரு தன்மையுடையது என்பது பொருளன்று; இரண்டிற்கும் இடைப்பட்ட மற்றொரு தன்மை

8. தா.பா.உடல் பொய்யுறவு - 22

என்பதே பொருளாகும். அதாவது சித்துப்பொருளை நோக்க **அசித்து**' என்னும்படியும், அசித்துப் பொருளை நோக்க '**சித்து**' என்னும்படியும் நின்று, சித்தோடு கூடிச் சித்தாயும் அசித்தோடு கூடி அசித்தாயும் நிற்பதாய ஒரு தன்மை என்பதே பொருளாகும் என்பது உணரப்படும். ஏனையவற்றிற் கும் இவ்வாறே பொருள் கொள்ளல் வேண்டும். உயிர் '**சதசத்து**' என்பதற்குச் '**சத்தும்**' அன்றாய், 'அசத்தும்' அன்றாய், 'சத்தை' நோக்க '**அசத்தாயும்**,' 'அசத்தை' நோக்க **சத்தாயும்** நின்று, சத்தோடு கூடிச் சத்தாயும் அசத்தோடு கூடி அசத்தாயும் நிற்பதொரு தன்மையாகும் என்பதும் தெளியப் படும். உயிர் 'சூக்குமாசூக்குமப் பொருள்' என்பதும் இவ்வாறேயாகும். இதனால் உயிரை 'அருவப்பொருள்' என்றோ, உருவப்பொருள் என்றோ 'இருதன்மைகளையுடைய பொருள்' என்றோ கூறுதல் பொருந்தாது. இங்ஙனமே, உயிரின் தன்மை எல்லாவற்றையும் தனியாக வைத்து உணர்தல் வேண்டும். ஆகவே, பதி, 'சத்து, சித்து, சூக்குமம்' எனவும், பாசம், 'அசத்து அசித்து தூலம்' எனவும், பசு பதியை நோக்க 'அசத்து, அசித்து, தூலம்' எனவும், பாசத்தை நோக்க 'சத்து, சித்து, சூக்குமம்' எனவும் சொல்லத்தக்க தனித்தன்மை யுடையது என்பதாயிற்று. 'பசு சதசத்து, சிதசித்து, சூக்குமா சூக்குமம்' என்பதற்கும் இதுவே பொருளாதல் அறிந்து தெளியப்படும்.

**மேலும் மெய்கண்டார் தரும் விளக்கம்:** சித்தாயும் சத்தாயும் நிற்கும் பதிக்கும், அசித்தாயும் அசத்தாயும் நிற்கும் பாசத்திற்கும் சிறந்த தொடர்பு உண்டாவதில்லை. இதனால் இவற்றுள் ஒன்றால் மற்றொன்றிற்கு வருவது ஒன்றும் இல்லை. இடையில் நிற்கும் பசுவே இரண்டனோடும் சிறந்த வகையில் தொடர்புடையதாய் உள்ளது. இதனால் இஃது இரண்டாலும்

வரும் நன்மை தீமைகளை எய்துகின்றது. இதனை **மெய்கண்டார்,**

இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா[9]

என்னும் ஓர் அரிய தொடரால் விளக்குவர். இத்தொடர் **மூன்று வேற்றுமைத் தொடர்களாய்** நின்று **மூன்று வேறுபட்ட பொருள்களைத்** தருவதையும் காண்போம்: (1) இருதிறன் அறிவுளது என்று **இரண்டாம் வேற்றுமைத் தொகையாக நின்று** இருதிறன்களாகிய **சத்து, அசத்து** என்ற இரண்டினை யும் அறியும் அறிவினையுடையது என்னும் பொருளையும்; (2) இதே தொடர் **மூன்றாம் வேற்றுமைத் தொகையாக** நின்று இருதிறன்களாகிய **சத்து அசத்துகளின்** உதவியால் அறியும் அறிவினையுடையது என்னும் பொருளையும்; (3) இத்தொடர் **ஏழாம் வேற்றுமைத் தொகையாக நின்று** இருதிறன்களாகிய **சத்து அசத்து** ஆகிய இரண்டன் கண்ணும் நின்று அறியும் அறிவையுடையது என்னும் பொருளையும் தருவதை அறிந்து தெளியலாம்.

**விளக்கத்தை மேலும் தெளிவாக்கல்:** பாசம் அறிவில் லாத பொருள் என்பதையும், பசு அறிவுடைய பொருள் என்பதையும் நாம் அறிவோம். பதிக்குப் பசு தன் இனமும் (ஸ்வஜாதி) பாசம் வேற்று இனமும் (விஜாதி) ஆகின்றன. 'பதிக்குப் பசு தன் இனம்' என்பதை ஒப்புக் கொண்டு, 'பதியின் சாயை (நிழல்) அல்லது கூறே (அம்சம்) பசு' என்பவரது கூற்றை ஒப்புக் கொண்டால் நேரிடும் அசம்பாவிதம் என்ன என்பதை விளக்க வேண்டியதாகின்றது. 'இனம்' என்பதும், 'சாயை அல்லது கூறு' என்பதும் ஒன்றாகாது. ஏன்? 'தேமா, புளிமா' என்னும் இருமரங்களும் 'மரம்' என்னும் ஓர் இனத்தைச் சேர்ந்தவை என்பதனால் ஒன்றன் சாயை அல்லது

9. சி.ஞா.போ. சூத். 7

கூறே மற்றொன்றன் கூறு என்று கூறுதல் கூடுமோ? தேமாவின் கனி இனிப்பது; புளிமாவின் கனி புளிப்பது; இரண்டிலும் ஒன்றன் கூறு மற்றொன்றன் கூறாதல் எவ்வாறு? இங்ஙனமே, எட்டி மரமும் பலாமரமும் 'மரம்' என்னும் அளவில் ஓர் இனமாயினும், பலாவின் கனி இனிப்புடையதாயிருக்க, எட்டியின் கனி கசப்புடையதாய் நஞ்சாகி இருக்கின்றதன்றோ? இந்த இரண்டிலும் ஒன்றன் கூறு பிறிதொன்றன் கூறாகாது என்பது வெளிப்படை. இவ்வாறெல்லாம் நுணுகி நோக்கின், 'இனம்' என்பதும், 'சாயை அல்லது கூறு' என்பதும் வெவ் வேறு கருத்துகளையுடையவை என்பது தெளிவாகும். இக் காரணத்தால் 'பதிக்குப் பசு தன் சாயை அல்லது பிரதிபிம்பம் அல்லது கூறுதான் பசு' என்பவரது கொள்கையை ஒப்புக் கொள்ளுதல் இயலாது.

இக்கூறியவற்றால் ஒருவாறு தெளிவு ஏற்பட்டிருக்கலாம். பதியின் அறிவு மேற்கூறிய பெருமையை எல்லாம் உடைமை யால், அது சூக்குமசித்தாயும் மாற்றம் ஏய்தாததாயும் உள்ளது. ஆதலால் அதனைப் பாசம் பற்றுதல் இல்லை. பசு அவ்வா றின்றி மேற்கூறிய சிறுமைகளையெல்லாம் உடைமையால் அது தூலசித்தாயும் தான் அடுத்த பொருளின் தன்மையை எய்தியிருப்பதாய் இருத்தலால் அதனைப் பாசம் பற்றுவதா கின்றது. ஆகையால் பதி **அநாதி முத்தசித்துரு** (இயல் பாகவே பாசங்கள் நீங்கிய அறிவுடையது) என்பதும், பசு **அநாதி பெத்த சித்துரு** (இயல்பாகவே பாசத்தில் கட்டுண்டு கிடக்கும் அறிவு உடையது) என்பது தெளிவாகின்றதல்லவா? **'பசு'** என்பதற்கே 'பாசத்தால் கட்டுண்டு கிடப்பது' என்பது தான் பொருள் என்பது முன்னரும் குறிப்பிடப்பெற்றுள்ளது.

## (3) உயிரின் இயல்புகள் – மேலும் சில கருத்துகள்:

(அ) **உயிர் அறிவுடைப் பொருள்:** 'அறியும் தன்மையுடையது உயிர்' என்பதை நாம் அறிவோம். அறிவு– பண்பு; உயிர்– அதையுடைய பண்பி. அறிவாகிய பண்பு வேறு சில பண்புகள் போலக் காட்சிக்குப் புலனாகாது; அது கருத்திற்குப் புலனாகும். அறிவாகிய பண்பு காட்சிக்குப் புலனாகாதொழியவே, அதனையுடைய உயிராகிய பண்பியும் காட்சிக்குப் புலனாகாதொழிகின்றது. இதனால் கருத்திற்கு மட்டிலும் புலனாகின்ற அறிவை காணப்பட்ட உடம்பின் பண்பாகக் கூறுதல் பொருந்தாது. அங்ஙனமே கருத்திற்கு மட்டிலும் புலனாகின்ற மனம் முதலிய பிறகருவிகளின் பண்பாகவும் கொள்ளுதல் சிறிதும் பொருந்தாது. ஆகவே பருவுடம்பு (தூல சரீரம்), நுண்ணுடம்பு (சூக்கும சரீரம்), நனி நுண் உடம்பு(பரசரீரம்) என்னும் கருவிகளாகிய சடப்பொருள் களினும், அறிவே வடிவமாய் நிற்கும் பரம்பொருளினும் வேறாய் நிற்கின்ற அறிவுடைய பொருள் எதுவோ அதுவே உயிர் எனப்படும் என்பது தெளிவு.

**(ஆ) உயிர்கள் பல:** 'பதி' என்ற கடவுட்பொருள் ஒன்றேயாகும். **உயிர்** அவ்வாறன்றி அளவிறந்தன. அதனால் இறையை '**ஏகன்**' என்றும் உயிரை '**அநேகன்**' என்றும் வழங்குவர்.

**ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க.**[10]

என்ற **மணிவாசகரின்** மணிவாக்கால் இதனைத் தெளியலாம். உயிர்கள் எண்ணிறந்தன என்பதை மெய்ப்பிப்பதற்குச் சான்று ஒன்றும் வேண்டா. ஓர் உயிர் ஓர் உடம்பில் நின்று அநுபவிக்

10. திருவா. சிவபுரா. அடி. 5

கும் இன்பதுன்பங்கள்– நுகர்ச்சிகள்– மற்றோர் உயிர்க்கு இல்லாமையால், ஒவ்வோர் உடம்பில் உள்ளதும் தனித்தனி வேறுவேறு உயிரே என்பது எளிதில் தெளிவாகும். அதுவன்றி, பல உடம்புகளில் உள்ள உயிர்களும் ஒன்றே என்று மெய்ப்பிப் பதற்கு வழி இல்லை. ஆதலின் உயிர்கள் ஒன்றல்ல, பலவே யாம் என்பது அறிந்து தெளியப்படும்.

**(இ) பதி-பசு அறிவு வேற்றுமை:** பதியும் அறிவுடை யது, பசுவும் அறிவுடையது என்றாலும் பதியின் அறிவு தானே விளங்குவது; அறிவிப்பதற்குத் துணை ஒன்றையும் வேண்டா தது; தானே அறிவது. அங்ஙனம் அறியுங்கால் அறியப்பட்ட பொருளில் அழுந்தி அதன் தன்மையைப் பெறாது தன்னியல் பில் நின்றே அறிவது; அதனால் அது '**சுதந்திர அறிவு**' என்று வழங்கப்பெறும். பசுவினது அறிவு அவ்வாறன்றிப் பிறிதொரு பொருள் அறிவிக்கவே அறியும் தன்மையுடையது. அங்ஙனம் அறியும் பொழுதும் அறியப்படும் பொருளில் அழுந்தி அதன் தன்மையதாகியே அறிவது. அதனால் அது '**பரதந்திர அறிவு**' என வழங்கப்பெறும். அறியப்படும் பொருளில் அழுந்தி அதன் தன்மையதாதல் '**சார்ந்ததன் வண்ணமாதல்**' எனப்படும். பதியினது அறிவு பொருள்களை ஒவ்வொன்றாய் அறியாது எல்லாவற்றையும் ஒருங்கே அறிவது; மேலும் அவற்றை இடைவிடாமல் அறிந்தவாறே அறிந்து நிற்பது– அதனால் அது '**பேரறிவு**' அல்லது '**முற்றறிவு**' என வழங்கப்பெறும். பசுவினது அறிவு அவ்வாறன்றி ஒரு காலத்து ஒரு பொருளையன்றிப் பிறிதொன்றனை அறிய மாட்டாது, ஒவ்வொன்றாகவே அறிவது; அதனையும் விட்டு விட்டு அறிவது; அதனால் அது '**சிற்றறிவு**' என்று பேசப்பெறும். பதியினது அறிவு தான் அறிதலேயன்றிப் பிறிதோர் அறிவுக்கு அறிவாய் நின்று, அதனையும் அறியச் செய்யும் தன்மை யுடையது. அதனால் அது '**நுண்ணறிவு**' என்றும் '**சூக்கும**

**சித்து**' என்றும் வழங்கப்பெறும். பசுவினது அறிவிற்கு அத் தகைய ஆற்றல் இல்லை; அறிவித்தல் அறியும் தன்மையை மட்டும் உடையது; அதனால் அது '**பருஅறிவு**' அல்லது '**தூலசித்து**' எனப்படும். பதியின் இயல்புகளை விளக்கும் போதும் இவையெல்லாம் குறிப்பிடப்பெற்றன.[11] இவண் குறிப்பிட்ட பசுவின் இயல்புகள் அனைத்தும் அதற்கு இயற்கையாய் என்றும் உரிய தன்னியல்புகள் ஆகும்.

**(ஈ) சார்ந்த வண்ணமாதல்:** இதன் விளக்கம் ஈண்டு தரப் பெறுகிறது. ஒரு பொருள் தன்னால் சாரப்பெற்ற பொரு ளின் தன்மையையே தன்தன்மையாகக் கொண்டு நிற்பதுவே சார்ந்ததன் வண்ணமாதலாகும். இத்தன்மையே உயிர்களின் உண்மைநிலை எனப்படும் **சொரூப இலக்கணம்** ஆகும். உயிர் பாசத்தைச் சார்ந்தவழிப் பாசமேயாயும் பதியைச் சார்ந்த வழி பதியேயாயும் நிற்கும் என்பது அறியப்படும். உயிர்கட்கு இன்பத்தை விரும்புதலே இயல்பேயாதலின், இன்பப் பொரு ளாகிய பதியை[12] அடைதல் உயிரின் இயல்பாக அமைந் துள்ளது; ஒன்றிரண்டு எடுத்துக் காட்டுகளால் இந்த இயல்பைத் தெளியலாம்.

படிகம் தன்னை அடுத்துள்ள பொருளின் நிறத்தையே தன் நிறமாகக் கொண்டு நிற்பதை உணரலாம். அதாவது படிகம் நீலமணியைச் சார்ந்தபொழுது நீலமாயும் செம்மணியைச் சார்ந்தபொழுது செம்மையாயும் விளங்குவதைக் காணலாம். இதனை நினைந்தே வள்ளுவப் பெருந்தகையும் '**அடுத்தது காட்டும் பளிங்குபோல்**'[13] என்று குறிப்பிட்டுள்ளதை நினைவு

11. இந்நூல் - பக் 45-51
12. அகமகிழ்வரும் தேன், கற்கண்டு, அமிர்தம் - என்றெல்லாம் தாயுமான அடிகள் பதியைக் குறிப்பிடுவது காண்க. (தா.பா. பொருள் விளக்கம் - 4 (இவற்றை ஈண்டு நினைக்கலாம்)
13. குறள் - 706

கூரலாம். **தாயுமான அடிகளும் 'பளிங்கு அனையசித்து'**[14] என்று குறிப்பிட்டுள்ளதையும் சிந்திக்கலாம் படிகத்தின் வண்ணம் இவ்வாறு சார்ந்ததன் வண்ணமாக மாறுவதாயினும் **'படிகத்தின் வண்ணம்'** என்ற ஒரு நிறம் அதற்கு உண்டு என்பதனை மறந்து விடுதல் கூடாது. இன்னோர் எடுத்துக் காட்டு: கண் ஒளியைச் சாரும்பொழுது ஒளி வடிவாயும், இருளைச் சாரும் பொழுது இருள் வடிவாயும் நிற்றலை அநுபவத்தால் அறியப் பெறுவதாகும். இங்கும் கண்ணின் ஒளி இவ்வாறு மாறுவதனாலும் கண்ணுக்கென்று ஓர் ஒளி உண்டு என்பதனையும் மறந்து விடுதல் கூடாது. இங்ஙனமே பசுவாகிய உயிருக்கு ஓர் அறிவு உண்டு என்று அறியப்படும். இந்த அறிவு அறியப்படும் பொருளின் தன்மையாய் மாறும் என்பதனை நன்கு உணர்ந்து தெளியலாம்.

> நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
> இனத்தியல்ப தாகும் அறிவு.[15]

என்று வான்மறை வள்ளுவமும் குறிப்பிட்டுள்ளதைச் சிந்திக் கலாம். **'சார்ந்ததன் வண்ணமாதல்'** என்பது உயிரின் தன்னி யல்புகளில் (Essential nature) முதன்மையானது என்பது தெளியப்படும்.

இதனால் உயிர் எப்பொழுதும் தனித்து நின்று விளங் காது எனவும், ஒரு பொருளின் துணை கொண்டே அஃது அறியப்படும் என்பதும் அறிந்து தெளியப்படும். இதனால் உயிர்கள் எப்பொழுதும் தனித்தறியப்பெறா. அவை பெத்த நிலையில் பாசத்தோடும் முத்தி நிலையில் பதியோடும் வைத்தே அறியப்படுவனவாகும்.

14. தா.பா. ஆகாரபுவனம் - 18
15. குறள் - 452

**(உ) உயிரின் இடைப்பட்ட நிலை:** உயிருக்குச் சார்ந்த தன் வண்ணமே தன்னியல்பாதலின் அஃது எல்லாவகையிலும் இடைப்பட்டதாய் நிற்கும் பொருளேயாயிற்று. அஃதாவது அறிவுடைப் பொருள் எனின் அதற்கு அறியாமை என்பது இருத்தல் கூடாது. அறிவில் பொருள் அறிவித்தாலும் அறிதல் கூடாது. ஆகவே, அறிவுடையதாயினும் அவ்வறிவு அறியா மையால் கவரப்படும் தன்மையுடையதாய், ஒரு கால் அறியா மையால் நிற்றலையும் உடையது என்பது பெறப்படும். படவே, உயிர் அறிவுடைப் பொருளோ, அறிவில் பொருளோ என வினவுவார்க்கு 'இரண்டும் அல்ல, இரண்டும் தான்' என்பதே விடை. அஃதாவது, 'அறியாமையோடு கூடி அறியாமையாய் நிற்பினும், அறிவிக்க அறிந்து வருவதால், அவ்வறியாமையின் நீங்கி அறிவுடைப் பொருளோடு கூடி நிற்கும்' என்பதாம். அறிவுடைப் பொருள் '**சித்து**' என்றும், அறிவில் பொருள் '**அசித்து**' என்றும் சொல்லப் பெறுவதால் உயிர் அவ்விரண் டிற்கும் இடைப்பட்ட (i) '**சிதசித்து**' எனப்படும். எனவே பதி, சித்து; பாசம், அசித்து; பசு, சிதசித்து என்பது விளங்கும்.

இவ்வாறே, உயிர்தோன்றி அழியும் பொருளோ? அன்றி என்றும் ஒரு பெற்றியாய் நிற்கும் பொருளோ? என வினவுவார்க்கும் 'உயிர் இடைப்பட்ட நிலையில் நிற்பது' என்பதே விடையாகும். அஃதாவது, 'உயிர் தான் தோன்றி நின்று அழிவதில்லையாயினும், தோன்றி நின்று அழியும் பொருளில் ஒன்றி நின்று, அது வழியாகவே தனது அறிவும் அநுபவமும் நிகழ நிற்றலின் தோற்றம், நிலை, இறுதிகளை யுடையதாய் நிற்கும். என்றும் ஒரு பெற்றியாய் நிற்கும் பொருள் '**சத்து**' என்றும், தோன்றியழியும் பொருள் '**அசத்து**' என்றும் சொல்லப்படுவதால் உயிர் அவ்விரண்டுக்கும் இடைப்பட்ட (ii) **சதசத்து** என்று சொல்லப்படும். பதி, சத்து; பாசம், அசத்து; உயிர் - பசு, **சதசத்து**.

உயிர் அருவப் பொருளோ? உருவப்பொருளோ? இரு தன்மைகளையும் உடைய பொருளோ? என வினவுவார்க்கு 'அவையல்ல; உயிரின் தன்மை எல்லாவற்றையும் தனியே வைத்து உணர்தல் வேண்டும்' என்பதே அதற்கு விடை.

**விளக்கம்:** (i) 'உயிர் ஆகாயம்போல் அருவப் பொருள்' என்பது **பாசஞ்சலர் மதம்.** உயிர் அருவமாயின், உருவமாகிய உடம்பை எவ்வாறு செயற்படுத்தும்? படுத்த முடியாது.

(ii) 'உயிர் உருவப் பொருளே' என்பது பௌராணிக மதம். உருவம் என்பது காட்சிக்குப் புலனாகும் பொருளே யன்றோ? அதனால் உயிரை உருவப் பொருள் என்றால், 'உடம்பே உயிர்' என்பதுதான் கருத்தாகி விடும். இது தவறு.

'விறகு உருவமாய்க் காணப்பட்டும், நெருப்பு அருவ மாய்க் காணப்படாதும் நிற்றல் போல, ஆன்மா உருவம், அருவம் என்ற இருதன்மைகளையுடையது' என்பர் ஒரு சாரார் (கௌனர்); விறகும் நெருப்பும் வேறுவேறு பொருள்கள்; அவற்றை ஒரு பொருளுக்கு எடுத்துக்காட்டாகக் கூறுதல் பொருந்தாது. இனி, சந்திரன்போல் அருவுருவம் என்னில், உயிரும் சந்திரன்போல சில பொழுதாயினும் காணப்படல் வேண்டும்; எனவே, மாறுபட்ட இருதன்மை ஒரு பொருளுக் குக் கூடாமையால் உயிரை அருவுருவம் என்றலும் பொருந்தாது. இங்ஙனமே உயிரின் தன்மை எல்லாவற்றையும் தனியாக வைத்து உணர்தல் வேண்டும். ஆகவே, பதி, சத்து, சித்து, சூக்குமம்; பாசம், அசத்து, அசித்து, தூலம்; பசு பதியை நோக்க, 'அசத்து, அசித்து, தூலம்' எனவும் பாசத்தை நோக்க 'சத்து, சித்து, சூக்குமம்' எனவும் சொல்லத்தக்க ஒரு தனித்தன்மையை உடையது என்பதாயிற்று. 'பசு, சதசத்து,

சிதசித்து, சூக்குமாசூக்குமம்' என்பதற்கு இதுவே பொருளாதல் அறிந்து தெளியப்படுவர்.

**(ஊ) உயிரின் பரிமாணம் (விரி அளவு):** இடைப்பட்ட நிலையையுடைய உயிரின் விரி அளவு எவ்வகையினது? எந்த அளவினதாய் உள்ளது? என்பவை விளக்கப் பெறுகின்றன.

**(i) உயிர் அணு ஆகாமை:** பாஞ்சராத்திரிகளேயன்றி வேறு சிலரும் உயிரை அணு அளவினதாகக் கூறுவர். உயிர் 'அணு அளவு' என அளவுபட்டு நிற்பின் அது சடமாய் விடுமன்றிச் சித்தாகாது.[16] மேலும் பெரிய அளவும் சிறிய அளவுமாய் எண்ணற்ற துளைகளையுடைய உடம்பில் உயிர் யாதேனும் ஒரு துளையில் ஓடி விடாமல் நெடுங்காலம் அதன் கண்ணேகட்டுண்டிருத்தல் கூடுமோ? கன்மத்தால் அவ்வாறு கட்டுண்டு நிற்கும் எனக் கருதினால் சூக்குமமாகிய கன்மம் தூலமாகிய உடம்பில் அணுவைத் தடுத்து நிறுத்த முடியு மெனின் விலங்குகள் கயிறு முதலியன இன்றியே தறிகளிலும், கள்வர்கள் விலங்கு முதலியன இன்றியே சிறைக் கோட்டத் திலும், கன்மத்தால் கட்டுண்டு கிடத்தல் வேண்டும். அவை கூடுவதில்லை என்பது தெளிவு. ஆகவே, சூக்குமமாகிய கன்மம் தூலப் பொருள் வாயிலாகப் பிணிக்குமே யன்றித் தாமே பிணிக்கமாட்டாது என்பது புலனாகும். இங்ஙனம் புலனாகாவே, உயிர் அணு அளவினதாயின், அஃது உடம்பில் நில்லாது வீழ்ந்து விடும் என்பது தெளிவாகின்றது. அணுவும் தூலப் பொருள் என்பதையும் சிந்திக்கலாம்.

---

16. வைணவத்தில் சித்தாகிய உயிர் அணுவாகி விடும் (வினைப் பயனால்) என்ற கூற்றுக்கு இது மறுப்பாக அமைந்து விடுகிறது. சடப் பொருளுக்குக் கூறும் 'அணு' என்ற அளவு சித்துப் பொருளுக்குக் கூறுவது பொருந்தாது. 'அணு' என்பதை 'சிறியது' என்று கொண்டால் பொருந்துவதாகலாம்.

இன்னும், உயிர் ஒருபரமாணு அளவினது எனக் கருதினால் அதனினும் பன்மடங்கு பெரியதாக உள்ள உடம்பினை அஃது எங்ஙனம் செயற்படுத்தல் கூடும்? உயிரின் அளவு அணு அளவாக இருப்பினும், அதன் ஆற்றல் உடல் முழுதும் சென்று பரவும் எனக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு கொண்டால், ஆற்றல் என்பது பொருளின் வேறன்மையால், '**உயிர், அணு**' என்ற வாதம் தோல்வியுற்று வீழ்கின்றது. ஆகவே, உயிருக்கு அணு பரிமாணம் கூறுதல் பொருந்தாததாகி விடுகின்றது.

**(ii) உயிர் விளக்குப்போல்வது ஆகாமை:** 'ஓரிடத்தில் ஏற்றி வைக்கப்பெற்ற விளக்கின் ஒளி பல இடங்களிலும் பரவுதல் போல், உயிர் இதயத்தில் புல் நுனிமேல் நிற்கும் பனித்துளி அளவினதாய் நிற்க, அதன் அறிவு (ஆற்றல்) உடம்பெங்கும் வியாபிக்கும் என்று கூறுவார் மிருதி நூலோர். இக் கொள்கையும் பொருந்தாது. விளக்கு தூலமாய்க் காணப் படுவதும், அதன் ஒளி சூக்குமமாய்ப் பரவுவதும் வெளிப்படை. அது போல உயிரின் ஆற்றல் சூக்குமமாய்க் காணப்படாத நிலையில் உடம்பெங்கும் பரவி அதன் அறிவு (ஆற்றல்) இருக்க, உயிர் இதயத்தானத்தில் புல் நுனிமேல் இருக்கும் பனித்துளிபோலகட்புலனாதல் வேண்டும். கண்ணுக்குப் புலப்படாத நுண்மையுடையதெனின், வேறு எப்படியாகிலும் அஃது அகப்படுதல் வேண்டும். அதுவும் கூடாதெனின், 'உடம்பெங்கும் பரவும்' என்ற ஆற்றலுக்கு, 'இதயத்தானத்தில் நிற்கும்' என்ற உயிருக்கும் வேற்றுமை இல்லாமையால் அந்த வாதமும் தோற்றொழிகின்றது.

மேலும், விளக்கொளி பரவியுள்ள இடங்களிலெல்லாம் பொருள்கள் விளங்கி நிற்றல் போல் ஐம்பொறிகளிலும் அறிவு எப்பொழுதும் தடைப்படாது நிகழ்ந்து கொண்டே இருத்தல்

வேண்டும். உயிரின் ஆற்றல் உடம்பெங்கும் பரவிநிற்கும் என்பதற்குச் சான்றில்லை. அதனால் இவ்வாதமும் ஏற்க முடியாததாகின்றது.

(iii) **உயிர் உடம்பளவு ஆகாமை:** சமண சமயத்தினா தாம் எடுத்த உடம்பின் அளவாய் செழுமுகம் போல (அட்டை எனும் நீர்ப்பூச்சி போல) நீளுதல் சுருங்குதல்களை அடையும் தன்மையது என்கின்றனர். இஃது உண்மையாயின், பெரிய உடம்பையுடைய உயிர்கள் பேரறிவுடையனவாயும் சிறிய உடலமைப்புடைய உயிர்கள் சிற்றறிவுடையனவாயும் இருத்தல் வேண்டும். அஃதன்றியும், ஒருவகைப் பிறப்பிலேயும் அவ் வாறு வேறுபட வேண்டும். மக்களிலும் பேருடம்புடையோர் பேரறிவுடையவராயும் சிறிய உடம்பையுடைய உயிர்கள் சிற்றறிவுடையராயினும் இருத்தல் வேண்டும். அநபவத்தில் அவ்வாறிருக்கக் காணவில்லை; மாறியும் காணப்படுகின்றது. போர் முதலிய காரணங்களால் உறுப்புக்குறைபட்டவர்க்கு முன்னிருந்த அறிவு குறைந்து காணப் பெற வேண்டும். அவ்வாறு இல்லாமையால் உயிர் உடம்பின் அளவே நிற்கும் தன்மையது என்ற கொள்கை பொருத்தமின்றிப் போகின்றது.

(iv) **உயிர் இறைவனோடு ஒத்த நிறைவுடையது ஆகாமை:** ஐக்கியவாத சைவர் இறைவனைப் போல உயிரும் எங்கும் உள்ள பொருள் என்கின்றனர். உயிர் அவ்வாறு எங்கும் உள்ளது எனின், ஒரு காலத்தில் ஐம்பொறிகளிலும் அறிவு நிகழாது. ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு பொறியில் மட்டும் அறிவு நிகழ்ந்ததற்குக் காரணம் கூறல் வேண்டும். மேலும் உடம்பிற்கு அப்பால் அறிவு நிகழாமைக்கும் இறத்தல் பிறத்தல்களால் விண்ணிலும் மண்ணிலும் போதல் வருதல் நிகழ்தற்கும் காரணம் கூறல் வேண்டும். அது கூடாமையால் உயிர் இறைவனைப் போலவே எங்கும் வியாபித்து நிற்கும் என்றலும் பொருந்து மாறில்லாதாகி விடுகின்றது.

## (4) உயிர்பற்றிய சித்தாந்தக் கருத்து

உயிர் எல்லையற்று நிற்கும் வியாபகப் பொருளே; ஆயினும் அது **இறைவனது வியாபகத்தில் அடங்கி நிற்ப தாகும்.** அதாவது பிற இயல்புகளிற்போலப் பரிமாணத்திலும் இடைப்பட்ட நிலையையுடையது. எனவே, உயிர் பாசத்தை நோக்க **வியாபகமாயும்** பதியை நோக்க **வியாப்பியமாயும்** நிற்பது உயிர் அல்லது ஆன்மா. '**ஆன்மா**' என்பதற்கே '**வியாபகம்**' என்பதே பொருளாகும். ஆன்மா இங்ஙனம் எங்குமாய் நிற்கும் வியாபகப் பொருளாயினும், அவ்வியாபகத் தைத் தோன்றவொட்டாது மறைத்து நிற்கின்றது பாசம். அதனால் உயிரும் அணுப்போலத் தோன்றுகின்றது. வியாபகம் '**மகத்து**' என்றும், ஏகதேசம் '**அணு**' என்றும் சொல்லப்படும். எனவே இயற்கையில் மகத்தாய் உள்ள உயிரை அணுத் தன்மை அடையச் செய்தது **பாசமே.** அணுத் தன்மையைத் தருதல் பற்றியே பாசத்திற்கு **ஆணவம்** என்ற காரணப்பெயர் உண்டாயிற்று என்பதும் அறியப்படும். இந்தப் பாசம் நீங்கினால் உயிர் அணுத்தன்மை நீங்கி மகத்தாகவே நிற்கும்[17] என்பதும் உளங்கொள்ளத்தக்கது. ஆன்மாவின் இயல்பைத் தோன்றவொட்டாது பாசம் மறைத்து நிற்றல் நீரின் இயல்பைத் தோன்றவொட்டாது பாசி மறைத்து நிற்றல் போல்வது என்று விளக்கி வைக்கலாம். எனவே, பாசியை விலக்கினால் விலக்கிய அளவிற்கு நீர் தோன்றுதல் போல் மாயையின் காரியமாகிய உடல், பொறி, கரணங்கள் எந்த அளவில் நின்று ஆணவத்தை விலக்குகின்றனவோ அந்த அளவில் உயிரினது வியாபகம் புலனாகும் என்பது உணர்ந்து தெளியப்படும்.

---

17. வைணவத்தில் ஆன்மாவை அணுத் தன்மையுடையதாகச் செய்வது கர்மமே. ஆனால் அங்குக் கர்மம் அழியக் கூடியது. இங்கு 'ஆணவம்' அழியக் கூடியதல்ல; அடங்கக் கூடியது.

ஆணவமலத்திற்கு மாற்றாய் உள்ளது உடம்பு. ஆணவத்தை நீக்கும் மாற்றுப் பொருளாக இறைவன் மாயையின் காரியமாகிய உடம்பை ஆன்மாவிற்குக் கூட்டியருளுகின்றான். உடம்பு உள்ள இடத்தில் ஆன்மாவிற்கு அறிவு நிகழ்தலும், ஏனைய இடத்தில் அறிவு நிகழாமையும் இயற்கையாகின்றன. ஆகவேதான் ஆன்மா தான் ஒன்றை அறியவும் செய்யவும் விரும்பும் இடத்திற்கு, இறைவனால் தனக்குக் கொடுக்கப் பெற்ற உடம்பைச் செலுத்துகின்றது. இத்தகைய உடம்பின் இடப்பெயர்ச்சியையே உயிரின் இடப்பெயர்ச்சியாக நினைத்து மயங்குகின்றோம். நுணுகி நோக்கினால் உண்மையில் இடம்விட்டுப் பெயர்வது உடம்பேயன்றி உயிரன்று என்பது தெளிவாகும். இக்கூறிய உண்மை தத்துவ ஆராய்ச்சியில் ஆன்மாவின் இயல்பை நுனித்துணரும் இடத்தில்தான் தெளிவாகும். ஏனைய இடங்களில் இது தெளிவாகாமையால், வழக்கத்திலேயன்றி நூல்களிலும் கூட, உயிரே போக்குவரவு புரிவது போலக் கூறப்பெற்றிருப்பதையும் காணலாம்.

துறக்கப் படாத உடலைத்
  துறந்துவெந் தூதுவரோடு
இறப்பன்; இறந்தால் இருவிசும்
  பேறுவன்; ஏறிவந்து
பிறப்பன்; பிறந்தால் பிறையணி
  வார்சடைப் பிஞ்ஞகன்பேர்
மறப்பன் கொலோஎன் றென்உள்ளம்
  கிடந்து மறுகிடுமே[18]

என்ற அப்பர் பெருமானின் திருவாக்கினாலும், **'இருவினையின்-போக்கு வரவு புரிய'**[19] என்ற அருள்ஞானச் செல்வர் மெய்கண்டாரின் பெருவாக்கிலும்,

18. அப். தேவா. 4.113:8
19. சி.ஞா.போ. சூத். 2

மலம்மாயை கன்மம் மாயே
யந்திரோ தாயி மன்னிச்
சலமாரும் பிறப்பி றப்பில்
தங்கிஇத் தரைகீழ் மேலும்
நிலையாத கொள்ளி வட்டம்
கறங்கென நிமிடத் தின்கண்
நலமாரும் இறைவன் ஆணை
யால்உயிர் நடக்கு மன்றே[20]

என்ற **அருணந்தி தேவரின்** திருவாக்கிலும் இதனைக் காணலாம்.

இவண் கூறியவாறு பொதுமை நோக்கால் கூறினும், உண்மை நோக்கில் ஆன்மா வியாபகப்பொருள் என்பதே யாகும். அங்ஙனமாயினும் உயிர் இறைவனது வியாபகத்துள் வியாப்பியமேயாகலின், அந்நிலையை அவனது திருவடிக் கீழ் நிற்றலாகவே அருளிச் செய்வதை அருளாசிரியன்மார் அனைவருமே மரபாகக் கொண்டுள்ளனர்.

அம்மான் அடிநிழற் கீழதன்றோ
என்றன் ஆருயிரே[21]

என்ற **நாவுக்கரசரின்** நல்வாக்கும்,

இருகாற் குரம்பை இதுநான்
உடையது, இதுபிரிந்தால்
தருவாய் எனக்குன் திருவடிக்
கீழோர் தலைமறைவே[22]

என்ற **அப்பர் பெருமானின்** அருள்வாக்கும்,

தெளிந்தேன் சிவன்அடி சேர்ந்தேன்
இனிமிகத் தெள்ளியனே.[23]

---

20. சித்தியார் - 2.88
21. அப். தேவா. 4.84:10
22. மேலது 4.113:2
23. பொன்வண்ணத்தந்தாதி - 23

என்ற **சேரமான் பெருமாள் நாயனாரின்** பெருவாக்கும்,

> மாவேறு சோதியும் வானவரும் தாமறியாச்
> சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ[24]

என்ற **வாதவூரடிகளின்** மணிவாக்கும்,

> தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ[25]
>
> பொன்னங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ[26]
>
> தேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தூம்பீ[27]
>
> செய்யார் மலரடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ[28]

என்ற அப்பெருமானின் தொடர்வாக்குகளும் இம்மரபை உணர்த்துகின்றன. இப்பதிகத்தின் பழைய குறிப்பு '**சிவ னோடைக்கியம்**' என்று தெரிவிப்பதையும் ஓர்ந்து உணரலாம். இங்ஙனம் எல்லாம் வரும் மரபினை நோக்கும்போது '**திருவடிக்கீழ் இருத்தல்**' என்பதன் உண்மைப் பொருள் தெளிவாவதை உணரலாம். இக்கூறியவற்றால் ஆன்மா வியாபகமல்லது பிறிதாகாது என்பது உளங்கொள்ளப்படும்.

**ஓர் உண்மை:** அறிவினது நிலை வேறுபாடே இச்சை யும் செயலும் என்பதை நன்கு அறிவோம். உயிர் அறிவுடைய தாதலின் இச்சையும் செயலும் அதனுடையவை என்பதும் பெறப்படும். ஆகவே, உயிர்களும் இறைவனைப் போலவே **ஞானசக்தி, இச்சா சக்தி, கிரியா சக்தி** என்னும் மூவகைச் சக்திகளையும் உடையனவாகின்றன. இதனால் இறைவனும் உயிரும் ஒன்றாகி விடுகின்றன என்று கருதலாகாது. இறைவன்

24. திருவா. திருக்கோத்தும்பீ - 1
25. மேலது - 2
26. மேலது - 11
27. மேலது - 15
28. மேலது - 17

சூக்குமப் பொருள் என்பதையும் உயிர் தூலப்பொருள் என்பதையும் அறிவோம். அதனால் இறைவனது அறிவு இச்சை, செயல், ஆகியவை சூக்குமமுடையவை; உயிரினது அறிவு இச்சை செயல்கள் தூலமுடையவை. ஆகவே, உயிரினும் தூலமாகிய ஆணவம் உயிரின் இச்சை செயல் களைப் பற்றுமேயன்றி இறைவனது இச்சைசெயல்களைப் பற்றாது என்பதை நாம் உளம் கொள்ளல் வேண்டும்.

ஆகவே, ஆணவமலத்தால் பற்றப்பட்டு வலியிழந்து கிடக்கும் ஆன்மாவினது இச்சைசெயல்களை இறைவனது இச்சைசெயல்கள் **பெத்தகாலத்தில்** மாயை கன்மங்களின் வழியாகவும் **முத்தி காலத்தில்** நேரேயும் செயற்படுத்தி நிற்கும் என்று முன்னர்க் கூறியதை நினைவு கூரலாம். இங்ஙனம் இறைவனது சக்திகள் என்றும் தூயனவாயும் செயற்படுத்துவனவாயும் உள்ளன. ஆயினும், ஆன்மாவினது சக்திகள் அநாதியே மாசுபடிந்தனவாயும் இறைவனது சக்திகள் செயற்படுத்தும் அளவிற்குச் செயற்படுவனவாயும் உள்ளன என்பது அறிந்து தெளியப்படும். இதனால் இம்மூன்று சக்திகளை உடைமை மாத்திரையில் ஆன்மா இறைவனோடு ஒருநிகராதல் இல்லை என்பது அறியப்படும். ஆயினும், ஆன்மா அறிவுடைப் பொருளாதலின், இறைவனோடு சிறப்பு வகையில் தொடர்பு கொள்ளுவதற்குரிய இனப் பொருளாகும். ஆனதுபற்றியே 'ஆன்மா' என்னும் பெயர் இரண்டற்கும் பொதுப் பெயராயிற்று என்பதும் அறியப்படும். அப்பெயரைப் பொதுமை நீக்கிக் கூறினால் **பரமான்மா, சீவான்மா** என்றாகின்றது. எனினும் '**ஆன்மா**' என்பது **சீவான்மா வையே** குறிப்பது எங்கணும் பெருவழக்காக உள்ளது. உயிர் இறைவனுக்கு இனப்பொருள். எனவே பாசங்கள் இனமல்லாத பிறபொருள் என்பது தானே விளங்கும்.

**பிறிதோர் உண்மை:** ஆணவமலம உயிரினது அறிவு, இச்சை, செயல்களை செயற்படவொட்டாது தடுத்து நிற்குமே யன்றி அவற்றை அழிப்பதில்லை; அழித்துவிடவும் இயலாது. ஏனெனில், தோற்றமும் கேடும் அறிவில்லாத பொருளிடத்தில் நிகழுமேயன்றி அறிவுடைய பொருளிடத்து நிகழா. ஆகவே, அறிவு இச்சை செயல்கள் இறைவனிடத்திலாயினும் உயிரி னிடத்திலாயினும் அழிவில்லனவாகும். ஆணவமலம் உயி ரினது அறிவு இச்சை செயல்களைத் தடுத்து நிற்கும் அளவே செய்வதாகும். சடப் பொருள்களுள் ஒன்று மற்றொன்றில் இயல்பு கெடுமாதலின், மாயை கன்மம் என்பவற்றால் ஆணவ மலம் உயிரின் ஞானம் இச்சை, கிரியை செயல்களைத் தடுத்து நின்ற நிலைமை கெடப் பெறும். இங்ஙனம் நிலைமை கெடவே, தடுக்கப்பட்டு நின்ற அறிவு முதலியவை செயற்படத் தொடங் கும். இது விடம் தலைக்கேற மூர்ச்சித்துக் கிடந்தவன் மணி மந்திர மருந்துகளால் விடம் இறங்கப்பெற்று உணர்வுடன் எழுதல் போலாகும். உயிரை இந்நிலைக்கு உட்படுத்தலால், ஆணவமலத்திற்கு '**மூர்ச்சை**' என்ற ஒரு திருப்பெயரும் வழங்கப்பெறுகின்றது.

இங்ஙனம் சூக்குமப் பொருள், தூலப்பொருள், அறிவில் பொருள் என்பவற்றை நுனித்து அறிந்தால்தான் ஆன்ம சொரூபம் தெளிவாக விளக்கம் அடையும். இறைவனைப் போல் சூக்குமப் பொருளாகாத உயிர் தூலமாயிருத்தலின் ஆணவமலத்தால் பற்றப்படும்போது பல்வேறு நிலையினை அடையும். அந்நிலைகள் விளக்கப்பெறுதல் வேண்டும்.

## (5) ஆணவத்தால் கட்டுண்ட ஆன்மாவின் நிலைகள்

உயிர் தூலசித்தாதலால் அஃது இயல்பாகவே பாசத்தால் கட்டுண்டு கிடத்தல் அதன் பொது இயல்பாகும். இந்நிலை ஒரு

காலத்தில் நீங்குவதேயாகும். உயிர் ஆணவமலத்தோடு மட்டும் இருப்பது, பின்னர் அது மாயை கன்மங்களோடு கூடியிருப்பது. பின்னர் மும்மலங்களும் நீங்கப்பெற்று இறைவனோடு கலப்பது என்ற மூன்று நிலைகளையும் **அவத்தை** (அவஸ்தை) என்று கூறுவர் வடமொழியாளர்கள். ஈண்டு அவை விளக்கப்பெறும்.[29]

**(அ) கேவலாவத்தை:** உயிர் ஆணவமலத்தோடு மட்டும் இருக்கும் நிலை '**கேவலம்**' என வழங்கப்பெறும். '**கேவலம்**' என்ற சொல் '**தனிமை**' என்று பொருள்படும். இந்த நிலையில் ஆன்மாவிற்கு அறிவு, இச்சை' செயல் இல்லை. உடம்பும் இல்லை. உட்கருவி செயல்களாகிய மனம் முதலியனவும் இல்லை. அதனால் வினைகளை ஈட்டுவதும் இல்லை; அவற்றின் பயனாகிய இன்பதுன்பங்களை நுகர்வதும் இல்லை; உடல், பொறி, கரணம் முதலிய எதுவும் இல்லாமல் அறியாமையே வடிவமாய்க் கிடக்கும் இந்நிலையை '**இருள்நிலை**' என்று வழங்கலாம். இருள்–அறியாமை. 'உயிர் என்பது ஒன்று இல்லை' என சொல்லாமல் '**உள்ளது**' என்பது மட்டும் கூற நிற்பதால் இது '**தன் உண்மை**' என்றும் கூறப்பெறும்.

**(ஆ) சகலாவத்தை:** இருள் நிலையாகிய கேவலத்தில் உயிர் அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் கொடுமையைக் 'கண்டு கண்ணுதலான் இரக்கங் கொண்டு கருணை காட்டுகின்றான். உயிரினிடம் அறியாமையைத் தந்து நிற்பதாகிய **ஆணவமலத்தைப்** போக்குதற் பொருட்டு **மாயை, கன்மம்** என்ற இரண்டு மலங்களையும் கூட்டுவிக்கின்றான். அவற்றால் ஆணவமலம் சிறிதே நீங்கப்பெற்ற உயிர் உடல்

29. திருமந். செய் 2142-2246இல் அவத்தை பேதங்கள் விளக்கப் பெறுகின்றன. சிவப்பிரகாசம் 33-49இலும் இந்த அவத்தை நிலைகளைக் கண்டு தெளியலாம்.

பொறி கரணங்களைப் பெற்று விண், மண், பாதலம் என்னும் மூவுலகங்களிலும் '**புல்லாய்ப் பூடாய்... கல்லாய் மனித ராய், தேவராய்... எல்லாப்பிறப்பும் பிறந் திளைத்து**'[30] உழலும் நிலை '**சகலம்**' எனப்படும். சகலம்–கலையோடு கூடுதல் எனப்பொருள்படும். கலை–மாயாகாரியம். இந்நிலை யில் உயிருக்கு அறிவு உண்டு; இச்சை, செயல் ஆகிய அனைத்தும் உண்டு. வினைகளை ஈட்டி அவற்றின் பயன்களை நுகர்தலும் உண்டு. இந்நிலையில் உயிர் பெரிய பொருளை அறியமாட்டாது; சிறிய பொருளையே பெரிய பொருளாக மயங்கி அவற்றை அடையவிரும்பி முயலும் சிற்றறிவும், சிற்றிச்சையும், சிறு தொழிலும் உடையதாகும். இந் நிலையை '**மருள்நிலை**' என்று வழங்கலாம். மருள்–மயக்கம்.

**(இ) சுத்தாவத்தை:** மேற்குறிப்பிட்ட விண் மண் பாதலம் என்னும் மூவுலகங்களிலும் மாறிமாறிப் பிறந்து இன்பத்தைப் பெறவும் துன்பத்தைப் போக்கவும் விரும்பும் உயிர் அவற்றிற்குரிய வழிவகைகளை ஆராய்ந்து அறிகின் றது; அவ்வழிகளில் முயன்று எண்ணிய பயன் எண்ணியவாறே கைகூடுமாயின் இன்பத்தை அடைகின்றது. கைகூடாதவழி துன்பத்தை நுகர்கின்றது. விருப்பு வெறுப்புகளையும் அடை கின்றது. இந்தச் சுழற்சியால் ஆணவமலத்தின் சக்தி மெலி வடைவதால் சிறு பொருள்களின் மீதுள்ள நாட்டம் மாறிப் பெரும் பொருளை அடையும் நோக்கம் உண்டாகின்றது. அப்பொழுது இறைவன் குருவாகி வந்து முப்பொருள்களின் இயல்புகளை உள்ளவாறு உணர்த்தி மெய்யுணர்வைத் தருகின்றான். இந்த மெய்யுணர்வால் உயிரும் மும்மலங்களி னின்றும் நீங்கி நின்மலனாகிய இறைவனை அடைந்து இன்புற்றிருக்கும் நிலை எய்தப் பெறுகின்றது. இந்த நிலையே **சுத்தம்** என்று வழங்கப் பெறுகின்றது. மாசாகிய மலங்களினின்

30. திருவா. சிவபுரா. அடி வரு - 31

றும் முற்றிலும் நீங்கி உயிர் தூய்மை பெறுவதால் இந்நிலை **சுத்தாவத்தை** என்ற பெயரைப் பெறுகின்றது. இந்நிலையில் உயிர் இறைவனது அருளையே பற்றுக்கோடாகக் கொண்டிருப்பதால் இந்நிலையை '**அருள்நிலை**' என்று வழங்கலாம்.

இந்த மூன்று நிலைகளைப் பற்றியும்,

**கேவலம் சகலம் சுத்தம்**
**என்றுமூன் றவத்தை ஆன்மா**
**மேவுவன் கேவ லந்தன்**
**உண்மைமெய் பொறிக ளெல்லாம்**
**காவலன் கொடுத்த போது**
**சகலனாம் மலங்கள் எல்லாம்**
**ஓவின போது சுத்தம்**
**உடையன்உற் பவந்து டைத்தே**[31]

என்று சிவஞான சித்தியார் விளக்குதலைக் கண்டு தெரியலாம்.

இக்கூறிய இம்மூன்று நிலைகளும் '**காரண அவஸ்தை**' என்று வழங்கப்பெறும். இறைவன் உடம்பைக் கூட்டுவதற்கு முன் இருந்த கேவலநிலை '**அநாதிகேவலம்**'; அன்றாடம் வரும் கேவலம் **நித்தியகேவலம்** என்ற பெயர்களைப் பெறும்.

## (6) மூவகை ஐந்தவத்தைகள்

இனி, உயிர்கள் உடம்பை எடுத்து வாழும் நிலையில் **சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்** என்ற ஐந்து நிலைவேறுபாடுகளை உடையனவாக இருக்கும். இந்நிலைகள் '**காரியவஸ்தைகள்**' என வழங்கப்பெறும். இந்த ஐந்து நிலைகளும் அருந்தமிழில் **நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல்** என்று வழங்கப்பெறுகின்றன.

31. சித்தியார் - 1.37

இந்த அவத்தைகளை அடைந்து நிற்பதே உயிரின் **தடத்த இலக்கணம்** எனப்படும் பொது இயல்பு ஆகும் என்பது அறிந்து தெளியப்படும்.

மேற்குறிப்பிட்ட சாக்கிரம் முதலிய ஐந்தும் **கீழால வத்தை மேலாலவத்தை, மத்தியாலவத்தை** என்ற மூன்று வகையாக நிகழும். கிழாலவத்தையில் அறிவு குறைந்து கொண்டே வரும். இம்முறையில் உயிர் சிறப்பாக நிற்கும் இடமும் ஐந்தாகும். அயையாவன:

சாக்கிரத்திற்கு – புருவநடு;
சொப்பனத்திற்கு – கண்டம் (கழுத்து);
சுழுத்திக்கு – இதயம்;
துரியத்திற்கு – நாபி (உந்தி);
துரியாதீதத்திற்கு – மூலாதாரம்

என்பனவாகும்.

இங்ஙனம் முறையே இறங்கிய உயிர், பிறகு அம் முறையே மேலேறி வருவதே **மேலாலவத்தையாகும்.** இந்நிலையில் இறுதியாகப் புருவ் நடுவை அடைந்த உயிர் அவ்விடத்திலேயே ஐந்து நிலைகளை அடையும். இவையே **மத்தியாவத்தையாகும்.** இவை முறையே **சகல சாக்கிரம், சகல சொப்பனம், சகல சுழுத்தி, சகலதுரியம், சகலதுரியா தீதம்** என்று வழங்கப்பெறும். இந்நிலையில் உயிர் தன்னால் அறியப்படும் பொருளில் அழுந்தி நிற்கும். இவ்வழுத்தம் சாக்கிரம், சொப்பனம் முதலியவற்றில் ஒன்றைவிட மற்றொன் றில் முறையே மிகுந்து நிற்பதாகும். இறுதி நிலையாகிய **சாக்கிராதீதத்தில்** உயிர்ப்பு அடங்குதலும் உண்டு. இந்நிலை களைத் தெளிவாக எடுத்துக்காட்டல் இயலாது; அவரவர்களே தாங்கள் தங்கள் அன்றாட நிகழ்ச்சிகளில் வைத்து அறிந்து

கொள்ளல் வேண்டும். இந்நிலைகள் பொருள்களை அறியுங் காலத்தில் அவற்றை இடைவிடாது அறிதலும் விட்டுவிட்டு அறிதலுமாகும். சாக்கிர நிலையில் பொருள்களை அறியும் பொழுது நாம் இடைவிடாது தொடர்ச்சியாக அறிந்து கொண்டே இருப்பதில்லை. இடையில் விட்டுவிட்டுதான் அறிகின்றோம். அது நுனித்து நோக்கும்போதுதான் தெளி வாகப் புலனாகும். ஆயினும் விடுதலும் பற்றுதலும் மிக விரை வில் மாறி மாறி நிகழ்வதால், சாக்கிர நிலையில் விடுதல் நமக் குப் புலனாதல் இல்லை; தொடர்ச்சியாய் அறிந்து கொண்டிருப் பதுபோலவே தோன்றுகிறது. அஃது உண்மையன்று என் பதைச் சில பெரிய நிகழ்ச்சிகள் நிகழும்போது தெரிந்து தெளியலாம்.

**கீழாலவத்தையில்** உயிர் அறியாமையில் அழுந்துவ தால் அவை ஐந்தும் **கேவலசாக்கிரம், கேவலசொப்பனம், கேவலசுழுத்தி, கேவலதுரியம், கேவலதுரியாதீதம்** என்று சொல்லப்பெறும். இவ்விரண்டையும் விடுத்துச் சிவத்தில் அழுந்தும் நிலையிலும் ஐந்து வகை உண்டு. அவை **சுத்த சாக்கிரம், சுத்த சொப்பனம், சுத்த சுழுத்தி, சுத்த துரியம், சுத்த துரியாதீதம்** என்று வழங்கப்பெறும். கேவலம் – மறுப்பு; சகலம் – நினைப்பு; சுத்தம் – இவ்விரண்டும் அற்றது. கேவ லத்தை இரவு என்றும், சகலத்தைப் **பகல்** என்றும் கூறுவர். ஆகவே, சுத்தம் – 'இராப்பகல் அற்ற இடம்' என்ற பெயரைப் பெறுகின்றது. இவற்றை முத்திநிலை கூறுமிடத்தில் தெளிவாக விளக்கப்பெறும்.[32] ஆகவே சாக்கிரம் முதலிய ஐந்தும் **கேவலம், சகலம், சுத்தம்** என்ற மூன்று நிலை பற்றி நிகழும் எனவும்; **முத்திறந்து ஐந்து அவத்தைகள்** உயிர்கட்கு உள்ளன எனவும் நன்கு உணர்ந்து தெளியப்படும். யோக

32. இந்நூல் பக்-

நிலையினும் ஐந்து அவத்தைகள் உண்டு. அவை பின்னர் விளக்கப் பெறும்.[33]

**எடுத்துக்காட்டு:** மேற்கூறிய ஐந்து அவத்தைகளில் ஐந்து இடங்களில் நின்று செயற்படுவதை எடுத்துக்காட்டு ஒன்றால் விளக்குவோம். உயிர் புருவ நடுவில் நின்று சகல சாக்கிரம் முதலியவைகளை அநுபவித்தல் அரசன், அமைச்சர், படைத் தலைவர் முதலியவரோடு அத்தாணி மண்டபத்தில் வீற்றிருந்து அரசு புரிதல் போன்றது. கீழாலவத்தையில் இறங்கி இறுதியில் **மூலாதாரத்தில்** செல்வது, அரசன் **அத்தாணி மண்டபத்தை** விட்டுப் பல இடங்களைக் கடந்து **அந்தப் புரத்துக்குச்** செல்வது போன்றது. இங்ஙனம் இவ்விரு வகை ஐந்தவத்தைகளையும் விடுத்துச் **சிவத்தை நாடுதல்** அரசன் தனது ஆட்சியை முற்றிலும் விடுத்து **ஓய்வு** கொள்ளுவதைப் போன்றது.

உயிர்கள் அளவிறந்தன என்பது முன்னர் விளக்கப் பெற்றது.[34] இதே உயிர்கள் மூவகை ஐந்தவத்தைகளை அடையும் பொழுது உடம்பு தோறும் அவை வேறு வேறாய் நிகழ்கின்றன. அந்நிகழ்ச்சிகளால் வரும் இன்ப துன்ப நுகர்ச்சிகளும் உயிர்தோறும் வேறு வேறாகவும் உள்ளன. இதனால் உடம்புதோறும் உள்ள உயிர்கள் அனைத்தும் தனித்தனி உயிர்களேயன்றி ஒன்று அல்லது ஒன்றன் கூறாகாமை ஐயமற விளங்குவதாகும். இதனால் உடம்புகள் எண்ணிறந்தனவே என்பது கண்கூடாதலின் அவற்றையுடைய உயிர்களும் எண்ணிறந்தனவே என்பது போதரும். **'தானே அவையேயாய்'**[35] எனவும், **'தாம்தம் உணர்வின் தமிழ்'**[36]

33. இந்நூல் பக்-
34. சி.ஞா.போ. சூத்2. அதி.3 வார்த்தி 24(a) சிற்றுரை
35. சி.ஞா.போ. சூத். 2
36. மேலது. சூத். 5

எனவும், 'அருட்கண்ணார்'[37] எனவும், 'அறிவித்தல் அன் அறியா உளங்கள்'[38] எனவும், 'தவம் செய்தார் என்று தவலோகம் சார்ந்து'[39] எனவும், 'சார்ந்தாரைக் காத்த தலைவர் கடனாதல்'[40] எனவும், 'தேசத்தார் தம்பா நிகழும் ததிநெய் போல, பாசத்தாற்கின்றாம் பதி'[41] எனவு 'சிவபக்தர்'[42] எனவும், 'அல்லாதார்'[43] எனவும், இவ்வா உயிர்களை மெய்கண்டார் பன்மையாகக் கூறும் முகத்தா அவை எண்ணிறந்தனவாகக் காட்டுவர். அருணந் சிவாச்சாரியாரும் 'உலகெலாம் ஆதி'[44] 'உயிரவை ஒடுங்கி பின்னும் உதிப்பதென் அரன்பால் என்னில்.[45] என்ப முதலாகக் குறிப்பாற் கூறியதேயன்றி 'உரைதரும் இப்ப வர்க்கம்'[46] என்பது முதலாக இனிது விளங்கவும் கூறியரு னார். 'உமாபதி சிவாச்சாரியார் எண்ணிதாய்'[47] எனவு 'பிறந்த நாள் மேலும் பிறக்கு நாள் போதும் – துறந்தா துறப்பார் தொகை'[48] எனவும் எடுத்தோதி விளக்கினா இச்சான்றோர்களின் வாக்குகளினால் 'உயிர்கள் எண்ணி என்ற சித்தாந்தம் அறிந்து தெளியப்படும்.

37. சி.ஞா.போ. சூத். 5.(2-6)ம் வெண்பா - 33 (சிற்)
38. மேலது சூத். 8.(2-6)ம் வெண்பா - 48
39. மேலது சூத். 6.(2-6)-ம் வெண்பா 45 (சிற்)
40. மேலது சூத். 10.(2-6)ம் செய் 64
41. மேலது சூத். 12.(2-6)ம் செய் 76
42. மேலது சூத். 12 வார்த். 52(a) (சிற்)
43. மேலது சூத். 12 வார்த். 52(b) (சிற்)
44. சித்தியார் 2.1
45.
46.
47.
48. திருவருட்பயன் -2வது உயிரளவை நினை-1

## (7) மூவகை உயிர்கள்

இங்ஙனம் 'அளவிலவாகிய உயிர்கள் பலவும் **மூன்று வகையினவாய்** உள்ளன'. என்பது சித்தாந்தக் கொள்கை யாகும். இவ்வகை அந்த உயிர்களின் பாசப் பிணிப்பு பற்றி அமைந்தனவாகும். ஆணவம், கன்மம், மாயை எனப் பாசம் மூன்று என்பதை நாம் அறிவோம். இவை மூன்றும் 'மலம்– அழுக்கு' எனப்படும். இம் மும்மலங்களுள் ஒன்றையே யுடைய உயிர்கள், இரண்டு மட்டும் உடைய உயிர்கள், மூன்றையும் உடைய உயிர்கள் என்னும் முறைமையில் உயிர்கள் அனைத்தும் மூவகைப் படுவனவாகும்.[49] மும்மலங் களுள் மூலமாய் உள்ளது **ஆணவ மலம்** என்பதை நாம் அறிவோம்.

ஒரு மலம் உடைய உயிர்கள் என்பன **ஆணவம்** ஒன்றையே உடையனவாகும். ஒருமலம் உடையவர் **விஞ்ஞானகலர்** என்று வழங்கப் பெறுவர். ஆணவத்தை அடுத்து நிற்பது **கன்மம்.** அதனால் இருமலம் உடைய உயிர்கள் **ஆணவம் கன்மம்** என்னும் இரண்டையும் உடையனவாகும். இருமலம் உடையவர்கள் **பிரளயாகலர்** என்று பேசப் பெறுவர். மூன்றாவது மலம் **மாயை.** மூன்று மலங்களை உடைய உயிர்கள் **ஆணவம், கன்மம், மாயை** என்ற மூன்றையும் உடையன. மும்மலத்தையும் உடையவர்கள் **சகலர்** என்ற பெயரைப் பெறுவர். இதனைத் **திருமூலர்**

> ஆணவ மலமாகும் விஞ்ஞான கலருக்கும்
> பேணிய மாயை பிரளயா கலருக்கே

---

49. வைணவத்திலும் **ஆன்மாக்கள்** மூவகைப்படும். அங்கு **பத்தர்கள்** (தளைப்பட்டவர்கள்), **முக்தர்கள், நித்திய சூரிகள்** என்று இவர்கள் வகைப்படுத்தப் பெறுவர் (டாக்டர் ந.சுப்புரெட்டியார் **முக்தி நெறி** பக். 27 காண்க.)

ஆணவம் மாயையும் கன்ம மூன்றுமே
காணும் சகலர்க்குக் காட்டு மலங்களே[50]

என்று விளக்குவர். மேலும் இந்த விவரங்களை,

திரிமலத்தார் ஒன்றுஅதனில் சென்றார்கள் அன்றி
ஒருமலத்தா ராயும் உளர்.[51]

என்றும்,

மூன்றுதிறத் துள்ளாரும் மும்மலத் துள்ளார்கள்
தோன்றலாதொத் துள்ளார் துணை[52]

என்றும் உமாபதி தேவ நாயனார் கூறியுள்ளமையைக் காணலாம்.

உரைதரும்இப் பசுவர்க்கம் உணரின் மூன்றாம்;
உயிரும் விஞ்ஞானகலர் பிரளயாகலர், சகலர்
திரையின்மலம் மலம்கன்மம் மலம் கன்மம் மாயை
நிற்கும்[53]

என்று அருணந்தி தேவநாயனாரும் சிவாச்சாரியாரும்,

மூவகைஆ ருயிர்வருக்கம், மலத்தார், கன்மம்
மூலமலத் தார்மூன்றும் உடையார் அன்றோ.[53]

என்று உமாபதி சிவாச்சாரியாரும் கூறியுள்ளவற்றால் தெளியலாம். மெய்கண்டாரும்.

மெய்ஞ்ஞானம் தானே விளையும்விஞ் ஞானகலர்க்
கஞ்ஞான அச்சகலர்க் கக்குருவாய்—மெய்ஞ்ஞானம்

50. திருமந். எட்டாந் தந்திரம். கேவலச்சகல சுத்தம் - 15.
51. திருவருட் பயன 2.2
52. மேலது 2.3
53. சித்தியார் 8.2
54. சிவப்பிரகாசம்

பின்னுணர்த்து மன்றிப் பிரளயா கலர்க்கு
முன்னுணர்ந்துந் தான்குருவாய் முன்.[55]

என்ற வெண்பாவில் இம்மூவகை உயிர்களையும் குறிப்பிட்டுள்ளார்.

இவர்களுள் 'சகலர்' என்பதற்கு 'கலையோடு கூடியவர்' என்பது பொருள். 'அகலர்' என்பதற்கு 'கலை இல்லாதவர்' என்பது பொருள். 'கலை' என்பது மாயையின் கூற்றைக் குறிக்கும்.[56] மாயை மயக்கும் தன்மையுடையது. ஆதலின் 'சகலர்' என்பது 'மயக்கத்தையுடையவர்' என்னும் பொருளிலும் 'அகலர்' என்பது 'மயக்கம் இல்லாதவர்' என்னும் பொருளிலுமே வழங்கப் பெறுகின்றன.

மாயை இருவகைக் கூறுபாடுகளையுடையது. ஒன்று: முக்குண வடிவாய் நின்று மயக்கத்தைச் செய்வது; மற்றொன்று; அவ்வாறின்றி அறிவினை மயக்குதல் மாத்திரமே செய்வது. இவற்றில் முக்குண வடிவமாய் மாயை 'அகலர்' என்பவர் கட்கு இல்லை. கன்மமும் அங்ஙனமே மயங்குவதும், மயங்காததும் என இருவகைப்படும். அவற்றுள் மயக்கும் கன்மம் விஞ்ஞான கலருக்கு இல்லை. '**விஞ்ஞான கலர்** என்பதற்கு விஞ்ஞானத்தால் கலை நீங்கப் பெற்றவர் என்றும், '**பிரளயாகலர்**' என்பதற்கு பிரளயத்தில் கலை நீங்கப் பெற்றவர் என்றும் பொருள் கூறப் பெறுகின்றது. சொற்பொருள் அப்படி என்றாலும் செயற்கையாலன்றி, இயற்கையாகவும் விஞ்ஞான கலர் பிரளயாகலர் என்னும் நிலையினராய் இருத்தல் உண்டு. இங்ஙணம் வேறு வேறு விதமாகச் சொல்லப்பெறும் உயிர்கள் அனைத்திற்கும் எவ்வகையான பந்தத்தையும் விடுத்து வீடு பெறுதலே முடிந்த பயனாகும் என்பது அறிந்து தெளியப்படும்.

---

55. சி.ஞா.போ.சூத். 8, அதிகாரம் 2 மேற்படி வெண்:47
56. காலம், நியதி, கலை என்ற மூன்று தத்துவங்களும் மாயையிலிருந்து தோன்றும்.

# 5. தத்துவங்கள்-3 (பாசம்)

ஏகமாய்த் தம்கால எல்லைகளின் மீளும்
எண்ணரிய சத்தியதாய் இருளொளிர இருண்ட
மோகமாய்ச் செம்பினுறுகளிம்பேய்ந்து நித்த
மூலமல மாய்அறிவு முழுதினையும் மறைக்கும்
பாகமாம் வகைநின்று திரோதாயி சத்தி
பண்ணுதலான் மலமெனவும் பகர்வர்அது பரிந்து
நாகமா நதிமதியம் பொதிசடையான் அடிகள்
நணுகும்வகை கருணைமிக நயக்கும் தானே.[1]

---

1. சிவப்பிரகாசம் -20

# 5. தத்துவங்கள்-3 (பாசம்)

## (1) மும்மலங்கள்

'பதி ஒன்றே' என்பதையும் 'பசுக்கள் பல' என்பதையும் நாம் அறிந்தோம். பசுக்களைப் பிணித்துள்ளது **பாசம்** எனப்படும். பாசம் என்பதற்குக் கட்டுவது என்பது பொருளாகும். பாசங்கள் மூன்று. ஆணவம், கன்மம், மாயை என்பன. இவை முன்னரே சுட்டிக் காட்டப் பெற்றவையே.

இவற்றுள் **மாயை** அனைவராலும் எளிதில் உணரப் பெறுவது. ஏனெனில் பல்வேறு பிறவிகளில் காணப்பெறும் உடம்புகளும், மற்றும் நிலம்நீர் முதலிய பெரும்பொருள்களும் இயங்கு திணை, நிலைத்திணை ஆகிய உலகத்தொகுதி முழுவதும் மாயையின் செயல்களேயாகும். '**கன்மமோ**' இவ்வளவு எளிதாகக் காட்சியில் உணரமுடியாதது. ஆனால் சிறிது நுணித்து நோக்கினால் உணரக்கூடியது. இதற்கு மேல் உள்ள '**ஆணவம்**' என்பதை உணர்தல் மிகவும் அரிது. **இது சைவ சித்தாந்தத்தின் சிறப்பான பகுதியாகும்.** சில சமயங்கள் இதனை ஒப்புக்கொள்வதே இல்லை. பருப்பொருள் (தூலப் பொருள்) எளிதில் உணரவாராது. மாயை பொருள். ஆணவம் நுண்பொருள்; கன்மம் இரண்டிற்கும் இடைப்பட்ட பொருள். இந்த மூன்றும் '**மும்மலங்கள்**' எனப் பெயர் பெறும். மலம்

என்பது அழுக்கு. உயிர்களின் தூய்மையைக் கெடுத்து நிற்ற லால் இப்பெயர் பெற்றது.

## (2) ஆணவ மலம்

ஆணவம் இல்லாத பொருளன்று; உள்ள பொருளே. அறிவுடைய பொருளாகிய உயிரை அறியாமையுடையதாகச் செய்வதே இதன் இயல்பாகும். அறிவே உயிரின் இயற்கை என்றும், அறியாமை அதற்கு ஆணவமலத்தின் சேர்க்கையா லாகிய செயற்கையே என்பதும் சித்தாந்த உண்மை. இந்த ஆணவமலம் செம்பிற்களிம்பு போலவும் நெல்லிற்கு உமி போலவும் அனாதியே உயிர்கட்கு இயற்கைக் குற்றமாய் அமைந்துள்ளது. இதனைச் சிவஞான போதம்,

**நெல்லிற் குமியும் நிறைசெம்பி னிற்களிம்பும்**
**சொல்லிற் புதிதன்று தொன்மையே[2]**

என்று குறிப்பிடும். செம்பிற்கு அதன்கண் உள்ள களிம்பு குற்றமேயாகும். அக்குற்றம் இடையிலே ஏற்பட்ட குற்றமன்று. செம்பு என்று உண்டோ, அன்றே அந்தக் களிம்பும் உண்டு. அந்தக் களிம்பு செம்போடு என்றும் இராது நீங்கிவிடும் என்பது, அதனைப் புளி முதலியன இட்டுத் தேய்க்கும் பொழுது களிம்பு சிறிதளவு நீங்குதலும், துலக்கப்பட்ட செம்பில் பின்பும் களிம்பு மேலிடுதலும், புடமிட்டுப் பதம் அறிந்து இரச குளிகையையும் சேர்க்கும்பொழுது களிம்பு முற்றிலும் நீங்குதலும் உளவாதலை அறிகின்றோம். ஆகவே, களிம் பாகிய குற்றம் செம்பிற்குச் செயற்கையேயன்றி இயற்கை அன்று என்பது தேற்றமாகின்றது.

---

2. சி. ஞா.போ. சூத்திரம் 2. அதி.1 வெண்.8

இங்ஙனமே, அரிசி தோன்றும்பொழுது உமியோடு கூடத் தோன்றுகின்றதேயன்றி தனியாகத் தோன்றுவதில்லை. அரிசிக்கு உமி குற்றமேயன்றிக் குணம் அன்று. அதனால் உமி அரிசியை விட்டு நீங்கும்பொழுது அரிசி தூய்மை பெற்று விளங்குகிறது. ஆகவே, உமியாகிய குற்றம் அரிசிக்குச் செயற்கையேயன்றி இயற்கையன்று என்பது தெளிவு. இங்ஙனமே உயிர் என்று உண்டோ, அன்றே அதற்கு ஆணவ மலம் இருப்பினும், அஃது அதற்குக் குற்றமாய்ப் பின்பு விட்டு நீங்குதலின், அது செயற்கை எனப்படுமன்றி 'இயற்கை' எனப்படாது. இம்மலம் '**சகசமலம்**' என்றும். 'அநாதி செயற்கை' என்றும் வழங்கப் பெறும். 'சகசம்' என்பதற்குக் கூடப்பிறந்தது என்பது பொருள்.

(1) **ஆணவம் ஒன்றே:** ஆணவமலம் ஒன்றேயன்றிப் பல இல்லை. ஆயினும் எண்ணற்ற சக்திகளையுடையது. அதனால் எண்ணிலாத ஆன்மாக்களை மறைத்து நிற்றல் அதற்குக் கூடுவதாகின்றது. ஆணவமலத்தின் இயல்பினைச் சிவப்பிரகாசம்,

**ஏகமாய்த் தம்கால எல்லைகளின்**
**மீளும் எண்ணரிய சத்தியதாய்**[3]

என்று செப்பும். சித்தியாரும்,

**ஒன்றதாய் அநேக சக்தி**
**யுடையதாய் உடனாய் ஆதி**
**அன்றதாய் ஆன்மா வின்தன்**
**அறிவொடு தொழிலை ஆர்த்து**
**நின்றுபோத் திருத்து வத்தை**
**நிகழ்த்திச்செம் பினிற்க ளிம்பேய்ந்**
**தென்றும்அஞ் ஞானம் காட்டும்**
**ஆணவம் இயைந்து நின்றே**[4]

---

3. சிவப்பிரகாசம் - 20
4. சித்தியார் 2.80

என்று தெளிவுறுத்தும். பகலவன் ஒரு பொருளேயாயினும், எண்ணற்ற கதிர்களைகக் கொண்டு எண்ணற்ற பொருள்களை விளக்குகின்றான்; இது விளக்கும் சக்தி. இதுபோலவே இருளும் ஒன்றாய் இருந்தே எண்ணில்லாத சக்திகளைக் கொண்டு எண்ணில்லாத கண்களை மறைக்கின்றது என்றும், இது மறைக்கும் சக்தி என்றும் உணர்தல் வேண்டும். இங் ஙனமே, ஆணவமலமும் எண்ணிறந்த மறைக்கும் சக்திகளைக் கொண்டதாய் எண்ணற்ற ஆன்மாக்களை மறைக்கின்றது என்பது தெளியப் படும்.

**(2) செயற்படுதல்:** இனி, ஒன்றாய் சடமாய், அளவற்ற சக்திகளையுடைய ஆணவமலம் கேவலம், சகலம், சுத்தம் என்ற மூன்று நிலைகளிலும் செயற்படுகின்றது.

**(அ) கேவலநிலையில்** ஆணவ மலத்துடன் மாயை கன்மங்களின் செயற்பாடு இன்மையால் ஆணவமலம் அங்குத் தனது மறைத்தல் செயலைத் தடையின்றிச் செய்யும். அதனால் ஆன்மா அந்நிலையில் தனது அறிவு, இச்சை, செயல் என்பவற்றில் ஒன்றும் ஒரு சிறிதும் நிகழப் பெறாது முழு மூடமாய்ச் சடப் பொருள் போலவே தான் என்ற பொருள் இருப்பதாகவே தோன்றாமல், ஆணவமலத்தில் அமிழ்ந்து கிடக்கும். அப்பொழுது ஆணவ மலத்தின் சக்தி அறியாமை யைத் தரும்பொழுது '**ஆவாரக சக்தி**' என்று பெயர் பெறும். ஆவாரகம்–மறைப்பது. இதுவே ஆணவமலத்தின் **சொரூபம்** அல்லது **உண்மை** நிலையாகும்.

**(ஆ) சகல நிலையில்** மாயை கன்மங்கள் செயற்படு கின்றன. இந்நிலையில் ஆணவத்தின் சக்தி சிறிது அடங்கப் பெறும். அதனால் அது பருப்பொருளைக் காணும் காட்சியை **மறைப்பதில்லை.** நுண்பொருளைக் காணும் காட்சியை மட்டிலும் மறைத்து நிற்கும். நுண்பொருளைக் காணும் ஆற்றல்

இன்மையால், பருப்பொருளின் தன்மையும் உள்ளவாறு விளங்காது ஒன்று பிறிதொன்றாகவே தோன்றும். அதாவது, நிலையாத பொருள் நிலைத்த பொருள் போலவும், துன்பப் பொருள் இன்பப் பொருள் போலவும் மாறித் தோன்றும். இந்நிலை இருளில் இருக்கும் பொழுது ஒன்றையும் பார்க்க இயலாத ஒருவருக்கு விளக்கு வரும்பொழுது பருப்பொருள் கள் விளங்கும்; நுண்பொருள் விளங்காமலும், பொருள்களின் வடிவமும் வண்ணமும் உள்ளவாறு விளங்காமல் மாறித் தோன்றுதலும் ஆகிய நிலையைப் போன்றதாகும். இவ்வாறு பொருள்கள் மாறுபட்டுத் தோன்றுவதால் அங்கும் இருளினால் விளைவதன்றி விளக்கினால் விளைவதன்று என்பதை நாம் அறிவோம். விளக்கு பொருள்களை விளக்கவந்ததேயன்றி மறைக்க வந்ததன்று; மறைப்பது எப்பொழுதும் இருளேயன்றி விளக்கு அன்று. அதுபோலவே சகல நிலையில் மெய்யுணர்வு தோன்றாமல் விபரீத உணர்வு தோன்றுவதும், மாயை கன்மங் களால் விளைவதன்று; ஆணவத்தால் விளைவதேயாகும். ஆணவத்தின் சக்தி இவ்வாறு சகலநிலையில், விபரீத ஞானத்தை—மயக்க உணர்வை—உண்டாக்குதலால் அப்பொழுது அதன் சக்தி '**அதோ நியாமிகா சக்தி**' என்ற பெயராகும். அதோநியமிகை—கீழ்நோக்கிச் செலுத்துவது. மகத்தாகிய ஆன்மாக்களை அணுத் தன்மையாய்ச் செய்தல்பற்றி வந்த காரணப் பெயரே **ஆணவம்** என்பது; இது முன்னரும் குறிப்பிடப்பெற்றது, இந்நிலை அதற்கு மாயை கன்மங்களின் சார்பினால் வருதலின், இவ்வியல்பு ஆணவத்தின் '**தடத்த நிலை**' எனப்படும் இயல்பாகும். இதனால் மாயை கன்மங் களின் சொரூபம் விளக்கும் தன்மை என்பது தெளிவாகும். மாயையின் தன்மை விளக்குவதாயினும், ஆணவத்தின் மயக் குதல் தன்மைக்கு ஏதுவாதல் பற்றி மயக்கும் தன்னை யுடையதாகவும் கூறப்பெறும்.

வைத்தோர் மலமாய் மாயை
மயக்கமும் செய்யு மனமே[5]

என்ற சித்தியாரின் கூற்று இதுபற்றியதேயாகும்.

**(இ) சுத்தநிலையில்** உயிர் இறைவனது திருவருளை நேரே பெற்று விளங்குகின்றது. இந்தப் பேரொளியின் முன் ஆணவத்தின் மறைத்தல் சக்தியும், மாயை கன்மங்களின் சிறு விளக்கச் சக்திகளும் சிறிதும் முனைந்து நிற்கமாட்டாது அடங்கியே கிடக்கும். அதனால் அச்சக்திகள் அனைத்தும் அப்பொழுது **அந்தர்ப்பாவிதசக்தியாய்** – அடங்கிக் கிடக்கும் சக்தியாய் – விடுவனவாகும். இதனை ஓர் எடுத்துக் காட்டு மூலம் தெளிவிக்கலாம். 'பகலவன் ஒளியின் முன் விளக்கொளி அடங்கிக் கிடக்கின்றதேயன்றி அழிந்தொழியவில்லை' என்பது எல்லார்க்கும் உடன்பாடு 'அதுபோலவே இருளும் பகலவன் முன் அடங்கிக் கிடக்கின்றதேயன்றி அழிந்தொழியவில்லை' என்பதும் உண்மையாகும். அஃதெங்ஙனம்? இருள் கதிரவன் ஒளி உள்ள பொழுதும், பிறபொருள்களின் நிழல் தோன்றுவதாலும் அவ்வொளி மறைந்தவுடன் முன் போலவே இருள் வந்து சூழ்வதாலும் அறியப்படும். எனவே, ஆணவம் கன்மம் மாயை என்ற மும்மலங்களும் என்றும் உள்ள பொருள்களே; அவை பெத்தத்தில் உள்ள ஆன்மாக்களைப் பற்றுகின்றன என்பதும், முத்தியில் உள்ள ஆன்மாக்களைப் பற்றுவதில்லை என்பதுமாகிய வேறுபாட்டில் மட்டும் உள்ளன என்பது தெளிவு. இதனை,

**முத்திதனின் மூன்று முதலும் மொழியக்கேள்**
**சுத்தஅனு போகத்தைத் துய்த்தல்அணு—மெத்தவே**
**இன்பம் கொடுத்தல்இறை இத்தைவிளை வித்தல்மலம்**
**அன்புடனே கண்டுகொள்அப் பா![6]**

5. சித்தியார். 2. 53
6. உண்மை விளக்கம்-51

என்ற 'உண்மைவிளக்'கத்தாலும் அறியலாம். 'பெத்தத்தில் இறைவனது இன்பம் உயிரினிடத்து விளையவொட்டாது தடுத்து நின்ற ஆணவமலம் முத்தியில் அவ்வாறு செய்யமாட்டாது வாளா இருக்கும்' என்பது இதன் கருத்தாகும். ஆகவே, சுத்தநிலையில் ஆணவ மலத்தின் சக்தி அந்தர்ப் பாவினது சக்தியாய் விடும் என்பது உளங்கொள்ளப்படும்.

(3) **மூலமலம்:** ஆணவமலம் ஏனைய மலங்கட்கு மூலமாதலின் '**மூலமலம்**' என்றும், இயற்கைக் குற்றமாதலின் '**சகசமலம்**' என்றும், அறியாமையே வடிவமாய் நிற்றலின் '**இருள்மலம்**' என்றும் மற்றும் பலபெயர்களையும் பெற்று நிற்கும். ஒருவிதத்தில் ஆணவம் இருளை ஒத்திருப்பினும், இன்னொருவிதத்தால் ஆணவம் இருளைவிடக் கொடியது. இருள் தன்னிடத்திலுள்ள பொருளை மறைக்கும்; தன்னை மறைக்காது. ஆனால் ஆணவம் தன் செயலை மறைப்பது மட்டுமன்றித் தன்னையும் மறைத்துக் கொள்ளும். இருளில் மறைந்து கிடக்கும் பொருள்கள் நம் கண்ணுக்குப் புலானகாவிடினும், அவற்றை மறைத்துக் கொண்டிருக்கும் இருளாவது நமக்குப் புலனாகும். ஆணவம் நம் அறிவை மறைக்கின்றது. அதே சமயம் தன்னையும் மறைத்துத் தன் செயலையும் மறைக்கின்றது. இருள் வெளிப்பட்டுத் தன்னைக் காட்டிக் கொண்டே தனது தொழிலைப் புரிகின்றது. ஆனால், ஆணவம் வெளிப்படாமல் தன்னை மறைத்துக் கொண்டே தன் தொழிலைச் செய்கின்றது.

ஒருபொருளும் காட்டாது இருள்உருவம் காட்டும்;
இருபொருளும் காட்டாது இது.[7]

என்றும்,

7. திருவருட்பயன்-இருள்மலநிலை-3

பலரைப் புணர்ந்தும்இருட் பாவைக்குண் டென்றும்
கணவற்கும் தோன்றாத கற்பு.[8]

என்றும் இதன் கொடுமையை விளக்குகின்றார் **உமாபதி சிவம்.**

**(4) ஆணவம் நீங்கியபின் அறிதல்:** 'அறிதோறும் அறியாமை கண்டற்றால்'[9] என்றார் வள்ளுவப் பெருந்தகை. ஒருவர் தமக்குள்ள அறியாமையை அறிவுவந்தபின் அறிவதன்றி அவ்வறியாமை உள்ள பொழுது அறிவதில்லை. அதனால் அறியாமையாகிய ஆணவமலத்தை அது நீங்கிய பின் அறிவதல்லது அஃது உள்ளே பொழுது அறியமுடியா தன்றோ? **அதனால்தான் ஆணவமலம் ஒருவற்கும் புலனாகாத பொருளாய் உள்ளது.** சைவ சித்தாந்தம் தவிரப் பிற மதங்களுள் ஒன்றேனும் ஆணவமலத்தை ஒப்புக் கொள்வதில்லை. அறியாமை உடையவனுக்கு அவ்வறியாமை அறிவாய்த் தோன்றுவதல்லது அறியாமையாய்த் தோன்றாது. ஆதலின் அவருக்கு அறிவுகொடுத்தலும் இயலாது. இதனை,

காணாதாற் காட்டுவான் தான்காணான்; காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு[10]

என்று கூறுவார் வள்ளுவப் பெருந்தகை. ''அறிவுபோல் அடர்த் தெழும் அறியாமையின் வலியால்'' என்பர் மாதவச் சிவஞான யோகிகள். எனவே, அறியாமை நீங்குதல் அதற்குரிய காலம்வரின் அல்லது, அதற்கு முன்னே நீங்குதல் ஒருவராலும் இயலாது. ஆணவமலச் சக்திகள் பலவும் பல்வேறுகால எல்லையுடையன. அக்காலம் வரும்வரை அவை நீங்கா; அக்காலம் வந்த பின்னரே அது நீங்கும்.

8. மேலது-5
9. குறள்-1110(புணர்ச்சி மகிழ்தல்)
10. மேலது-849 (புல்லறிவாண்மை)

**(5) ஓர் உண்மை:** உயிர்கட்குள்ள அறியாமை அவற்றின் இயல்பன்று; அஃது ஆணவத்தின் காரியமாகும். இயற்கையாயின் அஃது என்றும் நீங்காது. அதனால் அவற்றிற்கு 'வீடு' என்பது இல்லையாய்ப் பந்தமே நிலைத்ததாகி விடும். அதனால் அறியாமை உயிர்களின் இயற்கையன்று என்பது உளங்கொள்ளப்படும். உலகிலும் அறியாமை படிப்படியாய் நீங்கிவரக் காண்கின்றோமேயன்றி நீங்காது நிற்றலைக் காணவில்லையாதலாலும் இது தெளியப்படும்.

**(6) மாயையின் செயல்:** அறியாமை செயற்கையாயின் மாயை கன்மம் என்ற மலங்கள் அறியாமையைத் தருவன எனக் கொள்ளலாமோ என்ற ஐயம் எழலாம். அந்த ஐயம் போக்கப் பெறும். மாயையின் காரியங்கள் உடல், பொறி, கரணங்கள் ஆகும். இவை உயிர்களின் அறிவை விளங்கச் செய்வனவே யன்றி விளங்கவொட்டாது மறைப்பதில்லை. இதனை விழிப்பிலும் உறக்கத்திலும் நன்கு உணரலாம். விழிப்பில் உடல் பொறி கரணங்கள் செயற்படுகின்றன. அப்பொழுது உயிர்கள் அறியாமை நீங்கி அறிவு விளக்கம் பெறுகின்றன. உறக்கத்தில் அவை செயலற்றுக் கிடப்பதால் உயிர்கட்கு அறிவு நீங்கி அறியாமை மேலிடுகின்றது. இதனால், மாயை அறிவை விளக்குவதன்றி மயக்குவதன்று என்பது தெளிவாகும். 'மாயை இருளன்று; விளக்கு' என்கின்றார் **மெய்கண்டார்.** இந்த ஞானச் செல்வர்,

> **மாயா தனுவிளக்கால் மாற்றுள்ளம் காணாதேல்**
> **ஆதாரம்**[11]

என்று கூறுவதைக் காணலாம். 'ஆணவமும் மாயையும் இருளும் ஒளியும் போலப் பகைப் பொருள்' என்பர் **உமாபதி சிவம்.**

---

11.சி.ஞா.போ. சூத்திரம்-4. அதி.2. பா-27

இகலிவரும் இவைஉணரின் இருவெளியாம் தன்மை
எய்தும்வகை தன்செய்தி இலங்கும்[12]

என்று அவர் குறிப்பதைக் காணலாம்.

(7) **கன்மமும்** (வினையும்) செயல்புரியத் தூண்டுவ தன்றித் தடுப்பதன்று. அதனால் செம்பின் களிம்புபோல் இயற்கையாகவே உயிர்களிடத்துப் பொருந்தியுள்ள ஆண வத்தை நீக்குவதற்கே இறைவன் மாயை கன்மங்களை உயிர்கட்குக் கூட்டுகின்றான் என்பது தெளிவாகும். எனவே, உடல் பொறி கரணங்களும் உலகமும் உயிர்களின் நன்மை கருதியே இறைவனால் அருளப்பெற்றனவாதலை அறிந்து தெளியலாம். இங்ஙனமாகவும் சிலர் உடம்பும் உலகமும் தமக்குத் தீங்கு பயப்பனவாகக் கருதி அவற்றைப் பகைப் பொருளாகக் கொண்டு வெறுப்பர். இது தவறு; பெருந்தவறு. உடம்பு முதலியவை எந்த நலம் கருதித் தரப்பெற்றனவோ அந்த நலத்தை அறியாது அவற்றினையே பெரிதாக மதித்து அவற்றில் அழுந்துதல் குற்றமேயன்றி அவை அருளப் பெற்றதில் குற்றம் ஒன்றும் இல்லை. இவற்றால் அறியாமை மாயை கன்மங்களின் காரியமன்று; வேறொன்றின் காரியமே என்பது புலனாவதால் வேறொன்று எனப்படும் அதுவே ஆணவமலம் என்பதைத் தெளியலாம்.

**(8) மறைத்தல்—நீங்குதல்:** இன்னும் ஆணவமலம் உயிர்களின் அறிவு இச்சை செயல் என்னும் ஆற்றல்களை அழித்தொழியாது மறைத்தே நிற்கும் என்பதை அறிதல் வேண்டும். அதனால் அந்த ஆணவ இருளை நீக்கக்கூடிய மாயை கன்மங்கள் சேருமாயின், அவ்விருள் நீங்க, முன்மறைத்து நின்ற அறிவு இச்சை செயல்கள் வெளிப்படும். இதனை **மூன்று** எடுத்துக்காட்டுகளால் தெளியலாம்.

12. சிவப்பிரகாசம்-37

(அ) சுடும் தன்மையுடைய நெருப்பில் சக்தி தடை மந்திரத்தால் தடுக்கப்படும்போது சுடாது நிற்கும்; பின்விடை மந்திரம் செலுத்தப்பெறும்போது சுடுதல் தொழிலைச் செய்யும்.

(ஆ) விறகில் நெருப்பு மறைந்து கிடக்கின்றது. அதனைக் கடையும்பொழுது அந்த நெருப்பு வெளிப்படுகின்றது.

(இ) நீர் பாசியால் மறைக்கப் பெறுகின்றது. கல்லெறி முதலியவற்றால் அப்பாசி நீங்கி நீர் புலப்படுகின்றது. கையினால் பாசியை விலக்கி, நீர் புலப்படுவதை உணரலாம்.

இங்ஙனமே அறிவை மயக்கும் ஆணவ மலத்துடன் மாயை கன்மங்கள் சேரும்பொழுது மறைந்து நின்ற அறிவு முதலியவை வெளிப்படும் என்பதை அறிந்து தெளியலாம்.

எல்லா உயிர்களையும் ஒருங்கே மறைத்துக் கொண்ட ஆணவமலம், அது நீங்குங்காலத்து எல்லா உயிர்களினின்றும் ஒருங்கே நீங்காமல் சில சில உயிர்களாகவே நீங்குகின்றன. இவற்றிற்குக் காரணம் என்ன? எல்லா உயிர்களும் அறிவித்தால் ஒருங்கே அறிவதில்லை. அவை சிறிது சிறிதாகவே அறிகின்றன. இஃது உயிர்களின் பொதுத்தன்மையாகும். ஆயினும் சிறிது சிறிதாய் அறிவதிலும் பல்வேறு வகைப்பட முன் பின்னாய் அறிந்து வருதல் உயிர்தோறும் அமைந்துள்ள சிறப்பியல்பாகும். ஆகவே, 'அனாதியே ஆணவமலம் மறைத்து நிற்றல்' எல்லா உயிர்க்ளிடத்தும் பொதுவாக உளதாயினும் அம் மறைப்பு உயிர்தோறும் வேறு வேறு வகையாகவே இருக்கும். இவ்வாறு மறைந்து நிற்கும் வகை தூலம், சூக்குமம், அதிசூக்குமம் (பரம்) என்று மூன்றாய் அமையும்.[13]

13. வகுப்பில் 40 மாணவர்கட்குக் கற்பிக்கும் ஆசிரியர் நாற்பது மாணவர்களும் தாம் கற்பித்த அனைத்தையும் ஒருங்கே அறிவதில்லை. அவரே அம்மாணக்கர்கள் சிலரைத் தனித் தனியாகக் கற்பிக்கும்போது ஒவ்வொருவரும் (அடுத்த பக்.)

**(9) பிணிக்கும் வகையில் வேறு பாடுகள்:** தூலம், முதலிய மூன்றும் உயிர்களைப் பிணிக்கும் வகையிலும் வேறு படும். ஆணவமலம் தூலமாய் வலிதாய்ப் பற்றிய உயிரை, பின் கன்மம் மாயை என்னும் இரு மலங்களும் வந்து பற்றும். அதனால் இவை மும்மலங்கள உடைய உயிர்களாகும். ஆணவமலம் சூக்குமமாய் மெலிதாய்ப் பற்றிய உயிரை, பின் கன்மம் மாத்திரமே வந்து பற்றும். இவை இருமலம் உடைய உயிர்களாகும். அதி சூடக்குமமாய் மிகவும் மெலிதாகப் பற்றிய உயிரை, பிறகு எம்மலமும் வந்து பற்றாது; அதனால் அவை ஆணவமலம் ஒன்றேயே கொண்டு ஒருமலம் உடைய உயிர் களாகத் திகழும்.

**உயிர் வகைகள்:** ஒருமலம் உடைய உயிர்கள் **'விஞ் ஞான கலர்'** என்று வழங்கப் பெறும். 'விஞ்ஞான கலர்' என் பதற்கு 'விஞ்ஞானத்தால்—பேரறிவால்—கலை நீங்கப் பெற்றவர்' என்பது பொருள். கலை என்றது மாயையை. எனவே அஃது இல்லாத உயிர்கள் **'அகலர்** - கலை இல்லாதவர்' என்று வழங்கப் பெறுவர். இருமலம் உடைய உயிர்கள் **'பிரளயா கலர்'** என்று வழங்கப்பெறுவர். அதாவது 'பிரளயத்தில் கலை நீங்கப் பெற்றவர்' என்பது இதன் பொருள் ஆகும். மும்மலம் உடைய உயிர்கள் **'சகலர்'** என்று வழங்கப்பெறும். 'சகலர்' என்பதற்குக் கலையோடு கூடியவர் என்பது பொருள். இவை முன்னரும் குறிப்பிடப் பெற்றுள்ளன.

**பந்தவேறுபாடுகள்:** இனி ஒவ்வொருவகையிலும் உயிர்தோறும் உள்ள பந்தமும் வேறுவேறாகும். மூலமலமாகிய ஆணவமலப் பிணிப்பின் வேறுபாட்டிற்கு ஏற்ப, மற்றைய

ஒவ்வொரு வகையான அறியும் திறனைப் பெற்றிருப்பதை அறிவார். இத்தகைய அநுபவம்தான் உயிர்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையாக அறிவதிலும் உள்ளது என்பது தெளிவாகும்.

மாயை கன்மங்களும் அமையும் என்பது உணரப்படும். ஆணவப்பிணிப்பு ஒருவகையாய் இல்லாமல், இங்ஙனம் பல்வேறு வகையாய் இருத்தலின், உயிர்கள் பந்தத்தினின்றும் நீங்கி வீடு பேறு பெறுதலும் ஒரு காலத்தில் நிகழாமல் பல்வேறு காலத்தில் நிகழ்கின்றது என்பது தெளியப்பெறும் இவையே ஆணவ மலத்தின் திருவிளையாடல்கள் ஆகும்.

## (3) கன்ம மலம் – இலக்கியத்தில்

**கன்மம்** என்பதும் கருமம் என்பதும் ஒன்றே. நாம் **'வினை'** என்று சொல்லுகின்றோமே அதுவும் கன்மமே. நாம் செய்யும் செயல்கள் யாவும் கன்மங்களேயாகும். ஆனால் தத்துவஞான உலகில் கன்மம் என்ற சொல் சற்று விரிந்த கருத்துடையது. ஒவ்வொரு செயலுக்கும் ஒரு நோக்கமுண்டு; பலன் உண்டு. அப்பலனை அநுபவித்தலும் ஒரு செயலாகும். இவை அனைத்தையுமே 'கன்மம்' என்ற சொல் குறிக்கும். செயல் மட்டுமின்றி எண்ணம், சொல் ஆகியவையும் கன்மத்துள் அடங்கும். எல்லாச் செயல்கட்கும் பலன் உண்டு. அப்பலன்கள் யாவும் செய்தவனையே சென்று அடையும். சில செயல்களின் பலன்கள் உடனேயே சேரும். சில செயல்களின் பலன்கள் சிலகாலம் சென்று சேரும், இந்த உண்மைகளைப் பொதுவாக எல்லாரும் ஒப்புக் கொள்வர். இந்தக் கன்மத்தைப் பற்றிச் சைவ சித்தாந்தம் கூறுவதை ஈண்டுக் கோடிட்டு காட்டப் பெறும். பதி உண்மை, பசு உண்மை இவற்றைக் காட்டியது போல் வினை உண்மையையும் காட்டுவது இன்றியமையாத தாகின்றது. கன்மம் என்பதும் வினை என்பதும் ஒன்றையே குறிக்கும்.

எல்லா உயிர்களும் இன்பத்தையே விரும்புகின்றன. எனினும் அவை துன்பத்தையும் நுகர நேரிடுகின்றது. சிலருக்\-

குத் தாம் தொடங்கும் செயல் எதுவாயினும் அஃது இனிது முற்றுப் பெறுவதற்குரிய சூழ்நிலைகளே தொடர்ச்சியாக அமைந்து விடுகின்றன. எனினும் வேறு சிலருக்கு தொடங்கும் செயல்கள் அனைத்திலும் அவை தடைப் படுத்துவதற்குரிய சூழ்நிலைகளே தொடர்ச்சியாக அமைகின்றன. அன்றியும், ஒருவருக்கே சிலகாலம் தொடர்ச்சியாக நல்ல சூழ்நிலைகளே அமைவதையும், பின்பு சிலகாலம் தீமையான சூழ்நிலைகள் அமைவதையும் காண்கின்றோம். இவற்றால் இன்ப துன்பங் களுக்குச் சூழ்நிலைதான் காரணமாயினும் அச்சூழ்நிலைகளின் அமைப்பிற்குக் காரணம் வேறொன்று உள்ளது என்பது தெளிவாகின்றதன்றோ? அந்தக் காரணத்தைத்தான் '**வினை**' அல்லது '**கன்மம்**' என்று குறிப்பிடுவர் மெய்விளக்க அறிஞர்கள்.

**முயற்சியின்பங்கு:** 'முயற்சியுடையவர் செல்வத்தையும் முயற்சி இல்லாதவர் வறுமையையும் அடைவர்' என்பது ஒரு பொது விதி. வள்ளுவர் பெருமானும்,

> **முயற்சி திருவினை யாக்கும்; முயற்றின்மை**
> **இன்மை புகுத்தி விடும்**[14]

என்று இதனை விளக்குவர். ஆயினும், இப் பொது உண்மை சில இடங்களில் மாறுபடுவதையும் காண்கின்றோம். இரவு பகலாக உழைபவர்கள் வறுமையால் வாடுவதையும், சிறிதும் உழைக்காதவர்கள் செல்வத்துடன் இன்புற்றுத் திகழ்வதையும் நாம் காணாமல் இல்லை. ஆகவே, முயற்சியும் அஃதின்மை யும் செல்வத்திற்கும் நல்குரவிற்கும் காரணங்கள் அல்ல என்பது பெறப்படுகின்ற தன்றோ?

**வினையின் பங்கு:** ஒரு சிலருக்குப் பிறப்பிலேயே முன்னோர் ஈட்டிவைத்த செல்வம் கிடைத்து விடுகின்றது;

14. குறள்-616 (ஆள்வினையுடைமை)

இங்கு முன்னோரின் முயற்சி இவர்கட்குப் பயன் தருகின்றது. இஃது உண்மையேயாயினும், ஒருவர் செல்வக்குடும்பத்தில் பிறந்து, முயற்சியின்றி பிறப்பிலேயே செல்வராய் விளங்க, மற்றொருவருக்கு அந்தவாய்ப்பில்லாது போவதையும் காண் கின்றோம். இதனால் ஒருவர் செல்வ வீட்டு மகவாய்ப் பிறத்தலும் காரணம் இல்லாத நிகழ்ச்சியன்று என்பதையும் நாம் உணர்தல் வேண்டும். செல்வமும் ஒருவரிடை என்றும் நிலைத்திருப்பதில்லை; நீங்கவும் காண்கின்றோம்.

> **அகடுற யார்மாட்டு நீங்காது செல்வம்**
> **சகடக்கால் போல வரும்.**[15]

என்ற நாலடியாரையும் காணலாம். 'நல்வினை' உள்ளவரை செல்வம் ஒருவரிடம் இருக்கும்; அது நீங்கியவுடன் அச் செல்வமும் நீங்கிவிடும். ஆகவே உயிர்கள் அடையும் செல் வத்திற்கும். துன்பத்திற்கும் அவை முன்செய்த வினையே காரணமாகும்.

**ஐயமும்-அதனை நீக்கலும்:** இவ்விடத்தில் எவர் பாலும் ஓர் ஐயம் எழலாம்.'இன்பதுன்பங்களுக்கு முன் செய்த வினையே காரணமாயின் அவை முயற்சியின்றியே வருதல் வேண்டும்; அவ்வாறின்றி முயற்சிக்குத் தக்கபடியே அவை உண்டாவது ஏன்?' என்பது. ஒரு காரியத்திற்குக் காரணம் ஒன்றே என்று கருத வேண்டா; பல காரணங்களும் இருக்க லாம்; அவை அனைத்தும் உள்ள பொழுதே காரியம் நிகழும். எடுத்துக்காட்டு ஒன்று இதனைத் தெளிவாக்கும். ஒருசெடி உண்டாவதற்கு வித்துஒன்று மட்டிலும் காரணம் அன்று; நிலம், நீர், கரியமிலவாயு, கதிரவனது வெப்பம் முதலிய பலவும் காரணங்களாகும். என்பதை நாம் அறிவோம். இவை ஒன்று கூடும்போதுதான் செடி உண்டாகும்.

15. நாலடியார்-2

**விளக்கம்:** ஒரு காரியத்திற்கும் பல காரணங்கள் இருப்பினும், அவற்றுள் ஒன்றே முதன்மையுடையதாக இருக்கும்; மற்றவை அக்காரியம் முற்றுப் பெறத் துணையாக அமையும். மேற்குறிப்பிட்ட செடியின் தோற்றத்திற்கு, வித்து முதற்காரணம்; முதன்மை வாய்ந்தது. மற்றவை யாவும் அவை முளைத்துப் பயன் தருவதற்குத் துணையாய் அமைவனவே. இங்ஙனமே உயிர்களின் இன்ப துன்பங்களுக்கு வினைமுதற் காரணம்; முயற்சி துணைக் காரணம் என்பதை அறிந்து தெளியலாம். முதற்காரணத்திற்கும் துணைக்காரணத்திற்கும் வேறுபாடு என்ன? **ஒன்று** இன்றிப் பிறகாரணங்கள் யாவும் உள்ள வழியும் காரியம் தோன்றாததும், அஃது உள்ள பொழுது காரியம் தோன்றுதலும் நிகழுமாயின், அந்த **ஒன்று** எதுவோ அதுவே முதற்காரணம்; ஏனைய பலவும் துணைக்காரணங்கள். நிலத்தைப் பண்பட உழுது நீர்ப்பாய்ச்சி எருவிட்டாலும், நிலத்தில் விதை இல்லையேல் பயிர்தோன்றாது; விதை இருப்பின் பயிர் தோன்றும்; ஏனையவை துணைக்காரணங்கள். உழுதல் முதலிய முயற்சிகள் யாவும் விதையாகிய முதற் காரணம் செடியைத் தோற்றுவித்தற்குத் துணையாவனவாகும். இதுபோலவே இன்பத்தை எய்தற்பொருட்டு எவ்வளவு முயற்சி செய்தாலும் இன்பத்தைத் தருகின்ற வினை இல்லாத பொழுது இன்பத்தை அடையமுடியாது. அஃதிருப்பின் அம்முயற்சியால் இன்பம் கிடைக்கும். அதனால் வினை முதற்காரணம்; முயற்சி துணைக் காரணம் என்பது அறிந்து தெளியப்படும்.

'முயற்சி திருவினையாக்கும்' என்ற வள்ளுவரின் வாக்கு வினைபயன் தரும் முறையைக் கூறியதாகும். மேலும் அப்பெருமான்,

> **தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்**
> **மெய்வருத்தக் கூலி தரும்**[16]

16. குறள்-619 (ஆள்வினையுடைமை)

என்றும்,

> ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
> தாழாது உஞற்றுபவர்.[17]

என்றும் கூறியுள்ளமை வினையை மறுத்துக் கூறியுள்ளமை போல தோன்றும். ஈண்டுக் குறிப்பிட்ட முதல் குறளில் 'பயன் தரும் வினை உள்ள பொழுது கருதிய பயன்கருதியவாறே கிடைக்கும்; அஃது இல்லையாயின், முயற்சிக்குப் பயன் கிடைக்கும்; அதனால் எப்பொழுதும் முயற்சியை மேற்கொள் ளுதல் நலம்' என்று கூறியுள்ளமை உன்னத்தக்கது.[18] இரண்டாவது குறளில் "வினை என்பதும் முன்னைய பல பிறப்புகளில் செய்த முயற்சியின் மாற்று வடிவந்தான்'' என்பது சிந்திக்கத்தகும். அதனால் 'இதனை இந்த ஒரு பிறப்பில் அளவிடற்கரிய பெருமுயற்சி கொண்டு எதிர்த்தால் புறங் காணுதல் கூடும்' என்று கூறியுள்ளதையும் கருதலாம். அது 'வினை உண்டு' என்னும் கொள்கைக்கு மாறாதல் இல்லை யல்லவா? இங்ஙனம் இப்பிறப்பில் செய்யும் பெருமுயற்சியால் மறுபிறப்பில் செய்த வினையை வெல்லுதல் எங்கோ அத்தி பூத்தமாதிரி ஒன்றிரண்டு இடங்களில் கூடுவதன்றி, எங்கும் எளிதில் பெரும்பான்மையாய் நிகழ்வதன்று. வினையின் முன் முயற்சி' தோல்வியடைவதுதான், இதுபற்றியே வள்ளுவர் பெருமான்.

> ஊழிற் பெருவலி யாவுள? மற்றொன்று
> சூழினும் தான்முந் துறும்.[19]

என்னும் குறளில் '**ஊழின் வலியை**' வற்புறுத்திக் கூறுகின்றார் என்பது உணரப்படும். மேற்குறிப்பிட்ட இரண்டு குறள்களிலும்

17. குறள் - 620 (ஆ.2)
18. உழைத்தால், அன்றாடக் கூலிக்குப் பஞ்சமில்லை யல்லவா?
19. குறள் - 380. (ஊழ்)

'தெய்வம் ஊழ்' என்பவற்றால் '**வினை உண்மை**' என்று கூறியிருத்தலையும் கண்டு தெளியலாம். 'வினையின்மை' என்னும் கருத்தும் இவற்றில் எவ்வாற்றானும் பெறவைக்கவில்லை என்பதும் உணரப்படுமே.

**துணைக்காரணங்கள்:** 'இன்பதுன்பங்களுக்கு வினையே முதற்காரணம்' என்று அப்பெருமான் கூறியதோடன்றி, அவற்றிற்குத் துணைக்காரணங்களாகிய 'முயற்சி, அறிவு' என்பவற்றையும் வினையே தருவதாகக் கூறியுள்ளதும் ஈண்டு எடுத்துக் காட்டப் பெறுகின்றது.

ஆகூழால் தோன்றும் அசைவின்மை; கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி[20]

(அசைவு-மடி)

பேதைப் படுக்கும் இழவூழ்; அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை. [21]

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்.[22]

என்ற குறட்பாக்களில் இக்கருத்து விளங்கக் கூறியுள்ளதைக் காணலாம்.

**கன்மமல உண்மை:** இயற்கையில் சுறுசுறுப்பாக இருக்கும் ஒருவர், ஒரு குறிப்பிட்ட சமயத்தில் சுறுசுறுப்பின்றிச் சோம்பல் கொண்டு இருந்து அச்சோம்பலின் விளைவாகப் பெரியதோர் இழப்பினை அடைதல் உண்டு என்பதற்கு வாழ்க்கையைக் கூர்ந்து நோக்குவோர் நன்கு அறிவர். **அவரைச் சோம்பல் கொள்ளச் செய்தது அவரது தீவினையேயாகும்.** இயற்கையில் நுண்ணறிவும் பெருங்கல்வியும் உலக

20. குறள் - 371. (ஊழ்)
21. மேலது - 372 (ஊழ்)
22. மேலது - 373 (ஊழ்)

அநுபவமும் உடையவராகிய ஒருவர் குறிப்பிட்ட ஒரு செயலில் அறிவு மயங்கித் தவறான வழியில் சென்று கேடுறுவதற்கும் அவருடைய **தீவினைதான் காரணம்** என்பதும் உளங்கொள்ளப்படும். இவர்கள் இருவருக்கும் எதிராக இயற்கையில் சோம்பலுடையவரும் மந்தமதியுடையவரும், கல்வியும் பட்டறிவும் இல்லாதவரும் பெருநலம் பெறுவதற்கும் அவரது **நல்வினைதான் காரணமாகும்.** எனவே, உலகில் ஒவ்வொருவருக்கும் அவ்வப்பொழுது வரும் நன்மைதீமைகட்கு எல்லாம் அவரவர்கள் முயற்சி செய்வதும் செய்யாமையும் அல்ல என்பது தெளிவாகின்றதன்றோ? இதனால் 'வினை என்ற கன்ம மலம்' உண்டெடன்பது நன்கு புலனாகும்.

நாலடியாரில் '**பழவினை**' என்ற ஓர் அதிகாரமும், திருக்குறளில் '**ஊழ்**' என்ற ஓர் அதிகாரமும் இருப்பதை நாம் அறிவோம். அந்த இரண்டையும் படித்தால் '**கன்ம மலம்**' பற்றிப் பல செய்திகளையும் அறிந்து கொள்ளலாம். 'ஊழ்' என்ற சொல்லுக்கு "இருவினைப் பயனும் செய்தவனையே சென்றடைவதற்கேதுவான நியதி" எனப் பொருளுரைப்பர் பரிமேலழகர்.[23] மேலும் அவர் ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி ஆகிய யாவும் ஒரே பொருளுடைய சொற்கள் எனவும் தெரிவிப்பர். தொல்காப்பியர் ஊழைப் 'பாலறி தெய்வம்' என்று குறிப்பிடுவர்[24]. நாலடியாரில் சமண முனிவர்,

**பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று**
**வல்லதாம் தாய்நாடிக் கோடலைத் –தொல்லைப்**
**பழவினையும் அன்னதகைத் தேதற்செய்த**
**கிழவனை நாடிக் கொளற்கு** [25]

23. 'ஊழ்' என்ற சொற்குப் பொருள் கூறும்போது.
24. தொல். பொருள். களவியல் நூற்.2
25. நாலடியார்-101

(பழவினை - கன்மம்; கிழவன் - உரிமையுடையவன்)

என்று வினையின் வலியை விளக்குவர். ஊழை நினைத் தால் 'சிலப்பதிகாரம்' என்ற காவியம் நினைவிற்கு வாராமல் போகாது. ஊழின் வலியை வலியுறுத்தற் பொருட்டே எழுந்த காப்பியம் அல்லவா? 'ஊழ்வினை உறுத்து வந்தூட்டுவதைக்' கோவலன் வாழ்க்கை தெளிவாகக் காட்டுகிறது. இப்பிறப்பில் யாதொரு தீங்கும் செய்யாத கோவலன் கள்வன் எனக் கருதப் பெற்றுக் கொல்லப் பெறுகின்றான். முற்பிறப்பிலே அவன் களவு செய்யாத ஒருவனைக் கள்வன் எனக் கூறிக் கொல்வித்தவன். அத்தீவினையின் பலனையே இப்பிறப்பில் அவன் அநுபவிக்கின்றான். 'கன்மம்' என்பதும் 'ஊழ்' என்பதும் இதுவேயாகும்.

இராமகாதையில் கைகேயியின் கூடாத செயலுக்குச் சீற்றம் கொண்டு வெகுண்டு எழுந்த இலக்குமணனை நோக்கி எல்லாம் 'விதியின் பிழை' என்று அமைதி கூறுவான் இராமன்.[26]

பேறிழ வின்ப மொடு பிணிமூப்புச் சாக்கா டென்னும்
ஆறும்முன கருவுட் பட்டது அவ்விதி அநுப வத்தில் ஏறிடும்[27]

என்று கன்மத்தை விளக்குவார் அருணந்தி சிவம். இக்கூறிய பல செய்திகளைக் கொண்டு 'வினை' என்றும் உண்டு' என்பது தெளியப்படும்.

## (4) கன்மமலம்—சித்தாந்த அடிப்படையில்

ஆணவமலம் இயற்கை (சகச) மலமாயும், மூலமாயும் இருத்தலால், அதனை நீக்குதற் பொருட்டே கன்ம மலமுட

26. கம்பரா.அயோத்தி. நகர் நீங்கு-134
27. சித்தியார்-2.9

மாயாமலமும் உயிர்கட்கு உளவாயின. அதனால் கன்மமும் மாயையும் '**ஆகந்துக மலம்**' என வழங்கப்பெறும். ஆகந்துகம்–பின்பு வருவது எனவே ஆணவ மலம் நீங்குங் காலத்து இவையும் ஒருங்கே நீங்குவனவாம்.

ஆணவமலம் அறிவிற்கு மறுதலையாய் உயிர்களை நேரே தடை செய்து நிற்றலால் அது, '**பிரதி பந்தம்**' என்ற பெயரால் வழங்கி வருகின்றது. கன்ம மலம் ஆணவ பந்தத்தின் பயனை உயிர்கட்கு உறுவித்து நிற்றலால் அஃது '**அநுபந்தம்**' என்ற பெயரைப் பெறுகின்றது. மாயாமலம் கன்மத்தால் தொடர்பு படுத்தப்பெற்று நிற்றலால் அது '**சம்மந்தம்**' என்று கூறப்பெறுகின்றது.

**மூன்றும் அநாதி:** ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களும் அநாதியாக உள்ளவை. ஆணவபந்தம் உயிர்களை மேல் நோக்கி எழாது கீழ்நோக்கி அழுத்துதலால், உயிர்கள் தமக்கு மேலான இறைவனை அறியாது, கீழான கன்மத்தையே நோக்கும். அதனால் அவற்றிற்குப் பொதுவகை யாய் நிற்கும் மூலகன்மம் (முதல்வினை) உளதாகும். கன்மம் மாயையே பற்றி நிற்றலின், கன்மத்தின்வழி மாயை உயிர்களை வந்து பற்றும்; இம்மூன்றிற்கும் இடையீடு இன்மையால் மும்மலங்களும் ஆன்மாவிற்கு அநாதியே உள்ளனவாம் என்பது அறியப்படும். அதன்பின் கன்மம் முன்பு வந்ததா? மாயை முன்பு வந்ததா? என்னும் வினாக்கள் ஒருவகையில் வேண்டாதவையாகின்றன. ஏனெனில், உயிர்கள் இயற்கையில் தூய்மையாக இருப்பின் அவ்வினாக்கள் பொருந்தும். கன்மம் மாயைகட்கு ஏதுவாக உள்ள ஆணவம் உயிர்கட்கு இயற்கையில் இருத்தலால் அஃது ஏதுவாக வரும் கன்மம் மாயைகளும் அன்றே உளவாம் என்பது கொள்ளப்படும்.

இதனை,

நெல்லிற் குமியும் நிகழ்செம்பி னிற்களிம்பும்
சொல்லின் புதிதன்று தொன்மையே —வல்லி
மலகன்மம் அன்றுளவாம் [28]

(வல்லி—மாயை)

என்று கூறுவர் **மெய்கண்ட தேவர்.** உமாபதி சிவமோ,

.............வினையோ அன்றிச்
சொல்லிவரும் மாயையோ அணுவை முந்தச்
சூழ்ந்ததெனும் உரைமுதல்ஓர் தொடக்கி லர்பால்
ஒல்லைவரும் எனின்உளதாம்; உயிர்உண் டாவே
உளது மலம்; மலம்உளதா ஒழிந்த எல்லாம்
நெல்லின்முளை தவிடுமிபோல் அநாதி யாக
நிறுத்திடுவர்; இதுசைவம் நிகழ்த்து மாறே[29]

என்று மேலும் விளக்கமாக உரைப்பர்.

**உமாபதியின் விளக்கம்:** இதனைத் தெளிவுறுத்த முயலலாம். மும்மலங்களும் ஆன்மாவுடன் சேர்ந்திருப்பதை நெல்லிலே முளை, தவிடு, உமி சேர்ந்திருப்பதைக் காட்டி விளக்குவர் உமாபதி சிவம். முளையைப் போன்றது மாயை. உமியைப் போன்றது ஆணவம். எனவே அரிசி ஆன்மா விற்கு உவமையாகின்றது என்பது தெளிவு. இந்த மூன்று மலங்களும் எந்தவிதத்தில் உமி, முளை, தவிடு ஆகிய மூன்றுடன் ஒற்றுமைப் படுகின்றன என்பதுவே விளக்கத்தின் உயிர் நாடி.

நெல்லிலுள்ள முளைத்தல் ஆற்றல் முளையைத் தோற்றுவித்தல்போலக் கன்ம மலம் உயிரினிடத்துச் சுகதுக்கங் களை, முதற்காரணமாகநின்று, தோற்றுவிக்கும்; தவிடு முளைத்

28. சி. ஞா. போ. சூத்திரம் 2. பா. 12
29. சிவப்பிரகாசம் - 25

தலுக்கு அநுகூலம் செய்து உடன் நிற்குமாறுபோல, மாயாமலம் அந்தத் துக்கங்கள் தோன்றுவதற்குத் துணைக்காரணமாய்த் தன் காரியமாகிய தனு கரணம் முதலியவற்றையும் உயிரையும் அசைவித்து நிற்கும். உமி அம்முளை தோன்றுவதற்கு நிமித்த காரணமாய் இருப்பது போல் ஆணவமலம் அந்தத் துக்கத் தோற்றத்திற்கு நிமித்த காரணமாக நின்று அவற்றை முருகு வித்து உயிர்நுகருமாறு நிலைபெறச் செய்யும். இந்த ஆன்மா வின் சுகதுக்கங்களுக்கு ஆணவம் கன்மம் மாயை ஆகிய மூன்று மலங்களும் நிமிந்தம், முதல், துணை ஆகிய மூன்று காரணங்களாக அமைவது குறிப்பிடத்தக்கது. இங்ஙனமாயி னும், ஆணவத்தைச் 'சகசம்' என்றும் ஏனைய இரண்டையும் 'ஆகந்துவம்' என்றும் கூறுவதுவும் விளைவும் ஆகிய முறைமை பற்றியேயாகும் என்பது சிந்தித்து ஓர்ந்து உணரப்படும்.

**மூலகன்மம் செயற்படுதல்:** மூல கன்மம் 'நன்மை, தீமை' என்று பாகுபாடு அடையாமல் பொதுவாய் நிற்கும். பின்னர் அது செயற்படும் காலத்தில் நல்வினையும் தீவினை யும் என இரண்டு வகையாய்ச் சிறப்புற்றுச் செயல்பற்றிப் பலவாகித் திகழும், ஆணவபந்தத்திற்கு ஏற்பவே மூலகன்ம பந்தமும், மாயாமல பந்தமும் உயிர்கட்கு உள்ளன என்பதை நாம் அறிதல் வேண்டும். இப்பந்தங்கட்கு ஏற்ப இறைவன் தனது சக்தியால் மாயையினின்றும் சூக்கும உடம்பைப் படைத்துத் தருவான், சூக்கும உடம்பை அடைந்த உயிர்கள் ஆணவபந்தம் சிறிது நீங்கப் பெற்றுத் தம் மூலகன்மத்திற்கு ஏற்ப அறிவு, இச்சை செயல்கள் விளங்கப்பெறும். இங்ஙனம் விளங்கப் பெற்றவழி அவற்றிற்கு உண்டாகும் விருப்பு வெறுப்புகளே அவற்றிற்கு நல்வினையும் தீவினையுமாய் முடியும். அவ்வினைக்கேற்ப அவற்றிற்கு இறைவன் தூல உடம்பைப் படைத்துத் தருகின்றான். **'எழுவகைப் பிறப்பு'**

என்று நூல்களில் குறிப்பிடப் பெறுவன எல்லாம் இந்தத் தூல உடம்பில் அமைவதோடன்றிச் சூக்கும உடம்பில் அமைவதன்று என்பதை நினைவில் கொள்ள வேண்டும். உயிர்கள் சூக்கும உடம்பைக் கொண்டு நினைப்பவற்றைத் தூல உடம்பு கொண்டு செய்து நல்வினை தீவினைகளை ஈட்டும்: அவற்றின் பயனாகிய இன்பதுன்பங்களை – சுகதுக்கங்களை - உயிர்கள் அநுபவிக்கும். மணிவாசகப்பெருமான்,

புல்லாய்ப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்து[30]

என்று கூறியவாறு பலவகைப் பிறப்புகளில் மாறிமாறிப் பிறந்தும் இறந்தும் உழலும். 'அறம், மறம்' என்று அருந்தமிழிலும், 'புண்ணியம், பாவம்' என்று வடமொழியிலும் சொல்லப் படுவன இச்சூக்கும கன்மங்களையே என்பதை நாம் அறிதல் வேண்டும். நல்வினை இன்பத்தையும், தீவினை துன்பத்தையும் தரும் என்பதையும் உணர்தல் வேண்டும். எனவே, கன்மமே – வினையே – பிறவிக்கும் அதன்கண் உண்டாகும் இன்ப துன்பங்கட்கும் காரணமாதல் வெளிப்படை என்பது உளங்கொள்ளப்படும்.

**மூலகன்மம்:** ஆணவத்தோடொப்ப அநாதியாகச் சொல்லப்படும் கன்மம் 'மூலகன்மம்' என்பதாகும். இதனை விளக்குவோம்.

(1) உயிர்கள் யாவும் தாம் அடைகின்ற இன்பதுன்பங்களுக்கு அவை முற்பிறப்பில் செய்த வினை பல இடங்களில்

30. திருவா. சிவபுரா. அடி (26-31)

விளக்கப்பெற்றுள்ளது. 'இல்லது தோன்றாது' என்ற சற்காரிய முறைப்படி, தோற்றமும் அழிவுமுடைய பொருள்கள் முன்சூக்குமமாய் விளங்காது இருந்த 'காரணநிலையினின்றும் நீங்கித் தூலமாய் விளங்கி நிற்கும் நிலையே தோற்றம்; பின் தூலமாய் விளங்கி நின்ற காரியநிலையினின்றும் நீங்கி முன் போலச் சூக்கும நிலையாய் விளங்காது 'காரண நிலை'யை அடைவதே 'அழிவு' என்று முன்னர் விளக்கப்பெற்றதை ஈண்டு நினைவு கூரலாம்.

சற்காரிய முறை தூலப்பொருளில் தெளிவாகத் தெரிவது போல் சூக்குமப் பொருளில் தெளிவாகத் தெரிவதில்லை. எடுத்துக்காட்டாக மண்காரணம்; பானை காரியம். அதனால் பானை தான் தோன்றுவதற்கு முன்பும் மண்ணில் சூக்குமமாய் உள்ளது என்று கொள்கின்றோம். வினை அல்லது கன்மம் என்னும் காரியத்திற்கு, பானைக்கு மண்போல ஒரு காரணப் பொருளைச் சொல்லவில்லையே என்ற போக்கில் நம் சிந்தனை செயற்படக்கூடும். இதனையும் விளக்க வேண்டும். 'பானை' என்னும் காரியம் தூலப்பொருளாதலின் அதற்குக் காரணம் மண் என்பதை எளிதில் உணரமுடிகின்றது; உணர்த்தவும் படுகின்றது. 'வினை' சூக்குமப் பொருளாதலின், அதன் காரணம் இன்னது என எளிதில் உணரமுடிவதில்லை. 'இல்லது தோன்றாது; உள்ளது தோன்றும்' என்பது உண்மை யாதலின் வினை ஒருவனால் செய்யப்படுவதற்கு முன்னும் உள்ளதேயன்றி இல்லாதது அன்று. முன்பு இயற்கையாயுள்ள வினையைத்தான் பின்பு ஒருவன் செயற்கையாகச் செய் கின்றான். இயற்கையாய் உள்ள காரணவினை காரண கன்மமும், பின்பு அதனை ஒருவன் செயற்கையாகச் செய்யும் வினை காரிய கன்மமும் ஆகும். காரண கன்மம்தான் 'மூல கன்மம்' என்று அடைமொழி தந்து விளக்குவர் சித்தாந்திகள்.

மண்ணும் பானையும் என்ற எடுத்துக்காட்டில் காரணப் பொருளாகிய மண்ணும் காரியப் பொருளாகிய பானையும் வேறு வேறு பெயர்பெற்று நிற்பதால் அவை இரண்டு காரண மும் காரியமும் ஆதல் பொருந்தும். கன்மத்தில் அவ்வாறு வேறுபடுத்திக் காட்டும் சொற்கள் இன்மையால் குழப்பம் நேரிடுகின்றது. தூலப்பொருளாகிய காட்சிப் பொருள் உள்ள வாறே சூக்குமப் பொருளாகிய கருத்துப் பொருளும் இருத்தல் வேண்டும். வினை சூக்குமப் பொருள், அதன் காரண காரிய நிலைகளில் பெரிய வேற்றுமை இல்லை; அதனால் காரண நிலையைக் குறிக்க '**மூலகன்மம்**' என்று அடைமொழி கொடுத்துக் கூறி அமைகின்றனர் என்பது அறிந்து தெளியப் படும்.

**விளக்கம்:** இக்கருத்து இரண்டு முறைகளில் விளக்கம் பெறுகின்றது. (1) காட்சியளவை மட்டிலும் பிரமாணம் அன்று என்பதையும் கருதலளவையும் பிரமாணம்தான் என்பதையும் நாம் அறிவோம். தோன்றி நின்று அழிவன யாவும் காரியமே என்பதும் நமக்குத் தெரியும். ''வினையை ஒருவன் செய்யுங் காலத்து அது தோன்றுகிறது; பின் காலம் வருந்துணையும் காத்திருக்கின்றது; காலம் வந்தவுடன் தன் பயனைத் தன்னைச் செய்தவனுக்குத் தந்து விட்டு ஒழிகின்றது" - இந்த உண்மை எல்லோருக்கும் உடன்பாடே. எனவே, தோற்றம், நிலைபேறு, இறுதி என்ற மூன்றையும் உடைமையால் இங்குக் குறிப்பிட்ட இவ்வினை 'காரியமே' என்பது தெளிவு; காரியங்கள் யாவும் தமக்குக் காரணங்களை உடையன என்பதும் தெளிவே. இதனால் 'இக்காரிய கன்மமும்' தனக்குக் காரணத்தை உடை யது என்பதும், அக்காரண கன்மமே **மூல—கன்மம்** என்பதும் கருதலளவையால் இனிது உணர்ந்து கொள்ளலாம்.

(2) அநுபவத்தாலும் இதனை விளக்கலாம். வினை என்பது பொருள்களின் புடைப்பெயர்ச்சி (Displacement);

அஃதாவது, ஓர் இடம் விட்டுப் பிறிதோர் இடத்தை அடைதல். இன்னும் இதைத் தெளிவாகச் சொல்லவேண்டுமானால் ‘பொருள்களின் அசைவு’ எனலாம். இந்த அசைவு அந்தந்தப் பொருளிலும் அதனதலாலே இயற்றப்படுகின்றது என்பது உண்மையாகும். ஆயினும், அவ்வசைவுத் தன்மையை எந்தப் பொருளும் தானே தன்னிடத்தில் அமைத்துக் கொள்ள வில்லை; அஃது இயற்கையாய் அதனிடத்து முன்பே அமைந் துள்ளது. இத்தன்மை காலம் இடம் முதலிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப அதனினின்றும் வெளிப்படுகின்றது என்பது தெளிவாகும். அவற்றுள் அசைவுத்தன்மை அல்லது புடைபெயரும் தன்மை போன்றது காரணகன்மமாகிய **மூல-கன்மம்.** அசைவு அல்லது புடைப்பெயர்ச்சி போன்றது காரியகன்மம்.

**மேலும் விளக்கம்:** ‘குயவன் பானையை வனைந்தான்’ என்று சொல்லும்போது பானையை வனைந்தவன் குயவன் தான் என்பதில் ஐயமில்லை. ஆயினும் ‘வனைதல்’ என்ற தொழிலை அவன் அன்று உண்டாக்கவில்லை; அது முன்பதா கவே உள்ளது. அங்ஙனம் அத்தொழில் முன்பதாக இல்லை யென்றால், இப்பொழுது அதனை அவன் செய்ய இயலாது. ‘வனைதல்’ என்ற தொழில் என்றும் இருப்பதால் அதனைக் குயவன் தான் விரும்பும்போது விருப்பமான இடத்தில் விருப்பமான வகையில் செய்கின்றான். இப்படியே தான் உலகி லுள்ள மற்ற எல்லாத்தொழில்களின் நிகழ்ச்சிகளும் இக்காலப் புதிய அறிவியல் நுட்பத்தால் நடைபெறும் நிகழ்ச்சிகளும் நிகழ்கின்றன என்பது உளங்கொள்ளத் தக்கது.

**தொல்காப்பியரின் கருத்து:** பண்டைய இலக்கண மாகிய தொல்காப்பியத்திலுள்ள ஒரு நூற்பாவைக் கொண்டும் இதனை விளக்கலாம்.

> **வினையே செய்வது செயப்படு பொருளே**
> **நிலனே காலம் கருவி என்றா**

இன்னதற் கிதுபய னாக வென்னும்
அன்ன மரபின் இரண்டொடும் தொகைஇ
ஆயெட் டென்ப தொழில்முதல் நிலையே[31]

இந்த நூற்பாவில் தொல்காப்பியர் ''ஒரு தொழில் நிகழ்ச்சிக்கு முதல் நிலையாக **எட்டுப்** பொருள்கள் வேண்டப்படும்'' என்ற கருத்தைத் தெரிவிக்கின்றார். இங்கு முதல் நிலை–காரணம். தொழில் முதல் நிலை – தொழிலுக்குக் காரணம். ''தொழிலுக்கு உள்ள காரணங்களுள் தொழிலும் (வினையும்) ஒன்று'' என்று அவர் கூறியிருப்பதுதான் நம் சிந்தனைக்கு உரியது. 'தொழி லுக்குக் காரணம்' என்று சொல்லுவதிலிருந்து 'தொழில்காரியம்' என்பது வெளிப்படையாகத் தெரிகின்றதன்றோ? காரணங் களைக் குறிப்பிடும் இடத்திலும் 'வினை' என்ற ஒன்றைக் கூறுவார். எனவே, அவர் '**காரணவினை**' (காரக வினை), '**காரிய வினை**' என்று வினையை இரண்டாகக் கொள்கின்றார் என்பது மிகத் தெளிவு. ''வினையும் தொழிலும் வேறு என்பது இச்சூத்திரத்தான் உணர்வதற்கு 'வினை' என்று எடுத்துத் 'தொழில் முதல் நிலையே' என முடித்தார்'' என்ற கருத்து நினைவில் கொள்ளத்தக்கது. மேற்கூறிய காரணகாரியத்தைத் தான் இங்கு நாம் '**மூலகன்மம்**' என்கின்றோம். இதனை **மாதவச் சிவஞான யோகிகள்** தமது மாபாடியத்திலும் விளக்கி யிருத்தலைக் காணலாம்.

**மேலும் விளக்கம்:** முன்னர்க் காட்டிய எடுத்துக் காட்டினைக் கொண்டு இதனை மேலும் தெளிவாக்கலாம். 'வனைந்தான்' என்பதற்கு 'வனைதல்' என்பது முதல் நிலை. இங்ஙனமே பிறவற்றிற்கும் முதல் நிலைகள் உள்ளன.எனவே பல்வேறு வகைப்பட்ட தொழில்கட்கும் முதல்நிலையாய்ப் பொதுப்பட நிற்கும் முதல் நிலை ஒன்று உண்டு; அதனையே நாம் '**மூலகன்மம்**' என்று சிறப்பாகக் குறிப்பிடுகின்றோம்.

31. தொல். சொல். வேற்றுமை மயங்கியல்-29

அது சிறப்பாக 'இன்னசெயல்' என்று சொல்ல ஒண்ணாதபடி நிற்கும். இதுவே மேலே 'புடைபெயரும் தன்மை—அசையும் தன்மை' என்று குறிப்பிடப்பெற்றது. இத்தன்மை காலம், இடம், கருவி முதலியவற்றோடு கூடிச் சிறப்பு வகையில் நிகழும் பொழுதே 'வனைந்தான், கொடுத்தான், உண்டான், என்றாற் போல 'இஃது இன்ன செயல்' என்று சிறப்பு வகையில் குறிப் பிட்டுச் சொல்லும் படியாக அமையும். எனவே, காரணகன்ம மாகிய மூலகன்மம் பாகுபாடின்றி ஒன்றேயாய் நிற்கும் என்பது உளங்கொள்ளப்படும். காரியகன்மம் 'நல்லது, தீயது' என்று இருபெரும் பிரிவினவாய் விரிந்து ஒவ்வொன்றும் பற்பல வகையாய் விரிய, எண்ணிறந்தனவாகும். இவற்றுள் உயிர்கட்கு இன்பமாயும், துன்பமாயும் வந்து எப்பொழுதும் பந்திப்பது காரிய கன்மமேயாகும். ஆதலின், அதுவே எங்கும் பெரும்பான்மையாய் எடுத்துச் சொல்லப்படும். எனவே, மேலே குறிப்பிட்ட தொல்காப்பிய நூற்பாபோலவே, சில இடங்களில் மூலகன்ம உண்மையும் குறிப்பிட்டுக் காட்டப்பெறும்.

> இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின்
> வருபவக் கடலில்வீழ் மாக்கள் ஏறிட
> அருளுமெய் அஞ்செழுத் தரசை இக்கடல்
> ஒருகல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ[32]

என்ற திருப்பாடலில் **சேக்கிழார் அடிகள்** ''ஆன்மாக்கள் 'ஆணவம், கன்மம், மாயை' என்னும் மூன்று கற்களை நல்வினை தீவினை என்னும் இரண்டு கயிறுகளால் கட்டி பிறவியாகிய கடல்களில் தள்ளப்பட்டுள்ளன'' என்று குறிப்பிடு கின்றார். இங்கு மூலகன்மத்தைக் கல்லாகவும், அதன் காரிய மாகிய புண்ணிய பாவங்களைக் கயிறுகளாகவும் பிரித்து உருவகம் செய்திருத்தலைக் கூர்ந்து நோக்கி அறியலாம். **மணிவாசகப் பெருமானும்,**

32. பெரி.புரா. திருநாவு - 129

...மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி[33]

என்று கூறுதல் காரிய கன்மத்தையே என்பது தெளி வாகும். இக்கூறியவற்றால் நாம் அறிய வேண்டியவை: (அ) மூலகன்மம் ஒன்றேயாய் இருக்கும்; (ஆ) காரிய கன்மம் இருவகையாக விரியும் என்பவையாகும்.

**செயப்படும் கன்ம வகைகள்:** கன்மம், 'மனம், வாக்கு, காயம்' என்ற மூன்றாலும் செய்யப்படும்., அவற்றுள் மனத்தால் செய்யப்பெறும் கன்மம் 'மானதம்' எனவும், வாக்கால் செய்யப் பெறும் கன்மம் 'வாசிகம்' எனவும் காயத்தால் செய்யப்பெறும் கன்மம் 'காயிகம்' எனவும் வழங்கப்பெறும். அன்பும் அருளும் பொறுமையும் காரணமாக நினைக்கும் நல்ல நினைவுகளும், அழுக்காறும் அவாவும் வெகுளியும் காரணமாக நினைக்கும் தீய நினைவுகளுமாம்.

உள்ளத்தால் உள்ளலும் தீதே; பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வே மெனல்[34]

என்ற குறள் மனத்தால் வினை உண்டாதலைக் குறிக்கின்றது வாக்கால் செய்யப்பெறும் வினைகள் மேற்கூறிய நினைவு களின் வழிச் சொல்லப்படும் வாய்மை, பாராட்டு, இன்சொல், உறுதிச்சொல் என்னும் நற்சொற்களும்; பொய், குறளை, கடுஞ்சொல் பயனில்லாச் சொல் என்னும் தீய சொற்களுமாம்.

நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்பிற்சொல் பல்லா ரகத்து[35]

என்ற குறள் வாயினால் வினை உண்டாதலைக் குறிக்கின்றது. நடுவுநிலைச் சொல் வாய்மையிலும் நடுவிகந்த சொல்

33. திருவா. சிவபுரா. அடி.31-32
34. குறள்-292 (கள்ளாமை)
35. மேலது-194 (பயனில சொல்லாமை)

பொய்ம்மையிலும் அடங்கும். காயத்தால் செய்யப்பெறும் வினைகள் நன்றி, ஈகை, இன்னா செய்யாமை, புலால் உண்ணாமை முதலிய நற்செயல்களும்; களவு, கொலைகள் உண்டல், புலால் உண்டல் முதலிய தீச்செயல்களுமாகும்.

> பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
> பிற்பகல் தானே வரும்[36]

என்ற குறள் உடம்பில் வினை உண்டாதலைத் தெரிவிக்கின்றது. செய்யும் வினை மிகக் கொடுமையாக இருப்பின், விளையும் பயன் விரைவில் உண்டாகும் என்பதையும் இப்பா உணர்த்துகின்றது.

**ஓர் உண்மை:** மனம் மொழி மெய்களால் நினைவு, சொல் செயல் என்பன தூலமாய் நிகழ்ந்த நிலையினின்றும் நீங்கிச் சூக்குமமாய் நிலைபெற்று நிற்கும்; பின் காலம் வரும் போது தம் பயனை உயிர்கட்குத் தரும். தூலமாய் நிகழ்வதே இருவினைகட்கும் **தோற்றமாகும்**; பின் அவை சூக்குமமாய் நிற்றல் **நிலைபேறு** ஆகும்; பின் காலம் வந்தபொழுது தம் பயனைக் கொடுத்து நீங்குதலே அவற்றின் **அழிவு** ஆகும். 'அழிதல்' என்பது, தூலநிலையை விட்டுச் சூக்கும நிலையை அடைதலாகும்; 'எந்தப் பொருளும் எக்காலத்திலும் அடியோடு இல்லாதொழிதல் இல்லை?' - இக்கருத்து இந்நூலில் பல இடங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளதையும் நினைவு கூரலாம்.

**அறிந்தும் அறியாமலும் செய்யப்பெறுபவை:** மன வாக்குக் காயங்களால் செய்யப்பெறும் வினைகள் அறிந்து செய்வனவும் அறியாது செய்வனவும் என இருவகையாகப் பிரித்துப் பேசப்பெறும். அறிந்து செய்வன **'புத்தி பூர்வம்'** எனவும், அறியாது செய்வன **'அபுத்தி பூர்வம்'** எனவும்

36. மேலது-319 (இன்னா செய்யாமை)

சொல்லப்படும்.' 'நல்வினையாயினும் தீவினையாயினும் அறியாது செய்யின் வினையாகா?' என்பர் புத்த சமயத்தினர். அவரைப் பின்பற்றியே பரிமேலழகர் தம் திருக்குறள் உரையில் சில இடங்களில் அவ்வாறு கூறினார். ஆயினும்,

> மறந்தும் பிறன்கேடு சூழற்க; சூழின்
> அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு[37]

என்பது முதலியவற்றால் ஆசிரியர் திருவள்ளுவனார்க்கு அபுத்தி பூர்வவினை உடன்பாடாதல் இனிது விளங்கும். அமுதமாயினும் நஞ்சாயினும் அறிந்து உண்ணினும் அறியாது உண்ணினும் அவை தம் பயனைத் தந்தே தீரும். இப்பொருந்து மாறு பற்றியும் அபுத்தி பூர்வவினை உளதாதல் உணரப்படும்.

அமுதும் நஞ்சுமாகிய உவமை இவ்விடத்திற்குப் பொருந்தா எனக் கருதலாம். அவையும் வினையும் சடமேயாத லின் பொருந்தா தொழிதல் எங்ஙனம்? என்று ஒழியப்படும். அறியாது செய்த புண்ணியத்தாலும், பாவத்தாலும் பலர் நன்மையும் தீமையும் எய்தினமை கூறும் பல வரலாறுகள் உள்ளமையை நினைந்து தெளிவு பெறலாம்.

**வினைகளால் நேரிடும் பயன்படும் பயன்கள்:** அறி யாது செய்யும் வினைகள் மென்மையும், அறிந்து செய்யும் வினைகள் வன்மையும் உடையன என்னும் அளவே செயற்படும்; அறியாமல் செய்தவிடத்து வினை இல்லை என்பதில்லை. அமுதும் நஞ்சுமாக மேற்காட்டிய உவமானத் தின்படி அபுத்திபூர்வம் புத்திபூர்வம் இரண்டும் சமமாதலின், அவற்றுள் ஒன்றை வன்மையுடையதாகவும் மற்றொன்றை மென்மையுடையதாகவும் கூறியது என்னையெனின், அமுதும் நஞ்சும் தம் பயனைத் தாரா தொழியாமை மாத்திரைக்கே எடுத்துக்காட்டப்பெற்றன. ஏனெனில், அமுதினையோ, நஞ்சி

37. குறள் - 204 (தீவினையெச்சம்)

சொல்லப்படும்.' 'நல்வினையாயினும் தீவினையாயினும் அறியாது செய்யின் வினையாகா?' என்பர் புத்த சமயத்தினர். அவரைப் பின்பற்றியே பரிமேலழகர் தம் திருக்குறள் உரையில் சில இடங்களில் அவ்வாறு கூறினார். ஆயினும்,

மறந்தும் பிறன்கேடு சூழற்க; சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு[37]

என்பது முதலியவற்றால் ஆசிரியர் திருவள்ளுவனார்க்கு அபுத்தி பூர்வவினை உடன்பாடாதல் இனிது விளங்கும். அமுதமாயினும் நஞ்சாயினும் அறிந்து உண்ணினும் அறியாது உண்ணினும் அவை தம் பயனைத் தந்தே தீரும். இப்பொருந்து மாறு பற்றியும் அபுத்தி பூர்வவினை உளதாதல் உணரப்படும்.

அமுதும் நஞ்சுமாகிய உவமை இவ்விடத்திற்குப் பொருந்தா எனக் கருதலாம். அவையும் வினையும் சடமேயாத லின் பொருந்தா தொழிதல் எங்ஙனம்? என்று ஒழியப்படும். அறியாது செய்த புண்ணியத்தாலும், பாவததாலும் பலர் நன்மையும் தீமையும் எய்தினமை கூறும் பல வரலாறுகள் உள்ளமையை நினைந்து தெளிவு பெறலாம்.

**வினைகளால் நேரிடும் பயன்படும் பயன்கள்:** அறி யாது செய்யும் வினைகள் மென்மையும், அறிந்து செய்யும் வினைகள் வன்மையும் உடையன என்னும் அளவே செயற்படும்; அறியாமல் செய்தவிடத்து வினை இல்லை என்பதில்லை. அமுதும் நஞ்சுமாக மேற்காட்டிய உவமானத் தின்படி அபுத்திபூர்வம் புத்திபூர்வம் இரண்டும் சமமாதலின், அவற்றுள் ஒன்றை வன்மையுடையதாகவும் மற்றொன்றை மென்மையுடையதாகவும் கூறியது என்னையெனின், அமுதும் நஞ்சும் தம் பயனைத் தாரா தொழியாமை மாத்திரைக்கே எடுத்துக்காட்டப்பெற்றன. ஏனெனில், அமுதினையோ, நஞ்சி

37. குறள் - 204 (தீவினையெச்சம்)

விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்.[40]

தோன்றில் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று[41]

என்றாற்போன்ற அறவுரைகள் பலவும் இக்கருத்துபற்றியே எழுந்தனவாகும். இவ்வாற்றால் 'நன்னெறி இது; தீ நெறி இது' என்பதனைக் கல்வி கேள்விகளால் நன்குணர்ந்து, தீநெறியில் செல்லாது, நன்னெறியில் செல்வோரே உண்மை மக்களாவர்; அவ்வாறில்லாமல் மனம் போனவாறே போய் ஒழுகுவோர் மக்களாய்ப் பிறந்தும் மக்களல்லராய், விலங்கு முதலிய பிறவற்றோடு ஒப்பராவர்.

## (5) கன்மங்களின் மூவகை நிலை

நல்லனவும் தீயனவுமாக செய்யப்பெறும் கன்மங்கள் '**ஆகாமியம்**' என்ற பெயரால் வழங்கும். பின் அவை சூக்கும மாய் மறைந்து நிலைபெற்று நிற்கும்பொழுது '**சஞ்சிதம்**' என்ற பெயரைப் பெறும்.[42] இச்சூக்கும கன்மங்கள் பின்னர் இன்பதுன்பங்களாய் வந்து பயன்தரும் பொழுது '**பிராரத்தம்**' என்ற திருநாமம் பெறும். இந்த மூவகை நிலைபற்றி ஈண்டு விளக்குவோம். ஈண்டு '**கன்மம்**' என்ற சொல்லுக்குப் பதிலாக '**வினை**' என்ற சொல் கையாளப் பெறுகின்றது.

40. குறள்-410(கல்லாமை)

41. குறள்-236 (புகழ்)

42. ஆகாமியம்- எதிர்வினை, வருவினை மேல்வினை என்ற பெயர்களாலும்; சஞ்சிதம்-அபூர்வம், பழவினை, தொல்வினை, கிடைவினை என்ற பெயர்களாலும்; பிராரத்தம்-ஊழ்வினை, நுகர்வினை என்ற பெயர்களாலும் வழங்கப்பெறும்.

**ஆகாமிய வினை** பிராரத்தமாய்ப் பக்குவப் படும்வரை **சஞ்சிமாய்க்** கிடக்கும். இவற்றுள் பக்குவப்பட்டவை **பிராரத்த மாய்** வரும். வினை தன் பயனைத் தான் தருவதற்குரிய எல்லாச் சூழ்நிலைகளும் வாய்க்கப் பெறுவதே 'பக்குவப் படுதல்' என்பதாகும். வினை அச்சூழ்நிலைகளைத் தரும் பயன் '**சாதி, ஆயு, போகம்**' என்ற மூன்றாக நடைபெறும்.

(அ) **சாதி** என்பது பிறக்கும் இனம். சாதியினை 'வருணாசிரமம்' முறையில் கொண்டாலும் கொள்ளலாம். இக் காலத்தில் கூறப்பெறும் முற்போக்கு அடைந்த இனம், தாழ்த்தப் பட்ட இனம் முதலாகச் சொல்லப்பெறுவனவற்றைக் கொண்டா லும் கொள்ளலாம். இன்றைய நிலையில் உலகமளாவிய பார்வையைச் செலுத்தினால் எந்த நாட்டிலும் எந்த வகையி லேனும் எவையேனும் சில பிரிவுகள் இருந்தே வருதலைக் காண முடிகின்றது. இந்நிலைக்குரிய அரசியல், சமூக இயல் காரணங்களை இவண் ஆய்வதில் பயன் இல்லை. ஆனால் யார் என்ன முயற்சி செய்தாலும் 'வினையின் பயனாக அவை இருந்தே தீரும்' என்பதை மட்டிலும் நாம் உளம் கொண்டால் போதுமானது. இங்ஙனமே அரசியல் போர்வையில் – நாடகத் தில்? – யார் எங்கே எந்த வகையான முயற்சிகள் செய்யினும் வினையின் பயனான '**சாதிப்பிரிவு**' ஏதேனும் ஒரு வடிவத் தில் மக்களிடையே இருந்துதான் தீரும் என்பதை மட்டும் நாம் ஈண்டு உணர்ந்தால் போதுமானது.

இன்னும் இங்குச் '**சாதி**' என்பதை 'படைப்பு விசேடமா கக்' கொண்டாலும் கொள்ளலாம். படைப்பு ஒருவகையாகக் காணப்பெறாது. **மாணிக்கவாசகப் பெருமான்** கூறியது போல்,

> புல்லாய்ப் பூடாய்ப் புழுவாய்...தாவர
> சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்து[43]

43. திருவா. சிவபுரா. அடி (26-31)

என்று பல்வேறு வகையாகக் காணப்பெறுவதையே சிறப்பாகக் குறிக்கின்றது. இந்த வகையில் ஒவ்வோர் இனத்திலும் பல பிரிவுகள் காணப்பெறுகின்றன. இவையெல்லாம் வினையினால் ஆவனவே என்பதை ஈண்டு உளங்கொள்ளலாம்.

**(ஆ) ஆயு:** ஆயு என்பது ஆயுள்; வாழ்நாளைக் குறிப்பது. நீண்ட வாழ்நாள், குறுகிய வாழ்நாள் என்பனவும் வினையின் பயனேயாகும்.

**(இ) போகம்:** 'போகம்' என்பது ஒவ்வோர் உயிரும் அநுபவிக்கும் இன்பதுன்பங்களாகும். வினை செயற்படுங்கால் இவை எல்லாம் நடைபெறும் என்பது அறியப்படும். வாழ்க்கையில் எத்தனையோ இன்பதுன்ப நிகழ்ச்சிகளைச் சந்திக்க நேரிடலாம். அவற்றையெல்லாம் சவாலாக ஏற்றுக் கொள்ள வேண்டும். '**இடுக்கண் வருங்கால் நகுக**'[44] என்ற வள்ளுவப் பெருமானின் அறவுரையும் ஒருவகையில் இதுபற்றி எழுந்ததேயாகும்.

**பிராரத்த கன்மம் பயன்தரும் முறை:** பிராரத்த கன்மம் பயன்தருங்கால் தான் நேரே நின்று தாராது; எவையேனும் சிலவற்றை வாயிலாகக் கொண்டே தரும். அவ்வாயில்கள் பற்றிப் பிராரத்தம் '**ஆதியான்மிகம்**'. '**ஆதி பௌதிகம்**', '**ஆதிதைவிகம்**' என்று மூன்றாகப் பேசப்படும் சித்தாந்த வித்தகர்களால். இவற்றுள் தன்னாலேனும் பிற உயிர்களாலேனும் வருவன **ஆதியான்மிகம்**. எ-டு. மிதிவண்டி, அது போன்ற ஊர்திகளிலிருந்து வீழ்தல், குளியலறையில் வழுக்கி வீழ்தல் போன்றவை தன்னால் வருவன, அரவு தீண்டுதல் மாடு முட்டுதல், நாய் கடித்தல் போன்றவை பிற உயிர்களால் வருபவை. அடுத்து, நிலநடுக்கம், பெருமழை, பெருவெள்ளம், பெருவறட்சி, இடி வீழ்தல், தீமிகுதல், சூறாவளி அடித்தல்

44. குறள்-621 (இடுக்கண் அழியாமை)

முதலிய பூதச் செயல்களால் வருவன '**ஆதிபௌதிகம்**'. பேய், பூதம், தீய தெய்வங்கள், இயமன் முதலிய தேவர் பகுதியால் வருவன '**ஆதிதைவிகம்**'.[45]

**மேலும் சிலகருத்துகள்:** வினையைப்பற்றி மேலும் சில கருத்துகளை அறிந்து கொள்ளல் இன்றியமையாதது. சஞ்சிதமாய்க் கிடக்கும் வினைகள் பிராரத்தமாய் வரும் பொழுது முன்செய்த முறையில்தான் வரும் என்பதில்லை. முன் செய்தது பின்னும், பின்செய்தது முன்னுமாக வருதலும் உண்டு. அதற்குக் காரணம் அவற்றின் வன்மை மென்மைகளே யாகும். மிகப்பெரிய புண்ணியமும் மிகப்பெரிய பாவமும் செய்த பிறவியிலேயே பிராரத்தமாய் வந்து ப்யன் தரும்.

குற்றொ ருவரைக் கூறை கொண்டு
கொலைகள் சூழ்ந்த களவெலாம்
சொற்றொருவரைச் செய்த தீமைகள்
இம்மை யேவரும் மெய்ம்மையே[46]

என்ற சுந்தரர் திருமொழி இங்கு நினைக்கத்தக்கது. இக்கருத்தினையே திருவள்ளுவரும்,

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும் [47]

என்று குறிப்பிட்டுள்ளமையைக் காணலாம். பாவத்திற்கு இவ்வாறு கூறவே புண்ணியமும் அவ்வாறே செயற்படும் என்பதைக் கூறவேண்டுவதில்லை.

மற்றும், வினைகள் தாம் செய்யப்பெற்ற முறையிலன்றி முன்பின்னாக பின்முன்னாக வருவது அவ்வவ்வினையின் தன்மைக்கேற்ப நிகழ்வதேயாகும்.

45. சிவப்பிரகாசம்-29
46. சுந்.தே. 7.3:9
47. குறள் 319 (இன்னா செய்யாமை)

தொடங்கடையின் அடையாதே தோன்று மாதி[48]

என்பது சிவப்பிரகாசம். எடுத்துக்காட்டொன்று இதனைத் தெளிவாக்கும். உழவன் ஒருவன் பனை விதையை நடுகின்றான்; பின்னர் வாழைக்கன்றை நடுகின்றான்; அதன் பின்னர்க் கரும்பை நடுகின்றான்; அதன்பின்னர் கீரையை விதைக்கின்றான். இங்கு அவன் விதைத்த முறைப்படி பயன்தரும் என்று கருதுதல் தவறு என்பதை நாம் அறிகின்றோம். விதைகள் முன்பின்னாகப் பயனைத் தருதலுக்கு இந்த எடுத்துக்காட்டால் விளக்குவர் சிவப்பிரகாச ஆசிரியர்.

**இறைவன் கருணை:** 'உயிர்களால் இயற்றப்பெறும் வினைகள் தம் பயனைத் தாமே சென்று உயிர்கட்குத் தரும்' எனச் சமணரும் மீமாம்சகரும் கூறுவர். அவருள் மீமாம்சகர் 'கருமமே பிரம்மம்' எனக் கூறுதலால் **'கர்மப் பிரம்மாவாதிகள்'** எனப்படுவர். தாருகவனத்து முனிவர்கள் இக்கொள்கையுடையவராய் இருந்தமைபற்றியே 'சிவபெருமான் அவர்கள் முன் பிட்சாடண மூர்த்தியாய்ச் சென்று அவர்களைத் திருந்தச் செய்தார்' என்று புராணம் கூறும்.

உயிர்களால் இயற்றப்படும் வினை அறிவுடையதன்று; அஃது அறிவில்லாத சடம். ஆதலின் அதனால் தன்னைச் சார்ந்தவனைச் சென்று பற்ற இயலாது. அஃது எங்கோ ஓரிடத்தில் என்றோ ஒரு காலத்தில் ஏதோ ஓர் உடம்பு கொண்டு செய்யப்படுகின்றது. செய்யப்பெற்ற செயல் அப்பொழுது நிகழ்ந்து அழிந்து விடுகின்றது. ஆதலால் அது பின்னர் என்றாவது, எங்காவது, எந்த உடம்பிலாவது, பயன்தர இயலாது. அதனால் இறைவனே அவரவர் செய்யும் வினையை நடுவணாய் நின்று அவ்வவ்வினைக்குரிய பயனை உரிய காலத்தில் உரிய இடத்தில் உரிய உடம்பில் கூட்டுவிப்

48. சிவப்பிரகாசம்-29

பான். இதற்குக் காரணம் இறைவன் அவர் வினையைச் செய்வதும் ஆருயிர்கள் மீதுள்ள அளவற்ற கருணையே யாகும் என்பது அறியப்பெறும்.

**சித்தாந்த முறையில் விளக்கம்:** இதனைச் சித்தாந்த முறையில் மேலும் தெளிவாக்க முயலலாம். உயிர்கட்கு வினைப்பயனை ஊட்டுவித்தற்குக் காரணம் அவற்றைப் பிணித்துள்ள ஆணவமலத்தைப் போக்குதல் வேண்டும் என்னும் திருவுள்ளக் கருத்தேயாகும். 'உயிர்கள் எல்லாவற்றிற் கும் இறைவனே முதல்வன்' என்பதை மறந்து 'எல்லாவற்றிற் கும் தாங்களே முதல்வர்' என்று எண்ணும் செருக்கினால் செய்யப்பெறம் செயல்களே '**வினை**' எனப்படுவன என்பதை யும், இம்மறதியும் செருக்கும் ஆணவமல மறைப்பினால் வருவன என்பதையும் முன்னர்ப் பல இடங்களில் குறிப்பிடப் பட்டதை நினைவுகூரலாம். வினையை உயிர்கள் தவறாமல் அநுபவிக்க அநுபவிக்க அவை தம் அறியாமை நீங்கி இறைவனை அறியும் அறிவைப் பெறும். இறைவன் வினைப் பயனை ஊட்டுவித்தல் மருத்துவர் நோயாளிக்கு மருந்து கொடுத்தல் போன்றது. ஆணவமலம் உயிர்கட்கு உள்ள நோய் ஆகும். அதற்கு மருந்தாய் உள்ளவை வினைப்பயன்கள்; மருந்துகளில் சில இனிக்கும்; சில கசக்கும். நல்வினைப் பயனாகிய இன்பம் இனிப்பான மருந்தை உண்பது போன்றது; தீவினைப் பயனாகிய துன்பம் கசப்பான மருந்தை உண்பது போன்றது. இன்னும் சில வேளைகளில் அறுத்துக் கீறிச் சுட்டுச் செய்யும் சிகிச்சைகளும் நிகழும் சந்தர்ப்பங்களும் ஏற்படு கின்றன அல்லவா? இங்ஙனமே மிகப்பெரிய துன்பங்களையும் மிகப் பெரிய பயனாக இறைவன் ஊட்டுவிப்பான். ஆருயிர்கள் இவற்றைத் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும். இது கருதியே வள்ளுவர் '**இடுக்கண் வருங்கால் நகுக**'[49] என்று கூறிப்

49. குறள்-621 (இடுக்கண் அழியாமை)

போந்தாரோ என்று நினைக்கவும் தோன்றுகின்றது. சுருங்கக் கூறின், ஆருயிர்களின்மீது எல்லையற்ற கருணையுடைய இறைவன் ஆணவத்தின் ஆற்றல் கெடுதற்பொருட்டே வினையின் பயனை ஊட்டுவிக்கின்றான் என்பது சித்தாந்த உண்மை.

> **நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்**
> **அல்லற் படுவ தெவன்?[50]**

என்ற குறள் நமக்கு சிந்தனை விருந்தாக அமையட்டும்.

ஒருபிறப்பில் செய்த வினைமுழுவதையும் அடுத்த பிறப்பில் அநுபவித்து விடுதல் இல்லை. ஒவ்வொரு பிறவியிலும் பிராரத்தமாய் அநுபவிக்கும் வினை குறைவு; ஆகாமியமாய் செய்யப்பெறும் வினை மிகுதி. இங்ஙனம் பிறவிதோறும் அநுபவிக்கப்பெறாமல் சஞ்சிதமாய்க் கிடக்கும். வினைத் தொகுதியை நினைத்துப் பார்க்கலாம். அது பேரளவில் தேங்கிக்கிடப்பது புலனாகும். ஆகவே, பிராரத்தமாய்க் கழியும்பொழுது அதன் அழிவில் ஆகாமியம் தோன்றிவிடும் என்பது தெளிவாகின்றது. அஃதாவது ஒருவினை நசிக்கும் பொழுதே பலவினைகள் உற்பத்தியாகி விடுகின்றன என்பது தெளிவு. இக்காரணத்தால் காரிய கன்மம் '**நாசோற்பத்தி**' உடையது என்று கூறப்பெறும். 'நாசோற்பத்தி' என்பது ஒருவினை நாசமாகும்போது வேறு வினைகள் தோன்றுதல். இன்னும் காரியகன்மம் நீரோட்டம்போல் இடையறாது வருதலின் அது '**பிரவாக நித்தம்**' என்றும் வழங்கப் பெறும்.

வினை நாசத்தில் உற்பத்தியாகித் தொடர்ந்து வருதலை **அருணந்தி சிவம்,**

50. மேலது- 379 (ஊழ்)

மேலைக்கு வித்து மாகி
விளைந்தவை யுணவு மாகி
ஞாலத்து வருமா போல
நாம்செயும் வினைக ளெல்லாம்
ஏலத்தான் பலமாய்ச் செய்யும்
இதம்அகி தங்கட் கெல்லாம்
மூலத்த தாகி என்றும்
வந்திடும் முறைமை யோடே.[51]

என்ற பாடலால் விளக்குவர். ஓர் உழவன் செய்த பயிர் தன் பயனைக் கொடுக்குங் காலத்தில் அஃது அவனுக்கு உண வாய்ப் பயன்படுதலேயன்றி அடுத்த ஆண்டிற்கு விதையாக வும் அமைகின்றதல்லவா? இந்த உவமை கொண்டு 'நாசோற் பத்திக்' கருத்தைத் தெளியலாம்.

வினை இவ்வாறு நாசோற்பத்தி வருமாயின் உயிர் வினையினின்றும் நீங்குவதற்கு வழியே இல்லையா? என்ற வினா எழுகின்றது. ஆகாமியம் இல்லாமல் பிராரத்தத்தை அநுபவித்தல் இயலாது. இஃது உண்மையே யாயினும், அஃதின்றியும் பிராரத்தத்தை அநுபவித்தல் கூடும். அஃது எங்ஙனமெனில், பிராரத்தத்தை அநுபவித்தற்பொருட்டு நிகழும் முயற்சி விருப்பு வெறுப்புகளோடு கூடி நிகழும் பொழுதே '**ஆகாமியம்**' எனப் பெயர் பெற்று அடுத்த பிறவிக்கு வித்தாய் அமையும். இல்லையேல் அவ்வாறு ஆகாமியமாதல் இல்லை.

இதனை மேலும் தெளிவாக்குதல் வேண்டும். பிராரத்த வினை நன்மையையோ தீமையையோ தரும் பொழுது 'தானே நேரில் வந்து தருவதில்லை. "அஃது '**ஆதியான்மிகம்**' '**ஆதிபெளதிகம்**', '**ஆதிதைவிகம்**' ஆகிய மூவகை வாயிலா கவே பயன்தரும்" என்று முன்னர்க் குறிப்பிட்டதனை நினைவு

51. சித்தியார்-2.12

கூரலாம். அங்ஙனம் தரும்பொழுது அந்நன்மை தீமைகளை 'முற்பிறப்பில் நாம் செய்த வினையின் பயன்களே இவை' என்று கருதுதல் வேண்டும். அவ்வினைகள் தம் பயனைத் தருதற்கு வாயிலாகக் கொண்டவைகளே 'இம்முன்னிலைப் பொருள்கள்' என்றும் உணர்தல் வேண்டும். இங்ஙனம் உணராமல் அப்பயன்கள் அப்பொழுதுதான் புதியனவாய் வருதல்போல் கருதித் தம்மையும் பிறரையும் அந்நன்மை தீமைகளுக்குக் காரணங்களாக வைத்து எண்ணுதல் தவறு; பெருந்தவறு. இஃது 'எய்தவன் இருக்க அம்பை நோவது' போன்றதாகும். இம்முறையில் விருப்பு வெறுப்புகள் கொண்டு நட்பையோ பகைமையையோ கொள்ளும் முறையில் முயற்சிகள் நிகழுமாயின் அவை '**ஆகாமியம்**' என்னும் வினையால் மேலும் மேலும் வரும் பிறவிகட்கு வித்தாகும். இங்ஙனம் கருதாமல் 'இவை முன் செய்த வினைப்பயன்கள்; இவற்றிற்கு முன்னிலையாக நிற்பவர்கள் அவ்வினைப் பயன்கள் விளைவதற்கு வாயில்களே; நாம் செய்த வினையை நாம் அநுபவிக்கின்றோம்; அநுபவித்தேயாக வேண்டும்; எய்தவன் இருக்க அம்பை நோவதால் பயன் என்ன?' என்று எந்தவித விருப்பு வெறுப்புமின்றி அமைவோமாயின், பிராரத் தம் உயிரைத் தாக்காது உடலளவாய் கழியும். இந்நிலையில் வினை 'நாசோற்பத்தி' யாதல் இல்லை. ஆகவே, உயிர்கட்கு இவற்றால் வினைத் தொடர்பு நீங்குதலும் உண்டு என்று தெளியலாம்.

வினையைக் கூட்டுவிப்பவன் இறைவன். இதனை **மணிவாசகப் பெருமான்,**

முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்னின்றான்
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன்—தென்னன்

பெருந்துறையில் மேய பெருங்கருணை யாளன்
வருந்துயரம் தீர்க்கும் மருந்து,[52]

(முன்னைவினை இரண்டு—சஞ்சிதம், பிராரத்தம்; முன்னின்றான்—குருவாக நின்றவன்; வருந்துயரம்—ஆகாமிய வினையாகிய துன்பம்)

என்று கூறியதனால் தெளியலாம். ஒருவர் பிறரது தீவினைப் பயனை ஏற்றுக் கொள்ள விரும்பினும், தாம் செய்த நல்வினைப் பயனைப் பிறருக்குத் தரவிரும்பினும் இறைவனது ஆணை அதனை முற்றுவிக்கும் என்பது அறியப்படும்.

**ஒரு முக்கியக்கருத்து:** இறுதியாக வினைபற்றி ஒரு முக்கியமான கருத்தினை அறிவோம். 'உயிர்கட்கு வினைக் கீடான உடம்பு கொடுக்கப்படும்' என்பதில் 'உடம்பு' என்பது பருஉடம்பையே (தூலதேகம்) குறிக்கும். பருஉடம்பு கண்ணுக் குப் புலனாவது. இந்த உடம்பில்தான் மக்கள், விலங்கு, பறவை, தாவரம் முதலிய வேறுபாடுகள் உள்ளன. இப்பருவுடம்பிற்கு வேறாய் நுண்ணுடம்பு (சூக்குமதேகம்) ஒன்று உண்டு. அது கண்ணுக்குப் புலனாகாது. இதன்கண் அவ்வேறுபாடுகள் இல்லை. ஆகவே, வினைக்கேற்ப உயர்ந்ததும் தாழ்ந்ததுமாகக் கொடுக்கப்பெறும் உடம்புகள் என்பன பருவுடம்புகளேயாகும் என்பது அறியப்படும். ஆணவ மலத்தால் கட்டுண்டு கேவல நிலையில் கிடக்கும் ஆன்மாக்கட்கு இறைவன் முதற்கண் நுண்ணுடம்பையே கூட்டுவிப்பான். இதில் உயர்வு தாழ்வு இல்லை. நுண்ணுடம் பினால் சிறிது அறிவும் இச்சையும் செயலும் விளங்கப்பெற்று ஆன்மாக்கள் தத்தம் தகுதி நிலைகட்கேற்ப நல்லனவும் தீயனவுமான வற்றை அளித்தும் இச்சித்தும் செய்ய முயலும். இம்முயற்சியே அவற்றிற்கு வினையாய் அமையும்.

52. திருவா. திருவெண்பா-4

அவ்வினைக்கேற்ப பரு உடம்பை இறைவன் அவற்றிற்குக் கூட்டுவிப்பான். பிறப்புகள் தொடர்ந்து நிகழும். பருவுடம்பு நுண்ணுடம்பு முதலியவற்றின் இயல்புகள் பின்னர் விளக்கப் பெறும்.

முதற்கண் நுண்ணுடம்பு வரும்பொழுது ஒவ்வோர் ஆன்மாவும் **தன்தன் தகுதிக்கு** ஏற்ப ஒவ்வொன்றையும் இச்சிக்கும்– விரும்பும்– என்று முன்பு கூறப்பெற்றது. இத்தகுதி பற்றி ஈண்டுச் சில சொற்கள்: 'உயிர்கள் தூல அறிவை உடையன' என்பது அனைத்திற்கும் பொதுத்தன்மையாகும். ஆயினும், ஆத்தூல அறிவும் உயிர்தோறும் வேறுவேறாகவே அமைந்துள்ளது. இந்த வேறுபாடே அவற்றின் சிறப்பியல்பு ஆகும். இச்சிறப்பியல்பிற்கேற்ப ஆணவ மலப்பிணிப்பும் உயிர்தோறும் வேறு வேறாகவே அமைந்துள்ளது. எல்லா உயிர்களும் ஒருகாலத்தில் வீடுபேறு அடையாமல் வேறு வேறு காலத்தில் அதனை அடைவதற்கும், விஞ்ஞானகலர், பிரளயாகலர் சகலர் என்னும் பிரிவுகட்கும் ஆணவ மலப் பிணிப்பின் வேறுபாடேயாகும். விஞ்ஞானகலர்முதலிய ஒவ் வொன்றிலும் உள்ள உயிர்களிலும் உயிர்தோறும் ஆணவ மலப் பிணிப்பு வேறுவேறு வகையாகவே உள்ளது. இந்தப் 'பிணிப்பு வேறுபாடு'தான் தகுதி அல்லது பக்குவம் என்பது அறியப்படும். நுண்ணுடம்பு கிடைத்தவுடன் உயிர்கள் இத் தகுதிக்கேற்பவே அறிவு விளக்கம் பெறும். இவ்விளக்கத்திற் கீடாகவே இச்சையும் முயற்சியும் நிகழும். இதனால் உயிர்தோறும் வினைகள் வேறு வேறாகவே அமையும். இவ்வினைக்கேற்பவே அவையும் வேறு வேறு பிறப்பினையும் அடையும் என்பது உணரப்பெறும் ஆக, கன்மத்தின் (வினையின்) இயல்பு ஒருவாறு விளக்கப் பெற்றது.

## (6) மாயா மலம்

ஆணவம், கன்மம் என்பவற்றின் பின் சொல்லப்படும் மலம் மாயை என்பது. பானைக்கு மண்போல உலகத்திற்கு மூலகாரணம் **மாயை** – மாயா மலம். ஆதலின் உலகில் காணப்படும் பொருள்கள் யாவும் இதன் காரியமேயாகும். இக்காரியங்கள் பலவற்றையும் சைவசித்தாந்தம் **தனு, கரணம், புவனம், போகம்** என்று நான்காக வகுத்துப் பேசும். தனு என்பது பருவுடம்பு; கரணம் என்பது அந்தக்கரணம்; மனம் முதலிய உட்கருவிகள்; புவனம் என்பது அவ்வுடம்புகள் இயங்குவதற்கு அமைந்த இடம். போகம் என்பது, உயிர்கள் தனுகரணங்களைக் கொண்டு இன்ப துன்பங்களை நுகரும் நுகர்ச்சிப் பொருள்கள்.

**தாத்துவிகங்கள்:** மாயை அதிசூக்குமப் பொருள். ஆதலின் தனு கரண புவன போகங்களாகிய அதிதூலப் பொருள்கள் நேரே அதன் காரணமாக வரமாட்டா. ஆதலால் தத்துவங்கள்[53] எனப்படும் முதல்களே (மூலப்பொருள்களே) முதற்கண் மாயையினின்று தோன்றும்; பின்பு, அத்தத்துவங் களினின்றும் அவற்றின் காரியமாக தனு கரணபுவனபோகங் கள் தோன்றும்; அஃதாவது உலகம் தோன்றும். பின்பு அத் தத்துவங்களினின்றும் தோன்றுவனவற்றைத் '**தாத்துவிகம்**' என்று வழங்குவர். தத்துவங்களினின்றும் உலகம் தோன்றுத லால் உலகத்திற்கு நேரே முதற்காரணமாக இருப்பவை தத்துவங்களேயாகும். தத்துவங்கள் மாயையின் காரியங்களாத லின், உலகத்திற்கு முடிவான முதற்காரணம் மாயையாகும் என்பது உளங்கொள்ளப்படும்.

53. தத்துவம் என்பதற்குப் பிறமதங்களில் 'பொருள்' என்பதே கருத்து. சைவ சித்தாந்தத்துள் 'தத்துவம்' என்பதற்குக் 'கருவி' என்பதுதான் பொருள்.

**மூவுலகம்:** உயிர்களின் ஆணவப்பிணிப்பு மூன்று வகையாக இருத்தலால், உயிர்கள் மூன்றுவகையானவாறு இருக்கும் என்பதை நாம் அறிவோம். ஆதலால் அவற்றின் பொருட்டு அமைந்த உலகமும் மூன்று வகையினவாக அமைந்துள்ளது. அவை தூய உலகம், கலப்பு உலகம், மாசுலகம்' என்பனவாகும். அவை முறையே **'சுத்தப் பிரபஞ்சம், மிச்சிரப் பிரபஞ்சம், அசுத்தப் பிரபஞ்சம்'** எனப்படும். மயக்கம் தாராதொழிதல், மயக்கத்தைத் தருதல் என்பது பற்றியே சுத்தம், அசுத்தம் என்ற சொற்கள் கையாளப் பெறுகின்றன. ஆகவே, சுத்தப் பிரபஞ்சம் மயக்கத்தைத் தாராது; அசுத்தப் பிரபஞ்சம் மயக்கத்தைத் தரும் என்பது தெளிவாகப் புலனாகும். '**மூவுலகம்**' என்பது சித்தாந்தத்தில் கொள்ளப்படும் உண்மைப்பொருள் இங்ஙனம் கூறப்பெறும் மூவகை உலகங்களையேயாகும் என்பதைக் கருத்தில் இருத்துதல் வேண்டும்.

**மும்மாயை:** காரியமாய் உள்ள உலகம் இவ்வாறு மூவகைப்பட்டிருத்தலால் இவற்றிற்குக் காரணமான மாயையும் மூவகைப் பட்டிற்கும் என்பது தெளிவு. இவ்வாறு மூன்றாகக் கூறுபட்டு நிற்கும் மாயை மூன்றும் முறையே **சுத்தமாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை** என்ற பெயர்களால் வழங்கப் பெறும். இவை மூன்றும் '**மும்மாயை**' ஆகும். பிரகிருதிமாயையை '**மூலப் பிரகிருதி**' என்று வழங்குவர்.

**மாயை – விளக்கம்:** 'மாயை' என்றால் என்ன? உலகில் பலவகையாகக் காணப்படும் பொருள்களாய்ப் பரிணமிக்கக் கூடிய பலவகைச் சக்திகளின் தொகுதியே '**மாயை**' எனப்படுவது. இச்சக்திகள் உயிர்களைப் பற்றுமிடத்து அவ்வுயிர்களிடத்து இயற்கையாகவுள்ள ஆணவப்பிணிப் பினால் சுத்தமும் மிச்சிரமும் அசுத்தமாகிவிடும். எனவே, மாயை சுத்தமாய் இருந்து மயக்கத்தைத் தாராதொழிவதற்கும்

அசுத்தமாய் இருந்து மயக்கத்தைத் தருவதற்கும் உயிர்களைப் பிணித்திருக்கும் ஆணவமலத்தின் வன்மை மென்மைகளே காரணம் என்பது தெளிவு. மாயைக்கு இயல்பாய் உள்ள தன்மை விளக்கத்தைத் தருவதாகும். ஆயினும், அது மயக்கத்தைத் தருவது ஆணவத்தின் சார்பினாலாகும் என்பது தெளிவு. இது வெயிலில் வைக்கப்பெற்றிருக்கும் கரும்புச்சாறு புளிப்பை அடைவது போலாகும். இனிப்பையுடைய பால் புளிப்பையுடைய தயிராகி விடுதல் போல்வதாகும் என்றும் சொல்லலாம்.

**பிணிப்பதால் விளைவுகள்:** 'விஞ்ஞானகலர்' என்னும் ஒரு மலம் உடையவர்களை ஆணவம் மென்மையாகப் பிணித்திருத்தலால் அவர்களை அடைகின்ற மாயை அசுத்தமாய் மயக்கத்தைச் செய்யாது; சுத்தமாகவே இருக்கும். 'பிரளயாகலர்' என்னும் இருமலம் உடையவர்களை ஆணவம் இடைநிலையாகப் பற்றியிருத்தலால், அவர்களை அடைகின்ற மாயை சிறிதளவு அசுத்தமாகி சிறிதளவு மயக்கத்தைச் செய்யும். 'சகலர்' என்னும் மும்மலம் உடையவர்களை ஆணவம் வன்மையாகப் பற்றியிருத்தலால், அவர்களை அடைகின்ற மாயை அசுத்தமாகி மயக்கத்தைச் செய்யும். எனவே, ஒன்றேயாகிய மாயை ஆணவ மலத்தின் வேறுபாட்டினால் 'சுத்தம், மிச்சிரம், அசுத்தம்' என மூன்றாகி விடுகின்றது என்பதை உணரலாம். இக்கூறியவற்றால் சுத்தப் பிரபஞ்சம் விஞ்ஞானகலர்க்கு உரியது என்பதும், அசுத்தப் பிரபஞ்சம் சகலர்க்கு உரியது என்பதும் மிச்சிரப் பிரபஞ்சம் பிரளயாகலர்க்கு உரியது என்பதும் அறியத்தக்கவை.

**மேலும் தெளிவாக்கம்:** இங்குக் கூறியவற்றை மேலும் தெளிவாக்கலாம். ஒருமலம் உடையவர், இருமலம் உடையவர், மும்மலம் உடையவர் என்றெல்லாம் சொல்வது மேற்குறிப்

பிட்ட மயக்கம் இன்மையும் மயக்கம் உண்மையும் பற்றியே யாகும். அதாவது விஞ்ஞானகலர்க்கு ஆணவப் பிணிப்பு மென்மையாயிருப்பதால் அவர்களுக்குரிய கருவிகரணங்கள் மயக்கத்தை விளைவிப்பதில்லை. ஆகவே, அவற்றைக் கொண்டு ஈட்டியும் நுகர்ந்தும் வரும் வினைகளும் மயக்கத் தைச் செய்யா. இதுபற்றியே 'அவர்கட்கு மாயைக் கன்மங்கள் இல்லை' என ஆகமங்கள் கூறுகின்றனவேயன்றிச் சுத்த மாயையும் சுத்த கன்மமும் இல்லை என்னும் கருத்தினாலன்று. இன்னும் 'விஞ்ஞானகலர் பிரளயாகலர்கட்கு மயக்கம் இல்லை' என்பதற்குச் 'சகலர்க்கு உள்ள மயக்கம் போன்ற மயக்கம் இல்லை' என்பதே கருத்தாகும். ஆணவப்பிணிபபு சிறிதேனும் உள்ளவரையில் மயக்கம் சிறிதாயினும் உளதாகுமேயன்றி அறவே நீங்காது. நீங்குமெனின் விஞ்ஞான கலராகும் நிலையே முத்தி நிலையாய் விடும். அது பொருந்தா மையால், விஞ்ஞானகலர்க்கு 'மாயை, கன்மங்கள் இல்லை' என்பதற்குப் பொருள் 'அசுத்த மாயையும் அசுத்த கன்மமும் இல்லை' எனபதாகும். இஃது இனிது விளங்குதற்பொருட்டே சுத்த மாயையை '**மாயை**' என்று குறியாது '**விந்து**' என்றே குறித்தல் பெரும்பான்மை வழக்கமாய் உள்ளது. இங்ஙனமே சுத்த மாயையும் அடைமொழியின்றி 'மாயை' என்றே குறித்துச் சொல்லுதல் பெரும்பான்மை வழக்காய் உள்ளது. சுத்த மாயை அசுத்த மாயை என்ற இரண்டையும் இரண்டு தனிப் பொருள்களாகக் கூறுதலும் இதுபற்றியேயாகும். 'பிரளயாகலர்க்கு மாயை இல்லை' என்பதற்கும் இவ்வாறு 'அசுத்த மாயை இல்லை' என்பதே பொருளாகும்.

இக் கூறியவற்றால் சகலர்க்கு உரிய பிரகிருதி மாயையே உண்மையில் அசுத்த மாயையாகின்றது. ஆயினும் அஃது இயற்கையில் அவ்வாறு அமையாது. மிச்சிரமாயையின் பரிணாமமாய் அமைவதால் அது தனித்து ஒரு மாயையாகக்

கூறப்பெறாமல் 'பிரகிருதி' என்னும் ஒருதத்துவமாகக் கூறப் பெறுகின்றது. ஆகவே, '**அசுத்தமாயை**' எனக்குறியிட்டு வழங்கப்பெறும் மாயை உண்மையில் **மிச்சிரமாயையே** என்பது அறிந்து தெளியப்படும். மும்மலமுடைய சகலர்க்கும் சுத்தமாயா தத்துவத்தோடு தொடர்பு இல்லை. ஆயினும் மிச்சிரமாயா தத்துவத்தோடு தொடர்பு உண்டு. இதுபற்றியும் மிச்சிரமாயை '**அசுத்தமாயை**' எனவும் வழங்கப் பெறுகின்றது.

**ஓர் உண்மை:** சுத்தமாய் உள்ள பொருள் அசுத்தமாகு மாயின் அது தனது வியாபகத்தை[54] இழக்கும். காரணம் அசுத்தமானது ஆணவத்தின் தொடர்பாகும். ஆணவத்தின் தன்மை அணுத்தன்மை உடையதாகச் செய்வது என்பதை நாம் அறிவோம். அதனால் ஆணவத்தைச் சார்ந்த பொருள் தனது வியாபகத்தை இழப்பதாகின்றது. இதனால் சுத்த மாயை வியாபகமும், அசுத்த மாயை வியாப்பியமும்[55] ஆகின்றன. இக்காரணத்தால் சுத்தமாயை '**ஊர்த்துவமாயை**' [56] என்றும், அசுத்தமாயை '**அதோமாயை**'[57] என்றும் வழங்கப்பெறுகின் றன. 'மேல், கீழ்' என்பன ஈண்டு வியாபக வியாப்பியங்களைக் குறிக்கும் என்பது நன்கு உணர்ந்து தெளியப்படும்.

மற்றும், 'ஊர்த்துவமாயை, மகா மாயை, குடிலை, விந்து' என்பன சுத்தமாயையின் வேறு பெயர்கள். 'அதோமாயை, மாயை, மோகினி' என்பன அசுத்தமாயையின் வேறு பெயர் கள். 'மான், அவ்யக்தம்' என்பன பிரகிருதிமாயையின் வேறு பெயர்கள். இங்ஙனம் மும்மாயைகளும் தெளிவாக விளக்கப் பெற்றன.

---

54. வியாபகம்-விரிவு
55. வியாப்பியம்-அடக்கம்
56. ஊர்த்துவம்-மேல்
57. அதோ-கீழ்.

சுத்தமாயை, 'மாயை' எனப்படாமல் '**விந்து**' எனப்படுதலின் அதன் காரியங்கள் '**வைந்தவம்**' எனப்படும். அசுத்த மாயையே '**மாயை**' எனப்படுதலின், அதன் காரியங்கள் '**மாயேயம்**' எனப்படும். பிரகிருதி மாயையின் காரியங்கள் '**பிராகிருதம்**' எனப்படும். இவற்றினின்றும் தத்துவங்கள் தோன்றும்.

## (7) காரணங்களிலிருந்து காரியங்கள்

தத்துவங்களின் தோற்றம் பற்றி விளக்குவதற்கு முன்னர் காரணங்களினின்றும் காரியங்கள் தோன்றும் முறையை அறிந்து கொள்ளுதல் இன்றியமையாதது. அதனைக் காண்போம்.-

ஒரு பெரிய வட்டரங்கு நிறுவனத்தார் (Circus Company) ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத்திற்குச் சென்று வட்டரங்கு அமைக்க என்ன செய்கின்றனர்? மிகப் பெரிய துணியைக் கொண்டு கூடாரம் அமைக்கின்றனர். எனவே கொட்டகைக்குத் துணி காரணாமாகின்றது. துணியாகிய காரணம் எப்படி வீடாய்க் காரியப்பட்டது? முன்பு யானையின் மீதும் வண்டிகளின் மீதும் ஏற்றப்பட்டு மூட்டையாய் ஒடுங்கிக் கிடந்து துணிகள் பின்பு, விரிந்து பெரிய மாளிகை போன்ற கொட்டகையாய்க் காட்சி யளிக்கின்றன. இவ்வாறு சுருங்கியிருந்த காரணப்பொருள் விரிந்து நின்று காரியமாதலை '**விருத்தி**' என்ற பெயரால் வழங்குவர். இதற்கு 'படம் குடிலானாற்போல' என்று எடுத்துக் காட்டு தருவர். படம்—துணி; குடில் – குடிசை.

மண் பானையாதல், பொன் அணியாதல், பால் தயிராதல், நெல் பொரியாதல், மரங்கள் இருக்கையாதல் போன்ற உருமாறுதல் '**பரிணாமம்**' என்ற பெயர்பெறும். இவ்வாறன்றி

நூல் ஆடையாதல், மலர் மாலையாதல் போல்வன '**ஆரம்பம்**' எனப்படும். ஏனெனில் நூல்களையோ மலர்களையோ ஒருவழியாகக் குவித்துவிட்டால் ஆடையும் மாலையும் ஆகி விடமாட்டா. ஒவ்வொன்றாக எடுத்து ஒன்றன்பின் ஒன்றாக முறையே வைத்து இணைத்தால்தான் ஆடை உருவாகும்; மாலையும் உண்டாகும். ஆகவே இங்கு 'ஒன்று, இரண்டு, மூன்று... என்று தொடங்கி முறையே தொடர்ந்து காரியப் படுதலால் இஃது '**ஆரம்பம்**' என்று திருநாமம் பெறுகின்றது.

இனி, நெல் பொரியாதல் எள் குவியலாதல் போல்வன. '**சமுதாயம்**' என்ற பெயரால் வழங்கும். சமுதாயம் – கூட்டம். இவை மேற்குறிப்பிட்டவை போல் 'ஒன்று, இரண்டு, மூன்று... என்று ஒன்றன்பின் ஒன்று' என்ற முறையில் **தொடராமல்** பல **ஒருங்கு திரண்டு** காரியம் ஆகின்றன. அதனால் இக்காரியப்பாடு '**ஆரம்பம்**' அன்று. இங்ஙனம் 'ஆரம்பத்திற் கும்' 'சமுதாயத்திற்கும்' வேறுபாடு காண்க.

இனி, இப்பி வெள்ளியாதல், கயிறு பாம்பாதல் போல்வன உண்மையில் காரணம் காரியமாக மாறுவன அல்ல; காண்போனுக்கு உள்ள மயக்கம் காரணமாக அவை வெறுந்தோற்றம் மாத்திரத்தில் அவ்வாறு காட்சியளிக்கின்றன. அதனால் இவை போல்வன '**விவர்த்தனம்**' எனப்படும். விவர்த்தனம் – வேறு நிகழ்ச்சி.

மேற்கூறியவற்றுள் ஒரு சிலவற்றை மேற்கொண்டு பிறசமயங்கள் உலகத்தின் காரியப்பாட்டை ஒவ்வொரு விதமாக விளக்கும். அவை ஈண்டு காட்டப்பெறவில்லை. சைவ சித்தாந்தம் சுத்த மாயையின் காரியம் '**விருத்தி**' என்றும், அசுத்தமாயையின் காரியம் '**பரிணாமம்**' என்றும் கூறும். பால் தயிராதல் பூரண பரிணாமம். வெண்ணெய் திரளுதல், சாணம்

புழுவாதல் **'ஏகதேசப் பரிணாமம்'**. சைவசித்தாந்தம் அசுத்த மாயைக்குக் கூறும் பரிணாமம் 'ஏகதேசப் பரிணாமம்' ஆகும்.

**இருவகை உலகங்கள்:** உலகம் சொல் உலகம், பொருள் உலகம் என இருவகையாய் உள்ளது. சொல் உலகத்தை **சத்தப்பிரபஞ்சம்** என்றும், பொருள் உலகத்தை **'அர்த்தப் பிரபஞ்சம்'** என்றும் கூறுவர். இவற்றுள் சொல் உலகம் எழுத்துகளை உறுப்பாகக் கொண்ட சொற்களும் சொற்றொடர்களுமாகும். எழுத்துகள் **'வன்னம்'** (வர்ணம்) என்றும், சொற்கள் **'பதம்'** என்றும், வடமொழிப் பெயர்களைப் பெறும். .சொற் றொடர்களில் சிறப்புடையன மந்திரங்களாகும். அதனால் **மந்திரம், பதம், வன்னம்** என்று சத்தப் பிரபஞ்சத்தை மூவகைப்படுத்திப் பேசுவர். வடமொழி மரபும் சைவமரபும் பற்றி வன்னம் ஐம்பத்தொன்று என்றும், பதம் எண்பத்தொன்று என்றும், மந்திரம் பதினொன்றென்றும் சிவாகமங்கள் வரையறை செய்கின்றன. இவண் கூறப்பெற்ற எழுத்து, சொல், சொற்றொடர்கள் எல்லா மொழிகளிலுமுள்ள எழுத்துகளும் சொற்களும் நூல்களும் அடங்கும் என்பது சிவாகமங்களின் கொள்கையாகும்.

சத்தப்பிரபஞ்சம் அறிவுக்குக் காரணமாய் நிற்றலின் அது சுத்தமாயையின் காரியமாகும். ஆகவே, சுத்தமாயையின் காரியமே சொற்பிரபஞ்சம், பொருட்பிரபஞ்சம் என்று இருவகை யாகின்றது என்பது அறியப்படும். அசுத்தமாயை யின் காரியங்களும் பிரகிருதி மாயையின் காரியங்களும் பொருட்பிரபஞ்சம் என்ற ஒன்றேயாதல் என்பதும் அறிந்து தெளியப்படும்.

## (8) சுத்த மாயையின் தத்துவங்கள்

சுத்தம், அசுத்தம், பிரகிருதி என்ற மும்மாயைகளில் மிக நுண்ணியதாய் உள்ளது சுத்தமாயை. இதிலிருந்து சொற் பிரபஞ்சமும், பொருட்பிரபஞ்சமும் தோன்றுகின்றன.

### (i) சொல் உலகம்

சொல் உலகம் '**வாக்கு**' எனப்படும். சொல் என்பது இங்கு நாம் காதினால் கேட்கும் ஓசையையன்று; அவ்வோசை யின் வழியே எழுந்து நமக்குப் பொருளுணர்வை உண்டாக்கு கின்ற ஆற்றலே என்பதாகும். சொற்கள் பொருளைப் பற்றுக் கோடாகக் கொண்டே நிகழும். இங்கு தோன்றும் வாக்குகள் **நால்வகை**யாகும். அவை: **சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி** என்பனவாகும். இவை நான்கும் ஒன்றில் ஒன்று தூலமாய் வளர்ச்சியுற்று நிற்கும். எனவே, சூக்குமை முதலாகக் கூறுதல் தோற்றமுறையாகும். ஒழுக்கமுறையில் கூறின் வைகரி முதலாக அமையும். இனி, ஒவ்வொன்றையும் பற்றி விளக்குவோம்.

**(அ) சூக்குமை வாக்கு:** சுத்தமாயையின் முதல் விருத்தியாய் முதற்கண் நிற்பது. இதற்கும் இதன் காரண நிலைக்கும் வேறுபாடு மிகுதியாக இல்லை. காரணநிலையி லுள்ள சுத்தமாயை ஏனைய மூவகை வாக்குகளாய் விருத்திப் படுவதற்குத் தகுதி பெற்று நிற்கும் நிலையே சூக்குமை வாக்காகும். இது '**பரை**' என்றும் '**நாதம்**' என்றும் சொல்லப்படும். இதற்குப் பற்றுக் கோடாதல் பற்றியே சிவதத்துவத்திற்கு '**நாதம்**' என்பது பெயராயிற்று. இது காரணநிலையிலேயே நிற்பதால் அழிவின்றி நிற்பதாகவும் சொல்லப்படும்.

(ஆ) **பைசந்தி வாக்கு:** மேற்குறிப்பிட்ட சூக்குமை வாக்கு பின் மேலும் விருத்திப்பட்டு **பைசந்தி வாக்காகும்.** அதாவது, சொல்வடிவம் சிறப்பு வகையில் விளங்காது பொதுவகையில் விளங்கி நிற்கும் நிலையாகும் இது. 'பைசந்தி' என்பது '**பஸ்யந்தி**' என்ற சொல் வடிவம் திரிந்தநிலை. இதற்கு 'விளங்குவது' என்பது பொருளாகும். சூக்குமை வாக்குபோல் முற்றிலும் விளங்காது நிற்றல் இன்றி, ஒருவாறு விளங்கி நிற்பதால் இதற்கு 'பைசந்தி' என்று பெயர் வந்தது. இது விளங்கியும் விளங்காதும் நிற்பதற்கு மயில் முட்டையிலுள்ள நீரினை உவமை கூறுவர். மயில் முட்டையிலுள்ள நீரில் மயிலினிடத்துள்ள ஐவகை நிறங்களும் தோன்றியும் தோன்றாதும் நிற்கும். 'சூக்குமை', 'பைசந்தி' என்ற இருவகை வாக்கிலும் மொழிவேறுபாடு இல்லை.

(இ) **மத்திமை வாக்கு:** பைசந்தி என்னும் நிலையில் இருந்த வாக்கு சொல் வடிவில் இனிது விளங்கித் தோன்றி, அதன்பின் எழுத்து வடிவில் நன்கு விளங்கித் தோன்றி, அதனை அவ்வாறே சொல்ல எழும் முயற்சியைப் பெற்று '**உதானன்**' என்னும் காற்றால் உந்தப்பட்டு மிடற்றளவில் (கண்டத்தளவில்) மெல்ல ஒலித்து நிற்பது **மத்திமை வாக்காகும்.** பைசந்திக்கும் வைகரிக்கும் இடைநிற்றல்பற்றி இது 'மத்திமை' என்ற பெயர் பெற்றது.

(ஈ) **வைகரி வாக்கு: 'உதானன்'** என்னும் காற்றால் உந்தப்பட்டு மிடற்றளவில் நின்ற சொற்கள் '**பிராணன்**' என்னும் காற்றால் நன்கு வெளிப்படுத்தப்பெற்றுச் சொல்லு வோன் செவிக்கும் கேட்போன் செவிக்கும் புலனாவது வைகரி வாக்காகும். இது சொல்லுவோர் செவிக்கு மட்டும் புலனாகி நின்ற அளவில் நிற்பின் '**சூக்கும வைகரி**' என்றும், கேட்போர் செவிக்கும் புலனாகின் '**தூல வைகரி**' என்றும் வழங்கப்பெறும். இது பல், இதழ், நா, அண்ணம், மூக்கு

என்னும் உறுப்புகளில் பட்டுச் சிதறிப் போவதால் 'வைகரி' எனப்பட்டது. வைகரி –விகாரம் உடையது. விகாரம் என்பது எழுத்துகளின் தோற்றக் கேடுகள். 'மத்திமை, வைகரி' என்ற இருவகை வாக்குகளும் மொழி வேறுபாடுகளை உடையன. இங்ஙனம் சுத்தமாயை ஒன்றே நால்வகை வாக்குகளாய் விருத்தி பற்றி நிற்கும் என்பது அறியப்படும்.

இந்த நால்வகை வாக்குகளாலே யாதோர் உயிர்க்கும் சவிகற்பஞானம்[58] (சிறப்புணர்வு) உண்டாகும். இவை இல்லையேல் நிருவிகற்ப ஞானம்[59] (பொதுவுணர்வு) உண்டாகுமே யன்றி சவிகற்ப ஞானம் உண்டாக மாட்டாது. இந்த வாக்குகளின்றிப் பொருள்களை உணரும் ஆற்றல் எவர்க்கேனும் என்றாவது உளதாகுமாயின் அவர் அன்றே பாசத்தில் நீங்கிய முத்தராவார். இதனால் எல்லா உயிர்கட்கும் சவிகற்பஞானம் உண்டாவதற்கு இவ்வாக்குகள் இன்றியமையாது வேண்டப்படும் என்பது தெளிவாகும். இங்ஙனம் தெளிவாகவே இவ்வாக்குகள் விஞ்ஞானகலர் பிரளயாகலர், சகலர் என மூவகைப்பட்ட ஆன்ம வர்க்கத்தினர்க்கும் முறையே ஒருவரைவிட மற்றவர்க்குத் தூல நிலையைப் பெற்றுப் பயன் தரும் என்பது புலனாதல் அறியப்படும்.

மூவகை அணுக்க ளுக்கும் முறைமையின் விந்து ஞானம்
மேவின தில்லை யாகில் விளங்கிய ஞானம் இன்றாம்

என்றும்,

ஓவிட விந்து ஞானம் உதிப்பதோர் ஞானம் உண்டேல்
சேவுயர் கொடியி னான்றான் சேவடி சேர லாமே[60]

---

58. சவிகற்ப ஞானமாவது, ஒரு பொருளைப்பற்றி அதன் கூறுபாடுகள் பலவற்றையும் உணரும் உணர்வு.
59. நிருவிகற்ப ஞானமாவது, பொருளின் கூறுபாடுகளின்றி 'இஃது ஒரு பொருள்' என்ற அளவில் உணர்வது.
60. சித்தியார். 1-26

என்று விளக்குவர் **அருணந்தி சிவம்.**

இதுகாறும் கூறியவற்றால் உயிர்களைப் பிணித்திருக்கும் பலவகைப் பிணிப்புகளில் வாக்குகளே நீக்குதற்கரிய பெரும் பிணிப்பாகும் என்பதும், இப்பிணிப்பு நீங்கின் ஏனைய பிணிப்புகள் பலவும் தாமே நீங்கி வீட்டு நிலை கைவரப் பெறும் என்பதும் ஈண்டு உளங்கொள்ளத் தக்கவை.

## (ii) பொருள் உலகம்:

சுத்தமாயையில் தோன்றும் பொருட்பிரபஞ்சங்கள் **ஐந்து சிவதத்துவங்களாகும்.** அவை **சிவம், சத்தி, சதாசிவம், ஈசுரம், சுத்த வித்தை** என்பனவாகும். இவை ஐந்தும் தன் தொழில்களால் உலகத்தைச் செயற்படுத்தக் கருதும் 'பிறவா யாக்கைப்பெரியோனுக்கு' (இறைவனுக்கு) இடமாதல் பற்றி **'சிவதத்துவங்கள்'** என வழங்கப்பெறுகின்றன. ஆயினும் வினைவயத்தால் பிறந்து இறக்கும் உயிர்களுக்குத் **தனுகரண, புவன, போகங்களாய்** வந்து பொருந்தா என்பது உளங்கொள்ளப்படும். இந்த ஐந்து தத்துவங்களையும் ஒவ்வொன்றாக விளக்குவோம்.

**(அ) சிவம்:** உலகத்தைத் தொழிற்படுத்தக் கருதுங்கால் எல்லாம்வல்ல இறைவனுக்கு அவனது இச்சை, ஞானம், கிரியை (விழைவு, அறிவு, செயல்) என்னும் மூன்று சக்திகளுள் இச்சை எஞ்ஞான்றும் ஒரே நிலையில் நிற்கும். ஏனைய ஞானமும் கிரியையும் தனித்தும் ஒன்றின் ஒன்றும் மிகுந்தும், குறைந்தும் சமமாயும் நின்றும் தொழில்படும். அவ்விடத்து இறைவன் முதற்கண் ஞானசக்தி ஒன்றாலே சுத்தமாயையைப் பொதுமையில் நோக்கி **'சிவன்'** எனப்பெயர் பெற்று நிற்பான். அவனால் நோக்கப் பெற்ற அந்நிலையில் சுத்தமாயை முதல் விருத்தியாய் அவனுக்கு இடமாகும். ஆகவே, அவனுக்கு

இடமாதல் பற்றி, அம்முதல் விருத்தியே '**சிவம்**' என்னும் பெயருடைய தத்துவமாய் நிற்கும். மேலே குறிப்பிட்ட நால்வகை வாக்குகளில் சூக்குமை வாக்காகிய நாதத்திற்குப் பற்றுக் கோடாதல்பற்றி இத்தத்துவம் '**நாதம்**' என்னும் திருப் பெயரையும் பெற்று நிற்கும் என்பது உளங்கொள்ளப்பெறும்.

**(ஆ) சத்தி:** ஞான சக்தியில் முதற்கண் சுத்தமாயையைப் பொதுமையில் நோக்கிய இறைவன், கிரியா சத்தி ஒன்றா லேயே சுத்தமாயையைக் காரியப்படுத்தப் பொதுவகையில் சங்கரித்து '**சத்தி**' எனப்பெயர் பெற்று நிற்பன். இந்நிலையில் சுத்தமாயை இரண்டாம் விருத்திப்பட்டு அவனுக்கு இடமாகும். சத்திக்கு இடமாதல் பற்றி இவ்விரண்டாம் விருத்தியே '**சத்தி**' என்னும் திருப்பெயரையுடைய தத்துவமாய் நிற்கும். பைசந்தி 'விந்து' எனவும் பெயர் பெறுமாதலின், அதற்குப் பற்றுக் கோடாகவுள்ள இத்தத்துவமும் '**விந்து**' எனப் பெயர் பெற்று நிற்கும்.

**(இ) சதாசிவம்:** ஞான சக்தியால் பொதுமையில் நோக்கி கிரியா சத்தியால் பொதுமையில் சங்கற்பித்த இறைவன், பின் அவ்விரண்டினாலும் சுத்தமாயையைச் சிறப்பு வகையால் நோக்கிச் சிறப்பு வகையால் சங்கற்பித்து ஞானசக்தியும் கிரியா சத்தியும் சமமாய்த் தொழிற்பட '**சதாசிவன்**' எனப் பெயர் பெற்று நிற்பான். இந்நிலையில் சுத்தமாயை மூன்றாம் விருத்திப்பட்டு அவனுக்கு இடமாகும். சதாசிவனுக்கு இடமாதல் பற்றி இம்மூன்றாம் விருத்தி '**சதாசிவம்**' என்னும் பெயருடைய தத்துவமாய் நிற்கும். நால்வகை வாக்குகளில் இது மத்திமை வாக்கிற்குப் பற்றுக் கோடாய் அமைகின்றது. ஆகவே, இறைவன் வேதாகமங்களைச் சொல் வடிவில் தோற்றுவிக்கும் நிலை இதுவேயாகும். இத்தத்துவம் '**சாதாக்கியம்**' என்றும் வழங்கப்பெறும்.

**(ஈ) ஈசுரம்:** ஞானசக்தி, கிரியாசத்தி இரண்டையும் சமமாகத் தொழிற்படுத்திச் சுத்த மாயையைச் சிறப்பு வகையில் நோக்கியும், சிறப்பு வகையால் சங்கற்பித்தும் நின்ற இறைவன், பின் ஞானசத்தியை மிகச் செலுத்தாது கிரியா சத்தியை மிகச் செலுத்தச் சுத்தமாயையைச் சூக்குமமாகக் காரியப்படுத்தி '**ஈசுரன்**' என்று பெயர் பெற்று நிற்பன். இந் நிலையில் சுத்த மாயை நான்காம் விருத்திப்பட்டு அவனுக்கு இடமாக அமையும் ஆகவே, ஈசுவரனுக்கு இடமாதல்பற்றி இந்நான்காம் விருத்தியே '**ஈசுரம்**' என்னும் திருப்பெயருடைய தத்துவமாய் நிற்கும். இந்நிலையில் நிற்கும் இறைவன் '**மகே சுரன்**' என்றும் இத்தத்துவம் '**மகேசுர தத்துவம்**' என்றும் வழங்கப்பெறுதலும் உண்டு என்பதும் அறிந்து தெளியப்படும்.

**(உ) சுத்தவித்தை:** கிரியா சத்தியை மிகச் செலுத்திச் சுத்தமாயையைச் சூக்குமாய்க் காரியப்படச் செய்த இறைவன், பின் ஞான் சத்தியை மிகச் செலுத்தி அதனைத் தூலமாகக் காரியப்படச் செய்து '**வித்தியேசுரன்**' எனப் பெயர்பெற்று நிற்பன். இந்நிலையில் சுத்தமாயை ஐந்தாம் விருத்திப்பட்டு அவனுக்கு இடமாகும். ஆகவே, '**வித்தியேசுரன்**' என்னும் இறைவனுக்கு இடமாதல் பற்றி அவ்வைந்தாம் விருத்தியே '**வித்தை**' என்னும் பெயருடைய தத்துவமாய் நிற்கும். அசுத்த மாயையில் தோன்றும். '**வித்தை**' என்பதும் உளதாதலின், அதனினின்றும் வேறுபடுத்திக் காட்டுதற்கு இது '**சுத்த வித்தை**' என்றும் பெயரிட்டு வழங்கப்பெறுகின்றது.

மேற்குறிப்பிட்ட ஐந்து தத்துவங்களும் சிவனால் நேரே காரியப்படுத்தப்பட்டுச் சிவனுக்கே இடமாதல் பற்றி '**சிவதத் துவம்**' எனப் பெயர் பெற்றது. சுத்தமாயையின் காரியமாய்ச் சுத்தமாய் இருத்தல்பற்றி '**சுத்த தத்துவம்**' என்றும் வழங்கப் பெறுகின்றது. இந்நிலையில் உள்ள இறைவன் '**தடத்த சிவன்**'

எனப்பெயர்பெறுகின்றான். இவண் குறிப்பிட்ட ஐந்து நிலைகளில் 'சிவன், சக்தி' என்னும் இருநிலைகளில் இறைவன் அருவமாய் இருப்பான். '**சதாசிவன்**' என்னும் நிலையில் அருவுருவமாய் இருப்பான். 'மகேசுவரன்' 'வித்தியேசுவரன்' என்னும் நிலைகளில் உருவமாய் அமைவான். இதனால்தான் உமாமகேசுவரர். சோமாஸ்கந்தர், கலியாண சுந்தரர், பிட்சாடணர் முதலிய உருவத்திருமேனிகள் எல்லாம் '**மகேசுர மூர்த்தங்கள்**' என வழங்கப்பெறுகின்றன. இவையும் உளங் கொள்ளப்பெறும்.

**அறிந்துகொள்ள வேண்டிய மேலும் சில செய்திகள்:** 'சத்தி, சிவம்' என்னும் அருவநிலை ஒடுக்க நிலை ஆதலின், அவை '**இலய நிலை**' (லயம்–ஒடுக்கம்) எனப்படும். சதாசிவனாகிய அருவுருவநிலை ஒன்றும் ஐந்தொழில் புகும் நிலையாதலின் அது '**போக நிலை**' என வழங்கப்பெறும். 'மகேசுரன், வித்தியேசுரன்' என்னும் உருவநிலை இரண்டும் ஐந்தொழிலை நடத்தும் நிலையாதலின், அவை '**அதிகார நிலை**' என்று சொல்லப்பெறும். இதனால் '**இலயசிவன்**'. '**போக சிவன்**', '**அதிகார சிவன்**' என தடத்த சிவனது நிலை மூன்றாகின்றது. இது காரணமாகவே சுத்ததத்துவங்களும் 'இலய தத்துவம்', 'போக தத்துவம், 'அதிகார தத்துவம்' என மூவகையினவாகின்றன. இங்ஙனம் தடத்த சிவனது நிலைகளை அறிந்து தெளியலாம்.

இவண் கூறப்பெற்ற சுத்த தத்துவங்கள் தடத்த சிவனுக்கு இடமாதலோடு அத்தத்துவங்களில் நிற்கும் ஆன்மாக்களுக்குத் தனு கரண புவன போகங்களையும் தந்து நிற்கும் ஒரு மலம் உடைய '**விஞ்ஞானகலர்** தகுதியைப் பெறுகின்றனர். இருமலம் உடைய பிரளயாகலரும், மும்மலம் உடைய சகலரும் இருவினையொப்பு, மலபரிபாகம், 'சத்தி நிபாதம்'

கைவரப்பெற்று இறைவனால் முன்னின்றும் படர்க்கையில் நின்றும் சிவஞானம் அருளப்பெற்று மலம்நீங்கி மலவாசனை மட்டும் உளராய் இருக்கும் நிலையில் சுத்த தத்துவத்தை அடையும் தகுதி பெறுகின்றனர்; அங்குள்ள தனு கரண புவன போகங்களையும் நுகர்கின்றனர்.

மலம் நீங்கினோர் **முத்தர்** ஆவர். இவர்களுள் மலவாசனையுடையோர், அதிகார மலவாசனை, போக மலவாசனை, இலயமலவாசனை உடையவராயிருப்பர். அதிகாரமலம், போக மலம், இலய மலம் என்பவை ஒன்றை விட மற்றொன்று சூக்குமமானது. ஆதலின் அவை நீங்கும் பொழுது அம்முறையிலேயே நீங்கும். இவருள் அதிகார மலத்துள் தூல அதிகார மலவாசனையுடையோர், இறைவன் வித்தியேசுவரனாய் நிற்கும் சுத்தவித்தையை அடைந்து தாமும் வித்தியேசுவரர் எனப்பெயர் பெற்றுச் சுத்தமாயையைத் தொழிற்படுத்துவர். அவ்வித்தியேசுவரர் எண்மர் என்பது சிவாகம நூல்களின் துணிபு. அவர் **அனந்தர், சூட்சுமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தி, சீகண்டர், சிகண்டி** என்பவர்களாவர். இவர்கட்கும் பரிவாரர் களாய் நிற்பவர் பலர். இவர்க்கெல்லாம் இடமாயிருப்பது **இச் சுத்தவித்தியாதத்துவம்** என்பது அறியப்படும்.

இனி, சூக்கும அதிகாரமலவாசனையுடையோர் இறை வன் 'மகேசுவரன்' எனப் பெயர் பெற்று நிற்கும் இடமாகிய ஈசுரதத்துவத்தை அடைந்து, **மந்திரமகேசுரர்** எனப் பெயர் பெற்று நின்று மகேசுரமூர்த்தி ஆணையின் வழி மந்திரம் முதலியவற்றைத் தொழிற்படுத்தி நிற்பர். இவர்க்குப் பரிவார மாவோரும் பலர் உளர். இவர்க்கெல்லாம் இடமாவது இந்த ஈசுரதத்துவமாகும் என்பது அறியப்பெறும்.

இன்னும், போகமல வாசனையுடையோராய் சதாசிவ மூர்த்தியது **சாலோக்கியம், சாமீப்பியம் சாரூப்பியம்** என்பவற்றைப்[61] பெற்று **'அணுசதாசிவர்'** என்னும் பெயருடன் சுத்த போகத்தை அநுபவித்திருப்போர் பலர். இவர்கட்கெல்லாம் இடம் இச்சதாசிவ தத்துவமேயாகும். இவ்வாறே, தூல இலயமலவாசனையுடையவர் சத்தி தத்துவத்தையும், சூக்கும இலயவாசனையுடையோர் சிவதத்துவத்தையும் அடைந்து அங்குள்ள போகத்தை அநுபவித்திருப்பர். இவர்கட்கு இந்த இரு தத்துவங்களும் இடங்களாக அடையும். ஆகவே, சிவதத்துவம் முதலிய ஐந்து தத்துவங்களிலும் புவனங்கள் உள்ளன என்பது தெளிவாகும். இப்புவனங்கள் முறையே **பத்து, ஐந்து, ஒன்று, எட்டு, ஒன்பது** எனச் சிவாகமங்கள் வரையறுத்துப் பேசும்.

மேலும், இச்சுத்த தத்துவம் காலதத்துவத்தைக் கடந்து நிற்கும்.[62] இதனால் **நித்தியம்** (தோற்றக் கேடுகள் இல்லாதவை) என்று கூறப்பெறும். எனினும் காரியங்கள் யாவும் அநித்திய மாதலால் இவ்வாறு கூறுவது உபசாரமே என்பது அறியப்படும். **'சுத்த தத்துவம் சிவன்றன் சுதந்திர வடிமாகும்'** என்று சிவஞானசித்தியார் கூறுவதை அடியொற்றி 'சுத்தமாயையை இறைவனது திருமேனியாகக்' கொள்வர் சிலர். இக்கொள்கை அந்நூலுள் **'காயமோ மாயையன்று, காண்பது சக்தி தன்னால்'** என்பது போன்ற பலவற்றோடு முரணுமாதலால், இறைவனுக்கு அவனது சக்தியின்றிப் பிறிதொன்று வடிவ மாகாது என்பது கருத்தில் இருத்தப்படும். **'அதிட்டானம்'**

---

61. சாலோக்கியம் - இறைவன் உலகில் இருக்கும் நிலை; சாமீப்பியம் - இறைவன் அருகில் இருக்கும் நிலை; சாரூப்பியம் - இறைவனுடைய உருவம் பெயர் முதலிய , வற்றைப் பெற்றிருக்கும் நிலை.
62. சுத்த தத்துவத்தாலான பரமபதத்தை வைணவம் காலம் நடையாடாத தேசம் என்று வருணிக்கும்.

என்பதே 'வடிவு' என்று உபசரித்துக் கூறப் பெற்றதாகக் கொள்ள வேண்டும். ஆகவே, இத்தத்துவங்கள். இறைவனுக்கு இடமாதலன்றி வடிவம் ஆகாமை உணரப்படும். இக்கூறிய வற்றால் சிவதத்துவம் தெளிவாக விளக்கப் பெற்றது.

## (9) அசுத்த மாயையின் தத்துவங்கள்

அசுத்த மாயையை இறைவன் தானே நேர் நின்று தொழிற்படுத்தாது சுத்த வித்தையில் நிற்கும் வித்தியேசுரர் எண்மருள் முதல்வரான அனந்ததேவர் வழியாகவே தொழிற் படுத்துவன். ஆகவே அசுத்த மாயைக்கு அதிகார மூர்த்தி அனந்த தேவர் என்பது அறியப்படும்.

இன்னொரு செய்தியையும் ஈண்டு நினைவிற் கொள்ள வேண்டும். ஆணவம் கன்மம் இவற்றோடு கலவாதது சுத்த மாயை. இவ்விரண்டனோடும் கலந்திருப்பது அசுத்தமாயை. கலப்பற்ற சுத்தமாயை நுண்பொருளாய் உள்ளது. கலப்புற்ற அசுத்தமாயை பருப்பொருளாயுள்ளது. இறைவன் நுண்ணி யோன். ஆகவே அவன் நுண்பொருளையே நேரே தொழிற் படுத்துவான்; பருப்பொருளை பிறிதொரு வாயிலாகவே தொழிற்படுத்துவான்.

இறைவனைத்தவிர ஏனையாவரும் உயிர்வகையினர். இறைவனை நோக்க உயிர்கள் யாவும் பருப்பொருள்கள். அனந்ததேவர் ஒரு மலம் உடைய விஞ்ஞானகலர் எனப்படும் வகையினருள் மலம்நீங்கி ஞானம் பெற்றுத் தூல அதிகார மலவாசனை மாத்திரம் உடையவர். 'அதிகார மலம்' என்பது, இறைவனைப் போலத் தாமும் உலகத்திற்கு முதல்வராய் நின்று அதனை இயக்குதல் வேண்டும் என்னும் விருப்பத்திற்குக் காரணமாகிய ஆணவமலத்தின் ஆற்றல். அனந்ததேவர் முதலியோருக்கு அவ்விருப்பம் இருப்பினும், அவர் இறை வனை மறந்து அதிகாரத்தில் மூழ்கிக் கிடவாமையால்,

அவருக்கு இந்த மலம் இன்றி இதன் வாசனை மாத்திரமே உள்ளது. இங்ஙனம் இவர் உயிர்வருக்கத்தினராய் மலவாசனை நீங்காது நிற்றலின் அசுத்தமாயையாகிய தூலப்பொருளை இறைவன் இவர் வழியாகச் செயற்படுத்துகின்றான்.

இறைவன் அனந்ததேவர் வழியாக அசுத்தமாயையைச் செயற்படுத்தத் திருவுளம் பற்றுதலால், இவருக்கு அதற்கேற்ற அறிவும் ஆற்றலும் உள்ளன என்பது சொல்லாமலே விளங் கும். இவற்றால்இவர் பிரளயாகலர், சகலர் என்னும் இருவகை உயிர்களின் வினைவகைகளை அறிந்து அவற்றிற்கேற்ப அசுத்தமாயையைக் காரியப்படுத்துவர்.

அசுத்தமாயையினுள் தோன்றும் தத்துவங்கள் ஏழு. அவை **காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை** என்பனவாகும். இந்த ஏழையும் அனந்தர் என்னும் வித்தியேசுரர் வாயிலாகச் செயற்படுத்துதலால் இவை **வித்தியாதத்துவம்** எனப் பெயர் பெறுகின்றன. 'மாயை' என்பது ஒரு காரணம் பற்றி இறுதிக்கண் வைத்து வழங்கப் பெறினும், இதுவே முதல் தத்துவமாகும். அசுத்த மாயையின் ஒரு பகுதி அனந்த தேவரால் ஏனைய தத்துவங்கள் தோன்றுதற்குத் தகுதியாகச் செய்யப்பெற்றது. இது **மோகினி** எனவும் வழங்கப்படும். மோகினி – மோகிக்க – மயங்கச் செய்வது. இதனினின்றுதான் மேற்குறிப்பிட்ட ஏழு தத்துவங் களும் தோன்றுகின்றன.

**தோன்றும் முறை:** சுத்த மாயையின் காரியங்கள் '**விருத்தி**' எனவும் அசுத்தமாயையின் காரியங்கள் '**பரிணா மம்**' எனவும், இந்தப் பரிணாமமும் ஒரு புடைப்பரிணாமமே எனவும் முன்னர் மொழியப்பட்டதை ஈண்டு நினைவு கூர்தல் தகும். அசுத்தமாயையின் ஒருபுடைப் பரிணாமமாகிய மாயா தத்துவத்தினின்றும் '**காலம்**' என்னும் தத்துவம் தோன்றும்.

இதற்குப் பின்னர் மாயா தத்துவத்தினின்றும் '**நியதி**' என்ற தத்துவம் தோன்றும்; இதனை அடுத்து '**கலை**' என்னும் தத்துவம் தோன்றும். **மாயை** என்னும் தத்துவம் அனந்த தேவரின் இச்சையின் வழி ஒருபகுதி காலமாயும், மற்றொரு பகுதி நியதியாகவும், வேறொருபகுதி கலையாகவும் பரிண மித்து நிற்கும் என்பது ஈண்டு அறியப்படும். இவை மூன்றும் தோன்றிய பின்னரும் மாயை என்னும் தத்துவம் குறையாது நிற்கும். அதன் பின்னர் கலையினின்று '**வித்தை**' என்னும் தத்துவமும், வித்தையினின்றும் '**அராகம்**' என்னும் தத்துவ மும் தோன்றும். இத்தத்துவங்கள் அனைத்தும் உயிர்கட்கு உடம்பாய் நின்று பலவகையில் துணைபுரியும். இனி, இத் தத்துவங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியே விளக்குவோம்.

**(அ) காலம்:** இஃது இறப்பு, நிகழ்வு, எதிர்வு என மூன் றாக நிற்கும். இவற்றுள் இறந்த காலம் ஏனைக் காரணங்களோடு இணைந்து ஆன்மாவின் ஞானம், கிரியை, இச்சை என்பவற்றை வினை, வினைப்பயன்களினின்றும் பிரிக்கும். நிகழ் காலம் அவ்வாற்றான் இம்மூன்றினையும் அவ்விரண்டனோடும் கூட்டும். எதிர்காலம் ஞானம் முதலிய மூன்றினையும் வினை, வினைப் பயன்களை எதிர் நோக்கச் செய்யும். இவண் குறிப்பிட்ட மூவகைக் காலங்களும் தோன்றி நின்று அழியும் ஒவ்வொரு பொருளிலும் வேறுவேறு உள்ளன. எல்லாக் காலங்களும் உயிர்களின் வினைக்கேற்பச் செலுத்தும் இறைவனது சத்தியின் வழியே தத்தம் காரியத்தைச் செய்யும். எல்லாச் செயல்கட்கும் காலமே பற்றுக் கோடாகும். காலம் இன்றேல் செயல் இல்லை. 'காலத்தின் கோலம்' என்ற பேச்சு வழக்கினையும் சிந்திக்கலாம்.

**(ஆ) நியதி:** அவரவர் செய்த வினையை அவரவரே நுகருமாறு வரம்பு செய்து நிறுத்துவது இத்தத்துவம். அஃதாவது,

ஒருவர் தாம் செய்த வினையின் பயனையன்றிப் பிறர் செய்த வினையின் பயனை நுகரவொட்டாமலும், தாம் செய்த வினையின் பயனைப் பிறர் நுகராது ஒழியவொட்டாமலும், தாம் செய்த வினையின் பயனைத் தாமே நுகருமாறும் அவற்றில் நியமித்து நிறுத்தும். இத்தத்துவம் இல்லையாயின், ஒருவர் தாம் செய்த தீவினையின் பயனைத் தாம் நுகராது ஒழிதலும், பிறர்செய்த நல்வினைப் பயனைத் தாம் நுகர்தலும் கூடுவனவாக அமைந்து விடும். அவரவர் செய்த வினையின் பயனை அவரவரே நுகர்தல் என்னும் நியதி இல்லையாய் விடும். இன்னும் விளங்கக் கூறினால், இறைவனது சக்தி கன்மத்தை வரையறுக்கும் செயலுக்கு இந்நியதி தத்துவம் ஒரு கருவியாக நிற்கும் என்பதாகும்.

**(இ) கலை:** இஃது ஆன்மாவிற்கு உள்ள ஞானம், இச்சை, கிரியா சக்திகளுள் கிரியை சத்தியை விளக்கி, அதனைத் தொழிற்படச் செய்யும். 'கலித்தல்' என்பதற்கு 'நீக்குதல்' 'எழுப்புதல்' என்னும் பொருள்கள் உளவாதல் அறியப்படும். 'ஆணவமலத்தைச் சிறிதேநீக்குதல்' என்பதற்கு 'ஆன்மாவின் கன்மநிலைக்கு ஏற்ப நீக்குதல்' என்பது பொருளாகும். எனவே, ஆன்மா கிரியா சத்தி விளக்கப்பெற்ற பின்னரே யாதொரு செயலையும் 'செய்வோனாந்தன்மையை' (கர்த்திருத்துவம்) எய்தி நிற்கும் என்பது தெளிவுறுதல் காணலாம்.

(ஈ) **வித்தை:** இது மாயையினின்றும் தோன்றாமல், கலையிலிருந்து தோன்றும் என்பதை நினைவுகூரலாம். ஞானசக்தி கலையினால் எழுப்பப்பெறும் கிரியை சக்தியின் வேறாகாது அதன் ஒருகூறேயாதலின் அதனை எழுப்பும் தத்துவமும் கிரியா சக்தியை எழுப்பும் கலையின் ஒரு கூறாய் அதனினின்றே தோன்றும் என்பது அறியப்படும். இஃது ஆணவ மலத்தைச் சிறிதே நீக்கி ஆன்மாவின் விஞ்ஞான

சக்தியை எழுப்பும். இன்னொரு முக்கிய செய்தியையும் ஈண்டு அறிதல் வேண்டும். கிரியை சக்தியும் ஞான சக்தியும் வேறல்ல வாயினும், கிரியையாய் நிற்கும் கூறு அப்பொழுதே ஞானமாய் நில்லாது; இஃது இச்சைக்கும் பொருந்தும். ஆகவே, இம்மூன்று சக்திகளும் ஒருங்கே வேண்டப்படும்பொழுது, அவற்றை வேறு வேறு கூறுகளாக எழுப்புவதற்கு வேறு வேறு தத்துவம் வேண்டும் என்பது உளங்கொள்ளப்படும்.

**(உ) அராகம்:** இது வித்தையினின்று தோன்றுவது. ஆன்மாவின் கிரியை சக்தியைக் கலை என்ற தத்துவமும், ஞானசத்தியை வித்தியாதத்துவமும் முறையே முன்னும் எழுப்ப, எஞ்சி நின்ற இச்சை சக்தியை இறுதிக்கண் நின்று எழுப்பும் தத்துவமாகும் இது.

காலதத்துவம் கன்மத்தை அளவுபடுத்தவும், நியதிதத்துவம் கன்மத்தை நியமித்து நிறுத்தவும் முற்பட்டு நிற்கும் என்றும், கலைதத்துவம் ஆன்மாவின் கிரியை சக்தியையும், வித்தியா தத்துவம் ஆன்மாவினது ஞானசக்தியையும், அராக தத்துவம் ஆன்மாவின் இச்சை சக்தியையும் முறையே எழுப்பும் என்றும் முன்னர்க் கூறியவற்றை நினைவிற் கொள்ளலாம். இந்நிலையில் ஆன்மா கன்மத்தை நுகரவும் ஈட்டவும் தகுதி பெற்று நிற்கும். ஆகவே, ஆன்மா கன்மத்தை நுகர்தல் ஈட்டல்கட்குக் காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் ஐந்தும் இன்றியமையாதனவாய் ஆன்மாவோடு எப்பொழுதும் நீங்காது சட்டைபோல் ஒன்றாய் ஒட்டியே கிடக்கும். இதனால் இவை ஐந்தும் '**பஞ்ச கஞ்சுகம்**' என்ற வழங்கப்பெறும். கஞ்சுகம் – சட்டை.

**(ஊ) புருடன்:** இங்ஙனம் பஞ்சகஞ்சுகத்தை எய்திய உயிர் பின் இவற்றிற்குக் கீழ் உள்ள மூலப் பிரகிருதியைப் பற்றிய வழியன்றிப் போகம் நுகர்தல் கூடாமையின் இங்ஙனம்

அதனைப் பற்றும் நிலை **'புருடதத்துவம்'** என ஒரு தத்துவ மாகக் கூறப்பெறுகின்றது. இஃது ஒரு தனித் தத்துவம் அன்று. இது பிரகிருதியின் தொடர்பால் உண்டாவதாயினும், பிரகிருதி யின் காரியங்கள் தோன்றாத முன்னர் நிற்கும் நிலையாதலின் அசுத்த மாயை தத்துவங்களில் வைத்து கூறப்பெறகின்றது. போகத்தை நுகரும் தன்மை உடைமைபற்றிப் **'புருடன்'** என்ற பெயர் ஏற்பட்டது. போகத்தை நுகர்வோனாந்தன்மை **'போத் திருத்துவம்'** என்று வழங்கப்பெறும். பிரகிருதியின் தொடர்பு சகலர்க்கன்றி பிரளயாகலர்க்கு இன்மையால், புருட தத்துவமாய் நிற்றல் சகலர்க்கன்றிப் பிரளயாகலர்க்கு இல்லை என்பது தெளியப்படும். காலம் முதலிய ஐந்துடன் 'புருடன்' என்பதைக் கூட்ட அசுத்த மாயாதத்துவம் ஆறாகும்.

(எ) **மாயை:** முதற்கண் குறிப்பிட்ட மாயை என்ற தத்துவம் ஏனையவை போல காரியப்படாமையால் அதனை இறுதிக்கண் வைத்துக் கூறுதல் மரபு. மாயையுடன் சேர்ந்து அசுத்தமாயா தத்துவங்கள் ஏழாகின்றன.

காலம் முதலிய வித்தியா தத்துவங்கள் ஏழும், மூலப் பிரகிருதியும் உயிர்கட்கு அதிசூக்கும உடம்பாய் நின்று உதவும். **'அதிசூக்கும சரீரம்'**, **'பரசரீரம்'** என்பன ஒன்றையே குறிக்கும் சொற்களாகும். சரீரத்துள் மாயா தத்துவம் 'காரண சரீரம்' என்று வழங்கப்பெறும். காலம் முதலிய ஐந்தும் **'கஞ்சுக சரீரம்'** என்றும், மூலப் பிரகிருதி **'குணசரீரம்'** என்றும் பெயர் பெறுகின்றன. இவற்றுள் குணசரீரம் சகலர்க்கன்றிப் பிரளயா கலர்க்கு இல்லை. எனவே, பிரளயாகலர் 'காரணசரீரம், கஞ்சுகசரீரம்', என்னும் இரண்டேயாகிய பரசரீரத்தானே அசுத்த மாயாதத்துவ புவனங்களில் உள்ள போகங்களை நுகர்வர். ஆகவே அசுத்த மாயா தத்துவங் களாகிய வித்தியா தத்துவங்களே பிரளயாகலர்க்கு தனு கரண புவனங்களைத் தருகின்றன என்பது அறிந்து தெளியப்படும்.

வித்தியாதத்துவம் ஏழனுள் காலதத்துவத்தில் **இரண்டு** புவனங்களும், நியதி தத்துவத்தில் **ஐந்து** புவன்ங்களும் கலாதத்துவத்தில் **இரண்டு** புவனங்களும், வித்தியாதத்துவத் தில் **இரண்டு** புவனங்களும், அராக தத்துவத்தில் **ஐந்து** புவனங்களும், புருட தத்துவத்தில் **ஆறு** புவனங்களும், மாயாதத்துவத்தில் **ஐந்து** புவனங்களும் உள்ளன என்று சைவ ஆகமங்கள் கூறும், இங்குப் புருடதத்துவம் என்பது அதற்குக் காரணமான மூலப்பிரகிருயை.

## (10) ஆன்ம தத்துவங்கள்

வித்தியா தத்துவங்கள் ஏழினும் ஆன்மாவின் கிரியை சத்தியை எழுப்புவதாகக் கூறப்பெற்ற '**கலை**' என்ற தத்துவத்தினின்றும் '**வித்தை**' என்ற தத்துவமும், அதினின்றும் '**அராகம்**' என்னும் தத்துவமும் தோன்றும் எனக் கூறப் பெற்றன. அவற்றின் பின்னர்க் கலையினின்றும் நேரே '**மூலப்பிரகிருதி**' தோன்றும். இதுவே ஆன்ம தத்துவங்கள் அனைத்திற்கும் **மூலகாரணமாகும்**. இதனால் இதுவும் ஒரு மாயையாகச் சொல்லப்பெறுகின்றது. எனினும் இது காரணமாய் நில்லாது, '**கலை**' என்னும் தத்துவத்தின் காரியமாய் நிற்றலின், காரணமாயைகள் சுத்தமாயை, அசுத்தமாயை என்னும் இரண்டுமேயாகும். மூலப்பிரகிருதி '**மான்**' என்ற பெயராலும் வழங்கப்பெறும்.[63]

### (i) மூலப்பிரகிருதி

மூலப்பிரகிருதியை இறைவன் அனந்ததேவர் வழி சீகண்டருத்திரர் வாயிலாகத் தொழிற்படுத்துவன். சீகண்டருத் திரர் சகல வர்க்கத்தினராகிய ஆன்மாக்களுக்குத் தலைவர்.

---

63. மான் என்பது 'மகத்து' என்ற வடசொல்லின் திரிபு

இதனால் அவரால் தோற்றி ஒடுக்கப்பெறும் தத்துவங்கள் '**ஆன்ம தத்துவங்கள்**' எனப் பெற்றன என்பது அறியப்படும்.

ஆன்மதத்துவங்கள் **இருபத்து நான்கு**. அவை அந்தக் கரணம் **நான்கு**. ஞானேந்திரியங்கள் **ஐந்து**. கன்மேந்திரியங் கள் **ஐந்து**. தந்மாத்திரைகள் **ஐந்து**. பூதங்கள் **ஐந்து**. இவையனைத்திற்கும் மூல காரணமாகிய மூலப்பிரகிருதி '**சாத்துவிகம், இராசதம், தாமதம்**' என்னும் முக்குணங்களை யும் உள்ளடக்கி அவற்றிற்கு வித்தாய் நிற்பது. எனவே முக்குணங்களும் வெளிப்படாது சூக்குமமாய் நிற்கும் நிலையே '**மூலப்பிரகிருதி**' எனப்படுகின்றது. முக்குணங்கள் வெளிப் படாது நிற்றல்பற்றி மூலப்பிரகிருதி '**அவ்யக்தம்**' என்றும், வழங்கப்படும். வியக்தம் – வெளிப்பாடு; அவ்வியக்தம் – வெளிப்பாடின்மை. இங்ஙனம் இது வெளிப்படாது நிற்றல்பற்றி பெரும்பாலும் இதனை ஒரு தத்துவமாய்க் கூறுதல் இல்லை.

அந்தக் கரணம் நான்கு என்றோம். அந்தக்கரணம் – அகக்கருவி. அவை. **சித்தம், புத்தி, அகங்காரம், மனம்** என்பவையாகும்.

**(அ) சித்தம்:** அவ்வியக்தமாய் நிற்கும் மூலப்பிரகிருதி யின் ஒரு பகுதியில் வெளிப்படாது சூக்குமமாய் நிற்கும் முக்குணங்கள் தூலமாய் வெளிப்பட்டுத் தம்முட் சமமாய நிலை ஒன்றுண்டு. இந்நிலையே '**குணதத்துவம்**' என்று வழங்கப் பெறுகின்றது; இக்குணதத்துவமே ஆன்மா ஒன்றைச் சிந்திப்பதற்குக் கருவியாய் சித்தம் எனப்படும் அந்தக் கரணமாய் நிற்கும். நன்கு தெரிந்த ஒன்றை மீளமீளச் சிந்திப்பதனாலேயே இன்பமும் துன்பமும் உண்டாகின்றன. எனவே, ஆன்மாவின் தன் வேதனைக் காட்சிக்கு இச்சித்தமே கருவியாதல் தெளிவாகும்.

**(ஆ) புத்தி:** குணதத்துவத்தின் ஒரு கூறில் பின் சாத்துவிக குணம் மிக உடையதாய்ப் **புத்தி** என்னும் அந்தக் கரணம் பரிணமித்துத் தோன்றும். இஃது ஆன்மா, தான் ஐயுற்று நின்ற ஒன்றை 'இன்னதே' எனத் திட்டமாகத் துணிதற்குக் கருவியாய் நிற்கும். புத்தி தத்துவம் இல்லையேல் ஒரு பொருளை 'இன்னது' எனத் திட்டமாக உணரும் உணர்வு உண்டாகாது. இந்த உணர்வு **'சவிகற்ப ஞானம்'**[64] எனப் பெயர்பெறும். சவிகற்பமாக உணரும் சிறப்புணர்வு புத்தி தத்துவத்தால் உண்டாவதால், அதுவே பின் துணியப்பட்ட அந்தப் பொருள் வடிவாய்த் திரிந்து (பரிணமித்து) நிற்கும். இதனால் உயிர் – ஆன்மா – நேரே பற்றி அநுபவிப்பது புத்தி தத்துவத்தையேயன்றிப் புறப்பொருளையன்று. எனவே, புறத்தில் உள்ள பொருள்கள் கண் முதலிய பொருள்கள் வாயிலாகவும், பின் மனத்தின் வாயிலாகவும் புத்தியைத் திரிவு படுத்தி நிற்பனவேயன்றி உயிரால் நேரே அநுபவிக்கப்படுதல் இல்லை.

காரணத்தில் உள்ளது காரியத்திலும் உளதாகும் என்பதை நாம் அறிவோம். எனவே, குணதத்துவத்தினின்றும் தோன்றிய புத்தி தத்துவத்திலும் முக்குணங்களும் உளவாகும். இதனால் அவற்றின் காரியமாகிய கொள்கைகள் பலவும் இப்புத்தியின் கண்ணே தோன்றும். இவை **'பாவகங்கள்'** எனப்படும். புத்தியில் தோன்றும் பாவகங்கள் அளவிறந்தன வாயினும் அவற்றை எட்டாகத் தொகுத்துக் கூறுவர் சித்தாந்திகள். இவற்றுள் **கன்மம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம்** (தமிழில் அறம், அறிவு, பற்றின்மை, செல்வம்) என்னும் நான்கும் நல்லவையாகும். இவற்றின் மறுதலையாகிய **அதன்மம், அஞ்ஞானம், அவைராக்கியம், அவைசுவரி**

---

64. ஒரு பொருளைப் பற்றி பெயர் முதலிய பாகுபாடுகளோடு கூடிய ஞானம்

யம்' (தமிழில் மறம், அறியாமை பற்று, வறுமை) என்னும் நான்கும் தீயவையாகும். கன்மம் முதலிய நல்லவை நான்கும் ஒன்றன்பின் ஒன்றாகக் காரண—காரிய முறையில் தோன்றி ஐசுவரியம் வந்தவுடன் அதன்மம் முதலிய தீயவை நான்கும் ஒன்றன்பின் ஒன்றாக அவ்வாறு தோன்றி அநைசுவரியம் வந்து நிற்கும். அநைசுவரியம் வந்தபின் முன் போலவே கன்மம். என்ற நல்லது தோன்றும். இப்படியே இப்புத்தி தத்துவம் ஒரு சக்கரம்போல் சுழல, இப்பாவகங்கள் அச்சக்கரத்தில் உள்ள ஆரைக்கால்கள் போல் விரைவாக மாறி மாறி வருதலின் உயிர் இப்பாவகங்களில் அழுந்தி, இன்பம், துன்பம், மயக்கம் (சுகம், துக்கம், மோகம்) என்பவற்றில் சுழன்று உழலும்.

'அளவிலாப் பாவகத்தால் அமுக்குண்டு[65]

என்ற **மணிவாசகப் பெருமானின்** வாக்கு ஈண்டு நினைக்கத் தக்கது. இப்பாவகங்களில் நல்லவை நான்கும் சாத்துவிக குணத்தால் உள்ளனவாகும். அவைராக்கியம் ஒன்றே இராசத குணத்தால் உளதாவது. ஏனைய மூன்றும் தாமத குணத்தால் உளவாவன. சாத்துவிககுணத்தால் இன்பமும், இராசதகுணத் தால் துன்பமும், தாமத குணத்தால் அவ்விரண்டுமாயிருக்கும் மயக்கமும் உளவாகும்.

**(இ) அகங்காரம்:** புத்தி தத்துவத்தினின்றும் இராசத குணம் மிக்குடைய அகங்காரம் என்னும் தத்துவம் தோன்றும். இஃது ஆன்மா 'யான் இதனைச் செய்வேன்' என்று அகங்கரித்து எழுச்சியுறுவதற்குக் கருவியாகும். எனவே, இக்கருவி இல்லையாயின், உயிர் எந்த ஒரு செயலிலும் செல்லுதற்கு எழுச்சியற்றதாகிவிடும்.

இங்ஙனம் அகங்கார தத்துவம் எல்லா வகையான. எழுச்சிகட்கும் காரணமாய் இருத்தலால், பல தத்துவங்கட்கு

65. திருவா. கண்டபத்து-8

இது காரணமாய் அமைகின்றது. அங்ஙனம் அமையுமிடத்து இது சாத்துவிகக்கூறு, இராசதக் கூறு, தாமதக் கூறு என முக்குணங்களின் மூன்று கூறாய் நின்று, சாத்துவிகக்கூறு **'தைசதாகங்காரம்'** என்றும், இராசதக்கூறு **'வைகாரி அகங் காரம்'** என்றும், தாமதக்கூறு **'பூதாதி அகங்காரம்'** என்றும் பெயர்களைப் பெறும்.

**(ஈ) மனம்:** இந்த அந்தக்கரணம் தைசதா கங்காரம் என்பதினின்று தோன்றும். இது புறக்கருவிகளாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகளால் கவரப்பெற்ற ஊறு, சுவை, உருவம், நாற்றம், ஓசை[66] என்னும் புலன்களை[67] ஆன்மா பற்றுதற்கும், பின் புத்தி தத்துவத்தால் அறியப்பட்ட பொருளின் பெயர், சாதி, குணம், கன்மம், உடைமை என்பவற்றின் நினைவு மனத்தின்கண் தங்கிக் கிடப்பதால், அப்பொருளேயாயினும், அதனோடு ஒருங்கொத்த அவ் வின்பப் பொருளாயினும் மீளவும் புறக்கருவிகட்குப் புலனாகும் பொழுது, 'இஃது இன்னபொருள் போலும்' எனப் பொதுவாக நினைத்தல் **'சங்கற்பம்'** என்றும், 'அஃது ஆமோ? அன்றோ?' எனக் கவர்ந்து நிற்றல் **'விகற்பம்'** என்றும் வழங்கப்பெறும். இவற்றுள் பின்னதே **'ஐயம்'** என்றாலும், முன்னதும் ஐயத்தின் பாற்பட்டதேயாகும். ஆகவே, சங்கற்பவிகற்பங்களால் ஐயுற்று நிற்கும் கருவி மனமே என்பதும், மனம் இங்ஙனம் பற்றி நின்று ஐயுற்ற பொருளைப் புத்தி இன்னதெனத் துணியும் என்பதும் ஈண்டு நாம் அறிந்து தெளிய வேண்டியவை.

**இன்னோர் உண்மை:** இதனை நாம் உளங்கொள்ளல் வேண்டும். முன்னர் அறியப்பட்ட பொருளே பின்னர் காண் நேரிடுங்கால், முன்னர் ஐயம் தோன்றிப் பின்னர்த் துணிவு

66. வட மொழியில் பரிசம், ரசம், ரூபம், கந்தம், சத்தம் எனப்படும்.
67. புலன்களை வடமொழியில் 'விஷயங்கள்' என்று வழங்குவர்

பிறக்கும். அவ்வாறன்றிப் புதிதாக ஒரு பொருளைக் காண நேரிடின், 'இஃது யாது?' என்ற அவாய நிலையன்றி ஐயமும் துணிவும் தோன்றும் என்பதை நாம் அறிவோம்., அப்பொழுது அப்பொருளை அறிந்தான் ஒருவன் 'இஃது இன்னது' என்று அறிவித்தவழி துணிவு பிறக்கும். சிலசமயம் 'புத்தி தத்துவம்' ஒரு பொருளை மற்றொரு பொருளாக மாறித் துணிதலும் உண்டு. இது 'துணிவு' அன்று; திரிவு (விபரீதம்) என்பது அதன் பெயர். புத்தி நன்மை தீமை என்ற இரண்டற்கும் பற்றுக் கோடாதலின், திரிபு இதன்கண் குற்றமாய் நின்று, பின்பு மெய்ம்மையால் போக்கப்படும் என்பது அறியப்படும். அந்தக் கரணங்களை 'மனம், புத்தி, சித்தம் அகங்காரம்' என்று கூறினாலும், அவற்றின் தோற்றம் 'சித்தம், புத்தி அகங்காரம், மனம்' என்னும் முறையில்தான் என்பது மேற்கண்ட விளக்கத்தால் தெளியப்படும்.

## (ii) இந்திரியங்கள்

இந்திரியங்கள் என்பவை உயிர்களிடம் அமைந்திருக்கும் இயற்கை வாயில்கள். அவற்றின் மூலம்தான் உலகிலுள்ள பொருள்கள் மனத்திற்கு அறிமுகப்படுத்தப் பெறுகின்றன; அவற்றைத் தேவைக்கேற்றவாறு அநுபவிக்கவும் கருவிகளாக அமைகின்றன.

**(அ) ஞானேந்திரியங்கள்:** இவை ஐந்து. தைசதாகங்காரத்தினின்றும் மனம் முதற்கண் தோன்றும் என்று முன்னர்க் கூறப்பெற்றது. இதனை அடுத்து ஞானேந்திரியங்கள் தோன்றும். இவை முறையே ஒன்றன்பின், ஒன்றாகச் செவி, தோல் (மெய்), கண், நாக்கு (வாய்), மூக்கு என்பவையாகும்.[68]

68. இவை வடமொழியில் சுரேத்திரம், துவக்கு, சட்சு, சிங்குவை, ஆச்ராணம் என்று கூறப்பெறும்.

இவை முறையே புறத்தேயுள்ள ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்னும் ஐம்புலன்கள் மூலம் அறிவதற்குக் கருவிகளாகும். ஒளி என்பதும் உரு என்பதும் ஒன்றே. உரு – நிறம், வல்லோசை மெல்லோசை என்றும்; வன்மை மென்மை என்றும்; கைப்பு இனிப்பு என்றும், நறுமணம் தீமணம் என்றும்– இவ்வாறு பகுத்தறியாமல், 'இஃது ஓர் ஓசை, இஃது ஓர் ஊறு, இஃது ஓர்ஒளி, இஃது ஒரு சுவை, இஃது ஒரு நாற்றம்' என்றாற்போலப் பொதுமையில் அறிவதே பொதுவாக அறிதலாகும். இவ்வாறு அறியும் அறிவு '**நிருவிகற்ப ஞானம்**' என்று வழங்கப்பெறும். நிருவிகற்பம் – வேறுபாடு இன்மை. செவி முதலிய பொறிகள் புறப்பொருள்களைப் பொதுவாக அறியுமேயன்றிச் சிறப்பாக அறியமாட்டா. மனம் முதலிய அந்தக்கரணங்கள் செயற்பட்ட பின்னர்தான் சிறப்பாக அறிதல் நிகழும். ஓசை முதலிய ஐந்தும்[69] செவிமுதலிய பொறிகட்குப் புலனாகுமிடத்துப் 'புலன்' எனப்படும். புலன் களை 'விடயம்–விஷயம்' என்பர் வடநூலார். செவிமுதலிய ஐந்தும் அறிதற்கருவியாதல் பற்றி 'ஞானேந்திரியங்கள்' என்று வழங்கப்பெறுகின்றன. 'கண்டு கேட்டு உண்டு, உயிர்த்து உற்றுஅறிதல்'[70] என்னும் முறையிலும் ஏற்றபெற்றியால் கூறப்பெறும். இவற்றின் தோற்றமுறை மேற்கூறிவாறேயாகும். செவி முதலியன தத்துவத்தின் பெயரால் நிற்குமிடத்தில் புறத்தில் காணப்பெறும் உறுப்பைக் குறியாமல் அவ்விடங்களி லிருந்து கேட்டல் முதலியவற்றைச் செய்யும் ஆற்றல்களையே குறிக்கும்.

**(ஆ) கன்மேந்திரியங்கள்:** ஞானேந்திரியங்கள் தைச தாகங்காரத்தினின்று தோன்றிய பின் வைகாரிகாகங்காரத்தி

69. இவை முறையே வடமொழியில் சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்று வழங்கப்பெறும்.

70. குறள்-1101 (புணர்ச்சி மகிழ்தல்)

னின்றும் **வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம்** என்னும் கன்மேந்திரியங்கள் ஐந்தும் தோன்றும். அருந்தமிழில் இவை **மொழி, கால், கை, எருவாய், கருவாய்** என்று வழங்கப் பெறும், இவையும் தத்துவங்களாகப் பேசப்படுமிடத்து நா முதலிய இடங்களில் நின்று பேசுதல் முதலிய செய்யும் ஆற்றல் களையே குறிக்கும்.

வைகாரியகங்காரங்களினின்றும் முறையே ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றும் வாக்கு முதலிய ஐந்தும் முறையே **மொழிதல், புடைபெயர்தல், இடுதல், ஏற்றல், கழிப்பன கழித்தல், இனப்பெருக்கம் செய்தல்** என்றும் தொழில் களைச் செய்யும். இவ்வைந்து தொழில்களும் முறையே **வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம்** என்று வடமொழியில் கூறப்பெறும் எனவே, வசனம் முதலிய ஐந்தும் கன்மேந்திரியங்களின் – விடயம் – புலன் என்பது தெளிவாகும். வாக்கு முதலிய ஐந்தும் தொழில் செய்வதற்குக் கருவியாத லின், **கன்மேந்திரியங்கள்** என்று வழங்கப்பெறும்.

**(இ) தந்மாத்திரைகள்:** தாமதாசகங்காரமாகிய பூதாதி யகங்காரத்தினின்றும் **சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம்** என்னும் தந்மாத்திரைகள்[71] ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றும். பூதங்கட்கு முதற்காரணமாய் நிற்றல்பற்றியே இவ்வகங்காரம் **'பூதாதியகங்கரம்'** எனப்பெயர் பெற்றது என்பது அறியப் படும். பூதங்கள் ஐந்து என்பதும், அவை **பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்** என்பதும், அருந்தமிழில் அவை **நிலம், நீர், தீ, வளி, விசும்பு** என்று வழங்கப்பெறும் என்பதும் நாம் அறிந்தவையே. இங்குக் கூறியமுறை ஒடுக்கமுறை பற்றியதாகும். தோற்றமுறையில் அவை ஆகாயம், வாயு,

71. இந்த நிலை பாலின் தன்மை முழுதும் நீங்காமலும் தயிரின் தன்மை முழுதும் தோற்றாமலும் உள்ள நிலைமையைப போன்றதாகும்-என்று சொல்லி வைக்கலாம்.

தேயு, அப்பு, பிருதிவி என்னும் முறையில் அமையும். பூதங்கள் ஐந்தும், அவற்றின் செயல்களும் ஒருவாற்றாற் புலனாவன. ஆதலின் அவை '**தூலப்பொருள்கள்**' என்பது தெளிவு. சூக்குமமாகிய காரணத்தினின்றும் தூலமாகிய காரியம் தோன்றுங்கால் நேரே தூலமாய்த் தோன்றாது. முதற்கண் ஒருவாற்றாற் சூக்குமமும், ஒருவாற்றாற் தூலமுமாய நிலையில் தோன்றி அதன் பின்னரே தூலமாய்த் தோன்றுவதாகும். தூலமாகிய ஆகாயம் முதலிய பூதங்கள் ஐந்தும் பூதாதியகங் காரத்தினின்றும் நேரே அங்ஙனம் தோன்றாமல் முதற்கண் தந்மாத்திரைவடிவில் தோன்றிய பின்னரே பூதவடிவில் தோன்றுவனவாகும். பூதங்களின் சூக்குமநிலையே தந்மாத் திரையாதல்பற்றி அவை '**சூக்கும பூதம்**' எனவும் வழங்கும். அதனால் பூதங்களைத் '**தூல பூதம்**' எனவும், '**மகா பூதம்**' எனவும் வழங்குவர். எனினும் 'பூதம்' என்பது தூலநிலைக்கே உரிய பெயராதல் அறியப்படும். சூக்கும பூதங்கள் '**தந்மாத்தி ரைகள்**' என்றே கூறப்பெறும்.

**முக்கிய ஒன்று:** பூதங்கட்கு முதற்காரணமாய்ச் சூக்கும நிலையில் நிற்கும் இத் தந்மாத்திரைகளின்பெயரே, பூதங்களின் குணமாய்ச் செவி முதலிய ஞானேந்திரியங்கட்குப் புலனாகும் ஐம்புலன்கள் (அல்லது விடயங்கட்குப்) பெயராய் நிற்கும். அதனால் அவ்விரண்டையும் ஒன்றே என மயங்காது வேறு வேறு என்று உணர்ந்து தெளியப்படும். **சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம்** ஆகிய தந்மாத்திரைகள் ஐந்தும் முறையே தண்டமிழில் **ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம்** என வழங்கப்படும்.

**பெயர்விளக்கம்:** இனி, 'தந்மாத்திரை' என்பதன் பொருளையும் அறிந்து கொள்ளல் மிகவும் இன்றியமையாதது. இதன் பொருள் '**அதனளவாய் நிற்றல்**' என்பது. அதாவது

வேறொன்றுடனும் கூடாது 'தனித்து நிற்றல்' என்பதாகும். ஒரு பொருள் வேறு எப்பொருளோடும், எவ்வாற்றாலும் தொடர்பு படாது தனித்து நிற்றலைக் '**கேவலம்**' என்றும், அவ்வாறின்றி எவ்வாற்றாலேனும் பிறவற்றோடு தொடர்புற்று நிற்றலை '**விசிட்டம்**' என்றும் கூறுவர் வடநூலார். இவைமுறையே 'தனி நிலை', 'தொகைநிலை' என்று தமிழில் வழங்கப்பெறும். இவற்றுள் 'தனிநிலை அல்லது கேவலம்' என்பதே 'தந்மாத்திரை' என்பதன் பொருளாகும். இக்காரணப்பெயர் வேறு சிலவற்றிற்கும் பொருந்துமாயினும் காரண இடுகுறிப் பெயராய் சூக்குமப் பூதங்களையே குறிக்கின்றது. தூலபூதங்கள் 'விசிட்டமாய்' நிற்றலின், சூக்கும பூதங்கள் 'கேவலமாய்' நிற்கும் என்பதும் உணர்ந்து தெளியப்படும்.

**மேலும் தெளிவாக்கம்:** ஆகாயம் 'சத்தம்' என்னும் ஒருகுணமே உடையது. வாயு சத்தத்தோடு 'பரிசம்' என்னும் குணத்தையும் உடையது. தேயு அவ்விரண்டனோடு 'உருவம்' என்பதுடன் மூன்று குணத்தையுடையது. அப்பு, இம்மூன்றனோடு 'இரதம்' என்ற குணமும் சேர்ந்து நான்கு குணத்தையிடையது. பிருதிவி 'சத்தம், பரிசம், உருவம், இரதம், கந்தம்' என்னும் ஐந்து குணங்களையும் உடையது. இவற்றுள் ஒன்றின் ஒன்று ஏற்றமாகவுடைய குணம் அவ்வைம்பூதங்கட்குச் சிறப்புக் குணமாகும். அதாவது, வாயுவுக்குப் பரிசமும், தேயுவுக்கு உருவமும், அப்புவுக்கு இரதமும், பிருதிவிக்குக் கந்தமும் சிறப்புக் குணங்களாகும். ஏனையவை பொதுக் குணங்கள் இச்சிறப்புக் குணங்கள் தூலபூதங்களின் பலவகை வேறுபாட்டுடன் காணப்படும். அவ் வேறுபாடுகளையுடையவைராய் இருத்தலே '**விசிட்டம்**' என்றும் அவ்வாறின்றிப் பொதுமையில் நிற்பதே '**கேவலம்**' என்றும் அறியப்படும். இதனை மேலும் விளக்கினால், ஆகாயத்தின் குணமாகிய

சத்தம் வல்லோசை, மெல்லோசை இடையோசை என்பவற்றோடு கூடிப் புலனாகி நிற்றலை விசிட்டமாய் நிற்றலாகும். அதனால் அவ்வேறுபாடின்றி 'ஓசை' எனப் பொதுமையில் நிற்பதே கேவலம். இந்நிலையே '**சத்த தந்மாத்திரை**' என்பது.

இவ்வாறே வாயுவின் சிறப்புக் குணமாகிய் பரிசம் வாயுவினிடத்தில் தட்பம், வெப்பம் முதலாய பல்வேறு வகையாயும், தேயுவின் குணமாகிய உருவம் தேயுவினிடத்தில் செம்மை, கருமை, வெண்மை, பசுமை, பொன்மை முதலாகப் பல்வேறு வகையாகவும், அப்புவின் சிறப்புக் குணமாகிய இரதம் அப்புவினிடத்தில் இனிப்பு, கசப்பு, புளிப்பு முதலாகப் பல்வேறு வகையாயும், பிருதிவியின் சிறப்புக் குணமாகிய கந்தம் பிருதிவியினிடத்தில் சுகந்தம், துர்க்கந்தம் என இருவேறு வகைப்பட்டுப் பலவாயும் காணப்படும். இவை இங்ஙனம் வேறுபட்டு வெளிப்படநிற்கும். நிலையே அவ்வப் பூதங்கள் விசிட்டமாய் நிற்கும் நிலையாகும். அவ்வாறின்றிப் பொதுமையில் பரிசம், உருவம், இரதம், கந்தம் என்னும் அளவாய் நிற்றலே '**தந்மாத்திரை**' என உணர்ந்து தெளியப்படும்.

**இன்னோர் உண்மை:** 'சத்த தந்மாத்திரை, பரிச தந்மாத்திரை, உருவ தந்மாத்திரை, இரத தந்மாத்திரை, கந்த தந்மாத்திரை எனவழங்குதல்பற்றி அத் தந்மாத்திரை ஒவ்வொன்றும் சத்தம் முதலிய ஒவ்வொன்றாகவே நிற்கும் போலும் என மயங்குதல் கூடாது. ஏனெனில் சத்தம் ஒழிந்த ஏனைய நான்குமாத்திரைகளும் பூதங்களில் சொல்லியது போல அமைந்து, அதனதன் சிறப்புக் குணம் பற்றி பரிச தந்மாத்திரை, உருவதந்மாத்திரை, இரத தந்மாத்திரை, கந்த தந்மாத்திரை என வழங்கப் பெறுகின்றன.

எனவே, பூதாதி அகங்காரத்தினின்று தந்மாத்திரைகள் தோன்றுங்கால் முதற்கண் சத்தம் ஒன்றேயாய்ச் சத்த தந்மாத்

திரை தோன்றும். அதன்பின் சத்தத்தோடு பரிசம் கூடப் பரிச தந்மாத்திரை தோன்றும். அதன்பின் உருவ தந்மாத்திரையும், அதன்பின் இரத தந்மாத்திரையும், அதன் பின் கந்த தந்மாத்திரையும் முன்பின் தோன்றிய குணங்களோடு கூடியே தோன்றும். ஆகவே, இம்முறையில் நோக்கும்பொழுது சத்த தந்மாத்திரை ஒன்றே **'கேவலம்'** என்றும் ஏனைய நான்கும் **'விசிட்டம்'** என்றும் தெளிவாகின்றதன்றோ?

**பிறிதோர் உண்மை:** 'காரியத்தில் உள்ளது காரணத்திலும் உளதாகும்' என்பதை நாம் அறிவோம். எனவே, பூதங்களில் பலவகை வேறுபாட்டோடு தூலமாய்க் காணப்படும் முறைகள் அப்பூதங்கட்குக் காரணமாகிய தந்மாத்திரையிலும் வேறுபாடின்றிச் சூக்குமமாய்க் கிடத்தல் வேண்டும். அவ்வாறில்லையேல் ஒரோவொரு குணமேயுடையவற்றினின்று இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்னும் குணங்களுடையவை தோன்றதல் கூடாது. ஆதலால் இவற்றிற்குத் **'தந்மாத்திரை'** என்னும் பொருந்துமாற்றை முன்பே விளக்கியுள்ளோம். ஆகவே 'சத்தம் ஒழிந்த ஏனைய தந்மாத்திரைகள் நான்கும் கேவலமாகாது விசிட்டமேயாகும்' என்பது உணர்ந்து தெளியப் படும். ஆகாயம் சத்த குணம் ஒன்றேயுடைமையின், அது கேவவலமாய் நிற்கும். சத்த தந்மாத்திரையினின்றும் தோன்று தல் கூடும் என்பதும் அறியப்படும்.

இக்கூறியவற்றால் தந்மாத்திரைக்கும் பூதங்கட்கும் உள்ள வேற்றுமை முளையும் மரமும் போல சூக்குமமும் தூலமுமாம். அவ்வளவே; வேறில்லை. எனவே, பூதாதியகங்காரத்தினின் றும் தந்மாத்திரைகள் மேற்கூறியவாறு தோன்றியபின் முதற் கண் சத்தத் தந்மாத்திரையினின்றும் ஆகாயமும், அதன் பின்னர் பரிசத் தந்மாத்திரையினின்றும் தேயுவும், அதன்பின் இரதத் தந்மாத்திரையினின்றம் அப்புவும், அதன்பின்னர் கந்த

தந்மாத்திரையினின்றும் பிருதிவியும் தோன்றும் என்பது காட்டப்பட்டது.

## (iii) ஐம்பெரும் பூதங்கள்

**(அ) தந்மாத்திரை ஐந்தனுள்** ஒவ்வொன்றினின்றும் ஒவ்வொரு பூதம் தோன்றும். பூதங்கள் ஐந்து. அவை பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்பன. தந்மாத்திரைகள் பற்றிக் கூறும்போது பூதங்கள் பற்றிக் கூறியவற்றை ஈண்டு நினைவு கூர்ந்து தெளியலாம். இப்பூதங்கள் தத்தம் முதற்காரணமாகிய தந்மாத்திரைகளின் சத்தம் முதலிய குணங்களைப் பெற்றிருத் தலின், அவற்றை அறியும் செவி முதலிய ஞானேந்திரியங் கட்கு நிலைக் களமாய் நின்று அவற்றிற்கு வலிமையைத் தந்து நிற்கும். அதுவன்றி வாக்கு முதலிப கன்மேந்திரையங்கட்கும் நிலைக்களமாய்ப் பேசுதல் முதலியவற்றிற்குத் துணைபுரிந்து நிற்கும். ஆகாயம் முதலிய பூதங்கள் ஐந்தும் சத்தம் முதலிய குணங்கள் ஐந்தனையும் ஒன்று முதல் ஐந்து ஈறாக ஒவ்வொரு குணத்தையும் ஏற்றமாகப் பெற்று நிற்கும். இதனை,

> பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
> நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி[72]

என்பன முதலாக வரும் திருமொழிகளாலும் உணர்ந்து கொள்ளலாம்.

காரியத்தின் தன்மையே காரணத்திலும் இருக்கும் என்பது ஓர் உண்மை. ஆதலால் இவற்றிற்கு முதற்காரண மாகிய தந்மாத்திரைகள் இத்தன்மையனவேயாகும். அதாவது சத்த தந்மாத்திரையொன்றே தனிப் பொருளாய் நிற்க ஏனைய தந்மாத்திரைகள் நான்கும் முன் சொல்லியவற்றோடு தாம்

72. திருவா. போற்றித்திருவகவல் அடி. (137-138)

சிறப்பாகக் கூடி இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்னும் குணங்களையுடையனவாய் பரிச தந்மாத்திரை, உருவ தந்மாத்திரை, இரத தந்மாத்திரை, கந்த தந்மாத்திரை என்று பெயர் பெற்று நிற்கும்.

தத்துவங்கள் முப்பத்தாறும் தோன்றுங்காலத்து இம்முறையே தோன்றுதலின் ஒடுங்கும் காலத்திலும் இம்முறையே ஒடுங்குவனவாகும் என்பது அறியப்படும். இத்தோற்ற ஒடுக்கங்களை இறைவன் நேரேயும், பிறர் வாயிலாகவும் செய்விக்க நிகழ்வனவன்றித் தாமே நிகழமாட்டா என்பதும் கருத்தில் இருத்தப்படும். 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்று பொதுமக்கள் வாக்கில் நிலவும் பழமொழியின் உண்மையும் இத் தத்துவத்தை உணர்த்துவதை ஓர்ந்து உளங்கொள்ளலாம்.

வேதக்கருத்து: வேதத்துள் ஆன்மாவினின்றும் ஆகாயம் தோன்றிற்று; ஆகாயத்தினின்றும் வாயு தோன்றிற்று; வாயுவினின்றும் தேயு தோன்றிற்று; தேயுவினின்றும் அப்பு தோன்றிற்று; அப்புவினின்றும் பிருதிவி தோன்றிற்று என்று கூறப்பெற்றுள்ளது. தேவாரத்துள்ளும்,

இருநிலனது புனலிடைமடிதர,எரிபுக எரியதுமிகு
பெருவளியினில் அவிதர,வளி கெடவியனிடை முழுவது கெட
இருவர்களுடல் பொறையொடுதிரிஎழிலுருவுடை யவன் இனமலர்
மருவியஅறு பதம்இசை முரல் மறைவனம்அமர் தருபரமனே.[73]

என வந்துள்ளது. இவ்வகையான் கூற்றுகள் யாவும் தத்துவத் தோற்ற ஒடுக்கங்களை நுண்ணிதாக எடுத்து விளக்கக் கருதாது, அவற்றைப் பொதுப்படக் குறித்து, இறைவனின் திருவருட் பெருமை ஒன்றையே வற்புறுத்திப் போதலைக் கருதினமையின், அவை தந்மாத்திரைக்கும் பூதங்கட்கும்

73. சம்பந்தர் தே.1.22:7

வேற்றுமை காட்டாது ஒற்றுமைப்பட வைத்து பொதுமையிற் கூறிப் போந்தன. சிவாகமங்கள் அவ்வாறின்றித் தத்துவங்களின் தோற்ற ஒடுக்கங்களை நுண்ணிதாக விளக்கக்கருதி எழுந்தன வாதலின் அவற்றுட் கூறியவாறே மேற்குறித்த வேதப் பகுதிக்கும் தேவாரத் திருவருட்பாடலுக்கும் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

**(ஆ) பூதங்களின் குணமும் செயலும்:** ஆகாயம் முதலிய பூதங்களில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தனிப்பட்ட குணம் உண்டு. **ஆகாயத்தின்** குணம், வெளியாதல்; செயல், எப்பொருட்கும் இடங்கொடுத்தல். **வாயுவின்** குணம், நில்லாது அசைதல்; செயல், பரந்து கிடக்கும் பொருள்களை ஒருங்குதிரட்டல் (குவித்தல்). **தேயுவின்** குணம் வெம்மை (சூடு); செயல், சுட்டு ஒன்றுபடுத்தல் அல்லது பாகம் பண்ணுதல். **அப்புவின்** குணம், தண்மை (குளிர்ச்சி); செயல், பதம் செய்தல் (மென்மைப்படுத்தல்). **பிருதிவியின்** குணம், திண்மை (கடிதனமாதல்); செயல், எப்பொருளையும் தாங்குதல்.

உலகாயதர் 'ஆகாயம் என்று ஒருபொருள் இல்லை; யாதொரு பொருளும் இல்லாதிருப்பதே ஆகாயம்' என்று கூறுவது தவறு. இதற்கு விடை; இல்லாமை இல்லாமையைத் தருமே அன்றி, இருப்பதைத் தராது. நிலம் இல்லையென்றால் தாங்குதல் இராது போகுமேயன்றி, மற்றொரு செயல் இராது. அதுபோல் யாதொரு பொருள் இல்லாமையே ஆகாயம் எனின், ஆகாயத்தால் யாதொரும் செயலும் நிகழாதிருத்தல் வேண்டும். ஆனால், எப்பொருளும் இருப்பதும், உலாவுவதும் ஆகாய வெளியிலேதான். ஆகவே, அச்செயல் நிகழ்ச்சிக்கு இடமாய் இருக்கும் ஆகாயத்தை இல்லை என்று கூறுதல் தவறு; அஃது அறியாமையால் கூறுவதாகும். நிலத்தின்மீது கட்டப்பெறும் மாளிகைகளின் அகல நீளங்கட்கு நிலம் பற்றுக்

கோடாக இருப்பது போல, அவற்றின் உயரத்திற்கு ஆகாயம் பற்றுக் கோடாயிருத்தல் வெளிப்படை.

பொருள்கள் ஒன்றோடொன்று தாக்கும் பொழுது எழும் ஓசை வேறுபாட்டிற்குக் காரணம் ஆகாயத்தின் வெளி அப்பொருளினுள் வேறுபட்டிருத்தலேயாகும். ஆகாயமே இல்லையெனின் ஓசையே எழாது. ஆகவே, ஓசையைக் குணமாக உடையதாய் இடங்கொடுத்தலைச் செய்யும் ஆகாயம் உள்பொருளேயாதல் அறியப்படும். "**நிலம் தீ நீர்வளி விசும்போடைந்தும் கலந்த மயக்கமாதலின்**"[74] எனத் தொல்காப்பியரும், "**பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும்.**"[75] என்று திருவள்ளுவரும் பூதங்கள் ஐந்து எனக் கூறுதலைக் காணலாம்.

**(இ) பூதங்களின் வடிவம், நிறம் முதலியவை:** தத்து வங்களின் இயல்பை உள்ளவாறு உணர்வது அவற்றிற்கட்டுற்று நில்லாது நீங்குதற் பொருட்டேயாகும். அங்ஙனம் நீங்கும் வழிகளில் அவற்றை அதிதேவர்களின் வழி வழிபட்டு நீங்கும் முறை உண்டு. அம்முறையில் யாவராலும் நன்கறியப்பெற்ற பூதங்கட்கு வடிவம், நிறம், குறி, எழுத்து, அதிதேவர் என்பவற்றை ஆகமங்கள்கூறும்.

**பிருதிவி:** இதற்கு வடிவம் நாற்கோணம்; நிறம் பொன்மை; குறி (அடையாளம்) வச்சிராயுதம்; எழுத்து லகர மெய்; அதிதேவர், பிரமன்.

**அப்பு:** இதற்கு வடிவம் பிறை; நிறம் வெண்மை; குறி தாமரை மலர்; எழுத்து வகரமெய்; அதிதேவர் திருமால்.

74. தொல். பொருள். மரபு-2

75. குறள். 271 (கூடாவொழுக்கம்)

**தேயு:** இதற்கு வடிவம் முக்கோணம்; நிறம் செம்மை; குறி சுவ(ஸ்)த்தி; எழுத்து ரகர மெய்; அதி தேவர் உருத்திரன்.

**வாயு:** இதற்கு வடிவம் அறுகோணம்; நிறம் கருமை; குறி ஆறு புள்ளி; எழுத்து யகர மெய்; அதி தேவர் மகேசுவரன்.

**ஆகாயம்:** இதற்கு வடிவம் வட்டம்; நிறம் புகைமை; குறி அமுதவிந்து (.); எழுத்து அகர உயிர்; அதி தேவர் சதாசிவன்.

எழுத்துகள் வித்தெழுத்துகளாம் (பீஜாக்கரங்களாம்). ஆகவே அவை ஆ, ஈ, ஊ, ஐ, அ என்னும் உயிரெழுத்துக் களோடு கூட்டி உச்சரிக்கப்படும். இம்மெய்யெழுத்துகள் அனைத்திற்கும் முதலில் ஹகார மெய் சேர்க்கப்பெறும்.

## (iv) பெயர்க்காரணம்

சித்தாந்தத்தில் சில பெயர்களின் காரணம் ஈண்டு தரப் பெறுகின்றது.

(அ) 'ஆன்மதத்துவம்' என்பதில் 'ஆன்மா' என்பது முன்னர்ச் சகல வர்க்கத்தினராகிய ஆன்மாக்களைக் குறித்துப் பின்னர் அவ்வான்மாக்கட்குத் தலைவராகிய சீகண்ட ருத்திரரைக் குறிக்கும். மூலப் பிரகிருதியிலிருந்து குணதத் துவம் முதலியவற்றைத் தோற்றி ஒடுக்குபவர் சீகண்ட உருத்திரராதல்பற்றி இவ்விருபத்து நான்கு தத்துவங்களும் '**ஆன்ம தத்துவங்கள்**' என்று பெயர் பெற்றன.

(ஆ) அசுத்தமாயையிலிருந்து மாயை, காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன் என்னும் தத்துவங்களை

'அனந்தர்' என்னும் வித்தியேசுவரர் தோற்றி ஒடுக்குவதால் அவை ஏழும் '**வித்தியாதத்துவங்கள்**' எனப் பெயர் பெற்றன.

(இ) சிவம், சக்தி, சதாக்கியம், ஈசுரம், சுத்த வித்தை என்னும் ஐந்தையும் சத்தமாயையிலிருந்து சிவபெருமானே தோற்றி ஒடுக்குவதால், இவை '**சிவதத்துவங்கள்**' எனப் பெயர் பெற்றன. மேலும், சிவபெருமான் அருவம், அருவுருவம், உருவம் என்னும் மூவகைத் திருமேனிகளுடன் எழுந்தருளியிலிருந்து ஐந்தொழில் புரிவதற்கு இவ்வைந்து தத்துவங்களேயாதல் பற்றியும் இவை '**சிவதத்துவங்கள்**' எனப்பட்டன.

(ஈ) தத்துவம் முப்பத்தாறனுள் சுத்தமாயையின் காரியமாகிய சிவதத்துவம் ஐந்தும் இறைவனுக்கு இடமாகி நின்று தமக்குக் கீழ் உள்ள தத்துவங்களை இயக்கி நிற்பதால் அவை '**பிரேரக காண்டம்**' எனப்படும். அசுத்தமாயையின் காரியங்கள் ஏழும் ஆன்மாவைப் போகம் நுகர்வதற்குத் தகுதி செய்தலின் இவை '**போசயித்திருகாண்டம்**' என வழங்கப் பெறும். பிரகிருதியின் காரியங்களாகிய ஆன்ம தத்துவம் இருபத்து நான்கும் முக்குணவடிவாய் ஆன்மாவிற்கு நுகர்ச்சியைத் தருதலின் இவை '**போக்கிய காண்டம்**' என்று நுவலப் பெறும்.

(உ) பிரேரக காண்டமாகிய சிவதத்துவங்கள ஐநதும ஆணவத்தோடும் கன்மத்தோடும். கலவாது நிற்றலால் '**சுத்தம்**' எனப்படும். போசயித்திருகாண்டமாகிய வித்தியா தத்துவங்கள் ஆணவத்தோடும், கன்மத்தோடும் கலந்திருப்பினும், குண ரூபமாய் நில்லாமையால், ஓரளவு தூய்மையாதலின்' '**மிச்சிரம்**' எனப்படும். போக்கிய காண்டமாகிய ஆன்ம தத்துவங்கள் ஆணவத்தோடும் கன்மத்தோடும் கலந்து முக் குணரூபமாய் நிற்றலின் '**அசுத்தம்**' என்று சொல்லப்பெறும்.

## (V) மூவகை உயிர்கள்—சரீரங்கள்

(அ) மூவகை உயிர்களுள் '**விஞ்ஞானகலர்**' எனப் படும் ஒரு மலம் உள்ள உயிர்கட்கு வரும் தனு கரண, புவன போகங்கள் **சுத்தமாதலால்** அவையெல்லாம் சுத்த தத்துவத்தி னின்றும் தோன்றுவனவே; அதனால் விஞ்ஞானகலரின் சரீரங்கள் **வைந்தவ சரீரமாகும்.** வைந்தவம் – விந்துவின் காரியம்.

**(ஆ) பிரளயாகலர்** எனப்படும் இருமலம் உடைய உயிர்கட்கு வரும் தனு, கரண, புவன, போக்கியங்கள் **மிச்சிரமாதலால்**' அவையெல்லாம் வித்தியாதத்துவங்களி னின்றும் தோன்றுவனவாகும். அதனால் பிரளயாகலரது சரீரம் **மாயேய சரீரமாகும்.** மாயேயம் – மாயையின் காரியம்.

**(இ) சகலர்** எனப்படும் மும்மலம் உடைய உயிர்களுக்கு வரும் சரீரம் **அசுத்தமாதலால்** அவையெல்லாம் ஆன்ம தத்து வங்களின்றும் தோன்றுவனவாகும். அதனால் சகலரது சரீரம் **பிராகிருத சரீரமாகும்.** பிராகிருதம் – பூமியின் காரியம். சகலரை ஒழிந்த ஏனை இருதிறத்தாரின் சரீரங்களும் பிரகிருதி யோடு தொடர்பின்மையால் 'அவையிரண்டும் அப்பிராகிரு தம் – பிரகிருதியுடன் தொடர்பில்லாதவை' என்பது அறிந்து தெளியப்படும்.

**(ஈ) முக்குணங்களின் செயற்பாடு:** பிரகிருதியின் காரியங்களே முக்குணவடிவாய் நின்று மயக்கத்தைச் செய்தலின், அவை இல்லாதவர்கட்கு மயக்கம் இல்லை. மயக்கம் என்றால் என்ன? எல்லாம் முதல்வன் செயலேயாய் இருக்க, அதை உணராது எல்லாச் செயல்கட்கும் தம்மையும் பிறரையும் தலைவராக நினைந்து செருக்கும், பகையும் கொள்ளுதலாகும். இதுவே 'யான் என்னும் செருக்கு' என்று

மொழியப்படும். இது நிலவுலகிலுள்ள மக்கட்கேயன்றி, வானுலகிலுள்ள தேவர்க்கும், அவர்கட்குத் தலைவராகிய இந்திரன், அயன், மால் என்பவர்கட்கும் உள்ளது. எனவே, அவர்களும் பிராகிருதராகிய சகலரேயாவர். மேலும், மக்களே யன்றி தேவரையுள்ளிட்ட ஏனை அறுவகைப் பிறப்புகளும் பிராகிருதமேயன்றி, ஒன்றேனும் அப்பிராகிரதமன்று என்பது அறியப்படும். இதனால் அயன் மால் உள்ளிட்ட தேவர் முதலிய பலரும் முக்குணவயத்தராய் 'யான், எனது' என்னும் செருக்கு களுற்று, இன்பம் துன்பம் மயக்கம் என்பவற்றுள் அழுந்தி, மலர்ச்சி, வாட்டம், மடி என்பவற்றையும், பொறுமை, பொறாமை, புறக்கணிப்பு முதலியவற்றையும் உடையவர்களா வர் என்பது பெறப்படும். இதுபற்றியே திருவள்ளுவரும்,

> யான்என தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்(கு)
> உயர்ந்த உலகம் புகும்.[76]

என ஞானம் பெற்றோரைத் தேவரினும் மேம்பட்டவர் எனக் கூறியதன் நுட்பமும் உணர்ந்து தெளியப்படும்.

**(உ) ஓர் உண்மை:** தேவர்களேயன்றி, பிரமன், மால் உருத்திரன் ஆகியவர்கள் முக்குணமுடைய சகலரேயெனி னும், அவர்களுள் உருத்திரன் பக்குவம் எய்தினவன். இவன் சிவபெருமானை வழிபட்டு இப்பெருமானது உருவத்தையும் தொழிலையும் பெற்று நிற்பவன். அதனால் இவன் ஏனைய இருவரினும் மேம்பட்டு மயக்கமின்றி இருப்பான். இங்ஙனம் மூவரும் தேவரும் முதலாகவுள்ள சகல வர்க்கமாகிய ஆன்மாக்கட்கெல்லாம் சீகண்ட உருத்திரரே தலைவர். இவர் மூவருள் ஒருவனாகிய குணிருத்திரனைப் போலச் சகலராகாத வர். பிரளயாகலருள் பக்குவம் எய்திப் பரமசிவனை உணரும் ஞானத்தைப் பெற்று அப் பெருமானது திருவுளக் குறிப்பின்

76. குறள்- 346 (துறவு)

படி நான்கு தோள்கள், முக்கண், கறைமிடறு, மான், மழு இவற்றையுடைவர். இவர் பிரகிருதி புவனங்கட்கெல்லாம் தலைமை எய்தி மூவரும், தேவரும் முதலிய சகலவர்க்கத்தினர் அனைவரையும் ஆளும் தகைமையுடையவர். அதனாற் இவர்வழி நிகழும் செயல்களெல்லாம் பரமசிவனது செயல்களாய் நிற்கும் என்பது உளங்கொள்ளப்படும். இதுபற்றியே இவர் அவ்வவ் அவதாரங்களில் கொண்ட மூர்த்தங்கள் பலவும் **'மாகேசுவர மூர்த்தங்கள்'** என வழங்கப்பெறுகின்றன என்பதும் அறியப்படும். இவருக்குத் தோற்றமும் ஒடுக்கமுமாகிய இடம் மாயா தத்துவமாயினும் புருடத் தத்துவத்தில் நின்று பிரகிருதி புவனங்களையெல்லாம் ஆளுவர். இவர் புருட தத்துவத்தை இதயம் போலவும், அவ்யத்கமாகிய பிரகிருதியை இடப்பாதி போலவும், வியக்தமாகிய குணதத்துவத்தை வலப்பாதி போலவும் அதிட்டித்து நின்று அவற்றில் முறையே உருத்திரன், மால், அயன் என்னும் குணமூர்த்திகளைத் தோன்றுவிப்பர். அதனால் இம்மூவர்கட்கும் இத்தத்துவங்களே தோற்றமும் ஒடுக்கமுமாகிய இடமாகும். சிவபெருமானது வலப்பாகத்தில் பிரமனும், இடப்பாகத்தில் மாயோனும், இதயத்தில் உருத்திரனும் தோன்றினர் என்று புராணங்களில் கூறப்பெறுவதற்கு இதுவே கருத்து என்பது அறியலாகும். குணவேறுபாடு தோற்றாமையின் அவ்யக்தமே மாயோன் பள்ளி கொள்கின்ற **'பாற்கடல்'** என்று வழங்கப்பெறுகின்றது என்பதையும், அவனது உறங்குதல் என்பது அவ்யக்தத்தில் நிற்றலையே குறிக்கும் என்பதையும் அறிந்து தெளியலாம். குணதத்துவம் பிரகிருதியின் தத்துவங்கள் அனைத்தையும் தோற்றுவிக்கும் நிலையில் வியக்தமாய் நிற்றலால் அதன்கண் தோன்றி நிற்கும் பிரமன் நாற்றத்தையுடைய மலரின்கண் தோன்றி அதன்கண்ணே வீற்றிருப்பவனாகச் சொல்லப்படுகின்றான். பிரமன்தோன்றி வாழும் தாமரைமலர், மாயோனது

உந்திக்கமலம் எனப்படுவதும், குணதத்துவம், பிரகிருதியி னின்றும் நேரே தோன்றும் காரியமாதல் பற்றியேயாகும் என்பதும் அறியப்படும்.

**(ஊ) தத்துவ நிலைகள்:** மூலப்பிரகிருதி மிகவும் தூலம். அசுத்தமாயை தூலம். சுத்தமாயை சூக்குமம். சூக்குமத் தில் தூலம் வியாப்பியம் (உள்ளடக்கம்). ஆதலின், சுத்தமாயை வியாபகமும், அசுத்தமாயை அதில் வியாப்பியமும் ஆகும், பிரகிருதி மாயை அசுத்த மாயையின் காரியமாதலின், அஃது அசுத்தமாயையின் வியாப்பியம் என்பது தானே போதரும். சூக்குமமும் வியாபகமுமாகிய பொருள் 'மேலே உள்ளது' என்றும், தூலமும் வியாப்பியமுமான பொருள் 'கீழே உள்ளது' என்றும் சித்தாந்தம் கூறும். காரணம், சூக்குமமாதலின் அது மேலே உள்ளதும், காரியம் தூலமாதலின் அது கீழே உள்ளதும் ஆகும். எனவே, தத்துவங்களில்முன்னர்த் தோன்றியது மேலே உள்ளதும், பின்னர்த் தோன்றியது. கீழே உள்ளதும் ஆதல் தெளியப்படும். இம்முறையில் '**பிருதிவி**' என்னும் தத்துவமே எல்லாவற்றிலும் கீழே உள்ளது என்பதும், '**சிவம்**' என்னும் தத்துவம் எல்லாவற்றிலும் மேலே உள்ளது என்பதும் அறிந்து தெளியத்தக்கது. சிவதத்துவம் '**நாதம்**' என்றும் சொல்லப் படுதலின் '**நாதாந்தம்**' என்பது முப்பத்தாறு தத்துவங்களும் கடந்தநிலை என்பதும் விளங்கும்.

**(எ) இன்னோர் உண்மை:** தத்துவங்களின் முறை தோற்றமுறை (உற்பத்திக் கிரமம்) ஒடுக்கமுறை (சங்காரக் கிரமம்) என இருவகையாகப் பேசப்பெறும். தோற்றமுறையில் சிவதத்துவத்தை முதலாக வைத்து எண்ணுதலும், ஒடுக்கமுறை யில் பிருதிவியைமுதலாக வைத்து எண்ணுதலும் முறைகளாக இருந்து வருதலை அறிந்து கொள்ளலாம்.

**(ஏ) உடம்பின் வகைகள்:** தத்துவங்கள் முப்பத்தாறும் ஆன்மாக்களுக்கு உடம்புகளாகப் பரிணமித்து நிற்கும். அவை 'தூலம், சூக்குமம், பரம்' என்று மூவகைப்படும். பரம் – அதி சூக்குமம். பூதங்கள் ஐந்து, கன்மேந்திரியங்கள் ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து. ஆகப் பதினைந்து தத்துவங்களும் தூலசரீரமாய் நிற்கும். தந்மாத்திரைகள் ஐந்து, அந்தக்கரணங் களுள் மனம், அகங்காரம், புத்தி என மூன்று ஆக எட்டும் சூக்கும, சரீரமாய் நிற்கும். எட்டுத்தத்துவங்கள் ஆயினமை பற்றிச் சூக்குமசரீரத்தை **'பரியட்டக சரீரம்'** என்று வழங்குத லும் உண்டு. அந்தக்கரணங்களுள் சித்தமாக நிற்கும் குண தத்துவம் ஒன்று, வித்தியாதத்துவங்கள் ஏழு, ஆக, எட்டு தத்துவங்களும் பரசரீரமாகும். மூலப்பிரகிருதி குணதத்துவத் தின் வேறாகாமை அறியப்படும்.

பரசரீரத்துள் குண தத்துவம் முக்குணங்களாய் நிற்றலின் **'குணசரீரம்'** என்றும், காலம், நியதி முதலிய ஐந்தும் உயிர்கட்குச் சட்டைபோல் அமைதலின் **'கஞ்சுக சரீரம்'** என்றும், மாயாதத்துவமே ஏனைய தத்துவங்கட்குக் காரணமாக அமைதலின் அது **'காரணசரீரம்'** என்றும் வழங்கப்படும். சிவதத்துவம் ஐந்தும், சகலர் பிரளயாகலர்க்கு உடம்பாய் வருதல் இல்லை. இவற்றுடன் சூக்கும தூல சரீரங்களையும் கூட்டி, 'தூல சரீரம், சூக்கும சரீரம், குணசரீரம், கஞ்சுக சரீரம், காரணசரீரம்' என சரீரத்தை ஐந்தாகக் கூறுதலும் உண்டு. ஐந்தும் சரீரங்களும் **'ஐங்கோசங்கள்'** என வழங்கப்பெறும்.

**(ஐ) ஐங்கோசங்கள்:** இன்னவை எனக் காட்டப்பெறு கின்றன. தூலசரீரம் சோறும் நீரும் முதலிய உணவினால் நிலை பெறுவதாதலின் **'அன்னமயகோசம்'** எனப்படுகின்றது. சூக்கும சரீரம் பிராணவாயுவின் இயக்கத்தால் செயற்படுதலின் அது **'பிராணமய கோசம்'** என வழங்கப்பெறுகின்றது.

குணசரீரம் அந்தக் கரணத்தில் ஒன்றாகிய சித்தமாய் நிற்றலின் '**மனோமய கோசம்**' எனப்படுகின்றது. கஞ்சுக சரீரம் ஆன்மாவின் அறிவு இச்சை செயல்களை விளக்கி நிற்றலின் அது '**விஞ்ஞான கோசம்**' என மொழியப் பெறுகின்றது. காரண சரீரம் கேவலத்தில் மூடமாய்க் கிடந்த ஆன்மாவிற்குச் சிறிது விழிப்பைத் தந்து மயக்கி ஒருவகைக் களிப்பை உண்டாக்குதலின் அஃது '**ஆனந்த மயகோசம்**' என்று சொல்லப்படுகின்றது. கோசம் – சட்டை.

**(ஓ) தாத்துவிகங்கள்:** தத்துவங்களின் கூறுகளும் காரியங்களும் '**தாத்துவிகங்கள்**' எனப்படும். இவற்றின் தொகை **அறுபது** ஆகும். இவற்றையும் தத்துவங்கள் முப்பத்தாறுடன் சேர்த்துப் பொதுவாக '**தொண்ணூற்றாறு தத்துவங்கள்**' என்று வழங்குவர். **இவற்றின் விளக்கம்:** பிருதிவியின் கூறு 'எலும்பு, தசை மயிர், தோல் நரம்பு' என்னும் **ஐந்து**; அப்புவின் கூறு 'சிறுநீர், குருதி, சிலேத்துமம், வியர்வை, சுக்கிலம் (அல்லது சுரோணிதம்)' என்னும் **ஐந்து**; தேயுவின் கூறு 'இதயத்தில் வெப்பம், பசித்தீ; கண்ணில் வெப்பம், உடம்பில் வெப்பம், பைத்தியம்' என்னும் **ஐந்து**; வாயுவின் கூறு 'உதானன், பிராணன், அபானன், சமானன், வியானன், நாகன், கூர்மன், கிருதரன், தேவதத்தன், தனஞ் செயன்' என்னும் **பத்து**; ஆகாயத்தின் கூறு 'அத்தி, அலம் புடை, இடை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, குகூதை சங்கினி, சிகுவை, புருடன்' என்னும் நாடிகள் **பத்து**; ஞானேந்திரியங்களின் விடயங்கள் 'சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம்' என்னும் **ஐந்து**; கன்மேந்திரியங்களின் விடயங்கள் 'வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம்' என்னும் **ஐந்து**; அகங்காரத்தின் கூறு 'தைசதம், வைகாரிகம், பூதாதி' என்னும் **மூன்று**; 'காமம், குரோதம், உலோபம், மோகம், மதம்'

எனக் குற்றம் **ஐந்து** (மாற்சரியம் குரோதத்துடன் அடங்கும்); குணத்தின் கூறு 'சாத்துவிகம், இராசதம் தாமதம்' என்னும் **மூன்று**; 'சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி' என்னும் வாக்குகள் **நான்கு**. இவை அனைத்தையும் சேர்த்துத் **'தாத்துவிகங்கள்' அறுபது**. 'தத்துவங்கள் இருபத்து நான்கே' எனக்கூறுகின்ற மதங்களும் கருவிகள் தொண்ணூற்றாறு என்பதனைப் பிறவாறு ஒன்றுபடக் கூறும்.

## (iv) அண்டங்களின் வகைகள்

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன[77]

என்று அண்டங்களைப்பற்றி **மணிவாசகப் பெருமான்** கூறியுள்ளதை நினைவுகூரலாம். இத்திருமொழியின் கீழ்க் காணப்பெறும். 'சிவனது தூல சூக்குமத்தை வியந்தது' என்ற குறிப்பையும் சிந்திக்கலாம்.

தத்துவங்கள் உயிர்கட்குத் தனுவும் கரணமுமாய் நிற்பனவேயன்றிப் புவனமும் போகமுமாயும் உள்ள ஆதலின், அவையும் தத்துவங்களின் காரியமாகிய தா விகங்களாம். இவற்றுள் புவனம் உலகங்கள் பலவற் உள்ளடக்கிய அண்டங்களாய் நிற்கும். அஃதாவது ஆ தத்துவங்கள் ஒவ்வொன்றிலும் எண்ணிறந்த அண்டங்க அவ்வத்தத்துவத்தின் இயல்பிற்கேற்ற பரப்புடையனவாய் உள்ளன. அவ்வண்டங்கள் ஒவ்வொன்றையும் காத்தற்கு உருத்திரர் பலர் உளர். அவர்கள் பெயரால் அமைந்த பல புவனங்களாக அவ்வண்டங்களின் உள்ளும் புறம்புமாய

77. திருவா. திருவண்டப் பகுதி-அடி (1-4)

இடங்கள் பகுத்துக் கூறப்படும். எல்லாவற்றிலும் கீழ் உள்ளவை பிருதிவி தத்துவ அண்டங்கள். இவை 'ஆயிரங்கோடி' என்றும், 'இவற்றுள் ஓர் அண்டத்தில் நாம் வாழ்கின்றோம்.' என்றும் சிவாகமங்கள் கூறுகின்றன. இந்த அண்டங்களைப் பற்றி மகாகவி பாரதியார்,

நக்க பிரான் அருளால்—இங்கு
நடைபெறும் உலகங்கள் கணக்கிலவாம்!
தொக்கன அண்டங்கள்—வளர்
தொகைபல கோடிபல் கோடிகளாம்!
இக்கணக் கெவரறிவார்—புவி
எத்தனை யுளதென்ப தியாரறிவார்.[78]

என்றும் ,

விண்டு ரைக்க அறிய அரிதாய்
விரிந்த வான வெளியென நின்றனை
அண்ட கோடிகள் வானில் அமைத்தனை
அவற்றில் எண்ணற்ற வேகம் சமைத்தனை
மண்ட லத்தை அணுவணு வாக்கினால்
வருவ தெத்தனை அத்தனை யோசனை
கொண்ட தூரம் அவற்றிடை வைத்த
கோல மேநினைக் காளியென் றேத்துவேன்.[79]

என்றும் கூறியுள்ள கருத்து ஈண்டு நினைத்தல் தகும். இவ்வண்டங்களுக்குப் 'பிரமாண்டம்' என்பது பெயர் (பிரமம் – பெரியது). நாம் வாழும் பிரமாண்டம் நூறு கோடியோசனை உயரமுள்ளது. நடுப்பகுதியே பூமியின் பரப்பாகும். இது 'பூலோகம்' எனப்படும். இதன் கீழே '**அதலம், விதலம், சுதலம், தராதலம், ரசாதலம், மகாதலம், பாதலம்** என்கின்ற ஏழு உலகங்கள் உள்ளன. இவற்றின்கீழே பாவிகள் சென்றடையும் இருபத்தெட்டு கோடி நரகங்கள் உள்ளன. இவற்றின்கீழ்

78. பா.க. கோமதி மகிமை-செய்-5
79. பா.க. பராசக்தி வாழ்த்து-1

**'காலாக்கினி உருத்திரர், ஆடகேசுரர், கூர்மாண்டர்'** என்னும் உருத்திரர்கள் தத்தம் புவனங்களில் வசிப்பர்.

பூமியின் மேற்பரப்பே மக்கள் வாழும் **பூலோகம்.** இஃது ஒன்றை ஒன்று சூழ, ஏழுதீவுகளையுடையது. இவை சம்புத்தீவு, சாகத்தீவு, குசத்தீவு, கிரௌஞ்சத்தீவு, சான்மலித்தீவு, கோமேத கத் தீவு, புட்கரத் தீவு என்பவையாகும். சம்புத்தீவைச் சுற்றி உப்புக்கடல் உள்ளது. இவ்வாறே மற்றத் தீவுகள் முறையே பாற்கடல், தயிர்க்கடல், நெய்க்கடல், கருப்பஞ் சாற்றுக்கடல், மதுக்கடல், சுத்தநீர்க் கடல் என்னும் கடல்கள் சூழ்ந்துள்ளன. சுத்த நீர்க்கடலைச் சூழ்ந்து பொன்னிலமும், அதனைச் சூழ்ந்து இருள் நிலமும், அதனைச் சூழ்ந்து பெரும்புறக்கடலும் உள்ளன.

பூலோகத்தை நிலைபெறுவித்தற்கு அதன் நடுவே உருவாணியாய் அமைந்துள்ளது மகாமேருமலை. இதில் மேல் உலகத்திலுள்ள இந்திரன் முதலிய திசைக்காவலர்கட்கும், அயன், மால் சீகண்ட உருத்திரர் என்பவர்கட்கும் உரிய இடங்கள் ஒன்றன்மேல் ஒன்றாகவுள்ளன. இந்திரன் தவிர ஏனைய திக்குப்பாலகர்கட்கும் அவரவர் திக்கில் இடங்கள் அமைந்துள்ளன. இவர்கள் தம்தம் இடங்களில் அமர்ந்து தத்தம் அளவிற்கேற்ற அதிகாரங்களை இப்பூவுலகில் செலுத்தி வாழ்வர். சீகண்ட உருத்திரர் வாழும் இடமே எல்லா இடத்திற் கும் மேம்பட்ட இடமாகும். இக்கொடுமுடியே **'சோதிகட்கம்'** எனப்படும். **'கைலாசம்'** ஆகும். எனவே, பிரகிருதிக்குமேல் உள்ள சீகண்ட உருத்திரர் புவனம். **'மகாகைலாயம்'** ஆகும்; சுத்த மாயாஉலகங்கள் **'சிவலோகம்'** எனப்படுதலால் சில பொழுது இவ்வுருத்திர உலகமும் 'சிவலோகம்' என்று வழங்கவும் பெறும் என்பது அறியப்பெறும்.

18

மேற்குறிப்பிட்ட மகாமேருமலையின் தென்பால் '**நிடதம், ஏமகூடம், இமயம்**' என்ற மூன்று மலைகள் உள்ளன. வடபால் '**நீலம், சுவேதம், சிருங்கவான்**' என்ற மூன்று மலைகள் உள்ளன. கிழக்கில் '**மாலியவான்**' என்னும் மலையும், தெற்கில் '**கந்த மாதனம்**' என்னும் மலையும் உள்ளன. இந்த மலைகளால் நாவலந்தீவு ஒன்பது கண்டங்களாகப் பகுக்கப்பெறுகின்றது. அவை **இளாவிருத்தவருடம், பத்திராசுகவருடம், கேசுமால வருடம், அரிவருடம், கிம்புருவருடம், பாரதவருடம், இரம்பிய வருடம், இரணிய வருடம், குருவருடம்** என்பனவாகும். இவற்றுள் நாம் வாழும் '**பாரத வருடம்**' என்னும் '**பரத கண்டம்**' உட்பட ஒன்பது கண்டங்களையும் 'மனு' என்னும் அரசன் மக்கள் ஒன்பதின் மருக்கு உரியவாய் அவர்கள் பெயரால் வழங்கப்பெற்றன.

நாம் வாழும் பரதகண்டமும் ஒன்பது கண்டங்களை யுடையது. இவற்றுள் தென்கடலைச் சார்ந்த பகுதி '**குமரிக் கண்டம்**' என்று வழங்கப் பெறுகின்றது. பூலோகத்தில் 'பரத கண்டமே சிறந்தது' என்றும், பரதகண்டத்திலும் 'குமரிக்கண் டமே சிறந்த தெய்வபூமி' என்றும் சிவாகமங்கள் கூறுகின்றன.

மேற்கூறப்பெற்ற பூலோகத்தின்மேல் '**புவலோகம், சுவலோகம், மகலோகம், சனலோகம், தவலோகம், சத்திய லோகம்**' என்னும் **ஆறு** உலகங்கள் உள்ளன. புவலோகம் சந்திராதித்தர் முதலியோர் இருப்பது. சுவலோகம் இந்திரன் முதலிய தேவர்கள் வாழ்வது. மகலோகம் மரீசி முதலிய முனிவர்கள் வாழ்வது. சனலோகம் பிதிரர் முதலியோர் வாழ்வது. தவலோகம் சனகர் முதலிய பெருந்தவத்தோர் வாழ்வது. சத்திய லோகம் நான்முகனுடையது. இதற்குமேல் திருமாலினது வைகுந்தமும், அதற்குமேல் குணிருத்தரருக் குரிய உருத்திரலோகமும் உள்ளன. பிருதிவி தத்துவத்திலுள்ள எல்லா அண்டங்களிலும் இவ்வாறே உலகங்கள் உள்ளன.[80]

80. The Expanding universe - என்ற நூலில் உள்ளவை போல!

இவ்வண்டங்களில் திசைக்குப் பத்தாக பத்துத் திசைகளிலும் நூறு உருத்திர புவனமும், அண்டத்தின் உள்ளே கீழ் மூன்றும், மேல் மூன்றம் அண்டத்தின் மேலே இரண்டும் ஆகப் புவனங்கள் நூற்றெட்டு ஒவ்வோர் அண்டத்திலும் அமைந்துள் ளன. பிருதிவிக்கு மேலே உள்ள தத்துவங்களிலும் இவ்வாறே புவனங்கள் உள்ளன. தத்துவங்கள் புவனங்கள் என்பவற்றுடன் வேறு உள்ள மாயாகாரியங்களைக் கூட்டி அனைத்தும் **அத்துவாக்கள்** என்று வழங்கப்பெறும்.

**ஒரு குறிப்பு:** சைவாகம முறைப்படி மந்திரம் **பதி னொன்று.** அவை பஞ்ச பிரமமந்திரங்களும் ஷடங்க மந்திரங்களுமாகும். பதம் **எண்பத்தொன்று** என்று சொல்லப் பெறுகின்றது. வன்னம் (எழுத்து) வடமொழியில் உள்ள **ஐம்பத்தொன்றாகும்.** புவனம் **இருநூற்று இருபத்து நான்கு.** தத்துவம் **முப்பத்தாறு:** கலை **ஐந்து.** இவற்றுள் கலைகளில் மற்றவை அடங்கி நிற்கும். இவ்விவரங்களும் உளங்கொள்ளத் தக்கவை.

**(அ) அத்துவாக்கள்:** இதுகாறும் கூறிவந்த மாயையின் காரியங்களைத் தொகுத்து நோக்கினால் அவை ஆறு பகுதி யாய் நிற்றல் விளங்கும். அவை **மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை** என்பனவாகும். இவற்றுள் முன்னைய மூன்றும் சொற்பிரபஞ்சங்கள். பின்னைய மூன்றும் பொருட்பிரபஞ்சங்கள். இந்த ஆறுமே அத்துவாக்கள் எனப்படும். அத்துவா என்பதற்குப் 'படிவழி' என்பது பொருள். இவை ஆறும் ஆன்மா மேலேறுவதற்குப் படிவழிபோல் இருத்தலின் '**அத்துவா**' எனப்பெயர் பெற்றன.[81] இந்த

81. வேதாந்த தேசிகரின் 'பரமபத சோபானம்' என்பதையும் ஈண்டு சிந்திக்கலாம். (சோபானம் - படி). இவை வானேறும் ஒன்பது படிகளாக விளங்கப் பெற்றுள்ளன.
(தே.பி. 133 - 153)

ஆறனையும் முறையே நன்கு உணர்ந்து ஒவ்வொன்றாகக் கடந்து சென்றால் இறைவனை அடையலாம். ஆறு அத்து வாக்களுள் மந்திரம் முதலியவை ஒன்றில் ஒன்று அடங்க, இறுதியில் எல்லாம் **பஞ்சகலைகளுள்** அடங்கி நிற்றலைத் தெளியலாம். அதனால் நிருவாண தீக்கையில் ஆன்மாவைத் தூய்மை செய்வதற்கு ஆசாரியர் செய்யும் அத்துவா சோதனையை '**கலா சோதனை**' என்ற வழங்குவர்.

**(ஆ) பஞ்ச கலைகள்:** தத்துவமும் தாத்விகமும் ஆகிய சொற்பிரபஞ்சம் அனைத்தும் சுத்தமாயையின் வியாப் பியம் ஆகலின் அவற்றிற்கு நிலைக்களமாகச் சுத்தமாயை களாக விருத்திப்பட்டு அவற்றைத் தாங்கிநிற்கும். அவை முறையே **சாந்தியதீதை, சாந்தி, வித்தை, பிரதிட்டை, நிவிர்த்தி** என்பவையாகும். இவற்றை முறையே சுத்தமாயை யின் முதலாம் விருத்தி, இரண்டாம் விருத்தி முதலியனவாம்.

**(i) நிவிர்த்திகலை:** ஆன்ம தத்துவம் இருபத்து நான்கில் பிருதிவி தத்துவம் ஒன்று மட்டுமே இதில் அடங்கும். பதங்களின் இறுதியிலுள்ள இருபத்தெட்டு எழுத்துகளில் இறுதி எழுத்தாகிய க்ஷகாரம் ஒன்றும், மந்திரங்களில் **இருதயம், சத்தியோ சாதம்** என்னும் இரண்டும், புவனங்கள் நூற்றெட்டும் இக்கலையில் அடங்கி நிற்கும். இக்கலைக்குரிய வாக்கு **தூல வைகரி.** இது பிறர் செவிக்குக் கேட்பதாகும்.

**(ii). பிரதிட்டாகலை:** பிருதிவிக்கு மேல் உள்ள **இருபத்து மூன்று** தத்துவங்களும், இதில் அடங்கும். பதங்களில் மேற்கூறியவற்றிற்கு மேலுள்ள இருபத்தொரு பதங்களும், எழுத்துகளில் முன்நுதலியவற்றிற்கு மேல் உள்ள (ஒடுக்க முறையில் ளகரம் முதல் டகாரம் ஈறாக) **இருபத்து நான்கும்,** சிரம், வாமதேவம் என்ற மந்திரங்களும், புவனம் ஐம்பத்தாறும் இதில் அடங்கி நிற்கும். இக்கலைக்குரிய வாக்கு **சூக்கும வைகரி.** இது தன் செவிகட்கு மட்டிலும் கேட்கும்.

**(iii) வித்தியா கலை:** வித்தியாதத்துவம் ஏழும், இக் கலையுள் அடங்கும். மேற்கூறியவற்றிற்கு மேலுள்ள **இருபது பதங்களும்.** ஏகாரம் முதல் கவ்வருக்கத்தின் நான்காவது எழுத்து ஈறாகவுள்ள **ஏழு** எழுத்துகளும் **சிகை, அகோரம்,** என்ற **இரண்டு** மந்திரங்களும், புவனம் **இருபத்தேழும்** இதில் அடங்கி நிற்கும். இக்கலைக்குரிய வாக்கு **மத்திமை** ஆகும்.

**(iv) சாந்திகலை:** சிவதத்துவம் ஐந்தில் **சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம்** என்ற **மூன்றும்**, இதில் அடங்கி நிற்கும். மேற்கூறியவற்றிற்கு மேலுள்ள **பதினொரு பதங்களும்,** சவருக்கத்தில் நான்காவது தவிர ஏனைய **மூன்று** வன்னங்களும், **தத்புருடம், கவசம்** என்ற இரண்டு மந்திரங்களும் இதில் அடங்கும். இக்கலைக்குரிய வாக்கு **பைசந்தி.**

**(v) சாந்தியதீதகலை:** சிவதத்துவத்தில் எஞ்சிய **சக்தி, சிவம்** என்ற இரண்டு தத்துவங்கள் இதில் அடங்கும். மேற்சொல்லிய பதங்கள் போக எஞ்சிய '**ஓம்**' என்னும் ஒரு பதமும் ஐம்பத்தொரு வன்னங்களில் மேற்சொல்லியவை போக எஞ்சிய உயிரெழுத்து **பதினாறும், ஈசானம், அத்திரம், மூலம்** ஆகிய **மூன்று** மந்திரங்களும் இக்கலையில் அடங்கி நிற்கும். இக்கலைக்குரிய வாக்கு **சூக்குமம்** (நேத்திரத்திற்கு ஈடாக மூலம் உள்ளது). எனவே, சுத்தம், மிச்சிரம், அசுத்தம் என்னும் முத்திறப்பட்ட எல்லாப் பொருள்களும் இந்த ஐந்து கலைகளுள் அடங்குதலை அறிந்து தெளியப்படும்.

**(இ) பஞ்சபூதங்கள்:** தத்துவங்கள் பலவற்றில் யாவர்க் கும் எளிதில் விளங்குவன **பஞ்சபூதங்கள்.** இதனால்தான்,

> நிலம்தீ நீர்வளி விசும்போ டைந்தும்
> கலந்த மயக்கம் உலகம்[82]

82. தொல்-பொருள்-91

என்று, கூறினார் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனார். வள்ளுவப் பெருந்தகையும்,

> சுவையொளி ஊறோசை நாற்றம் என்றைந்தின்
> வகைதெரிவான் கட்டே உலகு[83]

என்று கூறிப் போந்தார். எனினும்,

> காலம் உலகம் உடம்பே உயிரே
> பால்வரை தெய்வம் வினையே பூதம்
> நிலனே காலம் கருவி என்றா.[84]

என்றற்றொடக்கத்தனவாகத் தொல்காப்பியரும், வலியறிதல், இடனறிதல் என்பவற்றோடு, காலமறிதல் என்பதையும் திருவள்ளுவர் விதித்தமை முதலியவற்றாலும்,

> வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
> தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது[85]

என்பது முதலியவற்றாலும் திருவள்ளுவர் பெருமானும் காலத்தையும் நியதியையும் உடன்பட்டுக் கூறினார் என்பது அறியப்படும்.

ஆதலின் மூலப்பிரகிருக்கு மேலும் தத்துவங்கள் உள்ளன என்பது அவர்கட்கு உடன்பாடென்பது இனிது பெறப் படுகின்றது. இதனால் எல்லோர்க்கும் எளிதில் விளங்குதல் பற்றி ஐம்பூதங்களே எங்கும் வருவனவாயின என்பது தெளிவாகும்.[86] இதனால் பஞ்சகலைகட்குச் சொல்லப்பட்ட வடிவம், நிறம், அதிதெய்வம் என்பவற்றாலே ஐம்பூதங்களையும்

83. குறள்-27 (நீத்தார் பெருமை)
84. தொல்-சொல். கிளவியாக்கம்-58
85. குறள்-377 (ஊழ்)
86. ஆழ்வார் பாசுரங்களிலும், நாயன்மார் பாடல்களிலும் இக்குறிப்பு பெருவழக்காக உள்ளது.

வழிபடுதல் விதிக்கப்பெற்றது. இதன் விவரங்களையெல்லாம் மெய்கண்ட நூல்களிலும் சைவாகமங்களிலும் கண்டு தெளிய லாம். பஞ்சகலைகளை தியானித்தல் முதலிய வழிபாட்டில் நிவிர்த்தி முதலிய ஐந்திற்கும் அதிதேவர்கள் வருமாறு.

நிவிர்த்தி...பிரமன்
பிரதிட்டை...திருமால்
வித்தை...உருத்திரன்
சாந்தி...மகேசுவரன்
சாந்தியதீதை...சதாசிவன்

நிலம் முதலிய ஐம்பூதங்கட்கும் இம்முறையிலேயே இவர்கள் அதிதேவர்களாவர். இவர்கட்குத் தொழில் முறையே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பன வாகும்.

நிவிர்த்தி பிரதிட்டை என்னும் கலைகட்குட்பட்ட புவனங்களில் உள்ள கடவுளர்கள் '**தேவர்**' என்ற பெயரைப் பெறுகின்றனர். இவர்களது சரீரம் பிராகிருத சரீரமாகும். வித்தியாகலைக்குட்பட்ட புவனங்களில் உள்ளோர் '**உருத்திரர்**' எனப்படுவோர். இவர்தம் சரீரம் '**மாயேயம்**'. ஏனைய இருகலைகளில் உள்ளோர் 'சிவர்' எனப்படுவர். இவரது சரீரம் '**வைந்தவம்**'. நிவிர்த்தி பிரதிட்டா கலைகளில் படைத்தலையும் காத்தலையும் உடைய நான்முகனும் திருமாலும் புண்ணியம் மிகவுடையவர். அழித்தலைச் செய்யும் குணிருத்திரன் சிவ புண்ணியம் மிகவுடையவன். இம்மூவரும் 'காரணக்கடவுளர்' எனப்படுவர். இம்மூவருக்கும் முதல்வராகிய சீகண்ட உருத் திரரே இவ்விருகலைகளிலும் உள்ளோர்க்கு மகேசுவரனும் சதாசிவனுமாய் நின்று மறைத்தல், அருளல்களைச் செய்வார். வித்தியாகலைகளில் உள்ளவர்கட்கு உருத்திரருட் சிறந்தோர் படைத்தல் முதலிய முத்தொழில்களைச் செய்ய, அனந்த

தேவரே மகேசுவரனும் சதாசிவனுமாக நின்று மறைத்தல் அருளல்களைச் செய்வார். சீகண்டரும் அனந்த தேவரும் அருளுதல் அபரஞானமாகிய வேதாகமங்களை உணர்த்தல் ஆகியவற்றைச் செய்வர். சாந்தி, சாந்தியதீத கலைகளில் உள்ளோர்க்குப் பரமசிவனே தடத்த சிவனாய் நின்று எல்லா வற்றையும் நேரே செய்வான்.

## (vii) பாசங்களைப்பற்றி மேலும் சில

பாசங்களைப்பற்றி மேலும் சில கருத்துகள் ஈண்டுத் தெரிவிக்கப் பெறுகின்றன.

**(அ) பிரணவ கலைகள்:** படைத்தல் முதலிய தொழில் களுக்குக் கூறப்பெற்ற முறையே அக்கரங்களைச் செலுத்து வதற்கும் பொருந்தும். அதாவது சொற்பிரபஞ்சம் முழுவதை யும் பிரணவத்துள்—அஃதாவது '**ஓம்**' என்பதனுள்—அடக்கிக் கூறுதல் சித்தாந்த மரபாகும். பிரணவம் '**ஓம்**' எனக் கூறப்பெறுவதைச் '**சமட்டிப் பிரணவம்**' என்று வைத்துக் கொண்டு தாம் அதனை, '**அகாரம், உகாரம், மகாரம், விந்து, நாதம்**' என ஐங்கூறுபடுத்தி, அக்கூறுகளை '**வியட்டிப் பிரணவம்**' எனக் கூறும் மரபும் உண்டு. இக்கூறுகள் '**பிரணவ கலைகள்**' எனப்படும். இந்த ஐங்கூறுகளும் ஐந்து **அக்கரம்** (அக்கரம் – அட்சரம்) எனப்படும். இவ்வக்கரங்களா லேயே உள்ளத்தில் உணர்வுகள் உண்டாகின்றன. அஃதாவது, அகாரம் அகங்காரத்தை இயக்கும். உகாரம் புத்தியை இயக்கும். மகாரம் மனத்தை இயக்கும். விந்து சித்தத்தை இயக்கும். நாதம் புருடனை இயக்கும். இவற்றால் இங்ஙனம் அந்தக்கரணங்கள் செயற்படுதலாலே உணர்வுகள் தோன்றியும் மறைந்தும் வரும் என்பது தெளியப்படும். இவற்றுள் அகா

ரத்தை நான்முகனும், உகாரத்தைத் திருமாலும், மகாரத்தை உருத்திரனும் விந்துவை மகேசுரனும், நாதத்தைச் சதாசிவனும் செயற்படுத்தி நிற்பர் என்பதும் அறியப்படும்.

இன்னும் ஒரு கருத்தையும் ஈண்டு உளங் கொள்ள வேண்டும்., பிரணவ கலைகளாகக் கூறப்பெறும் அகாரம் முதலியன தூல–சூக்குமங்களது குறியீடாகும். அஃதாவது அகாரமும் உகாரமும் மிகவும் தூலம். எனவே, அவை **வைகரி** வாக்கைக் குறிப்பனவாகும். மகாரம் தூலம். ஆகவே அது **மத்திமை** வாக்கைக் குறிக்கும். விந்து சூக்குமம், எனவே, அது **பைசந்தி** வாக்கைக் குறிக்கும். நாதம், அதிசூக்குமம். எனவே, அது **சூக்குமை** வாக்கைக் குறிக்கும். அக்கரங்களை இயக்குதல் என்பது இவ்வாக்குகளை இயக்குவதேயாகும். வைகரிவாக்கும் மத்திமை வாக்கும் பிராணன், உதானன் என்னும் காற்றுகளின் சார்புடையனவாதலின் அவற்றைக் குணமூர்த்திகள் செலுத்துதல் கூடும் என்பது அறிந்து தெளியப்படும்.

உயிர் சாக்கிரம் முதலிய கீழாலவத்தை ஐந்தனையும் அடையும்பொழுது, சொப்பனத்தில் வைகரி வாக்கு இல்லை. சுழுத்தியில் வைகரி, மத்திமை என்ற இரண்டு வாக்குகளும் இல்லை. துரியத்தில் சூக்குமை வாக்கே உள்ளது. துரியாதீதத்தில் அஃது அதிசூக்குமமாய் நிற்கும். இப்பிரணவ கலைகள் இன்னும் பன்னிரண்டாகவும், பதினாறாகவும் பகுத்து **'பிராசாதம்'** என வைத்து யோகமுறையில் தியானிக்கப்படும். எனவே, இவ்வாக்குகளின் வழியே கன்மத்துக்கீடான எண்ணங்கள் அந்தக்கரணங்களில் தோன்றி வினைகளை நுகர்தலும் ஈட்டுதலும் உண்டாக்கும். பின்னர் அவ்வினைகளுக்கேற்றவாறு நிவிர்த்தி பிரதிட்டா கலைகளில் உள்ள

புவனங்களில் மேலும் கீழுமாக மாறி மாறிப் பிறந்து இறந்து வரும் நிலை உண்டாகும்.

**(ஆ) பிறப்பு இறப்புகள்:** ஐங்கோசங்களை நாம் அறிவோம். அன்னமய கோசமாகிய தூலசரீரம் நீக்குவதே **'இறத்தல்'** என்பதாகும். ஏனைய நாற்கோசங்களாகிய சூக்கும சரீரமும் பரசரீரமும் முத்தி எய்துங்காறும் நீங்காது நின்று முத்தி காலத்தே நீங்குவனவாகும். ஆகவே ஒரு தூலசரீரம் நீங்கிய பின்னர்ச் சூக்கும சரீரத்தில் நின்று அடுத்த பிறப்பாகிய தூலசரீரம் தோன்றும். அங்ஙனம் தோன்றுமிடத்துப் பூலோக சரீரம் **பௌதிக சரீரமாகும்.** பூலோகத்திற்கு மேலே உள்ள உலக சரீரங்கள் எல்லாம் **பூதசார சரீரமாகும்.** அவ்வுடம்பும் உலகங்களும் புண்ணியம் உடையார்க்கு உரியனவாகும். நரகலோகத்திற்க உரிய சரீரம் **யாதனாசரீரமாகும்.** பூலோகத்து உயிர்களைத் தூலசரீரத்தினின்றும் பிரித்துச் சுவர்க்கம், நரகம், பூமி என்பவற்றில் செலுத்துபவனே தென்றிசைக் கடவுளாகிய கூற்றுவன் ஆவான்.

புண்ணிய பாவங்கள் அநுபவித்துத் தொலைந்தால் அத்தூல சரீரங்கள் நீங்கும். நீங்கவே, அடுத்த வினைக்குரிய தூலசரீரம் பின் சூக்கும சரீரத்தினின்றும் தோன்றும். உயிர்கட்கு இங்ஙனம் பிறப்பும் இறப்பும் மாறி மாறி வரும் என்பதை நாள் தோறும் நிகழும் சொப்பனம் முதலிய அவத்தைகளிலிருந்தும் நன்குணரலாம். இதற்காகவே திருவள்ளுவர் பெருமானும்,

> உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
> விழிப்பது போலும் பிறப்பு[87]

என்ற அரியதொரு மணிமொழியை அருளிச் செய்தார்.

87. குறள்-339 (நிலையாமை)

சுத்த மாயையும் அசுத்தமாயையும், ஆணவத்தோடும் கன்மத்தோடும் விரவாத நிலையும் விரவிய நிலையும் என்பனவன்றிப் பொருளால் வேறல்ல. ஆகவே, அவ்விரு மலங்களும் நீங்கிய காலத்தில் சகலர்க்கு உள்ள சூக்கும சரீரங்களும் பரசரீரங்களும் தூய சரீரங்களாகிய மாயேயமும், வைந்தவங்களுமாகிய தூல சரீரங்களைத் தோற்றுவிக்கும். இதனால் அவர்கட்கு உருத்திரராயும் சிவராயும் வாழும் நிலையும் கைகூடும் என்பதும் அறியப்படும். மும்மலங்களும் வாசனையும் இன்றிப் பற்றறக் கழிந்தவுடன், பரமசிவனுடன் இரண்டறக் கலத்தலாகிய பெருமுத்திப் பயன் உண்டாவதாகும் என்பதும் அறிந்து தெளியப்படும்.

பாசங்களில் ஆணவமும் கன்மமும் நுண்பொருள் களாய்ப் புலப்படாது நிற்றலின், அவற்றின் நிலைகளை மாயையாகிய பருப்பொருளில் வைத்தே உணர்தல் வேண்டும். அதுபற்றியே தத்துவங்களின் இயல்பு இவ்வாறு விரித்துக் கூறப்பெறுகின்றது. விரிந்த நூல்களில் இதனை இன்னும் மிக விரிவாகக் காணலாம்.

**(இ) ஐந்து மலங்கள்:** இப்படி ஒரு கருத்தும் உண்டு. ஆணவம், கன்மம், மாயை என மலங்கள் மூன்றே எனினும், உலகிற்கு முதற்காரணமாகிய மாயை காரணநிலை, காரிய நிலை என இருநிலைகளையுடையது. மாயை என்பதைக் காரண மாயையையே குறிப்பதாகக் கொண்டு அதன் காரியங்களை 'மாயேயம்' என்று வேறொரு பெயரால் குறிப்பர். இப்பெயர் அசுத்தமாயையின் காரியத்திற்கே பொருந்தும். ஏனெனில் மயக்கும் தன்மையுடைமையால் 'மாயை' எனப்படுவது அதுவேயாகலின் என்பதால். சுத்த மாயையும் மாயையே எனினும், அது மயக்கத்தைச் செய்யாமையால் **'விந்து, குடிலை'** முதலிய பெயர்களால் கூறப்பெறும் என்பது முன்னர்க்குறிப்பிடப் பெற்றது.

மேற்கூறிய நான்கினும் வேறாகவுள்ள மற்றொன்று திரோதான சக்தி என்பது. இஃது உண்மையில் மலமோ அல்லது பாசமோ அன்று; இறைவனது அருளாகிய சக்தியே. எனினும், இதுவே மேற்கூறிய பாசங்கள் தம்செயலைப் புரியுமாறு அவற்றின் வழிநின்று அவற்றது சக்திகளைத் தூண்டுகின்றது. இதனாலேயே இம்மலங்களின் காரியங்களாகிய மறைப்புகள் நடைபெறுகின்றன. இஃது இல்லையேல் பாசங்களின் செயல்களாகிய மறைத்தல் தொழில்கள் நிகழமாட்டா. இதனால் இதுவே ஒரு மலமாக அல்லது பாசமாகச் சொல்லப் பெறுகின்றது. இறைவன் செய்யும் தொழில்கள் ஐந்தில் 'மறைத்தல்' என்பது இவ்வாறு இத்திரோதான சக்தியைக் கொண்டு மறைத்தலைச் செய்வதாகும்.

**தெளிவாக்கம்:** ஆணவம், கன்மம், மாயை என்பவற்றின் சக்திகளை இறைவன் தன் ஆற்றலைக் கொண்டு தூண்டாதுவிடின் அவற்றால் பந்தம் உயிர்கட்கு என்றும் இருந்தே தீரும். ஆகையால் அச்சக்திகளைத் தூண்டிச் செயற்படுத்தினால் அவை செயற்பட்டுத் தமது சக்தி மெலிவடைந்தொழியும். அங்ஙனம் ஒழியவே, அவற்றால் உண்டாகும் மறைப்பு நீங்கி விளக்கம் பெற்று உயிர்கள் உயர் நிலையை அடையும். ஆதலால் அங்ஙனம் செய்தல் நற்செயலேயாகும் என்பது அறியப்படும். எனவே, திரோதான சக்தி அருளேயாயினும், அது மறக்கருணையாய்க் கொடுமை போலத் தோன்றுதலின், அதனை **அருட்சக்தி** என வழங்காது '**திரோதான சக்தி**' என்றும், '**திரோதானமலம்**' என்றும் வழங்குவர். மலங்களின் சக்தி மெலிந்து உயிர்கள் பக்குவ நிலையை அடையுமாயின், இத்திரோதான சக்தியே தனது மறுதலைச் செயலின்றும் நீங்கி அருட்சக்தியாக மாறி, ஆன்மாவில் பதியும். அதுவே '**சத்தி நிபாதம்**' எனப்படும்.

பாகமாம் வகைநின்று திரோதாயி சத்தி
பண்ணுதலான் மலம்எனவும் பகர்வர்; அதுபரிந்து
நாகமா நதிமதியம் பொதிசடையான் அடிகள்
நணுகும் வகை கருணைமிக நயக்குந் தானே[88]

எனவும்,

முற்–சினமருவு திரோதாயி கருணை யாகித்
திருந்தியசத் திநிபாதம் திகழு மன்றே[89]

எனவும் திரோதான சக்திமலத்தின் இயல்புகளைச் சிவப்பிர காசம் இனிது விளக்குதல் காணலாம்.

மலங்களுள் ஆணவமே முதலாவது. அஃது உயிர் கட்குச் செம்பிற்குக் களிம்பு போல இயற்கைக் குற்றமாய், உயிர் என்று உண்டோ அதனோடு உளதாயிற்று என்பது நமக்குத் தெரியும். நோய்போல் உள்ள ஆணவமலம் உயிர்கட்கு இயற்கையாய் இருப்பதால் அதற்கு மருந்து போல் உள்ள கன்ம மாயைகளும் அவ்வாணவமலம் காரணமாக உயிர்கட்கு அன்றே உளவாயின. இஃது அரிசி என்று உண்டோ அன்றே அதற்கு உமியும் தவிடும், முளையும், இருத்தல் போன்றது என்று விளக்குவர் சித்தாந்த ஆசிரியர்கள்.

மும்மலம் நெல்லி னுக்கு
முளையொடு தவிடு மிப்போல்
மம்மர்செய் தணுவின் உண்மை
வடிவினை மறைத்து நின்று
பொய்ம்மைசெய் போக பந்த
போத்திருத் துவங்கள் பண்ணும்

88 சிவப்பிரகாசம்-20
89. மேலது-48

இம்மலம் மூன்றி னோடும்
    இருமலம் இசைப்பன் இன்னும்.[90]

மாயையின் காரி யத்தை
    மாயேய மலம தென்றும்
ஏயும்மும் மலங்கள் தத்தம்
    தொழிலினை இயற்ற ஏவும்
தூயவன் றனதோர் சக்தி
    திரோதான கரிய தென்றும்
ஆய்வர்இம் மலங்கள் ஐந்தும்
    அணுக்களை அணைந்து நிற்கும்![91]

என்ற சித்தியாரின் செய்யுட்களையும் காணலாம். இதில்—நெல் என்றது அரிசியை.

மோகம்மிக உயிர்கள்தோறும் உடனாய் நிற்கும்
    மூலஆ ணவம்ஒன்று; முயங்கி நின்று
பாகம்மிக உதவு திரோதாயி ஒன்று;
    பகர்மாயை ஒன்று படர்கன்மம் ஒன்று;
தேகமுறு கரணமொடு புவன போகச்
    செயலாரும் மாமாயத் திரட்சி ஒன்று;
ஆகமலம் ஐந்தென்பர்; ஐந்தும் மாறாது
    அருள் என்ப தரிதென்பர் அறிந்து ளோரே[92]

என்று சிவப்பிரகாசம் ஐந்து மலங்களையும் தொகுத்துக் கூறுவதைக் காணலாம்.

மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்றான்[93]

என்று மூன்று மலங்களைக் குறிப்பிட்ட மணிவாசகப் பெருமானே,

---

90. சித்தியா-2-86
91. மேலது-2-87
92. சிவப்பிரகாசம்-32
93. திருவா. அச்சோ பதிகம்-9

மலங்களைந் தாற்சுழல் வன்றயி
ரிற்பொரு மத்து றவே[94]

என்று ஐந்து மலங்களையும் காட்டிச் செல்வதையும் காணலாம். திருமூலரும்,

சிவமாகி ஐவகைத் திண்மலம் செற்றோர்
அவமாகார்; சித்தர்;முத் தாந்தத்து வாழ்வார்.[95]

என்று மொழிவதையும் காணலாம்.

மேற்காட்டிய சித்தியாரில் (2.86) முளை, தவிடு, உமி என்ற உவமைகள், முறையே கன்மம், மாயை, ஆணவம் என்பவற்றிற்கு உரியனவாகும். இங்ஙனமே போகம், பந்தம், போத்திருத்துவம் என்றவற்றையும் அவ்வாறே நிரல்நிரையாக கன்மம் போகத்தையும், மாயை பந்தத்தையும் ஆணவம் போத்திருவத்தையும் பண்ணும் என்றே கொள்ள வேண்டும் என்பதையும் கண்டு தெளியலாம்.

**மேலும் விளக்கம்:** முளை என்றது முளைத்தல் சக்தியைக் குறிப்பது. கன்மம் என்பது முளைத்தல் சக்திபோல் நின்று போகத்தைப் பண்ணுதலாவது, முளைத்தல் சக்தி முளைக்கு முதற்காரணமாய் நின்று அதனைத் தோற்றுவித்தல் போல, கன்ம மலம் இன்பமும் துன்பமுமாகிய போகத்திற்கு - நுகர்ச்சிக்கு – முதற்காரணமாய் நின்று அவற்றை ஆன்ம அறிவின்கண் தோன்றுவித்தலாம்.

மாயாமலம் தவிடுபோல் நின்று பந்தத்தைச் செய்தலாவது, தவிடு (முளைத்தற் சக்தி) முளையைத் தோற்றுவித்தற்குத் துணைபுரிந்து நிற்பது போல, உயிர் இன்பதுன்பங்களாகிய போகங்களை நுகருமாறு அவற்றுக்குச் சார்பாய் உள்ள தனு,

94. மேலது - நீத்தல் விண்ணப்பம்-29

95. திருமந் இரண்டாம் தந்திரம்-மூவகைச் சீவவர்க்கம்-6

காரண புவன, போகங்களைத் தந்து உயிரை அவற்றோடு பிணிப்புண்டு நிற்கச் செய்து துணைபுரிதலாகும்.,

ஆணவமலம் உமிபோல் நின்று போத்திருவத்தைப் பண்ணுதலாவது, உமி (முளைத்தற் சக்தி) முளையைத் தோற்று வித்தற்கு அச்சக்தியைக் கெடாது காத்து நின்று நிமித்தமாதல் போல, இன்பதுன்பங்களைத் தோற்றுவிக்கின்ற கன்ம மலம் உயிரைவிட்டு நீங்காதவாறு விருப்பு வெறுப்புகளால் உயிருக்கு நுகர்வோனாம் தன்மையைக் கொடுத்து அக்கன்மத்தை நிலை நிறுத்தி நிமித்த மாதலாகும். போத்திருத்துவம் என்பது புசிப் போனாந்தன்மை.

ஆகவே, 'முளைத்தல்' என்னும் செயலுக்கு முளைத் தல் சக்தி முதற்காரணமும், தவிடு துணைக்காரணமும், உமி நிமித்த காரணமுமாதல் போல, இன்பதுன்ப அநுபவமாகிய காரியத்திற்குக் கன்மமலம் முதற்காரணமும், மாயாமலம் துணைக்காரணமும், ஆணவமலம் நிமித்த காரணமும் ஆதல் தெளிவாகும். இன்னும் நிமித்த கார்ணம் இல்லாது முதற் காரணமும், துணைக்காரணமும், செயற்படாவாதலின், நிமித்த காரணமாகிய ஆணவமலம் உள்ளவரையில் பலவகை உலகங்களில், பலவகைப் பிறப்புகளில், பிறந்தும், இறந்தும், இன்பதுன்பங்களை அநுபவிக்கின்ற பந்தநிலை நீங்காது என்பதும், ஆணவமலம் நீங்கும் பொழுது ஏனைய மலங்களும் நீங்க, பிறப்பிறப்பாகிய பந்தமும் நீங்கி வீடுபேறு உண்டாகும் என்பதும் நன்கு புலனாவனவாம்.

இங்குக் குறிப்பிட்ட ஐந்து மலங்களும் நீங்காமல் இறைவன் திருவடிப்பேற்றை அடைதல் இயலாது. எனவே, இவை நீங்குவதற்கு வேண்டிய முயற்சியை மேற்கொள்ளலே உயிர்களின் கடமையாதல் தெளியப்படும்.

# 6. வீடுபேற்றுக்கு வழிகள்

பாசத்தினின்றும் நீங்கிப் பதியினை அடையும் வழிகள் சாதனங்கள் எனப் பெயர்பெறும். அவற்றை விளக்குவது இந்த இயல்.

சைவ சமய மேசமயம்
   சமயா தீதப் பழம்பொருளைக்
கைவந் திடவே மன்றுள்வெளிக்
   காட்டும்; இந்தக் கருத்தைவிட்டு
பொய்வந் துழலும் சமயநெறி
   புகுத வேண்டா; முத்திதரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச்
   சேர வாரும் செகத்தீரே![1]

1. தா. பா. காடும்கரையும்-2

# 6. வீடுபேற்றுக்கு வழிகள்

## (1) நூல்கள் நுவலும் வழிகள்

**மும்மலங்கட்கு** உட்பட்ட ஆருயிர்கள் அம்மலங்களின் சார்பில் பல பிறப்புகளை எய்தி பல நுகர்ச்சிப் பொருள்களை அடையும்; இதனால் பல இன்ப துன்பங்களை நுகர நேரிடும். மேலும் அந்நுகர்ச்சிக்கு ஏதுவான செயல்களைப் புரியுங்கால் துன்பம் மிகுதியாயும் இன்பம் குறைவாயும் இருத்தலைப் பலகாலும் உணரும். இந்த உணர்ச்சியின் காரணமாக துன்பம் நீங்குதற்கும் துன்பம் கலவாத பெரிய இன்பத்தை அடைவதற்கும் வழி இல்லையோ என அவாவி நிற்கும். இங்ஙனம் அவாவும் நிலையை உயிர்க்குயிராய் நின்று அறியும் இறைவன் உணர்ந்து, அவ்வுயிர்களின் உணர்வு நிலைக்கேற்பச் சிலசில நெறிகளை 'இதுவே நன்னெறி, இதுவே நன்னெறி' என உணருமாறு உள்நின்று – அந்தர்யாமியாக நின்று – உணர்த்துவன். இங்ஙனம் சிலருக்கு உணர்த்தியும், அவர்மூலம் அவரோடு ஒத்த பலருக்கு உணர்த்தவும் செய்வன், இவ்வழியில் தோன்றி நிலவி வருவனவே முதலும் வழியுமாய் மரபு நிலை திரியா மாட்சியினையுடைய மெய்ந் நூல்கள். இம்மெய்ந் நூல்களே வேதங்களும் சிவாகமங்களும் ஆகும்.

இவற்றுள் **வேதங்கள் பொதுநூல்கள்;** ஆகவே அவை நன்னெறியைப் பொதுவாக உணர்த்தி மெய்ந்நெறியிற் கொண்டு உய்க்கத்தக்க உலகியலில் நிறபிக்கும். சிவாகமங்கள் சிறப்பு நூல்கள் ஆதலின், அவை நன்னெறியைச் சிறப்பு வகையான் உணர்த்தி, மெய்ந்நெறியிலே கொண்டு செலுத்தும்.

**சைவசமயம்:** சிவாகமத்தால் பெறப்படுவதாய நெறி **'சைவ சமயம்'** எனப்படும். இந்நெறியில் சிவாகமத்தின் வழியமைந்த நெறி நான்கு. இவை **சரியை, கிரியை, யோகம், ஞானம்** என்று வழங்கப்பெறும். சிவஞானசித்தியார் சன்மார்க்கம், சகமார்க்கம், சற்புத்திர மார்க்கம், தாதமார்க்கம் என்றும் கூறி இவை முறையே ஞானம், யோகம், சரியை, கிரியை என வழங்கப்பெறும் என்னும் குறிப்பிடும்.[2] இவற்றையே நற்றமிழில் கூறும்போது சன்மார்க்கத்தை நன்னெறி என்றும், சகமார்க்கத்தைத் தோழமை நெறி என்றும், சற்புத்திர மார்க்கத்தை மகன்மை நெறி என்றும், தாத மார்க்கத்தைத் தொண்டுநெறி என்றும் வழங்குவர். இவற்றிற்கு முறையே மணிவாசகப் பெருமான், சுந்தரமூர்த்தி, ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் இவர்களை எடுத்துக்காட்டுகளாகக் கொள்வர் சைவநெறி யொழுகும் பெரியார்கள்.

முத்தியாகிய பெரும்பயனுக்கு ஞானம் ஒன்றே வாயிலாகும். ஏனைய பலவும் ஞானத்தை அடைவதற்கு வழியேயன்றி, நேரே வாயிலாவன அல்ல என்பது ஈண்டு அறியப்பெறும்.[3] வேள்வி, தானம், பிறகருமங்கள், செபம், தீக்கை முதலிய எவையாயினும் அவையெல்லாம் ஞானத்தைத் தந்து, பின்னர் அதன்மூலம், முத்தியை நல்குமன்றி,

2. சித்தியார்- 8.18

3. வைணவத்தில் கருமயோகம் ஞானயோகம், என்பவை பக்தியோகத்திற்கு வாயில்களாக அமைவது போல.

அவை நேராக முத்தியைத் தருவதில்லை. ஞானம் மும்மலங் களையும் அகற்றி உயிரைத் தூய்மைப்படுத்தும்; பின்னர் இயல்பாகவே தூயவனும், இன்ப வடிவினனுமாய இறைவனை அடைவிக்கும்; துன்பமற்ற – எல்லையில்லாத – அவனது பேரின்பத்தில் திளைக்கச் செய்யும்.

இக் கூறியவற்றால் படிமுறையாகச் சென்று சைவத்தை அடைந்து அதன்கண் உள்ள நால்வகை நெறிகளில் நிற்றலே உயிர் மும்மலங்களினின்றும் நீங்கி இன்புறுதற்கு வழியாகும். இதனைச் சித்தியாரால் இனிது உணரலாம்.[4] மேலும் "சரியை முதலிய மூன்றும் ஞானத்தின் வளர்ச்சி நிலைகளே" என்ற பேருண்மையை,

> விரும்பும் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
> அரும்புமலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே.[5]

என்ற **தாயுமான அடிகளின்** அருள்வாக்காலும் ஒருவாறு அறியலாம்.

**பந்தம்–கட்டு:** முத்தி, மோட்சம், வீடுபேறு என்ற சொற்கள் ஒரே பொருளைக் குறிக்கும். இந்த நிலைக்கு மறுதலையான நிலை **பந்தம்,** அல்லது **கட்டு,** அல்லது **தளை** ஆகும். 'பந்தம்' என்பது யாது? அஞ்ஞானத்தால் உயிர்கள் தமது அறிவு விழைவு செயல்கள் முற்றிலும் செயற்படாமல் அல்லது நன்கு செயற்படாமல் கட்டுண்டு நிற்பதே பந்தம் என்பது. அந்தக் கட்டினின்றும் விடுபடுவதே வீடு அல்லது மோட்சம் – முத்தி. ஞானம் வராதவரையில் அஞ்ஞானம் நீங்காது. அதனால் கட்டும் நீங்காது. எனவே, ஞானம் ஏற்படாத வரையில் முத்தியும் கிடைக்கமாட்டாது என்பது தெளிவு.

---
4. சித்தியார்-8.11.
5. தா. பா. பராபரக்கண்ணி- 157

அஞ்ஞானம் இருள்போன்றது; ஞானம் ஒளி போன்றது. ஒளி வந்தாலன்றி இருள் நீங்காதன்றோ? அது போல் ஞானம் வந்தாலன்றி அஞ்ஞானம் நீங்காது; அதனால் கட்டும் நீங்காது. ஒளிவருங்கால் இருள் தானே நீங்கிவிடுதல்போல, ஞானம் வருங்கால் அஞ்ஞானம் தானே நீங்கும்; நீங்கவே முத்தியும் கட்டுநீங்கி எளிதில் கிட்டும்; கைகூடும். ஆகவே, ஞானம் தவிர, வேறெதனாலும் முத்தியை அடைய இயலாது என்பது ஈண்டு உணரப்பெறும், இதனைச் சித்தியாரின் ஒரு செய்யுளா லும் அறியலாம்; தெளிவு பெறலாம்.[6] இங்ஙனமே **தாயுமான அடிகளும்,**

> மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்
> வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே[7]

என்றுவர். சற்குரு மூலம்தான் ஞானம் பெறல் முடியும் என்பது அடிகளாரின் உள்ளக் கிடக்கையாகும். அடிகளாரும் ஒருபாட லால் "உண்மையை அறிவித்த இடம் குருவாம் அருள் அலதொன்றிலதே"[8] என்று கூறுதல் ஈண்டு அறியப்படும். குருவருளால்தான் தமக்கு நிட்டைநிலை கைவரப் பெற்றது என்பதை,

> சித்த மவுனி, வடபால்
> மவுனி நம்தீப குண்ட
> சுத்த மவுனி, எனுமூவ
> ருக்குந் தொழும்பு செய்து
> சுத்த மவுன முதல் மூன்று
> மவுனமும் தான்ப டைத்தேன்
> நித்த மவுனமல் லால்அறி
> யேன்மற்ற நிட்டை களே[9]

6. சித்தியார்-8. 27
7. தா. பா. பராபரக்கண்ணி-156
8. மேலது நினைவு ஒன்று-9
9. மேலது பாயப்புலி-26

என்ற அடிகளாரின் பாடல் தெரிவிப்பதைக் கண்டு தெளியலாம். இதனையே அப் பெருமான்,

தானம் தவந்தருமம் சந்தமும் செய்வர்,சிவ
ஞானம் தனைஅணைய நல்லோர் பராபரமே.[10]

என்று மற்றோர் கண்ணியாலும் அரண் செய்வதைக் கண்டு தெளியலாம்.

## (2) ஞானம் வருதற்குரிய வழிகள்

ஞானம் வருவதற்கரிய சில அடிப்படையான படிநிலைகள் உள்ளன. அவை:

**(i) வேட்கை:** ஞானம் வருவதற்கு முதற்கண் அந்த ஞானத்தைப் பெறுதலில் வேட்கை–அவா–உண்டாதல் வேண்டும். பசியற்றவனுக்கு உணவு பயன்தராது; நீர் வேட்கை இல்லாதவனுக்கு நீர் பயன்தராது. இங்ஙனமே, ஞான வேட்கை இல்லாதவனுக்கு – ஞானத்தை அவாவி நிற்காதவனுக்கு – ஞானம் பயன்படாது. ஆகவே, ஞானம் பெறுவதற்கு ஞானம் பெறுவோனிடம் வேட்கை உண்டாதல் இன்றியமையாதது.

**(ii) மலபரிபாகம்:** ஆணவ மலத்தைப்பற்றி முன்னர் குறிப்பிட்டதை ஈண்டு நினைவு கூர்தல் வேண்டும். செம்பினிற் களிம்புபோல் உயிருடன் அநாதியே கலந்திருக்கும் இம்மலம் உயிருக்கு ஞானத்தில் வேட்கை எழாதபடி அவற்றின் அறிவைத் தடுத்து வைத்திருக்கும். இந்த ஆணவமலம் என்றும் அழிவதில்லை என்பதை நாம் அறிவோம். ஆயினும் அது சடமாதலால், உயிர்களின் அறிவைப் பிணித்து வைத்திருக்கும் அதனது ஆற்றல் அதனது மறுதலைப் பொருளின் ஆற்றலால் நாளடைவில் மெலிவடைந்து, பிணிக்கும் ஆற்றலி

10. மேலது பராபரக்கண்ணி-158

லிருந்து நீங்கும்நிலையை அடைகின்றது. இந்நிலையே **'மலபரிபாகம்'** என்று வழங்கப் பெறுவது. சித்துப் பொருளின் ஆற்றல் மெலிவடையாதிருத்தலையும், சடப்பொருளின் ஆற்றல் மெலிவடைவதையும் நாம் அறிவோம்.

**(iii) இருவினையொப்பு:** மனிதனுக்கு நேரிடும் இன்ப துன்பங்கள் வினைப்பயனால் நேரிடுகின்றன. இதனை அறியாது இன்பம் வருங்கால் அவன் எக்களிப்படைவதும், துன்பம் நேருங்கால் அளவுக்கு மீறி மனம் ஒடுங்குவதும் அவன் இயல்புகளாகப் பரிணமிக்கின்றன. இதனை நினைந்து வள்ளுவர் பெருமான்,

**நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்**
**அல்லற் படுவ தெவன்? (379)**

என்று பரிதாபப் படுகின்றார்.

மேற்கூறியவாறு ஆணவமலம் பரிபாகமாதற்பொருட்டே அதற்கு அதன் மறுதலைப் பொருளாகிய கன்மம், மாயை என்பவற்றை உயிர்களுக்குக் கூட்டுகின்றான் இறைவன். கூட்டவே, அவை பிறப்பு இறப்புகளில் சென்று கன்மங்களை ஈட்டச் செய்கின்றன. இவற்றின் பயனாக உயிர்கள் இன்ப துன்பங்களை நுகர்கின்றன. இதனால் மறைக்கும் தன்மையை யுடைய ஆணவமலத்தின் ஆற்றல் மெலிவடைந்து மலபரி பாகம் ஏற்படுங்கால் **'இருவினையொப்பு'** தோன்றுகின்றது.

'இருவினைப் யொப்பு' என்பது என்ன? ஒருவன் செய்த நல்வினைப் பயனாகிய இன்பத்திலும் தீவினைப் பயனாகிய துன்பத்திலும் உள்ளம் வேறுபடாதிருத்தல். இன்பத்தில் விருப்பமும் துன்பத்தில் வெறுப்பும் கொள்ளாதிருத் தல், இரண்டையும் சமமாகப் பாவித்து நுகரும் நிலை என்று இந்நிலையை விளக்கலாம். **சேக்கிழார் பெருமான்** சிவனடி யார் மனநிலையை,

**கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்**
**ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்**[11]

என்று குறிப்பிடுவர். **தாயுமான அடிகளும்,**

**'ஓடும் இருநிதியும் ஒன்றாகக் கண்டவர்கள்**[12]

என்று அப்பெருமக்களைச் சுட்டிக் காட்டுவர்.

இதனை மற்றோர் எடுத்துக் காட்டாலும் விளக்கலாம். **இராமகிருஷ்ணரும்** அவர்தம் துணைவியார் **சாரதா தேவி யாரும்** ஒரு சமயம் வாரணாசி தெருவில் நடந்து சென்று கொண்டிருந்தனர். முன்னால் இராமகிருஷ்ணரும் அவருக்குப் பின்னால் சுமார் 30 அடி தொலைவில் சாரதாதேவியாருமாக சென்று கொண்டிருந்தனர். இராமகிருஷ்ணர் காலில் ஒரு பித்தளைத் தகடு தென்பட்டது. அந்த மஞ்சள்நிறத் தகட்டைக் காலால் மண்ணைத் தள்ளி மறைத்தார். பின்னால் வந்து கொண்டிருந்த தேவியார் 'என்ன மறைக்கின்றீர்கள்?' என்று வினவ, அதற்கு அவர், 'அஃது ஒரு பித்தளைத் தகடு. நீ கண்டால் தங்கத் தகடு என்று நினைத்துக் கொள்வாய் என்று மறைத்தேன்' என்று மறுமொழி தர, உடனே தேவியார் 'இன்னும் இந்த வேறுபாடு உங்கட்குத் தெரிகின்றதா?' என்று வினவினார். இதிலிருந்து எவர் மனம் பக்குவப்பட்டது என்பதை அறியலாம்.

**(iv) சத்தி நிபாதம்:** 'இருவினை யொப்பு' நிகழ்ந்தபிறகு **'சத்தி நிபாதம்'** உண்டாகும். 'சத்தி நிபாதம்' என்பது என்ன? திரோதானமாய் நின்று மறைப்பைச் செய்துவந்த இறைவனது சக்தி 'மலபரிபாகம்' உற்ற நிலையில் அருட்சக்தியாக மாறி ஆன்மாவிடத்தில் பதிதலே 'சத்தி நிபாதம்' என்பது. நிபாதம் –

11. பெ. பு: திருக்கூட்டச்சிறப்பு-8
12. தா. பா. பராபரக்கண்ணி-16

வீழ்ச்சி; சத்தி – பதிதல் என்று சொல்லாமல் 'சத்தி வீழ்தல்' எனக் கூறியதன் கருத்துதான் யாது? ஓர் அவையிடை திடீரென்று ஒரு கல் விழுமாயின், அங்குள்ளாருக்கு ஓர் அதிர்ச்சியை உண்டாக்குமன்றோ? அங்ஙனமே திரோதான சக்தி அருட்சக்தியாகப் பதியும் பொழுது அப்பதிவு ஆன்மா விற்கு உலகியலில் ஓர் அதிர்ச்சியை உண்டாக்கும். இது பற்றியே இந்நிலை '**சத்தி நிபாதம்**' என வழங்கப்பெற்றது என்பது அறியப்பெறும். உலகியலில் உயிர்கள் தீயன செய்யாது நல்லன செய்யக் கருதுதல் சத்தி நிபாதம் வழி நிகழ்வதேயாகும் என்பதும் தெளியப்படும்.

அரசன் ஆணைக்கு அஞ்சியேனும், தம் சொந்த நலன் கருதியேனும் செய்யும் நல்வினைகள் மனத்தொடு பொருந் தாமையின் அது மல சக்தியின் காரியம் ஆவதேயன்றிச் சத்தி நிபாதத்தால் ஆவதன்று. அன்பும் அருளும் பற்றிச் செய்யும் நல்வினைகள் யாவும் சத்தி நிபாதத்தால் ஆவனவாகும். ஆயினும், கடவுட்கொள்கையின்றிச் செய்யப் பெறுமாயின், அவை பிறவி நீங்கும் வழியாகா. ஆகவே, அவையும் மலச்சக்தியின் காரியமாகவே முடியும் என்பதும் ஈண்டு உளங்கொள்ளத்தக்கது.

**சத்தி நிபாதம் நிகழும் முறைகள்:** மேற்குறிப்பிட்ட மலபரிபாகம் பல்வேறு வகைப்பட நிகழுமாதலின், அவற்றிற் கேற்பச் சத்தி நிபாதமும் பல்வேறு வகைப்பட நிகழும் என்று சித்தாந்த நூல்கள் பகரும். அவை **மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம்** எனப்பெரும்பான்மையாக நான்கு வகைப்படுத்திக் கூறப்பெறும். ஏனைய பலவற்றையும் மந்ததரத்தில் மந்தரதரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என்றாற்போல் ஒவ்வொன்றிலும் நந்நான்காகவும், பின்பு அவற்றுள்ளும் ஒவ்வொன்றும் நந்நான்காகவும் பலபடவிரித்துக் கூறுவர். மந்த தரம் முதலிய

நால்வகைச் சத்தி நிபாதத்தால் முறையே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன நிகழும்! அவையும் சத்தி நிபாதம் போலவே, சரியையிற் சரியை, சரியையில் கிரியை சரியையில் யோகம், சரியையில் ஞானம் என்றாற் போல ஒவ்வொன்றும் நந்நான்கு வகையாய் நிகழும். மேலும் அவை நந்நான்கு வகையாய் இங்ஙனம் அளவின்றி விரிந்து நிற்கும். இங்ஙனம் பலபட விரிந்து நிற்கும் சரியை முதலியவற்றால் ஆன்மாவின் அறிவு விரிந்து விளங்கி உண்மையை உணரும் தன்மையை அடையும். இறுதியாக அது இறைவனது முற்றும் உணர்தல் முதலிய எண்குணங்களும் தன்னிடத்து விளங்கி நிற்க, தான் சிவமேயாகின்ற பெருமுத்தி நிலையை எய்தும் என்பதை ஈண்டு அறிந்து தெளியலாம்.

(v) **தவம்:** இது சத்தி நிபாதத்தின் விளைவாகும். சிவபெருமானை நோக்கிச் செய்யும் செயல்களே தவத்தின் பாற்படும். 'சிவத்தைப் பேணின் தவத்திற்கு அழகு'[13] என்ற ஔவைப்பாட்டியின் வாக்கையும் ஈண்டுச் சிந்திக்கலாம். 'தவத்தோர்' எனப்படும் துறவியரது செயலாகிய கடவுள் வழிபாடே '**தவம்**' என்பதாகும். தவம் செய்வது எற்றுக்கு? துன்பத்தை நீங்கிக் கொள்வதற்கும் இன்பத்தைப் பெறுவதற் குமே தவம் செய்கின்றனர். துன்பங்கள் எல்லாவற்றிலும் மிகப் பெரிய துன்பம் பிறவித்துன்பம். இதனை வள்ளுவப் பெருந்தகை '**பிறவிப் பெருங்கடல்**'[14] என்று பேசுவார். இன்பதுன்பங்கள் எல்லாவற்றிலும் மிகப்பெரிய இன்பம் வீடுபேறு எய்துதல்; முத்தி இன்பம் அடைதல். இந்தப் பிறவித்துன்பத்தைக் கெட்டொழிப்பவனும், முத்தி இன்பத்தை

13. கொன்றை வேந்தன்-28
14. குறள்-10 (கடவுள் வாழ்த்து)

நல்குபவனும் 'பிறவாயாக்கைப் பெரியோனாகிய.[15] சிவபெருமான் ஒருவனே யாவான். துன்பத்தை ஓட்டுகின்ற காரணத்தால் 'உருத்திரன்' என்றும், இன்பத்தைத் தருகின்ற காரணம் பற்றிச் 'சங்கரன்' 'சம்பு' என்றும் பெயர்களைப் பெறுகின்றான். சிவபெருமானை நோக்கிச் செய்யும் தவம் வேறு பயன்களையும் தரும்; முத்திக்கு ஏதுவாயும் நிற்கும். இதுபற்றியே **மெய்கண்டார்** இத்தவத்தை **'இறப்பில் தவம்'** என்று சிறப்பிப்பர்.

**ஒரு முக்கிய கருத்து:** 'சிவபெருமான் ஒருவனே பதி; ஏனைய யாவரும் பசுக்கள்' என்பதை நாம் அறிவோம். அதனால் சிவபெருமானை நோக்கிச் செய்யப்பெறும் நற்செயல்கள் **'பதி புண்ணியங்கள்'** எனப்படும் இவை **'சிவ புண்ணியங்கள்'** எனவும் வழங்கப் பெறுதலும் இயல்பேயாகும். சிவ புண்ணியங்களே அழிவின்றி நிலைத்து முத்தியைத் தருவனவாகும். பசுபுண்ணியங்கள் அவ்வாறின்றித் தமக்குரிய சில பலன்களைத் தந்து அழிந்து படும். அவை அழியவே, அவற்றின் பலன்களும் அழிந்தொழியும். அதனால் அவற்றைச் செய்தாரைத் துன்பங்கள் மிகவும் வந்து பற்றும். ஆகவே, பசு புண்ணியங்களைச் செய்தல் இவ்வுலக உணவை உண்டு பசி தணிதல் போலாகும். 'பசித்துண்டு பின்னும் பசிப்பானைப் போக்கும் – இசைத்து வருவினையில் இன்பம்'[16] என்பர் **மெய்கண்டார்.** இதனைச் சிந்திக்க வேண்டும்.

சிவபுண்ணியங்களோ அங்ஙனம் அன்று. உம்பர் உலக உணவாகிய அமுதத்தை உண்டது போல்வன அவை.

15. வைணவம் தம் கடவுளை 'பிறப்பில் பல்பிறவிப் பெருமான்' என்று குறிப்பிடும். நம்போல் வினை காரணமாகப் பிறப்பவன் அல்லன்; தம் விருப்பம் காரணமாக, அடியார்களின் துன்பங்களை நீக்குவதற்காகப் பிறப்பவன் (அவதாரம்).

16. சி. ஞா. போ. சூத்திரம் 8. அதிகரணம்-1

அமுதத்தை உண்டால் அஃது அழிவதில்லை. உண்டார்க்கு அது பசியைப் போக்குதலேயன்றி, நரை திரை மூப்பு சாக்காடு என்பவற்றையும் நீக்கி நீடிய வாழ்வையும் அளிக்கும். இது போன்றனவே சிவபுண்ணியங்கள். அதனால் இவை தம்மைச் செய்தார்க்கு வேண்டுவனவற்றையெல்லாம் நல்கிப் பின் "அந்தமில் இன்பத்து அழிவில் வீட்டையும்" தரும். எனவே, இவையே மேற்கொள்ளற் பாலன என்பது ஈண்டு அறியப் பெறும்.

மக்களும் பிற உயிர்களுமாகிய பசுக்களிடத்தில் அன்பும் அருளும் கொண்டு அவற்றிற்கு நலம் செய்யும் போது அவற்றையே நினைந்து செய்யுங்கால் அவை பசு புண்ணியங்களாகும். இவற்றைச் சிவபிரானை மறந்து செய் யாமல் நினைந்து செய்யுங்கால் இவை சிவ புண்ணியங்களாகும் என்று சைவ சித்தாந்தம் கூறுகின்றது. எல்லாச் சமயங்களும் உயிர்களின் அறிவு நிலைக்கேற்ற படிகளால் இறைவன் திருவுள்ளத்தில் அமைந்தன என்பதே சைவமயத்தின் உட் கிடையாகும்.

துணைநன்மலர் தூய்த்தொழுந் தொண்டர் சொல்லிர்
பணை மென்முலைப் பார்ப்பதி யோடுடனாகி
இணையில் இரும்பூளை இடங்கொண்ட ஈசன்
அணைவில் சமண் சாக்கியம் ஆக்கிய வாறே.[17]

போதிவரும் பிண்டியாரும் புகழல சொன்னாலும்
நீதியாகக் கொண்டங்கருளும் நிமலன்[18]

என்ற ஞானசம்பந்தப் பெருமானின் திருவாக்குகளாலும்,

விரிவிலா அறிவி னார்கள் வேறொரு சமயம் செய்து
எரிவினாற் சொன்னா ரேனும் எம்பிராற் கேற்ற தாகும்.[19]

17. சம்ப. தேவா. 2.36:10
18. மேலது தேவா. 1.66:10
19. அப்பர் தேவா. 4.60:9

என்ற **அப்பர் பெருமானின்** திருமொழியாலும் இதனை அறியலாம்.[20]

பிறிதோர் இடத்தில் அப்பர் பெருமான்,

> இரப்பவர்க் கீய வைத்தார்;
> ஈபவர்க் கருளும் வைத்தார்;
> கரப்பவர்தங்கட் கெல்லாம்
> கடுநர கங்கள் வைத்தார்.[21]

என்ற தம் திருப்பாடற் பகுதியால் 'புண்ணிய பாவங்கள் அனைத்தும் சிவபெருமானின் ஆணையே என உணர்தல் வேண்டும்' என்று அறிவுறுத்தலையும் காணலாம். **தாயுமான அடிகளும்,**

> அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
> இன்பநிலை தானேவந்து எய்தும் பராபரமே[22]

என்று கூறியிருப்பது மேற்கூறிய கருத்திற்கு அரணாக அமைகின்றது. **அருணகிரி நாதரும்,**

> வையிற் கதிர்வடி வேலோனை
> வாழ்த்தி வறிஞர்க் கென்று
> நொய்யிற் பிளவள வேனும்
> பகிர்மின்கள் [23]

---

20. இத்தகைய ஒரு கருத்து வைணவ சமயத்திலும் உண்டு.
    நும்இன் கவிகொண்டு நும்இட்
    டாத்தெய்வம் ஏத்தினால்
    செம்மின் சுடர்முடி என்திரு
    மாலுக்குச் சேருமே.
    என்ற நம்மாழ்வாரின் திருவாய்மொழியில் (3.9:6) இதனைக் காணலாம்.
21. அப். தேவா. 4. 38:10
22. தா. பா: பராபரக்கண்ணி-155.
23. கந். அலங்-18

என்றும்,

கெடுவாய் மனனே கதிகேள்; கரவாது
இடுவாய்; வடிவே லிறைதாள் நினைவாய்[24]

என்றும் கூறியுள்ளமை இக்கருத்துபற்றியே என்பதை உணர்தல் வேண்டும். இவையெல்லாம் 'பதிபுண்ணியங்களே செயற்பாலன' என்பதனைத் தவறுபட உணராமல் நன்கு உணர்ந்து கொள்ளத் துணைபுரிகின்றனவன்றோ?

எனவே, சுருக்கமாக நாம் அறிய வேண்டுபவை: "சிவபெருமானை நினையாது செய்யும் எச்செயல்களும் 'வினை' எனப்பட்டு பிறவிக்கு வித்தாகும். இவற்றையே சிவபெருமானை நினைந்து செய்யின் இவை 'தவம்' எனப்பட்டு முத்திக்கு வித்தாக அமையும். இதுபற்றியே 'பதி புண்ணியங்களே செயற்பாலன' என்கின்றன சிவநெறி நூல்கள்" என்பவையாகும்.

## (3) *சிவபுண்ணியங்கள்*

மனம் மொழி மெய்களால் சிவபெருமானை நோக்கிச் செய்யப்பெறும் செயல்கள் அனைத்தும் 'சிவபுண்ணியங்கள்' என்பதை நாம் அறிவோம். ஆயினும் அவை அனைத்தும் **சரியை, கிரியை, யோகம்** என்று மூன்றாக வகுத்துப்பேசப் பெறும். இவ்வகைகளை ஈண்டு விளக்குவோம்.

**சரியை:** இறைவன் 'ஆண்டான்' என்பதையும் 'ஆருயிர்கள் அவனுக்கு அடிமை' என்பதையும் நாம் அறிவோம். இந்த 'ஆண்டான்—அடிமை நிலை' எக்காலத்திலும் (பெத்தம்,[25] முத்தி என்ற இரு நிலைகளிலும்) உள்ளதாகும் என்பதும்

24. கந். அநுபூதி-7
25. பெத்தம்-கட்டுண்ட நிலை

என்றும்,

> கெடுவாய் மனனே கதிகேள்; கரவாது
> இடுவாய்; வடிவே லிறைதாள் நினைவாய்[24]

என்றும் கூறியுள்ளமை இக்கருத்துபற்றியே என்பதை உணர்தல் வேண்டும். இவையெல்லாம் 'பதிபுண்ணியங்களே செயற்பாலன' என்பதனைத் தவறுபட உணராமல் நன்கு உணர்ந்து கொள்ளத் துணைபுரிகின்றனவன்றோ?

எனவே, சுருக்கமாக நாம் அறிய வேண்டுபவை: "சிவபெருமானை நினையாது செய்யும் எச்செயல்களும் 'வினை' எனப்பட்டு பிறவிக்கு வித்தாகும். இவற்றையே சிவபெருமானை நினைந்து செய்யின் இவை 'தவம்' எனப்பட்டு முத்திக்கு வித்தாக அமையும். இதுபற்றியே 'பதி புண்ணியங்களே செயற்பாலன' என்கின்றன சிவநெறி நூல்கள்" என்பவையாகும்.

## (3) சிவபுண்ணியங்கள்

மனம் மொழி மெய்களால் சிவபெருமானை நோக்கிச் செய்யப்பெறும் செயல்கள் அனைத்தும் 'சிவபுண்ணியங்கள்' என்பதை நாம் அறிவோம். ஆயினும் அவை அனைத்தும் **சரியை, கிரியை, யோகம்** என்று மூன்றாக வகுத்துப்பேசப் பெறும். இவ்வகைகளை ஈண்டு விளக்குவோம்.

**சரியை:** இறைவன் 'ஆண்டான்' என்பதையும் 'ஆருயிர்கள் அவனுக்கு அடிமை' என்பதையும் நாம் அறிவோம். இந்த 'ஆண்டான்–அடிமை நிலை' எக்காலத்திலும் (பெத்தம்,[25] முத்தி என்ற இரு நிலைகளிலும்) உள்ளதாகும் என்பதும்

24. கந். அநுபூதி-7
25. பெத்தம்-கட்டுண்ட நிலை

செயல்களின் பரிணாமமேயாகும் என்பதை இன்று பாமரனும் அறிந்து கொள்ளுகின்றான். எனவே, அரசன் (முதல் அமைச்சன்) பணியாகிய எடுத்துக்காட்டினைத் தன்னலம் கருதாது இயற்றுவிக்கும் அளவில் கொண்டு இறைவன் பணியை உளங்கொண்டு தெளிதல் வேண்டும்.

உயிர்கள் இயல்பாகவே ஆணவ மலத்தால் மறைக்கப் பெற்றுத் தம் அறிவை இழந்து கிடக்கும் என்பதை நாம் அறிவோம். இந்நிலையில் உயிர்கள் அந்த ஆணவ மலம் பரிபாகமான நிலையை அடைந்தாலும் இறைவனது நுண்ணிய நிலையை அடையும் ஆற்றலை உடையன ஆகமாட்டா. அதனால் முதற்கண் அவனைப் பருநிலையில் (தூல நிலையில்) பொதுவாக உணர்ந்து, பிறகு நுண்ணிலையில் சிறப்பாக உணரும். பருநிலையில் பொதுவாக உணருங்கால் செய்யும் பணிகளே சரியை முதலிய மூன்றாம். நான்காவது படியான ஞானம் இறைவனை நுண்ணிலையில் உண்மையாக உணர்ந்து நிற்கும் பணியாகும் என்பதை உணர்தல் வேண்டும்.

முதற்கண் தமது இறைவனின் நுண்ணிலையை உணர மாட்டாத உயிர்கள் தன்னைப் பருநிலையாக உணர்தற் பொருட்டே, வடிவமற்ற நிலை தனது உண்மை நிலையினின் றும் இறங்கி வடிவம் உடையனவாய்ப் பொது நிலையில் நிற்கின்றான். அந்த வடிவம் **உருவம், அருவுருவம் அருவம்** என்ற மூன்று வகையினையுடையது என்று முன்னர் விளக்கப்பட்டுள்ளது.[26] இறைவனது வடிவம் திருமேனி என்று போற்றப்பெறும். மூவகைத் திருமேனிகளிலும் உருவத்திரு மேனியைத் தீண்டி வழிபடுதலும் திருமேனியின் வழிபாட்டிற் குத் தேவையானவற்றை அகல நின்று செய்தலும் சரியை எனப்படும். **உமாமகேசர், சோமாஸ்கந்தர், சந்திரசேகரர்**

26. இந்நூல்-பக். 75-77

நடராசர்[27] முதலிய வடிவங்களேயன்றி ஆசான் மூர்த்தியும், அடியார்களும் கூட இறைவனது உருவத்திருமேனிகளாகும் என்பதை நாம் அறிதல் வேண்டும். இத்திருமேனிகள் அனைத்தும் **'மாகேசுவர மூர்த்தம்'** என வழங்கப்படும். ஆதலின் **மாகேசுவரபூசை** அனைத்தும் சரியைத் தொண்டுகளில் அடங்குகின்றன.

திருக்கோயிலில் இலிங்கமூர்த்தி முதலிய அனைத்து மூர்த்திகளையும் வழிபடும் முறைகளும் சரியையில் அடங்கும். திருக்கோயிலில் மூர்த்திகளை அகலநின்று வழிபடுதல், அங்கு நிகழும் வழிபாட்டிற்கு ஆகுமாறு நந்தவனம் அமைத்தல், பூக்கொய்து கொடுத்தல், பூமாலை, பூச்சரம் இவற்றைத் தொடுத்துத் தருதல், திருக்கோயில் திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், உழவாரப் பணி செய்தல், பழங்கோயில்களை வேண்டிய அளவிற்குப் புதுக்கித் திருப்பணி செய்தல்,[28] நித்திய நைமித்திக வழிபாடுகளைச் செய்வித்தல், அவற்றிற்குத் தேவைப்படும் குடம், கவசம், தீபக்கால்கள், விசிறி, கண்ணாடி முதலியன ஆக்கித் தருதல், சிவபுராணங்களையும், அடியவரது வரலாறுகளையும் கேட்டல், திருத்தலப் பயணம் முதலியவற்றை மேற்கொள்ளல் முதலிய இன்னோரன்ன பலவும் சரியையைச் சார்ந்த திருத்தொண்டுகளாகும். இதனை சித்தியார்[29] ஒருபாடலால் விளக்கும். **அப்பர்பெருமான்** இம்முறைக்கு எடுத்துக்காட்டாகின்றார். சுருங்கக்கூறின் "புறத்தொழில் அளவில் இறைவனது உருவத் திருமேனியை நோக்கிச் செய்யப்பெறுவன பலவும் சரியை"யில் அடங்கு

27. சிவாலயங்களுக்குச் செல்லாதவர்கள் சென்று இவற்றை அறிந்து கொள்ள வேண்டும்.
28. நாட்டுக் கோட்டைத் தனவணிகர்கள் இப்பணியில் முன்னணியில் நிற்கின்றனர் என்பது உலகறிந்த உண்மை.
29. சித்தியார் 8.19

கின்றன என்று கூறலாம். திருக்கோயிலிலுள்ள இலிங்கம் அருவுருவத்திருமேனியையும் புறத்தொழில் அளவில் வழி படுவதால் அவ்வழிபாடும் சரியையில் அடங்கி விடுகின்றது.

இவ்வழிபாட்டில் திருக்கோயில் திருவலகிடுதல் முதலாயின **சரியையில் சரியை** எனவும், ஒரு மூர்த்தியை வழிபடுதல் **சரியையில் கிரியை** எனவும், வழிபடு கடவுளை யும் சிவபெருமானையும் தியானித்தல் **சரியையில் யோகம்** எனவும் கொள்ளப்பெறுகின்றன. இச்செயல்களால் ஓர் அநுபவம் வாய்க்கப்பெறுதல் **சரியையில் ஞானம்** ஆகும் என்பதும் ஈண்டு அறியப்படும்.

**கிரியை:** சிவபெருமானின் அறிவுருவத்திருமேனி யாகிய இலிங்க மூர்த்தத்தை அணுகியிருந்து அதன்கண் அப்பெருமானை '**மந்தரம், கிரியை, பாவனை**' என்ற மூன்றினாலும் அகத்திலும் புறத்திலும் பலவகை உபசாரங் களையும் முறைப்படி செய்து வழிபடுதலே **கிரியை** எனப் படும். திருமுழுக்கு (அபிடேகம்), ஆடை, அணிகலன், சந் தனம், மலர் முதலியவற்றால் செய்யும் ஒப்பனை (அலங்காரம்); படையல் (நிவேதனம்) புகை, ஒளி (தூபம், தீபம்), குடை, கொடி, கண்ணாடி, கவரி முதலிய மங்கலப் பொருள்கள் இவற்றை ஏற்பித்து வலம் (பிரதட்சிணம்) வருதல், அடிபணி தல் (நமஸ்காரம்), புகழ்ச்சி (தோத்திரம்) என்பவற்றைச் செய்து வேண்டி (பிரார்த்தித்து) நிற்றல் என்னும் இவ்வகை அணுக்கத் தொண்டுகள் கிரியையுள் அடங்கும். சரியை நிலையிலும் திருமுழுக்கு முதலியவற்றைச் செய்யினும் அவை மேற்குறிப் பிட்ட மந்திரம் மூன்றானும் அகத்தும் புறத்தும் நிகழாது செயலளவில் புறத்து மட்டிலும் நிகழ்தலின் அவை 'கிரியை' எனப்படுதல் இல்லை.

உபாசனை முதலாக வரும் காரியங்களின் தொகுப்பை யுடையது கிரியை. பக்தன் தன்னைப் பரமபதத் தந்தையின் தொண்டுக்காகப் பயபக்தியுடன் கட்டுப்பாடு, கடமை உணர் வுள்ள மகனாகக் கருதிப் பணிந்து ஒழுகுகின்றான். ஆகவே, அவன் தன் நேரம் முழுவதையும் இறைவனுக்குப் பணி செய்வதிலேயே கழிக்கின்றான்.

என் கடன் பணிசெய்து கிடப்பதே[30]

என்ற **அப்பர் பெருமானின்** கருத்தையொட்டி இறைபணி செய்வதையே தனது வாழ்வாகக் கொள்ளுகின்றான். இது முதல் மார்க்கத்தைவிட மிகவும் நெருங்கிய அன்புடன் பணிவிடை செய்வதாகும். இம் மார்க்கத்தின் பயனாகக் கடவுள் அருகில் (சாமீபம்) செல்லலாம். 'யான்', 'என்னுடையது' என்ற செருக்குகளைத் தகர்த்தெறிய வல்லது கிரியா மார்க்கமாகும். சித்தியாரும் இதனை ஒரு பாடலால்[31] விளக்குகின்றது. **ஞானசம்பந்தப் பெருமானை** இம்முறைக்கு எடுத்துக் காட்டாகக் கொள்வர் சைவப் பெருமக்கள்.

திருக்கோயிலில் விளங்கும் இலிங்கத் திருமேனிகள் ஊரும் நாடும் ஆகிய உலகனைத்தின் பொருட்டாக ஏற்பட்டது. ஆகவே அங்குப் பிறர் பொருட்டாகச் (பரார்த்தமாகச்) செய்யப்பெறும் வழிபாடு நடைபெறும். எனவே, அவரவரும் தம் பொருட்டாக (ஆத்மார்க்கமாக)ச் செய்ய வேண்டிய வழிபாட்டினை இல்லத்தில் நிகழ்த்தலாம். இம்முறையில் வழிபாடு இயற்றுவோர் ஆசாரியர் வழியே இலிங்கத் திரு மேனியைப் பெற்று அவர்பால் வழிபடும் முறைகளைச் செவ்வனே அறிந்து கொண்டு அதன்படி செய்தல் வேண்டும்.

30. அப். தே. 5.19.9
31. சித்தியார். 8. 20

இக் குறிப்பிட்ட இரண்டிடத்தும் பூசைக்குரிய மங்கலப் பொருள்களைத் திரட்டுதல் கிரியையில் சரியை; புறத்தில் பூசித்தல், கிரியையில் கிரியை, அகத்தில் பூசித்தல் கிரியையில் யோகம் என்று வழங்கப்பெறும். இவற்றால் வழிபாட்டாளர் அநுபவம் வாய்க்கப்பெறுதல் கிரியையில் ஞானம் என்பதாகும்.

**யோகம்:** 'யோகம்' என்பது வடசொல். 'கூடுதல்' அல்லது 'ஒன்றுதல்' என்பது இதன் பொருள். ஆன்மா இறைவனோடு ஒன்றுதல் அறிவால் அல்லது உடலால் அன்று என்பதை நாம் அறிவோம். ஆனால் மனம் முதலிய அந்தக் கரணங்கள் கண், கை, கால் முதலிய புறக் கரணங்கள்போல் ஆன்மாவிற்குப் பெரிதும் தொலைவாகாது, அதனோடு ஒன்றித்து நிற்றலின் அவற்றால் இறைவனைக் கூடுதலும் **'யோகம்'** என்று உபசரித்துக் கூறப்பெறும். புறத்தே பறந்து சென்று திரிந்து உலகப் பொருள்களோடு ஒன்றியே பழகிவிட்ட இம் மனம் முதலிய அந்தக்கரணங்களை அவற்றின்மேல் செல்லாதவாறு அடக்கி அகத்தே நிறுத்தி இறைவனோடு ஒன்றச்செய்தல் என்பது எளிதான செயலன்று. அதனால் அவ்வாறு செய்தற்குப் பல செயல்கள் முதற்கண் வேண்டப் பெறுகின்றன. ஆகவே **'யோகம்'** என்பது எட்டுக் கூறுகளாகப் பகுத்துக் கூறப் பெறுகின்றது.[32] அவை **இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி** என்று வழங்கப்பெறும்.

இவற்றுள் இயமம் என்பது நூல்களில் விலக்கப் பெற்ற தீயொழுக்கங்களை அறவே விலக்குதல். இந்நிலையில் இருப்போர்க்கு இல்லக் கிழத்தியோடு இருத்தலும் ஏதமாகும். மனைவியோடும் மக்களோடும் இருந்தவர்களாகக் குறிப்பிடப்

32. சிந்தியார் 8. 21

பெறும் முனிவர்கள் '**வானப்பிரத்தம்**' என்ற மூன்றாம் நிலையில் நின்றவர்களேயன்றி முற்றத் துறந்த சந்நியாசம் என்ற நான்காம் நிலையில் நின்றவர்கள் அல்லர். இவர்கள் யாவரும் '**தவசிகள்**' எனப் பெயர் பெறுவர்களேயன்றி '**யோகியர்**' எனப்பெயர் பெறார் எனப் பிரித்து அறிதல் வேண்டும்.

**நியமம்** என்பது நூல்களில் விதித்தவற்றை இயன்ற அளவில் கடைப்பிடித்தல் ஆகும்.

**நீர்பலகால் மூழ்கி நிலத்தசைஇத் தோலுடீஇச்**
**சோர்தடை தாழச் சுடரோம்பி—ஊரடையார்**
**கானகத்தே கொண்டு கடவுள் விருந்தோம்பல்**
**வானகத் துய்க்கும் வழி.**[33]

என்ற வெண்பாவில் குறிப்பிட்டுள்ளவை இந்நியமத்துள் சேர்வனவாகும். இனி, **ஆசனம்** என்பது தாமரை (பதுமம்), யாமை (கூர்மம்), முதலிய பெயர்களைப் பெற்றுள்ள இருக்கை வகைகளில் உடலைப் பயிற்றி அவற்றின்படி அமர்தல். **பிராணாயாமம்** என்பது, இயற்கையாக இயங்கும் மூச்சுக் காற்றினைத் தன் வசப்படுத்தி ஒரு நெறியில் இயங்கச் செய்தல். **பிரத்தியாகாரம்** என்பது, தான் நினைத்த பொருளின் வடிவாதல்.

**தாரணை** என்பது, மனத்தை அடக்கி ஒருவழியில் நிறுத்துதல். இறைவனுடைய திருமேனியை மனத்தில் கொள்ளுதலுமாம். **தியானம்** என்பது, இறைவனை அவனது அருளுருவத் திருமேனியாகிய ஒளி வடிவினனாக எண்ணு தல். **சமாதி** என்பது, அந்த எண்ணத்தில் தன்னை மறந்து அவனோடு ஒன்றிவிடுதலாகும். மனம் தாரணைக்கண் நின்ற பின்னர்ச் சிவபெருமானைத் தியானித்தலும், அவனிடத்து

33. புறம். வெண். மாலை-வாகைப்-14

அழுந்துதலுமே சிவயோகமாம். இந்நிலைகளை **அட்டாங்க யோகம்** என்று யோக நூல்கள் விரித்துப் பேசும்.

இக்கூறியவற்றால் யோகம் என்பது, அகத்தொழில் ஒன்றால் மட்டிலும் சிவபெருமானது அருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு என்பது தெளிவு. இந்த எட்டு உறுப்புகளுள் முதல் நான்கும் **யோகத்தில் சரியை**; ஐந்தாவதும் ஆறாவதும் **யோகத்தில் கிரியை**; தியானம் **யோகத்தில் யோகம்**; சமாதி **யோகத்தில் ஞானம்** என்றும் இன்னும் பலவாறாகவும் விளக்கப்பெறும். சரியை, கிரியை, யோகம் என்பவற்றை மேற்கொண்டு ஒழுகும் முறைகள் பலவும் சிவாகமங்களில் **சரியாபாதம்**, **கிரியாபாதம்**, **யோகபாதம்** என்னும் பகுதிகளிலும் அவைபற்றி எழுந்த பிறநூல்களிலும் வகுத்துக் கூறப்பெற்றுள்ளன. யோகம்பற்றிய செய்திகள் யோக நூல்களில் விரிவாகக் கூறப்பெற்றுள்ளன.

சுருங்கக் கூறின் யோகத்தில் பக்தன் தன்னைக் கடவுளின் இணை பிரியா நண்பனாகக் கருதுகின்றான். புலன் பொருள்களின் தடுமாற்றத்தினின்றும் மனத்தை வெளிப்படுத்தி மிக உயர்ந்த தியானத்தில் ஈடுபட்டுக் கடவுளை வேண்டுவது ஆன்மா. இம்மார்க்கத்தின் பயனாக இறைவனின் உருவத்தை (சாரூபத்தை) அடையலாம்; அதாவது தெய்விகத் தன்மையை எய்தலாம்.

சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்றும் முத்தியின் முதற்படிக்கட்டுக்குக் கொண்டு செலுத்தும். இதுவே பத முத்தியாகும்[34] ஆனால் இதன்மூலம் ஆன்மா முழு விடுதலை பெறாது. ஏனெனில், மாயையானது மாயையால் ஏற்பட்ட உலகிற்கு மேலே ஆன்மாவைக் கொண்டு செல்ல முடிவ

34. இது பின்னர் விளக்கப்பெறும் பக். 331-32

தில்லை. ஆகவே, இம் மூன்று மார்க்கங்களும் இறுதி மார்க்கமான ஞான மார்க்கத்திற்கான ஏற்பாடுகளேயாகும்.

**வேறுவிதமாகவும்:** சிவபுண்ணியவகைகள் வேறுவித மாகவும் பகுத்துப் பேசப்பெறும். இறப்பில் தவங்களாகிய சரியை கிரியை யோகம் ஆகியவை அபுத்தி பூர்வமாகவும் பொதுவாகவும் உண்மையன்றியும் நிகழ்தல் உண்டு.

**அபுத்திபூர்வமானது:** ஒருவன் தான் சிவபுண்ணியத் தைச் செய்கின்றதான உணர்வு இல்லாமல் செய்யும் சிவ புண்ணியம் '**அபுத்தி பூர்வ சிவபுண்ணியம்**' எனப்படும். இதற்கு ஓர் எடுத்துக்காட்டு: சிவாலயம் ஒன்றில் எரிந்து கொண்டிருந்த திருவிளக்கு அணையும் நிலையில் இருந்தது. எலியொன்று விளக்கிலிருந்த நெய்யை உண்ணச் சென்றது. விளக்கில் வாய் வைக்கும்போது அது சுட்டது. உடனே வாயை எடுத்த பொழுது விளக்கும் தானாகத் தூண்டப்பெற்று நன்கு எரிந்தது. இதுவே அவ்வெலிக்கு விளக்கிலிட்ட சிவபுண்ணிய மாக அமைந்தது. இதுகாரணமாக அந்த எலி மாவலிச் சக்கரவர்த்தியாகப் பிறந்தது என்பது வரலாறு. அபுத்தி புண்ணியமும் பலன் தருகின்றது என்ற உண்மை இதனால் பெறப் படுகின்றது.

மக்களிலும் இது போன்ற செயல்களைச் செய்வாரும் உளர். அங்காடித் தெருவில் மலர் முதலியன விற்பவர்கட்கு இத்தகைய அபுத்திபூர்வ சிவபுண்ணியம் நிகழ்தல் உண்டு. மலர் விற்றுப் பிழைப்பவர் அதன் பொருட்டுப் பூந்தோட்டங்களை வைத்துப் பாதுகாத்துப் பூப்பறித்துத் தொடுத்து விற்கின்றனர். இதனைச் சிலர் வாங்கிச் சென்று சிவபெருமானுக்குத் தாமே சாத்தியும், குருக்களால் சாத்துவித்தும் வழிபடுவதைக் காணலாம். இதனால் பூவிற்றவர்க்கு அவர் அறியாமலேயே அபுத்தி பூர்வ புண்ணியம் அவரை வந்தடைகின்றது. விலை

கொடுத்து வாங்கப்பெறும் மலரும் பிறவும் கொண்டு வழிபடுபவர் **பொதுச் சிவபுண்ணியம்** செய்பவராகின்றனர். மலர் தவிர, தேங்காய், பழம், ஊதுவத்தி, கர்ப்பூரம் முதலிய பிறபொருள்களையும் சிவாலய்ங்களில் நடைபெறும் பூச னைக்கு உரிய பிற பொருள்களையும் விற்பவர்கட்கும், அன்றாடக் கூலி பெற்றுத் திருப்பணி செய்பவர்கட்கும் இவர் போல்வார் பிறர்க்கும் அபுத்தி பூர்வ சிவபுண்ணியங்கள் உண்டாகும்.

இக் கூறியவை போலன்றி அன்பு காரணமாகவே சிவப் பணிக்கு மேற்கூறியவாறு உதவினாலும் அன்றிச் சிவபெரு மானைத் தாமே வழிபடினும், அப்பெருமானின் முழுத்தன்மை உணராமல் அவனையும் பிறதேவர்களோடு ஒப்பவைத்து வழிபடினும் அதனால் வரும் சிவபுண்ணியமும் அபுத்திபூர்வ சிவபுண்ணியமேயாகும். காரணம், 'பதிபுண்ணியம்' என்பது பசுக்களது தன்மையினையும் பதியினது தன்மையினையும் வேறுபடுத்தி நன்குணர்ந்து அவ்வுணர்வு காரணமாகப் பசுக்கள் மாட்டு அன்பு நிகழாது பதியினிடத்து அன்பு நிகழப்பெறுத லன்றி உண்மையாக நிகழாமையே என்பதாகும். எனினும், இவை முன்னர்க் குறிப்பிட்டவை போலன்றிச் சிறிது உணர்வு பெற்றுச் செய்யப்பெறுவதால் அவற்றினும் இவை சிறப்புடை யனவாகின்றன.

**புத்திபூர்வமானது:** சிவபெருமானது முழுமுதல் தன் மையை உணர்ந்து அவனுக்குத் தொண்டு புரிய வேண்டும் எனக் கருதி மேற்குறிப்பிட்ட சரியை, கிரியை யோகம் ஆகியவற்றைச் செய்தல் **'புத்தி பூர்வ சிவபுண்ணியம்'** எனப்படும்.

புத்திபூர்வமாகச் செய்யப்பெறும் சிவபுண்ணியங்களும் பொது, சிறப்பு என இருவகையாகின்றன. ஒருவர் நல்லாசிரி

யரிடம் தீக்கை பெற்று, அவற்றைச் செய்யும் தகுதி பெற்று, செய்யும் முறையறிந்து அம்முறைப்படி செய்பவை சிறப்புச் சிவபுண்ணியங்களாகும். அங்ஙனமின்றித் தாமே தமக்குத் தோன்றியவாறு செய்யின் அவை பொதுச் சிவபுண்ணியங் களாகின்றன.

**பிறிதொருவிதமாகவும்** சிவபுண்ணியங்கள் வகைப் படுத்தப்பெறுகின்றன. தீக்கை பெற்றேனும் பெறாமலேனும் சரியை கிரியை யோகங்களாகிய சிவபுண்ணியங்களைச் செய்வோர் அனைவரும் அப்பெருமானிடம் கொண்ட அன்பு காரணமாகப் பயன் கருதாது செய்கின்றனர் என்று சொல்ல முடியாது. பலர் தம் செயலுக்குப் பயனாகக் கல்வி, செல்வம், வெற்றி, புகழ், மனை, மக்கள் முதலிய உலகியல் பயன்களுள் ஒன்றேயோ பலவற்றையோ விரும்பிச் செய்பவர்கள். இவர்கள் சிவபெருமானிடம் செலுத்தும் அன்பு நேரே செல்லும் மெய்யன்பு ஆகாது; இது தாம் கருதும் பயன் வழியாகச் செல்லும் சார்புபற்றிய அன்பாகும். இச்சார்பு பற்றிய அன்பினால் வரும் சிவபுண்ணியம் பின்னர் மெய்யன்பையே விளைவிக்குமாதலால் அவை **'உபாயச் சிவபுண்ணியம்'** என்று கருத முடிகின்றது. தீக்கை பெற்றேனும் பெறாமலேனும் சிவபெருமானிடத்துக் கொண்ட அன்பே காரணமாக யாதொரு பயனையும் கருதாது செய்யும் சரியை முதலியவைகளே **'உண்மைச் சிவ புண்ணியங்கள்'** என்று கருதப் பெறு கின்றன.

## (4) வீடுபேற்றிற்கு வழி — ஞானம்

சரியை முதலிய மூன்றும் ஞானத்தின் வளர்ச்சி நிலைகளாகும் என்பதை நாம் அறிவோம். இந்த ஞானம் **'கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல்'** என்ற

நான்கு நிலைகளையுடையது. இந்த ஞானம் 'அரும்பு மலர் காய் கனி' என்ற முறையில் வளரும் என்பது **தாயுமானவரின்** திருவாக்கு என்பதையும் அறிவோம்.

**'அறிதல்'** என்ற அளவில் சரியை முதலிய தவங்களும் ஞானமே என்றாலும் தத்துவ ஆராய்ச்சி வழியாக மெய்ப்பொருளாகிய இறைவனை அறியும் அறிவே ஞானம் எனச் சிறப்பித்துக் கூறப்பெறும்.[35] இறைவனை அறநூல்கள் **'மெய்ப்பொருள்' 'செம்பொருள்'** என்றெல்லாம் சிறப்பித்துப் பேசும். அதனால் அந்நூல்களில் ஞானம் 'மெய்யுணர்வு' என்று கூறப் பெறும். வைதிகர்கள் மெய்ப்பொருளை **'பிரம்மம்'** என்று கூறுவர். 'பிரம்மம்' என்றால் 'பெரியது' என்று பொருள். இதைவிடப் பெரியது ஒன்று இல்லையாதலால் அப்பெயர் இறைவனுக்குச் சூட்டப்பெற்றது. **தாயுமானவர்** இதனைப் **'பெரிய பொருள்'** என்றே குறிப்பிடுவர். பிரம்மத்தை அறியும் ஞானத்தை 'பிரம்மஞானம்' என்றுகுறிப்பிடுவர் வைதிகர்கள். இறைவனைச் சைவர்கள் **'சிவம்'** என்று குறிப்பிடுவர். அதனை அறியும் இறையுணர்வு **'சிவஞானம்'** என்ற பெயர் பெறு கின்றது. **'பதிஞானம்'** என்பதுவும் இதுவே. இவையெல்லாம் தத்துவ ஆராய்ச்சிவழியாக மெய்ப்பொருளை அறியும் உணர்வையே குறிப்பனவாகும்.

ஞானத்தின் மிக்க அறிநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவாம்
ஞானத்தின் மிக்கார் நரரின் மிக்காரே[36]

என்ற **திருமூலரின்** திருவாக்கையும் காணலாம். ஞானத்தை விட மேலானமார்க்கம் இல்லை. வேறு எதுவும் முத்திக்குக்

35. சித்தியார் 8-22
36. திருமந்திரம். ஐந். தந். ஞானம்-1

கொண்டு செல்லாது. உண்மையான அறிவாகிய ஞானத்தில் திளைத்தவர்கள் உண்மையிலேயே சிறந்தவர்கள் என்பது தெளிவு. சித்தியார் கூறுவதும்[37] இதற்கு அரணாக அமைகின்றது. சன்மார்க்கத்திற்கு (நன்னெறிக்கு) **மணிவாசகப் பெருமானை** எடுத்துக்காட்டாகக் கொள்வர்.

'**தத்துவம்** (வடசொல்) என்பதற்கு 'மெய்ம்மை' அல்லது '**உண்மை**' என்பது பொருள். எனவே '**தத்துவ** ஆராய்ச்சி' என்பது பொருள்களின் உண்மைநிலைகளை அளவை முறையால் ஆய்ந்துணர்வதாகும். '**மெய்ப்பொருள் காண்பது அறிவு**' என்பது வள்ளுவப் பெருந்தகையின் திருவாக்கு. இதனால் ஒவ்வொரு சமயமும் தன்தன் கொள்கையே உண்மை என்பதைத் தத்துவநூல் வழியாக விளக்குகின்றது. சைவ சமயம் தனது கொள்கையை அவ்வாறு விளக்கும் பகுதியே சைவாகமங்களில் '**ஞானபாதம்**' எனப்படுவது.

எல்லா வேதங்களும் பண்டைச் சாத்திரங்களும் ஞானத்தையே முத்திக்கு நேரான மார்க்கமாக ஒரேமாதிரியாகக் கருதுகின்றன. சித்தியாரும்[38] இதனையே பேசுகின்றது. நான்கு வேதங்களும் புராணங்களும் புனித ஆகமங்களும் ஞானமே முத்திக்கு வழி என்று உறுதி கூறுகின்றன. பந்தம் அஞ்ஞானத்தில் கொண்டுவிடுகின்றது. உண்மையான மெய்யறிவு, மெய்ஞ் ஞானம் எழுந்தவுடன் பகலவனைக் கண்ட இருள்போல அஞ்ஞானம் அகன்று மறைகின்றது. அறியாமை அழிந்தவுடன் – பந்தம் போனவுடன் – விளைவது, முத்தியாகும். உண்மையான இந்நிலையை அடைய உதவும் அறிவு **பதிஞானம்** ஆகும்.

37. சித்தியார்-8.22
38. மேலது. 2.7

இங்ஙனம் பற்பல நூல்களில் சித்தாந்த உண்மைகள் விளக்கம் பெற்றிருந்தும் பலர் இவ்வுண்மையை உணராது உள்ளனர். இதற்குக் காரணம் என்ன? மலபரிபாகம் இன்மையே காரணமாகும் என்று கூறலாம். மலபரிபாகம் என்பது ஆணவமலம் தனது ஆற்றல் கெட்டு நீங்கும் நிலையை அடைதலாகும். அஃது ஏற்படுங்காலத்து சத்தி நிபாதமும், அதன்வழியாக சரியை முதலிய நலங்களும் நிகழும். அத் தவமுயற்சியால் '**இருவினையொப்பு**' உளதாகி உலகமயக்கம் நீங்கும். நீங்கவே **சிவஞானம்** கை கூடும்.

மலபரிபாகம், சத்தி நிபாதம், இருவினையொப்பு என்பன தாமே நிகழ்தல் இயற்கையாய் நிகழ்தல் போலத் தவமும் ஞானமும் ஒருவர்க்குத் தாமே நிகழ்வதில்லை. அது குருவருளால்தான் நிகழும். பரிகள் வாங்கச் சென்ற **திருவாதவூரரை** இறைவனே குருவாக வந்து திருப்பெருந்துறையில் ஆட்கொண்ட நிகழ்ச்சியையும், திரிசிரபுரத்தில் **தாயுமான அடிகளை** மூலன் மரபில் வந்த மௌனகுரு தம் அடியவராக ஏற்ற நிகழ்ச்சியையும் ஈண்டு நினைவு கூரலாம்.

மலபரிபாகமும் சத்தி நிபாதமும் வந்த காலத்தில் தவத்தைச் செய்யத்தக்க நிலையும், ஞானத்தை உணரத்தக்க நிலையும் வாய்க்குமேயன்றித் தவமும் ஞானமும் தாமே வந்துவிடமாட்டா. இதனைச் சில உவமைகளால் தெளியலாம். நோய் உள்ளபோது நோயாளி பசியின்மையால் உணவை உட்கொள்ளும் தன்மையற்றவனாக உள்ளான். மருந்துகளால் நோய் நீங்கின பிறகு பசி உண்டாகின்றது. உணவை ஒருவர் ஆக்கி அளித்த பிறகு அவ்வுணவை உண்டே பசி தணிய வேண்டியவனாகின்றான் அந்நோயாளி. இளங்குழந்தைகட்குக் குழவிப் பருவம் காரணமாகக் கல்விகற்கும் நிலை ஏற்படுவதில்லை. குழவி வளர வளர அதன் விடுப்பூக்கத்தால் (Instinct of Curiosity) கல்விகற்கும் நிலை வாய்க்கின்றது. கல்வி

இப்பருவத்தில் தானாக வந்து விடாது. ஆசிரியர் ஒருவர் பயிற்றுவித்தலால்தான் அக்குழவியிடம் கல்வி வருகின்றது.

பிறவியிலேயே ஒருவனுக்குக் கண்ணில்லை. மணி மந்திர ஔடதங்களால் அவனுக்குக் கண்கிடைக்கின்றது. பொருள்களைக் காணும் நிலை அவனுக்கு வந்து விடுகின்றது. ஆனால் அவனுக்குக் காணும் பொருள்களை இன்னவை என்று உணர்ந்து கொள்ளும் ஆற்றல் இல்லை. பிறவியி லேயே கண்ணுடையவன் ஒருவன் பொருள்களை அவனுக்கு 'இஃது இன்னது' என்று அறிவித்தால்தான் அவனால் பொருள்களை இன்னின்னவை என்று பாகுபாடு செய்து அறிய முடிகின்றது. இவை போலவே ஆணவமலம் பரிபாகமாகிச் சத்தி நிபாதம் வருமாயின் தவம் புரியும் நிலை வாய்க்குமே யன்றித் தவமும் ஞானமும் கிடைத்து விட வாய்ப்பு இல்லை. குருவருளால்தான் அவை கிடைக்க வேண்டும். அதற்கு இறைவன் திருவருளும் வேண்டும்.

பொதுவாக தவம் '**கிரியை**' என்று சொல்லப் படும். சரியை முதலிய மூன்றையும் தருவோன் '**கிரியா குரு**' என்றும், ஞானத்தை உணர்த்துவோன் '**ஞானகுரு**' என்றும் வழங்கப் பெறுவர். மேன்மேல் நிலையில் உள்ளவர் கீழ்கீழ் நிலையைப் பிறருக்குத் தர வல்லவர் என்பதையும் கீழ்கீழ் நிலையில் உள்ளவர் மேல்மேல் நிலையைத் தரவல்லவராகார் என்பதையும் நாம் உணர்தல் வேண்டும் இக்காரணத்தால் ஞானகுரு 'ஞானம், யோகம், கிரியை, சரியை' என்ற நான்கையும் தரவல்லவர்; யோககுரு யோகம், கிரியை, சரியை என்ற மூன்றையும் தரவல்லவர்; கிரியா குரு 'கிரியை, சரியை' என்ற இரண்டைமட்டிலும் தரவல்லவர். சரியைக்குரு 'சரியை' ஒன்றைமட்டிலுமே தர உரியவர். இங்ஙனம் குருமார்களின் தாரதம்மியம் உள்ளது என்பதும் ஈண்டு அறியப்பெறும். இவற்றை சித்தியார் பாடலும்[39] தெரிக்கின்றது.

39. சித்தியார் 12.5

## (5) தீக்கை வகைகள்

குரு மூர்த்திகளாய் இருப்பவர்கள் தம் சீடர்கட்குத் தவத்தையும் ஞானத்தையும் அளிக்கும் முறையைச் சைவ சித்தாந்தம் **தீக்கை** (தீட்சை) என வழங்கும். தீக்கை என்பது 'அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ்ஞானத்தைத் தருவது' என்று பொருள்படும். 'தீ க்ஷா' என்பது வடமொழிப்பதம். அது 'க்ஷா–நீக்குதல்; தீ–தருதல்' என்பது பொருள்படும். இந்தத் தீக்கை '**சமயதீக்கை, விசேட தீக்கை, நிருவாணதீக்கை**' என் மூவகைப்படும்.[40] சமயதீக்கையால் சரியையும், விசேட தீக்கையால் 'கிரியை, யோகம்' என்பவையும், நிருவாணதீக்கை யால் ஞானமும் கிடைக்கும். இவற்றை விளக்குவோம்.

**(அ) சமயதீக்கை:** சத்தி நிபாதத்தின் முதல் நிலை (மந்த தரம்) என்பதை அறிவோம். இதில் சிவபெருமானது முதன்மையை ஒருவாறு உணரும் நிலை உண்டாகும். இதனால் சிவபெருமானது சிறப்பு (மூல) மந்திரமாகிய திருவைந் தெழுத்தை (சிவாயநம: என்ற பஞ்சாக்கரத்தை) தூலமாக உணர்ந்து கணிக்கும் உரிமையும், சிவாகமங்களை ஓதி உணரும் உரிமையுழ், அவ்வாகமத்தில் சரியா பாதத்தில் நிற்கும் உரிமையும், மந்தர சத்திநிபாதத்திற்குச் சமயதீக்கையின் வழி அடைய முடியும். வேதத்தை ஓதுவதற்கும் வைதிக ஒழுக் கத்தை மேற்கொள்ளுவதற்கும் '**உபநயனம்**' இன்றியமையா தது என்பதை நாம் அறிவோம். அதுபோல சிவாகமங்கள் ஓதுவதற்கும் சைவ ஒழுக்கங்களை மேற்கொள்ளுவதற்கும் சமயதீக்கை மிகவும் இன்றியமையாதது, உபநயனம் பெறா தவன் வேதியன் ஆகான். அதுபோலவே சமயதீக்கை பெறாத வன் சைவன் ஆகான். சைவசமயியாகும் உரிமையைத் தருவதால்தான் இத்தீக்கை **சமய தீக்கை** என்ற திருப்பெயர் பெற்றது. சமயதீக்கை பெற்றவன் '**சமயி**' எனப்பெயர் பெறுகின்றான்.

**(ஆ) விசேட தீக்கை:** சமய தீக்கை பெற்று அதன் வழி நிற்கும்போது ஆணவமலம் மேலும் பரிபாக முற்றுச் சத்தி நிபாதம் மந்தமாய் நிகழும். அப்பொழுது சிவபெருமானை இலிங்க வடிவில் கண்டு வழிபடுதலாகிய **கிரியைத் தொண்டில்** இச்சை உண்டாகும், அங்ஙனம் இச்சை உண்டாகும்போது முன்னர் சமயதீக்கையைப் பெற்றவரிடமோ வேறோர் ஆசிரியரிடமோ விசேட தீக்கை பெற்றுத் தம் பொருட்டான (ஆன்மார்த்தமான) சிவலிங்க மூர்த்தியை எழுந்தருளுவித்துக் கொடுக்கப் பெற்றுக் கிரியாபாத முறைப்படி அம் மூர்த்தியை நாடோறும் நியமமாக வழிபடுதலாகிய **கிரியைத் தொண்டில் நிற்பர். சிவலிங்க மூர்த்தியை** எழுந்தருள்வித்துக் கொடுக்கும் பொழுதே அகப்பூசை, புறப்பூசை முறைகளோடு **யோக முறையும்** உணர்த்தப்பெறும்.

கிரியைத் தொண்டினால் ஆணவமலம் மேலும் பரிமாகமுற்றவழிச் சத்தி நிபாதம் தீவிரமாய் நிகழும். இங்ஙனம் நிகழப்பெற்றோர் யோகநிலைக்கண் நிற்பர். இந்நிலையில் விசேடதீக்கை மந்த சத்தி நிபாதத்துக்கு உரியதாய்க் கிரியையைத் தந்து பின்னர் அதுவழியாகத் தீவிர சத்தி நிபாதத்தை உண்டாக்கும். இந்நிலையில் யோகத்தைத் தரும் யோகத்திற்கு விசேடத்தில் விசேடமாக வேறு தீக்கை செய்யும் முறையும் சில இடங்களில் உண்டு. விசேட தீக்கை பெற்றுக் கிரியா பாதத்தில் நிற்போர் '**புத்திரர்**' என்று வழங்கப்பெறுவர். யோகத்தில் நிற்போர் '**யோகியர்**' என்னும் பெயரைப் பெறுவர்.

**(இ) நிருவாணதீக்கை:** இவண் குறிப்பிட்ட இரண்டு தீக்கைகளால் சரியை கிரியை யோகம் என்னும் தவம் முழுவதும் கைவரப்பெறுவதால், நிருவாணதீக்கை **ஞானத்திற்கே** உரியதாகின்றது. சரியை முதலிய மூவகைத் தவங்களில்

40. சிவப்பிரகாசம்-9 (உரை)

முதிர்ச்சியால் மலபரிபாகம் முற்றியவழி சத்தி நிபாதம் அதிதீவிரமாய் நிகழும். அப்பொழுது **பதி, பசு, பாசம்** என்றும் முப்பொருள் உண்மைகளின் இயல்பை உள்ளவாறு அறிய வேண்டும் என்ற பெரு வேட்கை எழும். அதாவது, 'நான் யார்?' நான் வந்த வழி எப்படி? போவது எப்படி? எனக்கு வரும் இன்பத்திற்கும் துன்பத்திற்கும் காரணம் யாது? துன்பம் நீக்கப்பெற்று இடையறாத இன்பத்தில் வாழும் நிலை இல்லையா? அப்படி உண்டாயின் அதற்கு வழியாது?' என்று இங்ஙனம் பொருள் இயல்புகள் பலவற்றையும் உள்ளவாறு உணர்வதில் பேரவா நிகழும். நிகழவே வேண்டுவார் வேண்டுவனவற்றை ஈவானாகிய சிவபெருமான், ஞானச் செய்தியால் சிவோகம் பாவனையத் தலைபட்டுச் சிவமேயாய் நிற்கும் ஞானகுருவின் சுத்தான்மை சைத்தன்யத்தில் ஆவேசித்து நின்று நிருவாணதீக்கையைச் செய்தருளுவான். **தாயுமானவர்** இரண்டாம் முறை தம் குருவிடம் பெற்றது இந்தத் தீக்கையையே. அத்துடன் துறவு நிலையையும் ஞானோப தேசத்தையும் பெற்றார் என்பதை நாம் அறிவோம்.

சமய விசேடதீக்கைகளில் புறவுடம்பு அக வுடம்புகள் மந்திரங்களால் ஓரளவே தூய்மை அடைகின்றன. நிருவாண தீக்கையில் **அத்துவாக்கள்**[41] ஆறனையும் முறைப்படி ஒன்றில் ஒன்றை அடக்கி எல்லாவற்றையும் அடக்கி நிற்கும் கலை யைச் சோதிக்கும். இதனால் ஆறத்துவாக்களையும் பற்றி நிற்கும் சஞ்சித கன்மங்களை (பழவினைகளை)[42] முற்றத் துடைத்து விடும். ஆன்மாவையும் வினைக்கட்டினின்றும்

41. அத்துவா - படிவழி. ஆறு-மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை என்பன. இவை ஆறும் ஆன்மா மேலேறுவதற்குப் படிவழிபோல இருத்தலின் இப்பெயர் பெற்றது.
42. சஞ்சிதம் - பழவினை; பிராரத்தம்-நுகர்வினை; ஆகாமியம் எதிர்வினை.

விடுவிக்கும். திருவைந்தெழுத்து முத்தி பஞ்சாக்கிரமமாக உபதேசிக்கப்பெறும். சிவாகமத்தில் ஞானபாகத்தை உணர்த்தும் முகத்தால் **பதி பசு பாசம்**, என்ற முப்பொருளின் இயல்புகளை நன்கு உணரும் நிலைகள் உண்டாகும். முப்பொருளின் இயல்பு களை உள்ளவாறு உணர்வதற்குத் தடையாக இருந்த வினை கட்கு ஆணவமலபரிபாகம் மெலிவடைந்து ஞானாசிரியன் செய்யும் நிருவாண தீக்கையால் அடியோடு அழிந்தமையால், பொருளியல்பு முற்றும் தெளிவாக உள்ளவாறு விளங்குதலே ஞானமாகும். இந்நிலையில் பொய்யைப் பொய்யெனக்கண்டு கழித்து மெய்யை மெய் என்று உணர்ந்து பற்றும் நிலை தானே உளவாகும். ஆகவே **நிருவாணதீக்கை தீவிர சத்தி நிபாதம்** உடையார்க்கு உரியதாய் ஞானத்தைத் தருவதாய் அமை கின்றது. இந்த நிருவாண தீக்கை அதிதீவிரத்திலும் தீவிரமாய் நிற்போர்க்கு அப்பொழுதே முத்தியை அளிக்கும் வகையி லும், ஏனையோர்க்கு உடம்பு நீங்கும் காலத்து முத்தியைக் கொடுக்கும் வரையிலும் செய்யப் பெறும். இவற்றுள் முன்னது '**சத்தியோ நிர்வாணதை**' என்றும், பின்னது '**அசத்தியோ நிர்வாணதை**' என்றும் வழங்கப்பெறும்.

இந்தத் தீக்கை வகைகளைச் செய்வதில் ஒரு நியதியும் உண்டு. தீக்கை பெறுவோர் தகுதிக்குத் தக்கபடி வேறு வேறு வகையாகத் தீக்கை செய்யப் பெறும். இதனால் தீக்கை வகை இரண்டாகின்றன. முதலாவது அக்கினி காரியத்தால் செய்வது; இஃது **அங்கிதீக்கை** என்று பெயர் பெறும். இரண்டாவது அக்கினி இல்லாது செய்வது; இஃது **அங்கதீக்கை** என்று வழங்கப்பெறும்.

## (6) சிவநெறி ஒழுக்கம்

தீக்கை பெற்றவர்கள் சிவநெறி ஒழுக்கத்தைக் கடைப் பிடிக்க வேண்டும். இவர்கள் ஒழுக வேண்டிய ஒழுக்கம்

**நித்தியம், நைமித்திகம், காமியம்** என்று மூவகையாக நடைபெற வேண்டியவை.

**(அ) நித்தியம்:** அன்றாடக் கடமைகளைத் தவறாது செய்து வருவது. இது காலை, நண்பகல், மாலை என்ற மூன்று பொழுதும் நீராடல், திருநீறு கண்டிகை அணிதல், மந்திர நீரைத் தெளித்துக் கொள்ளுதல், மந்திர ஆற்றல்களை நெஞ்சு, முகம், தலை, சிகை, கை, கால் என்னும் உறுப்புகளில் பதிவித்தல், காற்றினை உள்ளிழுத்து வெளியேற்றி, வெளியிலிருந்து உள்ளுக்குவாங்கி நிரப்புதல் முதலியவற்றால் உடலைத் தூய்மை செய்து கொள்ளல் போன்றவை நித்திய கருமங் களாகும். மேலும் திரு ஐந்தெழுத்தைக் கணித்தல், ஆலய வழிபாடு, அடியார் வழிபாடு, இவற்றை மேற்கொள்ளல், அகப்பூசை புறப்பூசைகளை இயற்றல், தியான சமாதியில் நிற்றல், உபதேச மொழியைச் சிந்தித்தல், தெளிதல், நிட்டையில் அழுந்தல் முதலியவையும் இக்கருமங்களுள் அடங்கும்.

**(ஆ) நைமித்திகம்:** ஆண்டுதோறும் நடைபெறும் நாள், பொழுதுகளில் தம் கடமைகளைத் தவறாமல் செய்துவருதல், வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் என்பவற்றுள் ஒன்றினானாதல் பலவற்றானாதல் சிறப்பெய்தும் நாள் அல்லது பொழுதுகளிலும், மற்றும் அம்பிகை, முருகன், தேவர், முனிவர், அடியார், மக்கள், அரசர், அசுரர் முதலியோரும், அஃறிணை உயிர்களும் சிவபெருமானது திருவருளைப் பெற்றுச் சிறப்பாகப் பூசித்தலும், விழா எடுத்தலும் ஆகியவை நைமித்திகக் கருமங்களில் அடங்கும்.

**(இ) காமியம்:** நாம் கோரும் பயன் கருதிச் செய்யும் வழிபாடுகள் காமிய கருமங்களாகும். நோய்நீக்கம், வாழ்நாள் திட்டம், மணப்பேறு, மக்கட்பேறு, வெற்றி முதலிய பயன்கருதி

அவ்வப் பயனுக்கு ஏற்றவாறு சிவபெருமானுக்குச் செய்யப் பெறும் சிறப்பு வழிபாடுகளையும் விழாக்களையும் சில பல நாட்கள் செய்தல் இவ்வகைக் கருமங்களில் அடங்கும்.

மேற்கூறியவற்றுள் நித்தியத்தைத் தவிர ஏனைய இரண்டும் வசதிகள் படைத்தவர்கட்கேயன்றி எல்லோராலும் இயற்றுதல் முடியாது. ஆகவே, தீக்கை செய்யும் பொழுதே ஏனைய இரண்டும் அவர்கட்குக் கடனாகாதவாறு நிரப்பி யொழித்தல் இன்றியமையாதது. இங்ஙனம் நிரப்பி யொழிக்கும் தீக்கை, '**நிரதிகாரதீக்கை**' என வழங்கப்பெறும். அங்ஙனம் நிரப்பாது மூன்றையும் கடனாகவே வைக்கும் தீக்கை '**சாதிகார தீக்கை**' எனப்படும். இம்மூன்று வகைக் கருமங்களும் தம் பொருட்டாகவும் பிறர் பொருட்டாகவும் செய்யப்பெறும். இவற்றுள் நித்திய கருமம் நோயாலும் பிறவற்றாலும் அதனைச் செய்யமாட்டாது இடர்ப்படுவார் பொருட்டு, பிறரால் செய்யப் பெறும். ஏனைய இரண்டும் பிறர்பொருட்டுச் செய்யப்பெறுங் கால் அவற்றை விரும்பிய ஒருவர் பொருட்டும், பொதுவாக உலகத்தின் பொருட்டும் செய்யப்பெறும். ஆசாரிய சுவாமிகள் அனைவராலும் செய்யப்பெறும் கருமங்கள் யாவும் உலக நன்மை பொருட்டேயாகும்.

நைமித்திக, காமிய கர்மங்களைப் பிறர்பொருட்டுச் செய்வோர் **ஆசாரியர்** என்று வழங்கப்பெறுவர். சிவாச்சாரியர் கள் அனைவரும் இவ்வகையினரே. ஒன்றையும் பிறர் பொருட்டுச் செய்யும் உரிமையின்றித் தம் பொருட்டு '**சித்தி, புத்தி, முத்தி**' என்றவற்றை அடைய முயல்பவர் '**சாதகர்**' என்ற பெயரைப் பெறுகின்றார். இவ்விரு திறத்தாருக்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்தற்குச் செய்யப்பெறும் தீக்கை '**அபிடேகத்தீக்கை**' என்ற பெயரைப் பெறும்

(ஈ) **பாகுபாடுகள்:** இக்கூறிய மூவகைக் கருமங்களையும் இயற்றுவோரும் அவரவர் ஆற்றலுக்கு ஏற்றவாறு பாகுபாடு செய்யப்பெறுகின்றனர்.

நித்திய கருமத்தோடு நைமித்திக காமிய கருமங்களையும் கடமையாக இயற்றும் ஆற்றலுடையவர் மக்களுள், '**உத்தமர்**' என்று வழங்கப் பெறுவர். அவ்வாற்றலின்றி நித்திய கருமம் மட்டிலுமே செய்ய வல்லவர் '**மத்திமர்**' எனப்படுவர்; அதுவும் செய்ய மாட்டாதார் '**அதமர்**' என்று கூறப்பெறுவர். இதில் முதல் இருவருமே அங்கி தீக்கைக்கு உரியவர்கள். அதமர் எவ்வகையிலும் அங்கி தீக்கைக்கு உரியவராகார். அங்கதீக்கையே இவர்கட்கு உரியது. இங்ஙனம் ஆற்றலும் ஆற்றலற்ற நிலைகளுமே வருணங்கள் ஏற்படும் சூழ்நிலைகள் என்று கருதலாம்.

மேற்குறிப்பிட்ட உத்தமருள் வேதசிவாகமங்களை நன்றாக ஓதி உணர்ந்து அவற்றில் நுவலப்பெற்ற ஒழுக்கங்களை முற்றக் கடைப்பிடித்து ஒழுகவல்லவர்கள் '**உத்தமருள் உத்தமர்**' ஆவர். வேத சிவாகமங்களை ஓதி உணர்ந்தும் அவற்றில் கூறப்பெற்ற ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்க மாட்டாதவர் '**உத்தமருள் மததிமர்**' ஆவர். வேதசிவாகமங்களை ஓதி உணரவும், அவற்றில் நுவலப்பெற்ற ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்கவும் மாட்டாமல் நித்திய நைமித்திக காமிய கருமங்களை மட்டிலும் செய்வோர் '**உத்தமருள் அதமர்**' என்று வழங்கப்பெறுவர். இம்மூவரும் **சாதிகாரதீக்கைக்கு** உரியவர்களாவர். இவர்கள் **அபிடேகதீக்கை** பெற்றவராயின் ஆசாரியரும் சாதகருமான நிலைகளை அடைவர்.

(உ) **மந்திரங்கள்:** தீக்கையில் உபதேசிக்கப்பெறும் மந்திரங்கள் பலவற்றுள் '**பஞ்சாக்கரம்**' ('சிவாய நம: என்பது)

எனப்படும் திரு ஐந்தெழுத்தே முதன்மையானது. அதனால் அது '**மூலமந்திரம்**' என வழங்கப்பெறும்.[43] அதற்கு அடுத்த நிலையில் உள்ளவை '**சம்மிதா மந்திரங்கள்**'; இவற்றுள் பதினொரு மந்திரங்கள் அடங்கும், அவற்றுள் ஐந்து '**பஞ்சபிரம்ம மந்திரம்**' என்றும் ஆறு '**ஷடங்க மந்திரம்**' என்றும் வழங்கப்பெறும். மற்றும் '**கலாமந்திரங்கள்**', '**காயத்திரிகள்**' முதலாய பல மந்திரங்களும் அவற்றுக்குரிய **பீஜாக்கரங்களும்** உள்ளன. பஞ்சாக்கரம் '**தூலபஞ்சாக்கரம்**' '**சூக்கும பஞ்சாக்கரம்**' '**முத்தி பஞ்சாக்கரம்**' முதலியன வாகப் பிரித்துப் பேசப்பெறும். அவையும் அவ்வப் படிமுறைக் கேற்றவாறு உபதேசிக்கப்பெறும். அவற்றையும் ஞானத்திற்குச் சாதனமாய் உள்ள யோகம் முதலிய மூன்றின் இயல்புகளையும் குருமுகமாக அறிந்தும், சைவாகமங்கள் **பத்ததிகள்** முதலி யவை ஓதியும் உணர்ந்து கொள்ள வேண்டியவை. இங்ஙனம் இவற்றையெல்லாம் உணர்தற்கு முதற்படியாக நிற்பது சமயதீக்கை செய்யப்பெற்று மந்திராதிகாரத்தைப் பெறுதலாகும். இதன் பின்னரே மற்றவை யாவும் உண்டாகும்.

**(ஊ) உபதேசிக்கும் முறை:** தீக்கை பெறுங்கால் மந்தி ரங்களை உபதேசிப்பதிலும் முறைகள் உள்ளன. மந்திரங்களை பீஜாக்கரத்தைக் கூட்டி உபதேசித்தலும், கூட்டாது உபதேசித்தலும் என் இரண்டு வகை உண்டு. பீஜாக்கரம் இன்றி உபதேசிக்கும் தீக்கை '**நீர்ப்பீஜதீக்கை**' ஆகும்; பீஜாக்கிரத்தோடு உபதேசிக்கும் தீக்கை '**சபீஜதீக்கை**' என்று வழங்கப்பெறும். அபிடேகத்தீக்கையில் சபீஜமேயன்றி, நிர்ப்பீஜம் இல்லை. ஏனைய சமய, விசேட, நிர்வாண தீக்கைகளே சபீஜம் என்றும் நிர்ப்பீஜம் என்றும் பிரிவுபடும். சாதிகார தீக்கை சபீஜமாகவும் நிரதிகாரதீக்கை நிர்ப்பீஜமாகவும்

43. வைணவத்தின் எட்டெழுத்து மந்திரமாகிய 'ஓம் நமோ நாராய ணாய' என்பதும் மூலமந்திரம் என்றே வழங்கப்பெறுகின்றது.

செய்ய வேண்டும் என்றே சிவாகமங்கள் கூறுகின்றன. ஆயினும், நிரதிகார தீக்கையும் சபீஜமாகச் செய்தல் நடைமுறையில் உள்ளது.

**(எ) அங்கிதீக்கை:** மேலே குறிப்பிட்ட முறைகளையெல்லாம் பின்பற்றிச் செய்யப்பெறுவதே **அங்கிதீக்கை** ஆகும். அஃது அழல் ஓம்பிச் செய்வதாகிய அக்கினி காரியத்துடன் நிறைவேற்றப் பெறுவதால் **ஔத்திரி தீக்கை** என்றும் வழங்கப்பெறும் இந்த தீக்கை **ஞானவதி, கிரியாவதி** என்ற இரு வகைகளுள் ஒருவகையாற் செய்யப்பெறும். செய்ய வேண்டும் என்றே சிவாகமங்கள் கூறும். குண்டம், மண்டலம், வேதிகை நெய், சுருக்கு, சுருவம் முதலிய அனைத்தையும் மனத்திற் கருதிக்கொண்டு அவற்றைக்கொண்டு செய்யப்பெறும் கிரியைகளையும் மனத்தினாலே செய்வது **ஞானவதி** ஆகும். மேற்சொல்லிய அனைத்தையும் புறத்தே அமைத்துக் கொண்டு கிரியைகளையும் வெளிப்படையாகப் புறத்தே செய்வது **கிரியாவதி** ஆகும். இது **மாந்திரி தீக்கை** என்றும் வழங்கப்பெறும்.

**(ஏ) அங்கதீக்கை:** அங்கியாகிய ஔத்தரி தீக்கைக்கு அங்கமாகச் சிறந்தெடுத்துக் கூறப்பெறுவன ஆறு. அவை: (i) **நயனம்**; (ii) **பரிசம்**; (iii) **வாசகம்**; (iv) **மானதம்**; (v) **சாத்திரம்** (vi) **யோகம்** என்பனவாகும்.

**(i) நயனதீக்கை:** ஆசாரியன் அங்க நியாச, கர நியாசங்களால் தன்னைச் சிவமாகப் பாவித்துக் கொண்டு அப்பாவனையோடு மாணாக்கனைக் கண்ணால் நோக்கி, அந்நோக்கினாலே. அவன் செய்த கருமங்களை அழித்தொழிப்பதாகும். இது '**சட்சு தீக்கை**' (சட்சு—கண்) என்றும் வழங்கப்பெறும். வேள்விக்குத் துணையாக இருப்பதற்கு இராம லக்குமணர்களை விசுவாமித்திரர் கானகத்திற்கு இட்டுச் சென்றபோது அவர்கள் ஒரு பாலை

வனத்தின் வழியாகச் செல்ல நேரிடுகின்றது. அளவில்லாத ஆற்றலுடையவர்களாயினும் 'பூவினும் மெல்லியர் வருந்துவர்' என்று கருதி அவர்களை நோக்கினார் முனிவர். அவர்கள் முனிவரை அடிபணிய, அவர் '**பலை, அதிபலை**' என்ற இரண்டு விஞ்சைகளை உபதேசிக்க, சிறுவர்கள் அவற்றை மனத்தில் சிந்திக்கவே, அவர்களின் பயணம் குளிர்ந்த நீரிலே செல்லுதலை ஒக்கின்றது. இஃது நயனதீட்சையை ஒருபுடையொக்கும் என்று கருதலாம்.

**(ii) பரிச தீக்கை:** ஆசாரியன் தனது வலக்கையைச் சிவன் கையாகப் பாவித்து மாணாக்கனது சென்னிமேல் வைத்து அவனைச் சிவமாகச் செய்தல்.

**(iii) வாசகதீக்கை:** மந்திரங்களைச் சந்தர்ப்பத்திற் கேற்றவாறும் பொருந்து மாறும் மாணாக்கனுக்கு உபதேசிப்பது இது.

**(iv) மானத தீக்கை:** ஆசாரியன் தன்னைச் சிவமாகப் பாவித்து அந்தப் பாவனையுடன் மாணாக்கனது ஆன்மாவை உடலினின்றும் பாவனையில் கொணர்ந்து தனது ஆன்மாவிற் சேர்த்துச் சிவமானதாகப் பாவித்து, மீள அவ்வான்மாவை அவனது உடலில் சேர்த்தல் இத்தீக்கையாகும்.

**(v) சாத்திரதீக்கை:** ஆசாரியன் மாணாக்கனுக்குச் சிவாகமங்களையும் திருமுறைகளையும் ஓதுவித்தல் சாத்திர தீக்கையாகும்.

**(vi) யோக தீக்கை:** ஆசாரியன் மாணாக்கனைச் சிவயோகம் பயிலச் செய்வதாகும் இது.

இந்த அங்க தீக்கைகள் ஔத்திரி தீக்கைக்கு உரியவர்க்கு அங்கமாகவும், அத்தீக்கைக்கு உரியரல்லாதவர்க்குத்

தனியாகவும், செய்யப்பெறும். இப்பொழுது இவை **சாம்பவ தீக்கை, விஞ்ஞான தீக்கை** என்ற திருநாமங்களைப் பெறும். ஔத்திரிதீக்கை பெறாது அங்க தீக்கை மட்டுமே பெற்றவர் மந்திரங்களைச் சிவாகமும் திருமுறைகளும் ஆகிய நூல்கள் வழியாகவே ஓதுவதற்கு உரியவர்; தனியாகக் கணித்தற்கு உரியரல்லர். கள், புலால் உண்டல்களைச் செய்வோர் சிவாகம திருமுறைகளைத் தவிர ஏனைய நூல்களையே ஓதுதற்கு உரியர். அவற்றில் வரும் திருவைந்தெழுத்து முதலிய ஏனைய எழுத்துகளோடும் சொற்களோடும் ஒப்பனவேயன்றி மந்திரங் களாகச் சிறந்து நில்லா என்பது அறியப்பெறும்.

**(ஐ) நல்லாசிரியர் மூலம்:** இவண்குறிப்பிட்ட நயனம் முதலிய ஆறாகிய சாம்பவதீக்கை, மற்றும் ஔத்திரி தீக்கை ஆகிய அனைத்து தீக்கைகளும் நல்லாசிரியர் ஒருவரால் நன் மாணாக்கர்கட்குச் செய்யப் பெறுதல் வேண்டும். அப்பொழுது தான் நற்பயன் விளையும். பிறர் செய்தாலும் பெற்றாலும் அவை சடங்குமாதிரியாய்ப் போய்விடும். உண்மையான தீக்கைகள் ஆகா. இவற்றுள்ளும் சமயதீக்கையும் விசேட தீக்கையும் ஒருவாறு சடங்கு மாத்திரையாய்ச் செய்தலும் பெறுதலும் உண்டு. நிர்வாணதீக்கையும் அபிடேக தீக்கையும் உண்மையாகத்தான் செய்யப் பெறுதல் வேண்டும்; வெறும் சடங்குகட்கு இவண் இடமே இல்லை.

**மற்றெரு குறிப்பு:** 'ஆசிரியத் தன்மையை வழங்கும் அபிடேகதீக்கை பெறுவதற்கு உரியவர் இல்லறத்தவரே' என்று சிவாகமங்கள் கூறும்; 'துறவிகளாயின் இல்லறத்துக்குச் செல்லாமலே துறந்த விரதியரே' உரியர் என்றும். அந்நூல் களில் விதிக்கப் பெற்றுள்ளது. இல்லறத்தினின்றும் துறந்தோர் மாணாக்கரை உடையராயின் அவர்தரும் பொருள் முதலிய வற்றால் மீளவும் சுற்றத்தொடர்பு உடையராய் விடுவர். இல்லறத்திற்குச் செல்லாமலே துறவுநிலை அடைந்தோர் அந்நிலையினின்றும் தாழாது நிற்றல் அரிது என்று கருதலாம்,

இத்தகைய உறுதி அவர்களிடம் இல்லையாயின் அவரை உலகம் ஏற்றுக் கொள்ளாது; மாணாக்கரும் அத்தகையோரை நாடிச் செல்லார். அபிடேகதீக்கை பெறுவோர் இல்லறத் தவராயின், ஆதிசைவ அந்தணராகவே இருத்தல் வேண்டும்' என்ற ஒரு விதியும் காணப் பெறுகின்றது.

ஆசாரியன் மூலமாகச் செய்யப் பெறும் நிருவாண தீக்கையின்றி ஞானம் உண்டாகமாட்டாதா? என்ற ஐயம் எழலாம். மும்மலம் உடைய சகலர்க்கு[44] ஆசாரியன் அருள் இன்றி நிருவாண தீக்கையில்லாமல் ஞானம் உண்டாகமாட்டாது என்பது சிவாகமங்களின் தீர்ப்பு. இவர்கட்கு ஆணவமல மறைப்பு மிகவும் வன்மையாக இருக்கும். அதனால் இறைவன் ஆசாரியன் வாயிலாகச் செய்யும் பலவகைக் கிரியைகளால் அகற்றுவான். இம்மலம் நீங்கிய பிறகு ஞானத்தைச் சில சொற்களால் முதற்கண் அறிவுறுத்துவான். இங்ஙனம் அறிவுறுத்தப் பெற்ற பொருள்களை நூலோடு வைத்துச் சிந்திக்கச் செய்வான். இங்ஙனம் சிந்திக்கும் போது எழும் ஐயங்களை உடன்கண் இருந்து அவ்வப்பொழுது தெளிவிப் பான். தெளிவித்தபின்பும் அந்நிலையில் நிற்கும் போது, முறைமை எல்லாம் காட்டி நிற்பிப்பான். இப்பொழுது இவர்கட்கு ஞானம் தோன்றும். ஆசாரியன் செயலெல்லாம் அவரிடம் ஆவேசித்து நின்று செய்யும் இறைவனது செயலாகும். இதனால் தீக்கை என்பது, சிவபெருமானின் கிரியா சக்தியின் தொழிற்பாடாகும் என்பது அறியப்பெறும். சகலர் பொருட்டு ஆசாரியன் மூலம் இறைவன் நின்று செய்யும் இத்தீக்கை '**சாதார தீக்கை**' எனப்படும்.[45] இக்கூறியவற்றால்

44. ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களை யுடையவர். ஆணவமலத்தை மட்டும் உடையவர் விஞ் ஞானகலர்; ஆணவம், கன்மம் என்ற இருமலங்களை யுடையவர் பிரளயாகலர்.

45. சாதாரம்-ஆதாரத்தோடு கூடியது என்பது பொருள்.

நான்கு நிலைகளையுடையது. இந்த ஞானம் 'அரும்பு மலர் காய் கனி' என்ற முறையில் வளரும் என்பது **தாயுமானவரின்** திருவாக்கு என்பதையும் அறிவோம்.

**'அறிதல்'** என்ற அளவில் சரியை முதலிய தவங்களும் ஞானமே என்றாலும் தத்துவ ஆராய்ச்சி வழியாக மெய்ப்பொருளாகிய இறைவனை அறியும் அறிவே ஞானம் எனச் சிறப்பித்துக் கூறப்பெறும்.[35] இறைவனை அறநூல்கள் **'மெய்ப்பொருள்' 'செம்பொருள்'** என்றெல்லாம் சிறப்பித்துப் பேசும். அதனால் அந்நூல்களில் ஞானம் 'மெய்யுணர்வு' என்று கூறப் பெறும். வைதிகர்கள் மெய்ப்பொருளை **'பிரம்மம்'** என்று கூறுவர். 'பிரம்மம்' என்றால் 'பெரியது' என்று பொருள். இதைவிடப் பெரியது ஒன்று இல்லையாதலால் அப்பெயர் இறைவனுக்குச் சூட்டப்பெற்றது. **தாயுமானவர்** இதனைப் **'பெரிய பொருள்'** என்றே குறிப்பிடுவர். பிரம்மத்தை அறியும் ஞானத்தை 'பிரம்மஞானம்' என்றுகுறிப்பிடுவர் வைதிகர்கள். இறைவனைச் சைவர்கள் **'சிவம்'** என்று குறிப்பிடுவர். அதனை அறியும் இறையுணர்வு **'சிவஞானம்'** என்ற பெயர் பெறு கின்றது. **'பதிஞானம்'** என்பதுவும் இதுவே. இவையெல்லாம் தத்துவ ஆராய்ச்சிவழியாக மெய்ப்பொருளை அறியும் உணர்வையே குறிப்பனவாகும்.

ஞானத்தின் மிக்க அறிநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவாம்
ஞானத்தின் மிக்கார் நரரின் மிக்காரே[36]

என்ற **திருமூலரின்** திருவாக்கையும் காணலாம். ஞானத்தை விட மேலானமார்க்கம் இல்லை. வேறு எதுவும் முத்திக்குக்

35. சித்தியார் 8-22
36. திருமந்திரம். ஐந். தந். ஞானம்-1

இருக்கும். ஆதலால் இவர்க்கு இறைவன் ஒருமுறை இவர்முன் தனது உண்மை வடிவத்துடன் தோன்றி அருள்புரிந்து நீங்குவான். இவ்வாறு தோன்றும் வடிவம் **'சதாசிவமூர்த்தம்'** என்றும், **'மகேசுவரமூர்த்தம்'** என்றும் வழங்கப் பெறும் என்று இருவேறு கருத்துகள் உள்ளன. உள்நின்று உணர்த்தலும் முன்னின்று உணர்த்தலும் ஆகிய இவை இரண்டும் **'நிராதார தீக்கை**[47] என்று வழங்கப் பெறும்

இங்ஙனம் மூவகை உயிர்களும் ஞானம்பெறுகின்றன என்பதை அறிந்து தெளிந்தோம்.

47. நிராதாரம்-ஆதாரத்தோடு கூடாதது.

# 7. வீடு பேறு

உள்ள மலம்நீங்கி ஓங்கி சிவானந்த
வெள்ளத் திளைத்ததுவாய் மேவுதலே—கள்ளவிழ்பூங்
கொத்தார் விரிசடையார் கூறு சிவாகமத்தில்
சித்தாந்த முத்தி யெனத் தேறு.[1]

அப்பொருளும் ஆன்மாவும் ஆரணநூல் சொன்னபடி
தப்பில்லாச் சித்தொன்றாம்; சாதியினால் – எப்படியும்
தேரின் துவிதம்; சிவாகமமே சொல்லும் நிட்டை
ஆறுமிடத் தத்துவத மாம்.[2]

---

1. முத்தி நிச்சயம் - 50
2. தா. பா. உடல் பொய்யுறவு - 16

# 7. வீடு பேறு

## (1) ஆன்மாவின் பெரும் பயணம்

**உயிர் வகைகள்** வாழ்வு என்னும் பெரும் பயணம் போய்க்கொண்டுள்ளன. அப்பயணம் இறைவனை அடையும் பொழுது நிறைவு பெறுகின்றது. இறைவனை அடைதலும் முத்தியடைதலும் உயிர்கட்கும் இயற்கைக்கும் முதற் காரணமாய் இருப்பவன் இறைவன். இவை யாவற்றிற்கும் புகலிடமும் பிறப்பிடமும் அவனேயாகின்றான். எனவே இவை அனைத்திற்கும் அவனே முதலும் ஆகின்றான். இவற்றை யெல்லாம் நன்கு உணர்ந்து அநுபூதி நிலையிலுள்ள **தாயுமான அடிகள்,**

'சித்தாந்த முத்திமுதலே'[3]

என்று பகவர்வது இரத்தினச் சுருக்கமாக அமைந்திருப்பதைக் கண்டுமகிழலாம் 'சித்தாந்த முத்தியே' என்று சைவ நூல்கள் சாற்றுவது '**சித்தாந்த சைவ முத்தி**'யாகும்.

வாழ்க்கையின் மேலான நோக்கம் **வீடுபேறு அடைவது, அலையும்** மனம் அங்குமிங்கும் உழன்று உலகின் சுக துக்கங்களையெல்லாம் துய்த்து, மயக்கம் நீங்கி தான் செய்த

3. தா.பா.சின்மயானந்த குரு-1

தவறுகட்கும் குற்றங்கட்கும் மனம் நொந்து வருந்தி, தான் செய்தவற்றை நிவர்த்திக்க முயன்று இறுதியில் சாந்தம் அல்லது அமைதி பெற **'உண்மையான வீடு'** நோக்கி வருகின்றது. நாம் காலையில் அலுவல்கள் நிமித்தம் வெளியில் சென்று மாலையில் களைத்துப் போய் வீடு நோக்கித் திரும்புகின்றோம் அல்லவா? அது போலவே ஆன்மாவும் இவ்வுடலை ஊர்தியாகக் கொண்டு வாழ்க்கைப் பயணத்தை முடித்துக் கொண்டு "சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகிய அந்தமில் இன்பத்து அழிவில் வீட்டை" அடைய முயலுகின்றது. இந்த வீடு அமைதியானது; எல்லை யில்லாத பேரின்பம் அளிப்பது. ஆகவே, எதிர்மறையான மலம் நீங்குதலை நோக்கமாகக் கருதாது பேரின்ப மடைந்து எப்போழுதும் அந்நிலையில் நீடிப்பதையே நோக்கமாகக் கொள்ளுகின்றது சித்தாந்தம். அதன் பின்னர் அந்நிலை யினின்றும் மாறுவதே இல்லை. சிவலோகத்தை அடைத லையே – சிவப்பேறு பெறுதலையே – குறிக்கோளாகக் கருது கின்றான் சித்தாந்தி.

உள்ள மலநீக்கி யோங்கு சிவானந்த
வெள்ளந் திளைத்ததுவாய் மேவுதலே–கள்ளவீழ்பூங்
கொத்தார் விரிசடையார் கூறு சிவாகமத்தில்
சித்தாந்த முத்தியெனத் தேறு.[4]

என்கின்றார் தருமையாதீனத்தை நிறுவிய **குருஞான சம்பந் தர்.** இம்முத்திப் பேற்றினைப் பெறுவதே சித்தாந்த ஞானத்தின் பயன் என்பதாகும். அதாவது சித்தாந்தமுத்தி சிவத்தோடு அத்துவிதமாய்க் கலந்து, ஆன்மா சிவனது பேரின்பத்தில் திளைத்திருப்பதேயாகும். **தாயுமான அடிகளும்** இந்த முத்தி நிலையைச் **சுத்தாத்துவித முத்தி நிலை** என்பர்.

4. முத்தி நிச்சயம் - 30

'அறிவுற் கறிவு தாரகம்'என்
றறிந்தே அறிவோ டறியாமை
நெறியிற் புகுதா தோர்படித்தாய்
நின்ற நிலையும் தெரியாது
குறியற் றகண்டா தீதமயக்
கோதில் அமுதே! நினைக்குறுகிப்
பிரிவற் றிருக்க வேண்டாவோ?
பேயேற் கினிநீ பேசாயே.[5]

என்ற பாடலால் இதனை யறியலாம்.

இக்கருத்தை மேலும் தெளிவாக்குவோம். மலங்கள் நிலையாய் நிற்கின்றன. ஆனால் அவற்றின் தீங்கு செய்யும் தன்மை போய்விடுகின்றது. அப்பொழுது பேரின்பத்தை அநுபவிக்கும் தனிச்சிறப்பினை உணர அவை உதவுகின்றன. அதற்கு முன்னர் ஆணவத்தால் ஏற்பட்ட இன்னல்களும் இத்தெய்விகக் கூட்டுடன் சேர்ந்த அநுபவத்தை மிகவும் வரவேற்கத்தக்கதாகச் செய்து விடுகின்றன.

முத்திதனின் மூன்று முதலு மொழியக்கேள்
சுத்தஅநு போகத்தைத் துய்த்தலணு—மெத்தவே
இன்பம் கொடுத்தலிறை யித்தைவிளை வித்தன்மலம்
அன்புடனே கண்டுகொ ளப்பா.[6]

என்று இந்நிலையை விளக்குவர் **திருவதிகை மனவாசகங் கடந்தார்.** இந்த அநுபவத்தில் ஆன்மா அநுபவப்பொரு ளுடன் நெருங்கிய தொடர்புகொண்டு அப்பொழுது சிவத்துடன் அத்துவிதக் கூட்டு அடைவதாகச் சொல்வர். அத்துவிதக் கூட்டு என்பது ஆன்மாவின் நாசத்தைக் குறிப்பிடவில்லை. ஆனால், மாறுபாடும் வரம்பும் உள்ள சீவான்மா தனது

5. தா.பா. சொல்லரிய-2
6. உண்மை விளக்கம்-51.

சுட்டுணர்வில் நீங்கி முற்றறிவுடைய பரம்பொருளின் வியாபகத்தில் ஒடுங்கி ஒன்றாக நிற்கும் நிலையை அது குறிக்கும். ஆன்மா ஒரே மாதிரி அழிவற்ற தன்மையிலேயே நிற்கும். ஆனால் குறையுடனோ மாசுடனோ அஃது இருப்ப தில்லை. தனது எண்ணம் அனைத்தையும் அஃது இறைவனு டன் செலுத்தியுள்ளது. பகலவன் ஒளியில் விண்மீன்களின் ஒளி தெரிவதில்லை.[7] அதனால் விண்மீன்கள் இல்லை என்று சொல்ல முடியாதல்லவா! அதைப் போலவே இறையநுபவத் தில் ஆன்மாவின் பிரித்தறிய முடியா இயல்பு அஃது அழிந்து விட்டதாகி விடாது. இந்த நிலையில் ஆன்மாவிற்கு இழப் பில்லை. ஆனால் அப்போது தெய்விக அமைப்பில் அஃது ஆழ்ந்துவிடுகின்றது என்று சொல்லிவைக்கலாம்.

இவ்வுலக வாழ்வில் ஆன்மா ஆணவத்துடன் கூடி யுள்ளது என்பதை நாம் அறிவோம். ஆனால் அந்த உறவால் உறவுகொண்டவற்றுள் ஒன்றும் அழிவதில்லை, அதைப் போன்றே முத்தியிலும் ஆன்மாவும் இறைவனும் நெருங்கிக் கூடியுள்ளனர். ஆனால் அவர்களில் ஒருவருக்கும் இழப் பில்லை. அவர்தம் தனி இயல்பும் மதிப்பும் மாறாமல் அப்படியே உள்ளனர். இதைச் சித்தாந்திகள், "பசு பாசத்தில் அழுந்தி நிற்கும் நிலை பெத்தம்; அது பதியில் அழுந்தி நிற்கும் நிலையே முத்தி" என்று விளக்குவர். இந்த அத்துவிதக் கலப்புக்குத் தமிழில் '**தாள், தலை**' என்ற சொற்களின் புணர்ச்சியை எடுத்துக்காட்டாகக் கொள்வது மரபு.

**விளக்கம்: தலை** ஆன்மாவையும் **தாள்** இறைவனை யும் குறிப்பனவாகக் கொள்ளல் வேண்டும். அஃதாவது இறைவனது திருவடிகளில் ஆன்மாவின் தலை பொருந்து கின்றது என்பதே இதன் கருத்தாகும். தாளும் தலையும் தமிழ்

7. சி.ஞா.போ.சூத்திரம் 5 அதி-2

இலக்கணவிதிப்படி புணரும்போது '**தாடலை**' ஆகும். தாள் என்பதில் உள்ள'**ள**' மறைய, தலையிலுள்ள '**தா**' '**ட**' ஆக மாறித் '**தாடலை**' ஆகின்றது. இதனை இரு சொற்கள் எனக் கொள்ளவும் முடியாது; ஒரு சொல்லெனக் கொள்ளவும் முடியாது. ஒரு விதத்தில் இஃது ஒரு சொல்; இன்னொரு வித்தில் இரு சொற்கள். இதைப் போன்றே இறைவனோடு ஆன்மா ஐக்கியப்படும் விதமும் உள்ளது என்பதே சித்தாந் தத்தின் முடிந்த முடிபாகும்.

> தாடலைபோல் கூடியவை தானிகழா வேற்றின்பக்
> கூடநீ யோகமெனக் கொள்.[8]

என்ற **உமாபதிசிவத்தின்** அருள் வாக்கையும் காணலாம். இறைவனும் ஆன்மாவும் இரண்டு அறக் கலப்புக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக ஆன்ம போதமும் கண்ணொளியும் ஒன்று சேர்ந்து செயற்படுவதைக் குறிப்பிடுவதும் வழக்கமாகும்.

**மேலும் விளக்கம்:** பதி, 'மெய், அறிவு, இன்பம்–**சச்சிதானந்தம்**' என்பவற்றையே இயல்பாகவுடைய பெரும் பொருள் என்பதை நாம் அறிவோம். பசு இதனை அறியுந் தோறும் அதற்கு இன்பம் புதிது புதிதாக விளையும். விளை யவே, அஃது அப்பதியையே மேலும் மேலும் எல்லையின்றி இன்பக்கடலில் திளைத்து நிற்கும். பெத்த காலத்தில் பதி இருந்தும் அதனது உதவி பாசமேயாய உயிர்க்கு விளங்காமை யால், அஃது இல்லாததே யானதுபோல் முத்தி காலத்தில் பாசம் இருந்தும் அதனது மறைப்பு பதியேயான உயிரிடத்துச் செல்ல மாட்டாமையால் அக்கினித் தம்பனத்தால் தடையுண்ட நெருப்புபோல அது தன் சக்தி மடங்கி இல்லாததேயாகும். அதனால் முத்தியிலும் மும்முதலும் உள்ளன என்பது துணிபு. ஆதலால், ''உயிர்க்கும் இறைவனுக்கும் உள்ள கலப்பினால்

8. திருவருட்பயன்-8.4.

ஒன்றாய், பொருள் தன்மையால் **வேறாய்,** ஒரு செயலினிடத்து இருபொருளும் ஒருங்கு செல்லுதலால் **உடனாய்** நிற்கின்ற அபேதம், பேதம், பேதாபேதம் என்னும் மூன்றனுள் ஒன்றாகச் சொல்ல வராது. அம்மூன்றும் ஒருங்கு தோன்ற நிற்கும் அத்துவிதத் தொடர்புக்கு ஒரு காலத்தில் புதுவதாய் உண்டாகாது என்றும் உள்ளதேயாதலின், அத்தொடர்பு பற்றிப் பெத்தத்தில் பதியிடத்திற் செல்லாது பாசமே தானாய் நின்ற உயிர், முத்தியில் பாசத்தில் செல்லாது பதியே தானாய் நிற்கும்'' என்பதே சைவசித்தாந்தம் கூறும் முத்தியாகும் என்பது தெளியப்படும்.

## (2) முத்தியின் இயல்பு

முத்தியின் இயல்புபற்றிச் சைவசித்தாந்த நூல்கள் பலபடியாக நுவல்கின்றன. அவற்றை ஈண்டுக் காண்போம். **மெய்கண்டார்,**

> வெய்யோன் ஒளியில் ஒடுங்கி விளங்காது
> வெய்யோனை ஆகாத மீன்போல்[9]

என்று விளக்குவர். இவர்தம் மாணாக்கராகிய **அருணந்தி சிவாசாரியார்** பல பாடல்களால் இதனைத் தெளிவாக்குவார். அவற்றுள்,

> அறியாமை அறிவகற்றி அறிவி னுள்ளே
> அறிவுதனை அருளினால் அறியாதே அறிந்து
> குறியாதே குறித்து,அந்தக் கரணங்க ளோடும்
> கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாயின்
> பிறியாத சிவன்றானே பிறிந்து தோன்றிப்
> பிரபஞ்ச பேதமெலாம் தானாய்த் தோன்றி,
> நெறியாலே இவையெல்லாம் அல்ல வாகி
> நின்றென்றும் தோன்றிடுவன் நிராதார னாயே[10]

9. சி.ஞா.போ. சூத்திரம் 5. அதி.2
10. சித்தியார்.8.30

இரும்பைக்காந் தம்வலித்தாற் போலியைந் தங்குயிரை
எரிஇரும்பைச் செய்வதுபோல் இவனைத் தானாக்கி
அரும்பித்திந் தனத்தைஅனல் அழிப்பதுபோல் மலத்தை
அறுத்து,அமலன் அப்பணைந்த உப்பேபோல் அணைந்து
விரும்பிப்பொன் னினைக்குளிகை ஒளிப்பதுபோல் அடக்கி
மேளித்துத் தான்எல்லாம் வேதிப்பா னாகிக்
கரும்பைத்தே னைப்பாலைக் கனியமுதைக் கண்டைக்
கட்டியைஒத் திருப்பன்அந்த முத்தியினிற் கலந்தே[11]

என்ற திருப்பாடல்களால் முத்தியின் இயல்பைத் தெளியலாம். மெய்கண்டாரின் மாணவருள் மற்றொருவராகிய திருவதிகை மனவாசகம் கடந்தார்.

முத்திதனை அடைந்தோர் முந்துபழம் போதங்கி
வித்தகமாம் வீணை இவையிற்றின்—ஒத்த
இரதம்மணம் வெம்மை எழில்நாதம் போல
விரவுவர்என் றோதும் விதி.

தத்துவங்க ளெல்லாம் சகசமாய் ஆன்மாவில்
பெத்தத்தில் நிற்கின்ற பெற்றிபோல் – முத்திதனில்
சித்தமலம் அற்றார் செறிந்திடுவர் என்றுமறை
சத்தியமா ஓதியிடுந் தான்.

(சகசம்—கூடப்பிறந்தது)

ஆதவன்றன் சந்நிதியில் அம்புலியின் ஆர்சோதி
பேதமற நிற்கின்ற பெற்றிபோல்—நாதாந்தத்து
அண்ணல் திருவடியில் ஆன்மா அணைந்தின்பக்
கண்ணில் அழுந்தியிடுங் காண்.

சென்றிவன்றான் ஒன்றின் சிவபூ ரணம்சிதையும்
அன்றவன்றான் ஒன்றும்எனில் அன்னியமாம்—இன்றுஇரண்டும்
அற்றநிலை ஏதென்னின், ஆதித்தன் அந்தன்விழிக்
குற்றம்அற நின்றதுபோல் கொள்.[12]

11. சித்தியார் 11.12
12. உண்மை விளக்கம்-50,46,47,48.

என்று விளக்கியுள்ளார். இந்தப்பாடல்களுள் இறுதிப்பாடலின் கருத்து சிறப்புடையது, ''அந்தகன் (குருடன்) கண் பெற்றபின் சூரிய ஒளியைக் காணுதல் அவனுக்குப்புதிது போலத் தோன்றினும் உண்மையில் அவ்வொளி அவன்முன் இருந்ததா தல் போல, பாசப்பற்றினால் பாசமாய் நின்ற உயிர் அப்பசுத்து வம் நீங்கப்பெற்றபொழுது பதியை அடைந்து நிற்றல் அதற்குப் புதிதுபோலத் தோன்றுமாயினும், அவ்வடைவு அதற்கு முன்னரே இருந்ததன்றிப் புதிதாய் வந்தது அன்று'' என்ற கருத்து சிறப்புடையதாய்த் தோன்றுகின்றதன்றோ?

மேலும் **உமாபதி சிவம்** முத்தி நிலைக்குப் பிறர் கூறும் உரைகளையெல்லாம் மறுத்து, ''உயிர் பெத்தத்தில் ஆணவ மலத்தோடு எவ்வாறு தான் என வேறு தோன்றாது அதில் அழுந்தி நிற்கின்றதோ, அதுபோலவே முத்தியிலும் சிவத் தோடு தான் என வேறு தோன்றாது அதனில் அழுந்தி நிற்கும் என்பதே சித்தாந்த முத்தியாம்''[13] என்று அறுதியிட்டு உரைப்பர். இக்கருத்தினையே **தாயுமான அடிகள்,**

ஆணவத்தோ டத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினோ டத்துவிதம் சாருநாள் எந்நாளோ?[14]

என்று பாடிப் போற்றினார். இன்னும் **உமாபதி சிவம்,**

ஒன்றானும் ஒன்றாது; இரண்டாலும் ஒசையெழா
தென்றால்,ஒன் றன்றிரண்டு மில.[15]

என்று உரைத்தார், மற்றும் அவர்,

காண்பானும் காட்டுவதும் காண்பதுவும் நீத்துண்மை
காண்பார்கள் நன்முத்தி காணார்கள்; – காண்பானும்

13. சிவப்பிரகாசம்-17
14. தா.பா. எந்நாட் கண்ணி 28
15. திருவருட்பயன்-75

காட்டுவதும் காண்பதுவும் தண்கடந்தைச் சம்பந்தன்
வாட்டுநெறி வாரா தவம்.[16]

என்று நயம்பட அருளியிருப்பது அறிந்து உணரத்தக்கது.

**இதன் விளக்கம்**: "முத்தியில் 'காண்பான், காட்சி, காட்சிப் பொருள்' எனப் பொருள் மூன்றில்லை. காட்சிப் பொருளாகிய சிவம் ஒன்றேயுளது" என்பாரும் முத்தி நிலையை உணர்ந்தவர் அல்லர்; "முத்தியில் இம்மூன்றும் உள என்பாரும் முத்தி நிலையை உணராதவர்களே யாவர்" என்பது ஈண்டுச் சுட்டிய வெண்பாவின் பொருளாகும். "இரண்டும் பிழையாய்விடின், உண்மைதான் யாது?" என்ற வினா எழுதல் இயல்பே. "காண்பான் முதலிய மூன்றில் காண்பவனாகிய ஆன்மாவும், காட்சியாகிய அதனது அறிவும், முத்தியில் இல்லாதொழியுமாயின், முத்தியென்று ஒருவருக்குப் பெறுதற்கரிய பேறாய் முடியாது பயனற்றதாய் ஒழியும். அதுபற்றி முத்தியிலும் அம்மூன்றும் உள; அவற்றை ஆன்மா அறியும் எனின் ஆன்மா ஒன்றை அறியுங்கால் மற்றொன்றை அறியமாட்டாதாகலின், தன்னையும் தனது அறிவையும் அறியும்பொழுது சிவத்தை அறியாது மறக்கும்; அவ்வாறு மறக்குமாயின், அதற்குச் சிவானந்தம் இல்லையாம். சிவா னந்தம் இல்லையாகவே, முத்தி நிலையும் இல்லாமையாய் விடும். இதனால் ஆன்மா தன்னையும் தனது அறிவையும் அறியாது சிவம் ஒன்றையே அறிந்து நிற்கும் நிலையே முத்தி நிலையாம். ஆகவே, 'முத்தி நிலையில் மூன்றில்லை, ஒரு பொருளே உண்டு' என்பதற்கு, முத்தி நிலையில் மூன்றும் உளவாயினும், ஆன்மா ஏனை இரண்டையறியாது சிவம் ஒன்றையே அறிந்து நிற்கும்" என்பதே கருத்தாகும் என்று அறியப்படும்.

16. வினா வெண்பா-11

'காண்பான், காட்சி, காட்சிப் பொருள்' என்பன முறையே '**ஞாதுரு, ஞானம், ஞேயம்**' என்று வடமொழியில் கூறப்பெறும். அவற்றை இங்ஙனமே தமிழில் மொழி பெயர்த்துக்கூறினால் '**அறிபவன், அறிவு, அறியப்படும் பொருள்**' என்று சொல்லலாம். ஞேயப் பொருளாகிய சிவத்தை உணரும் நிலையை விடுத்து, 'யான் இதனை அறிகிறேன்' என்று ஆன்மா தன்னையும் தனது ஞானத்தையும் உணரும்படி செய்வது ஆணவ மலத்தின் வாசனையே என்பதை நாம் அறிவோம். பெத்த காலத்தில் பிறவாறு 'யான், எனது' என்னும் செருக்கினைக் கொடுத்து நின்ற ஆணவ மலம், முத்திக் காலத்தில் வாசனை மாத்திரமாய் நின்று இவ்வாறு சிவத்தை மறந்து '**யான்**' என்று தன்னையும், '**எனது**' என்ற தன் ஞானத்தையும் உணரச் செய்யும். அதனால் அதுவும் அற்ற நிலையே முத்தி நிலையாகும். இந் நிலையை உடம்பு உள்ள காலத்தில் அடைவதே '**நிட்டை**' என்று வழங்கப்பெறுகின்றது. இந்நிட்டை கைவரப் பெற்றோரே '**சீவன் முத்தர்**' என்றும் (சிவத்தை) '**அணைந்தோர்**' என்றும் சொல்லப் பெறுவர்.

இவண் கூறியவாறு ஆன்மா ஞாதுருவையும், ஞானத்தையும் அறியாது, ஞேயமாகிய சிவம் ஒன்றையே அறிந்து அதில் அழுந்துவதாகிய நிட்டை நிலையையே '**மறவாநிலை**' என்று திருமுறைகள் கூறும்.

மறக்கு மாறில்லாத என்னை
 மையல்செய்து இம்மண்ணின்மேல்
பிறக்குமாறு காட்டினாய்.[17]

என்ற **ஞானசம்பந்தப் பெருமானின்** திருவாக்கில் 'மறக்கு மாறில்லாத' என்றது இந்நிலையையே யாகும். இம்மறவா

17. சம்பந்தர் தேவாரம் 2.98;5

நிலை கைகூடுமாயின், எவ்வுடம்பிலே இருப்பினும் உயிர்க்குக் குறை இல்லை. இதுபற்றியே **அப்பர் பெருமான்,**

> புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா
> உன்அடி என்மனத்தே
> வழுவா திருக்க வரந்தர
> வேண்டும்.[18]

என்று வேண்டினார், பிறவாமையை வேண்டிய **காரைக்கால் அம்மையார்**

> ...மீண்டும் பிறப்புண்டேல்
> உன்னை என்றும்
> மறவாமை வேண்டும்.[19]

என்று வேண்டினார்; **சாக்கிய நாயனாரும்,**

> எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்
> மன்னியசீர் சங்கரன்தாள் மறவாமை பொருள்...[20]

என்று கருதினார்.

சங்கரன்தாள் மறவாத நிலைமை கூடுவதாயின் பிறப்பைப்பற்றிக் கவலைகொள்ள வேண்டியதில்லை. ஆயின், பிறப்பு உள்ளபொழுது சங்கரன்தாள் மறவாத நிலை கை கூடுதல் இயலாது. இதுபற்றியே ஞானச் செல்வர்கள் பிறவிக்கு அஞ்சுகின்றனர். பிறவியை ஒரு **பெரும் பிணியாகவே** கருதுகின்றனர்.

> துறக்கப் படாத உடலைத்
> துறந்துவெந் தூதுவரோ(டு)
> இறப்பன்; இறந்தால் இருவிசும்
> பேறுவன்; ஏறிவந்து

18. அப்பர் தேவாரம்.4.94;8
19. பெ.பு.காரை.புரா.67
20. மேலது சாக்கி.புரா - 6.

பிறப்பன்; பிறந்தால் பிறையணி
வார்சடைப் பிஞ்ஞகன்பேர்
மறப்பன் கொலோஎன்றென உள்ளங்
கிடந்து மறுகிடுமே.[21]

என்ற **அப்பர் பெருமானின்** திருமொழியால் இஃது அறியப் பெறுகின்றது.

இங்ஙனம் ஞேயத்தை மறவாத நிலையாகிய **நிட்டை நிலை** வியாபகமாகிய சிவத்துள் வியாப்பியமாகிய ஆன்மா அடங்கி அழுந்தி நிற்கும் நிலையாகலின் இச்சித்தாந்த முத்தி **'அடிசேர் முத்தி'** என்றும் வழங்கப் பெறுகின்றது. 'இச்சித் தாந்த முத்தியே உண்மை முத்தி; ஏனைய முத்தியெல்லாம் (பிறர் மதம் கூறுவன) முத்தியல்ல' என்ற உண்மை சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் முதலிய சித்தாந்த நூல்களில் விளக்கப்பெறுகின்றது. இவை ஈண்டு எடுத்துக்காட்டப் பெறவில்லை. இந்த அடிசேர் முத்தியில் உயிர் பிறவி வெப்பம் நீங்கித் தண்மையாகிய இன்பம் பெற்று மகிழ்தலால் இஃது இறைவனது **'திருவடி நிழல்'** என்றும் பேசப் பெறுகின்றது. இந்த அடிநிழலின் இன்பத்தை,

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.[22]

என்று **நாவுக்கரசர்** அருளிச் செய்துள்ளமையைக் கண்டு மகிழலாம். இங்கு இவ்வாறெல்லாம் விரித்துரைக்கப் பெற்ற முத்தி சித்தாந்தத்திற் கூறப்பெறும், **'பரமுத்தி'** – முடிந்த முத்தியாகும்' என்பதையும் உணர்ந்து தெளியலாம்.

21. அப்பர் தேவாரம் 4.113;8

22. மேலது 5.90;1

## (3) பல்வேறு முத்திகள்

சைவசித்தாந்தத்தில் பலவேறு முத்திகள் பகரப் பெறுகின்றன. அவை; **அபரமுத்தி, பதமுத்தி, சீவன்முத்தி, பரமுத்தி** என்பனவையாகும். இவற்றுள் **பரமுத்தி** மேலே விளக்கப்பெற்றது. **அபரமுத்தி, பதமுத்தி** இரண்டையும் ஈண்டு விளக்குவோம்.

(அ)**அபரமுத்தி:** தத்துவங்கள் அனைத்திலும் கீழ்ப்பட்ட தத்துவமாகிய பிருதிவி தத்துவத்திலும் பூவுலகிற்கு மேல் உள்ள புவர்லோகம், சுவர்லோகம் முதலிய உலகங்கள் யாவும் புண்ணிய உலகங்கள் என்பதை நாம் அறிவோம். இதனால் அவை அனைத்தும் **'பதவிகள்'** என்னும் பெயருக்கு உரியவையாகும். ஆயினும் பிருதிவி தத்துவத்தைக் கடவாத வரையில் முக்குணமாகிய மயக்கம் நீங்காமையால் சைவ சமயம் அவற்றைப் **'பந்த உலகம்'** என்பதன்றி **'முத்தி உலகம்'** எனக் கொள்ளுதல் இல்லை. ஆகவே மால், அயன், இந்திரன் உள்ளிட்ட தேவர் பதங்களைச் சைவ சமயம் **'முத்தியுலகம்'** எனக் குறிப்பிடுதல் இல்லை என்பது ஈண்டு அறியப்படும்.[23] இவண் குறிப்பிட்டவர்கள் மும்மலம் உடைய சகலவர்க்கத்தினர்; வினைவழிப் பிறக்கும் பிறப்பினுள் புண்ணிய மிகுதியால் தேவராய்ப் பிறந்தோர். ஆகவே, இப்புண்ணியம் தீர்ந்தவுடன் தாம் செய்யும் வினைக்கு ஈடாகப் பிறவிகளிலும் செல்லுதற்குரியர்.முன்னைய பிறவிகளிலும் இத்தெய்வப் பிறவியிலும் செய்த சிவபுண்ணிய மிகுதியால் இவர்கள் இருவினை யொப்பும் சத்தி நிபாதமும் உடையவரா

23 .சைவ இலக்கியங்கள் திருமாலைக் குறைத்துக் கூறுவதும், வைணவ இலக்கியங்கள் சிவபெருமானைக் குறைத்துக் கூறுவதும் மரபாக இருந்து வருகின்றன. இருவரும் **'பரம்பொருள்'** என்று கொண்டு நாம் விருப்பு வெறுப்பற்ற நோக்கத்தைக் கடைப்பிடிப்போம்.

யின் இப்பிறவியிலேயே ஞானாசிரியரால் ஞானமே பெற்று வீடுபேறு அடைவர்; அல்லது அடுத்த பிறவியில் சிறந்த மக்களாய்ப் பிறந்து அவ்வாறு வீடுபேறு அடைவர். இவ்வகையில் மாயோன் கண்ணனாய்ப் பிறந்திருந்த காலத்தில்[24] உபமன்னிய முனிவரால் ஞானம் பெற்ற வரலாறு கூறப்பெறுகின்றது. இதனால் மாயோன் முதலிய சகலவருக்கத்தினர் வாழும் பதங்கள் எல்லாம் முத்தியுலகங்கள் அல்ல. எனினும், சகலருக்கு மேற்பட்ட பிரளயாகலர், விஞ்ஞானகலர் என்பவர் வாழும் உலகங்களே முத்தியுலகங்கள் ஆகும். ஏனெனில், பிரளயாகலர் முக்குணங்களில் நீங்கியவராதலாலும், விஞ்ஞானகலர் விருப்பு வெறுப்புகளில் நீங்கினவராதலாலும், அவர்கள் வாழும் உலகங்களில் அவை இல்லாமையால் என்க. இனி குணிருத்திரர் சகலவருக்கத்தினராயினும் சிவ புண்ணியத்தால் சிவனை உணர்ந்து அவனது உருவும், பெயரும், தொழிலும் பெற்றமையால் அவரது உலகங்களும் முத்தியுலகம் எனப்படும்.

பிரகிருதி வரையில் உள்ள தத்துவங்களில் உள்ள பதவிகட்கு மால், அயன், இந்திரன் முதலியோர் புண்ணிய மிகுதியால் தலைவர்களாயிருப்பர். பிரகிருதிக்கு மேற்பட்ட தத்துவத்தில் உள்ள பதவிகட்கு சிவ புண்ணிய மேலீட்டால் பக்குவமுற்றுச் சிவானந்தத்தைப் பெற்ற சீகண்ட உருத்திரர், அனந்த தேவர், மந்திர மகேசுவரர், அணுசதாசிவர் என்போர் தலைவர்களாய்த் திகழ்வர். இவர்களுள் சீகண்ட உருத்திரர் ஒருவர் மாத்திரம் பிரளயாகலருள் பக்குவம் அடைந்து சிவஞானம் கைவரப் பெற்றவர்கள். இவர்கள் சிவானந்தத்தால்

24. திருமாலின் பிறப்பு (அவதாரங்கள்) வினைவயத்தால் ஆனவை அல்ல என்றும், அது விருப்பத்தால் ஆனது என்றும் வைணவம் கூறும். ஆனதுபற்றியே அவர் 'பிறப்பில் பல்பிறவிப் பெருமான்' என்று போற்றப்பெறுவர்.

மலம் நீங்கப் பெற்றாலும், மலவாசனை நீங்கப் பெறாமையால் அதிகாரத்திலும் போகத்திலும் சிறிதே இச்சையுடையவ ராயிருப்பார். இதனால் இவர்கள் மேற்கூறிய தலைமையைப் பெற்று புவனபதிகளாய் விகாரணமாக இவரெல்லாம் தடத்த சிவனோடொத்து உருவும், பெயரும், தொழிலும் உடையவ ராயினும், ஆன்ம வருக்கத்துட் பட்டவர்களேயாவர். ஆன்ம வருக்கத்துட்பட்டவர்களாய் இந்நிலைகளைப் பெற்றவர்களே 'அணுபட்சத்தினர்' என்று வழங்கப் பெறுதலையும், பரமசிவன் தடத்த நிலையில் கொள்ளும் சதாசிவன், மகேசுவரன், வித்தியேசுரன், உருத்திரன், மால், அயன் என்னும் நிலைகள் 'சம்புபட்சம்' என வழங்கப் பெறுதலையும் நாம் அறிவோம்.

அணுபட்சத்தினர் தம்தம் அதிகார எல்லைக்கு உட்பட்டு வாழும் ஆன்ம கோடிகட்குப் படைத்தல் முதலிய ஐந்தொழில் களையும் செய்வர். இவற்றுள் அருளலை ஆசான் மூர்த்தி யாய் உடனிருந்தே செய்வர். விரையத் தோன்றி மறையும் அருட்டிரு மேனியாலும் உயிர்க்குயிராய் உள் நின்று உணர்த்துதலாலும் குறைவின்றி நிரம்பிய ஞானத்தை அருளு பவன் பரமசிவன் ஒருவனே என்பதை நாம் அறிவோம். இப்பரமசிவனோடு இரண்டறக் கலக்கும் நிலையான முத்தியே **பரமுத்தி** என்பதை முன்னர்க் குறிப்பிட்டதை ஈண்டு நினைவு கூரலாம். அஃதல்லாது அணு சதாசிவர், மந்திர மகேசுவரர், அனந்த தேவர் என்பவரது உலகங்களை அடைந்து நிற்றல் **அபர முத்தி**யாம். 'இவரெல்லாம் சுத்த மாயையில் தோன்றிய சுத்த தத்துவ புவனங்களில் வாழ்பவர்' என்று முன்னர்க் கூறப்பெற்றதை நினைவு கூரலாம். ஆகவே சுத்த தத்துவ புவனங்களே **'அபரமுத்தி தானங்கள்'** என்பது தெளிவாகும்.

(ஆ) **பதமுத்தி:** வித்தியாதத்துவங்கள் ஏழிலும் உள்ள சீகண்ட புவனம் முதலிய உருத்திர உலகங்களை அடைதல்

**பதமுத்தி**யாம். குணருத்திரர் உலகத்தை அடைதலும் ஒருவகையில் பதமுத்தியாகும். இவ்வுருத்திர உலகமும் ஒரோ வழி **'சிவலோகம்'** என்று வழங்கப்பெறும் என்பது முன்னர்க் குறிப்பிடப்பெற்றது.

அபரமுத்தி, பதமுத்திகள் முடிந்த முடிபல்ல. அபரமுத்தி தானங்களும் பதமுத்தி தானங்களும் பலவாதலின் அத்தானங் களில் அடையும் முத்தி நிலைகளும் பலவாக அமைகின்றன. இவை **சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம்** என்று **நான்கு** வகைப்பட்டிருக்கும்.[25]

(i) **சாலோகம்**: சாலோகம் என்பது இறைவனது உலகம்; இருப்பிடம். அபரமுத்தி பதமுத்தி உலகங்களில் சென்று எங்கும் தடையற இயங்கும் உரிமையைப் பெற்றிருத்தலே **'சாலோகம்'** என்னும் முத்தி நிலையாம். ஒருவர் இல்லத்தில் பணிபுரியும் அகம்படிமைத் தொண்டர் அவ்வில்லம் முழுவதும் தடையறச் செல்லும் உரிமை போன்ற இவ்வுரிமையைத் தருவது **சரியைத் தொண்டு** இதுபற்றியே அது **'தாசமார்க் கம்'** (அடிமை நெறி) எனவழங்கப் பெறுகின்றது. தாசமார்க் கத்தைத் **திருமூலர்**,

எளியனல் தீபம் இடல்மலர் கொய்தல்
அளிதின் மெழுகல் அதுதூர்த்தல் வாழ்த்தல்
பளிமணி பற்றல் பன்மஞ் சனமாதி
தளிதொழில் செய்வது தான்தாச மார்க்கமே.[26]

என்று விளக்குவர். அடிமை நெறிக்கு **அப்பர் பெருமானை** எடுத்துக்காட்டாகக் கொள்வர்.

(ii) **சாமீபம்**: மேற்குறிப்பிட்ட முத்தி உலகங்களில் பணியாளர்போல அகல நில்லாது மைந்தர் போல அவ்வப்

25. திருமந். ஐந். தந். சாலோகம் - 1

26. மேலது ஐந். தந். தாசமார்க்கம் - 1

புவனப்பகுதிகளை அருகணைந்து நிற்கும் உரிமையைப் பெற்றிருத்தலே **சாமீபம்** என்னும் முத்தி நிலையாகும். இவ்வுரிமையைத் தருவது **கிரியைத்** தொண்டு. இதுபற்றியே அது **சற்புத்திர மார்க்கம்** (மகன்மை நெறி) என வழங்கப் பெறுகின்றது. இந் நெறியைத் திருமூலர்,

> பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்திடல்
> ஆசற்ற நற்றவம் வாய்மை அழுக்கின்மை
> நேசித்திட் டன்னமும் நீசுத்தி செய்தன்மற்
> றாசற்ற சற்புத் திரமார்க்க மாகுமே.[27]

என்று காட்டுவர் மகன்மை நெறிக்கு ஞானசம்பந்தப் பெருமானை எடுத்துக்காட்டாகக் கொள்வர்.

**(iii) சாரூபம்:** இக்கூறிய புவன பதிகளை அருகணைந்து நிற்றலோடு அமையாது அவர்களோடு ஒத்த உருவம், பெயர் முதலியவற்றை உடையராய்த் தோழர்போல நெருங்கி அளவளாவும் உரிமையைப் பெற்றிருத்தலே '**சாரூபம்**' என்னும் முத்தி நிலையாகும். இதனைத் திருமூலர்,

> சயிலலோ கத்தினைச் சார்ந்த பொழுதே
> சயிலம தாகுஞ் சராசரம் போலப்
> பயிலும் குருவின் பதிபுக்க போதே
> கயிலை இறைவன் கதிர்வடி வாமே.[28]

என்று கூறுவர். இதுபற்றிய உரிமையைத் தரும் யோக வழிபாடு '**சகமார்க்கம் – தோழமை நெறி**' என்று சாற்றப் பெறுகின்றது. திருமூலர் இந்நெறியை,

> சன்மார்க்கம் தானே சகமார்க்க மானது
> மன்மார்க்க மாமுத்தி சித்திக்குள் வைப்பதாம்

27. மேலது. ஐந்.சற்புத்திரமார்க்கம்-2
28. மேலது. சாரூபம் - 2

பின்மார்க்க மானது பேராப் பிறந்திறந்
துன்மார்க்க ஞானத் துறுதியு மாமே.[29]

என்று பேசுவர். தோழமை நெறிக்கு **சுந்தர மூர்த்தி அடிகளை** எடுத்துக் கொள்வர்.

(iv) **சாயுச்சயம்:** இறைவனோடு இரண்டறக் கலக்கும் நிலை இது. சாயுச்சியத்தைத் தருவது ஞானமே. இதனைத் திருமூலரின் திருமந்திரம்,

சைவம் சிவனுடன் சம்பந்த மாவது
சைவம் தனையறிந் தேசிவஞ் சாருதல்
சைவம் சிவதந்தன்னைச் சாராமல் நீவுதல்
சைவம் சிவானந்தம் சாயுச் சியமே.[30]

என்று விளக்கும். இதுவே பெரும் பேறாகலின் இதனைத்தரும் ஞானம் '**சன்மார்க்கம்**–நன்னெறி' என்று வழங்கப்பெறு கின்றது. இந்நெறியைத் **திருமூலர்**,

தெரிசிக்கப் பூசிக்கச் சிந்தனை செய்யப்
பரிசிக்கக் கீர்த்திக்கப் பாதுகஞ் சூடக்
குருபத்தி செய்யும் குவலயத் தோர்க்குக்
தருமுத்திச் சார்பூட்டும் சன்மார்க்கந் தானே ![31]

என்று விளக்குவர். இந்நெறிக்கு **மணிவாசகப் பெருமானை** எடுத்துக்காட்டாகக் கொள்வர்.

அபரமுத்தியிலும் பதமுத்தியிலும் சாயுச்சிய நிலைகள் உண்டு. இங்கு அப்புவனப் பதிகளோடு ஒத்த உருவம் முதலிய வற்றைப் பெற்றிருத்தலோடு அமையாது அவர்கள் ஆணை வழி அவர்கள் போலவே அவரது அதிகாரங்களைப் பெற்றிருத்தலே அபர சாயுச்சிய, பதசாயுச்சிய நிலைகளாகும்.

29. மேலது. ஐந்.தந்திரம்-சகமார்க்கம்
30. மேலது - சாயுச்சியம் -1
31. மேலது ஐந். தந் - சன்மார்க்கம் - 3

**(v) சாலோகம் முதலியவற்றின் பயன்கள்:** சிறப்பு உண்மைச் சரியையில் சரியை முதலிய நான்கிலும் நின்றோர் நிவர்த்தி கலையுட்பட்ட உருத்திர உலகங்களில் சாலோகம் முதலியவற்றைப் பெறுவர்; கிரியையிற் சரியை முதலிய நான்கிலும் நின்றோர் பிரதிட்டா கலையுட்பட்ட உருத்திர உலகங்களில் சாலோகம் முதலியவற்றைப் பெறுவர். இவ்விரு உலகங்கட்கும் புவனபதிகட்கும் சீகண்ட உருத்திரர் முதல்வர் என்பதை நாம் அறிவோம்.

யோகத்தில் சரியை முதலிய நான்கிலும் நின்றோர் வித்தியாகலையுட்பட்ட உருத்திர உலகங்களில் சாலோகம் முதலியவற்றைப் பெறுவர். இவ்வுலகங்களுக்கும் புவனங் களுக்கும் முதல்வர் அனந்த தேவர் என்பதை நாம் அறி வோம்.

இனி, ஞானத்துள் கேட்டலின் விரியாகிய ஞானச்சரியை யிற் சரியை முதலியவற்றில் நின்றோர் நிவிர்த்தியும் பிரதிட்டை யுமாகிய கலைகட்குட்பட்ட அபரமுத்திதானமாகிய சிவலோகங் களில் சாலோகம் முதலியவற்றைப் பெறுவர். சிந்தித்தல், தெளிதல் இவற்றின் விரியாகிய சரியை முதலியவற்றில் நின்றோர் முறையே வித்தை, சாந்தி என்னும் கலைகளுக்குட் பட்ட அபரமுத்தித்தானமாகிய சிவலோகங்களில் சாலோகம் முதலியவற்றைப் பெறுவர்.

நிட்டையில் மீளாது நிற்க மாட்டாதோர் ஞானத்துள் ஞானமாகிய அதனிற் சரியை முதல் யோகம் ஈறாகிய நிலை யுடையராய் நிற்பராகலின், அவர் சாந்தியாதீத கலையுட்பட்ட புவனங்களில் சாலோகம் முதலியவற்றைப் பெறுவர். இவ் வுலகங்கள் அனைத்திற்கும் **தடத்த சிவனாகிய** சிவபெரு மானே முதல்வனாதலை நாம் அறிவோம்.

நிட்டையில் மீளாது நிற்கும் நிலையுடையோரே ஞானத்துள் ஞானமாகிய அதனுள்ளும் முடிவாகிய ஞானத்தைப் பெற்றோர் ஆவார். இவரே **சொரூப சிவனாகிய** பரமசிவனோடு இரண்டறக் கலக்கும் **பரமுத்தியை** அடைவர் என்பது தெளியப்படும்.

**(vi) முத்திநிலைகளை அடைந்தோரின் தன்மைகள்:** இவற்றைத் தெரிவிப்பது இன்றியமையாதது. ஞானத்துள் ஞானமாகிய நிட்டை நிலையை எய்தினோர் அதனுள் நிற்க மாட்டாதவராயவழியும் மேற்கூரிய அபரமுத்தியைப் பெற்று அங்கு நின்றே பரமுத்தியையும் பெறுவர். இவர்க்கும் மீட்சி இல்லை. ஏனைய கேட்டல் முதலிய மூன்றினும் நின்று அபரமுத்தியைப் பெற்றோர் மீளுதல் சிறுபான்மை. இவர் மீண்டவழி தீவிர, அதிதீவிர பக்திகளையுடையவராய் நின்று ஆசான் மூர்த்தியை வேண்டாது இப்பிறவியிலேயே பரமசிவன் நேர்படப் பெற்றும் பெறாதும் அவனோடு இரண்டறக்கலத்தலாகிய பரமுத்தியைப் பெறுவர். இங்ஙனம் பெறும்வழித் தாம் செய்த தீவிர பக்தி அதிதீவிர பக்திச் செயலின் பயனை மேற்கூறிய அபரமுத்தி உலகங்களில் சென்று நுகர்ந்து ஏற்ற பெற்றியால் மெல்லவும் விரையவும் பரமுத்தியை அடைவர். **அறுபான் மும்மை நாயன்மார்** இத்திறத்தினரே என்பதை அவர்தம் வரலாறுகள் நோக்கி அறிந்து கொள்ளலாம். இவர்கள் ஞானத்தைப்பெற்று மீண்ட அபரமுத்தர் என்பது ஆசான் மூர்த்தியின்றியே சிவ ஞானமும் சிவபக்தியும் மிக்க உடையராயினராக விளங்கினமையால் இது தெளிவாகும்.

பதமுத்தியை அடைந்தோர் அவ்விடத்தே இரு வினையொப்பு முதிரப்பெற்று ஞானத்தை அடைந்து அங்கு நின்றே அபரமுத்தி, பரமுத்திகளை அடைதல் சிறுபான்மை.

பெரும்பான்மையும் அவர்கள் மீளவும் ஞானம் பெறுவதற்கு வாய்ப்பான நல்ல சூழ்நிலையிற் பிறந்து தவத்தை முற்றச் செய்து ஆசான் மூர்த்தி அருளால் ஞானத்தைப் பெற்றுப் பின் அபர பரமுத்திகளை அடைவர் என்பது அறியப்படும். நிவிர்த்தி கலை, பிரதிட்டா கலையுட்பெறும் பதமுத்தி யாளர்க்கே சீகண்ட உருத்திரர் பதியாய் நிற்பர் என்பதை நாம் அறிவோம்.

மேன்மேல் உள்ள தத்துவங்கள் கீழ்கீழ் உள்ள தத்துவங் களிலும் வியாபகமாதலின் நிவிர்த்தி பிரதிட்டை என்னும் கலைகளிலும் பரமுத்தி அபரமுத்தி தானங்கள் உளவாதலும் அறிந்து தெளியலாம்.

(vii) **சிவக்குமாரர்கள்:** இவர்கள் விநாயகக் கடவுள், முருகக் கடவுள், வயிரவக்கடவுள், வீரபத்திரக் கடவுள் என்ப வராவர். இவர்களும் நிவிர்த்தி பிரதிட்டா கலைகளில் பதச் சாயுச்சியம் பெற்றவர்களாவர்; அதனால் இவர்களை வழிபடு வோர் இவர்பால் சாலோகம் முதலியவற்றைப் பெறுவர் என்பத னையும் அறியலாம். பதமுத்திகளில் சாயுச்சியம் பெற்றோரை '**அபரமுத்தர்**' என வழங்குதலும் உண்டு. இவர்தம் விருப்பத்தின் வழியும் புவனபதிகளின் விருப்பத்தின்வழியும் பல வகையான உருவங்களையும் பெற்றிருப்பர்.

உண்மைச் சரியை முதலியவற்றிற்கு ஞானமும் ஞானத் திற் சரியை முதலியவற்றிற்கு ஞானத்தித்தில் ஞானமுமே உண்மைப் பயனாயினும் இவை இடைநிலைப் பயனாக முறையே பதமுத்தியையும் அபரமுத்தியையும் தரும் என்பதும் ஈண்டு அறிந்து தெளியப்படும்.

## (4) சீவன் முத்தி

ஞானத்தின் ஞானமாகிய நிட்டையின் பயனாக அடையப்படும் **பரமுத்தி** – அதாவது **சாயுச்சியம்** என்னும் நிலையை – இவ்வுலகில் இவ்வுடம்போடு கூடியிருக்கும் நிலையில் பெற்றிருத்தலே **'சீவன் முத்தி'** என்பது. இஃது ஓர் அதீத நிலையாகும். இந்நிலையை அடைந்தோருக்கு **சஞ்சிதம்** (பழவினை) **ஆகாமியம்** (எதிர் வினை) என்னும் இருவகை வினைகளும் இல்லாது ஒழியும். சஞ்சித வினை நிருவாண தீக்கையால் கெட்டொழியும்; ஆகாமியம் இறைவனது அருள் ஒளியால் அழிந்து ஒழியும், ஆகவே, உள்ளது எடுத்த உடம்பு கொண்ட **பிராரத்தம்**(நுகர்வினை) ஒன்றேயாகும். இஃது உள்ள துணையும் இவர்கள் ஏனையோர் போல உண்டு உடுத்து பூசிமுடித்து நலந்தீங்குகளை எய்தி நிற்பினும் தாமரை இலைத் தண்ணீர் போலச் சிறிதும் பற்றின்றிச் சலியாது நிற்பர். **பிராரத்தம்** உள்ளவரை உடம்பு நீங்காது நிற்கும் என்பதை நாம் அறிவோம்.[32] ஆயினும், அஃது உடலளவாய் நின்று ஒழியுமேயன்றி, உயிரைத் தாக்கி உலகத்தோடு, தொடர்பு படுத்துதல் இல்லை. ஆகவே சீவன் முத்தியை அடைந்தோர் எஞ்ஞான்றும் இறைநினைவில் அழுந்தி, இறைவனோடு தொடர்பற்று நிற்றலின்றி, உலகத்தோடு தொடர்புற்று நிற்றல் இல்லை. இந்நிலைதான் **'நிட்டை நிலை'** என்றும் வழங்கப்பெறுகின்றது.

இந்த நிட்டைநிலையில் இவர்களை **'ஞாயிறு எங்கு எழில் ஏன்?"**[33] **"வானம் துலங்கில் என்? மண்கம்பம்**

32. வைணவத்தில் 'போயபிழையும் (சஞ்சிதம்) புகுதருவான் நின்றனவும் (ஆகாமியம்) தீயினில் தூசாகும்' -சரணாகதியால். ஆனால் பிராரத்தம் தொடர்ந்து இருக்கும் நிலை தாமரை இலைத் தண்ணீர்போல் சிறிதும் பற்றின்றி இருக்கும் நிலை. ஒப்புநோக்குக.

33. அப்.தே.6,95:3

ஆகில் என்?"[34] என்று கவலையற்றிருப்பர். இவர்கள் யார்க்கும் குடியில்லை. நமனையும் அஞ்சார். இவர்கள் எஞ்ஞான்றும் "**தனக்கு உவமை இல்லாதான்**"[35] தாள் நிழலில் நிற்றலால் இவர்க்கு எந்நாளும் இன்பமேயன்றித் துன்பம் இல்லை, சமய அநுட்டானம், சாதிகுல வரம்பு, உறவு, பகை முதலிய ஒன்றும் இவர்களிடம் காணப்பெறுதல் இல்லை. இந்நிலையை இவர்கள் முயன்று பிடித்தல் இல்லை. இதன்கண் அவர்கட்கு எல்லை இல்லாததோர் இன்பம் தோன்றுதலால் மதுவுண்ட வண்டு அம்மலரிலே மயங்கிக் கிடத்தல் போல இவர்கள் இறைவன் திருவடி வியாபகத்துள் நிற்பர். எனினும், இவர்கள் சிவபக்தர்களை உறவாகவும் நட்பாகவும் கருதுவர். **குருலிங்கம் சங்கமம்**[36] வழிபாடுகளைச் சிவனாகக் கண்டு வழிபடுதலையே விரும்பிச் செய்து வாழ்வர். உடம்பு நீங்கியவுடன் பரமசிவனோடு இரண்டறக் கலத்தலாகிய **சாயுச்சிய பரமுத்தி**யைப் பெறுவர். இவர்கள் அகமுகமாகிய அதீத நிலையின் நீங்கிய புறமுகமாய் நிற்கும் பொழுதெல்லாம் மேற்கூறிய துரிய நிலையிலே நிற்பர் என்பது அறியப்படும்.

இறைவனது திருவடி நிழல் இன்பத்தை,

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.[37]

என்ற திருப்பாடலில் தம் அநுபவமாகக் காட்டுவர் **அப்பர் பெருமான்**. பிறிதோர் இடத்தில் இப்பெருமான்,

34. மேலது 6.98:1
35. குறள்-7
36. குரு-ஆசாரியர்; இலிங்கம்-திருக்கோயிலில் இருக்கும் இறைவனின் திருமேனிகள்; சங்கமம்-சிவனடியார்கள்.
37. அப்பர்.தே 5.90:1

கனியி னுங்கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமு டிக்கவித் தாளும் அரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே.[38]

என்ற திருப்பாடலில் திருவிடை மருதூர் இறைவனை இனியனாகக் காட்டித் தம் அநுபவத்தைப் பெற வைப்பர்.

**இன்னோர் உண்மை:** உடம்புபற்றி வரும் பசி முதலியவை காரணமாக அவர்களது அறிவு புறத்தே வருதல் எவையேனும் சில நேரமேயன்றிப் பிறர்போல் எப்பொழுதும் அன்று என்பதை நினைவிற் கொள்ளவேண்டும். இந்நிலையில் அவர்கள் நல்ல சுவையான உணவுகளையும் பாங்கான உறைவிடங்களையும் தேடிச் செல்லார். மாறாக இயல்பாகக் கிடைக்கும் காய், கனி, கிழங்கு, சருகு, நீர், காற்று முதலியவற்றையே உண்டு பொதுவிடங்களிலும், புறத்திண்ணைகளிலும் மரநிழல்களிலுமே தங்குவர்.

அகலிடமே இடமாக ஊர்கள் தோறும்
அட்டுண்பார் இட்டுண்பார் விலக்கார் ஐயம்
புகலிடமாம் அம்பலங்கள் பூமி தேவி
யுடன்கிடந்தார் புரட்டாள்.[39]

என்ற **அப்பர் பெருமானின்** தாண்டகத்தால் இவர்கள் நிலையை அறியலாம்.

அன்பும் அறனும் உடைய பிறரால் கொடுக்கப்பெறின், 'சிவனருள்' என்று மறுக்காமல் கொள்வர். ''சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடன்'' என்பதில் சிறிதும் வழுவாதவன் இறைவன் அன்றோ? ஆதலின், அவன் இச்சீரடியார்க்கு வேண்டத் தக்கதை அறிந்து வேண்டும் பொழுது கிடைக்குமாறு செய்து நிற்பான். **மணிவாசகப் பெருமானின்,**

38. மேலது 5.14:10
39. அப். தே.6.98:2

வேண்டத் தக்க தறிவோய்நீ
　　வேண்ட முழுதும் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய்நீ
　　வேண்டி யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய்
　　யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
　　அதுவும் உன்றன் விருப்பன்றே.[40]

என்ற மணிவாக்கால் இதனை யறியலாம். ஆயினும், இந்த அடியார்கள் ''இறைவன் கொடுப்பான்'' என்று எதிர் நோக்குதலும் இல்லை. ஆயினும், அவன் தானே முன்வந்து இவர்கட்கு அவற்றைக் கிடைக்கச்செய்வான். அப்பர், சுந்தரர் இவர்கட்கு இறைவன் கட்டமுதுகொணர்ந்து கொடுத்ததும், சுந்தரர்க்கு இரந்து வந்து சோறிட்டதும், ஞானசம்பந்தருக்கு முத்துச்சிவிகை, முத்துப்பல்லக்கு, முத்துக்குடை முதலியவற் றைத் தானே கொடுத்ததும், திருவீழிமிழலையில் சம்பந்தர் நாவுக்கரசர் இருவருக்கும் நாள்தோறும் படிக்காசு அருளியது மான நிகழ்ச்சிகள் இதற்குச் சான்றுகளாக அமைகின்றன. இங்ஙனம் இவர்கள் கவலையற்றிருப்பதால் இவர்களது செயல் சிலசமயம் இளஞ்சிறார்களது செயல் போலவும், பித்துக் கொண்டவர் செயல்போலவும் களிப்பு மிகுதியால் ஆடுதல், பாடுதல் முதலியனவாகவும் நிகழலாம்.

உலகில் இவர்கட்கு எவ்விதப் பற்றும் இல்லாமையால் உலகியல் பற்றிய விருப்போ வெறுப்போ இவர்களிடம் தலை காட்டாது. உடம்புபற்றிய அச்சமும் இவர்கட்கு இல்லை.

அஞ்சுவது யாதொன்றும் இல்லை
　　அஞ்ச வருவதும் இல்லை.[41]

40. திருவா. குழைத்த பத்து-6

41. அப்பர்.தேவாரம்-4.2 பத்துப்பாடல்களிலும் இறுதியாக வருவது.

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்;
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்;
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை.[42]

வானந் துளங்கிலென்? மண்கம்ப
மாகில்என்? மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு
மாறில்என்? தண்கடலும்
மீனம் படில்என்? விரிசுடர்
வீழில்என்? வேலை நஞ்சுண்டு
ஊனம் ஒன்றில்லா ஒருவனுக்
காட்பட்ட உத்தமர்க்கே.[43]

என்ற அப்பர் திருமொழிகளை ஆழ்ந்து நோக்கின் இது நன்கு புலனாகும். ஆகவே, உலகியல்பற்றிய விருப்பு வெறுப்பு இவர்கட்கு உண்டாதல் இல்லை. ஆயினும் எவையேனும் சில விருப்பச் செயல்கள் நிகழ்வதாயின், அதுவே இறைவன் உயிர்களை உய்விக்க வேண்டி எழுந்தருளியிருக்கும் திருக் கோயில்கட்குச் சென்று வணங்குதல், அவற்றிற்கு ஆவன வற்றைச் செய்தல், மெய்யடியார்களுடன்கூடி இறைவனது புகழ்பாடி இன்புறுதல் – இவை யெல்லாம் இவர்கள் தம் இயல்பில் செய்யினும் இவை உலகிற்கு நலந்தருவனவாய் அமையும். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா முதலிய தோத்திரப்பாடல்கள் இவ்வாறு எழுந்தனவேயாகும்.

இனி, தாம் பெற்ற இன்பத்தை உலகனைத்தும் பெற வேண்டும் என்னும் கருணையும் ஒவ்வொரு சமயத்தில் இவர்தம் உள்ளத்தில் எழுவதுண்டு. 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'.[44] என்ற திருமூலரின் திருவாக்கினை

42. மேலது 6.98:1
43. மேலது 4.122:8
44. திருமந்.பாயிரம்-11

யும் காணலாம். இதன் பயனாகவே திருமந்திரம், சிவஞான போதம், சிவஞான சித்தியார் போன்ற தத்துவநூல்கள் உலகிற்குக் கிடைத்தன என்பதை எண்ணி மகிழலாம். இவ்வியல்புடையவரே உலகிற்கு நல்வழி காட்டுதற்கு உரியர் என்பதை விளக்கும் பொருட்டுத்தான் **'நீத்தார் பெருமை'** என்ற ஓர் அதிகாரத்தைத் தமது நூலில் பாயிரப் பகுதியில் வைத்துள்ளார் வள்ளுவப் பெருந்தகை என்று எண்ணத் தோன்றுகின்றது. ஆகவே, சீவன்முத்தருக்கு அவரது அறிவு இச்சைச் செயல்கள் ஒவ்வொரு பொழுது புறத்தே செல்லு மாயின் அப்பொழுதும் இந்நிலையில் அவை நிகழ்தலன்றி வேறுவகையில் நிகழமாட்டா என்பதைக் கருத்தில் இருத்துதல் வேண்டும்.

பிராரத்தம் காரணத்தால் உடலுக்கு இன்பம் வரினும் துன்பம் வரினும் இன்பத்தில் மகிழ்தலும் இல்லை; துன்பத்தில் வருந்துதலும் இல்லை.

> நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
> அல்லற் படுவ தெவன்?[45]

என்ற வள்ளுவர் வாக்கை நன்கு அறிந்து தெளிந்தவர்கள் இவர்கள். இந்த இரு திறத்திலும் ஒரு தன்மையாய் இறைவன் திருவடிநிழலில் அகலாது நிற்பர் என்பது ஈண்டு அறிந்து தெளியப்படும். **"பாச ஞானத்தால் பரனைத் தரிசித்தோம் பரமே பார்த்திருப்பர்; பதார்த்தங்கள் பாரார்"**[46] என்று சிவஞான சித்தியார் கூறுவது இச் சீவன் முத்தி நிலையையே என்பது உளங்கொள்ளத் தக்கது.

இந்த நிட்டைநிலையை அடைந்தோர்க்கும் பரமுத் தியை எய்தினோர்க்கும் உள்ள வேறுபாடு இதுதான். முன்ன

45. குறள் 379(ஊழ்)
46. திருவருட்பயன் 10.9

வர்க்கு உடம்பு இருத்தலும் பின்னவர்க்கு அஃது இல்லாமை யாகும். ஆகவே பரமுத்தி அடைந்தோர் உடம்பைத் துறந்து பெறும் இன்பத்தைச் சீவன்முத்தர் உடம்போடு பெறுகின்றனர். ஆகவே, உடம்பு நீங்கியவுடன் நேரே சாயுச்சியமாகிய பரமுத்தியைப் பெறுவர். அதனால் இவர்களைச் சித்தியார்,

> எண்ணும் இகலோகத்தே முத்திபெறும் இவன்றான்
> எங்கெழில்என் ஞாயிரெமக் என்றுகுறை வின்றிக்
> கண்ணுதல்தன் நிறைவதனிற் கலந்து காயம்
> கழிந்தக்கால் எங்குமாய்க் கருதீன்போல் நிற்பன்''[47]

என்று கூறும். **கொற்றவன்குடி உமாபதி சிவமும்,**

> மூதறிவார்க்கு—அம்மையும் இம்மையே யாம்.[48]

என்று விளக்குவர். இந்த இரு கூற்றுகளாலும் பரமுத்தியை அடைந்தோர் உடம்பு நீங்கிப்பெறும் இன்பத்தைச் சீவன்முத்தர் உடம்பொடு நின்றே பெறுகின்றனர் என்பது தெளிவு. இதனால் இவர்கள் உடம்பு நீங்கியவுடன் சிவசாயுச்சியமாகிய பரமுத்தியைப் பெறுதலன்றி வேறில்லை என்பதும் உணரப்படும். சீவன் முத்தரைத் தமிழில் **'அணைந்தோர்'** என்று வழங்குவர்.

**ஒரு முக்கிய செய்தி:** குருவருளால் ஞானம் கைவரப் பெற்றோர் அனைவரும் சீவன்முத்தர் நிலையை அடைந்து விடமுடியாது. ஞானத்தின் படிநிலைகளே இதற்குக் காரணம். இப் படிநிலைகள் யாவை? இவை ஞானத்தில் சரியை, ஞானத்தில் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் என்பனவையாம். இவை முறையே குரு உபதேசத்தின்வழி சிவமுதற் பொருளே ஏனைய எல்லாப் பொருட்கும் பற்றுக்கோடு எனக் கேட்டல், பின் அதனை நூல்களும் பொருந்துமாறு சிந்தித்தல், பின் அதுவே உண்மையென ஒரு

47. சித்தியார்.8.24
48. மேலது.11.2

தலையாகத் துணிதல், பின் பிற பற்றுகள்[49] அற்று அச்சிவத்தில் அழுந்துதல் என்பவையாகும். இவற்றுள் இறுதியில் குறிப்பிட்ட **'அழுந்துதல்'** என்னும் நிட்டை நிலையாகிய 'ஞானத்தில் ஞானம்' என்னும் நிலையே சீவன் முத்தி நிலையாகும் என்பதும் அறிந்து தெளியப்படும்.

உயிர்கள்தோறும் ஆணவமலப் பிணிப்பு ஒரு வகையாக இல்லாமல் வெவ்வேறு வகையாய் இருக்கும் என்பதை நாம் அறிவோம். இதனால் அதன் பரிபாக நிலையையும், அதற்கேற்ப நிகழும் சத்தி நிபாதநிலையையும் பல்வேறு வகையாக இருக்கும் என்பதையும் நாம் தெரிந்துள்ளோம். ஆதலால் குருவருளால் ஞானத்தைக் கேட்டல் என்னும் அளவில் பெற்றவுடனே எல்லோர்க்கும் நிட்டை நிலையாகிய சீவன் முத்தி நிலை எளிதில் கைகூடுவதில்லை. அதன்பின் சிந்தித்தல் தெளிதல்களும் ஒருவகையாக நிகழ்வதில்லை; பல்வேறு வகைப்பட்ட மந்தமாகவும் தீவிரமாகவும் நிகழும். **'அதிதீவிரத்தில் தீவிரம்'** என்னும் நிலை வரும்போதுதான் நிட்டையிலே நிற்றலாகிய **'சீவன் முத்தி நிலை'** கூடுவதாகும். அதிதீவிரத்தில் அதிதீவிரமான தமது நிலையையே **மணிவாசகப் பெருமான்.**

வீடகத்தே புகுந்திடுவான்
மிகப்பெரிதும் விரைகின்றேன்.[50]

என்று குறிப்பிட்டதையும் எண்ணி ஓர்தல்வேண்டும், இந்நிலை பலர்க்கு இல்லாமையால்தான் பலர் குருவருளைப் பெற்ற பின்பும் சீவன் முத்தி நிலையை எய்த முடிவதில்லை. **மணிவாசகப் பெருமானும்** இந்நிலை தனக்கு வாய்க்கவில்லை என்பதை,

49. சித்தியார்-8.31
50. திருவா. திருச்சதகம்-அறிவுறுத்தல்-1

வழங்குகின் றாய்க்குன் அருளா
ரமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்கு கின்றேன்விக்கி னேன்வினை
யேன்என் விதியின்மையால்[51]

என்று குறிப்பிடுவதையும் காணலாம். ஆகவே, இந்நிலை வாய்த்தல் அரிதினும் அரிதாகும் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

## (5) தசகாரியம்

சீவன்முத்தி நிலையை விளக்கும்போது ஞானத்தின் படிநிலைகளைக் கண்டோம். இவற்றையே சித்தாந்தம் வேறொரு வகையில் பத்தாகப் பகுத்து **'தசகாரியம்'** என்று குறிப்பிடும். இது **'ஞானச் செய்தி'** என்றும் வழங்கப்பெறும். இதனை ஈண்டுத் தெளிவுறுத்துவோம்.

'ஞானம்' என்பதற்கு **'அறிவு'** என்பது பொருள். ஆயினும் தத்துவ நூல்களில் அது **'பொருளியல்பை உள்ளவாறு உணரும் உணர்வுக்கே'** குறியீடாக வழங்கும். அறிதல் என்னும் அளவில் சரியை, கிரியை, யோகம் என்பனவும் ஞானமேயாயினும் சைவசித்தாந்தம் இவற்றை ஞானம் எனக் கொள்ளாது பொருளியல்பை உள்ளவாறு உணரும் உணர்வை – தத்துவ உணர்வையே **'ஞானம்'** எனச் சிறந்தெடுத்தும் கூறுதல் இக்கருத்துபற்றியே யாகும்.

விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனிமேல் அன்றோ பராபரமே ![52]

என்று **தாயுமான அடிகள்** சரியை முதலியவற்றையும் **'மெய்ஞ்ஞானம்'** என்றது மெய்ப்பொருளை ஒருவாற்றான்

51. மேலது - அடைக்கலப்பத்து - 10
52. தா.பா. பராபரக்கண்ணி-157

அறியும் பொதுமைபற்றியேயாகும் என்பது உளங்கொள்ளத் தக்கது.

சைவசித்தாந்தம் கூறும் முறையில் பொருளியல்புகளை உணர்வதே உண்மை ஞானமாகும். அது பொருளின் எண்ணிக்கை வகையால் **மூன்று** என்றும், அவற்றின் இயல்பு வகையால் **'தடத்தம்'** **'சொரூபம்'** என **இரண்டு** என்றும், அவற்றினிடையேயுள்ள தொடர்பு **'சுத்தாத்துவிதம்'** என்றும், நிலைவேறுபாடுகள் **'பெத்தம், முத்தி'** என இருதிறப்பட்டுப் பிறிதொரு வகையால் **'கேவலம், சகலம், சுத்தம்'** என **மூன்றாகி**, ஒவ்வொன்றிலும் **'சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்'** என ஐந்தாய் மூவைந்து பதினைந்தாய் விரியும் என்றும் கூறும். இங்ஙனம் அவற்றை உணரும் ஞானமே **சித்தாந்த ஞானம்** ஆகும். இந்த ஞானமே கேட்டல் முதலிய நான்காகுமிடத்துப் பத்தாகி விரியும். இவை, 'தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்ம சுத்தி, சிவ ரூபம், சிவதரிசனம், சிவ யோகம், **'சிவபோகம்'** என்பனவாகும்.

இவண் குறிப்பிட்ட பத்தும் உடற்செய்கைகள் அன்று; அறிவுச் செய்கையாகிய ஞானச்செய்திகளேயாகும். ஆதலின் இவை அறிவின்கண் நிகழும் நிலை வேறுபாடுகளேயாகும். இந்நிலைகளுள் **தத்துவம், ஆன்மா, சிவம்** என்ற மூன்று பொருள்களும் **பாசம், பசு, பதி** எனப்படுவதை நாம் அறிவோம். ஆணவம், மாயை, கன்மம் என்ற மூவகைப் பாசங்களுள் மாயையின் காரியமாகிய தத்துவம் **ஒன்றே** ஈண்டுக் கூறப்பெறுகின்றது. இதனை 'உலகம்' என்று பொதுவாகக் கூறலாம். ஆயினும்'உலகம்' எனக் கூறினால் உடலையும், மனம் முதலிய பிற கருவிகளையும் அது தெளிவாக விளக்க மாட்டாதாதலின், **'உலகம்'** என்ற அளவில்

அவற்றின் காரியமாகிய **தாத்துவிகங்களும்.**[53] கொள்ளப் படுதல் மரபாகும்.

மூவகைப் பாசங்களில் மாயையை மட்டிலும் கூறியதற் குக் காரணம் என்ன? ஏனைய எல்லாவற்றையும் விடப் பருப்பொருளாய் நின்று உயிரை மயக்கித் தனக்கு வேறாய் உள்ள பொருளை நோக்காது தன்னையே நோக்கும்; அஃதன்றியும் தனக்குமேல் வேறொரு பொருள் இல்லை யென்று எண்ணும் எண்ணத்திற்கும் காரணமாய் நிற்கும். ஆகவே, முப்பொருளின் இயல்பை உள்ளவாறு உணரும் நிலை வேறுபாடே இங்குத் **'தசகாரியம்'** எனப்படுகின்றது என்பது இனிது தெளிவாகும்.

இனி தத்துவங்களைப்பற்றியும் ஆன்மாவைப்பற்றியும் கூறுமிடத்தில் 'ரூபம், தரிசனம், சுத்தி' என்று மூன்று நிலைகள் குறிப்பிடப் பெற்றிருத்தலைச் சுட்டினோம். இவற்றுள் **'ரூபம்'** என்பது பொதுவாய் (நிருவிகற்பமாய்) அறிதல் என்றும், **'தரிசனம்'** என்பது ஐயமாக அறிதல் என்றும், **'சுத்தி'** என்பது தெளிவாக அறிதல் என்றும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

சிவத்தைப்பற்றிக் கூறுமிடத்தில் நுவலப் பெற்ற **'ரூபம்'**, **'தரிசனம்'** என்பவற்றிற்கும் இவையே பொருளாகும். ஆயினும், தத்துவத்தைப்பற்றியும் ஆன்மாவைப் பற்றியும் தெளிவாக அறிதலைச் **'சுத்தி'** என்று சொல்வது போலச் சிவத்தைத் தெளிவாக அறிதலைச் **'சுத்தி'** என்று சொல்வ தில்லை. ஏனெனில், தத்துவத்தைப்பற்றியும் ஆன்மாவைப் பற்றியும் தெளிவாக அறிதலின் பயன் அவற்றுள் வரும் மயக்கத்தினின்றும் நீங்குதலே யாகும். ஆதலின், அவை **'சுத்தி'** எனப்படுகின்றன. சிவத்தைப்பற்றித் தெளிவாக

53. தத்துவங்களின் கூறுகளும் காரியங்களும் தாத்துவிகங்கள் எனப்படும்.

அறிதலின் பயன் அதனைவிட்டு நீங்காது அதன்கண் அழுந்தி இன்புறுதலேயாதலின் அது **'சுத்தி'** எனப்படுதல் இல்லை. என்பது தெளிவாக அறியப்பெறும்,

சிவம் 'தானும் தனது சக்தியும்' என இரு கூறுபட்டு நிற்கும். ஆதலின் முதற்கண் சக்தியை அறிந்தே பின் சிவத்தை அறியும் நிலை உண்டாகும். இவற்றுள் சக்தியைத் தெளிவாக அறியும் நிலையே **'சிவயோகம்'** எனப்படும்; சிவத்தைத் தெளிவாக அறியும் நிலையே **'சிவபோகம்'** என்றும் நுவலப்படும்.[54]

**தசகாரியம்–மேலும் விளக்கம்:** மேலே குறிப்பாகச் சுட்டியதை சற்று விரிவாக விளக்குவோம்; சத்தி நிபாதத்து உத்தமனாகிய மாணாக்கனுக்கு ஞானோபதேசம் செய்து 'வரம்பில் இன்பத்தில்' என்றும் ஒரு நிலையாய் இருத்தற் குரியதை விளக்குவார் ஞானாசிரியர்.

ஐம்புலவேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே.[55]

என்பது சிவஞான போதம். இதில் 'விட்டு' என்றும் 'செல்லும்' என்றும் **மெய்கண்டார்** கூறும் இரு செயல்களே **'தசகாரியம்'** எனப்படுகின்றன. இவற்றுள் 'விடுதல்' பாசக் கூட்டத்தையும் பசு போதத்தையும் ஆகும்; 'செல்லுதல்' சிவத்தினிடத்திலாகும்.

இவண் கூறிய உபதேசத்தைப் பெற்றோர் அனைவர்க் கும் விடுதலும் செல்லுதலும் ஒரு வகையாகவே நிகழ்தல் இல்லை; அவரவரது தன்மைக் கேற்ப மெல்லவும் விரையவும்

54. 'யோகம்' என்பதற்கு 'ஒன்றுதல்' என்பதும், 'போகம்' என்பதற்குத் 'துய்த்தல்' என்பதும் சொற்பொருள்களாகும்.
55. சி.ஞா.போ-சூத்திரம்-8.

நிகழும். ஆகவே, உபதேசத்தைக் கேட்டபின்னர்ச் சிந்தித்தலி லும் தெளிதலிலும் சிலர்க்குச் சில காலம் கழியும். அதன் பின்பு நிட்டை கூடிய வழியும் அந்நிட்டை நிலையில் நீங்காது நிற்போர் மிக மிக அரியர். மீளவும் தெளிதல் நிலைக்கு வருதலும், நிட்டையிற் செல்லுதலுமாகிய வரவு போக்குகளை உடையவரே பலராவர். இந்நிலையில் உடம்பு நீங்குதற்கண் நிட்டை நிலையிலே நீங்காது நிற்கப் பெற்றோரே இறைவ னோடு இரண்டறக் கலத்தலாகிய சாயுச்சிய பரமுத்தியைப் பெறுவர்; இந்நிலையில் நிற்கப்பெறாதோர் அபரமுத்தியைப் பெற்றுப் பின்னர் பரமுத்தியை அடைவர். இனி மேலே குறிப்பிட்ட **தத்துவ சுத்தி முதலிய பத்தையும்** சிறிது விளக்கம் அடைவிக்கலாம்.

(அ) **தத்துவரூபம் முதலிய மூன்று:** ஆசிரியர் உபதேசத்தைப் பெற்ற பின்னர் அதனை நூல்களின் துணை கொண்டும் தம் அறிவுக்குப் பொருந்துமாறும் ஆராய்தலே சிந்தித்தல் என்பது. இங்ஙனம் சிந்திக்குங்கால் முப்பத்தாறு தத்துவங்களின் இயல்பையும் நூல்களில் நுவலப்பெற்றவாறே விளங்கிக்கொள்ளும் அளவில் அறிதல் **தத்துவரூபம்** ஆகும். இதில் நிகழ்வது பொதுவுணர்வேயாகும். பின்னர் "இங்ஙனம் சொல்லப்பெற்ற இவை பொருந்துமா" எனத் தன்னறிவில் வைத்து ஓர்தல் **'தத்துவ தரிசனம்'** ஆகும். இதில் "பொருந்தும் என்றும், பொருந்தாது என்றும்" கருதும் இரண்டுபட்ட உணர்வே தோன்றும். இஃது ஐயுணர்வாதல் வெளிப்படை. அதன்பின் ஆசிரியர் உபதேசித்தபடியும், நூல்களில் சொல்லியபடியும் தத்துவங்கள் அனைத்தும் ஆன்ம அறிவு இல்வழிச் செயற்படாத சடப்பொருள்களே என்பதும், ஆதலின் இவை ஆன்மா அல்ல; ஆன்மாவின் வேறு என்பதும் உண்மையாதலை உணர்ந்து வியப்புறுதல் **'தத்துவ சுத்தி'**யாம். இது துணிபுணர்வு என்பது தெளியப்படும்.

இத்துணிபுணர்வு பிறந்தபின் உயிர் அச்சடப்பொருள்களை உவர்த்து அவற்றிலிருந்து நீங்குதற்கு இடைவெளி இன்மை யால் இது தத்துவ சுத்தியாவதற்குத் தடையின்மை அறிந்து தெளியலாம்.

(ஆ) **ஆன்மரூபம் முதலிய மூன்று:** தத்துவங்களின் இயல்பை நூல்களில் நுவன்றவாறு அறிந்து கொள்வதுபோல் "தத்துவங்களோ அல்லது அவற்றின் கூட்டமோ ஆன்மா அல்ல; ஆன்மா வேறு" என்பதையும் அதன் இயல்புகளை யும் நூல்களில் கூறியவாறு அறிந்து கொள்ளுதலே **ஆன்ம ரூபம்** என்பது. அதன்பின் அவற்றைத் தன் அறிவிற்குப் பொருந்துமாறு ஆராய்தலே **ஆன்மதரிசனம்** ஆகும். இவ்வாறு ஆராய்ந்தபொழுது ஆன்மா தத்துவங்கள்போல சடமாகாது சித்தே என்றாலும், பிறிதொன்றன் துணையின்றித் தனித்து நின்று அறிய இயலாது. ஆதலின் அதற்கு எஞ்ஞான்றும் துணையாய் உடன் நின்று உணர்த்திவருவது முதல்வன் திருவருளே என்பது இனிது விளங்கும். ஆதலின் அவ் விளக்கத்தின்வழித் தனக்கென ஒரு செயலுமின்றி, எல்லாம் முதல்வன் செயலாக உணர்ந்து தன் செயலற்று இருத்தல் **ஆன்ம சுத்தி** யாகும். இவ்வாற்றால் எந்த ஒன்றை யாயினும் "யான் செய்தேன்" அல்லது "பிறர் செய்தார்" என்று எண்ணுதலும், ஒன்றை ''என்னுடையது, அல்லது பிறருடை யது'' என்று எண்ணுதலும் ஆகிய "யான், எனது என்னும் செருக்கு" அற்றொழியுமாதலின் இதுவே **ஆன்மசுத்தி**யாதல் என்று அறிந்து தெளியலாம்.

(இ) **சிவ ரூபம் முதலிய நான்கு:** தத்துவங்களின் இயல்பு, ஆன்மாவின் இயல்பு இவற்றை நூல்களில் கூறியவாறே கொள்ளுதல்போல் சிவத்தினது பொது இயல்பு (தடத்த இலட்சணம்—உலகத்தை ஐந்தொழில் படுத்தல்), உண்மை இயல்பு (சொரூப இலட்சணம்—எண்குணம்

உடைமை) நூல்களில் சொல்லியவாறு அறிந்து கொள்ளுதல் **சிவரூபம்** ஆகும். பின்னர் அவற்றைத் தன் அறிவிற்குப் பொருந்துமாறு ஆராய்தல் **சிவதரிசனம்.** சிவத்தினது இயல்பு இவ்வாறு அறிவிற்கும் பொருத்தமாதல் தோன்றும் பொழுதே முன்னர்க் கூறிய ‘‘யான், எனது” நிலைமை நிலைபெறுதலும் அதனால் எங்கும் சிவமாய்க் காணும் காட்சியும், அக் காட்சியால் சிவானந்த விளைவும் உண்டாகும். ஆகவே, இந்நிலையே சிவத்தை உண்மையில் காணும் **சிவ தரிசனம்** ஆதல் அறிந்து தெளியப்படும்.

சிவதரிசனம் வாய்த்தபொழுதும் பழைய வாசனை பற்றி “யான் செய்தேன்; பிறர் செய்தார்; என்னுடையது; பிறருடையது” என்று எண்ணும் **தற்போதம்** அல்லது **சீவபோதம்** எழும். இதனை அச்சிவதரிசன முறையில் சிந்தித்து அடக்கித் தன் செயலற்றுச் சிவத்தில் ஒன்றி இருத்தலே **சிவயோகம்** ஆகும். இதுவே உண்மை யோகம். ஏனைய யோகம் பொது யோகமே என்பது அறிந்து தெளியப்படும்.

சிவயோகத்தில் ஆன்மா நிலைத்து நிற்கும்பொழுது **சிவானந்தம்** தோன்றும். ஆதலின் அதனை நுகர நுகர அஃது ஒரு காலைக்கொருகால் மிகுந்து பெருகி ஆன்ம அறிவைத் தன்னுள்ளே விழுங்கிக்கொள்ளும்.

**யானாகிய என்னை விழுங்கிவெறும்**
**தானாய் நிலைநின்றது தற்பரமே**[56]

என்ற திருவாக்கில் குறிப்பிட்டுள்ளது இந்நிலையேயாகும். ஆன்ம போதம் அறவே மூழ்கடிக்கப் பெற்ற பின்னர், ஆன்மா தன்னையோ, பிறரையோ, பிற பொருள்களையோ உணரும் நிலை எப்படி இருக்கமுடியும்? ஆகவே, இந்நிலை யில் சொல் இல்லை; செயல் இல்லை; மனம் இல்லை; இரவு இல்லை;

56. கந்தரநுபூதி-28

பகல் இல்லை; எதுவுமே இல்லை. இதுவே **சிவ போகம்** என்பது அறிந்து தெளியப்படும். இதற்குமேல் ஆன்மா அடைய வேண்டிய பயன் யாதொன்றும் இல்லை. இச்சிவானந்தத்தை இடையறாது அநுபவித்தற்கு உடம்பு ஒரு சிறு தடையாகும். அது நீங்கினால் நிறை பேரின்ப நிலையாகிய **பரமுத்தி நிலை** வாய்த்து விடும் என்பது அறியப்படும்.

இங்ஙனமாகக் கூறப்பெற்ற **தசகாரியங்கள்** மேற் கூறியவாறு முறையாகக் கூறப்பெற்றனவாயினும், அவை ஒன்று நிகழ்ந்து முடிந்த பின்னர்தான் மற்றொன்று நிகழும் என்று கருதவேண்டா. ஒன்று பெரிதும், மற்றொன்று சிறிதும், இன்னொன்று அதனிற் சிறிதுமாக எல்லாமே உடன் நிகழ்வனவாகும். ஆகவே பெரிதாய நிலை பற்றியே பெயர் கூறப்பெறுவது என்று தெளியப்படும்.

எனவே, கீழ் கீழ் உள்ளவை நிலைபெறுதல் மேல் மேல் உள்ளனவற்றினால் ஆகும். ஆகவே தத்துவ தரிசனத்தால் தத்துவரூபம் நிலைபெறும். ஆன்மரூபத்தால் தத்துவ தரிசனம் நிலைபெறும். ஏனையவற்றையும் இவ்வாறு முறைப்படுத்தி அறிந்து தெளியலாம். இதனை ஓர் எடுத்துக்காட்டால் தெளியலாம். மலைமீது ஒரு பேருந்தில் செல்லுங்கால்,[57] சிறிது மேற்சென்றபொழுது கீழ் உள்ள பொருட்கள் தெளிவாகத் தோன்றுவதைக் காணலாம். மிகவும் மேலே சென்று விட்ட பொழுது கீழே உள்ள பொருள்கள் தோன்றாது மறைதலையும் உணரலாம். இதுபோலவே இவையும் அநுபவமாகும் என்பதை உணர்ந்து தெளியலாம்.

**ஒரு முக்கிய செய்தி:** கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடுதல் என்ற நான்குமே ஞானத்தின் படிகளாகும் என்பதை நாம் அறிவோம். இந்த நான்கிலும் தசகாரியங்கள்

57. திருப்பதி திருமலைமேல் பேருந்தில் ஏறுங்கால் இவ்வநுபவத் தைப் பெறுவதை நினைவுகூரலாம்.

என்ற படிநிலைகளும் அடங்கும். இந்த இரண்டு வகைப்படி நிலைகளையும் உற்றுநோக்கின், கேட்டல் முதலிய நான்குமே தத்துவ ரூபம் முதலாகக் கூறப்பெற்ற பத்தாகக் காணப் பெறுகின்றன என்று தெளிவாகும்.

**துகளறு போதம்** முதலிய சில நூல்களில் இவை **முப்பது** என்று இன்னும் விரிவாக விளக்கப்பெறுகின்றன. தச காரியத்துள் '**ரூபம்**' என்பன மூன்றும் கேட்டலில் அடங்கும்; தரிசனம் என்பன மூன்றும் சிந்தித்தலில் அடங்கும். தத்துவ சுத்தி, ஆன்ம சுத்தி, சிவயோகம் என்னும் மூன்றும் தெளிதலில் அடங்கும்; சிவபோகம் நிட்டையில் அடங்கும். இவை தெளியப்படும். **சிவப்பிரகாசம்** என்னும் நூல் இவற்றை வேறுவகையாகப் பிரித்துப் பேசும். இவையெல்லாம் வேறு வேறு போலும் என்று மயங்கி மலைய வேண்டா. ஆசாரியப் பெருமக்கள் அவரவர் மனம் அறிந்த அநுபவத்தை இவ்வாறு பல வகையாகக் கூறினாலும்[58] அநுபவம் ஒன்றேயாதல் என்பது ஓர்ந்து தெளியப்படும்.

## (6) அவத்தைகள்

உயிர் மலங்களோடும் இறைவனோடும் கலந்திருக்கும் நிலைகளை **அவத்தை** (அவஸ்தை) என்று கூறுவர் வடமொழியாளர்கள். இந்த அவத்தைகளைப்பற்றி முன்னர் விளங்கப் பெற்றதை நினைவு கூர்ந்து இவண் கூறப்பெறுவதை உளங் கொள்ள வேண்டும். சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்[59] ஆகிய ஐந்து அவத்தைகளும்

58. இத்தகைய ஆசாரியர்களின் அநுபவங்கள்தாம் வைணவத்தில் வடகலை, தென்கலை என்ற இருவேறுபட்ட கூட்டங்களாகப் பிரிய வழி வகுத்தன.

59. இவை அருந்தமிழில் முறையே நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல் என்று வழங்கப் பெறும்.

பெத்தத்தில் கேவலம் சகலங்களில் நிகழும் என்பதை நாம் அறிவோம். அவை சுத்தத்திலும் நிகழும் என்பதை ஈண்டு விளக்குவோம்.

தத்துவமும் தாத்துவிகமும் ஆகிய கருவிகள் கூடுதல் பிரிதல்களாற்றான் சாக்கிரம் முதலிய வேறுபாடுகள் நிகழ்கின்றன; இவை இங்ஙனம் கூடியும் பிரிந்தும் வருமிடத்துப் பிரிந்து நிற்கின்ற நிலையில் உயிருக்கு அறியாமை மேலிடுகின்றது. அப்போது உயிர் அதன்கண் அழுந்துகின்றது. இதுவே ஐந்தவத்தை என்பதை நாம் அறிவோம். இங்ஙனம் கருவிகள் குறையக் குறைய அறியாமையாதல், புலனுணர்வாதல் இல்லை. சிவானுபவம் உளவாதலே சுத்த ஐந்தவத்தைகளாகும். ஆகவே, இவையும் மேற்குறிப்பிட்ட தசகாரிய நிலைகளிலும் அமைவனவாகும். இவை அமையும் முறையை ஈண்டு விளக்குவோம்.

சிவத்துவ அநுபவம், தத்துவரூபம் முதலிய நான்கினும் சிறிதுமின்றி ஆன்மதரிசனத்துக்கண் சிவரூபம் வாயிலாகச் சிறிதே தோன்றி முதிருமாகலின், ஆன்ம தரிசனம், சிவ ரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்னும் இவை முறையே சுத்த சாக்கிரம், சுத்த சொப்பனம், சுத்த சுழுத்தி, சுத்த துரியம், சுத்த துரியாதீதம் என்னும் நிலைகளாகும். ஆன்ம சுத்தி, சிவ தரிசனம், சிவபோகங்களுள் பகுதிப்பட்டு அடங்கும். எனவே, தசகாரியங்களுள் முதல் ஐந்தும் **'சுத்த சாக்கிரம்'** என ஒருவாற்றாற் கூறப்பெறும் என்பதை உணர்தல் வேண்டும். மேலும் சில செய்திகள் ஈண்டு விளக்கப் பெறும்.

**யோகாவத்தை:** யோகநிலைக்கண் இயமம் முதலாகக் கூறப்பெறும் எட்டுறுப்புகளுள் இயமம், நியமம், ஆசனம் என்னும் மூன்றும் யோகத்திற்குச் சிறப்புறுப்பாகாது பொதுப்பட நிற்கும்; பிராணாயாமம் முதலிய ஐந்துமே அதற்குச்

சிறப்புறுப்பாய் நிற்கும். எனவே, **பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி** என்பன யோகத்தில் சாக்கிரம் முதலிய **'யோகாவத்தை'**கள் என்று வழங்கப்பெறும். இவற்றையே சிலர் **'சுத்தாவத்தைகள்'** என மயங்குவர். ஞானமின்றி உயிர்க்குச் சுத்தம் கூடாமையின் இவற்றைச் **'சுத்தாவத்தைகள்'** எனக் கொள்ளுதல் பொருந்துமாறில்லை. இயமம் முதலிய மூன்றும் பிராணாயாமத்தின் உறுப்புகளாகக் கொள்ளப்படுதலின் அவற்றையும் பிராணாயாமத்துடன் கூட்டி **'யோக சாக்கிரம்'** என வழங்குவர்.

**அவத்தைகளின் தன்மைகள்:** இவற்றை ஈண்டு விளக்குவது பொருத்தமாகின்றது.[60] கேவல ஐந்தவத்தைகளிலும், சகல ஐந்தவத்தைகளிலும், தத்துவ, தாத்துவிகங்களாகிய சில குறைந்தும் கூடியும் நிற்கும். யோகாவத்தையிலும் சுத்தாவத்தையிலும் எல்லாக் கருவிகளும் இருப்பினும் ஆன்மா அவற்றை முறையே அந்தக்கரணங்கள் வழியாகவும், தனது போகத்தின் வழியாகவும், நேரேவிடுதலும் பற்றுதலும் உடையதாயிருக்கும் என்பது அறியப்படும்.

கேவல ஐந்தவத்தைகளில் குறைந்தும் கூடியும் வரும் கருவிகள் **முப்பத்தைந்து.** அவை ஞானேந்திரியம் **ஐந்து;** கன்மேந்திரியம் **ஐந்து;** அந்தக்கரணம் **நான்கு;** புருடன் **ஒன்று;** ஆகத் **தத்துவம் பதினைந்து;** ஞானேந்திரிய விடயங்கள் (புலன்கள்) ஆகிய சத்தம் முதலிய **ஐந்து;** கன்மேந்திரிய விடயங்களாகிய வசனம் முதலிய **ஐந்து;** பிராணன் முதலிய வாயுக்கள் **பத்து** ஆகத் தாத்துவிகங்கள் **இருபதும்** ஆகும் என்ற விவரங்கள் ஈண்டு அறியப்படும்.

**கேவல சாக்கிரத்தில்** இக்கருவிகள் யாவும் மெதுவாக இயங்குமேயன்றி ஒன்றேனும் இல்லாமல் நீங்காது. கேவல

60. சித்தியார்-4-(22-40) கண்டுதெளியலாம்.

**சொப்பனத்தில்** ஞானேந்திரியம் **ஐந்தும்**, கன்மேந்திரியம் **ஐந்தும்** ஆகப் **பத்தும்** நீங்க. ஏனைய **இருபத்தைந்தும்** தொழிற்படும். **கேவலசுழுத்தியில்** அவ்விருவகை இந்திரியங் களாகிய சத்தம் முதலிய **ஐந்தும்**, வசனம் முதலிய **ஐந்தும்**, அந்தக்கரணங்களில் சித்தம் தவிர ஏனைய **மூன்றும்**, வாயுக் களில் பிராணன் தவிர ஏனைய **ஒன்பதும்** ஆக **இருபத் திரண்டு** கருவிகள் நீங்க, சித்தம், பிராண்ன், புருடன் என்னும் **மூன்று** கருவிகளே செயற்படும். **கேவலதுரியத்தில்** சித்தம் நீங்க, மற்றைய இரண்டும் தொழிற்படும், **கேவலதுரி யாதீதத்தில்** பிராணனும் நீங்க புருடன் **ஒன்றே** நிற்கும். இவண் கூறிய கருவிகளில் குறைவனவாகவும், பின் கூடுவன வாகவும் உள்ள கருவிகள் ஆன்ம தத்துவ தாத்துவிகங்களே யாதல் அறியத்தக்கது.

கேவல சாக்கிரம் முதலிய ஐந்திற்கும் முறையே புருவநடு, கண்டம் (கழுத்து), இதயம், உந்தி, மூலாதாரம் என்பனவாகும். எனவே, இவ்வவத்தைகளில் ஆன்மா முறையே இங்ஙனம் கீழிறங்கிச் சென்று மூலாதாரத்தை அடையும். பின்பு, நீங்கிய கருவிகள் இம்முறையே வந்து கூட, ஆன்மா மூலாதாரத்திலிருந்து மேற்கூறிய இடங்களில் மேல் ஏறிப் புருவ நடுவை அடையும். இதனால் கீழிறங்குதல் **'கீழால் அவத்தை'** என்றும்; மேலேறுதல் **'மேலால் அவத்தை'** என்றும் வழங்கப்பெறும். இவ்விரண்டிலும் ஆன்மா கீழிறங்குதல், மேலேறுதல் என்பன தவிரப் பிறிதொரு வேறு பாடும் இல்லை.

சகல சாக்கிரம் முதலிய ஐந்திற்கும் இடம் புருவநடு ஒன்றே. அதனால் அவை ஐந்தும் **'மத்தியால் அவத்தை'** எனவழங்கப்பெறும். இவை ஐந்தும் பிரேரககாண்டமாகிய **சுத்த தத்துவம்** அல்லது **சிவதத்துவம்** எனப்படும் ஐந்தும்

குறைதல் கூடுதல்களால் நிகழ்வனவாகும். சகல சாக்கிரத்தில் இவை ஐந்தும் தமக்குக் கீழ்உள்ள கருவிகளைச் செலுத்த லாகிய தம் தொழிலைப் புரிந்து நிற்கும். சகல சொப்பனம் முதலியவற்றில் சுத்த வித்தை தொடங்கிய ஒவ்வொன்றும் நீங்க, சகல துரியாதீதத்தில் **சிவதத்துவம் ஒன்றே** செயற்படும். பின்பு அது வந்து கூடும்பொழுது சாதாக்கியம் முதலாக முறையே வந்து கூடும்.

தத்துவங்கள் தோன்றும் முறைபற்றி முன்னர் கூறப் பெற்றது. அவை ஒடுங்கும் பொழுதும் அம்முறையிலேயே ஒடுங்கும். அதனால் அவற்றை எண்ணும் பொழுது அவை தோன்றும் முறையில் வைத்து எண்ணுதல் **'தோற்றமுறை'** (உற்பத்திக்கிரமம்) என்றும், ஒடுங்கும் முறையில் வைத்து எண்ணுதல் **'ஒடுக்கமுறை'**(சங்காரக்கிரமம்) என்றும் கூறப்பெறும்.

**யோகாவத்தைகள்** சுவாதிட்டானம் முதல் சகத்திரத் தளம் ஈறாகவுள்ள **ஆதாரங்களும்** சகத்திரத்தளத்திற்குமேல் பன்னிரண்டு அங்குலமான **நிராதாரமும்** அதற்கு அப்பாற் பட்ட மீதானமும் ஆகியவை பற்றி ஏற்ற பெற்றியால் நிகழும் சகத்திரத்தள இடத்தையே பலவாறாகக் கூறுதல் உண்டு.

**சுத்தாவத்தைகள்:** இங்ஙனம் உடம்பைப் பற்றி நிகழாது தற்போதம் அல்லது **சீவபோதமாகிய** ஆன்மபோதத்தைப் பற்றியும் சிவபோதமாகிய அருட்சக்தி பற்றியும் நிகழும் என்பதையும் அறிக. யோகாவத்தை, சுத்தாவத்தை என்பவை களையே **'மேலால் அவத்தை'** என்பாரும் உளர்.

**உபாயநிட்டை:** மேற்கூறியவற்றால் சிவயோகமாகிய தெளிதலே **'சுத்த துரியம்'** என்பதும், சிவயோகமாகிய நிட்டையே **'சுத்த துரியாதீதம்'** என்பதும் தெளிவாகும். இனி நிட்டையாகிய அந்த அதீத நிலையை அடைந்தோர் அதன்

கண்ணே அழுந்தி மீளாது நிற்போரும், பண்டைப் பயிற்சி வயத்தால் மீள்வோரும் என இருதிறத்தினர் ஆவர். இவ்வாறு மீள்வோர் முன்போலக் கீழ் நிலையை எய்திப் பந்தத்தில் வீழ்ந்து கெடாது, மேல் ஏறி நிட்டையின்கண் அழுந்துதற் பொருட்டுத் துரிய நிலையிலே நின்று முத்தி பஞ்சாக்கரத்தை முறைப்படி சுத்தமானதாகக் கணித்தலும், தம்மைப்போல துரிய நிலை எய்திய அன்பரோடன்றிப் பிறரோடு கூடாது குருலிங்க சங்கமங்களைச் சிவனாகவே அறிந்து வழிபட்டு, உலகரோடு ஒட்டி வாழ்ந்தும் தாமரை இலையிற் தண்ணீர் போலப் பற்றின்றிச் சிவனோடு ஏகராகி அவனருள் வழியன்றி ஒன்றும் செய்யாராய்த் தற்போதத்தை தவிர்த்து நிற்பர். இவர்க்கு அவர் பெற்ற சிற்றின்பம், பேரின்பமாகவே விளையும். இதனால் அவர்க்கு ஆகாமியமும் அதுவழியாக வரும் பிறப்பும், இல்லை. இந்நிலையே **'உபாயநிட்டை'** என்றும் **'சாக்கிரத்தில் அதீதத்தைப்புரிதல்'** என்றும் வழங்கப்பெறும்.

நிட்டையாகிய அதீதநிலையினின்றும் மீளும் தன்மை இல்லாத பெருமக்களையும் உலகத்தை உய்வித்தற் பொருட்டு இறைவன் இத்துரியநிலைக்கண் மீள்வித்தல் உண்டு என்பதற்குச் சில அருட்டிருமொழிகள் சான்றுகளாக அமைகின்றன.

திருந்தடி

மறக்குமா றிலாத என்னை
    மையல் செய்துஇம் மண்ணின்மேல்
பிறக்குமாறு காட்டினாய்.[61]

என்று வரும் **சம்பந்தப் பெருமானின்** திருமொழியையும்,

நெஞ்சினைத் தூய்மை செய்து
    நினைக்குமா நினைப்பி யாதே

61. சம்பந்தர். தே. 2.98:5

வஞ்சமே செய்தி யாலோ
வானவர் தலைவ னேநீ.[62]

என்ற **அப்பர் பெருமானின் அருள்** மொழியையும்,

நீக்கி முன்எனைத் தன்னோடு
நிலாவகை குரம்பையிற் புகப்பெய்தும்[63]

என்ற **மணிவாசகப்பெருமானின்** மணிமொழியையும்,

மாதவம் செய்து தென்திசை வாழ்த்தித்
தீதிலாத்திருத் தொண்டத் தொகைதரப்
போதுவார் அவர் மேல்மனம் போக்கி[64]

என்ற **சேக்கிழார் பெருமானின்** அருள் மொழியையும் கண்டு மகிழலாம். இவ்வாறு தன்னால் செலுத்தப்பெற்ற தன் அன்பரைக் கொண்டே இறைவன் தான் உலகிற்கு உணர்த்தி யருள்வன். இதற்குத் திருக்களிற்றுப்படியார்,

துரியங் கடந்தசுடர்த் தோகையுடன் என்றும்
புரியாது நிற்கின்ற பெம்மான்—துரியத்தைச்
சாக்கிரத்தே செய்தருளித் தான்செய்யும் தன்மைகளும்
ஆக்கியிடும் அன்பர்க் கவன்.[65]

என்று கூறி இதற்கு எடுத்துக்காட்டாகச் சமயகுரவர் நால்வரையும் காட்டியுள்ளது. இதனால் நால்வர் பெருமக்களும் இறைவன் திருவுள்ளப்பாங்கினால் இத்துரியநிலைக்கண் நின்றவர் என்பது தெளிவாகும்.

இனி, இங்ஙனம் நிட்டைநிலையிற் சென்று மீண்டு இத்துரியநிலைக்கண் நிற்போரது சுத்தான்ம சைத்தன்யத்தையே இறைவன் தானாகக்கொண்டு வேறற நின்று பக்குவர்க்கு

62. அப்பர். தே. 4.13:9
63. திருவா. அதிசயப்பத்து-8
64. பெ.பு. திருமலைச்சருக்கம்-25.
65. களிறு-9

உபதேச வாயிலாகவும், நூல்கள் வாயிலாகவும் பிறவாறாகவும் உண்மை ஞானத்தை அருளுவன். இஃது "**உந்தி களிறு, உயர்போதம் சித்தியார்**" முதலிய மெய்கண்ட நூல்களில் நன்கு விளக்கப்பெறுகின்றது.

ஏகனும் ஆகி அனேகனும் ஆனவன்
நாதனும் ஆனான்என் றுந்தீபற
நம்மையே ஆண்டான்என் றுந்தீபற.

நம்செயல் அற்றறிந்த நாம்அற்ற பின்நாதன்
தன்செயல் தானேஎன் றுந்தீபற
தன்னையே தந்தென் றுந்தீபற.[66]

என்ற **திருவியலூர்உய்யவந்த தேவநாயனாரின்** அருளிச் செயல்களையும்,

ஆற்றால் அலைகடற்கே பாய்ந்தநீர் அந்நீர்மை
மாற்றிஅவ் வாற்றான் மறித்தாற்போல்–தோற்றிப்
புலன்களெனப் போதம் புறம்மொழியின் நந்தம்
மலங்கள்அற மாற்றுவிக்கும் வந்து.[67]

என்ற **திருக்கடவூர் உய்யவந்த நாயனாரின்** அருள் மொழியையும்,

'இனி, இவ்வான்மாக்களுக்குத் தமதுமுதல் தானே குருவுமாய் உணர்த்தும் என்றது, அவன் அன்னிய மின்றிச் சைதன்ய சொரூபியாய் நிற்றலான்'[68]

என்ற **மெய்கண்டாரின்** திருவாக்கையும்,

ஞானயோ கக்கிரியா சரியை நான்கும்
நாதன்றன் பணி; ஞானி நாலினுக்கும்
................................உரியன்.

66. திருவுந்தி-5,6
67. களிறு-11 சூத்திரம்-8
68. சி.ஞா.போ.அதி.2

ஆதலினால் யார்க்கும்
ஈனமிலா ஞானகுருவே குருவும் இவனே.[69]

என்ற **அருணந்தி தேவநாயனாரின்** அமுதமொழியையும் கண்டு தெளியலாம்.

மேற்கண்டவற்றால் **மெய்கண்டதேவர்** முதலிய உபதேச பரம்பரை ஆசிரியர்கள் சாக்கிரத்தில் அதீத நிலையில் நின்றே ஞானகுரவராய் விளங்கித் தம்மை அடைந்த பக்குவர்கட்கு உண்மை ஞானத்தை வழங்கினர் என்பது அறியப்படும். அவ்வாசிரியர்கள்பால் உபதேசம் பெற்ற மாணாக்கர்கட்கு உண்மை ஞானம் கைவந்தமை **அருணந்தி தேவர்** தற்போதம் நீங்கி மெய்கண்ட தேவரையே சிவமாகக் காணும் நிலையை எய்தினார் என்ற வரலாறும், **உமாபதி தேவரால்** பெத்தான் சாம்பானும் முள்ளிச் செடியும் முத்தி பெற்ற வரலாறுகளும் பரக்கப் பேசுகின்றன.[70] **தாயுமான அடிகளும் மௌன குருவினையே** சிவமாகக் கொண்டார் என்பதைச் சிந்திக்க இடம் தருகின்றது.

வானகமும் மண்ணகமும்
வந்தெதிர் விளங்கிடும்உன்
மகிமையது சொல்லவெளிதோ?[71]

என்பன போன்ற கூற்றுகள் இதற்குத் துணையாக அமைகின்றன.

நிட்டைநிலையிற் செல்லுமுன்னே அது கைவருதற் பொருட்டு துரியநிலையில் நிற்பாரும் உளர். அவர் ஓராற்றால் ஆசாரியராதலன்றி மெய்கண்ட தேவர் முதலியோர்போல் பரமாசாரியராகார் என்பது ஈண்டு அறியப்பெறும்.

69. சித்தியார் 2.5
70. சித்தியார்-4-(22-40) கண்டுதெளியலாம்.
71. த.பா. மௌன குருவணக்கம் - 7

## (7) அணைந்தோர் தன்மை.

'சீவன் முத்தரே' **அணைந்தோர்** என்றும் வழங்கப் பெறுவர். அணைந்தோர் என்பதற்குச் 'சிவனை அணைந் தோர்' என்பது பொருள். நிட்டை நிலையில் சிவனை அணைந் தோர்க்கும் குருலிங்க சங்க வழிபாடும் பிற சமய நெறிகளும் தேவைதான் என்பது ஈண்டு விளக்கம் அடைகின்றது.

நிட்டை நிலையில் நின்று தம்மை மறந்தவர்க்கு குருலிங்க சங்கம வழிபாடும் உறங்கினோன் கைப்பொருள் அவனறியாது தானே நழுவி விழுதல் போலத் தாமே நீங்கிவிடும். அவ்வாறு நீங்காமல் அவற்றைத் தற்போதத்தால் தாமே வேண்டா என விலக்கின், பிறசெயல் வந்து பற்றும், பற்றவே அவற்றில் இச்சையுண்டாகி மீளவும் பிறப்பிற்கு ஏதுவாகும். இவ்வழிபாட்டைத் தற்போதத்தால் விலக்கச்செய் வதும் மலவாசனையேயாகும். அதனால் அவ்வாசனை தாக்கா திருக்கும்பொருட்டு மேற்சொல்லிய அனைத்தும் எவ்வாற் றேனும் துரியநிலைக்கண் நிற்பார் விட்டொழிதல் கூடாது என்பது உளங்கொள்ளத் தக்கது.

**ஒரு முக்கிய செய்தி:** இவ்விடத்தில் ஒரு முக்கிய செய்தியையும் அறிதல் வேண்டும். அதாவது சரியை முதலிய சாதனங்களில் நிற்பவர்கட்கும் சாத்தியமாகிய ஞானத்தைப் பெற்றவர்கட்கும் இடையேயுள்ள வேறுபாடு என்ன என்பது. பொருளற்ற வறியவர்கள் பெறுதலை அடைவதற்கு ஓடியாடி உழைக்கவேண்டும், இஃது இன்றியமையாதது. 'பொருளுடைய செல்வர்கட்கும் சோம்பல் கூடாது; உழைப்பு வேண்டும்' என்று சான்றோர்கள் கூறும் கருத்துதான் யாது? வறியவர்கள் பொருளை அடைவதற்கும் செல்வர்கள் பொருளை அழியாமற் காத்தற்கும் உழைக்கின்றனர் என்பது நினைவில் இருத்துற் குரியது. **"பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை"**[72] என்ற வள்ளுவர் வாக்கும் ஓர்ந்து உணர்தல்தகும்.

72. குறள்.252

மேற்கூரிய முறைதான் சரியை முதலிய சாதனங்களில் நிற்பவர்கட்கும் ஞானத்தைப் பெற்றவர்கட்கும் இடையே உள்ளது. சாதனங்களில் நிற்போர் ஞானத்தைப் பெறவேண்டிக் குருலிங்க சங்கம வழிபாட்டை மேற்கொள்ளுகின்றனர்; ஞானத்தைப் பெற்றவர்கள் அது நீங்காது நிலைத்து நிற்றல் வேண்டி இவ்வழிபாட்டை மேற்கொள்ளுகின்றனர். அவ்வாறா யினும் வறியரது உழைப்பிற்கும் செல்வரது உழைப்பிற்கும் வேறுபாடு பெரிதாய் இருப்பதுபோல் சாதனத்தில் நிற்போரது வழிபாட்டிற்கும் சாத்தியமாகிய ஞானத்தை அடைந்தோரது வழிபாட்டிற்கும் வேறுபாடு பெரிது என்பது அறியப்படும்.

இனி, இந்த வேறுபாடுகளை விளக்க முயல்வோம்.

முதலாவது வேறுபாடு அஞ்செழுத்தின் வகைகளாகிய தூலம், சூக்குமம், காரணம் முதலியவை. இவற்றை உபதேசம் பெறும் ஆசாரியனிடமிருந்து அறிந்து கொள்ள வேண்டும். இவற்றிற்கேற்பப் '**பாவனை**' எனப்படும் கருத்து வகைகளும் வேறு வேறாகும். அவற்றை ஈண்டு தெரிவிப்போம்.

(i) சரியையில் நிற்போர் குருலிங்கங்களாகிய திரு மேனிகளையும், சங்கமங்களில் திருநீறு கண்டிகை, முதலிய திருக்கோலங்களையுமே '**சிவன்**' எனக் கண்டு வழிபடுவர். அவர்கட்குச் சிவபெருமான் எக்காலத்தும் வெளிப்படாது அங்கு மறைந்து நின்றே அருள் புரிவான்.

(ii) கிரியையில் நிற்போர் மேற்கூறிய இடங்களில் அவ்வவற்றைத் தாம் போற்றும் மறைமொழிகளாலும், அம்மறை மொழிக்கேற்பத் தாம் எண்ணும் எண்ணத்தாலும் செய்கைகளாலுமே அங்குச் **சிவவிளக்கம்** உண்டாவதாகக் கொண்டு வழிபடுவர். இவர்கட்குச் சிவபெருமான் விறகைக் கடையும் போது நெருப்பு தோன்றுதல்போல் அவ்வழிபாட்டில் தோன்றி அருள்புரிவான்.

யோகத்தில் நிற்போர் 'யோகியரது உள்ளங்களிலே அவர்கட்கு அவர்கருதும் வடிவில் காட்சியளிக்கின்ற அப் பெருமானே இங்கும் இவ்வடிவில் விளங்குகின்றான்' எனக்கொண்டு வழிபடுவர். இவர்கட்குச் சிவபெருமான் கன்றை நினைந்த பசுவின் மடியில் பால் தானே விம்மி ஒழுகுதல்போல் அக்கருத்தின்வழி வெளிப்பட்டு அருள் புரிவன். ஞானியர் 'எப்பொருளிலும் ஒழிவர நிறைந்து நிற்கும் இறைவன் தான் விளங்கி நின்று அருள் செய்தற் பொருட்டுக் கொண்ட இவ்விடங்களிலும் அவ்வாறு நிற்கின்றான்' என்று அவன் அருள் வழியில் வழிபடுவர். இவர்கட்கும் சிவபெருமான் தானே இனிது வெளிப்பட்டு அருள்புரிவான். மேற்கூறிய வழிபாடு தோற்றத்தில் ஒன்றுபோல் காணப்படினும், கருத்திலும் பயனிலும் பெரிதும் வேறு பட்டு நிற்கும் என்பது ஓர்ந்து உணரப்படும்.

ஆகவே, சைவ சித்தாந்தத்தில் தொடக்கம் முதல் இறுதிவரையில் எந்நிலையிலும் திருநீறு உருத்திராக்கம், திருவைந்தெழுத்து என்பவற்றுடன் குருலிங்க சங்கம வழி பாடும் யாவர்க்கும் உய்தி தரும் சாதனங்களாகக் கூறப்படுவன வாகும் என்பது உணர்ந்து தெளியப்படும். நாமும் அவற்றையே பற்றி நின்று பிறவித்துன்பத்தினின்றும் நீங்கி இறைவன் திருவடிப் பேரின்பத்தினைப் பெற்று வாழ்வோம்.

> 'சிவாய நம'என்று சிந்தித்து இருப்போர்க்கு
> அபாயம் ஒருநாளும் இல்லை—உபாயம்
> இதுவே; மதியாகும் அல்லாத எல்லாம்
> விதியே மதிஆய் விடும்.[73]

என்ற பாட்டியின் வாக்கு நினைவுடன் இப்பகுதி நிறைவு பெறுகின்றது.

---

73. நல்வழி-15

# 8. வழிபாட்டு முறைகள்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து
உன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்த்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழவிடேன்உடை
யாய்என்னைக் கண்டுகொள்ளே.[1]

சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கிஐம் புலன்க ளார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே.[2]

1. திருவா. திருச்சதகம் - 1
2. மேலது - 26

# 8. வழிபாட்டு முறைகள்

## (1) மனிதன் இறைவனை வணங்கும் முறை

**இந்த** உலகங்களையெல்லாம் படைத்தல், அவற்றைக் காத்தல், அவற்றை அழித்தல்—ஆகிய செயல்களை விளையாட்டாகச் செய்பவன் எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள். சைவசமயம் சங்கார காரணனையே முழுமுதற்கடவுளாகக் கொள்கின்றது. அத்தகைய பரம்பொருளை வழிபடுதல் ஆருயிர்களின் கடமை என்றும் அச்சமயம் வற்புறுத்துகின்றது. எப்படி வழிபடவேண்டும் என்பதை அருளாளர்கள் காட்டிப் போயுள்ளனர். அவர்களுள் ஒருவராகிய **தாயுமான அடிகள்** காட்டிப் போன நெறியை ஈண்டுச் சிந்திக்கலாம்.

கை ஒன்றுக்கு அழகு உண்டாவது அதில் அணியப் பெறும் ஆபரணங்களைப் பொறுத்ததன்று. எவருடைய கையையும் அணிகளைப் பூட்டி அலங்கரித்து விடலாம். ஆனால் நற்செயல்கள் புரிந்து கொண்டிருக்கும் கையே அழகிய கையாகின்றது. நற்செயல்களிலெல்லாம் சிறந்தது. ஆண்டவனை ஆராதிப்பது. இறைவனைப் போற்றுதற்கு பல வழிகள் உள்ளன. அவற்றின் வழியாக மனத்தை இறைவனிடம் ஒப்படைக்க வேண்டும். நல்ல மனத்திற்குக் குறியீடாக அமைந்திருப்பது **மலர்**. அதனிடத்துப் புதுமையும் எழிலும்

மணமும் திகழ்ந்து கொண்டிருக்கும். மலர் போன்றிருத்தல் அவசியம். அத்தகைய மனத்தை ஆண்டவனிடத்து ஒப் படைப்பதற்கு அறிகுறியாகக் கையால் வழிபடும் ஒருவர் மலரை எடுத்து இறைவன்மீது தூவுகின்றார்; அங்கையால் – அழகிய கையால் –தூவுகின்றார். அக்கையால் செய்யப் படுகிற சிறந்த செயலை '**அங்கைகொடு மலர்தூவி**' என்கின்றார் **தாயுமானவ அடிகள்.**

உள்ளத்தில் உண்டாகும் உணர்ச்சி உடலில் உண்டா கின்ற சில மாறுதல்கள்மூலம் வெளியாகின்றது. அவ்வாறு வெளிப்படுவதைப் '**புளகிப்பு**' என்பர். அன்பால் அல்லது ஆனந்தத்தால் உண்டாகும் புளகிப்பு உடலைப் பண்படுத்தித் தூயதாக்குகின்றது. உள்ளத்தில் அரும்பும் உணர்ச்சிகள் அனைத்திலும் சிறந்தது, உயர்ந்தது இறைவனிடத்துக் கொண் டுள்ள பேரன்பு. அஃது ஆனந்தமாக, வடிவெடுத்து வெளிப் படுங்கால் அதன் புறச்சின்னம் உடலிலும் தென்படுகின்றது. இத்தகைய தோற்றத்தை '**அங்கமது புளகிப்ப**' என்று குறிப்பிடுகின்றார் அடிகள்.

உடலும் உள்ளமும் உருகுவதற்குரிய காரணங்களில் அன்பினால் உருகுவது சிறந்தது. அப்பொழுது அது வெண்ணெய் உருகுவதற்கு ஒப்பாகி மாசு நீங்கிய மணம் நிறைந்த நெய்போல, மனிதனிடத்துக் கடவுளன்பும் அதற்கு ஒப்பான தூய அன்பும் உண்டாகுமானால் அவன் உருகி உயர்ந்த மனிதனாக வடிவெடுத்து மேலோனாக மாறுகின்றான். இவ்வாறு மாறி அமைவதை '**அன்பினால் உருகி**' என்கின் றார் அடிகள்.

கண்ணீர் வடிப்பது உயிர்களின் செயல், உள்ளத்தில் உண்டாகும் மாறுபாடுகளுக்குச் சிந்துகின்ற கண்ணீர் அதன் புறச் சின்னமாகின்றது. இன்பக் கண்ணீர் அருள் தாகத்தால்

வருவது. அஃது இறை நாட்டத்தால் ஏற்படுவது. உணர்ச்சியின் வேகத்திற்கு ஏற்ப விழிநீர்ப் பெருக்கு மிகுதியாவதுண்டு. கடவுளுக்காக என்று கண்ணீர் உகுப்பாரைக் காண்பது அரிதினும் அரிது. பாராட்டத்தக்க அத்தகைய இன்பக் கண்ணீரை '**விழிநீர் ஆறு ஆக**' என்று குறிப்பிடுவர் அடிகள்.

பல்வேறு கடல்கள் உள்ளன. பரந்த நீர்நிலைகள் கடல்கள் என்ற பெயர் பெறுகின்றன. இலட்சியார்த்தக் கடல்களாகப் பல உள்ளன. பிறவிப் பெருங்கடல், ஆசைப் பெருங்கடல் என்பவை போன்றவை அவை. கடவுள்மீது வைத்துள்ள ஆசை மனிதனைப் படிப்படியாக மேல் நிலையை எய்துவிக்கின்றது. ஆசையின் வேகம் அதிகரித்தால் அஃது ஆவேசம் என்று பொருள் படுகின்றது. கடவுள் நாட்டத்தில் செல்லுகின்ற மனிதனுக்கும் அத்தகைய ஆவேசம் வந்து விடுகின்றது. கடவுளை நாடுவதும் முக்தியை நாடுவதும் ஒன்றே. ஏனைய ஆசைகள் சிறிய இன்பங்களை நல்க இறைவன் நாட்டம் தெவிட்டிப் போகாத பேரானந்தத்தையும் பேரன்பையும் உண்டு பண்ணுகின்றது. அத்தகைய தெவிட்டாத நிலை ஆனந்தநிலையாகும். இக்கருத்துகளையெல்லாம் தொகுத்து '**ஆராத முக்தியினது ஆவேச ஆசைக்கடற்குள் மூழ்கி**' என்று விளம்புகின்றார் அடிகள்.

கடவுளும் கடவுளுடைய பெயரும் இணைபிரியாதவை. சில சமயம் கடவுளைவிட, கடவுளுடைய பெயருக்கு மகிமை அதிகமாகின்றது. நாம் ஒருவருக்கு வைக்கும் பெயர் பொருத்தமில்லாது அமைந்துவிடும். இயற்கையில் ஒவ்வொரு பொருளும் ஒரு சப்த சொரூபமாக உள்ளது. அது நமக்குப் புலப்படுவதில்லை. ஆன்றோர் அதனை அறிந்து கொள்கின்றனர். இறைவனிடத்து இருந்து வரும் ஓசையை அவர்கள் அறிந்து கொள்கின்றனர். பின்னர் அதனை அவர்களே

எடுத்தோதுகின்றனர். இந்த ஓசைகளே சிவன், சங்கரன், நாராயணன், முருகன் என்பன போன்ற பல திருநாமங்களாக வெளியிட்டுள்ளனர். அவற்றை நாம் உறுதியாகப் பற்றிக் கொண்டால் அந்த ஓசைக்கு அடிப்படையாகவுள்ள பற்றற்ற வனாகிய மூலப்பொருளை அறிந்துகொள்ளவல்லவரா கின்றோம். 'கோவிந்தா' என்ற பெயர் திரௌபதியின் புடவை சுரக்கக் காரணமாக அமைந்தது என்பதை ஈண்டு நினைத்தல் தகும்.

**'சங்கரன்'** என்பது அவனுக்கு அமைந்த பொருள் களுள் ஒன்று. நலத்தைச் செய்பவன் என்பது அதன் பொருள். இதனைத் திரும்பத்திரும்ப உச்சரித்தால் நலத்தைச் செய்யும் பாங்கு நமக்கே வந்து விடுகின்றது. **'சுயம்பு'** என்பது அவனுக்கு அமைந்துள்ள மற்றொரு பெயர் தானாகத் தோன்றியவன் என்பது அதன் பொருள், கடவுள் எல்லா உயிர்கட்கும் சுகம் அளிப்பவர். இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டது **'சம்பு'** என்ற சொல். இறைவனுக்கு அமைந்துள்ள பெயர்கள் யாவும் அவனுடைய மகிமைகளை விளக்குவதற் கென்றே அமைந்தவை. அத்தகைய பெயர்களைக்கொண்டு அவனை அழைக்கின்ற பொழுதெல்லாம் அவனுடைய மகிமைகளையே நமது மனத்தகத்து அமைத்துக் கொள்ளு கின்றோம். மனத்தகத்து அழுக்கில்லாத மவுனமோன ஞானிகள் இவ்வாறு தான் அமைத்துக் கொண்டிருந்தனர். இக்கோட்பாட்டையே **தாயுமானவர் 'சங்கர சுயம்புவே சம்புவே'** என இயம்புகின்றார்.

இறைவனைக் கூவியழைக்கின்ற பாங்கிலும் பல நிலைகள் உண்டு. இயந்திரம்போல் ஓதினாலும் சிறுபயன் உண்டு. உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து, ஓதினால் பெரும் பயன் உண்டு. உணர்ச்சியைப் பன்மடங்கு வலிவுடைய

தாக்கும் ஆற்றல் மனிதனுக்கு உண்டு, உணர்ச்சி மிக மேலான நிலைக்குப் போய்விட்டால் நாக்கு குளறத் தொடங்குகின்றது; சொல்லே தெளிவற்றதாய் விடுகின்றது. எனினும் உள்ளத்தை அவ்வுணர்வு ஆழ்ந்து பற்றிப் பிடிக்கின்றது. இத்தகைய பேருணர்வுநிலையிலிருந்து நா குளறிக்கொண்டு சொல்லுகிற இடத்து அது மிகப் பெரிய போற்றுதலாகமாறி விடுகின்றது. மொழி தழுதழுத்திடல் என்பது நாகுளறுதலுக்கு அமைந்த மற்றொரு சொற்றொடர். போற்றப்படும் பொருளிடத்து ஒன்று படும் நிலை 'வணங்குதல்' ஆகும். இக்கருத்தைச் சங்கரசயம்புவே சம்புவே **எனவும் மொழி தழுதழுத்திட**' என்று இயம்புவர் அந்த ஞானச் செல்வர்.

ஆறு ஓயாது போய்க் கொண்டிருப்பதுபோல் மனிதனும் ஓயாது போய்க் கொண்டிருக்கின்றான். தான் போய்க் கொண்டிருப்பது மனிதனுக்கு விளங்குவது இல்லை. ஓயாது போய்க் கொண்டிருக்கும் பூமி இருந்த இடத்திலே இருப்பது போன்று தென்படுகின்றது. பூமி இடம் மாறிப்போய்க் கொண்டிருந்தாலும் நிலைமாறிப் போய்விடுவதில்லை. மனிதர் இருந்த இடத்திலே இருக்கலாம். ஆனால் அவன் ஓயாது நிலை மாறிப் போய்க் கொண்டிருக்கலாம். ஓடுகின்ற ஓடை உயிர்களுக்கும் பயிர்களுக்கும் வளத்தை வழங்கிக் கொண்டு ஓடுமானால் நீரோடைக்கு அது சன்மார்க்க மாகின்றது. நிலைமாறிப் போய்க் கொண்டிருக்கின்ற மனிதன் உயர்ந்த நிலைக்குப் போய்க் கொண்டிருப்பானானால் அது சன்மார்க்க நெறி. இந்நெறி '**சத்**' என்ற பொருளை நோக்கிப் போயிருப்ப தாகப் பொருள்படுகின்றது. கடவுள் ஒருவரே **சத்** பொருள். அவரே மெய்ப்பொருள் என்றும் வழங்கப்பெறுகின்றார்; முறையாகக் கடவுளை வணங்குபவர்கள் யாவரும் சன்மார்க் கத்தில் போய்க் கொண்டிருப்பவர்கள். "**பெருநெறி பிடித் தொழுகவேண்டும்**" என்று வள்ளல் பெருமான் குறிப்பிடுவ

தும் இதுவேயாகும். **தாயுமான அடிகள்** இதனையே '**சன் மார்க்க நெறி**' என்று சாற்றுவர். இனி அவர் கூறுவனவற்றைச் சேர்த்து நோக்குவோம்.

"அங்கையொடு மலர்தூவி அங்கமது புளகிப்ப
அன்பினால் உருகிவிழிநீர்
ஆறாக வாராத முத்தியின தாவேச
ஆசைக் கடற்குள் மூழ்கிச்

சங்கர சுயம்புவே சம்புவே எனவும்மொழி
தழுதழுத் திடவணங்கும்
சன்மார்க்க நெறி"[3]

என்று அடிகளார் கூறும் இந்நெறியே இறைவனை வணங்கும் நெறி. இந்நெறியில் நிற்பவர்கள் ஆலயவழிபாடு, பூசைமுறை கள், பூசைவிதிமுறைகள் இவற்றை அறிந்து கொண்டு அவற்றின்படி ஒழுக வேண்டும்.

## (2) ஆலயவழிபாடு

அழகு ஒரு தத்துவம். எங்கெங்கெல்லாம் அழகு பொலிகின்றதோ அங்கங்கெல்லாம் இறைவன் உள்ளான். இயற்கை முழுவதிலும் அமைந்துள்ள அழகு நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்வதாக உள்ளது. மனத்தில் மேலான எண்ணத்தை எழுப்புவதற்கு இத்தகைய அழகு பயன்படு கின்றது. உயர்ந்த எண்ணங்கள் மனத்தில் உதிப்பதற்கும் அவற்றைச் சிந்திப்பதற்கும் அழகிய இடங்கள் பெரிதும் பயன்பட்டு வந்துள்ளன. ஓர் இடத்தில் உதித்த உயர்ந்த எண்ணம் பிறகு அந்த இடத்திற்கே புதிய அருள் சக்தியை நல்குகின்றது. உயர்ந்த எண்ணம் அழிவற்றது என்பதும் ஆன்றோர்கள் துணிபு. அவர்கள் எண்ணிய உயர்ந்த

3. தா. பா- சின்மயானந்த குரு - 1

எண்ணங்களும் இயற்கையின் பொலிவும் ஒன்று சேர்ந்து ஓர் இடத்தைப் புண்ணியத் தலமாக்குகின்றன. புண்ணியத் தலத்திற்கு மூலமகிமை இங்ஙனம் அமைகின்றது.

தவசிகளும் முனிவர்களும் பல காலங்களில் பல இடங்களில் வசித்து வந்துள்ளனர் என்பது வரலாறு. அன்னவர்களின் சிந்தனையில் உயர்ந்த எண்ணங்கள் ஓயாது உதித்து வந்தன. இந்த எண்ணங்களின் வலிவால் அவர்கள் உதித்த இடங்கள் புண்ணியத் திருக்கோயில்களாகி விட்டன. உயர்ந்த கருத்துகளைத் தம் மனத்திலே வளர்க்க முயலுகின்றவர்கள் இப்புண்ணியத் தலங்களை நன்கு பயன்படுத்திக் கொள்ளலாம். ஆன்மசாதனத்தில் மேனிலைக்குப் போகமுயல்பவர்கட்கு இத்தலங்கள் முற்றிலும் அனுகூலமான சூழ்நிலையாக அமைகின்றன. சாதகர்கள் எண்ணும் மேலான எண்ணங்கட்குத் தலங்கள் என்னும் சூழ்நிலைகள் மேலும் துணைபுரிகின்றன. இந்தக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டே நம் நாட்டில் புண்ணியத் திருக்கோயில்கள் பல தோன்றியுள்ளன. நாயன்மார்கள் பாடல்பெற்ற தலங்கட்கும் ஆழ்வார்களின் பாசுரங்களால் மங்களாசாசனம் பெற்ற தலங்கட்கும் என்றென்றும் மறையாத பெருமையும் மகிமையும் வந்தமைகின்றன.

**பண்டையநிலை:** வேதகாலத்தில் திருக்கோயில்கள் இருந்ததில்லை. சங்க காலத்திலும் அவை இருந்ததில்லை. இயற்கையின் சூழ்நிலையே வழிபாட்டிற்குரிய இடங்களாயின, வேள்வித் தீயின் மூலம் வழிபாடு பெரிதும் இருந்துவந்தது. '**பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி**' என்ற பெயரே சங்ககாலத்திலும் இவ்வழக்கு நிலை பெற்றிருந்தது என்பதற்குச் சான்றாக அமைகின்றது.

சங்ககாலத்தில் நதிக்கரையிலும் மரச்சோலைகளிலும் தெய்வ வழிபாடு நிகழ்ந்து வந்தது. பண்டைய இலக்கியமாகிய பரிபாடலில்,

ஆலமும் கடம்பும், நல்யாற்று நடுவும்
கால்வழக் கறுநிலைக் குன்றமும் பிறவும்
அவ்வவை மேய வேறுவேறு பெயரோய்
எவ்வயி னோயும் நீயே.[4]

என்பதில் திருமால் ஆலம், கடம்பு ஆற்றிடைக் குறை[5] குன்றம் முதலிய இடங்களில் வேறு வேறு பெயரையுடையவராக எழுந்தருளியிருப்பதாகக் கூறப்பெற்றிருத்தல் இக் கருத்திற்கு அரணாக அமைகின்றது, நாளடைவில் இத்தகைய விருட்சங்கள் தல விருட்சங்களாயின என்பது அறியத்தக்கது.

**இடைக்கால நிலை:** நம் நாட்டிலுள்ள பெரிய கோயில்கள் யாவும் இடைக்காலத்தில் ஏற்பட்டவை. இவை ஆகமத்தின் அடிப்படையில் கட்டப்பெற்றவை. மலையைக் குடைந்தும் ஆலயங்கள் அமைந்தன. இவை **'குடைவரைக்கோயில்'** என்ற பெயரால் வழங்கின. இங்ஙனம் அமைந்த கோயில்கள் மானுடசரீரம் என்னும் ஆலயத்தின் புறச் சின்னமாகும். மானுட சரீரமே ஆலயங்களுள் மிகச் சிறந்தது என்பதை எல்லாக் காலத்திலும் ஆன்றோர்களால் ஆங்கீகரிக்கப் பெற்றுள்ளது. அண்டமெங்கும் 'அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்' குடிகொண்டிருக்கும் தெய்வம் சிறப்பாக மானுட உடலில் வீற்றிருக்கின்றது என்பது ஆற்றோர் வகுத்த கோட்பாடு.

உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே.[6]

4. பரிபாடல்-41 அடி. 67-70
5. இதற்கு எடுத்துக்காட்டு 'கோயில்' எனப்படும் திருவரங்கம். பின்னர்தான் கோயில் அமைந்திருக்க வேண்டும்.
6. திருமந்திரம் - மூன்றாம் தந்திரம் - காயசித்தி உபாயம் - 2

என்ற திருமூலரின் திருவாக்கும் இதற்குச் சான்றாக அமைகின்றது. இவரே உடம்பை வளர்ப்பது உயிர்வளர்ப்பதற்கு ஒப்பாகும் என்றும் மொழிந்துள்ளார்.[7]

இவண் குறிப்பிட்டுள்ள தத்துவக்கருத்தினை பாமர மக்கள் அறிந்து கொள்ள முடியாது. இவர்கள் அறிந்து கொள்வதன்பொருட்டே திருக்கோயில்கள் அமைக்கப் பெற்றுள்ளன. ஆகமங்களில் விதித்துள்ளபடியே அவை அமைக்கப் பெற்றுள்ளன. ஆலயம் ஒன்று உடல் என்னும், ஆலயத்தின் புறச்சின்னமாகும். மூலஅமைப்பாகிய உடலிலுள்ள தத்துவங்களுக்கு அஃது ஒத்திருக்குமாறு அமைக்கப் பெற்றுள்ளது. இந்த ஆலயங்கள் மூலம் நம் உடல் அமைப்பிலுள்ள மகிமைகளை மேலும் தெளிவாக அமைத்து கொள்ளலாம். தேசப்படத்தைக் கொண்டு தேசத்தை நன்கு அறிந்து கொள்வதுபோலவே திருக்கோயிலின் துணைகொண்டு நமக்கு இயல்பாக அமைந்துள்ள உடல் என்னும் ஆலயத்தின் தத்துவங்களை நாம் அறிந்து கொள்ள முடியும். அந்த அமைப்பிலிருந்து நாம் அறிந்து கொள்ளும் அறிவிற்கு ஏற்ப நம் வாழ்க்கையைத் திருத்தி அமைத்துக் கொள்ளலாம்.

**திருக்கோயிலின் அமைப்பு:** பெரிய சுற்று (பிராகாரம்) ஒன்று எடுத்து அதற்கு வாயில் ஒன்று அமைக்கப்பெறுகின்றது. அந்த வாயிலுக்கு மேலே உயர்ந்த கோபுரம் ஒன்று அமைகின்றது. அஃது உள்ளிருக்கும் கோபுரங்களைவிட உயர்ந்ததாக இருப்பதால் அஃது **இராசகோபுரம்** என வழங்கப் பெறுகின்றது. நெடுந்தொலைவிலிருந்தும் இதனைக் காணலாம். சில திருக்கோயில்களில் (எ–டு. மதுரை சொக்கலிங்கம்–மீனாட்சி திருக்கோயில்) நான்கு திக்கிலும் நான்கு வாயில்கள் அமைத்து நான்கு **இராசகோபுரங்கள்** எழுப்பப் பெற்றுள்ளன.

7. திருமந்திரம் - மூன்றாம் தந்திரம் - காயசித்தி உபாயம் - 1

இராசகோபுரத்தைத் '**தூல இலிங்கம்**' என்று குறிப்பிடுவதும உண்டு. கண்ணுக்கு அது புலப்படும்பொழுது அதனையே தெய்வ சொரூபமாகக் கருதி வணங்குவது முறை. தொலைவி லிருப்பவர்கட்கும் இறைவனைப்பற்றி நினைவூட்டுவதற்கே இந்த அமைப்பு ஏற்பட்டுள்ளது என்றும் கருதலாம். '**கோபுர தரிசனம் கோடிபுண்ணியம்**' என்ற பழமொழியையும் நினைவுகூரலாம்.

**கோபுரக்காட்சி:** இராசகோபுரத்திற்கு அருகில் வந்து அதன் அமைப்பை உற்று நோக்கினால் அதிசயிக்கத்தக்க பல உண்மைகள் புலனாகும். கணக்கற்ற வடிவங்களை அங்குக் காணலாம். விதவிதமான வாழ்க்கை முறைகளை அவை விளக்குவனவாக அமைகின்றன. தேவர்கள், மனிதர்கள், விலங்குகள், பறவைகள், ஏனைய சிற்றுயிர்கள் அங்கு இடம்பெற்று இந்த அகிலத்திற்குக் குறியீடாக அமைகின்றன; உருவகமாக விளக்குகின்றது.

இராசகோபுரத்தில் அருவருக்கத்தக்க சில வடிவங்களும் அமைந்திருப்பதைக் காணலாம். நாகரிகமான பண்புகளுக்கு இவை அறிகுறிகள் ஆகா. மனத்தில் மேலான கருத்துகளைத் தோற்றுவிப்பதற்கும் இவை துணைபுரியா. இந்த அமைப்புக் குக் காரணமும் உண்டு. இயற்கையின் நடைமுறை புறச் சின்னம் அல்லவா? நாகரிகம் அநாகரிகம் ஆகிய இரண்டும் இயற்கையில் இடம் பெற்றுள்ளனவன்றோ? பாராட்டத்தக்க பெருவாழ்வும் பழிக்கத்தக்க சிற்றியல்பும் சிறுசெயல்களும் இயற்கையில் இடம் பெற்றுள்ளன என்பதைச் சுட்டிக்காட்டவே இந்தக் கோபுரம் அமைந்துள்ளது என்பது அறியப்படும்.

**கோபுர வாயில்கள்:** வாழ்க்கையின் குறிக்கோளை விளக்குவதாகவும் இந்தக் கோபுரம் அமைந்துள்ளது. இராச கோபுரத்தின் வாயில்கள் பொதுவாக ஒற்றைப்படையில்தான்;

அமைந்திருக்கும். இத்தகைய வாயில்கள் தத்துவத்திற்கு விளக்கமாகவும் அமைந்துள்ளன. **மூன்று**வாயில்கள் உள்ள கோபுரம் **சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி** என்ற மூன்று அவத்தைகளைக் குறிக்கின்றன. **ஐந்து** வாயில்கள் உள்ள கோபுரம் **ஐம்பொறிகட்குக் குறியீடாக** அமைந்துள்ளது. **ஏழு** வாயில்கள் உள்ள கோபுரத்தில் **மனம், புத்தி** என்னும் இரண்டு தத்துவங்கள் சேர்க்கப்பெறுகின்றன. **ஒன்பது** உள்ள இடத்து **சித்தம், அகங்காரம்** என்னும் மேலும் இரண்டு தத்துவங்கள் சேர்கின்றன. இங்ஙனம் நமது உடல் அமைப்பில் உ ்ள வெவ் வேறு தத்துவங்களுக்குக் கோபுரவாயில்கள் சின்னங்களாக அமைந்துள்ளன என்பது ஈண்டு அறியப்படும்.

மேற்குறிப்பிட்ட வாயில்களுள் தரைமட்டத்திலுள்ள ஒருவாயில்தான் கோயிலினுள் செல்வதற்கு உதவுகின்றது. ஏனைய வாயில்கள் அமைக்கப்பெற்றிருந்தும் அவை ஆலயத் தினுள் புகுவதற்குப் பயன்படுவதில்லை. இதன்மூலம் நமக்கு ஒரு கருத்து புகட்டப்பெறுகின்றது. அக் கருத்து யாது? புறக் கரணங்களும் அந்தக்கரணங்கள் பலவும் நம்மிடம் இருப்பி னும் இறைவன் நாட்டம் கொள்ளும்பொழுது மனம் என்ற ஒரு கரணமே நமக்குப் பயன்படுகின்றது. ஏனைய கரணங்களை யெல்லாம் அவ் அவற்றின் நிலையிலே வைத்து விட்டு மனம் இறைவனை நாடி உள்முகமாகப் போக வேண்டும் என்பது கோட்பாடு. ஐம்பொறிகளைக் கொண்டும் மனம் புத்தி முதலிய வற்றைக் கொண்டும் புற உலகை அறிகின்றோம். புற உலகை அறிகின்ற செயலை அப்படியே நிறுத்தி வைத்துவிட்டு மனத்தைத் துணையாகக் கொண்டு பரம்பொருளினிடத்து உள் முகமாகப் பயணம் போகவேண்டும் என்னும் கோட்பாட்டை இராசகோபுர வாயிலினுள் செல்லும் நுழைவு விளக்கிக் காட்டுகின்றது

**தேர்த்திருவிழா:** ஒவ்வோர் ஆலயத்தோடும் சம்பந்தப் பட்டதாக இருப்பது தேர்த்திருவிழா என்பது ஒன்று. ஆலயம் என்னும் சின்னத்தின் மற்றொரு பகுதியாக இஃது அமைந் திருப்பது. '**ஓடுதல்**' என்னும் செயலில் தேர் உடல் தத்து வத்தை நன்கு விளக்குவது. உடலைத் தேர் என்றும் அதன் உள்ளிருக்கும் ஆன்மாவை **கதி** அல்லது **ஊர்ந்து செல்லுப வன்** என்றும் கருதவேண்டும் என்பது ஞான சாத்திரங்கள் புகட்டும் உண்மை. உடலிலுள்ள இயல்புகளையெல்லாம் தேரில் அமைப்பதும் வழக்கமாக இருந்து வருகின்றது. ஒன்று நிலைத்து நிற்கும் சின்னம். மற்றது இயங்குகின்ற சின்னம். இவற்றின் மூலம் விளக்கப்பெறும் கருத்து ஒன்றே என்பது உணரப்படும்.

**பலிபீடம்:** இராசகோபுரத்தை அடுத்து நம் கண்ணில் விழுவது **பலிபீடம்**. அதன் அருகில் சென்று வீழ்ந்து வணங்குதல் மரபு. வீழ்ந்து வணங்கும் பொழுது மனிதன் "தனது கீழான இயல்புகள் அனைத்தும் அந்த இடத்தில் பலிகொடுக்கப் பெற்றன; இனி அவை தன்னை எடுப்பதற்கு வாய்ப்பு இல்லை'' என்று ஆழ்ந்து எண்ணுதல் வேண்டும் மேன்மையும் மேலான எண்ணமும் எஞ்சியுள்ளன என்னும் எண்ணத்துடன் எழுந்திருத்தல் வேண்டும். இந்த எண்ணத்தின் வலிவு அவன் புதிய தொரு பிறவி எடுத்துக் கொண்டதற்குச் சமமாகின்றது. புதிதாக வருவித்துக் கொண்டுள்ள மேலான மனப்பான்மையை இனி இந்த தெய்வத்திற்குரியதாக மாற்றி விடுதல் வேண்டும். திருக்கோயிலினுள் வலம்வருதல் இதன் குறியீடாக அமைந்தன்று.

**வலம் வருதல்:** 'பக்தன் வலம் வரவேண்டிய முறையை அடுத்த நிலையிலிருக்கும் கொடிக் கம்பம் விளக்கு கின்றது. திருக்கோயிலைச் சுற்றி வலம் வருங்கால் உள்ளிருக்

கும் இறைவன் தன் வலப்புறம் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுகின்றான் பக்தன். இதுவே 'வலம் வருதல்' என்பதன் பொருள். இது பிராணாயாமத்தின் சின்னமுமாகும். ஒழுங்கு பட்ட மேலான மனம் பிராணாயாமத்திற்குத் தகுதியுடையதா கின்றது. மனத்தகத்து உண்டாகும் மாறுதலுக்கு ஏற்ப சுவாசிக் கின்ற காற்றில் வேறுபாடு உண்டாகின்றது. ~~கீழான~~ மனப் பான்மையுடையவர்க்கு சுவாசத்தின் போக்குவரவு அல்லது பிராணாயாமம் முறையாக நிகழ்கின்றது. தங்கு தடையின்றி அமைதியாக வலம் வரும்போது பிராணாயாமமும் ஒழுங்காக நிகழ்ந்து விடுகின்றது. சூக்குமமாக உடலின்கண் நிகழும் நிகழ்ச்சி பிராணாயாமம் என்பதும், வலம் வருதல் என்னும் உடலின் தூலமான செயல் அதன் புறச்சின்னமாக அமை கின்றது என்பதும் தெரிந்து தெளியத் தக்கவை.

**நந்தி:** கொடிமரத்திற்கு அடுத்த நிலையில் இருப்பது இறைவனது வாகனமாகிய நந்தியம்பெருமான்.[8] வாகனம் எதுவாயினும் அது சீவான்மாவைக் குறிக்கின்றது. மூலப் பொருளாகிய இறைவனை நோக்கியே இருக்குமாறு வாகனம் அமைந்திருக்கும். பதியை அடையவேண்டியது பசுவின் குறிக்கோள். பதியைச் சென்றடைவதற்கு எல்லாக் காலத்திலும் மனம் இறைவன் நாட்டத்திலேயே இருத்தல் வேண்டும் என்னும் கோட்பாட்டை வாகனம் விளக்கிக் கொண்டுள்ளது. திருச்சுற்றில் நடந்து வரும் பக்தன் திருக்கோவிலினுள்ளிருக் கும் இறைவனையும் அவனைப் பார்த்தவண்ணம் இருக்கும் வாகனத்தையும் சேர்த்துவைத்தே பக்தன் வலம் வருகின்றான். குறுக்கே நுழைவதும் முறையன்று. வழிபடுகின்ற அனைவர்க் கும் இடைஞ்சலாக இராமல் உதவி செய்ய வேண்டும் என்பது இதன் உட்கருத்து. பிறர் வழிபாட்டிற்கு இடையூறு விளைவிப்பவன் இறைவழிபாட்டிற்குப் புறம்பாய் விடுகின்

8. ஒவ்வொரு கடவுளுக்கும் தனித் தனி வாகனம் உண்டு

றான் பக்தன். பிறர் வழிபாட்டிற்கு வேண்டிய வசதிகள் செய்பவன் வழிபாட்டில் முன்னேற்றமடைகின்றான். இவை கருத்தில் இருத்தவேண்டியவை.

**கருவறை:** கோவிலின் கருவறை இருள் சூழ்ந்துள்ளது. காற்றுக்கும் கதிரவன் ஒளிக்கும் அங்கு இடம் இல்லை. இவற்றிற்கெல்லாம் ஆகமவிதிகள் இடம் தருவதில்லை என்பர் கோயிலை நிறுவும் ஸ்தபதிகள். நமது உடலமைப்பின் புறச் சின்னமாக அமைந்துள்ளது கருவறை. கருவி கரணங்களை ஒடுக்கி மனத்தை உள்முகமாகத் திருப்பினால் உண்டாகும் அநுபவத்திற்குச் சின்னமாக அமைந்திருப்பது கருவறை யாகும். கண்மூடியிருக்கும்பொழுது உடலுக்குள்ளே இருக்கும் நம் நெஞ்சத்துள் காணப்படுவது ஒரே இருள் மயம். புறஉலகி லிருந்து ஆன்மஒளி வருவதில்லை. தரிசனத்திற்காகப் பக்தன் திருக்கோயிலில் காண்பவை: முதலில் திரை மூடப்பெறு கின்றது. சிறிது நேரத்தில் மணி ஒலி நம் செவியில் படுகின்றது. விரைவில் தரிசனம் கிட்டும் என்று பக்தன் ஆர்வத்துடன் எதிர் நோக்கியுள்ளான். திரை நீங்குகின்றது. உள்ளே கர்ப்பூர ஆராதனை காட்டப்பெறுகின்றது. அதன் ஒளியில் பக்தன் தெய்வத்தின் திருமேனியைக் காண்கின்றான். திருமேனி என்ற எண்ணம் அவன் மனத்தில் எழுவதில்லை. இறைவனையே தரிசிப்பதாக உணர்கின்றான்.

மேலே காட்டிய காட்சி மனதுக்குள் நிகழவேண்டிய ஞானக்காட்சியின் புறத்தோற்றமாகும் இது. மனத்தினுள் சிந்தை யைச் செலுத்தும் ஆன்மசாதகன் (பக்தன்) கார் இருளையே தன்னுள் காண்கின்றான். ஆயினும், மனத்தை உள்முகத்தில் வைத்திருக்கப் பழக வேண்டும் (இதுவே தியானம் என்பது). இந்தப் பழக்கம் உறுதிப்பட நெடுங்காலம் ஆகும். பழகுபவ னுக்கு ஓர் அற்புதமான அநுபவமும் கிட்டும். தனது உள்ளத்

தினுள்ளே ஒருவித இனிய ஓசையைக் கேட்பான்; புகை போன்றும், மின்மினிப் பூச்சிகளின் நடமாட்டம் போன்றும் சிலகாட்சிகள் தன்னுள் தென்படுவதைக் காண்பான். ஒலி ஒளி ஆகிய இரண்டும் மனத்தில் உதிப்பது சாதகன் தன் சாதனை யில் முன்னேறி வருவதன் அறிகுறியாகும். இறுதியில் மனத்தின் அஞ்ஞானத் திரை நீங்குவதை அறிகின்றான். ஞான ஒளியின் தரிசனம் கிட்டுவதை உணர்கின்றான். அந்த ஞானமும் ஆன்ம சொரூபமும் ஒன்றேயாகும். இங்ஙனம் மனத்தகத்து உண்டாகின்ற ஆன்ம தரிசனத்துக்குப் புறச் சின்னமாக அமைந்திருப்பதே இந்த ஆலய தரிசனம். மாந்தருக்குத் தக்கவாறு அதை மாற்றியமைப்பதற்கு ஆகம சாத்திரம் இடம் தருவதில்லை. வேண்டுமானால் நம் விருப்பப்படி மாற்றி அமைத்துக் கொள்ளலாம். ஆனால் அஃது ஆன்மதரிசனத்தின் புறச் சின்னமாகாது.

**மனநிலை:** ஆலயவழிபாட்டிற்குச் செல்லும் பக்தனின் மனநிலை எப்படியிருக்க வேண்டும்? மனம், மொழி, மெய் ஆகிய திரிகரண சுத்தியுடன் ஆலயத்திற்குப் போக வேண்டும் என்பது கோட்பாடு. ஆலயத்திற்குள் நுழையும் பொழுதே உலகவிவகாரங்களை ஒதுக்கி வைத்துவிட வேண்டும். இறைவனைப்பற்றிய சித்தனையே சித்தமிசை குடி கொண்டிருக்கச் செய்து கொள்ள வேண்டும். பதைபதைப் புக்கோ வேகம் நிறைந்த நடமாட்டத்திற்கோ ஆங்கு இடம் இல்லை. அமைதியும் சாந்தமும் வடிவெடுத்தவனாக வழி படுபவன் ஆகிவிடுகின்றான். திருக்கோயிலுக்குள் கூச்சலிட் டுப் பேசுவோர் வழிபடுபவர் ஆகார். இவர்கள் திருக் கோயிலின் புனிதத் தன்மையையும் ஒருவகையில் பாழ்படுத்து கின்றனர். ஒருவரோடொருவர் பேசாதிருந்து வழிபாடு முடித்தானபிறகு ஓர் இடத்தில் அமைதியாக அமர்ந்திருந்து தியானம் செய்வது முற்றிலும் இன்றியமையாதது. பல

பெரியோர்கள் ஆழ்ந்து எண்ணிய எண்ணங்கள் நிறையப் பெற்ற இடம் ஆலயம். அதனை வழிபடுபவன் அமைதியுற்று அமர்ந்திருப்பானாகில் அந்த உயர்ந்த எண்ணங்கள் அவன் மனத்தில் பிரதிபலிக்கும். அதுவே ஆலயவழிபாட்டினால் அவன் அடையும் பெரும் பேறாகும். எத்தனை பேர் ஆலயத்துக்குள் வந்து வணங்குகின்றார்களோ அதற்கேற்ப ஆலயத்தினுள் ஏற்கெனவே அமைந்துள்ளன அருள் பன் மடங்கு பெரிதாகின்றது. அருளைத் தானே அடைவதன்மூலம் ஆலயத்தின்கண் அன்பன் அதனைப் பெறுகின்றான். ஆலயவழிபாட்டின் ஒப்பற்ற பயன் இதுவேயாகும்.

## (3) பூசை முறைகள்

திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் தெய்வத்திற்குப் பலவிதமான உபசாரங்களுடன் ஆராதனை நடைபெறுகின்றது. இத்தகைய ஆராதனைகள் யாவும் ஆன்மசாதகன் – பக்தன்– அடைந்து வரும் மனப்பரிபாகத்தின் புறச்செயல்களாகும். ஆராதனை செய்கின்றவர்கள் சதாசாரமே வடிவெடுத்தவர் களாக இருத்தல் வேண்டும். நல்லொழுக்கம் அவர்களிடம் ஓங்குமாயின் வழிபாடும் மேம்பாடுடையதாகின்றது.

**அபிடேகம்:** தெய்வத்தின் திருமுழுக்கு (அபிடேகம்) நன் மனத்தில் அன்பை வளர்ப்பதற்கான அறிகுறியாகவே புறத்தே நிகழும் செயலாகும். நீராடியபின் நாம் உள்ளத் தெளிவை அடைவதை அநுபவித்தால் அறிகின்றோம். பால், தயிர், நெய் பஞ்சாமிர்தம் முதலியவற்றைச் சொரிந்தும் அபிடேகம் செய்வது வழக்கம். இவை யாவும் உடலை வளர்ப்பதற்கு ஏற்ற நல்லுணவு. நல்லுணவு படைத்து உடலை வளர்ப்பது போன்று நல்லெண்ணங்களை எண்ணி உள்ளத்தை வளர்க்க வேண்டும் என்பது கோட்பாடு. எண்ணத்திற்கேற்ப

உள்ளத்தில் உயர்வும் தாழ்வும் ஏற்படுகின்றன. வள்ளுவப் பெருந்தகையும் '**உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்**'[9] என்று கூறிப்போந்தார். நல்லெண்ணத்தை வளர்ப்பதே ஆலயவழி பாட்டின் உயிரிய நோக்கம் என்பது அறியப்படும்.

**அலங்காரம்:** மூர்த்தியை முழுக்காட்டிய பிறகு அவரை ஆடை ஆபரணங்களாலும் அலங்கரிக்கின்றோம். நம் உடல் வாழ்க்கையை எங்ஙனம் ஓம்புகின்றோமோ அதே கோட்பாட்டைத் தெய்வத்தின்கண் காண அன்பர்கள் முயலுகின்றனர் என்பது கோட்பாடு; தெய்வத்திற்கு உணவும் உடையும் தேவையானவை அன்று என்பதையும், இவை அனைத்தையும் கடந்த நிலையில் இருப்பது பரம்பொருள் என்பதையும் நாம் அறிவோம். ஆனால் இவற்றையெல்லாம் ஏற்று அங்கீகரித்து மகிழ்வுற்றிருக்கும் மூர்த்தியாக பக்தன் தெய்வத்தைப் பற்றிக் கருதுகின்றான்.[10] அதன்மூலம் அவனது மனம் மகிழ்ச்சி அடைகின்றது. இதுவே ஆலய வழிபாட்டின் பயனாகும்.

**நைவேத்தியம்:** மூர்த்திக்கு அலங்காரம் ஆனபிறகு அவருக்கு இனிய உணவு நைவேத்தியமாகப் படைக்கப் பெறுகின்றது. இறைவன் இதனை அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளுகின்றான் என்றே அன்பன் உணர்கின்றான். ஆன்மசாதனத்தில் முன்னேற்றமடைகிறவர்கள் உணவை நைவேத்தியமாகப் படைப்பதால் பொருள்மிக உண்டு என்று உறுதி கூறுகின்றனர். இதற்கு ஆலயவழிபாடு செய்து வந்த இராமகிருட்டிணரே சிறந்த சான்றாக அமைகின்றார். அன்புடன் ஆண்டவனுக்குப் படைக்கப்பெறும் நைவேத்தி

9. குறள்-536
10. நம்பியாண்டார் நம்பி பொல்லாப்பிள்ளையாருக்கு மோதகம் வைத்து வணங்கியதும், பிள்ளையார் அதனை ஏற்றுக் கொண்டதும் நினைவுகூரத்தக்கவை

யத்தை மூர்த்தியிடமிருந்து **'அருட்சோதி'** ஒன்று கிளம்பி அதனைத் தொடுவதாக ஐதிகம். அத்தகைய அருள் தொட்ட பிறகு அது பிரசாதமாகின்றது. ஈசுவரப் பிரசாதமாக பக்தன் அதனை ஏற்றுக் கொள்ளும் பொழுது அவனுடைய அந்தக் கரணத் தூய்மைக்கு அது பேருதவி புரிகின்றது என்பது கோட்பாடு. திருக்கோயிலுக்குச் செல்லுகின்றவர்கள் வெறுங் கையோடு செல்லாகாது என்று பெருவழக்காக இன்றளவும் இருந்து வருவதை நினைவுகூரலாம்.[11]

**விளையும் நலன்:** நமக்கு விருப்பமான பொருள் களைத் தெய்வத்திற்குப் படைப்பதால் நலன் ஒன்று நமக்கு விளைகின்றது. இறைவனுக்குப் படைக்காமல் நாம் உண்ப தில்லை என்ற கொள்கையால் உணவுப் பொருள்மீது நாம் வைத்திருக்கும் பற்றுதல் குறைகின்றது. இறைவனுக்குப் படைக்கப் பெறும் உணவு தூய உணவாக மாற்றப் பெறுகின்றது. அஃது ஈசுவரப் பிரசாதமானபிறகு மற்றவர்கட்கெல்லாம் வழங்கியான பிறகே எஞ்சியிருக்கும் சிறு பகுதியை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். தெய்வத்தின் பெயரால் மன்னுயிர் களையெல்லாம் நம்முயிர் போன்று கருதும் மனப்பான்மையும் இதினின்றும் உண்டாகின்றது. எல்லா உயிர்களும் இறைவனுக் குச் சொந்தம். ஆதலால் எல்லாஉயிர்களையும் ஓம்புவதன் மூலம் இறைவன் நன்கு வழுத்தப்பெறுகின்றான். உணவு இல்லாது இறை வழிபாடு நிகழலாகாது என்பதன் கருத்து இதுவே. வள்ளல்பெருமான் இராமலிங்க அடிகள் உணர்த்தும் தத்துவமும் இஃதே என்பதை ஈண்டு நினைவுகூரலாம்.

மாந்தர்கள் சேகரிக்கும் உணவுப் பொருள்களில் பெரும் பகுதி ஆலயத்திற்கு வந்து விடுதல் முறை. திருக்கோயில்

11. இக்கோட்பாடு குழந்தைகளையும், பெரியோர்களையும் காணச் செல்லும்போதும் அநுட்டிக்கப் பெறுகின்றது.

களில் '**உண்டி**' வைக்கப்பெற்று அதில் மக்கள் பணம் போடும் வழக்கம் இருந்து வருகின்றது. இந்தப் பணம் இறைவன் பெயரால் பல காரியங்கட்குப் பயன்படுகின்றது. இறைவன் பெயரால் கொடுக்கப்படும் பொழுது கொடுக்கிறவனுக்குத் தான் '**கொடையாளி**' என்ற அகங்காரம் தோன்றாது. ஈசுவரப் பிரசாதமாக ஏற்கின்றவர்கட்கும் பிறரிடமிருந்து பொருளை ஏற்கின்றோம் என்ற தாழ்வு மனப்பான்மையும் தோன்றாது. கொடுப்பவரும் ஏற்பவரும் இறைவனுக்கு உரியவர்களாகி விடுகின்றனர். மனப்பான்மை மேன்மையடைவதற்குப் பொருளைக் கடவுளுக்கு நைவேத்தியமாகப் படைப்பதும், உண்டியில் போடுவதும் சிறந்த வழிபாடாகும்.

**தீப ஆராதனை:** திருக்கோயில்களில் நடைபெறும் கிரியைகள் யாவும் தத்துவத்தின் அடிப்படையில் அமைந்த வையாகும். தீப ஆராதனையை எடுத்துக் கொள்வோம். அஞ்ஞானம் என்னும் திரைநீக்கப் பெற்றவுடன் சோதிப் பிழம்பாகப் பல அடுக்குகள் கொண்ட அடுக்குத் தீபம் (அலங்காரத் தீபம்) ஏற்றி – இறக்கி – சுழற்றிக் – காட்டப் பெறுகின்றது. அஞ்ஞான இருளின்று ஞானபூமிக்குள் பிரவேசிக்கும் பக்தன் ஒரே ஒளிப்பிழம்பைக் காண்கிறான். அந்த ஒளிப்பிழம்பில் அவன் ஒன்றித்து விடுவதற்குச் சிறிது நேரமாகின்றது. பரம்பொருள் என்றைக்கும் அணையாத ஆன்மப் பிரகாசமாக உள்ளார். அடுக்குத்தீபத்தில் கணக்கற்ற விளக்குகள் உள்ளன. அதன் பிறகு காட்டப்பெறும் தீபங்கள் எண்ணிக்கையில் குறைந்து வருகின்றன. இறுதியாக ஒரு தீபத்தில் வந்து ஆராதனை முற்றுப் பெறுகின்றது.

**பிற ஆராதனைகள்:** இறைவன் ஆராதனையில் உலகினை அறிவதற்கு இறைவனால் வழங்கப்பெற்ற ஐம்பொறிகளும் இடம் பெறுகின்றன. இவை பரமனை

நுகர்வதற்கென்று பயன்படுத்துங்கால் அவை நல்ல ஆன்ம சாதனமாகின்றன. தெய்வ ஆராதனையில் **கண்கொண்டு** காண்பது **சோதி** சொரூபமான பரம்பொருள். இது மேலே காட்டப்பெற்றது. **காதால்** கேட்பது அவனிடத்திலிருந்து உண்டாகும் **நாதம்** ஓசை; அதற்குச் சின்னமாக மணியோசை யும் சங்கொலியும் அமைகின்றன. வேதம் ஓதுதல் ஆங்கு நிகழ்கின்றது. தேவாரம் – திருவாசகம் ஓதும் பாட்டொலியும் நம் காதில் விழுகின்றது. **மூக்கால்** நுகர்வது ஆராதனையோடு சம்பந்தப்பட்ட நறுமணங் கமழும் தூபமாகும். (சாம்பிராணிப் புகை). இறைவன்மீது சாத்தப்பெற்றுள்ள மலர்களின் நறுமண மும் மூக்குக்கு விருந்தாகின்றது. பரமனுக்குரிய மலர்மாலை நமக்கு வழங்கப்பெறும் போது **தொட்டுணர்ந்து** (நொப்புலம்) இன்புறுகின்றோம். **நாவால்** சுவைத்து மகிழ்வதற்கு அவ னுடைய பிரசாதம் வழங்கப் பெறுகின்றது. இங்ஙனம் ஐம்பொறிகளாலும் பரம்பொருள் நுகரப்பெறுகின்றார். இந்த நிகழ்ச்சியில் – பூசை முறைகளில் – ஆலயவழிபாடு – உச்ச நிலையை அடைந்து விடுகின்றது. உலகினை அறிவதற் கென்று அமைந்த பொறிகளைப் பரமனை அறிதற்கென்று **மடைமாற்றம்** செய்யப்பெறும்பொழுது அஃது உயர்ந்த நற்பழக்கமாக அமைந்து விடுகின்றது.

**தில்லை நடராசர் ஆலயம்:** திருக்கோயிலைப் பற்றிய விரிவான தத்துவம் தில்லையில் திரு நடனம் புரியும் நடராசர் ஆலயத்தில் அமைந்துள்ளது. உபாசனைக்குரிய மூர்த்தி யாகிய நடராசர் **நான்கு** தூண்களையுடைய ஒரு கொலு மண்டபத்தில் எழுந்தருளியுள்ளார். இந்த நான்கு தூண்களும் **நான்மறைகளின்** சின்னமாகும். இதற்குச் சற்று முன்பு **ஆறு** தூண்களையுடைய மண்டபம் உள்ளது. இவை **ஆறு** சாத்திரங்களின் சின்னமாகும். இதற்குச் சற்று வெளியே **பதினெட்டுத்** தூண்களையுடைய மண்டபம் உள்ளது. இவை

**பதினெண் புராணங்களின்** அறிகுறிகளாக அமைந்துள்ளன. நடராசரின் அருகில் செல்வதற்கு **ஐந்து** படிகளின்மேலே ஏறியாக வேண்டும். இவை சிவபெருமானின் திருநாமமாகிய **ஐந்தெழுத்தின்** (பஞ்சாட்சரம்) சின்னமாக அமைந்துள்ளன. நடராசரின் இடப்புறம் **சிவகாமி** அன்னையார் எழுந்தருளி யிருப்பதைக் காணலாம். வலப்புறம் '**சிதம்பர ரகசியம்**' அமைந்துள்ளது. இதிலும் மேலான கோட்பாடு புதைந்துள்ளது. **பராசக்தியின்** அருளால் நடராச மூர்த்தியாகிய பதியின் தரிசனம் கிட்டுகின்றது. பதி மனம் மொழியைக் கடந்து நிற்பதால் அஃது '**இரகசியம்**' என்று இயம்பப்பெறுகின்றது. சிதம்பரத்தில் நிகழும் **தீபாராதனை** இக்கோட்பாட்டை விளக்குகின்றது.

தரிசனத்திற்காக திருக்கோயிலுககுள் செல்லும் பக்தன் ஒருவன் கீழே விழுந்து தண்டம் சமர்ப்பிக்க விரும்புவானாகில் அதன் பொருட்டு அவன் ஒரு வாகனத்திற்குப் பின்புறமாக வந்துவிடவேண்டும். எல்லா வாகனங்களையும் தாண்டி உள்ளே சென்று பிறகு வீழ்ந்து வணங்குவதில்லை. சீவ போதத்தைக் கடந்தவன் பரம்பொருளில் ஒன்றாய் விடுகின் றான் என்பது இதன் அடிப்படைக் கருத்தாகும்.

## (4) பூசை விதிமுறைகள்

தெய்வத்தன்மை எய்துவதே தெய்வத்தை வணங்குவ தற்கு உபாயமாகின்றது. '**சார்ந்ததன் வண்ணமாதல்**' என்பது சித்தாந்தக் கொள்கை. ஒருவன் எதைப் போற்றுகின்றானோ அதுவாகவே அவன் ஆய்விடுகின்றான். முறைப்படி கல்வியைப் போற்றுபவன் கல்விமானாய்– கல்விக்கு இருப்பிட மாய் – விடுகின்றான். பலத்தை நாடி உடற்பயிற்சி செய்வபவன் பலவானாய் விடுகின்றான். முயற்சியாலும் முறைப்படி

தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்வதாலும் எதை வேண்டு மானாலும் மனிதன் பெறுதல் கூடும்.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.[12]

என்பது பொய்யாமொழி. தெய்வத்தை விதிப்படி வணங்குப வன் தெய்வத்தன்மையை எய்துகின்றான். மனிதனுக்கு உரிமை யல்லாத ஒன்றை அவன் அடைதல் முடியாது. தன்னிடத்து இல்லாத இயல்பை வருவித்துக் கொள்ளுதலும் சாத்தியமன்று. விரும்பியவாறும் விரும்பினபடியும் முயல்வதற்கு ஏற்றவாறு சிறுமை அல்லது பெருமை அவனை வந்தடைகின்றது.

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்[13]

என்பது வள்ளுவம். சிறுமையை அடைதல் எளிது. பெரு மையை அடைவதற்கோ தக்க விதிப்படி மிகப் பாடுபட வேண்டும்.

தெய்வத் தன்மை மனிதனுக்கு அன்னியமானதன்று. மேன்மைகள் அனைத்தும் அவனிடத்துப் பிரியாது அமைந்துள்ளன. மறைந்து கிடக்கும் அவற்றை மேலோங்கிச் செய்தல் வாழ்க்கையின் சீரிய நோக்கமாக இருத்தல் வேண்டும். உயர்தன்மை ஓங்க ஓங்க மனிதன் இறைவனுக்கு உகந்தவன் ஆகின்றான். இறைவனோடு உறவாடுவதற்கு உற்ற உபாயமும் இதுவேயாகும். தன்னைத் தான் பக்குவப்படுத்திக் கொள்வதன்மூலம் தெய்வத்தின் சந்நிதியைச் சார மனிதன் தகுந்தவனாகி விடுகின்றான்.

ஆலயங்களுள் சிறந்தது உடல். உயிருக்கு இருப்பிடம் உடல். உடலைக் கொண்டல்லாது உயிரை அறிய முடியாது.

12. குறள். 666 (வினைத் திட்பம்)
13. மேலது 505 (தெரிந்து தெளிதல்)

இருப்பிடத்தின்மூலம் உயிரின் உயர்வு வெளியாகின்றது. உயிர்கள் அனைத்திற்கும் பொதுவாகவும் ஆதாரமாகவும் இருப்பது எதுவோ அதுவே கடவுள்; பதி. ஆதலின் அஃது உயிருக்கு உயிர் என்று இயம்பப்படுகின்றது. பேரறிவுக்கும், அன்புக்கும், ஆற்றலுக்கும் உறைவிடம் அதுவே. பார்க்கு மிடம் எங்கும் அது நீக்கமற நிறைந்துள்ளது. அதன் முழுமை யான காட்சி வரும்போது வாழ்க்கையின் இரகசியமெல்லாம் நமக்குத் தெளிவாகி விடும். அக்காட்சியைப் பெறுவதற்கு வழி ஒன்று உண்டு. அஃது என்ன?

சிற்றுடலின்மூலம் நமது சிற்றுயிர் ஒளிர்கின்றது. பேருடலாகிய இயற்கை முழுவதன்மூலம் இறைவன் ஒளிர்கின் றான். இன்னும் இயற்கைக்கு அப்பாலும் அவன் உள்ளான். அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் நிலவுகின்றான். ஆதி அந்தம் காட்டாத முதலாய் நிற்கின்றான். இயற்கையின் வாயிலாக அவனது ஒரு சிறு கூறு மட்டிலும் மிளிர்கின்றது. இறைவனை அறிவதற்கு இயற்கை அல்லது பிரகிருதியே உற்ற வழியாக அமைகின்றது. எல்லையில் அடங்காது பிரம்மாண்டமாயிருக்கும் பிரகிருதியின் அணுப்போன்ற ஒரு சிறு பகுதியே நமது உடல். பிரம்மாண்டத்தின் பெருமை முழுதும் சிறு பிண்டமாகிய நமது உடலில் உள்ளது. 'அண்டத்தைப்போலத்தான் பிண்டமும்' என்ற பழமொழியை யும் சிந்திக்கலாம். நமது உடலையும் அதனுள் ஒளிர்பவனை யும் உள்ளபடி தெரிந்து கொண்டால் அகிலாண்ட கோடி பிரமாண்டமான நாயகனையும் தெரிந்து கொள்ள இயலும். 'ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதமாக' அமைகின்றதை யும் அறிகின்றோம்.

திருக்கோயிலில் இறைவனைத் தொழும்போது ஆலயங்கள் அனைத்திலும் சாலச் சிறந்ததான நம் உடலில்

உலகெங்கும் இயங்கிக் கொண்டிருக்கின்ற இறைவன் நம் உள்ளத்தில் சிறப்பாக இயங்குவதை அறிகின்றோம். '**உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்**'[14] என்ற **திருமூலரின்** வாக்கு ஆழ்ந்த பொருளுடையது; எல்லாப் பெரியார்களுமே மானுட உடல் தேவாலயங்களுள் சிறந்ததென்று வற்புறுத்தி உள்ளனர்.

நெஞ்சமே கோயில் நினைவே சுகந்தம்; அன்பே
மஞ்சனநீர்; பூசைகொள்ள வாராய் பராபரமே[15]

என்பது **தாயுமானஅடிகளின்** திருவாக்கு.

காயமே கோயி லாகக் கடிமனம் அடிமை யாக
வாய்மையே தூய்மை யாக மனமணி இலிங்க மாக
நேயமே நெய்யும் பாலாய் நிறையநீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈச னார்க்குப் போற்றஇக் காட்டி னோமே[16]

என்பது **அப்பரடிகளின்** அமுத வாக்கு. மேலும் அப்பெரு மான்,

உடம்பெனும் மனைய கத்துள்
  உள்ளமே தகளி யாக
மடம்படும் உணர்நெய் அட்டி
  உயிரெனும் திரிம யக்கி
இடம்படு ஞானத் தீயால்
  எரிகொள இருந்து நோக்கிக்
கடம்பமர் காளை தாதை
  கழலடி காண லாமே.[17]

என்று அருள்வதும் உளங்கொள்ளத் தக்கது.

14. திருமந்திரம் - ஏழா. தந். சிவபூசை - 1
15. தாயு.பா- பராபரக்கண்ணி-15
16. அப்பர் தேவாரம்-4-76;4.
17. மேலது 4-75:4

பெரியார் ஒருவர் நம் இல்லத்திற்கு வருகை புரிவதாக இருந்தால் அவரை வரவேற்க இல்லத்தை அலங்கரிக்கின்றோம். நம்மையும் ஓரளவு அலங்கரித்துக் கொள்ளுகின்றோம். இன்னும் பலவேறு செயல்களில் ஈடுபடுகின்றோம். தூயதும் பெரியவற்றிற்கெல்லாம் பெரியதுமாகிய பரம்பொருளை – மெய்ப்பொருளை – நம்உள்ளத்தில் எழுந்தருளப் பண்ணுவதற்கு இன்னும் எத்தகைய பெரிய ஆயத்தம் பண்ண வேண்டும் என்பதை மறந்து விடலாகாது. அரசர்க்கெல்லாம் அரசனாகிய ஆண்டவனின் வாழும் இடம் நம் உடம்பு. இது நிலை குலைந்து போயின் அவன் இதில் கோயில் கொள்ள இசையான். அவனுக்கு ஏற்றதாக இதனைச் செய்வித்தலே நம் தலையாய கடமை. இதற்கு மகத்துவம் – பெருமை – வருவதும் அவனது அருளாலேயாகும். ஆகவே, இதனை யாண்டும் ஈசுவரனுடைய ஆலயமாகச் செய்தல் செயற்கரிய செயலாகின்றது.

**பூசை என்பதன் பொருள்:** ஆழ்ந்து நோக்கினால் இறைவனைப் போற்றாதார் இலர். சிலர் இறைவனை உணர்ந்து வணங்குகின்றனர்; வேறுசிலர் அத்தகைய உணர்ச்சியின்றியே வணங்குகின்றனர். நாத்திகர் என்போரும் ஓர் உயர்தன்மையில் நம்பிக்கை வைத்து அந்த உயர்தன்மையையே வழுத்தப்படும் பொருளாகக் கொள்கின்றனர். தெய்வத் தன்மையை உடையதைப் பார்த்து மெச்சுதல் மாந்தர் இயல்பு. உயர்தன்மையை மெச்சும்போது மெச்சுபவரே உயர்தன்மையை எய்துகின்றனர். **(1) மெச்சுதலும் ஒருவகையில் பூசையாகின்றது.**

நன்மையனைத்திற்கும் உறைவிடம் இறைவன். அவனையடைய ஆசைப்படுவதும் அந்நன்மையை அடைய விரும்புவதும் ஒன்றே. பூசை என்பதற்கு நன்மையில் விருப்பம் என்ற பொருளும் உண்டு. பேராற்றலைக் காணுமிடத்துத்

தன்னையறியாது மனிதனுக்கு வியப்பு வந்து விடுகின்றது. அதனைக் கண்டு அதிசயிக்கவும் செய்கின்றான். **(2) மெய்ப் பொருளின் மகத்துவத்தை உணர்வதால் உண்டாகும் அதிசயமே பூசையாகின்றது.** (எ.டு) **மணிவாசகப்பெருமா னின்** கீர்த்தித் திருவகவல், அற்புதப்பத்து, திருவார்த்தை, அதிசயப்பத்து, அச்சோப்பதிகம் இவற்றை நோக்கலாம்.

பேராற்றல் படைத்துள்ள ஒன்றை நெருங்குவதற்கு ஏற்ப தன் துயரங்களும் அச்சங்களும் நீக்கப் பெறுவதை மனிதன் காண்கின்றான். அப்போது அவன் அல்லலை நீக்கும் பரம்பொருளின்கண் அடிபணிகின்றான். வேறு எவ்விதத்தி லும் நன்றி செலுத்த இயலுவதில்லை. **(3) ஆதலால், அச்சத்தைத் தவிர்த்தலும், அடிபணிதலும் பூசையின் பகுதிகளாகின்றன.** எ-டு 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று தொடங்கும் **அப்பர் தேவாரம்** (6.98) எண்ணுள்ள திருத் தாண்டகம்; 'முன்னம் அவனுடைய திருநாமம்' (6.25:7) என்ற **அப்பர்** திருத்தாண்டகம்; **மணிவாசகப் பெருமானின்** பிடித்த பத்து (திருவாசகம்).

இறைவனது சட்டத்திற்கு அடிபணிந்து ஒழுகுமளவு மனிதனுக்குச் சீரும் சிறப்பும் உண்டாகின்றன. அதனால் மனிதன் தனக்கு உண்டாகும் மகிழ்ச்சியை அடக்க முடியாமல் தன் இறைவனைப் போற்றவும், வழுத்தவும், வணங்கவும் செய்கின்றான். உள்ளத்தின் உவகையே வணக்கமாக வடிவெடுக்கின்றது. இறைவனைப் பற்றிய புகழெல்லாம் பொருள்சேர்ந்த புகழாகின்றது. ஏனென்றால் மனம் எப்படியோ மொழியும் அவ்விதமாக அமைந்து விடுகின்றது. **(4) மனங் கசிந்து போற்றுதலும், வழுத்தலும் பூசனையின் கூறுபாடு களாகின்றன.** (எ-டு) **மணிவாசகப் பெருமானின்** போற்றித் திருஅகவல் (திருவா), ஆனந்தமாலை, அச்சோப்பதிகம்

(திருவா), **வள்ளல்பெருமானின்** அருள் விளக்க மாலை (ஆறாம் திருமுறை போன்றவை) இவற்றை நோக்கலாம்.

இறைவனைப் பாவிப்பாரின் பாவனை அருபடுகின்றது. அவனுடைய மேன்மையைச் சிந்திக்க மனமே மேன்மை யுறுகின்றது. தெய்வசம்பத்தில் தோய்ந்திருப்பவர்கட்கு ஆனந்தம் மேலிடுகின்றது. **(5) ஆகவே, அவனைப் பாவிப்பதும் பூசையாகின்றது.** எ–டு **தாயுமான அடிகளின்** 'பரசிவ வணக்கம்' முதலிய பல பாடல்கள்.

உலகச் செயல்களெல்லாம் இறைவனுடைய சங்கற்பத் தின்படி நடைபெறுகின்றன. அவனது ஆணையாலன்றி ஓரணுவும் அசையாது. நமக்கு நன்மையாகவும், தீமையாகவும் தோன்றுபவை அவனுடைய ஆட்சியில் பொருத்தமுடையன வாகவே உள்ளன. இந்தப்பேருண்மையை அறியும் பக்தர்கள் தம்மையே ஈசுவரனுக்கு அர்ப்பணம் செய்துவிடுகின்றனர். ஒரு சிறு செயலிலும் தங்கட்கு இச்சா சுதந்திரம் இல்லையென்ற எண்ணம் வந்து விடுகின்றது. (எ–டு) **மணிவாசகப் பெருமா னின்** குழைத்தபத்து, அடைக்கலப்பத்து (திருவா), **வள்ளல் பெருமானின்** மகாதேவமாலை, அருள்விளக்கமாலை (ஆறாம்திருமுறை) **(6) இத்தகைய சீரிய மனநிலையும் இறைவனுக்கு உகந்த பூசையாகும்.** (எ–டு) இசை விருந்தைச் சுவைப்பவர்கள் தங்களையே மறந்து இசையில் ஒன்றித்து விடுதல் போன்று ஈசுவர இயல்பில் ஒன்றித்து விடுபவர்கள் உண்டு. அவனது அருட்பிழம்பை எண்ணுங் கால் எண்ணுபவர், எண்ணம், எண்ணப்பெறும் பொருள் என்னும் மும்மை போய்விடுகின்றது. **வள்ளல் பெருமானின்** சிவசிவ ஜோதி, ஜோதியுள் ஜோதி, சிவபுண்ணியப் பேறு (ஆறாம் திருமுறை) முதலிய பாடல்களை நோக்கலாம். **மணிவாசகப் பெருமானின்** செத்திலாப்பத்து, (திருவா)

என்பதையும் கருதலாம். இந்நிலையில் சீவபோதம் சிவபோதத்தில் ஐக்கியமாகிவிடுகின்றது. இரண்டறக் கலத்தல் என்ற இந்நிலையில் பூசை முழுநிறைவு பெறுகின்றது. இங்ஙனம் மனிதன் மேன்மையுறச் செய்யும் உபாயங்களெல்லாம் பூசையாகின்றன.[18]

## (5) பூசை வகைகள்

பூசையை மேற்கொள்வதில் இருவகை உண்டு. அவை (i) மானச பூசை (ii) பாகிய பூசை என்பவையாகும்.

(i) **மானச பூசை:** உடலை வளர்க்கவும் தூய்மையாக்கவும் நாம் கடமைப்பட்டிருப்பது போன்று உள்ளத்தைப் பண்படுத்துவதிலும் அறிவுடையோர் கடமைப்பட்டுள்ளனர். மானச பூசையே அதற்கு உற்ற வழியாக அமைகின்றது. இல்லத்தில் அமைக்கப் பெற்றிருக்கும் பூசையறை அதற்கு ஏற்ற இடமாக அமைகின்றது. நறுமணமும் தெய்விகக் காட்சியும் அமைக்கப் பெற்ற அவ்வறையினுள் நீராடிவிட்டுத் தூய ஆடை அணிந்து கொண்டே செல்லுதல் வேண்டும். அப்படிச் செல்லும் சாதகன் தன்னந்தனியாய் அவ்வறையில் இருப்பது சாலச் சிறந்தது. அங்கு எழுந்தருளப் பண்ணியிருக்கும் தன் விருப்ப தெய்வத்தை அவன் கீழே வீழ்ந்து வணங்குதல் அதற்கு அடுத்த செயலாகும். உடலுக்குச் சிரமும் இல்லாதபடி ஒரு நல்ல இருக்கையின் மீது அமர்ந்து இருத்தல் வேண்டும். மனத்தை ஒருமைப்படுத்திக் கொண்டு உலகில் உள்ளோர் அனைவரும் இன்புற்றிருக்க வேண்டும் என்று மனமாற வாழ்த்துவது இறைவழிபாட்டில் முதற் படியாகும்; '**சுவஸ்தி வசனம்**' என்பதும்,

18. சைவ சமய விளக்கு- கடிதம்.51

எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல்
வேறொன் றிறியேன் பராபரமே.

– பராபரம் – 221

என்ற **தாயுமான அடிகளின்** வாக்கும் இதற்கு வழிகாட்டியாக அமையும். இது முதற்படி. இங்ஙனம் மனமார வாழ்த்துவதால் வேற்றுமையுணர்ச்சியும் பதைபதைப்பும் சித்தத்தினின்று அகலுகின்றன. இதனால் உள்ளம் இனிமையடைந்து சாந்தமும் மகிழ்ச்சியும் அதன்கண் பொலிகின்றன. இத்தகைய அமைதியான மனத்தால் பாவிக்கப் பெறும் எண்ணங்கள் மிக்க வலிமையைப் பெறுகின்றன.

அடுத்தபடியாக மேற்கொள்ளப் பெறுவது '**நியாசம்**' என்பது. உடலின் பல்வேறு உறுப்புகளைப் பலப்படுத்துவது என்பது இதன் பொருள். இதனைச் செய்யும் போது "உடலுக்கு இன்றியமையாதனவாக இருக்கும் ஐம்பொறிகள் தூய்மை அடைக. கண்கள் ஒளியுடையவை ஆகும். மங்களகரமான மொழிகளைக் கேட்பதற்கு செவி உதவுக. தற்செயல்களைப் புரிவதற்குக் கைகள் திறம் பெறுக. உடல் முழுவதும் தூய்மையாகுக. அவை தேசோமயமாய் ஒளிர்ந்து கொண்டிருக் கட்டும். வீரியமும் பலமும் உடலெங்கும் பரவுக." என்று எண்ணித் தியானம் செய்ய வேண்டும். இந்தத் தியானம் வலுவடையும்பொழுது **நியாசம்** நிறைவு பெறுகின்றது. இதனால் தூய மனமும் அதற்குகந்த உடலும் அமையப் பெறுகின்றன. இப்போது உடலும் உள்ளமும் இறைவனை வரவேற்பதற்குத் தகுந்தவையாகின்றன.

இறைவன் "**சித்தமிசை குடி கொண்ட அறிவான தெய்வம்**"[19] என்று வழங்கப் பெறுகின்றான். இமைப்பொழுதும் நீங்காது உள்ளத்தில் உறைகின்ற அவனது சான்னித்தியத்தை

19. தா.பா. தேசோமயானந்தம்

நினைவுபடுத்திக் கொள்ளுதலே '**ஆவாகனம்**' அல்லது '**வரவேற்பு**' ஆகின்றது. காலையில் அலர்ந்த தாமரைப் பூ போன்ற உள்ளம் அவனுக்கு உகந்த ஆசனமாகின்றது. அதன்மீது சுயம் பிரகாசமான பரம்பொருளை எழுந்தருளப் பண்ண வேண்டும். '**தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே**'[20] என்றவாறு யார்யாருக்கு எத்தகைய தெய்வ வடிவத்தில் விருப்பமோ அத்தகைய வடிவுடையவனாய் அவனை வரவேற்கலாம். இதயகமலத்தில் எழுந்தருளியுள்ள அவனுக்கு இனிய உபசாரங்கள் பல செய்தல் வேண்டும். இதுவே **மானச பூசையாகும்.**

இறைவன் மனத்தால் வழுத்தப் பெறுகின்றான். திருவடிகளை அலம்புவதற்கு முதலில் தீர்த்தம் அளிக்கப் பெறுகின்றது. மானச பூசையில் அன்பே அதற்கு மஞ்சன நீர் ஆகின்றது. பின்பு இறைவனுக்கு '**உள்ளம்**' என்னும் ஆசனம் அளிக்கப் பெறுகின்றது. அதே அன்பு நீர் மீண்டும் **ஆசமனம்** பண்ணுவதற்குத் தரப்பெறுகின்றது. நீரைக் கொண்டு முகம் துடைப்பதற்கும் அதனைத் துளி அளவு உட்கொள்ளுவதற்கும் '**ஆசமனம் பண்ணுதல்**' என்று பெயர். உலக வழக்கில் மலர்கள் இலைகள் முதலியவை அர்க்கியமாய்ப் படைக்கப் பெறுகின்றன. மேன்மை தாங்கிய மனமே இறைவனுக்குரிய அர்க்கியமாகின்றது. எல்லாராலும் சொந்தம் பாராட்டப் பெறுவது அவரவர் மனம். அதைத் தூயதாக்கி இறைவனுக்கு அர்க்கியமாகப் படைக்க வேண்டும்.

பின்னர் அன்பு என்னும் மஞ்சன நீரால் சித்தமிசை வீற்றிருக்கும் இறைவன் நீராட்டப் பெறுகின்றான். அடுத்தபடி அவன் அணிவதற்கு ஆடை வேண்டும். '**சிதாகாசம்**' அல்லது '**உள்ளப் பெருவெளியே**' அவனுக்கு

20. இரண். திருவந் - 44

ஆடையாகின்றது; அவனை மூடுவதற்கு இதைத் தவிர வேறொன்றும் இல்லை. மோப்பம் அல்லது கிராண சக்தி வாசனைத் திரவியமாக அளிக்கப் பெறுகின்றது. 'உடல் முழுவதும் வியாபித்திருக்கும் பிராணன்' தூபமாகக் கொடுக்கப் படுகின்றது. அதன் பிறகு தீபம் காட்டப் பெறுதல் வேண்டும். சாதகனுடைய நல்லறிவே மானச பூசையில் தீபமாகக் கருதப் பெறுகின்றது. சுடர் விட்டெரியும் தீபமாகத் தனது **புத்தி** அல்லது **நல்லறிவைத்** தனது மனத்தகத்துக் கோயில் கொண்டிருக்கும் பரஞ்சோதியின் முன் வைக்கின்றான். சீவகோடி அனைவர்க்கும் உலக வாழ்க்கையில் பெரும் பற்று இருப்பதை நாம் அறிவோம். இந்த வாழ்க்கைப்பற்றை இறைவனுக்கு நைவேத்தியமாகப் படைத்து விடுகின்றான் பக்தன். '**அனாகத் தொனி**' எனப்படும் தொனி ஒன்று இயற்கையில் உண்டு. அஃது ஓங்கார வடிவமாக ஓயாது ஒலித்துக் கொண்டிருக்கும். நம் சிற்றுடல் வாழ்க்கை முழுதும் ஒழுங்காகும்போது இத்தொனியை **நம்முள்** கேட்கலாம். மானச பூசையில் இத்தொனி மணியாக அமைந்து விடுகின்றது. அர்ச்சனைக்கு மலர்கள் வேண்டுமல்லவா? அகிம்சை, சத்தியம், விவேகம், வைராக்கியம், சாந்தி, பணிவு, அன்பு, அமைதி, தீரம், வீரம் முதலியவற்றை ஆழ்ந்து சிந்தித்து ஒன்றன்பின் ஒன்றாகச் சாத்துவது மலர் அஞ்சலியாகின்றது. **பாவனை** அல்லது **மனக்கண்ணால்** உணர்தல் வலிவும் தெளிவும் பெறுதற்கேற்ப மானச பூசையும் அவற்றிற்கேற்ப முழு நிறைவு பெறுகின்றது. பூசையின் ஒவ்வொரு பகுதியையும் ஆழ்ந்து பாவித்துக் கொண்டே போனால் '**பரிபூரண பிரம்மானந்த அநுபவம்**' என்பதைத் தெளிவாக உணரலாம்.

(ii) **பாகிய பூசை:** வழிபாடுகளுள் மானச பூசையே மேலானது. **அப்பர், ஞான சம்பந்தர், நம்மாழ்வார்** போன்ற

ஞானச் செல்வர்கள் கண்ட வழியல்லவா? ஆனால் இதனை முழு நிறைவுடன் செய்வதற்கு எல்லோராலும் இயலுவ தில்லை. சூக்குமப் பார்வையும் சூக்கும பாவனையும் உண்டாகும் வரை தூலப் பொருள்களின் உதவியை நாடுதலே முறை. சிறார்கட்குத் தொடக்க நிலைக் கல்வியில் குறிப்பாகக் கணிதம் கற்பதில் பயன்படுத்தப் பெறும் பல்வேறு உருவங்கள் போன்றவை இங்குப் பயன்படுத்தப்பெறும் பொருள்கள். ஆன்மசாதனத்தில் முதிர்ச்சி பெறுவதற்கு முன்பு மூர்த்தி வழிபாடு பெரிதும் பயன்படுகின்றது. இல்லத்தில் பூசை அறையில் எழுந்தருளச் செய்யப் பெற்றிருக்கும் தெய்வத் திருவுருவத்தின் முன்பு இந்த வழிபாட்டை - பாகிய பூசையை - மேற்கொள்ளலாம்.

மானச பூசை செய்தானதும் அது மனத்திற் நன்றாய்ப் பதிதற் பொருட்டுத் திரும்பவும் ஒரு முறை பாகியத்தில் அதனைப் பக்தன் செய்கின்றான். சித்தமிசை குடிகொண்டிருக் கும் தெய்வம் தன் எதிரேயுள்ள திருமேனியில் அல்லது படத்தில் ஆவிர்ப்பவிக்கும்படி வேண்டுகின்றான். இந்நிலை யில் அவன் கண்விழித்துப் பார்க்கும் பொழுது தன் முன்னிலையில் எழுந்தருளியிருக்கும் திருவுருவம் தெய்வத் தன்மையுடன் திகழ்வதைக் காண்கின்றான். தான் சேகரித்து வைத்துள்ள மஞ்சன நீர், சந்தனம் மலர்கள் முதலியவை, இப்போது பயன்படுகின்றது. பயபக்தியுடன் திருப்பாதத்திற்கு நீர் (பாதியம்), வார்க்கப் பெறுகின்றது. சந்தனம், வில்வம், திருத்துழாய், அறுகு, அட்சதை முதலியவற்றில் ஏதேனும் ஐந்து திரவியங்கள் அடங்கப் பெற்ற அர்க்கியம் படைக்கப் பெறுகின்றது. பின்பு, மனத்திற்குகந்தவாறு அபிடேகம், அலங்காரம், தூபதீபம், நைவேத்தியம், ஆசமனம், அர்ச்சனை, தோத்திரம் முதலியவற்றால் பாகிய பூசை நிறைவு பெறுகின்றது.

**சடங்குகள்:** இப்பூசையில் மேற்கொள்ளப்பெறும் சடங்குகள் யாவும் ஆன்மசாதனத்தில் பல்வேறு இயல்புகளை விளக்குபவையாய் அமைந்துள்ளன. இறைவனுக்கு இவை தேவையா? என்ற வினா எழுவதற்கு இங்கு இடம் இல்லை. ஏனெனில், இவை யாவும் பக்தனுக்குப் பயன்படுகின்றன. அவன் ஈசனை நோக்கி ஏகுவதற்குப் பயன்படுபவைகளாய் அமைந்தவை இவை. உயிர்கள் இறைவன் மாட்டு இட்டுக் கொண்டு போநலே இயற்கையின் தொழில் ஆதலின் இயற்கையை இறைவழிபாட்டில் பயன்படுத்துவதே மனிதன் அதைக் கொண்டு செய்யும் அரும் பெருஞ் செயலாகும். இயற்கையைக் கையாளும் முறைக்கேற்ப மனிதன் பெருமை அல்லது சிறுமையை அடைகின்றான்.

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் (குறள் 305)

என்ற பொய்யா மொழியாரின் கூற்று சாதகனுக்கும் பொருந்தும். அற்ப ஆசைகளை நிறைவேற்றுதற் பொருட்டு அதைப் பயன்படுத்தும் ஒருவன் அற்பத் தன்மை அடைகின்றான். ஈசுவர ஆராதனை போன்ற உயர்ந்த செயலுக்கு உலகப் பொருள்களைப் பயன்படுத்துபவன் ஈசுவரனின் திருவருளைப் பெறுகின்றான்.

**மன்னிப்பு கோருதல்:** மூர்த்தியின் மூலம் பாகிய பூசையை முடித்த பிறகு பக்தன் இறைவனிடம் மன்னிப்பு கோருகிறான். ஈசுவரத்துவம் தனக்கு முற்றிலும் தெளிவாக வில்லை என்றும், தன் சிற்றறிவுக்கு எட்டியவாறே ஆரா தானை செய்யப்பெற்றது என்றும், அத்தகைய ஆராதனையில் குற்றம் குறைகள் இருப்பின் மன்னித்தருள வேண்டும் என்றும் வேண்டுகின்றான். திருமேனியில் அல்லது படத்தில் ஆவிர்ப் பித்துள்ள இறைவன் பழையபடியே தன் உள்ளத்துள் எழுந்தருளுமாறு வேண்டுகின்றான்.

## (6) கடமை—பலன்கள்

உடலைப் பேண விரும்புபவன் தானே உண்பது போலவும், கல்வி கற்பவன் தானே முயன்று கற்பது போலவும் ஆன்ம சாதனமும் சுயமுயற்சியால் நடைபெறுதல் வேண்டும். துணை செய்வதுடன் பிறர் பங்கு நின்று விடுகின்றது. அறிவு தன்னூடு வளர்ந்து வர வேண்டிய பூசா தத்துவம் முழுவதும் ஆன்மசாதனத்தை ஒட்டியது. ஆதலால் சாதகன் தன் இயல்புக்கு ஏற்றவாறு அதைத் தனக்குத் தானே செய்து கொள்ளல் வேண்டும்.

பொருளை வாரி இறைத்து பெருமிதமாகச் செலவிடுவ தால் பூசை பெரியதாய் விடாது என்பது உளங் கொள்ளப்படும். தற்பெருமைக்காக என்று வீண் விரயம் செய்வது இறைவ னுக்கு ஏற்காது. பொருளுடையோர் அதைத் தங்களுக்கென்று வைத்துக் கொள்ளாது மற்றவர்க்கும் இறைவன் பெயரால் பகுத்துக் கொடுக்குங்கால் அதனால் பயன் உண்டு.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை (குறள் – 322)

என்பது வள்ளுவர் வாக்கன்றோ? ஆராதனைகளுள் சமாரா தனை மிகவும் முக்கியமானது என்பதை அறிய வேண்டும். மனப்பான்மையே பூசையில் முக்கியமானது. **கண்ணப்ப நாயனார்** வாழ்க்கையை நோக்கலாம். அவர் வழிபாட்டிற்காக கையாண்ட பொருள் போற்றத் தக்கதன்று. அப்படியிருந்தும் அஃது இறைவனுக்கு உகந்ததாயிற்று. அங்ஙனமே **குகன் பெருமான்** இராமபிரானுக்கு "தேனும் மீனும்" படைத்ததும், அவற்றை அப்பெருமான் ஏற்றதும் நினைவு கூரத்தக்கவை. இந்த இரண்டு இடங்களிலும் உயர்ந்த மனநிலையே பூசனைக்குக் காரணம் என்பது தெளிவு. அன்பும், ஊக்கமும், பணிவும் பூசனைக்கு ஆதாரமாகின்றன. மனம் பண்படுவதே

பூசனையின் பெரும்பயன் என்பதை உளங்கொள்ளல் வேண்டும்.

மனிதன் நாடோறும் இறைவனைப் போற்றக் கடமைப் பட்டவன். போற்றும் அளவு புனிதம் அவன்பால் வந்து எய்துகின்றது. அதனால் வாழ்க்கையே ஓயாது புதுப்பிக்கப் பெறுகின்றது. பொருளைத் தேடும் மனிதன் **பொருட் பெருக்கை** உணர்வது போன்று இறைவனை முறையுடன் வழுத்துபவன் **மேம்பாடு** அடைவதை அவனே உணர்கின்றான். நாள் ஏற ஏறப் புதிய ஆனந்தம், புதிய உற்சாகம், புதிய அமைதி, புதிய வலிவு ஆகிய தெய்வ சம்பத்துகளுடன் வாழ்க்கை பொலிவு அடைந்து கொண்டு வருவது அவனுக்குத் தெளிவாய்ப் புலனாகும். இவ்வுலகம் உண்மையில் இருள் சூழ்ந்ததன்று. ஆன்மா உய்வதற்கென்றே அஃது இறைவனால் படைக்கப் பெற்றது. அதனால் அருளே. வடிவெடுத்ததென்பதை அவன் உணர்கின்றான். பூசை செய்வது புனிதம் அடைபவர் தங்கட்கு மட்டும் பயன்படுத்து பவர் அல்லர். அவர்களுடைய வாழ்வு உலகுக்கே அருள விருந்தாகும்.

அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்து எய்தும்; பராமபரமே
— பராபரம் — **155**

என்ற **தாயுமானவர்** திருவாக்கை சிந்தித்து உணர்தல் வேண்டும்.

# பின்னிணைப்பு

## பயன்பட்ட நூல்கள்
## (அ) தமிழ் நூல்கள்

**அருணை வடிவேல் முதலியார் சி:** சித்தாந்த வினா விடை (1975) தருமையாதீனம், மயிலாடுதுறை, தஞ்சை மாவட்டம்.

**அருணை வடிவேல் முதலியார் சி:** சித்தாந்தத் தெளிவியல் (1968) தருமையாதீன வெளியீடு, மயிலாடுதுறை, தஞ்சை மாவட்டம்.

**ஆழ்வார்கள்:** நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் (மர்ரே ராஜம் பதிப்பு).

**இராமானுசாச்சாரி. ர:** சைவ சிந்தாந்தம் (1963) கொ. நா. சீநிவாசன், 241 சின்ன கடை வீதி, திருச்சி–2

**இலட்சுமணன் கி:** இந்திய தத்துவஞானம் (மூன்றாம் பதிப்பு–1980), பழநியப்பா பிரர்ஸ், சென்னை–600 014.

**காந்திமதி நாத பிள்ளை V.P:** சிவஞானபோதச் சொற்பொழிவு கள் (1945) கழக வெளியீடு.

**குருஞான சம்பந்தர்:** சிவபோகசாரம்:(1947) தருமை யாதீன வெளியீடு, மயிலாடுதுறை, தஞ்சை மாவட்டம்.

**குருஞான சம்பந்தர்:** சிவபோகசாரமும், சொக்க நாத வெண்பாவும் (1950) தருமையாதீன வெளியீடு, தஞ்சை மாவட்டம்.

**சங்கப்புலவர்கள்:** பத்துப்பாட்டு டாக்டர் உ.வே.சா. பதிப்பு.

**சங்கப்புலவர்கள்:** எட்டுத் தொகை நூல்கள் டாக்-டர் உ.வே.சா. பதிப்பு-கழகப்பதிப்பு-[illegible] பதிப்பு.

**சித்பவானந்த அடிகள்:** கடவுளின் வடிவங்கள் (1957) தபோவன வெளியீடு, திருப்பராய்த்துறை, திருச்சி மாவட்டம்.

**சித்பவானந்த அடிகள்:** சிவபுராணத் [illegible] (1958)-தபோவன வெளியீடு திருப்பராய்த் துறை, திருச்சி மாவட்டம்.

**சிவஞான யோகிகள்:** சிவஞான போதச்சிற்றுரை (1980) சைவசித்தாந்த மகா சமாஜம் 33- [illegible] தெரு மயிலாப்பூர், சென்னை-600 004.

**சேக்கிழார் அடிகள்:** பெரியபுராணம் (1970) திருப்பனந்தாள் வெளியீடு, ஸ்ரீ வைகுண்டம், திருநெல்வேலி மாவட்டம்.

**சேனாதிபதி வேலாயுதமுதலியார்:** [illegible] நூல்கள் (1913, 1914) [illegible]

**[illegible]** ந. சைவசமய விளக்கு, [illegible] வெளியீடு, எண்-13, அண்ணா நகர், சென்னை-600 040.

**தாயுமான அடிகள்:** தாயுமான சுவாமிகள் பாடல் (1965), தருமையாதீனம், மயிலாடுதுறை, தஞ்சை மாவட்டம்.

**திருமூலர்:** திருமந்திரம் (1976) திருப்பனந்தாள் வெளியீடு ஸ்ரீவைகுண்டம், திருநெல்வேலி மாவட்டம்.

**திருவள்ளுவர்:** திருக்குறள்-பரிமேலழகர் உரை (1937) கழக வெளியீடு.

**பஞ்சாக்கர தேசிக மூர்த்திகள்** (ஒரு) [illegible] சிவஞான போதத்திறவு (1974), திருவாவடுதுறை ஆதீனம்.

[illegible] 1983, 150, [illegible] 600 [illegible]

[illegible] (1982) [illegible]

[illegible] (1949) [illegible]

[illegible] 1989 [illegible]

## (ஆ) English Works

**Bhandarkar R.G:** Vaishnavism, Saivism and other minor Religious systems (Bhandarkar Oriental Research institute, Pune - 411004.

**Subbu Reddiar N:** Collected Papers (Kazhakam)

www.tamilputhagam.com



திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிட்.,
522, டி.டி.கே. சாலை, ஆழ்வார்பேட்டை,
சென்னை – 18. (044) 435 62 98.

**கிளை நிலையங்கள்**

79, பிரகாசம் சாலை, சென்னை – 108.
41, [illegible] – 4.
70, தானப்ப முதலி தெரு, மதுரை – 1.
24, நந்தி கோவில் தெரு, திருச்சி – 2.
26, [illegible] – 1.
36, [illegible] – 1.
18, [illegible] – 1.

www.tamilputhagam.com